[ISSUED 25—7—1983

290

S.No. 1445-15

COMMISSIONER OF TAMILNADU
ARCHIVES & HISTORICAL RESEARCH
21 SEP 83
EGMORE MADRAS-8

# TAMIL NADU LEGISLATIVE COUNCIL DEBATES

# OFFICIAL REPORT

FRIDAY 28th JANUARY 1983

Volume CXCI (No. 3)

©
GOVERNMENT OF TAMIL NADU
1983

*Legislative Council Department*
*Fort St. George, Madras-600 009.*

Price *Rs.* 2.75 *Paise*]

பொருளடக்கம்.


| | | பக்கங்கள். |
|---|---|---|
| 1. | வினாக்கள்—விடைகள் .. .. .. | 213—235 |
| 2. | மேலவை விதி 82-ன் கீழ் அமைச்சரின் அறிக்கை .. .. .. .. | |
| | காயிதே மில்லத் இஸ்மாயில் சாயபு அவர்கள் இல்லத்திற்கு அருகிலிருந்த சாராயக்கடை குறித்தும், மீனாட்சி புரத்தில் உள்ள சாராயக்கடை குறித்தும் | 235—237 |
| 3. | ஆளுநர் உரையின்மீது விவாதம்—தொடர்ச்சி | 237—301 |
| 4. | அவை முன் வைக்கப்பட்ட ஏடுகள் .. .. | 302 |


D 2 C 78—1

தமிழ்நாடு ... காப்பக நூலகம்
சென்னை-600 008.
143130
D
V21,32'N83
1103.191.3-5



# தமிழ் நாடு சட்டமன்ற மேலவை.

---

வெள்ளிக்கிழமை, 1983 ஜனவரி 28.

தை 15, துந்துபி, திருவள்ளுவராண்டு 2014.

---

சென்னை, செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள மேலவை மண்டபத்தில் முற்பகல் 9-30 மணியளவில் மாண்புமிகு மேலவைத் தலைவர் (டாக்டர் ம. பொ. சிவஞானம்) அவர்கள் தலைமையில் அவை கூடியது.

## 1. வினாக்கள்—விடைகள்.

### இராஜத்யக்ஷா குழு.

* 21. வினா—திரு. ம. சங்கரலிங்கம் : மாண்புமிகு மின்துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன் :

(அ) மின்சார நிர்வாகம் பற்றிய இராஜத்யக்ஷா (Rajadhyaksha) கமிட்டியின் பரிந்துரைகள் பற்றி தமிழ் நாடு அரசின் கருத்தினை மத்திய அரசு கேட்டுள்ளது உண்மையா ?

(இ) ஆம் எனில், இராஜத்யக்ஷா கமிட்டியின் பரிந்துரைகள் யாவை ?

(உ) அதன்மீது தமிழ் நாடு அரசு தெரிவித்த கருத்துரைகள் யாவை ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : (அ) ஆம்.

(இ) குழு கீழ்க்கண்ட ஏழு தலைப்புகளின் கீழ் 304 பரிந்துரைகளை அளித்துள்ளது :—

(1) மின்சார வளர்ச்சிக்காகத் திட்டமிடுதல்.
(2) திட்டங்கள் உருவாக்குதல் மற்றும் செயல்படுத்துதல்.
(3) இயக்குதல் மற்றும் நிர்வாகம்.
(4) நிதி, நிதி நிர்வாகம் மற்றும் மின் கட்டணங்கள்
(5) கிராம மின்மயம்.
(6) அமைப்பு மற்றும் நிர்வாகம்.
(7) ஆராய்ச்சி மற்றும் வளர்ச்சி.

(உ) இப் பரிந்துரைகளின் மீது இவ்வரசின் கருத்து மத்திய அரசுக்குத் தெரிவிக்கப்பட்டுள்ளது. எஞ்சிய பரிந்துரைகள் அரசின் பரிசீலனையில் உள்ளன.

[1983 ஜனவரி 28

**திரு. ம. சங்கரலிங்கம் :** மாண்புமிகு தலைவர் அவர்களே, இந்தப் பரிந்துரைகளில் ஒன்றாக ரீஜனல் மின்சார வாரியம் ஒன்று அமைப்பது என்றும், மாநிலங்களின் பொறுப்பிலே செயல்படுகின்ற மின்சார வாரியங்களை மத்திய அரசு பொறுப்பிலே கொண்டு வரவேண்டுமென்றும் இருப்பதாகச் சொல்லப்படுகிறது. அது உண்மையா ? அதைப்பற்றி நம்முடைய அரசு எடுத்த முடிவு என்ன ? அரசு தெரிவித்துள்ள கருத்து என்ன ?

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் :** மாண்புமிகு மேலவைத் தலைவர் அவர்களே, இந்தியாவை 5 வட்டாரங்களாகப் பிரித்து ஒவ்வொரு வட்டாரத்திற்கும் ஒரு மின் வாரிய ஆணைக் குழு, ரீஜனல் எலக்ட்ரிசிட்டி அதாரிட்டி என்கின்ற வகையில், சட்டப்படி உருவாக்கி அந்தந்த வட்டாரத்தில் உள்ள மின் உற்பத்தியை மத்திய அரசு மேற்கொண்டு, அவர்களே விநியோகிக்கின்ற வகையில் ஒரு பரிந்துரை வந்துள்ளது. இந்தப் பரிந்துரையை இந்த அரசு முழுமையாக எதிர்த்துள்ளது.

**திரு. ம. சங்கரலிங்கம் :** இந்தப் பரிந்துரைகளைப் பற்றி ஆலோசிப்பதற்கு சென்ற ஆண்டு நவம்பர் மாதம் டெல்லியிலே கூடிய மாநில மின்சார அமைச்சர்கள் மகாநாட்டிலே, அந்த அமைச்சர்கள் இதைப்பற்றி மறு பரிசீலனை செய்து 3 மாத காலத்தில் தங்களுடைய கருத்தைத் தெரிவிக்க வேண்டுமென்று மத்திய மின்சார அமைச்சர் அவர்கள் சொன்னதாகச் செய்தித்தாள்கள் மூலமாகத் தெரியவருகிறது. எல்லா மாநில மின்சார அமைச்சர்களும் அதை ஏற்றுக்கொண்டார்களா ? நம்முடைய மாநிலமும் அதை ஏற்றுக் கொள்ள முடியாது என்று தெரிவித்துள்ளதா ? அத்தோடு இனிமேல் மின்சார உற்பத்தி நிலையங்களை மத்திய அரசுதான் தொடங்க வேண்டும், மாநில அரசு தொடங்க மத்திய அரசு நிதி உதவி செய்யாது, மாநில அரசுதான் அதனுடைய நிதியிலிருந்து தொடங்கிச் செய்ய வேண்டும் என்று கருத்து தெரிவித்திருக்கிறார்கள். அதற்கு இந்த அரசு கருத்து தெரிவித்துள்ளதா ?

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் :** மாநில அமைச்சர்கள் மகாநாட்டில் பெரும்பாலும் அத்தனை அமைச்சர்களும் கலந்துகொண்டார்கள். இந்தக் கருத்தை மாநிலங்கள் சார்பாக வந்திருந்த அமைச்சர்களில் யாரும் மத்திய அமைச்சர் அவர்கள் தவிர, ஏற்றுக்கொள்ளவில்லை, ஆகையால் வேறு வழியில்லாமல் இது குறித்து மீண்டும் பரிசீலனை செய்ய வேண்டும் என்று அவர் சொல்லவேண்டி வந்ததே தவிர, வேறு அல்ல.



1983 ஜனவரி 26]

**திரு. ம. சங்கரலிங்கம் :** கடைசியிலே இந்த அமைச்சர்கள் மகாநாட்டிலே இந்த ரீஜனல் அத்தாரிட்டி மூலம் 45 சதவிகிதம் புதிய மின் உற்பத்தி நிலையங்களை மத்திய அரசு அமைக்க வேண்டுமென்ற கருத்து வலியுறுத்தப்பட்டதாகத் தெரிகிறது. அத்தோடு 3 மாத காலத்தில் இந்த மாநில அமைச்சர்கள் எழுப்பிய அச்சத்தைப் போக்கும் வகையில் மத்திய அரசு சுற்றறிக்கை அனுப்பும் என்று இந்த மகாநாடு முடிவு சொன்னதாகவும் தெரிகிறது. அதுபற்றி மத்திய அரசிலிருந்து ஏதாவது சுற்றறிக்கை வந்ததா ? இது மாநில உரிமையைப் பாதிக்கின்ற பிரச்சினையாக இருப்பதால், மகாநாட்டில் எடுத்த முடிவுகள், அதுபற்றி கடிதப்போக்குவரத்து, அதாவது மத்திய அரசின் அறிக்கை வந்திருந்தால், அமைச்சர் அவர்கள் அவற்றை இந்த அவையிலே வைக்க முன்வருவார்களா ?

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் :** இந்தப் பரிந்துரைக்கு ஏற்ப, அதாவது கி.பி. 2000 ஆண்டு வருகின்றபோது, 45 சதவிகிதம் மின் உற்பத்தியை மத்திய அரசுத் துறையிலே செய்ய முடிவு எடுத்திருக்கிறார்கள். இப்போது மத்திய அரசு உற்பத்தி செய்வது 9,700 மெகா வாட். மாநிலங்கள் சேர்ந்து உற்பத்தி செய்வது 51 ஆயிரம் மெகா வாட். இந்த 9,700 மெகா வாட்டிலிருந்து 62,100 மெகா வாட் வருகின்ற அளவிற்கு அமைக்கப்பட வேண்டுமென்று அந்தப் பரிந்துரை வந்தது. ஆனால் இதை மாநில அரசுகள் ஏற்றுக்கொள்ளவில்லை. மின்சாரம் என்கின்றபோது, மாநிலத்திலுள்ள சமூக, பொருளியல் பிரச்சினைகளைத் தீர்க்கின்ற பொறுப்பை ஏற்றுக்கொண்டிருக்கிற, மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட அரசு அதற்குப் பதில் சொல்லவேண்டியதாக இருக்கிறது. ஆகவே வெறும் அதிகாரிகளைக் கொண்டு வட்டாரக் குழுவிலே அதைக் கொடுத்து, அவர்கள் மின்சாரம் எப்போது தருவார்கள், எப்படித் தருவார்கள், எவ்வளவு கட்டணத்திலே மின்சாரம் தருவார்கள் என்றெல்லாம் தெரியாத ஒரு சூழ்நிலையில் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட மாநில அரசுகளை வைப்பது ஒரு நல்ல ஜனநாயகத்திற்குச் சரியானதாக ஆகாது என்ற கருத்தை நாம் வலியுறுத்தியிருக்கிறோம். ஐயம் தீர்ப்பதற்கு அவர்கள் அறிக்கை அனுப்புவதாகச் சொன்னார்கள். எனக்கு ஒரு அறிக்கையும் வரவில்லை. ஐயம் தீர்ப்பதாகவும் தெரியவில்லை. அங்கே நடந்ததெல்லாம் அந்த மந்திரி மாற்றப்பட்டு வேறு மந்திரி மத்திய சர்க்காரிலே வந்திருக்கின்றார்களே தவிர, வேறு ஒன்றும் அல்ல.

[1983 ஜனவரி 28

**டாக்டர் இரா. சனார்த்தனம்** : இந்தப் பரிந்துரையைப்பற்றிச் சொல்கிறபோது, ஊர் பற்றி எரிகின்றபோது, பீடிக்கு நெருப்பு கேட்டதுபோல இருக்கிறது. நம்முடைய மின்சாரப் பற்றாக்குறையை, துன்பத்தைப் போக்க . . .

**மாண்புமிகு மேலவைத் தலைவர்** : சுருட்டுக்கு நெருப்பு கேட்டதாகத் தான் கேள்விப்பட்டிருக்கிறேன்.

**டாக்டர் இரா. சனார்த்தனம்** : இந்த மின்சாரப் பற்றாக்குறையால் இப்போது நம்மிடையே இருக்கின்ற சிரமங்களைப் போக்குவதற்கு மத்திய அரசு இருக்கிறதா? இப்போது அதற்கு ஏதாவது அறிகுறி இருக்கிறதா?

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்** : நம்மைப் பொறுத்தவரையிலே, நான் தெளிவாகச் சொல்வது, ஒவ்வொரு மாநிலத்தின் மின் உற்பத்தியைப் பொறுத்தவரையிலே, தன்னிறைவு ஏற்படுத்துவதைத்தான் மத்திய அரசு "புரோமோஷனல் ஆஸ்பெக்ட்" ஆக, ஒரு கொள்கையாகக் கொள்ள வேண்டுமே தவிர, எல்லாவற்றையும் அவர்களே எடுத்துக்கொண்டு, அவர்களே மின்சாரம் உற்பத்தி செய்து, விநியோகம் செய்வது என்பது நிச்சயமாக வளர்கின்ற காலத்திலே ஏராளமான மின்சாரம் தேவைப்படுகின்றபோது, மிகப் பெரிய குறைபாட்டிற்குக் கொண்டு வந்துவிடும். அப்படி மத்திய அரசு நிர்வாகத்திலே ஏதாவது தடங்கல் ஏற்பட்டுவிடுமானால், அதனால் இந்தியா முழுவதும் பாதிக்கப்படும். ஆகவே இது கூடாது என்பதைத் தெளிவாக எடுத்துச் சொல்லியிருக்கிறோம். இதில் ஊர் பற்றி எரிகிறபோது சுருட்டுக்கு நெருப்பு கேட்கிறார்களா இல்லையா என்று சொல்ல முடியாது. ஆனால் எதையுமே பற்றவிடாமலேயே எடுத்துக்கொள்வார்கள்போல இருக்கிறது.

**திரு. க. இராமமூர்த்தி** : மாண்புமிகு மேலவைத் தலைவர் அவர்களே, அநேகமாக மாண்புமிகு அமைச்சர் அவர்களுடைய பதிலிலிருந்து இந்தியாவினுடைய அனைத்து மாநிலங்களிலும் இந்தப் பரிந்துரை ஏற்றுக்கொள்ளப்படுவதற்கில்லை என்ற அளவிலே கருத்து சொல்கின்ற நிலை ஏற்படுகிறது. இருந்தாலும்கூட தமிழகத்திலே மின் பற்றாக்குறை இருக்கிறது. மின்தேவை இருப்பதால், நம்முடைய நிலையை ஒட்டி மற்ற மாநிலங்களின் கருத்தும் அதற்கு ஆதரவாக இருப்பதால், அவர்களும் நமக்கு ஆதரவாக இருப்பதால், நாம் அதற்கு முன்னணியில் நின்று இந்தக் கருத்தை மத்திய அரசுக்குத் தெரிவிக்க மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா? ஏற்கெனவே



1983 ஜனவரி 28]

இருந்த மத்திய அமைச்சர் தமது அமைச்சர் பொறுப்பிலே இருந்து மாற்றப்பட்டிருக்கிறார். அந்தப் பரிந்துரை என்னவாயிற்று என்று தெரியவில்லை என்று சொல்லியிருக்கிறார்கள். அங்கே நிரந்தரமாகவே அது என்னவாயிற்று என்று தெரியாத நிலையை உருவாக்க நமது மாநில அரசு நடவடிக்கை எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்?

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்** : இந்த நடவடிக்கை, மத்திய அரசைப் பொறுத்தவரையிலே, தேவையற்றது. அதோடு மட்டுமல்ல, தீதானது என்பதை அடிக்கடி வாய்ப்பு கிடைக்கின்ற போதிலே எல்லாம் வற்புறுத்தி வருகிறோம். அவர்கள் நியாயத்தை ஏற்பார்கள் என்று நம்புகிறோம்.

**திரு. ம. சங்கரலிங்கம்** : இந்தக் கருத்தினை, இந்த அறிக்கையை, மத்திய அரசுக்கு அனுப்பியிருக்கிறார்கள். மத்திய அரசு ஏற்றுக் கொள்கின்றதா இல்லையா என்று அறிவிக்கப்படவில்லை. மத்திய அரசு ஏற்றுக்கொள்கின்றதா இல்லையா என்று அறிவிக்கின்ற நிலையில் தமிழகத்தினுடைய பாராளுமன்ற உறுப்பினர்களை மாண்புமிகு மின்சார அமைச்சர் அவர்கள் அழைத்துப் பேசி இந்த நிலையை அவர்களுக்குத் தெளிவுபடுத்தி அவர்களை அங்கே கேட்கச் செய்து, அதற்கு பாராளுமன்றத்தில் பதில் பெறுவதற்கு நடவடிக்கை எடுத்துக்கொள்ளப்படுமா?

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்** : நம்மை விட பாராளுமன்ற உறுப்பினர்களுக்குத்தான் எளிதில் விவரங்கள் கிடைக்கும். ஏனென்றால் இந்த அறிக்கை தயாரிக்கப்பட்டது மத்திய அரசினால். அந்த அறிக்கை தரப்பட்டது மத்திய அமைச்சரகத்திற்கு. ஆகவே இன்னும் விவரங்கள் வேண்டுமென்றால், பாராளுமன்றம் நமக்குத் தரவேண்டுமே தவிர, நாம் அவர்களுக்குத் தருகின்ற நிலையிலே இல்லை. ஆனால் இதிலே இன்னொரு ஆபத்து இருக்கிறது. மாநிலத்தின் கருத்துக்களைப் புறக்கணித்துவிட்டுக்கூட, மத்திய அரசு நினைத்தால், சட்டம் கொண்டுவந்து இதை நிறைவேற்றுவதற்கு அரசியல் சட்டத்திலே இடம் உண்டு.

## Power-cut.

*22. *Q.*—THIRU D. SANTOSHAM : Will the Hon. the Minister for Electricity be pleased to state :

(*a*) whether the Government are aware of the fact that the frequent power-cut even during the months of December 1981 and January 1982 seriously affected the Small Scale Industries and domestic consumers ;

(*b*) the reason for the unusual power-cut during these months ; and

(*c*) the steps taken by the Government to restore the normal supply ?

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் :** (அ) மற்றும் (இ) ஆம். 1981 ஆம் ஆண்டு டிசம்பர் மாதத்திலும் 1982 ஆம் ஆண்டு ஜனவரி மாதத்திலும் மின் நுகர்வோரின் தேவை, தமிழகத்தில் நிலவிய மின்சார உற்பத்தித் திறனுக்கு அதிகமாக இருந்ததால் தவிர்க்க முடியாத நிலையில் மின் தடங்கல் செய்ய அவசியம் ஏற்பட்டது.

(உ) முன் அறிவிப்பின்றி மின்தடை செய்வதை குறைப்பதற்கு 4—3—1982 முதல் மின்சாரம் பயன்படுத்துவதில் சில கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டுள்ளன. இந்தக் கட்டுப்பாடுகள் 1—7—1982-ல் நீக்கப் பட்டன.

(முற்பகல் 9-40)

**திரு. த. சந்தோஷம் :** அமைச்சரவர்கள் சொன்னபடி, 1981-ல் டிசம்பர் மாதத்திலும், 1982-ல் சனவரி மாதத்திலும் மின்சாரத் தட்டுப்பாடு வந்து விட்டது. அதற்கு முன்பெல்லாம் ஏப்ரல், மே மாதங்களில்தான் மின்சாரத் தட்டுப்பாடு ஏற்படும். எனவே மின்சாரத் தட்டுப்பாடு மிகப் பெரிய அளவிற்கு வர இருக்கிறதென்று அபாய எச்சரிக்கையாக அரசு உணர வேண்டுமென்பதற்காகத்தான் இந்தக் கேள்வியைப் போட்டேன். இந்த அளவில் மின்சார உற்பத்தியைப் பெருக்க என்ன நடவடிக்கைகளை அரசு எடுத்திருக்கிறதென்று அறிய விரும்புகிறேன். போன வருடத்திற்கு முந்தின வருடம், ஆளுநர் அவர்கள் உரையில் கடல் நீரிலுள்ள வெப்ப நிலை மாறுதலைப் பயன்படுத்தி மின்சாரம் உற்பத்தி செய்யலாமென்று அறிவிக்கப் பட்டது. அமெரிக்காவில் 'கடல் நீரிலிருந்து மின்சாரத்தை உற்பத்தி செய்வதாகக் கேள்விப்படுகிறேன். அப்படிப்பட்ட புதிய முறைகளின் மூலம் மின்சாரத்தை உற்பத்தி செய்ய முடியுமா ? நமக்கு நீர் மின் நிலையங்களை அதிகப்படுத்த சாத்தியக்கூறுகள் இல்லை. அனல் மின் நிலையங்களையும் அதிகப்படுத்த முடியாது. எனவே புதிய முறைகளை கையாள அரசு ஏதேனும் முயற்சி எடுத்திருக்கிறதா என்று அறிய விரும்பு கிறேன்.



**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் :** பற்றாக்குறையைத் தவிர்ப்பதற்கு கடல் நீரின் வெப்ப ஏற்றத்தாழ்விலிருந்து மின்சாரம் எடுத்தல், கடல் அலை களிலிருந்து மின்சாரம் எடுத்தல், சூரிய சக்தியிலிருந்து மின்சாரம் எடுத்தல், காற்றின் வேகத்திலிருந்து மின்சாரம் எடுத்தல் போன்றவை சிறுசிறு அளவில் சோதனை அடிப்படையில் செய்யப்படுகிறது. நம்முடைய பசி பெரும் பசி. இதைப் போக்குவதற்கு conventional sources of energy ஏற்கெனவே பயன்படுத்தும் முறையை வைத்துத்தான் செய்ய வேண்டியிருக் கிறது. புனல் மின் திட்டங்கள் ஏற்கெனவே நிறைவேற்றப்பட்டதன் விளைவாக அனல் மின் திட்டங்களையும், அணு மின் திட்டங்களையும் உருவாக்க முயற்சி செய்ய வேண்டும். அந்த முயற்சியைத்தான் அரசு செய்து வருகிறது.

**திரு. த. சந்தோஷம் :** தற்சமயத்தில் புது அனல் மின் நிலையம் கட்ட முயற்சி நடக்கிறதா ? அப்படியானால் அது எந்த நிலையில் இருக் கிறது ?

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் :** தேவையான விளக்கங்கள் மின வாரிய நிதி நிலை அறிக்கை மீதான விவாதத்தின்போது தரப்படும்.

**திரு. பா. ரா. நாமன் :** 1982 ஜூன் மாதத்திலேயே கல்பாக்கத்திலுள்ள அணு மின் நிலையம் உற்பத்தியைத் தொடங்குமென்று அறிவிக்கப்பட்டது. அது குறித்து மத்திய அரசுடன் மாநில அரசு தொடர்பு கொண்டு, அதை விரைவுபடுத்தி, உற்பத்தியை விரைவில் தொடங்குவதற்கான நிலையை அரசு உருவாக்குமா ? அத்தகைய நிலையை உருவாக்காமல் இருந்தால், மின் பற்றாக்குறை தொடர்ந்து இருக்கும். இதுபற்றி மாண்புமிகு அமைச்சர வர்களின் கருத்து என்ன ?

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் :** கல்பாக்கம் அணு மின் நிலையத்தைப் பொறுத்தவரையில், அது விரைவில் மின்சார உற்பத்தியைத் துவக்க வேண்டுமென்று நாம் வற்புறுத்தித்தான் வருகிறோம். இருந்தாலும் அது கிணற்றில் போட்ட கல்லாக இருக்கிறது.

திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் : கடுமையான மின் பற்றாக்குறை ஏற்பட்டுள்ள இந்த நேரத்தில் பல இடங்களில் ஆடம்பரமான நிகழ்ச்சிகளுக்கு மின்சாரத்தை வீணாக்கும் நிலைமையைப் பார்க்கிறோம். ஆடம்பரமான நிகழ்ச்சிகளுக்கு மின்சாரத்தைப் பயன்படுத்தக்கூடாது என்று அரசு கடுமையான ஆணையைப் பிறப்பிக்குமா ?

மாண்புமிகு திரு. சு. இராமச்சந்திரன் : மின்சாரத்தை ஆடம்பரமான நிகழ்ச்சிகளுக்குப் பயன்படுத்தக்கூடாதென்று ஏற்கெனவே அரசு ஆணை உள்ளது. மற்றவர்களுக்கு ஆடம்பரம் என்று தெரிவது, பயன்படுத்துகிறவர்களுக்கு சிக்கனம் என்று தெரிகிறது போலும்.

திருச்சிராப்பள்ளி மாவட்டத்தில் மண்பரிசோதனைக்கூடம்.

*23. வினா.—திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் : மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன் :

(அ) தமிழ்நாட்டில் திருச்சிராப்பள்ளி மாவட்டத்தில் விவசாயப் பல்கலைக்கழகம், மண் பரிசோதனைக் கூடம் ஆகியவற்றை அமைக்க இந்திய விவசாய ஆய்வுக் கழகம் அனுமதித்துள்ளது என்பது உண்மையா ?

(இ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து : (அ) இந்திய வேளாண்மை ஆராய்ச்சிக் கழகத்தின் நிதியுதவியுடன் திருச்சி மாவட்டம், நாவலூர்குட்டப்பட்டு என்னுமிடத்தில் 1981 ஆம் ஆண்டு மே மாதத்தில் உவர் மற்றும் கார மண் ஆராய்ச்சி மையம் ஒன்று அமைக்கப்பட்டுள்ளது. இந்திய வேளாண்மை ஆராய்ச்சிக் கழகம் இம்மாவட்டத்தில் ஒரு வேளாண்மைப் பல்கலைக் கழகம் அமைக்க அனுமதியளித்துள்ளது என்பது சரியல்ல.

(இ) இந்த ஆராய்ச்சி மையம், சாதாரணமான ஒரு மண் பரிசோதனைக்கூடம் அல்ல. ஏறத்தாழ உற்பத்திக்குப் பயன்படாத நிலையில் மாநில முழுதும் உவர் மண் மற்றும் கார மண் இருப்பதால், இது தொடர்பான சிக்கல்களைத் தீர்க்கும் வகையில் இந்த மையத்தில் ஆராய்ச்சிகள் நிகழ்த்தத் திட்டமிடப்பட்டுள்ளது. தேசிய வேளாண்மை ஆராய்ச்சித் திட்டத்தின்கீழ், இந்திய வேளாண்மை ஆராய்ச்சிக் கழகம் இந்த ஆராய்ச்சி மையத்திற்கு 5 ஆண்டுகளுக்கிற்குச் சுமார் ரூ. 46.95 இலட்சம் நிதியுதவி வழங்குகிறது.



திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் : தலைவரவர்களே, பிற மாநிலங்களோடு நம்முடைய மக்கள் தொகை, விவசாயப் பணி இவற்றை ஒப்பிட்டுப் பார்க்கும் போது, நம்மைவிட சிறிய மாநிலங்களில் 3, 4 விவசாயப் பல்கலைக்கழகங்கள் அமைக்கப்பட்டிருக்கின்றன. ஆனால் விவசாயத்தை முக்கிய தொழிலாகக் கொண்டுள்ள தமிழகத்தில் இப்போதுள்ள விவசாயப் பல்கலைக் கழகம் போதாது என்று நிபுணர்கள் கருத்து தெரிவித்திருக்கிறார்கள். இதுவரை அப்படிப்பட்ட பல்கலைக்கழகம் துவங்க அனுமதி அளிக்கப்படாமல் இருந்தாலும், இங்கு மேலும் விவசாயப் பல்கலைக்கழகங்கள் அமைக்க வேண்டியதன் அவசியத்தை தமிழக அரசு வலியுறுத்தி, புதிய விவசாய பல்கலைக்கழகங்களைத் துவக்க நடவடிக்கை எடுக்குமா ?

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து : தலைவரவர்களே, மற்றொரு வேளாண்மைக் கல்லூரி தொடங்கலாமென்பது அரசினுடைய கருத்து. அதைப் பல்கலைக்கழகத்தின் ஆட்சிமன்றக் குழு பரிசீலித்து, அரசுக்கு அனுப்பும்போது, அதில் முடிவெடுக்கலாம்.

திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் : துவங்கப்பட உள்ள வேளாண்மைக் கல்லூரியை எந்த இடத்தில் துவங்குவது என்று முடிவு செய்யப்பட்டிருக்கிறதென்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து : குழந்தை பிறந்த பிறகு பெயர் வைக்கலாம்.

திரு. ம. சங்கரலிங்கம் : வேளாண்மையில் ஆராய்ச்சி, அதன்மூலம் வரும் வளர்ச்சி இவற்றை முன்னிட்டு, வேளாண்மைப் பல்கலைக் கழகத்தின் சார்பில் தமிழகத்திலுள்ள எல்லாப் பகுதிகளும் பயன்படும் விதத்தில் 5, 6 இடங்களில் விரிவாக்க மையங்களை ஏற்படுத்தி, அதன் மூலம் ஏற்படும் பலன் எல்லாப் பகுதிகளுக்கும் கிடைக்கும் விதத்தில் அரசு திட்டமிடுமா ?

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து : இப்போதே கோவை வேளாண்மைப் பல்கலைக்கழகத்தின் ஆராய்ச்சி மையங்கள் தமிழகம் முழுவதும் பரவலாக இருக்கின்றன.

[1983 ஜனவரி 28

### பட்டுக்கோட்டையில் தேங்காய் எண்ணெய் தொழிற்சாலை.

*24. வினா.—திரு. க. மீனாட்சிசுந்தரம்: மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) தஞ்சாவூர் மாவட்டம், பட்டுக்கோட்டையில் தேங்காயிலிருந்து எண்ணெய் எடுக்கும் தொழிற்சாலை ஒன்றை அமைக்கும் செயற்குறிப்பு ஏதும் அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

(இ) ஆம் எனில், அது எப்போதிருந்து செயல்படுத்தப்படும் ?

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து : (அ) இல்லை.

(இ) கேள்விக்கு இடமில்லை.

டாக்டர் இரா. சனார்த்தனம் : தேங்காய் எண்ணெய் தயாரிக்கவில்லை என்றாலும், தேங்காயிலிருந்து கயிறு திரிக்கும் தொழில் ஏற்படுத்த உத்தேசமுண்டா ?

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து: கேள்வி, பெரிய அளவில் எண்ணெய் தொழிற்சாலை தொடங்குவது பற்றியதாகும். கயிறு திரிப்பதை சிறிய அளவில் நடத்தலாம். அதை மாண்புமிகு உறுப்பினரவர்களே நடத்தினால், அரசுக்கு ஆட்சேபணை இல்லை.

மாண்புமிகு மேலவைத் தலைவர் : வினாக்கள் 25, 26, 27 ஒத்திவைக்கப்படுகின்றன.

### *Government Headquarters Hospitals in South Arcot District with Operation Theatres.*

*28. *Q.*—Thiru K. RAMAMOORTHY: Will the Hon. the Minister for Health be pleased to state—

*(a)* the number of Government Headquarters Hospitals in South Arcot District, which have Operation Theatre facilities; and

*(b)* the number of them, which are in working condition?

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : (அ) தென்னார்க்காடு மாவட்டத்தில் 10 மாவட்டத் தலைமையிட மருத்துவமனை/வட்டத்தலைமையிட மருத்துவமனைகளில் அறுவை சிகிச்சை அரங்குகள் உள்ளன.

(இ) எல்லா மருத்துவமனைகளிலும் அறுவை சிகிச்சை அரங்குகள் நல்ல நிலையில் இயங்கிக்கொண்டிருக்கின்றன.



1983 ஜனவரி 28]

திரு. க. இராமமூர்த்தி : தலைவரவர்களே, மாண்புமிகு அமைச்சரவர்கள் அந்தப் பத்து மருத்துவ மனைகள் இருக்கும் ஊர்களின் பெயர்களை அறிவிப்பார்கள் என்று எதிர்பார்த்தேன். அறுவை சிகிச்சை நிலையங்கள் சொல்படும் வகையிலே, அதனுடைய பகுதியாக இயங்க வேண்டிய பிளட் பாங்க் (Blood Bank) எக்ஸ்ரே யூனிட் (X-Ray unit) போன்றவைகளெல்லாம் முறையாக அந்தப் பத்து மருத்துவமனைகளிலே செயல்படுகின்றனவா ? அவையில்லாமல் அறுவை சிகிச்சை நிலையங்கள் செயல்படுகின்றனவா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : தலைவரவர்களே, அந்தப் பத்து இடங்கள்—

Government District Headquarters Hospital, Cuddalore, Government Hospitals at Vriddhachalam. Chidambaram, Kallakurichi, Ulundurpet, Tirukoilur, Gingee, Tindivanam, Villupuram and Thittagudi.

இந்தப் பத்து இடங்களில் அறுவை சிகிச்சைகள் நடைபெறுகின்றன. அது மட்டுமல்லாமல், மைனர் ஆபரேஷன்ஸ் பண்ருட்டியிலும், காட்டுமன்னார் கோவிலிலும் நடைபெறுகின்றன. பிளட் பாங்கைப் பொறுத்தவரையில், எல்லா இடங்களிலும் அதற்காக ஏற்பாடு செய்திருக்கிறோம். இரண்டு இடங்களில் மட்டும் தண்ணீர் சரியாகக் கிடைக்காமல் இருப்பதால், அங்கே தேவையில்லை என்று நிபுணர்கள் சொல்லியிருக்கிறார்கள். மற்ற எல்லா வசதிகளும் செய்யப்பட்டு வருகின்றன.

திரு. க. இராமமூர்த்தி : மருத்துவத் துறை குறித்த தகவல்கள் அமைச்சருக்கு அடிக்கடி வந்து கொண்டிருந்தாலும், அறுவை சிகிச்சைகள் ஒவ்வொரு தலைமை மருத்துவமனையிலும் மாதந்தோறும் எத்தனை நடைபெறுகின்றன என்ற ரிப்போர்ட்டைப் பார்த்தால், சில நோய்களில் சாதாரண அறுவை சிகிச்சைகளை மட்டும் செய்துவிட்டு, மற்றவைகளுக்கு வாய்ப்பு இல்லாமல் பாண்டிச்சேரி, கடலூர் மருத்துவமனைகளுக்கு அனுப்பும் நிலை இருக்கிறது. எதனால் இந்த நிலை ஏற்படுகிறது என்று பார்த்தால், அதைத் தவிர்க்க இயலும். அந்த அளவில் மாண்புமிகு அமைச்சரவர்கள் கருத்து தெரிவிப்பார்களா ?

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : இந்த பத்து மருத்துவமனைகளிலே மொத்த படுக்கைகள் 875 ஆகும். இந்த மருத்துவ மனைகளிலே 3,146 மேஜர் ஆபரேஷன்ஸ் செய்யப்பட்டிருக்கின்றன. 27,887 மைனர் ஆபரேஷன்ஸ் செய்யப்பட்டிருக்கின்றன. மாண்புமிகு உறுப்பினர் இன்னும் கொஞ்சம் கூட மைனர் டைப் ஆஃப் ஆபரேஷன்ஸ் பற்றிக் கேட்கிறார் என்று நினைக்கிறேன்.

(முற்பகல் 9-30)

Thiru K. RAMAMOORTHY : In every hospital, how many operations do they do ?

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே: எல்லா ஆஸ்பத்திரிகளிலும் ஒட்டு மொத்தமாக உள்ள அறுவை சிகிச்சை அரங்குகள்பற்றி இங்கே நான் சொல்லியிருக்கிறேன். டெட் ஸ்டிரெந்தைப் பொறுத்தவரையில், திருக் கோவிலூர் இன்னும் இதுபோன்ற மருத்துவமனைகளின் புள்ளிவிவரம் இருக்கிறது. ஆனால் ஒவ்வொரு மருத்துவமனையிலும் உள்ள ஆபரேஷன் தியேட்டர் பற்றிய விவரம் இப்போது இல்லை. மீண்டும் தேவைப்பட்டால் தருகிறேன்.

Thiru G. VASANTHA PAI : Sir, will the Hon. Minister take care that blood is not collected by nomadic methods by going from place to place but is collected only in places where there are perfect safeguards and which are free from any infection ? For example, in 1976, blood was collected from the High Court by a team of doctors. It was later found to be lysed and thrown in the King Institute as fodder for the coconut trees. I hope that blood will not be collected like that, bottled and given to Hospitals.

The Hon. Dr. H. V. HANDE : Mr. Chairman, Sir, the present method of blood-collection is so perfected that the problem which the hon. Member has raised in this House will not arise. We have taken particular care to see that the method of collection is so perfected that even the bottles are being inspected. Probably, the problem that he has posed now had arisen because the bottle was not properly prepared. The preparation of the bottle is also important.

Thiru G. VASANTHA PAI : Sir, the blood was taken in the High Court Library Chambers which remained closed for a long time. A team of three doctors came there and there was television coverage and all the rest of such things. The blood was collected in 1976. Later, when I went to the King Institute during the course of my election campaign, I found that the blood was kept there, marked as 'lysed', and thrown as fodder for coconut trees. People who see this may think that the coconut trees might start speaking later because those trees are fed on Advocates' blood.

The Hon. Dr. H. V. HANDE : Mr. Chairman, Sir, indirectly the hon. Member is paying a compliment to the capacity of the Advocates to talk. Obviously, this Question also arose from an Advocate who can talk well. Without going into the merits of that, I would like to



say that this, probably, as the hon. Member says, happened in 1976. But, right now, in the last few years, we have been monitoring the whole thing. Particular care is given when such instances are brought to our attention. Even earlier, instances have been brought to our attention. But, we take particular care to see that the blood is not wasted. It is only after convincing him a lot, that we take the blood of a person. Once blood is taken from a person, that blood should not be wasted. What we have now done is this. In certain places, we do not have sufficient facilities for storing blood. In such places, we draw a list of donors and also properly identify their blood groups. By this, in a moment's notice, a donor can come and give the blood immediately. Wherever there is paucity of storage facilities, this method is adopted. Therefore, the hon. Member can feel assured that all steps have been taken to see that the blood is not spoiled.

திரு. த. சந்தோஷம் : இரத்தத்தை எடுக்கும்போது இரத்த தானம் பண்ணுகிறவர் நல்ல சுகத்தில் இருக்கிறாரா என்று பரிசோதனை செய்யப் படுகிறதா ? அப்படியானால் எத்தனை நாட்கள் பரிசோதனை செய்யப் படுகிறது ? அதோடு அவருக்கு ஏதாவது நோய் இருக்கிறதா என்பது உட்பட எல்லாவிதமான சோதனைகளும் செய்யப்பட்ட பிறகுதான் இரத்தம் எடுக்கப்படுகிறதா ?

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : இரத்தம் கொடுக்கின்ற நபர் களைப் பொறுத்தவரையில், நன்றாக அவர்கள் பரிசோதனை செய்யப்படு கிறார்கள். அவர்களுக்கு எந்தவிதமான நோயும் இருக்கக்கூடாது. அதுமட்டுமல்லாமல், அவருக்கு இருக்கக்கூடிய இரத்தம் தகுதி வாய்ந்ததாக இருக்க வேண்டும். இவைகளையெல்லாம் முறையாகப் பரிசோதனை செய்த பிறகுதான் இரத்தத்தை எடுக்கிறோம். சோதனை செய்யாமல் இரத்தத்தை எடுப்பது சரியாக இருக்காது.

திரு. த. சந்தோஷம் : எத்தனை நாட்கள் சோதனை செய்கிறார்கள் ? கால் மணி நேரம் மட்டும்தான் சோதனை செய்கிறார்களா ? அல்லது இரண்டு மூன்று நாட்கள் சோதனை செய்து சகல நோய்களும் இருக் கின்றனவா என்று பரிசோதனை செய்யப்பட்ட பிறகுதான், 'பிளட் டோனர்' இடமிருந்து இரத்தம் எடுக்கப்படுகிறதா ?

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே: முதலில் இரத்தத்தைக் கொடுக்க முன்வருபவர்கள் தங்களுடைய பெயரைக் கொடுப்பார்கள். அதாவது அந்த ஒரு ரிஜிஸ்டர் வைத்திருக்கிறோம். அதில் அவருடைய பெயர் பதிவு

செய்யப்படும். பிறகு பிளட் டெஸ்ட் செய்யப்படுகிறது. பிளட் டெஸ்ட்டுக்குப் பிறகு ஒரு நோயும் இல்லை, சிபிலிஸ் போன்ற நோய்கள் இல்லை என்று உறுதி செய்த பிறகு ஒரு வாரம் அல்லது பத்து நாட்கள் கழித்த பிறகு தகுதி வாய்ந்த டோனராக அவருடைய பெயரை ரிஜிஸ்தரில் எழுதிய பிறகு இரத்தம் எடுக்கப்படுகிறது.

### காசநோய்.

*29. வினா—திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன்: மாண்புமிகு மக்கள் நல் வாழ்வுத்துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன் :—

(அ) காசநோயை குறுகிய காலத்தில் குணப்படுத்த வழிமுறைகளை சென்னை காசநோய் ஆராய்ச்சி மையம் கண்டறிந்துள்ளதா ?

(இ) ஆம் எனில் அதன் விபரம் என்ன ?

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே: (அ) ஆம்.

(இ) சிறந்த மருந்துகளான ஸ்ட்ரெப்டோமைசின் (Streptomycin) ஐசோனியாசிட் (Isoniazid) ரிபாம்பிசின் மற்றும் பைராசினமைட் (Pyrazinamide) போன்றவைகளை காச நோயாளிகளுக்கு அளிப்பதன் மூலம் வழக்கமான 12 முதல் 18 மாதங்கள் வரையிலான சிகிச்சை காலத்திற்கு மாற்றாக, மூன்று மாதத்திலிருந்து ஏழு மாதங்களுக்குள் சிகிச்சை முடிந்து குறுகிய காலத்தில் நோயாளிகள் குணம் பெற சென்னை காசநோய் ஆராய்ச்சி நிலையம் ஆராய்ந்துள்ளது. நோயாளிகளும் இம்முறைகளை ஏற்றுக்கொள்ள பெரும் வாய்ப்பு உள்ளது.

திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன்: ஆராய்ச்சிக் கழகம் கண்டறிந்துள்ள இந்தக் கண்டுபிடிப்பை நடைமுறையில் தம்முடைய மருத்துவமனைகளில் செயல்படுத்திப் பார்த்ததில் வெற்றிகரமாக உள்ளது என்று கண்டறியப் பட்டுள்ளதா? இந்த முறையின் மூலம் நோய்கள் பெருமளவுக்கு குணமாகி யிருக்கிறதா ?

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே: டி. பி. ரெசர்ச் என்பது இந்தியன் கவுன்சில் ஆஃப் மெடிகல் ரெசர்ச் என்கிற அமைப்பின்கீழ் இருக்கிறது. இது சேத்துப்பட்டு ஸ்பர்டாங்க் சாலையில் இருக்கிறது. அவர்கள் இந்த ஆராய்ச்சியில் வெற்றி பெற்றிருக்கிறார்கள். ஸ்ட்ரெப்டோமைசின் மற்றும் ஐசோனியாசிட் போன்றவற்றை இரண்டு மாதங்களுக்குக் கொடுக்க



வேண்டும். அதுபோல் ரிபாம்பிசின் மற்றும் பைராசினமைட் போன்ற வற்றை ஐந்து மாதம் கொடுக்க வேண்டும். இவ்வாறு கொடுப்பதன் மூலம் ஏழு மாதங்களுக்குள் குணம் அடைகிறார்கள். இன்றைய தினம் மானிட்டர் செய்து வியாதி நிச்சயம் குணம் அடையும் என்று உறுதி செய்யப்பட்டிருக் கிறது. தாம்பரம் டி. பி. சானிட்டோரியத்தில் இதே ஆராய்ச்சியை செய்து 35 பேஷன்ட்சுக்குப் பயன்படுத்தியதில் நல்ல முறையில் முழுமையாக குணம் அடைந்திருக்கிறார்கள். இந்த முறையின் மூலம் இரண்டு தன்மைகள் உண்டு. ஒன்று, நோயாளிகள் சானிட்டோரியத்தில் இருக்க வேண்டாம். இரண்டாவது, நோய் வெகு சீக்கிரத்தில், முழு அளவில், திரும்பவும் வராத அளவுக்கு குணமடைகிறது. பரீட்சார்த்தமாக டபிள்யூ எச். ஓ.வில் கூட ஏற்றுக்கொள்ளப்பட்ட முறை இது.

திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன்: இந்த முறை வெற்றிகரமான முறை என்று பரீட்சார்த்த முறையில் உறுதியாக்கப்பட்டிருப்பதால், இந்த நோயுள்ள நோயாளிகளைக் குணப்படுத்த மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கூறிய மருந்துகளை அனைத்து மருத்துவமனைகளுக்கும் மிகத் தாராளமாக வழங்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதா ?

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே: இதிலே மிக முக்கியமானது மானிட்டரிங் என்பது. மருந்துகளை மருத்துவர்கள் கையிலே கொடுத்தால் மாத்திரம் போதாது. நோயாளிகள் தொடர்ந்து இந்த மருந்துகளைச் சாப்பிட வேண்டும். அரைகுறையாகச் சாப்பிட்டால் 'ரெசிஸ்டென்ஸ்' ஏற்படும். இதற்காகப் படிப்படியாகப் பணத்தை ஒதுக்கிக்கொண்டிருக் கிறோம். முழுமையான அளவில் மருந்துகளை வழங்க நமக்கு ஐந்து லட்சம் ரூபாய் செலவாகும். ஐந்து லட்சம் ரூபாய்க்கும் நாம் மருந்துகளை வழங்கும்போது இதில் நாம் வெற்றி பெற வாய்ப்பு உண்டாகும். ஆனால் நான் சொல்ல வருவது, இங்கே இடையூறாக இருப்பது பணமல்ல, மானிட்டரிங் தான் இங்கே இடையூறாக இருக்கிறது. மானிட்டரிங் வெற்றி பெறும்போது இதிலே நாம் வெற்றி பெறலாம்.

திரு. ஈ. எஸ். வெங்கடேசன்: கிராம மக்கள் நலங்கருதி காச நோய் தடுப்புக்கு மொபைல் யூனிட்டுக்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதா ? எந்தெந்த கிராமங்களில் இவ்வசதி இருக்கிறது ? இந்த அரசு இதற்காக எவ்வளவு நிதி வரை செலவு செய்திருக்கிறது ? மத்திய அரசுக்கு இதில் பங்கு உண்டா ?

**மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே:** ஏற்கெனவே தாம்பரத்தில் ஒரு மொபைல் யூனிட் இரண்டு ஆண்டுகளாகச் செயல்பட்டு வருகிறது. அது மட்டுமல்லாமல், சேலம், பெரியார், திருநெல்வேலி, வட ஆற்காடு போன்ற இந்த மாவட்டங்களில் இத்திட்டத்தைச் செயல்படுத்திக்கொண்டு வருகிறோம். மத்திய அரசு ஐம்பது சதவிகிதம் கொடுக்கிறது. 13.8 லட்சம் ரூபாயை டிரக்ஸ், எக்ஸ்ரே பிலிம் போன்றவற்றுக்காக மத்திய அரசு கொடுத்தது. 31.28 லட்சம் ரூபாயை தமிழக அரசு மருந்துகளுக்காகவும், எக்ஸ்ரே எடுத்ததை பூதக் கண்ணாடி மூலம் பார்த்து எந்த நோய் என்று தெரிவதற்கான வசதிக்காகவும் கொடுத்துள்ளது. ஆக மொத்தத்தில் மத்திய அரசு 13.8 லட்சம் ரூபாயையும், மாநில அரசு 31.28 லட்சம் ரூபாயையும், இதற்காகச் செலவிட்டிருக்கின்றன.

(முற்பகல் 10.00)

**திரு. த. சந்தோஷம்:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதிலளிக்கும்போது ஸ்ட்ரெப்டோமைசின் என்று ஆரம்பித்தார்கள், ஸ்ட்ரெப்டோமைசின் என்ற மருந்து இருபது ஆண்டுகளுக்கு முன்னதாகவே காசநோய்க்குப் பயன்படுத்தப்பட்டு வருகிறது. அது இந்த நோய்க்குப் புதிய மருந்து அல்ல. புதிய மருந்து ஏதாவது இருந்து அதை நம்முடைய தமிழகத்திலே தயாரிக்க வாய்ப்பு இருக்கிறதா? அப்படியென்றால் எங்கு தயாரிக்கப்படுகிறது? அவைகள் ஆஸ்டின்பட்டி காசநோய் மருத்துவமனைக்கு வழங்கப்பட்டுள்ளனவா?

**மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே:** ஸ்ட்ரெப்டோமைசின் புதிய மருந்து என்று சொல்லவில்லை. ஒரு காம்பினேஷன் என்று வரும்போது அதுவும் சேர்கிறது. ஸ்ட்ரெப்டோமைசின், ஐசோனியாசிட், ரிபாம்பிசின், போன்ற இந்த மருந்துகள் எல்லாம் சேர்ந்து ஒரு காம்பினேஷன் ஆகிறது. அவைகளிலே, ரிபாம்பிசின்தான் புதிய மருந்து. அதுமட்டுமல்ல, பைராசினமைட் மற்றும் ரிபாம்பிசின் என்ற இந்த மருந்துகள்தான் புதிய மருந்துகள். ஸ்ட்ரெப்டோமைசின், ஐசோனியாசிட் என்ற மருந்துகள் பழைய மருந்துகள்தான். இவைகள் எல்லாம் சேர்ந்து காம்பினேஷன் என்ற முறையிலே மருந்தாக ஆகிறது. Short treatment for tubercular bacillus-க்கு உபயோகப்படுத்தப்படுகிறது. இந்த மருந்து வகைகளிலே, ரிபாம்பிசின் மற்றும் பைராசினமைட் போன்ற மருந்துகளை நாம் தயாரிக்கவில்லை. ஆகவே, 'பல்க்' ஆக அந்த மருந்துகளை 'இம்போர்ட்' செய்து அவைகளை 'காப்சூல்' ஆக மாற்றி உபயோகப்படுத்துகிறோம். இந்தப் புதிய காம்பினேஷன் முறையிலே மிகுந்த நல்ல வெற்றி கிடைத்திருக்கிறது.





**THIRU G. VASANTHA PAI:** Sir, will the Hon. Minister clarify, since he mentioned that Rifampicin is a medicine that could be taken orally, whether injections could be eliminated in the process?

**THE HON. DR. H. V. HANDE:** Sir there are two regimens. One regimen consists of ............

**திரு. ம. சங்கரலிங்கம்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. வசந்த பை அவர்கள் ஆங்கிலத்திலே கேட்டாலும் அவருக்குத் தமிழ் புரியும். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதிலை தமிழிலே சொன்னால் எல்லோருக்கும் புரியும்.

**மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே:** இதிலே இரண்டு முறைகள் இருக்கின்றன, அதாவது இரண்டு ரெஜிமென் இருக்கின்றன. அதாவது ரெஜிமென் 1, ரெஜிமென் 2, என்ற அளவிலே இருக்கின்றன. ரெஜிமென் 1-லே ஸ்ட்ரெப்டோமைசின் சேர்த்துக் கொடுக்கப்படுகிறது. இன்னொன்றிலே ஸ்ட்ரெப்டோமைசின் சேர்த்துக் கொடுக்கப்படுவதில்லை. அந்த நோயாளி ஸ்ட்ரெப்டோமைசின் என்ற மருந்துக்கு ரெசிஸ்டென்ட் ஆகி இருக்கிறாரா இல்லையா என்று கண்டுபிடித்துத்தான் கொடுக்க வேண்டும். இரண்டாவது ரெஜிமென்டிலே ஸ்ட்ரெப்டோமைசின் இல்லாமலேயே வைத்தியம் செய்யும் வாய்ப்பு இருக்கிறது. ஆகவே, இன்ஜெக்ஷன் முறையையே அறவே எடுத்துவிட வேண்டும் என்பதுதான் உலக சுகாதார நிறுவனத்தின் சித்தாந்தம். ஊசியைக் குத்தவே கூடாது என்பதுதான் அவர்களின் நியதி. ஆனால் சிலருக்கு ஸ்ட்ரெப்டோமைசின் போட்டால்தான் வேலை செய்யும். ஆகவே, படிப்படியாக ஊசியைப் போடாமல் அறவே நீக்கி விடும் திட்டத்தைப்பற்றி உலக சுகாதார நிறுவனம் தக்க வழிமுறைகள் தரும் என்று சொன்னால், அதைச் செய்யலாம்.

**திரு. க. இராமமூர்த்தி:** இந்தப் புதிய வழிமுறைப்படி எத்தனை நோயாளிகள் இதுவரையில் தமிழகத்திலே சிகிச்சை பெற்றிருக்கிறார்கள்? அவர்களில் எத்தனைபேர் புதிய வழிமுறையிலே 3 மாத காலத்திற்குள்ளாக வியாதியிலேயிருந்து பூரணமாகக் காப்பாற்றப்பட்டிருக்கிறார்கள்?

**மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே:** நம்முடைய டியூபர்க்லோசிஸ் இன்ஸ்டிட்யூட்டைப் பொறுத்தவரையில், 33 நோயாளிகள் பூரணமாகக் குணமடைந்திருக்கிறார்கள். 1 வருடம் பூர்த்தியாகி அவர்கள் நோயிலிருந்து விடுபட்டிருக்கிறார்கள் என்று நிரூபிக்கப்பட்டிருக்கிறது. டி.பி. இன்ஸ்டிட்யூட்டைப் பொறுத்தவரையில், 500 பேருக்கு சிகிச்சை செய்யப்பட்டு பாதி

... monitor stage -லே இருக்கிறார்கள். அவர்கள் ஒரு ஆண்டு காலத்தைத் தாண்டி வரவில்லை. ஒரு வருடம் தாண்டி வந்ததற்குப் பிறகுதான் டிக்ளேர் செய்ய முடியும். இந்த விஷயத்திலே நாம் பெருமளவிலே வெற்றிபெற்றிருக்கிறோம்.

திரு. பா. ரா. தாமஸ் : இந்த காசநோயால் பாதிக்கப்பட்ட நோயாளிகள் தகுந்த முறையிலே முழுமையாகச் சிகிச்சை முறைகளைக் கையாளாமல் குறுகிய கால சிகிச்சை மட்டும் செய்து கொண்டும், தேவையான அளவு நல்ல சத்துள்ள உணவு வகைகளை உட்கொள்ளாமலும் இந்த நோய்க்குத் தகுந்த முறையில் சிகிச்சை செய்யாமல், இந்த நோய் அவர்களின் உடம்பில் தடுப்பு சக்தியைப் பெற்றுக்கொண்டு, அதன் பின்னர் எந்தவிதமான ஊசி மருந்துக்கும், மற்ற மருந்துகளுக்கும் கட்டுப்படாமல் எதிர்த்து நிற்கும் அளவுக்குப் போய் அந்த நோயாளிகள் * * * என்று சமுதாயத்திலே உள்ள மற்ற மக்கள் எண்ணும் அளவுக்கு இருக்கிறார்கள். ஆகவே, அப்படிப்பட்டவர்களுக்குத் தக்க நவீன முறையில் மருந்துகளைக் கையாண்டு அந்த நோயைக் கட்டுப்படுத்த தேவையான நடவடிக்கைகளை எடுக்க இந்த அரசு ஆராயுமா ?

மாண்புமிகு மேலவைத் தலைவர் : நோயாளிகள் * * * என்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டார்கள். அந்த வாசகம் பொருத்தமானதாக இல்லை.

THIRZ G. VASANTHA PAI : The word should be substituted as 'hardened patient'.

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : அவர்கள் எப்படி * * * வருகிறார்கள் என்று தெரியவில்லை. அந்த வார்த்தை நீக்கப்படலாம்.

மாண்புமிகு மேலவைத் தலைவர் : மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் * * * என்று குறிப்பிட்ட அந்த வார்த்தைகள் அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகின்றன.

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : அந்த வார்த்தையை நீக்கிவிடுவது நல்லதுதான். அந்த வகையிலே, 'ரிசிஸ்டென்ஸ் டெவலப்' செய்துவிட்ட நோயாளிகளுக்குத்தான் அந்த இரண்டாவது புதிய மருந்தைப்

---

* * * தலைவரின் ஆணைப்படி நீக்கப்பட்டது.



பயன்படுத்த வேண்டும் என்று சொல்லியிருக்கிறார்கள். நான் இந்த அவையின் மூலமாக டாக்டர்களுக்குச் சொல்கிறேன், யாரும் ரிபாம்பிசின் மற்றும் பைராசினமைட் போன்ற மருந்துகளைப் பயன்படுத்தக்கூடாது. ஒரு ட்யூபர்க்ளோசிஸ் ஸ்பெஷலிஸ்ட் சொன்னால்தான், இந்த மருந்துகளைப் பயன்படுத்த வேண்டும். அரைகுறையாக, ஒரு நோயாளி வந்தவுடனே, ஸ்ட்ரெப்டோமைசின் மற்றும் ஐசோனியாசிட் போன்ற மருந்துகளைக் கொடுப்பதன் மூலம் அவர்களிடத்திலே 'ரிசிஸ்டென்ஸ்' ஏற்பட்டு, அதற்குப் பிறகு எந்தவிதமான மருந்தும் பயன்படாமல் போய்விடும். ஆகவே, இந்த முறையில் அரைகுறையாக மருத்துவம் செய்யக்கூடாது. முழுமையாக, ரெஜிமென் 1, ரெஜிமென் 2 என்ற வகையிலே முடிவு செய்து ஸ்பெஷலிஸ்ட் தான் அதற்குரிய சிகிச்சை முறைப்படி மருந்துகொடுக்க வேண்டும். District Tuberculosis Officers போட்டு அவர்களை Civil Surgeons என்ற அளவிலே உயர்த்தி மாவட்டத்திலே முழு அதிகாரமும் கொடுத்து மருத்துவமனைகளுக்குப் போய் கண்காணித்து, நடவடிக்கைகளைக் கவனித்துக் கொள்ள அவர்களை ஏற்படுத்தியிருக்கிறோம். அநாவசியமாக அரைகுறையாக மருத்துவம் செய்யக்கூடாது என்று மிகவும் கடுமையாகச் சொல்லியிருக்கிறோம்.

## இரத்த சேமிப்பு வங்கிகள்.

* 30. வினா—திரு. ச. எஸ். வெங்கடேசன் : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன் :

(அ) தமிழ் நாட்டில் இரத்த சேமிப்பு வங்கிகள் எங்கெங்கு இயங்குகின்றன ?

(இ) இரத்த தானம் செய்பவர்கள் எப்படி ஊக்குவிக்கப்படுகிறார்கள் ?

(உ) ஒரு வருடத்தில் சராசரி எத்தனை பேர் இரத்த தானம் செய்கிறார்கள் ?

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : இதற்கான விவர அறிக்கை @ அவையின் முன் வைக்கப்பட்டுள்ளது.

---

@ 303-304 ஆம் பக்கங்களில் இணைப்பாக அச்சிடப்பட்டுள்ளது.

[1983 ஜனவரி 28

**திரு. ஈ. எஸ். வெங்கடேசன் :** விவர அறிக்கையிலே சென்னை நகரைப் பற்றிய குறிப்பில்லை. மற்ற இடங்களைப் பற்றி இருக்கிறது. சென்னையிலே எந்தெந்த ஆஸ்பத்திரிகளிலே, எந்தெந்த இடங்களிலே இருக்கின்றன ? இந்த இரத்த தானம் செய்வதற்குரிய தகுதி, அதற்கான விதிமுறை, வயது வரம்பு என்னென்ன ? என் போன்ற வயதானவர்கள் இரத்த தானம் செய்ய முடியுமா ?

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** 77 வயதுக்கு மேலும் இரத்த தானம் செய்ய முடியுமா ?

**மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே :** மாண்புமிகு உறுப்பினர் அவர்களைப் பொறுத்தவரையில், இளமை ஊஞ்சலாடுகிறது என்று கருதுகிறேன். இருந்தாலும் 50 வயதுக்கு மேலே இரத்த தானம் கொடுக்க வேண்டாம் என்று வைத்திருக்கிறோம். அப்படிச் செய்தால் ஒரு 'சைக்கலாஜிக்கல் டேமேஜ்' வந்தாலும் வரலாம். சென்னையிலே அதற்கான ஏராளமான வாய்ப்புக்கள் இருக்கின்றன. இங்கே 'கிங் இன்ஸ்டிடியூட்' இருக்கின்றது. ஸ்டேன்லி மருத்துவமனை மற்றும் மெடிக்கல் காலேஜ், ஜெனரல் ஹாஸ்பிட்டல் போன்ற இடங்களிலே எல்லாம் இதற்கு ஏற்பாடு செய்யப்பட்டிருக்கின்றது.

**திரு. ஈ. எஸ். வெங்கடேசன் :** இப்படி இரத்த தானம் செய்வதிலே, எந்த 'பிளட் குரூப்' அதிகமாகத் தேவைப்படுகிறது ? இப்படி இரத்தம் தானம் செய்ததனால் எத்தனை பேருடைய உயிர் மீட்கப்பட்டிருக்கிறது ?

**மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே :** அது அந்தந்த நபரைப் பொறுத்திருக்கிறது. யாருக்கு ஆக்சிடன்ட் ஜாஸ்தியாக வருகிறதோ அதைப் பொறுத்துத் தான் இது இருக்கிறது. எந்தெந்த குரூப் எங்கே அதிகமாக இருக்கிறது என்று பார்த்து, அங்கேயிருந்து பெறுகிறார்கள். 'ஏ', 'பி', போன்றவைகள் அதிகமாக கிடைக்கின்றன. சென்னையைப் பொறுத்தவரையில், எல்லாவிதமான குரூப்பிலும் இரத்தம் நம்மிடம் இருக்கின்றது.

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** இதே விஷயம்பற்றி 28 ஆவது வினாவிலேயே தெளிவாக விளக்கப்பட்டுள்ளதால், அதிகம் விரிவாகப் போகாமல் சுருக்கமாகக் கேட்கவும்.



1983 ஜனவரி 28]

**டாக்டர் இரா. சனார்த்தனம் :** இப்போது இரத்தம் தானமாகக் கொடுப்பவர்களுக்கு 15 ரூபாய் தான் கொடுக்கிறார்கள். இந்தத் தொகை மிகக் குறைவு. இதை அதிகப்படுத்திக் கொடுக்கும் உத்தேசம் இந்த அரசுக்கு இருக்கிறதா ? இங்கே, 50 வயதுக்கு உள்ளாக இருக்கும் மாண்புமிகு உறுப்பினர்கள் எல்லோரும் இரத்த தானம் செய்ய வசதி செய்வார்களா ?

**மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே :** இரத்த தானத்தைப் பொறுத்தவரையில், "Paid Donors and Voluntary Donors" என்று இரண்டு வகையாக இப்போது பிரித்திருக்கிறோம். நம்முடைய நோக்கம் எல்லாம், படிப்படியாக "Paid Donors' களுடைய எண்ணிக்கையைக் குறைத்து "Voluntary Donors" -ன் எண்ணிக்கையைக் அதிகப்படுத்த வேண்டும் என்பதுதான். தமிழகத்தைப் பொறுத்தவரையில், 4 அல்லது 5 ஆண்டுகளுக்கு முன்பு 60 சதவிகிதம் "Paid Donors" -ம், 40 சதவிகிதம் Voluntary donors -ம் இருந்தார்கள். இப்போது 65 சதவிகிதம் Voluntary donors, 35 சதவிகிதம் Paid donors என்ற அளவிலே இருக்கிறார்கள். இங்கிலாந்து நாட்டைப் பொறுத்தவரையில், அங்கே எந்த Paid donors -ம் கிடையாது. மற்ற நாடுகள் எல்லாம் நம்மைக் கேட்டுக்கொள்வது என்னவென்றால், நீங்கள் Paid donors அறவேயில்லை என்று செய்து. Voluntary donors -ஐ அதிகப்படுத்த வேண்டும் என்பது. ஆகவே, இதற்கு incentive போன்றவைகள் கொடுக்கவேண்டிய தேவையில்லை என்று சொல்லிக்கொள்கிறேன்.

(முற்பகல் 10-10)

**திரு. க. இராமமூர்த்தி :** மாண்புமிகு அமைச்சர் அவர்களின் பதிலின் மூலம் ஒன்று தெரிகிறது. அதாவது அறுவை சிகிச்சை நிலையங்கள் (ஆப்பரேஷன் தியேட்டர்ஸ்) இருக்கிற பல்வேறு இடங்களில்கூட இரத்த சேமிப்பு நிலையங்கள் இல்லை அல்லது இருந்தால், அவைகள் சரியாக இயங்கவில்லை என்பது தெரிகிறது. இது ஆபத்தான ஒரு நிலையாகும். அறுவை சிகிச்சைக்குப் பிறகு பெரும்பாலும் இரத்தம் தேவைப்படுகிறது. அப்படி தேவைப்படும்போது, அங்கே இரத்தம் இல்லையென்றால், அதன் காரணமாக உயிருக்கே ஆபத்து வந்துவிடும். அதிலும் பல்வேறு இடங்களிலும் பிரசவத்திற்காக ஆபரேஷன் தியேட்டர்களைப் பயன்படுத்துகிற நிலை இருக்கிறபோது, இரத்த சேமிப்பு வங்கிகள் இல்லாமல் இருப்பது மிகப் பெரிய ஆபத்தை உருவாக்கும் என்பதால், விரைவில் இத்தகைய குறையைப் போக்க அரசு நடவடிக்கை எடுக்குமா ? இதற்காக எப்படிப்பட்ட நடவடிக்கைகளை எடுக்க அரசு உத்தேசித்துள்ளது ?

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : தற்போது படிப்படியாக ஒவ்வொரு தாலுக்கா மருத்துவ மனையிலும்கூட நாம் இரத்த சேமிப்புக் கூடங்கள் எனப்படும் "பிளட் பேங்க்" களை ஏற்பாடு செய்து வருகிறோம். இப்படிப்பட்ட வசதி இல்லாத இடங்களில் தான் ஏற்கெனவே மாண்புமிகு உறுப்பினர் திரு. வசந்த பை அவர்களின் வினாவிற்கு விடையளித்தபோது, குறிப்பிட்ட மாதிரி "லிஸ்ட் ஆப் டோனர்ஸ்" என்று வைத்துக்கொண்டு எந்தெந்த குரூப்பிற்கு யார் யார் பிளட் டோனர்ஸ் என்று லிஸ்ட் போட்டு, ஒவ்வொரு குரூப்பிற்கும் 4, 5 பேரை வைத்துக்கொண்டிருக்கிறோம். அவர்களையெல்லாம் லயன்ஸ் கிளப், ரோட்டரி கிளப் ஆகியவைகள் மூலம் பெற்றுக் கொண்டிருக்கிறோம். அவர்கள் உதவி செய்து வருகிறார்கள். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டதைப்போல், எல்லா இடங்களிலும் இரத்த சேமிப்புக் கூடங்களை விஸ்தரிப்பது அவசியம் என்பதைக் கருத்தில் கொண்டு தான் ஒவ்வொரு ஆண்டும் அரசு அதன் எண்ணிக்கையை உயர்த்திக்கொண்டு வருகிறது.

திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் : கிராமப்புற மக்கள் இதுபோன்ற வசதிகளைப் பயன்படுத்திக்கொள்வதற்கு தற்போது பெருமளவுக்கு வாய்ப்புகளில்லாமல் இருக்கிற காரணத்தால், ஆதார சுகாதார நிலையங்கள் எனப்படும் பிரைமரி ஹெல்த் சென்டர்களிலும் ஒவ்வொரு வருவாய் வட்டத் தலைநகரில் உள்ள மருத்துவ மனைகளிலும் (தாலுக்கா ஹெட்குவார்ட்டர்ஸ்) இரத்த சேமிப்பு வங்கிகள் நிறுவ முயற்சிகளை மேற்கொள்ளுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : பிரைமரி ஹெல்த் சென்டர்களில் இவைகளை வைப்பது என்பது தற்போது இயலாத காரியம். ஆரம்பிப்பது என்பது எப்போதும் எளிது. ஆனால் அவைகளைக் கண்காணிப்பது என்பது மிகவும் கஷ்டம். தாலுக்கா ஹெட்குவார்ட்டர்சில் உள்ள மருத்துவ மனைகளைப் பொறுத்த வரையில், ஏற்கெனவே எத்தனை கிலோ மீட்டர் தொலைவில் இத்தகைய வசதியுள்ள மருத்துவ மனை இருக்கிறது என்ற விவரம் கொடுக்கப்பட்டிருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் திரு. இராமமூர்த்தி அவர்கள் திண்டிவனத்தை மனத்தில் கொண்டு கேட்டது கூட குறிப்பில் இருக்கிறது. நோயாளிகளைப் பொதுவாக இத்தகைய சந்தர்ப்பங்களில் ஊர்திகளின் மூலம் கொண்டு வருகிறோம். வளர்ந்துள்ள நாடுகளில்கூட இத்தகைய இரத்த சேமிப்பு நிலையங்கள் எல்லா இடங்களிலும் கிடையாது. எனவே அவசர நோயாளிகள் அனைவரும் ஊர்திகள் மூலம்தான் அழைத்துச் செல்லப்பட்டு அவர்களுக்கு இரத்தம் தரப்படுகிறது. அத்தகைய முறையைத் தான் நாமும் கையாளுகிறோம்.



திரு. சி. இராமலிங்கம் : அதிக போக்குவரத்து மிக்க, அதிலும் குறிப்பாக லாரிகள் அதிகமாகப் போகக்கூடிய கிராண்ட் டிரங்க் ரோடில் செங்கற்பட்டை விட்டால் சென்னைக்குத்தான் இரத்த சேமிப்பு நிலையத்திற்கு வரவேண்டிய நிலை இருக்கிறது. இடையில் தாம்பரத்தில்கூட இரத்த சேமிப்பு நிலையம் இல்லாமல் இருக்கிறது. இதன் காரணமாக பல கேஸ்கள் அங்கேயே இறந்துவிடுகின்ற நிலை இருக்கிறது. எனவே தாம்பரத்தில் ஒரு இரத்த சேமிப்பு வங்கி அமைக்கும் எண்ணம் அரசுக்கு உண்டா ?

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : மாண்புமிகு உறுப்பினர் அனகாபுத்தூர் இராமலிங்கம் அவர்களைப் பொறுத்த வரையில், எல்லாவற்றையும் தமது சொந்த ஊரான அனகாபுத்தூருக்குப் பக்கத்திலேயே வைத்துக் கொள்ள வேண்டும் என்ற தீவிரம் அதிகமாக இருக்கிறது. அதனால் தான் தாம்பரம் அனகாபுத்தூருக்குப் பக்கத்தில் இருக்கிறது என்பதால், மறைமுகமாக அங்கே இத்தகைய இரத்த சேமிப்பு நிலையம் ஏற்படுத்தப்படுமா என்று கேட்கிறார். கிராண்ட் டிரங்க் ரோடில் அது அமைந்திருப்பதால், அந்த மருத்துவ மனையிலும் இதற்கான ஏற்பாடு செய்யப்படும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு மேலவைத் தலைவர் : வினாக்கள்-விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு.—ஓர் உரையின் தொடக்கத்தில் இடப்பட்டிருக்கும் உடுக்குறி (*) அவ்வுரை உறுப்பினரால் சரி பார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்.]

### 2. மேலவை விதி 82-ன் கீழ் அமைச்சரின் அறிக்கை.

காயிதே மில்லத் இஸ்மாயில் சாயபு அவர்கள் இல்லத்திற்கு அருகில் இருந்த சாராயக் கடை குறித்தும் மீனாட்சிபுரத்தில் உள்ள சாராயக் கடை குறித்தும்.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : மாண்புமிகு மேலவைத் தலைவர் அவர்களே, நான் நேற்றையதினம் அவையில் பதில் சொல்லும்போது, அவையின் முக்கியத்துவத்தைக் கருதி, விட்டுப்போன தகவல்களை இன்றையதினம் சொல்கிறேன் என்று தெரிவித்திருந்தேன். அதன்படி சில விவரங்களை இங்கே தெரிவிக்க விரும்புகிறேன். காயிதே மில்லத் இஸ்மாயில் சாயபு அவர்கள் இல்லத்திற்கு அருகில் இருக்கிற சாராயக் கடை தொடர்ந்து அங்கே இருக்கிறது என்று சொல்லப்பட்டபோது, நான் "இல்லை" என்று சொன்னேன். மீண்டும் இப்போது விசாரணைக்குப் பிறகும், அந்தக் கடை அங்கே இல்லை என்று சொல்ல விரும்புகிறேன். முதலில் அந்தக் கடை

எங்கே இருந்தது என்றால் பழைய கதவு எண் 22, புதிய கதவு எண் 48. சென்ற ஆண்டு அந்தக் கடை அங்கே இருந்திருக்கிறது. அந்த இடத்தில் இப்போது அதனுடைய உரிமையாளர்தான் குடியிருக்கிறார். அதே காம்பவுண்டில் இப்போது ஒரு கணித வகுப்பு நடக்கிறது. ஆகவே அந்தக் கடை அங்கே இல்லை என்பதற்கு இதைவிட வேறு ஒரு அத்தாட்சி தேவையில்லை. தற்போது உரிமை பெற்றவர் காயிதே மில்லத் இஸ்மாயில் சாயபு அவர்களின் வீட்டிற்கு 1½ பர்லாங்கு தூரத்தில் சாராயக்கடை வைத்திருக்கிறார். தற்போது எந்தச் சாராயக் கடையும் காயிதே மில்லத் இஸ்மாயில் சாயபு அவர்களின் இல்லத்திற்கு அருகாமையில் இல்லை. அவருடைய இல்லத்திலிருந்து வெகு தூரத்தில்தான் ஒரு சாராயக்கடை இயங்கி வருகிறது என்று மதுவிலக்குத் துறை ஆணையாளர் அவர்கள் திட்டவட்டமாக இப்போது எனக்குத் தெரிவித்திருக்கிறார் என்பதை அறிவிக்க விரும்புகிறேன்.

அடுத்து, மாண்புமிகு உறுப்பினர் திரு. சங்கரலிங்கம் அவர்கள் மீனாட்சி புரத்தில் உள்ள சாராயக்கடை பற்றியும் குறிப்பிட்டிருந்தார்கள். அதைக் குறித்து அதிகமான ஆட்சேபணை இல்லை என்றாலும் கூட, மாண்புமிகு உறுப்பினர் திரு. சங்கரலிங்கம் அவர்களும் முஸ்லீம் சமுதாயத்தைச் சார்ந்தவர்களும் இதற்கு ஆட்சேபணை தெரிவித்திருக்கிறார்கள் என்பதை மனதில் கொண்டு, அந்தச் சாராயக் கடை வெகு தூரத்தில் இருந்தாலும்கூட, அதை ரத்து செய்ய வேண்டும் என்று சென்ற ஆண்டே நோட்டீஸ் கொடுக்கப்பட்டது. அவ்வாறு அந்தக் கடையை ரத்து செய்த உடனே அந்தக் கடைச் சொந்தக்காரர் உயர்நீதி மன்றத்திற்குச் சென்று வழக்குத் தொடர்ந்தார்கள். அந்த வழக்கு முடிவடைவதற்கு முன்னாலேயே அந்த ஆண்டு முடிவடைந்து விட்டது. அதற்குப் பிறகு இந்த ஆண்டு அந்தக் கடைக்கான ஏலம் போடப்பட்டபோது, ஏலம் எடுத்தவர் அந்தக் கடையை அங்கே வைக்க வேண்டும் என்று மனு கொடுத்தார். சென்ற ஆண்டே இப்படிப்பட்ட நிலைமை ஏற்பட்டது என்பதைக் கருத்தில் கொண்டு இந்த இடத்தை கோட்ட வருவாய்த் துறை அதிகாரிதான் உறுதி செய்ய வேண்டும் என்று ஒரு உத்தரவு பிறப்பிக்கப்பட்டது. அவர் பார்வையிட்டு உறுதி செய்தால் தான் அந்த இடம் கொடுக்கப்பட வேண்டும். அப்போதுதான் அது சரியாக இருக்கும் என்று முடிவு செய்யப்பட்டது. ஆனால் அப்படியும் அந்த இடமே அவருக்குக் கொடுக்கப்பட்டிருப்பது உண்மைதான். இது எப்படி கொடுக்கப்பட்டது என்றால், அங்கே உள்ள கலால் தாசில்தார் அவர்கள் மேல் அதிகாரிகளுக்கு என்ன நடந்தது என்பதைத் தெரிவிக்காமலேயே அனுமதி கொடுத்து



விட்டார். அப்படி அவர் கொடுத்த உடனே கலால் தாசில்தார்மீது நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. நடவடிக்கை எடுப்பதற்கு முன்னால் அவர் தற்காலிக வேலை நீக்கம் செய்யப்பட்டிருக்கிறார். அதுவும் மாண்புமிகு உறுப்பினர் திரு. சங்கரலிங்கம் அவர்கள் ஆட்சேபனை தெரிவித்த பிறகு இத்தகைய நடவடிக்கை மேற்கொள்ளப்படவில்லை. முன்பே மேற்கொள்ளப்பட்டு அவர் தற்காலிக வேலை நீக்கம் செய்யப்பட்டிருக்கிறார். அதற்குப் பிறகு கடையை எடுத்தவர் உடனே உயர்நீதி மன்றத்திற்குப் போயிருக்கிறார். அதுமட்டுமல்ல, அங்கே தடை உத்தரவும் பெற்றிருக்கிறார். இப்போது உடனடியாகத் தடை உத்தரவை நீக்க வேண்டும் என்பதற்கான முறையில் அரசு எல்லா நடவடிக்கைகளையும் மேற்கொண்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

### 3. ஆளுநர் உரையின் மீது விவாதம்—தொடர்ச்சி.

**மாண்புமிகு மேலவைத் தலைவர்:** மேதகு ஆளுநர் அவர்களின் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்திற்கு மாண்புமிகு உறுப்பினர்கள் திரு. க. மீனாட்சிசுந்தரம் மற்றும் திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் ஆகியோர் திருத்தங்களுக்கான அறிவிப்பு கொடுத்திருக்கிறார்கள்.

உறுப்பினர் திரு. க. மீனாட்சிசுந்தரம் அவர்கள் அவையில் இல்லை. எனவே மாண்புமிகு உறுப்பினர் திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் அவர்கள் தம் திருத்தத்தை முன்மொழியலாம்.

**திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் :** மாண்புமிகு மேலவைத் தலைவர் அவர்களே, கீழ்க்காணும் எனது திருத்தங்களை நான் முன்மொழிகிறேன்:—

"கீழ்க்கண்டதை தீர்மானத்தின் கடைசியில் சேர்த்துக் கொள்ளவும்—

1. மூன்று லட்சம் ஆசிரியர்களின் நீண்ட கால கோரிக்கைகளை பரிசிலனை செய்ய உயர் மட்டக் குழு அமைக்கப்படுவது,

2. கல்வித் திட்டத்தை மாற்றியமைப்பது குறித்து உயர் மட்டக்குழு அமைப்பது,

3. சென்னை, மதுரை-காமராஜ், அண்ணாமலைப் பல்கலைக் கழகங்களின் நிர்வாகத்தைச் சீரமைக்க சட்டத் திருத்தம் நடப்புத் தொடர் கூட்டத்தில் கொண்டு வரப்படும் என்ற அறிவிப்பு,

ஆகியவை பற்றி மேதகு ஆளுநர் அவர்களின் உரையில் ஏதும் குறிப்பிடாததற்கு இந்த அவை தன் வருத்தத்தைத் தெரிவித்துக்கொள்கிறது."

திரு. த. சந்தோஷம் : மாண்புமிகு மேலவைத் தலைவர் அவர்களே, மேற்சொன்ன திருத்தத்தை நான் வழிமொழிகிறேன்.

மாண்புமிகு மேலவைத் தலைவர் அவர்களே, மேதகு ஆளுநர் அவர்களின் உரையில் சென்ற ஆண்டு இந்த அரசு செய்த பல நல்ல சாதனைகளையும், அவற்றில் பெற்றிருக்கிற வெற்றிகளையும் குறிப்பிட்டிருப்பதோடு, வருகிற ஆண்டில் அது நிறைவேற்றப் போகிற நல்ல திட்டங்களைப் பற்றியும் தெரிவித்திருக்கிறார்கள் என்பதை நான் ஏற்றுக்கொள்கிறேன்.

அந்தகைய சாதனைகளில் முக்கியமானதாகக் கருதுவது வேலையில்லாத் திண்டாட்டத்தைப் போக்குகிற அளவுக்கு புதிதாக 1,40,000 பேருக்கு சத்துணவுத் திட்டத்தின்கீழ் வேலை கொடுக்கப்பட்டிருப்பது. அதை நான் வரவேற்கிறேன். நல்ல திட்டங்கள் என்பதன் கீழ், ஒவ்வொரு குடும்பத்திலும் ஒருவருக்குக் கட்டாயம் வேலை கொடுக்கப்படும், அதற்கான திட்டம் வகுக்கப்படும் என்று அறிவிக்கப்பட்டிருப்பதை நான் வரவேற்கிறேன். இவை இரண்டையும் இன்றைக்கு அவதிப்பட்டுக்கொண்டிருக்கிற தமிழ் நாட்டு மக்களின் வேலையில்லாத் திண்டாத்தைப் போக்குவதற்கு என்ற வகையில் மேற்கொள்ளப்பட்ட திட்டங்களாகக் கருதி, என்னுடைய பாராட்டு தல்களைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இருந்தபோதிலும் அரசின் நல்ல திட்டங்களையும், சாதனைகளையும் பாராட்டுவதற்கு முன்னால், இந்த அமைச்சரவையைப் பாராட்டுவதற்கு முன்னால் ஒன்றைத் தெரிவிக்க விரும்புகிறேன். இப்போதே பல அறிவாற்றல் மிக்க, ஆர்வம் மிக்க, சொல்வன்மை மிக்க உறுப்பினர்கள் பலர் ஆளும் கட்சியில் இருக்கிறார்கள். அரசின் நல்ல சாதனைகளை அவர்கள் மக்களுக்குத் தெரியப்படுத்த, விளம்பரப்படுத்த, அதாவது மக்கள் அறிந்து கொள்ளச் செய்யக்கூடிய திறமை பெற்றவர்கள் இருக்கிறார்கள். அவர்கள் அந்தப் பணியைச் செய்வார்கள். அதற்காக எங்கள் கட்சியிலிருந்துப் அப்படிப்பட்ட ஒரு உறுப்பினரை ஆளும் கட்சி வரிசைக்கு அனுப்பி வைத்திருக்கிறோம். அவரும் அதைச் செய்வார்கள் என்று நினைக்கிறேன் எனவே இந்த வகையில் நான் அதிகமாக நேரத்தைச் செலவழிக்காமல் இப்படி இந்த அரசு செய்யத் தக்கவைகளைச் செய்யாமல் விட்டவை களையும், இது செய்யத் தகாதவைகளைச் செய்ததால் ஏற்பட்ட விளைவு களையும்—எரர்ஸ் ஆஃப் கமிஷன் அண்டு ஒமிஷன்—என்ற வகையில் இவ வற்றை நான் சுட்டிக்காட்டி அரசு இவைகளை எப்படித் தீர்க்க வேண்டும்



என்பதற்காக ஆலோசனைகளையும் கூறி அந்த முறையில் அரசுக்கும், மக்களுக்கும் என்னுடைய வாக்காளர்களுக்கும் சேவை செய்யலாம், அதுதான் என்னுடைய கடமை என்று கருதுகிறேன்.

(முற்பகல் 10-20)

திரு. சோ. ஆறுமுகம் : மேலவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் செல்வி லீலாவதி அம்மையார் அவர்கள் கட்சி தாவியதாகத்தான் பத்திரிகையில் செய்தி வந்தது. ஆனால் மாண்புமிகு உறுப்பினர் திரு. சந்தோஷம் அவர்கள் பேசுகின்றபோது, அவர்களே அந்தக் கட்சிக்கு அனுப்பியதாகச் சொல்கிறார்கள். இதிலே எது உண்மை என்று அறிய விரும்புகிறேன்.

டாக்டர் இரா. சனார்த்தனம் : எது எப்படியிருந்தாலும், அவர் எங்கள் பக்கம் இருக்கிறார், மகிழ்ச்சி.

செல்வி. ஆ. லீலாவதி : தலைவர் அவர்களே, இதற்கு முன் நான் எந்தக் கட்சியிலும் இல்லை. இப்போதுதான் புதிதாக ஆளும் கட்சியிலே வந்திருக் கிறேன் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. த. சந்தோஷம் : நாங்கள் தானாக அனுப்பவில்லை. "போனால் போகட்டும் போடா' என்ற முறையில் அனுப்பியதாகச் சொன்னேன்.

செல்வி ஆ. லீலாவதி : மாண்புமிகு தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், "எங்கிருந்தாலும் வாழ்க" என்று கூறுவார்கள் என்று நினைக்கிறேன்.

திரு. த. சந்தோஷம் : "நீங்கள் ஆசிரியராக இருந்தவர், ஆசிரியராகச் சேவை செய்தவர். அந்த முறையில் எங்கிருந்தாலும் வாழ்க" என்று வாழ்த்துகிறேன் என்று நேரிடையாகச் சொன்னேன். இங்கேயும் பகிரங்க மாகச் சொல்ல வேண்டும் என்றால் சொல்லுகிறேன், இந்த விஷயத்தில் தன்னுடைய ஆதரவாளர்களைக் கலந்துகொண்டு செய்திருக்க வேண்டும் என்பதை மாத்திரம் தெரிவித்துக்கொள்கிறேன்.

தமிழ்நாட்டிலுள்ள பொருளாதார நிலைமையைப் பார்க்கும்போது, மிகவும் நெருக்கடியான நிலை இருக்கிறது என்பதில் சந்தேகம் இல்லை. விவசாயத் துறையில் நீர்ப்பாசன வசதிகள் இல்லாமல் விவசாயிகள் கஷ்டப் படுகிறார்கள். சில விவசாயிகள் பல ஆயிரக்கணக்கான ரூபாய் செலவு செய்து கிணறு தோண்டி பம்பு செட் அமைத்துக் கொண்டு மின்சாரம்

எப்போது வரும் என்று தெரியாமல் அவதிப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். மின்சாரம் இரவு ஒரு மணிக்கு, இரண்டு மணிக்கு வருகிறது, அல்லது பகலில் ஒரு மணிக்கு வருகிறது. ஆகவே விவசாயிகள் வருந்துகிறார்கள். இதனால் அரிசி விலை எவ்வளவு உயரப் போகிறதோ தெரியவில்லை. தொழில் துறையை எடுத்துக்கொண்டால், மின்சாரப் பற்றாக்குறையின் காரணமாக தொழிற்சாலைகள் மூடப்பட்டிருக்கின்றன. இதனால் தொழிலாளர்கள் வேலையில்லாமல் அவதிப்படுகிறார்கள். மேலும் சிமெண்ட் தட்டுப் பாட்டால், பொது மக்களில் பலர் கடன் வாங்கி வீடு கட்டியவர்கள் பாதி வீட்டிலேயே தவித்துக் கொண்டிருக்கிறார்கள். மீதி வீட்டைக் கட்டி முடிக்க சிமெண்ட் கிடைக்காமல் தவிக்கிறார்கள். இப்படிப்பட்ட பரிதாப மான நிலை இருக்கிறது.

முன்பு ஒரு முறை இங்கிலாந்து நாட்டில் பொருளாதார நெருக்கடி வந்த சமயத்தில் அந்த அரசாங்கம் மேற்கொண்ட ஒரு முறையை இந்த அரசாங்கத்திற்கு நினைவுபடுத்த விரும்புகிறேன். அவர்கள் உடனடியாக ஒரு "ஆஸ்டிரிட்டி புரோகிராம்"—சிக்கனத் திட்டத்தை அறிவித்தார்கள். இந்த மாதிரியான திட்டத்தை நம்முடைய நாட்டிலும் அமுல்படுத்தினால் தான், நாம் சீரடைய முடியும். அதாவது சிக்கனம் மாத்திரம் அல்லாமல் தியாகத்தோடு சிக்கனம் செய்வது என்ற முறையைக் கையாள வேண்டும். நம்முடைய அரசாங்கம் இந்த முறையை இது வரையில் கடைப்பிடிக்கவில்லை என்று நினைக்கிறேன்.

அரசாங்கம் தான் ஆற்ற வேண்டிய கடமைகளில் எதற்கு முன்னுரிமை கொடுக்க வேண்டும் என்று பார்த்துச் செய்யாமல், கவர்ச்சித்திட்டங்கள் என்று சொல்லக் கூடிய திட்டங்களில் அதிகமாகச் செலவு செய்திருக்கிறார்கள். அது நம்முடைய பொருளாதாரத்தைப் பாதித்திருக்கிறது என்பதைச் சுட்டிக் காட்ட விரும்புகிறேன். மதுரையில் உலகத் தமிழ் மாநாடு நடந்தது. அதற்காக மதுரை வாழ் மக்கள் சார்பில் பாராட்டுகிறோம். பெருமைப் படுகிறோம், மகிழ்ச்சியடைகிறோம் அதைப்பற்றி எந்தவிதத்திலும் குறை சொல்ல விரும்பவில்லை. குறை சொல்ல விரும்புகிறவர்கள் குறை சொல்லிக் கொண்டிருக்கலாம். ஆனால் நான் ஒன்றை மட்டும் சுட்டிக்காட்ட விரும்பு கிறேன். வேண்டுமென்றே குறை சொல்லுபவர்கள், சென்னையிலே உலகத் தமிழ் மாநாடு நடத்தியபோது தலைவர்களின் சிலைகளை வைத்ததாகவும், ஆனால் மதுரை உலகத் தமிழ் மாநாட்டில் தலைகளை மட்டும் திறந்தார்கள் என்றும் குறை சொல்லுகிறார்கள். நான் அப்படிச் சொல்லவில்லை. எத்தனையோ நல்ல திட்டங்களை நிறைவேற்றினாலும்கூட, அநாவசியமான





செலவுகள் அப்போதே ஆரம்பித்துவிட்டன. மதுரைக்கு வரும் நுழை வாயிலில் பல ஆயிரக்கணக்கான சிமெண்ட் மூட்டைகளைப் பயன்படுத்தி வாயில்களை அமைத்திருக்கிறார்கள். இப்போது மக்கள் சிமெண்டுக்காக தவித்துக்கொண்டிருக்கும் சமயத்தில் இவ்வளவு சிமெண்ட்டைச் செலவழித் திருக்க வேண்டுமா என்பதுதான் கேள்வி. ஒரு "செல்ஃப் ஆஃப் புரொ போர்ஷன்" இருக்க வேண்டாமா என்று கேட்க விரும்புகிறேன்.

அதைப் போலவே சென்ற ஆண்டு நம்முடைய அரசாங்கம் பல விழாக் களை நடத்தியிருக்கிறது. அந்த விழாக்கள் எல்லாம் ஏராளமான பணச் செலவில் அநாவசியமாக ஆடம்பரத்துடன் நடத்தப்பட்டிருக்கின்றன. பெரியார் நூற்றாண்டு விழா, இராசாசி நூற்றாண்டு விழா, காமராஜர் நூற்றாண்டு விழா, பாரதியார் நூற்றாண்டு விழா என்று பல விழாக்கள் நடத்தப்பட்டிருக்கின்றன. இவைகள் எல்லாம் நிச்சயமாக நடத்தப்பட வேண்டிய விழாக்கள்தான். அரசாங்கத்தின் சார்பாகக் கொண்டாடப்படும் போது, குறிப்பிட்ட ஒன்றிரண்டு இடங்களில் மட்டும் விமரிசையாக நடத்தி விட்டு மற்ற இடங்களில் எல்லாம் மக்களே குழுக்கள் அமைந்து நடத்துவது தான் நல்லது. குறிப்பாக பாரதியார் நூற்றாண்டு விழாவைப்பற்றிக் குறிப்பிட விரும்புகிறேன். சென்ற ஓர் ஆண்டில் ஒவ்வொரு பஞ்சாயத்து யூனியனிலும் அரசாங்கத்தின் சார்பாக பாரதியார் நூற்றாண்டு விழா, அரசாங்கத்தின் நிர்ப்பந்தத்தின் பேரிலே நடத்தப்பட்டிருக்கின்றது. இதற்காக எவ்வளவு ரூபாய் செலவாகியிருக்கிறது என்ற கேள்வியைக் கேட்டிருக்கிறேன். இது அவசியம்தானா? "தனி ஒருவனுக்கு உணவு இல்லையெனில் ஜகத்தினை அழித்திடுவோம்" என்று கூறிய பாரதியார் பெயரில், மக்கள் அவதிப்படும் போது மக்களுடைய வரிப்பணத்தை எடுத்து ஆடம்பரமாகச் செலவு செய்ய வேண்டுமா என்று கேட்க விரும்புகிறேன். அப்படிச் சொல்லும்போது, பாரதியாரைப் பற்றி நான் குறைத்துப் பேசுகிறேன் என்று அர்த்தமல்ல. நான் ஒரு பாரதியார் பக்தன், விடுதலைப் போர் சமயத்தில் நான் கல்லூரி மாணவனாக இருந்தேன். அவருடைய ஒவ்வொரு கூட்டத்திற்கும் போவேன். ஆரம்பத்திலே பாரதியாருடைய பாடல்களை ஆவேசத்துடன் பாடுவேன், அப்போது மெய் சிலிர்க்கும், இரத்தம் கொதிக்கும். நானே கூட அவருடைய சத்தியாக்கிரக இயக்கத்தில் சேர்ந்து சத்தியாக்கிரகம் செய்வதற்காக மாணவர் கள் தொண்டர் குழுவை ஏற்படுத்தினேன். அப்போது என்னுடைய தகப்ப னார் மாஜிஸ்ட்ரேட்டாக இருந்ததால், ஸ்பெஷல் போலீஸ் பிரான்ச்சை அனுப்பி தனியாக என்னை அழைத்துக் கொண்டு போய் வெளியே போக முடியாதவாறு தடுத்துவிட்டார்கள். இதையெல்லாம் நான் குறிப்பிடுவதற்

குக் காரணம் நான் பாரதியார் பக்தன் என்பதைக் காட்டுவதற்காகத்தான். இருந்தாலும் பாரதியார் விழாவிற்கு இந்த அளவிற்குப் பணம் செலவு செய்ய வேண்டுமா என்று கேட்கிறேன். மக்கள் பசி தீர வேண்டும், சமுதாயம் வளர வேண்டும் என்றுதான் பாரதியார் சொன்னார். அவர் என்றைக்கும் ஆடம்பரத்தை விரும்பியதில்லை. அவர் இன்றைக்கு உயிருடன் இருந்தாலும், ஆடம்பரத்தை நிச்சயமாக விரும்பமாட்டார். அப்படிப்பட்ட ஒருவருடைய பெயரால் ஆடம்பரச் செலவு செய்திருக்க வேண்டியதில்லை என்று கூறிக்கொள்கிறேன். இனிமேலாவது அரசாங்கம் அநாவசியமான செலவுகளைத் தவிர்த்து "ஆஸ்டிரிட்டி புரோகிராம்" என்ற முறையில் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இந்த அரசு தன்னுடைய கடமையில் "சென்ஸ் ஆஃப் பிரையாரிட்டி"யுடன் செயல்பட வேண்டும். தன்னுடைய கடமையில் எதற்கு முன்னுரிமை கொடுக்க வேண்டுமென்று தெரிந்து அதை அமுல்நடத்த வேண்டும். அரசாங்கத்தினுடைய அடிப்படைக் கடமை சட்டம், ஒழுங்கை அமுல்படுத்துவதுதான். காவல் துறையை ஒழுங்காக நடத்த வேண்டும். மக்கள் ஒரு பாதுகாப்பு உணர்வுடன் சந்தோஷமாக சமாதானத்துடன் வாழ்க்கை நடத்த வழிவகை செய்ய வேண்டும். இதிலே நம்முடைய அரசு கவனம் செலுத்தவில்லை. கவனம் செலுத்தியிருந்தாலும், வெற்றி பெறவில்லை என்று நான் குற்றம் சாட்டுகிறேன். நம்முடைய காவல் துறையினர், "வேலியே பயிரை மேய்வது போல" சட்ட விரோதச் செயல்களையும், பல அத்துமீறல்களையும் செய்துகொண்டு இருக்கிறார்கள். மதுரையில் காவல் துறையினருடைய அத்துமீறல்களை எதிர்ப்பதற்காக "பியூப்பிள்ஸ் யூனியன் ஃபார் சிவில் லிபர்ட்டி"—பி.யு.சி.எல். என்பவர்கள் மாநாடு நடத்தினார்கள். அதிலே நான் உறுப்பினர் அல்ல. ஒரு வார காலத்திற்கு கூட்டங்கள் நடத்திவிட்டு கடைசி நாள் அன்று மௌன ஊர்வலம் நடத்த ஏற்பாடு செய்திருந்தார்கள். 50 பேர் ஊர்வலம் செல்ல இருந்தார்கள். அவர்கள் 50 பேரும் படித்தவர்கள். அதில் பத்து பேர் வழக்கறிஞர்கள். மற்றவர்கள் இன்ஷூரன்ஸ் கம்பெனியில், வங்கிகளில் வேலை செய்பவர்கள். அவர்கள் எல்லாம் கூடியிருந்தார்கள்.





(மாற்றுத் தலைவர் திரு. க. இராமமூர்த்தி—தலைமை)

(முற்பகல் 10-20)

அந்த ஊர்வலத்தை ஆரம்பித்து வைப்பதற்கு திரு. தார்க்குண்டே அவர்கள் டெல்லியிலிருந்து வந்திருந்தார்கள். அவரைப்பற்றிச் சொல்ல வேண்டியதில்லை. பம்பாய் உயர்நீதி மன்றத்திலே நீதிபதியாக இருந்து ஓய்வு பெற்று இப்போது சுமார் 75 வயது அடைந்த ஒரு பழுத்தபழம். அவர் அங்கே வந்து அதை ஆரம்பித்து வைத்தார்கள். அங்கு ஹரி என்ற ஒரு நிருபர், போட்டோ படம் எடுப்பதற்காக கேமராவோடு அங்கு போயிருக்கிறார். அதை காவல் துறையினர் தடுத்திருக்கிறார்கள். திரு. தார்க்குண்டே அவர்கள் அவர்களுக்கு முன்னால் சென்று "அதைத் தடுக்க என்ன சட்டம் இருக்கிறது? சட்டத்திலே போட்டோ பிடிப்பதைத் தடுக்க வாய்ப்பு இருப்பதாகத் தெரியவில்லையே" என்று சொல்லியிருக்கிறார்கள். காவல் துறையினர் அந்த 50 பேர்களை அமைதியாகச் சென்றவர்களை—வாயை கருப்புத் துணியால் கட்டிக்கொண்டு போனவர்களை அங்கே திரு. தார்க்குண்டே உட்பட அனைவரையும் களங்கப்படுத்தியிருக்கிறார்கள். இது நிச்சயமாக வன்முறையாகும். திரு. தார்க்குண்டே அவர்கள் டெல்லி போகும்போது சொல்லிவிட்டுப் போனாராம் "இப்படிப்பட்ட வன்முறை காவல் துறையில் மதுரையில் நடைபெற்றிருக்கிறது. இந்த மதுரை வழக்கறிஞர்கள் சங்கம்தான் கேட்க வேண்டும். தக்க நடவடிக்கை எடுக்க வேண்டும்" என்று சொல்லிவிட்டுப் போனார்கள் என்று மறுநாள் காலையில் என்னிடம் வந்து சொன்னார்கள். நான் உடனடியாகக் கைது செய்யப்பட்டவர்களை வைத்திருந்த காவல் நிலையத்திற்குச் சென்று அங்கே அவர்களைக் கண்டு பேசினேன். நாங்கள் வழக்கறிஞர்கள் சங்கத்திலிருந்து கருப்புக் கொடியோடு ஊர்வலமாகப் போய் கலெக்டர் அவர்களிடம் மனு கொடுத்தோம். நீதி விசாரணை இதில் வேண்டுமென்று அரசிடமும் கேட்டோம். காவல்துறை இப்படிச் செய்திருக்கக் கூடாது. அவர்கள் நிச்சயமாக வன்முறையில் இறங்கியிருக்கிறார்கள். திரு. தார்க்குண்டே அவர்களும் அந்த 50 படித்தவர்களும், உச்ச நீதிமன்ற வழக்கறிஞர் திரு. கண்ணபிரான் அவர்களும் தாக்கப்பட்டிருக்கிறார்கள். இவர்கள் யாரும் வன்முறையில் இறங்கக்கூடியவர்கள் அல்ல. அவர்கள் அப்படி ஈடுபட்டிருக்க முடியாது. அவர்களை "இப்படி இந்தக் காவல் துறையினர் தாக்கியது தவறு. அது மிகவும் கண்டிக்கத்தக்கது. அத்துமீறல் ஆகும்.' எனவே இதற்கு நீதி விசாரணை வேண்டும்" என்று ஊர்வலமாக சென்று மனு கொடுத்தபோதிலும், அரசு அதைப்பற்றிக் கவனிக்கவே இல்லை. அது ஏன் என்று எனக்குத் தெரியவில்லை. ( காவல் துறையினரைக் கண்டு

அச்சமோ என்றுகூட நாங்கள் சந்தேகிக்க வேண்டியிருக்கிறது. இனி மேலாவது இப்படி காவல்துறையினர் அத்துமீறலில் இறங்குவதைத் தடுக்க தக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

மற்றொரு குற்றச்சாட்டு சொல்ல விரும்புகிறேன். இங்கே பெரிய அளவிலே நகைகள் திருட்டுப்போயிற்று. காவல்துறையிலே 60 சதவிகிதம் பேர்கள் நல்லவர்களாக, நாணயஸ்தர்களாக இருக்கிறார்கள் என்பதை மறுக்கவில்லை. ஆனால் 40 சதவிகிதம் காவல் துறை அதிகாரிகள் அந்த நகைத் திருட்டுக்களைச் சாக்காக வைத்துக்கொண்டு பல ஊர்களில் பெரிய நகைக் கடைகளுக்குச் சென்று கேட்கிறார்கள். பல ஊர்களில் நகைக் கடைகள் வைத்திருப்பவர்கள் கண்ணியமானவர்களாக இருக்கிறார்கள். அந்த இடங்களில் காவல்துறையினர் அவர்களிடம் போய் "அந்த கேஸ்களிலே வருகின்ற திருட்டு நகையை வாங்கியிருக்கிறீர்கள். 15 பவுன் நகையைக் கொடுக்கவில்லை என்றால், வெளியே ஏறுங்கள். இல்லையென்றால் விலங்கை மாட்டிக்கொண்டுபோவோம்" என்றெல்லாம் அச்சுறுத்துகிறார்கள். நான் இந்த நகைக்கடை வியாபாரிகளுக்கு ஒரு ஆலோசகர் என்ற முறையில் சொல்கிறேன். நடந்த சம்பவங்களை நான் நேரில் அறிவேன். இப்படி ஒரு பெரிய ராக்கெட்டு நடக்கிறது. ஒரு தவறான போக்கு இருக்கிறது. திட்டமிட்டுச் செயல்பட்டுவருகிறார்கள். அதைத் தடுப்பதற்கு சரியான நடவடிக்கையை அரசு எடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். எத்தனை முறைகள் அமைச்சரிடமும் காவல்துறையிலும் மனு கொடுத்து வந்திருக்கிறோம். ஆனால் எந்தவிதமான நடவடிக்கையும் இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மூன்றாவது குற்றச்சாட்டு. சென்ற குடியரசு தினத்தன்று நான் பெங்களூருக்குப் போனேன். இங்கிருந்து நம்முடைய மெட்ராஸ் ஏர்போர்ட்டுக்குப் போவதற்கு வாடகை ஆட்டோ ரிக்ஷாவுக்குப் போனேன். அவர்கள் 50 ரூபாய் கொடுத்தால்தான் வருவேன், மற்றபடி வர முடியாது என்று சொன்னார்கள். எம்.எல்.ஏ. ஹாஸ்டலிலிருந்து போவதற்கு இப்படிக் கேட்கிறார்கள். மீட்டர் இருக்கிறது. திரும்புகிறபோதுகூட வருவதற்கு ஒரு 5 ரூபாய்கூட கொடுக்கிறேன்" என்றுகூட சொன்னேன். இப்படி 50 ரூபாய் கொடுத்தால்தான் வருகிறேன் என்று சொல்கின்றார்கள். எம்.எல்.ஏ. ஆட்டோ ரிக்ஷாக்காரர்கள் ஒன்று சேர்ந்துவிடுகிறார்கள். அவர்களைக் கட்டுப்படுத்த பயப்படுகிறார்கள். அப்புறம் நான் ரூ. 40 கொடுத்து ஹைவேயிலேயே இப்படி பண்ணுகிறார்கள் இதைச் சொன்னால் விட்டுப் போனேன். நான் பெங்களூர் போய் இறங்கினேன். பெங்களூர் போய் இறங்கினால் வரிசையாக கியூவில் ஆட்டோ ரிக்ஷாக்கள் நிற்கின்றன. அங்கு காவல் துறையினர் இருக்கிறார்கள் இறங்கும் போது மீட்டர் பார்த்து வாங்குகிறார்கள். ஒழுங்காக இருக்கிறார்கள். அது மாத்திரம் அல்ல. மெட்ராசிலே பாண்டியன் எக்ஸ்பிரஸில் வந்து எக்மோர் ஸ்டேஷனில் இறங்கினேன். வெளியே வந்த உடனே "சார், எங்கே போக வேண்டும்" என்று ஆட்டோ ரிக்ஷா டாக்சி டிரைவர்கள் எல்லாம் கேட்டார்கள். எம்.எல்.ஏ. ஹாஸ்டல் என்ற உடனே போய்விடுகிறார்கள். அவர்களுக்கு ரூ. 30-க்கு கிராக்கி இருந்தால்தான் எடுப்பேன் என்று இருக்கிறார்கள். இல்லை என்றால் வரமாட்டேன் என்கிறார்கள். பக்கத்தில் இருக்கின்ற காவல் துறையினரிடம் போய்ச் சொன்னேன். டாக்சிக்காரர்களை எம்.எல்.ஏ. ஹாஸ்டலுக்குப் போகிறார்களா என்று கேட்டபோது அவர்கள் மறுத்துவிட்டுப் போனார்களே தவிர, அவர்கள் வரவில்லை, காவல்துறையினர் சொல்கிறார்கள். அவர்களையும் மதிக்காமல் போகிறார்கள். இந்த டிராப்பிக் கண்ட்ரோலை சென்னையில் ஒரு இடத்திலாவது கடைப்பிடிப்பதாக இல்லை. நான் பம்பாய் போயிருக்கிறேன். டெல்லி போயிருக்கிறேன். இப்படி அந்த இடங்களில் இல்லை. அங்கெல்லாம் மீட்டர்படி கொண்டுவந்துவிட்டுப் போவார்கள். அங்கே இந்த நிலை இல்லை. நான் என்ன நினைக்கிறேன் என்றால், இங்கேயிருக்கின்ற காவல் துறையினர் ஆட்டோ ரிக்ஷாவினரைப் பார்த்து பயப்படுகிறார்கள். நியாயமாக இருக்க வேண்டியது எப்படி? போலீஸ்காரர்கள் அவர்களைக் கட்டுப்படுத்த முடியவில்லை. ஆட்டோ ரிக்ஷாக்காரர்களும் டாக்சி டிரைவர்களும் போலீஸ்காரர்களை பயமுறுத்தி வருகிறார்கள் என்று நினைக்கிறேன். அரசாங்கத்தை அவர்கள் பயமுறுத்துகிறார்கள். அரசாங்கம் போலீஸ்காரர்கள் மீது நடவடிக்கை எடுக்க முடியவில்லை. இந்த நிலைமைகளை மாற்ற வேண்டும். முதலாவதாக காவல் துறை ஒழுங்காகக் கட்டுப்பாடாக நடந்தால்தான் நாட்டிலே சட்டம் ஒழுங்கு சரியாக நடக்கும். இல்லாவிட்டால் வேலியே பயிரை மேய்வதாக இருக்கும். மக்களுக்குப் பாதுகாப்பு இருக்காது. தமிழக மக்களுக்கு அரசாங்கப் பாதுகாப்பு இல்லை என்ற நிலைமை இருக்கின்றது. அப்படிப்பட்ட நிலைமைகளை வெகு சீக்கிரத்தில் மாற்ற வேண்டும். அமைச்சரவை இதைப்பற்றிப் பேசி முடிவெடுக்க வேண்டும். மாண்புமிகு அமைச்சரவர்கள் இங்கே இருக்கிறார்கள். அவர்கள் இதை மிகவும் கவனமாகக் கவனிக்க வேண்டும். நான் அழுத்தந்திருத்தமாக வற்புறுத்துகிறேன். அமைச்சர் அவர்களுக்குச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். இதற்கான நடவடிக்கைகளை எடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

மற்றொரு விஷயம். சமீப காலத்திலே மதுரையிலே சுவரொட்டிகள் ஒட்டப்பட்டிருக்கின்றன. இந்துக்கள் கடைகளில்தான் இந்துக்கள் சாமான்கள் வாங்கிக்கொள்ள வேண்டும் என்று சுவரொட்டி இருக்கிறது. பொருளாதாரத் துறையிலே மற்ற மதத்தினர் வாழ்வு கெட்டுவிடும் என்று கருதி இதை நான் சொல்லவில்லை. வேண்டுமென்றே மத வெறியைத் தூண்டிவிட்டு, மதத்தின் அடிப்படையிலே வன்முறைச் செயல்களைத் தூண்டிவிடுவதற்கு ஒரு கூட்டம் வேலை செய்து கொண்டிருக்கிறது என்று சொல்கிறேன். சமீப காலத்தில் மண்டைக்காடு துப்பாக்கி சூடு விசாரணைக் கமிஷன் 13 டிசம்பரில் வாய்தா போட்டிருந்தது. அங்கேயிருந்து ஒரு அறிக்கை வந்தது. கலெக்டர் அவர்கள், கிருஸ்த்துமஸ் ஒட்டி மீண்டும் மதக்கலவரம் ஏற்படலாம் என்ற அச்ச உணர்வு இருப்பதால், இந்த வாய்தா டிசம்பர் 31 ஆம் தேதிக்கு மாற்றப்பட்டிருக்கிறது என்று சொன்னார்கள். இன்னும் அங்கே மத வெறியின் அடிப்படையிலே வன்முறைச் செயல்களை உருவாக்க சில கூட்டங்கள் தயாராகிக்கொண்டிருக்கின்றன. நம்முடைய துர்பாக்கியம் இப்படி இருக்கிறது. வடநாட்டிலேதான் இந்து முஸ்லீம் சண்டை என்று இருக்கும். ஆனால் தமிழ் நாட்டில் எப்போதுமே இப்படி இருந்தது கிடையாது. இதுமாதிரி மதத்தின் அடிப்படையிலே நிலைமைகள் உருவாகி இருக்கின்றன. நக்சலைட்டுகளைக் கண்காணிக்க என்று 'கியு பிராஞ்ச்' என்று காவல் துறையிலே போட்டிருக்கிறார்கள். மதவெறியைத் தூண்டுபவர்கள் நக்சலைட்டுகளைக் காட்டிலும் மிகவும் கொடூரமானவர்கள், சமூக விரோத சக்திகள் ஆகும். இவர்களைப் பிடித்து, கண்காணித்து மேலும் இந்த விஷம் பரவாமல் தடுக்க வேண்டியது அரசினுடைய கடமை. ஆகவே 'கியூ பிராஞ்ச்' போல ஒன்று வைத்து இவர்களையும் கண்காணித்து தக்க சமயத்தில் பிடித்து வைத்து, மேலும் இந்தக் கொடிய விஷம் பரவாதபடி தடுக்க அரசு தக்க நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

சத்துணவுத் திட்டத்தைப்பற்றி அநேகம் பேர்கள் பேசிவிட்டார்கள். நான் அதிகமாக அதிலே பேச விரும்பவில்லை. நான் நேரிலேயே சென்று பார்த்தேன். நேரில் விசாரித்தேன். அந்த சில உண்மைகளின் அடிப்படையிலே சிலவற்றைச் சொல்ல விரும்புகிறேன். சத்துணவுத் திட்டம் உண்மையிலேயே வறுமைக்கோட்டிற்குக் கீழே உள்ளவர்களுக்கு மிகவும் உதவியாக இருக்கிறது. சில பையன்கள் வாயை வைத்துச் சாப்பிடுகின்றபோது அவர்கள் எவ்வளவு பசியுடன் இருந்திருப்பார்கள் என்பது தெரிகிறது. அவர்கள்





பாய்ந்து பாய்ந்து சாப்பிடுகிறார்கள். சாப்பிட்டுவிட்டு வயிற்றைத் தூக்க முடியாத அளவுக்குச் சாப்பிடுகிறார்கள். வீட்டிலே அவர்கள் உணவு உண்ணவில்லை என்பதால்தான் அப்படியிருக்கிறார்கள். அவர்களுக்கு உணவு

(முற்பகல் 10—40)

கொடுத்தது நல்லது. இருந்த போதிலும் அதிலே சில தவறுகள் இருக்கின்றன. சில மாறுதல்களைச் செய்யத்தான் வேண்டும். நேற்றைய தினம் கல்வித் துறை அமைச்சரவர்கள் ஒரு கருத்தைச் சொன்னார்கள். ஆசிரியர் சங்கங்கள்தான் ஆசிரியர்களை, இந்த வேலையிலிருந்து விடுவிக்க வேண்டுமென்று சொல்லுகிறார்களே தவிர, சில ஆசிரியர்களிடமிருந்தே தொடர்ந்து வேலையைப் பார்க்கிறோம் என்று, கடிதம் வருகிறது என்று சொன்னார்கள். தயவுசெய்து அப்படிக் கடிதம் எழுதுகிறவர்களை நம்ப வேண்டாம். சேவை மனப்பான்மையோடு அவர்கள் சொல்லவில்லை. உண்மையில் நடப்பதை ஓரளவிற்குப் பார்த்தும் பெருமளவிற்குக் கேட்டும் இருக்கிறேன். அவர்கள் ஒவ்வொருவரும் மாலையிலே வீட்டுக்கு ஒரு கிலோ பருப்பு எடுத்துச் செல்கிறவர்கள் அல்லது ஒரு கிலோ பாமாயில் எடுத்துச் செல்கிறவர்கள் அல்லது ஒரு கிலோ அரிசி எடுத்துச் செல்கிறவர்களாக இருக்கிறார்கள் அப்படித் தவறு செய்கிறவர்கள் தான் தொடர்ந்து அந்தப் பணி செய்கிறோமென்று சொல்லுகிறார்கள். உண்மையாகக் கல்வி சேவை செய்ய வேண்டுமென்று சொல்கிறவர்கள், இந்தப் பணியிலிருந்து விடுவியுங்கள் என்றுதான் சொல்கிறார்கள். இந்தப் பணி அவர்களை ஒரு உயர்தர சமையல்காரராக ஆக்கியிருக்கிறது. அதிலிருந்து விடுவிக்க வேண்டுமென்று கேட்பது நியாயமான கோரிக்கை. ஒரு சிலர் தொடர்ந்து செய்கிறோமென்று சொல்வதால், இதைத் தொடர்ந்து அவர்களையே செய்ய அனுமதித்தால், அது தவறானதாகும். தீர்க்கமான நோக்கத்தோடு சொல்படும் சில ஆசிரியர்களின் கெட்ட எண்ணத்திற்குத் துணையாக இருக்கக்கூடாது. இதிலிருந்து ஆசிரியர்களை விடுவிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இதில் மற்றொரு கருத்தையும் கூற விரும்புகிறேன். அரிசி, பருப்பு, பாமாயில் போன்ற பொருள்களை சிவில் சப்ளைஸ் துறையிலிருந்து பி.ஈ.ஓ. அவர்களுக்குக் கொடுத்து, அவர்கள் தலைமை ஆசிரியர்களிடம் கொடுக்கிறார்கள். அப்படிக் கொடுக்கும்போது, 100 கிலோ என்று சொல்லிக் கொடுக்கும் மூட்டையில் 94 கிலோதான் இருக்கிறது. இருந்தாலும் அவர்கள் 100 கிலோ என்றுதான் வாங்க வேண்டியிருக்கிறது. தலைமை ஆசிரியரிடம் ஒப்படைக்கும்போதும், 100 கிலோ என்றுதான் ஒப்படைக்கிறார்கள். அவர்களும் 100 கிலோவிற்குக் கணக்கு எழுத வேண்டியிருக்கிறது. தவறான கணக்கு எழுதும் நிர்பந்தத்திற்கு ஆளாகும் நிலை அங்கே இருக்கிறது. இதற்கும் ஏதாவது திருத்தம் செய்ய

வேண்டும். அவர்களிடம் கொடுக்கும்போது அளந்து கொடுக்க வேண்டும். சிவில் சப்ளைஸ் டிபார்ட்மெண்டில் இந்தத் தவறு நடக்கிறது என்று நினைக்கிறேன். எங்கே தவறு நடந்தாலும் அதைத் தீர்த்து, எவ்வளவு கொடுக்கப்படுகிறதோ அந்த அளவிற்குக் கணக்கு எழுத ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

சட்டத் துறை அமைச்சரவர்கள் இங்கே இல்லாததால் வருந்துகிறேன். அவரை முதலில் பாராட்டுகிறேன். சென்ற 13 ஆண்டுகளாக, 1969 லிருந்து இதுவரை, பிராக்டிசிங் லாயர்ஸ் (Practising Lawyers) யாரும் நடுவர்களாக நியமிக்கப்படவில்லை. செப்பரேஷன் ஆஃப் ஜுடிஷியரி (Separation of the Judiciary) என்பது 1948-ல் வந்தது. வழக்காடும் தொழில் நடத்துகிறவர்களை நடுவர்களாக அல்லது முனுசீப்புகளாக நியமிக்க வேண்டுமென்று கோரி, அந்த அடிப்படையிலே பப்ளிக் சர்வீஸ் கமிஷனும், ஹை கோர்ட்டும் அவர்களைத் தேர்ந்தெடுத்து, நியமித்தது. இடைக்காலத்தில் அதை விட்டு நிர்வாகத் துறைகளிலே—மீன் துறை, கால்நடைத் துறை, போன்ற துறைகளிலே எழுத்தர்களாக இருப்பவர்களை பி.எல். கரெஸ்பாண்டன்ஸ் கோர்சில் பாஸ் செய்தவர்களை, நியமித்தார்கள். 150 ரூபாய் கட்டினால், பி.எல். டிகிரி கொடுத்து விடுகிறார்கள். அவர்களை மேஜிஸ்டிரேட்டாக நியமித்தால், அவர்களுக்கு நடைமுறை ஒன்றும் தெரியாது. அவர்கள் கிளார்க்கைக் கேட்கிறார்கள், எப்படி எழுதுவது என்று. அவர்கள் கட்சிக்காரர்களிடம் ரூபாய் வாங்கிக்கொண்டு, அவர்களுக்குச் சாதாரணமாகத் தீர்ப்பு எழுதுகிறார்கள். இல்லையென்றால், விடுதலை செய்ய வேண்டுமென்றால், எதிர்க்கட்சி வக்கீலிடம் கேட்கிறார்கள். கன்விக்ஷன் செய்ய வேண்டுமென்றால், ஏ.பி.பி. யிடம் கேட்கிறார்கள் அந்த அளவிற்கு லஞ்சம் இருக்கிறது. தைரியமாக அந்த நிலைமை மாற சமீபத்தில் 50 தொழில் நடத்தும் வக்கீல்களை நேரடியாக சப்-மேஜிஸ்டிரேட்டாக நியமித்திருக்கிறார்கள். இன்னொரு வேண்டுகோளை இந்த நேரத்தில் தெரிவிக்க விரும்புகிறேன். அமைச்சரவர்கள் ஒன்றை பத்திரிகைக் குறிப்பில் கூறியிருக்கிறார்கள். அதற்கு ஒரு ரேஷியோ வைத்திருக்கிறார்கள். ஐந்து பேர்களை நேரடியாக நியமிக்கும்போது, ஒருவரை நிர்வாகத் துறையிலிருந்து நியமிக்க விரும்புகிறோமென்று சொல்லியிருக்கிறார்கள். அது குறித்து ஒரு வேண்டுகோள். ஒருவரை நிர்வாகத் துறையிலிருந்து எடுக்கும் போது, தலைமைச் செயலகத்திலுள்ள சட்டத் துறையில் பணியாற்றும் ஒருவரைப் போடுங்கள். அல்லது டிஸ்டிரிக்ட் கோர்ட் அல்லது சப்-கோர்ட்டில்





இருக்கும் ஒரு எழுத்தர் பி.எல். பாஸ் செய்திருந்தால், அவரைப் போடுங்கள். இதற்காக காதி டிபார்ட்மெண்டில் வேலை செய்கிறவரை, மீன்துறையில் வேலை செய்கிறவரைப் போட வேண்டாம். நிச்சயமாக இதில் ஒரு கைட்லைனைப் பின்பற்ற வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

திரும்பத் திரும்ப ஒன்றை நான் சொல்கிறேன் என்று யாரும் நினைக்கக் கூடாது. என்னுடைய கோரிக்கை நிறைவேற்றப்படும்வரை, ஒவ்வொரு வாய்ப்பும் கிடைக்கும்போதும் சொல்லத்தான் சொல்வேன். நீதி மன்றங்களைப் பரவலாக்குங்கள் என்ற கோரிக்கை வைக்கப்பட்டது.

திரு. ஜி. சுவாமிநாதன் : மாற்றுத் தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினரவர்கள் அடுத்த முறையும் தேர்தலில் நிற்பதற்கு உத்தேசித்துள்ளார்களா என்று அறிய விரும்புகிறேன்.

திரு. த. சந்தோஷம் : என்னுடைய நம்பிக்கை இந்த ஆண்டு அல்லது அடுத்த ஆண்டு என்னுடைய கோரிக்கை நிறைவேற்றப்படுமென்று நினைக்கிறேன். அப்படி நிறைவேற்றப்படவில்லை என்றால், மீண்டும் தேர்தலில் நிற்க முயற்சி செய்வேன். மாண்புமிகு உறுப்பினர் போன்றவர்கள் உதவி செய்வார்கள் என்று நம்புகிறேன். டிசென்ட்ரலைசேஷன் ஆஃப் கோர்ட்ஸ் (Decentralisation of Courts) என்ற அடிப்படையில் ஒரு கோர்ட்டை மதுரையிலிருந்து பெரியகுளத்திற்கு மாற்றியுள்ளது. ஒரு கோர்ட்டை மதுரையிலிருந்து இராமநாதபுரம் டிஸ்ட்ரிக்டில் ஸ்ரீவில்லிபுத்தூருக்கு மாற்றியிருக்கிறது. அடிஷனல் டிஸ்டிரிக்ட் கோர்ட்டை திண்டுக்கல்லுக்கு கொண்டு போனார்கள். இப்படி மாற்றியிருக்கிறார்கள். நீதி மன்றங்களைப் பரவலாக்க வேண்டுமென்ற கொள்கையின் அடிப்படையில் வைத்திருக்கிறார்கள். நான் மீண்டும் வற்புறுத்துகிறேன். ஹை கோர்ட்டை டிசென்ட்ரலைஸ் (Decentralise) பண்ண வேண்டும். 450, 500 மைல்களுக்கு அப்பாலுள்ள திருநெல்வேலி, கன்னியாகுமரி மாவட்டத்தில் உள்ளவர்கள் சென்னைக்கு வந்து வழக்கு நடத்த எவ்வளவு பணம் செலவாகிறது. ஸ்ரீவில்லிபுத்தூரில் வைத்திருக்கிறார்கள். நியாயம். கன்னியாகுமரி மாவட்டத்திலிருந்து சென்னைக்கு வந்து வழக்கு நடத்துகிறார்களே, அவர்களுடைய கண்ணீரைத் துடைக்க வேண்டாமா? சென்னை உயர்நீதி மன்றத்தைப் பிரித்து, ஒரு பெஞ்சை மதுரையில் வைக்க வேண்டியது அவசியம். ஸ்டேட் அடானமி கேட்கிறோம். அதைப்போல சுப்ரீம் கோர்ட்டை 4 ஆகப் பிரித்து, பம்பாயில் ஒரு பெஞ்சும், கல்கத்தாவில் ஒரு பெஞ்சும், சென்னையில் ஒரு பெஞ்சும், டெல்லியில் ஒரு பெஞ்சும் என்று 4 பெஞ்சாகப் பிரித்தால் நல்லது.

ஆளுநர் அவர்கள் உரையில், 7 ஆம் பத்தியில் கல்வித் துறை பல சாதனைகள் புரிந்திருக்கிறதென்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. அதற்காக மாண்புமிகு அமைச்சரவர்களைப் பாராட்டுகிறேன். ஆனால் இரண்டு பெரிய சிக்கல்களுக்கு எவ்வளவோ முயற்சி செய்தும், தீர்வு காணாமல் இருக்கிறோம். 'அன்ரெஸ்ட் அமாங் காலேஜ் ஸ்டூடன்ட்ஸ்' (Unrest among college students) கல்லூரி மாணவர்கள் மத்தியில் இருக்கும் அமைதியின்மை அதற்கு நான் ஒரு தீர்வு சொல்லிக் கொண்டிருக்கிறேன். அமைச்சரவர்கள் அதை ஏற்றுக்கொள்ளாமல் இருக்கிறார்கள். என்ன காரணம் என்று தெரியவில்லை. நான் 3 கிரிமினல் வழக்குகள் நடத்தியிருக்கிறேன். மதுரையில் இன்ஜினியரிங் கல்லூரி மாணவர்கள், 2 பேர் கொலை செய்யப்பட்டார்கள்.

(முற்பகல் 10-50)

மதுரை வெள்ளைச்சாமி கல்லூரியில் பி. காம். வகுப்பு நடந்து கொண்டிருந்த நேரத்தில் எலெக்ஷனில் தோற்றுப்போன ஒரு கூட்டம் அரிவாள், கத்தி போன்ற ஆயுதங்களுடன் வெற்றி பெற்ற மாணவனைத் தாக்க முயற்சி செய்திருக்கிறார்கள். அதுபோல் காரைக்குடியில் அழகப்ப செட்டியார் கல்லூரி முதல்வரைத் தாக்க முயற்சி செய்திருக்கிறார்கள். செக்ஷன் 309-ன் கீழ் வழக்கு நடந்துக்கொண்டிருக்கிறது. கலேஜ் யூனியன் தேர்தலின் காரணமாக இவ்வாறு நடக்கிறது.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : யார் பக்கம் உறுப்பினர் வழக்கை நடத்தி கொண்டிருக்கிறார்?

திரு. த. சந்தோஷம் : குற்றம் சாட்டப்பட்டவர்கள் சார்பில், தர்மத்தின் அடிப்படையில் குற்றம் சாட்டப்பட்டவர்களுக்காக வாதாடுகிறேன். கிருஷ்ணனின் கீதை வழியில் வாதாடுகிறேன். பல பேருக்கு விடுதலை வாங்கிக் கொடுத்திருக்கிறேன். தவறு செய்தவர்களுக்காக வாதாடியிருக்கிறேன். அது தப்பு இல்லை, ஆனால் காலேஜ் யூனியன் தேர்தல் நடப்பதன் காரணமாக வன்முறைச் செயல் ஆங்காங்கு நடைபெற்றுக்கொண்டிருக்கிறது. இந்த உரிமையை எடுத்து விட வேண்டும். மற்ற அரசியல் கட்சிகளின் கோரிக்கை காரணமாக இதை அரசாங்கத்தால் எடுத்துவிட முடியவில்லையென்று நான் கருதுகிறேன். அதுபோல் இந்த ஆண்டு கூட ஒரு கல்லூரியில் வன்முறை நடந்த உடனே பேரவையையே கலைத்து விட்டார்கள். அந்த முறையிலே காலேஜ் யூனியன் தேர்தல் நடைபெறுவதை உடனே நிறுத்த வேண்டும். இதனால் வரக்கூடிய கேட்டினை உணர்ந்த மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் சர்வ கட்சிக் கூட்டத்தைக் கூட்டினார்கள். ஆனால் இன்னும் தீவிரமான நடவடிக்கையை எடுக்கவில்லை. சற்றும் தயங்க



வேண்டாம். மிகத்தீவிரமாக தயவுசெய்து நடவடிக்கை எடுக்க வேண்டும். அடுத்து, பல்கலைக் கழகத் தேர்வுகளைப் பொறுத்தவரையில், ஒவ்வொரு பல்கலைக் கழகத் தேர்வின்போதும் அரசாங்கத்தின் பல்வேறு இலாக்காக்களில், குறிப்பாக காவல் துறை, வருவாய்த் துறை, கல்வித் துறை போன்ற துறைகளில் பணியாற்றுகின்ற நபர்களை இன்விஜிலேட்டர்களாகப் போட வேண்டும். நிச்சயமாக யூனிவர்சிட்டி தேர்வுகள் 'காப்பி' இல்லாமல் நடக்க வேண்டும். இல்லாவிட்டால் நம்முடைய கல்வியின் தரம் கெட்டுப் போய்விடும்.

அடுத்து, மின்சாரத்தைப் பொறுத்தவரையில், நாம் நமக்கு இருக்கின்ற நீர் மின் நிலையங்களை மிக அதிகமான அளவில் பயன்படுத்தி விட்டோம். இனி நீர் மின் சக்தி பெற வசதியில்லை. இனி அனல் மற்றும் அணு மின் திட்டங்களைத் தான் நம்ப வேண்டியிருக்கிறது. இதை ஆளுநர் உரையிலும் சொல்லியிருக்கிறார்கள். முன்பு நான் இது குறித்து ஒரு யோசனையைக் கோடிட்டுச் சொல்லியிருக்கிறேன். அதாவது ஜைகேன்டிக் மின் திட்டங்களை விட், பெரிய பெரிய அளவிலுள்ள மின் திட்டங்களை விட மினி பிளான்ட்ஸ் ஆக பரவலாக ஆங்காங்கே வைக்க வேண்டும். அப்படிச் செய்தால் மொத்தமாக மின்சார சப்ளை பாதிக்கப்படாது. சிறு சிறு மின் நிலையங்கள் ஆங்காங்கே பரவலாக பல இடங்களில் அமைக்கப்பட்டால், ஸ்டிரைக் வந்து முழு மின்சாரத் தடை வந்து விடுமோ என்று அஞ்சவும் தேவையில்லை. சமயநல்லூரில் ஏற்கெனவே ஒரு மின் திட்டம் இருந்தது. அதற்குரிய கட்டிடம் கட்டப்பட்டிருக்கிறது. சிமென்ட் தொட்டிகள் ஏற்கெனவே கட்டப்பட்டிருக்கின்றன. இனி செய்ய வேண்டியதெல்லாம் அதற்குரிய இயந்திரங்களைப் பொருத்துவது, அப்படிப் பொருத்திவிட்டால், குறைந்தது 50 மெகா வாட் மின்சாரத்தை உற்பத்தி செய்ய முடியும். இதை வெகு சீக்கிரத்தில் செய்ய வேண்டும். புதிதாக ஆரம்பிக்க வேண்டுமென்றால், மிகவும் அதிகமாகச் செலவாகும். ஆகவே சமயநல்லூர் மின் திட்டத்தை உடனே அரசு செயல்படுத்த வேண்டுமென்று திரும்பவும் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, தொழில் துறையைப் பொறுத்தவரையில், நான் போன தடவை பேசும்போது, நம்முடைய மாண்புமிகு திரு. திருநாவுக்கரசு அவர்களைப் பாராட்டிப் பேசினேன். தமிழ்நாடு புதிய வேகத்துடன் தொழிற்சாலைகளை ஆரம்பித்து வருகிறது என்று சொல்லி பாராட்டிப் பேசினேன். ஆனால் இப்போது சற்று மாறுபட்டுப் பேசுகிறேன். இப்போது தமிழகம் தொழில் துறையில் மீண்டும் மந்த நிலைக்கு வந்து விட்டது. தமிழ் நாட்டில் மின்சாரப் பற்றாக்குறை, தொழிலாளர் தொல்லை, அரசாங்கத்திலே

[திரு. த. சந்தோஷம்] [1983 ஜனவரி 28

பிருந்து சலுகைகள் இல்லை, இப்படி பல காரணங்களைச் சொல்லி அண்டை மாநிலங்களான கர்நாடகம், ஆந்திரம் போன்ற மாநிலங்களுக்குத் தொழிலதிபர்கள் போய்விடுகிறார்கள். இந்நிலையைத் தடுக்க வேண்டும். நிச்சயமாக தமிழகத்திலுள்ள தொழிற்சாலைகளுக்கு வெகு சீக்கிரத்தில் மின் வசதியைச் செய்து கொடுக்க வேண்டும். அதுபோல் பெரிய தொழிற்சாலைகளில் ஜெனரேட்டர் வைத்திருக்கிறார்கள். ஜெனரேட்டர் மூலம் மின்சாரம் உற்பத்தி செய்வதற்கு அரசாங்கம் வாங்குகிற மின்சாரக் கட்டணத்தை ஒப்பிட்டுப் பார்த்தால், மூன்று மடங்கு அதிகமாகச் செலவாகிறது என்று சொல்லுகிறார்கள். இதன் காரணமாக ஜெனரேட்டர் வைத்து தொழிற்சாலைகளை வைத்து வேஷ்டி போன்றவற்றை உற்பத்தி செய்து மார்க்கெட்டுக்கு அனுப்பினால், மற்ற மாநிலங்களிலிருந்து வருகின்ற வேஷ்டியுடன் போட்டி போட முடியவில்லை என்று சொல்லுகிறார்கள். ஆகவே, தொழில் துறை மீண்டும் புதிய புதிய தொழிற்சாலைகளை ஆரம்பிக்க வேண்டும்.

அடுத்து, மருத்துவத் துறையைப்பற்றி ஒன்றைச் சொல்லி முடித்துவிடுகிறேன். மதுரை மருத்துவமனையைப் பொறுத்தவரையில், பல துறைகள் இருக்கின்றன. பல துறைகள் முன்னேற்றம் அடைந்திருக்கின்றன. ஆனால் பிளாஸ்டிக் சர்ஜரி பிரிவு மட்டும் ஆரம்பித்த காலத்திலிருந்த நிலையில் தான் இப்போதும் இருக்கிறது. ஒரு முன்னேற்றமும் இல்லை. ஒரே ஒரு பிளாஸ்டிக் சர்ஜன் தான் இருக்கிறார். அவருக்குக் கீழே ஹவுஸ் சர்ஜன்கள் இருக்கிறார்கள். இன்றைய கால கட்டத்தில் பிளாஸ்டிக் சர்ஜரி என்பது மிகவும் முக்கியமான ஒன்று. இன்றைக்கு சாலை விபத்துக்கள் அதிகமாக நடக்கின்றன. கை, கால் போன்றவற்றிற்குச் சேதம் ஏற்பட்டுவிடுகிறது. இதற்கு பிளாஸ்டிக் சர்ஜரி அவசியம் தேவை. இதில் அரசு இன்னும் அதிகமான கவனத்தைச் செலுத்தவேண்டும். வெகு சீக்கிரத்தில் இந்தக் குறையை நீக்க வேண்டும். மதுரை மருத்துவமனையில் பிளாஸ்டிக் சர்ஜரி பிரிவில் கவனம் செலுத்த வேண்டும். நல்ல நவீன முறையில் செயல்படும் துறையாக அதை மாற்றியமைக்க வேண்டுமென்று சொல்லி, வாய்ப்பளித்தமைக்கு தலைவர் அவர்களுக்கு நன்றி கூறி முடித்துக்கொள்கிறேன்.



1983 ஜனவரி 28]

(மாற்றுத் தலைவர் திரு. சி. இராமலிங்கம் தலைமை)

திரு. சோ. ஆறுமுகம் : மாற்றுத் தலைவரவர்களே, 1983 ஆம் ஆண்டு ஆளுநர் ஆற்றிய உரையின் மீது என்னுடைய கருத்தை நான் இங்கே தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். பொதுவாக ஆளுநர் அவர்களின் உரையில் சென்ற ஆண்டு நடைபெற்ற முக்கிய திட்டங்களைக் கோடிட்டுக்காட்டி, மற்றும் நடைபெற இருக்கின்ற ஆண்டில் எந்தெந்தக் கொள்கைகளை நிறைவேற்றப் போகிறோம் என்று குறிப்பிட்டு ஆளுநர் உரையாற்றுவது தான் மரபு என்பதை நாம் இதுபோன்ற அவைகளில் பார்த்திருக்கிறோம். ஆனால் ஆளுநர் அவர்களின் உரையில் சென்ற ஆண்டு நடைபெற்று முடிந்துபோன சில திட்டங்களைச் சொல்லி எதிர்காலத்தில் தமிழக மக்களுக்கு இன்னின்ன காரியங்களை ஆற்றப் போகிறோம் என்று தெரிவிக்காமை குறித்துப் பார்க்கும் போது முழுமையாக மக்கள் பிரச்சினையிலிருந்து இந்த ஆட்சியாளர்கள் நழுவி விட்டார்கள் என்பதைக் காட்டக் கூடிய வகையில் இந்த உரை அமைந்திருக்கிறது என்பதை நான் திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பாக வருத்தத்தோடு தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். இன்று ஆட்சிக் கட்டிலில் அமர்ந்திருக்கின்ற கட்சி இன்னும் ஒரு 15 ஆண்டுக் காலத்தில் அகில இந்தியாவிலும் தேர்தலின்போது போட்டி போடக்கூடிய கட்சி என்று முதலமைச்சர் அவர்கள் அறிவித்திருக்கிறார்கள். ஆகவே அகில இந்திய அளவில் போட்டி போடக் கூடிய கட்சி இந்தப் பிரச்சினையிலே ஏதோ தங்களுக்கு திறம் இருப்பதாகக் காட்டிக்கொண்டு இங்கு அண்ணாவினுடைய இருமொழிக் கொள்கையைச் சுட்டிக்காட்டி, இந்த இருமொழிக் கொள்கைக்கு விரோதமாக மத்திய அரசு ரெயில்வே வங்கிகளில் இந்தி ஆதிக்கத்தை ஏற்படுத்துகிறது என்றும் சுட்டிக்காட்டி, இவர்கள் செய்யத் தவறியதை, மக்கள் கேட்பதை, மறுப்பதற்காக இந்தப் பிரச்சினையை இங்கு முன் வைத்திருக்கிறார்கள்.

(முற்பகல் 11-00)

திராவிட முன்னேற்றக் கழகத்தைப் பொறுத்தவரையில், இந்தி எந்த வடிவிலே, எந்த வகையிலே தமிழகத்திலே நுழைந்தாலும் அதைக் கடுமையாக எதிர்க்கின்ற, அதி வேகமாக அதை எதிர்த்து போர்க்குரலை எழுப்புகின்ற இயக்கம். பன்னெடுங்காலமாகவே இந்தக் கருத்திலே தொடர்ந்து இன்று வரை நடந்துவந்திருக்கிறது. இந்தக் கருத்திலே இந்தக் கட்சியினர் யாருக்கும் சளைத்தவர்கள் அல்ல. இந்தியை இன்றும் எதிர்க்கும், இனி என்றும் எதிர்க்கும் என்பதை நான் இந்த அவையிலே தெரிவித்துக்கொள்கிறேன். ஆனால் ஆட்சியாளர்கள், தேர்தல் நேரத்திலே கொடுத்த வாக்

குறுதியை நிறைவேற்றுவதற்குப் பதிலாக, முதலமைச்சர் அவர்களின் சத்துணவுத் திட்டத்தை நிறைவேற்றுகிறோம், பற்பொடி வழங்குகிறோம், பாரதியார் நூற்றாண்டு விழா கண்டு மகிழ்ந்திருக்கிறோம், இப்போது புதிதாக குடும்பத்திற்கு ஒருவருக்கு வேலை தருகிறோம், ஒவ்வொரு வருவாய் கிராமத்திலும் பெண்களுக்குத் தனியாகக் கழிப்பிடம் கட்டப்போகிறோம் என்றும் சொல்லியிருக்கிறார்கள். இதிலே, கழிப்பிடங்கள் கட்டுவதை எதிர்க்கின்ற நிலையிலே நாங்கள் இல்லை. அதை வரவேற்கிறோம். ஆனால் நீண்டகாலத்திற்கு முன்பே, ஊராட்சி மன்ற, ஒன்றிய அளவில் ஆங்காங்கே கட்டப்பட்டுள்ள கழிப்பிடங்கள் இன்றைக்கு பெண்களோ ஆண்களோ சென்று பயன்படுத்தக்கூடிய அளவிலே இருக்கின்றனவா என்று பார்க்க வேண்டும். அந்த இடங்களிலே சுத்தம் செய்வதற்கு வேண்டிய தண்ணீர் கூட இல்லை. இப்போது குடிப்பதற்கே கூட தண்ணீர் இல்லாமல் பெண்கள் மண் குடங்களைத் தலையிலே சுமந்து கொண்டு தெருக்களிலே ஊர்வலம் போகும் நிலையில், வருவாய் கிராமங்கள் தோறும் இந்தத் திட்டத்தை நிறைவேற்றும்போது அங்கெல்லாம் Fl. h O. t செய்ய கழிப்பிடங்கள் தான் கட்டப்பட வேண்டும். அதற்கு நல்லமுறையில் Watter supply இருக்க வேண்டும். அந்த வசதிகளை இந்த அரசால் செய்ய முடியுமா ? இந்தத் திட்டத்தை நிறைவேற்றவென்று 22.56 கோடி ரூபாய் அளவுக்குச் செலவு செய்யவிருக்கிறார்கள். ஏதோ கான்ட்ராக்டர்கள் என்ற போர்வையிலே இருக்கும் ஆளும் கட்சிக்காரர்களுக்குத் தான் இந்தத் தொகை அனைத்தும் பயன்படப்போகிறது என்பதை எண்ணிப்பார்க்கும் போது நான் மிகவும் வியப்பு அடைகிறேன். ஆகவே, இப்படி நடைமுறைக்கு ஒத்துவராத திட்டங்களை அறிவித்து அதிலிருந்து பின்னாலே செல்வதிலே இந்த அரசை விட வல்லவர்கள் வேறு யாரும் இல்லை. 1977 ஆம் ஆண்டு இந்த ஆட்சி, ஆளுநர் உரை மூலமாக அதனுடைய கொள்கையை அறிவித்தது. அதை நான் படித்துப்பார்த்தேன். அதிலே தெளிவாகச் சொல்லியிருப்பது என்னவென்றால், 'மக்கள் நலனை அடிப்படையாகக் கொண்டு மதுவிலக்குக் கொள்கையை உறுதியாகப் பின்பற்றுவோம்' என்று சொல்லியிருக்கிறார்கள் ? "அந்த உறுதி இப்போது எங்கே போயிற்று ? அந்த உறுதி இப்போது உங்களிடத்திலே எங்கே இருக்கிறது ?" என்று நான் கேட்க விரும்புகிறேன். அதற்கு அடுத்தபடியாக, அந்த உரையிலே "லஞ்ச ஊழலை ஒழித்து மக்களுக்கு நியாயமான ஆட்சியைத் தருவோம்" என்று 1977-லே சொல்லியிருக்கிறார்கள். அது அவர்களுடைய கொள்கை என்று சொல்லியிருக்கிறார்கள். அந்த அடிப்படையிலே லஞ்ச ஊழல் இல்லாத ஆட்சியை அவர்கள் இன்றைக்கு நடத்துகிறார்களா என்று நான் கேட்க விரும்புகிறேன். எங்கும் எதிலும் லஞ்சம் தலைவிரித்தாடக்கூடிய அளவுக்கு



இன்றைக்கு சூழ்நிலை வளர்ந்துவிட்டது. அதை இந்த நாட்டு மக்கள் நன்கு உணர்ந்துகொண்டு தான் இருக்கிறார்கள். ஆகவே, இன்றைக்கு ஆளுநர் அவர்களுடைய உரையிலே என்ன என்ன சொல்லப்பட்டிருக்கிறதோ அவைகளிலே ஒன்றைக் கூட இந்த அரசாலே பின்பற்ற முடியாது என்பதற்காகத்தான் சில பிரச்சினைகளை இங்கே வைத்திருக்கிறார்கள்.

உதகமண்டலத்திலே கலர் ஃபிலிம் தொழிற்சாலை வரவேண்டும் என்பதிலே யாருக்கும் கருத்து வேறுபாடு கிடையாது. ஆனால் இங்கு வரவேண்டிய தொழிற்சாலை உத்தரப்பிரதேச மாநிலத்திற்குச் சென்றுவிட்டது என்பது தெரிந்த பிறகு தான், இதை ஒரு பிரச்சினையாக இந்த அரசினர் வைக்கிறார்களே தவிர, இது உதகமண்டலத்தில் தான் வரவேண்டும், இங்கு தான் அந்தத் தொழிற்சாலை இருக்க மத்திய அரசாங்கம் அனுமதி அளிக்கவேண்டும் என்று அதற்கான நடவடிக்கைகளை இவ்வரசினர் எடுக்கவில்லை. கலர் ஃபிலிம் தொழிற்சாலை ஆரம்பிக்கப்போகிறோம் என்று எப்போது மத்திய அரசில் சொன்னார்களோ அப்போதே இந்த அரசு மத்திய அரசோடு வாதாடி, போராடி அதை உரிமையாகப் பெற்று இங்கே நிறைவேற்றியிருக்கவேண்டுமே தவிர, அதைப் பிடித்துக்கொண்டவன் பறித்துக்கொண்டு போன பிறகு இப்போது ஏன் குரல் எழுப்புகிறார்கள் ?

**டாக்டர் இரா. சனார்த்தனம் :** கலர் ஃபிலிம் தொழிற்சாலை உதகமண்டலத்திலே தான் வரும் என்று தொடர்ந்து பல மத்திய அமைச்சர்கள் அவர்களாகவே சொல்லி வந்தார்கள். ஆனால் இல்லை என்ற பிரச்சினை இப்போதுதான் தெரியவருகிறது. காலாகாலமாக இந்தத் தொழிற்சாலை இங்கே தான் வரும் என்று மத்திய அரசாங்கம் வாக்குறுதி அளித்தது. இப்போது திடீரென்று இந்த நிலை ஏற்பட்டுள்ளது. தவறு நடந்த பிறகு தான் சுட்டிக்காட்டுகிறோம்.

**திரு. க. இராமமூர்த்தி :** வந்திருப்பது தவறான செய்தி. முடிவு இன்னும் எடுக்கப்படவில்லை. மாண்புமிகு ஆளும் கட்சி உறுப்பினர் அவர்களுக்கு ஏன் தோல்வி மனப்பான்மை துவக்கத்திலேயே ஏற்படுகிறது என்று எனக்குப் புரியவில்லை. இந்தப் பிரச்சினை ஏன் வருகிறது என்று தெரியவில்லை.

**டாக்டர் இரா. சனார்த்தனம் :** இங்கே ஆந்திராவிலேயும், கர்நாடகத்திலேயும் தேர்தல் நடந்தபோது மத்திய அரசு செய்தி நிறுவனத்தாரிடமிருந்து வந்த செய்திதான். அதாவது இந்தத் தொழிற்சாலை நைனிட்டாலுக்குப் போவது உறுதிதான் என்று வந்தது. நாம் நம்பவேண்டியது மத்திய அரசிடத்திலே இருக்கும் டி.வி., வானொலி போன்றவைகளை. அந்தச் செய்தியை இதுவரை அவர்கள் மறுக்கவும் இல்லை. இப்போது இங்கே பேசுவதன் அடிப்படையில், மாண்புமிகு உறுப்பினர் திரு. இராமமூர்த்தி போன்றவர்கள் எல்லாம் முயற்சி செய்து அந்த கலர் ஃபிலிம் தொழிற்சாலை இங்கே வருவதற்கு வேண்டிய நடவடிக்கைகளை எடுத்தால், தமிழ் நாட்டுக்கு மிகவும் உதவியாக இருக்கும்.

* **திரு. க. இராமமூர்த்தி :** இந்த வார்த்தைகளை நாம் இங்கே இருந்து பேசுவது வேடிக்கையாக இருக்கிறது. ஒரு அரசாங்கம் வெறும் பத்திரிகை அல்லது டி.வி. அல்லது வானொலி செய்தி மூலம் தகவல் அறிந்து நடவடிக்கை எடுக்கிறது என்பது விநோதமாக இருக்கிறது. அரசாங்கத்திற்கு என்று ஒருசில முறைகள் இருக்கின்றன. அதன் அடிப்படையிலே அந்தச் செய்திகளினுடைய உண்மை நிலைமையை அறிந்து, அதன் பின்னர் தான் செயல் பட வேண்டும். எங்களைப் பொறுத்தவரையில், அதற்காகப் போராடத் தயார். இது இந்த மாநிலத்தினுடைய பிரச்சினை. இதை நாங்கள் விட்டுக்கொடுக்கத் தயாராக இல்லை. ஆகவே, இந்தப் பழியை மற்றவர்கள் மீது போட்டு, நீங்கள் நல்லவர்களாக நடிக்கவேண்டாம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**டாக்டர் இரா. சனார்த்தனம்:** நைனிட்டாலில் வைப்பது என்று முடிவு செய்து அந்த மாநில அரசு அதற்கென்று இடமும் ஒதுக்கி அதற்கென்று அங்கு ஒரு குழு கூட்டத்திலே ஏற்பாடுகள் நடந்து முடிந்திருக்கின்றன. மேலும் நிலைமைகளை நான் வெளிப்படையாகத் தெரிவிக்க விரும்பவில்லை.

**திரு. க. இராமமூர்த்தி :** பல திட்டங்களுக்கு பல மாநிலங்களில் இடம் ஒதுக்குகிறார்கள். ஆனால் . . .

**டாக்டர் இரா. சனார்த்தனம் :** பல மாநிலங்களில் இடம் ஒதுக்கியும் மத்திய அரசு தொழிற்சாலையை ஆரம்பிக்கவில்லை.



**மாற்றுத் தலைவர் (திரு. சி. இராமலிங்கம்) :** மாண்புமிகு உறுப்பினர்கள் இருவரும் ஆளுநர் உரையின் மீது பேசவில்லை. வேறு ஏதோ பேசிக் கொண்டிருக்கிறார்கள். அந்தந்த உறுப்பினர்கள் பேசும்போது அவரவர்களின் கருத்துக்களைச் சொல்லலாம்.

**திரு. ஜி. சுவாமிநாதன் :** குறுக்கீடு என்பது ஓர் உறுப்பினர் பேசிக் கொண்டிருக்கும்போது, அதுபற்றிய கருத்து குறித்து இன்னொரு உறுப்பினர் குறுக்கிட்டு பதில் சொல்வதாகும். ஆனால், பேசும் உறுப்பினர் உட்கார்ந்து கொண்டு, வேறு இரண்டு உறுப்பினர்கள் பேசும் நிலைமையை இங்கே தான் நான் பார்க்கிறேன்.

**திரு. சோ. ஆறுமுகம் :** பிலிம் தொழிற்சாலையை மற்ற மாநிலத்துக்காரர்கள் பறித்துக்கொள்ள முயல்வதைப்போல என்னுடைய உரிமையை மாண்புமிகு உறுப்பினர்கள் பறித்துக்கொண்டிருக்கிறார்கள். ஆகவே, பெரும்பான்மையான நேரம் எனக்கு ஒதுக்கித்தர வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். நான் ஆளும் கட்சிக்கு ஒன்றைச் சொல்லிக்கொள்கிறேன். சேலம் இரும்பாலையும் அப்படித்தான். திராவிட முன்னேற்றக் கழக ஆட்சிக் காலத்திலே அந்த இரும்பாலை ஆரம்பிக்கப்பட்டது. இன்றைக்கு அது உருட்டாலையாக இந்த ஆட்சிக் காலத்திலே மாற்றப்பட்டிருக்கிறது. அதைப்போல கல்பாக்கம் அனல் மின் நிலையம் இன்றைக்குத் தூங்கிக் கொண்டிருக்கிறது. இவ்வளவு தூரம் மின்சாரம் நெருக்கடியாக இருக்கும் போது, அந்தத் திட்டத்தை நிறைவேற்றுவதில் தொய்வு ஏற்பட்டிருக்கிறது. ரயில்வே பெட்டி தயாரிக்கும் தொழிற்சாலை கூட இங்கு வந்தது. அது பின்னர் ஆந்திரப் பிரதேசத்திற்குச் சென்றதை நான் இங்கே நினைவுபடுத்த விரும்புகிறேன். ஆகவே, இருப்பதையும் கோட்டை விடுவதைவிட, இருப்பதைப் பாதுகாத்து, வரவேண்டிய தொழிற்சாலைகளுக்காகவும் வாதாடி தம்முடைய மாநிலத்தில் தொழிற்சாலைகள் உருவாவதிலே இந்த அரசு முனைப்பாக இருந்து போராடினால் அவர்களோடு ஒத்துழைக்க திராவிட முன்னேற்றக் கழகம் என்றைக்கும் தயாராக இருக்கிறது. ஆனால்

(முற்பகல் 11-10)

இவர்கள் தூங்கிவிட்டு, பிறகு விழித்துக் கொண்டு அதன்மீது பார்வையைச் செலுத்தி இப்போது பேசிக் கொண்டிருப்பதில் என்ன பயன் என்பதைத்தான் கேட்க விரும்புகிறேன். அடுத்து, ஆளுநர் உரையில் பின்தங்கிய வகுப்பினரின் பட்டியலை ஆய்வு செய்வதற்கு என்று ஒரு குழு அமைத்து அவர்களுக்கு அளிக்கப்பட்டிருக்கும் ஒதுக்கீட்டு சதவீதத்தை மறுபரிசீலனை செய்ய ஆணையிட்டிருப்பதாகவும் ஆளுநர் உரையில் சுட்டிக்காட்டப்பட்டிருக்

கிறது. நீதிக் கட்சிக் காலத்திலிருந்து தந்தை பெரியாரும், அதற்குப் பிறகு அறிஞர் அண்ணா அவர்களும், இன்றைக்கு எதற்கெடுத்தாலும் மூச்சுக்கு மூச்சு திராவிட இயக்கம் என்று நெருக்கடி வரும்போதெல்லாம் பேசிக் கொண்டிருக்கிற நீங்கள் இன்று அந்தக் கொள்கைகளுக்கு மாறுபாடான வகையில்—அதாவது வகுப்புவாரி பிரதிநிதித்துவத்திற்கு மாறுபாடான கொள்கைகளை வெளியிட்டு வருவது எந்த நோக்கத்தில் என்பதைத்தான் எங்களாலே புரிந்துகொள்ள முடியவில்லை. தந்தை பெரியார் அவர்களின் பெயரையும் பேரறிஞர் அண்ணா அவர்களின் பெயரையும் உச்சரித்துக் கொண்டிருந்துவிட்டால் மட்டும் அவர்களுடைய கொள்கைகளிலே நீங்கள் உறுதியாக இருக்கிறீர்கள் என்று தமிழ் நாட்டு மக்களை நம்ப வைத்துவிட லாம் என்று நீங்கள் நினைத்தால், அது வெறும் வீண் கனவாகத்தான் இருக்கும் என்பதை நான் இங்கே சுட்டிக்காட்ட ஆசைப்படுகிறேன். தற்போது பிற்பட்டோர் மற்றும் தாழ்த்தப்பட்டோர் ஆகியவர்களுக்கான ஒதுக்கீட்டை மறுபரிசிலனை செய்ய ஒரு ஆய்வுக்குழுவை நியமித்து விட்டு, அந்தக் குழு தமிழ் நாட்டு மக்களுக்குப் பாதகமான சூழ்நிலையை உருவாக்கினால், இதற்காக திராவிட முன்னேற்றக் கழகம் போராடத் தயாராக இருக்கும் என்று எங்களுடைய தலைவர் கலைஞர் அவர்கள் சொன்னார்கள். அதற்கு தமிழ் நாட்டின் முதலமைச்சராக இருப்பவர் என்ன சொல்லியிருக்க வேண்டும்? நாங்கள் அப்படி எந்த வகையிலும் இந்தச் சமுதாயத்திற்கு என்று ஒதுக்கப்பட்டிருக்கிற சதவீதத்தின் முக்கியத்துவத்தைக் குறைத்து விடமாட்டோம்; அவர்களுக்குக் கண்டிப்பாகப் பாதுகாப்பைத் தருவோம், எனவே இதில் கலைஞர் அவர்கள ஆவேசப்பட வேண்டாம் என்று சொல்லியிருந்தால், நாங்கள் அவரைப் பாராட்டியிருப்போம். ஆனால் அதற்கு மாறாக முதலமைச்சர் அவர்கள என்ன சொல்லியிருக்கிறார்? "கலைஞர் அப்படி ஒரு போராட்டத்தை ஆரம்பித்தால், நாங்கள் எதிர் போராட்டத்தை நடத்துவோம்" என்று சொல்லியிருக்கிறார். இப்படி முதலமைச்சர் அவர்கள் பேசுவது நியாயம்தானா என்பதை எண்ணிப் பார்க்க வேண்டும். அப்படி அவர் போராடி, அதற்காகச் சிறை செல்லத் தயாராக இருப்பாரானால், பதவி எதற்கு அவருக்கு? அவருடைய பதவியைத் தூக்கி எறிந்து விட்டு, மக்களுடைய பிரச்சினைகளுக்காகப் போராட வெளியே வாருங்கள். அதை திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பாக நாங்கள் வரவேற்கிறோம். ஆனால அட்டைகளைப் போல் பதவியில் உட்கார்ந்து கொண்டு மக்கள் பிரச்சினைகளைத் திசை திருப்பிக் கொண்டிருக்கலாம் என்று நினைத்தால், நீங்கள் வீண் கனவு கண்டு கொண்டிருக்கிறீர்கள் என்பதை நான் நினைவுபடுத்தக் கடமைப்பட்டிருக்கிறேன்.





அடுத்து, மொழிப் பிரச்சினையைப் பொறுத்த வரையில், இந்தி ஆதிக்கம் தமிழ் நாட்டில் நுழைந்தால், அதை எதிர்ப்பதில் திராவிட முன்னேற்றக் கழகம்தான் முன்னாலே நிற்கும். அதற்குப் பின்னால்தான் ஆளும் கட்சியைச் சார்ந்தவர்கள் நிற்பீர்கள். ஏனென்றால் ஆட்சிப் பொறுப்புக்கு நீங்கள் வந்த பிறகு வட மாநிலங்களுக்குச் சென்றபோதெல்லாம் நீங்களும் உங்களுடைய தலைவர்களும் என்ன சொன்னீர்கள் என்பதை நாடறியும். அவைகளெல்லாம் நாட்டு மக்களால் மறந்துவிடப்படவில்லை என்பதை நான் நினைவுபடுத்தக் கடமைப்பட்டிருக்கிறேன். இந்திப் போரில் உயிரிழந்த தியாகிகளுக்கு அஞ்சலி செலுத்தும் வகையில் "வீர வணக்க நாள்" என்று ஜனவரி 25 ஆம் நாள் கொண்டாடுகிறீர்கள். திராவிட முன்னேற்றக் கழகம் அத்தகைய வீர வணக்க நாளைக் கொண்டாடுகிறது என்பதாலே நீங்களும் கொண்டாடுகிறீர்கள். அதைப்பற்றி நாங்கள் கவலைப்படவில்லை. . . .

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி: மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் வீர வணக்க நாளை, அது தொடங்கிய நாளிலிருந்து மேற்கொண்டு வருகிறது என்பதையும் இந்த ஆண்டு மட்டும் அதனை நடத்தவில்லை என்பதையும் மாண்புமிகு உறுப்பினரின் மேலான கவனத்திற்கு நான் கொண்டுவர விரும்புகிறேன்.

திரு. சோ. ஆறுமுகம்: அதைத்தான் நானும் சொல்கிறேன்: திராவிட முன்னேற்றக் கழகம் இந்தி எதிர்ப்புப் போரில் உயிர் இழந்துவிட்ட தியாகிகளுக்கு வீர வணக்க நாளை—நாம் ஒன்றாக இருந்தபோதே—கொண்டாடிற்று இப்போதும் கொண்டாடிக் கொண்டிருக்கிறது என்பதையும் அமைச்சர் அவர்கள் மறந்திருக்க முடியாது. அப்படியே அவர் மறந்திருந்தாலும், நான் ஆச்சரியப்படுவதற்கில்லை. எனவே திராவிட முன்னேற்றக் கழகம்தான் கொண்டாடுகிறதே என்று பேசாமலா இருந்தீர்களா என்றால், அதுதான் இல்லை. நாங்களும் கொண்டாடுகிறோம் என்று நீங்களும் கொண்டாடுகிறீர்கள்.

1965ஆம் ஆண்டில் தமிழ் நாட்டில் இந்தி எதிர்ப்புப் போராட்டத்தை திராவிட முன்னேற்றக் கழகம் தொடங்கியது. அந்தப் போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் இன்றைக்கு ஆளும் கட்சியில் சிலர் இருக்கிறார்கள். இல்லை என்று சொல்லவில்லை. ஆனால் இன்றைக்கு அந்தக் கட்சியின் முழுமையான பொறுப்பில் இருந்துகொண்டு பதவிகளை அனுபவித்துக் கொண்டிருப்பவர்கள், இந்தி எதிர்ப்பு போராட்டத்தின் போது போராட்டத்

தில் கலந்து கொண்டு போராட்டக் கனலைக் கக்கினார்களா, சிறை சென்றார்களா, தியாகம் செய்தார்களா, தியாகத் தழும்புகளை ஏற்றார்களா என்று கேட்க விரும்புகிறேன். நீங்கள் கொண்டாடுகிறீர்கள், அதைப்பற்றி நாங்கள் கவலைப்படவில்லை. இந்தி ஆதிக்கம் தமிழ் நாட்டில் நுழைந்த போதெல்லாம், 1938 ஆம் ஆண்டு முதற்கொண்டு இன்று வரை திராவிட முன்னேற்றக் கழகம்தான் மிகப் பெரிய எதிர்ப்புச் சக்தியாக விளங்கிக் கொண்டிருக்கிறது என்பதை தமிழ் நாட்டு மக்களும் வட மாநிலங்களில் உள்ளவர்களும் மிக நன்றாக உணர்வார்கள். எனவேதான் இதில் நீங்களும் பங்கு போட்டுக்கொள்ளலாம் என்று உள்ளே நுழைகிறீர்களே தவிர, உங்களுக்கு இதில் முழுமையான நம்பிக்கையும் இல்லை, வீரமும் இருப்பதாக என்னால் ஒப்புக்கொள்ள முடியவில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

**திரு. எஸ். ஆர். இராதா :** மாற்றுத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆறுமுகம் அவர்கள் தம் கருத்தைச் சொல்வதில் நிச்சயமாக எங்களுக்கு ஆட்சேபணை இல்லை. ஆனால் அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தைப் பொறுத்த வரையில், இந்திப் பிரச்சினையில் அதற்கு வீரமில்லை என்று பேசுவதும், இந்தி எதிர்ப்பில் எங்களுக்கு நம்பிக்கையில்லை என்று பேசுவதும் நல்லதல்ல. மொழிப் பிரச்சினையைப் பொறுத்தவரையில், ஓர் உணர்வு வருமானால், ஒரு நிலை உருவாகுமானால், அந்த உணர்வுகளை வளர்த்துக்கொள்ள முயல வேண்டுமே தவிர, அதைப் பலவீனப்படுத்தி இரண்டு பேரும் சண்டை போட்டுக் கொண்டு அதைப் பார்த்து மாண்புமிகு உறுப்பினர் திரு. இராமமூர்த்தி அவர்கள் சிரிக்கிற நிலைமை வந்துவிடக்கூடாது என்பதை பணிவன்போடு அவருக்குத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

**திரு. சோ. ஆறுமுகம் :** மாண்புமிகு உறுப்பினர் திரு. இராமமூர்த்தி அவர்கள் சிரிக்காத அளவுக்கு நீங்கள் வீரமாக இருக்க வேண்டும் என்பது தான் என்னுடைய வேண்டுகோள். அப்படிப் பேசினாலாவது உங்களுக்கு வீரம் வாராதா என்பதைத் தவிர வேறல்ல.

**திரு. க. இராமமூர்த்தி :** இரண்டு தரப்பினரின் வாதத்திலிருந்தும், இந்தியைப் பொறுத்த வரையில், இதை ஒரு அரசியல் பிரச்சினையாக அல்லாமல் கட்சிப் பிரச்சினையாகத்தான் அணுகுகிறார்களே தவிர, மாநிலத்தின் ஒரு பொதுப் பிரச்சினையாக அணுகவில்லை என்பது தெரிகிறது.



**திரு. சோ. ஆறுமுகம் :** நாங்கள் கொள்கை ரீதியாகத்தான் இந்தி எதிர்ப்புப் பிரச்சினையில் இருக்கிறோம். எனவே அதில் உள்ளே நுழைந்து இலாபம் தேடவேண்டாம் என்று மாண்புமிகு உறுப்பினர் திரு. இராமமூர்த்தி அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, ஆளுநர் உரையில் நான் ஒன்றை எதிர்பார்த்தேன். தமிழகத்தில் இருக்கிற மாநகராட்சிகள், நகராட்சிகள் மற்றும் பேரூராட்சிகள் ஆகிய உள்ளாட்சி மன்றங்களுக்கு ஜனநாயக அடிப்படையில் தேர்தலை நடத்துவோம் என்ற அடிப்படையில் வரும் நிதிநிலையறிக்கையின்போது தாக்கல் செய்வார்கள், அப்போது தேதியை நிர்ணயித்திடுவார்கள் என்று எதிர்பார்த்தேன். அப்படி உள்ளாட்சி மன்றங்களுக்கான தேர்தல்களை நடத்தி, மக்களின் பிரதிநிதிகளை அத்தகைய அமைப்புகளில் உட்கார வைத்து விடுவார்கள். அதன் மூலம் இந்த நாட்டில் நல்ல சுகாதார வசதிகளும், பாதை வசதிகளும், குடிநீர் வசதியும் செய்து தருவார்கள், நல்ல ஒளி விளக்குகளை ஏற்படுத்தித் தருவார்கள். அதற்கான குறிப்பை ஆளுநர் உரையிலே தெரிவிப்பார்கள் என்றுதான் எதிர்பார்த்தேன். ஆனால் அதற்கு நேர்மாறாக அதைப்பற்றிய குறிப்பே ஆளுநர் உரையில் இல்லாமல் இருப்பதைத்தான் நாம் பார்க்கிறோம்.

இன்றையதினம் சென்னை மாநகரத்தைப் பொறுத்த வரையில், சுகாதார நிலைமைகள் மிகவும் சீர்கேடு அடைந்துள்ளன. ரோடுகள் அனைத்திலும் பள்ளங்களும் குழிகளும் நிறைந்திருக்கின்றன. மாநகராட்சியின் நிர்வாகம் சரியாகச் செயல்படவில்லை. இப்படிப்பட்ட சீர்கேடுகளை எல்லாம் எடுத்துக் காட்டும் வகையில்தான் இவற்றை அரசின் கவனத்திற்குக் கொண்டு வரும் வகையில் அதற்காக ஒரு போராட்டம் நடத்தி அதில் சட்டமன்ற உறுப்பினர்கள் உட்பட பல்லாயிரக்கணக்கான பேர் கைது செய்யப்படக்கூடிய சூழ்நிலை உருவாகியிருக்கிறது என்பதைத் தெரிவிக்க விரும்புகிறேன்.

எதற்காக உள்ளாட்சி அமைப்புகளுக்கான தேர்தல்களை நடத்த தயக்கம் காட்டுகிறீர்கள், அதற்கு என்ன காரணம்? அதில் இருக்கிற மர்மம் என்ன? தோல்வி மனப்பான்மையா என்றுதான் கேட்க விரும்புகிறேன். ஜனநாயக அடிப்படையில் எந்தக் கட்சி வேண்டுமானாலும் ஆட்சிப் பொறுப்புக்கு வரலாம். ஆனால் மக்களுடைய பிரச்சினைகள் என்பவை நிரந்தரமான பிரச்சினைகள் என்ற அடிப்படையில், உள்ளாட்சி அமைப்பு

[திரு. சோ. ஆறுமுகம்] [1983 ஜனவரி 28

களுக்கான தேர்தல்களை நடத்தி மக்கள் பிரதிநிதிகளை உட்கார வைக்காமல், கட்டங்களைப் போடுகிறோம், அவர்கள் உயர்நீதி மன்றத்திற்குப் போகிறார்கள். அதன் காரணமாகத் தடை உத்தரவு பெறுகிறார்கள் என்று காரணம் காட்டிக் கொண்டிருப்பதால் எந்தவிதமான பயனும் ஏற்படப் போவதில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இன்றையதினம் தமிழ் நாட்டில் உள்ள அனைத்து கிராமங்களிலும் இருக்கிற பிரச்சினைகள் பலப்பல. கிராமங்களெல்லாம் இருண்டு போயிருக்கின்றன பல்லாயிரக்கணக்கான தொழிற்சாலைகள் மூடப்பட்டிருக்கின்றன; என்றாலும் இதற்கென்று நமக்கு ஒரு மின்சாரத் துறை அமைச்சர் இருக்கிறார். அதைப்போலவே இன்றைக்குத் தாய்மார்கள் காலிப் பானைகளோடு தண்ணீர்ப் பஞ்சம் என்று சொல்லி ஊர்வலம் போய் வந்து கொண்டிருக்கிறார்கள். தமிழ்நாடு எங்கும் தண்ணீர் பஞ்சம், என்றாலும் இதற்கு என்று நமக்கு ஒரு அமைச்சர் இருக்கிறார். அவர்தான் மாண்புமிகு திரு. இராகவானந்தம். அதுமட்டுமல்ல, இன்றைக்கு தமிழ் நாட்டிற்கு வர வேண்டிய தொழிற்சாலைகள் வரவில்லை. தமிழ் நாட்டில் தொழிற்சாலைகள் வளரவில்லை. கிடைக்க வேண்டிய கலர் பிலிம் தொழிற்சாலைகூட வேறு மாநிலத்திற்குப் போய் விட்டதோ என்ற அச்ச உணர்வு ஏற்பட்டிருக்கிறது. என்றாலும் இதற்கு என்று ஒரு தொழில் அமைச்சர் நம்மிடையே இருக்கிறார். எனவேதான் இவர்களெல்லாம் தேவைதானா என்று எண்ணிப் பார்க்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். காடுகளிலும், கோயில்களிலும் உள்ள சொத்துக்கள் கொள்ளை அடிக்கப்படுகிற சூழ்நிலை தமிழகம் எங்கும் இருக்கிறது என்று மக்கள் வெளியே பேசிக்கொண்டிருக்கிறார்கள்.

(முற்பகல் 11-20)

ஆகவே இந்தக் காடுகள், கோயில்கள் ஆகியவற்றின் சொத்துக்களைக் கொள்ளையடிக்கும் சூழ்நிலை நாட்டில் வளர்ந்துவிட்ட பிறகு அறநிலையத் துறை அமைச்சர் தேவைதானா என்பதை இங்கே கேட்க விரும்புகிறேன். இதற்கெல்லாம் ஒட்டுமொத்தமாக தமிழ்நாடு எங்கும் ஊழலை வளர்ப்பதற்கு வளர்த்துக் கொண்டிருக்கும் முதலமைச்சர் தேவைதானா என்ற கேள்வியை மக்கள் கேட்கிறார்கள். நாங்கள் இப்படிச் சொன்னோம், அதையே நீங்களும் சொல்லுகிறீர்களே என்று கேட்பார்கள்.



1983 ஜனவரி 28]

மாண்புமிகு திரு. கா. இராசா முகமது: மாற்றுத் தலைவர் அவர்களே, குறுக்கிடுவதற்கு மன்னிக்க வேண்டுகிறேன். மாண்புமிகு உறுப்பினர் பேசிக் கொண்டு போவதைப் பார்த்தால், சட்டமன்றம், மேலவை போன்றவை ஆகியவையே தேவையில்லை என்று சொல்லிவிடுவாரோ என்ற அச்சம் ஏற்படுகிறது. 'இன்னின்ன இடங்களில் இன்னின்ன தவறு நடந்திருக்கிறது, அதை இலாக்கா விசாரிக்கவில்லை, அமைச்சர் என்ன செய்து கொண்டிருக்கிறார்' என்று வேண்டுமானால் கேட்கலாம். அதை விட்டுவிட்டு 'அவர் தேவைதானா, இவர் தேவைதானா' என்று கேட்டால் எப்படி? இப்படிப் பேசிப் பேசித்தான் நாட்டு மக்கள் உங்களை அங்கே உட்கார வைத்திருக்கிறார்கள். மேலும் இப்படியே நீட்டித்தால், நீங்கள் தமிழ் நாட்டிற்கே தேவையில்லை என்ற நிலைமை ஏற்படலாம். குற்றச்சாட்டை தெளிவாகச் சொல்லவேண்டும். தொழில் அமைச்சர் என்ன செய்யவில்லை 'லெட்டர் ஆஃப் இன்டென்ட்' எப்போது கேட்டிருக்கிறார்கள், மத்திய அரசு எப்போது கொடுத்திருக்கிறது என்று ஆக்கப் பூர்வமான கேள்வியைக் கேட்டால், பதில் சொல்லலாம். அப்படி இல்லாவிட்டால், மாண்புமிகு உறுப்பினர் திரு. வீரபாண்டி ஆறுமுகம் தேவைதானா என்ற கேள்வி வந்துவிடும் இதெல்லாம் தேவைதானா? இதை இதைத் தவிர்க்கலாம் என்று சொன்னால், அதைத் தவிர்க்க அரசு நிச்சயமாக முன்வரும்.

திரு. சோ. ஆறுமுகம்: இதே அவையில் தொழில் மானியக் கொள்கை விளக்கக் குறிப்பின் மீது பேசியிருக்கிறோம். இப்போது கொள்கைக் குறிப்பு என்ற அடிப்படையிலே ஒட்டுமொத்தமாகச் சொல்கிறேனே தவிர, வேறு ஒன்றுமில்லை. எங்களாலே குற்றம் சாட்ட முடியும். ஆதாரம் இல்லாமல் ஓடிவிடுகிற நிலைமையில் நான் இல்லை. ஆதாரங்கள் இருக்கின்றன என்பதை மட்டும் மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு நினைவு படுத்த விரும்புகிறேன். பேசிப் பேசித்தான் மக்கள் எங்களை இங்கே அமர்த்தியிருக்கிறார்கள் என்று சொன்னார். எவ்வளவு காலம் அமைச்சர் அவர்கள் அங்கே அமர்ந்திருக்கப் போகிறார்கள் என்பதை காலப் போக்கிலே பார்க்கப் போகிறேன்.

மாண்புமிகு திரு. கா. இராசா முகமது: அமைப்புகள் என்பவை நிரந்தரமானவை. மனிதர்கள் வேண்டுமானால் மாறலாம். என்னைப் பொறுத்த வரையில், எவ்வளவு காலம் இருப்பேன் என்பதைப் பற்றி நான் கவலைப்படவில்லை. அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் குறைந்தபட்சம் 25 ஆண்டுக் காலத்திற்கு ஆட்சிப் பொறுப்பில் இருக்கும்.

**திரு. சோ. ஆறுமுகம்** : மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு ஜோசியத்தில் நம்பிக்கை போல இருக்கிறது.

**மாண்புமிகு திரு. கா. இராசா முகமது** : மாண்புமிகு உறுப்பினர் ஜோசியம் பார்ப்பதால்தான் நான் பதில் சொல்லுகிறேன்.

**திரு. சோ. ஆறுமுகம்** : ஜோசியம் பார்க்கும் பாரம்பரியத்தை, இயக்கத்தைச் சேர்ந்தவன் அல்ல நான். 25 ஆண்டுக் காலம் உறுதி என்று அமைச்சர் சொன்ன காரணத்தாலே, ஏதாவது ஜோசியம் பார்த்தாரோ என்று நினைத்தேன். மற்றும் அவருடைய தலைவர் மூகாம்பிகை கோயிலையும், சங்கராச்சாரியாரையும் வணங்குகிறார் என்ற அடிப்படையிலே இவரும் பார்த்திருப்பாரோ என்று நம்பிப் பேசினேன்.

**மாண்புமிகு திரு. கா. இராசா முகமது** : இது தனிப்பட்ட முறையில் நம்பிக்கையைப் பொறுத்தது. கடவுள் நம்பிக்கை இல்லை என்று திராவிட முன்னேற்றக் கழகம் சொல்லிக் கொண்டிருப்பதாக நான் கருதவில்லை. அண்ணா அவர்களும் "ஒன்றேகுலம், ஒருவனே தேவன்" என்றுதான் சொன்னார். அந்த இயக்கத்திலே உள்ள பலபேர் பள்ளிவாசல், சர்ச், கோயில்களுக்குச் செல்கிறார்கள். ஆகவே தி.மு. கழகம் கோயில்களில் நம்பிக்கை இல்லை என்று வலியுறுத்துகிறதா என்று அவர் சொன்னால், நாடு தெரிந்துகொள்ள வசதியாக இருக்கும். முஸ்லீம், கிறிஸ்துவ, இந்து கடவுள்கள் இல்லை என்ற கொள்கையை திராவிட முன்னேற்றக் கழகம் வலியுறுத்துகிறதா, அதை நம்புகிறதா என்பதைச் சொல்லலாம்.

**திரு. சோ. ஆறுமுகம்** : தந்தை பெரியார் அவர்கள், அண்ணா அவர்கள் சொன்ன கருத்தின் அடிப்படையிலே திராவிட முன்னேற்றக் கழகம் இன்றைக்கும் உறுதியாக இருக்கிறது. "ஒன்றே குலம் ஒருவனே தேவன்" என்று சொல்லுவதற்கே காரணம், ஆண்டவன் பெயராலே நம்பிக்கை கொண்டு பல தெய்வங்களைக் கும்பிட்டுக் கொண்டு சாதியின் அடிப்படையிலே செல்வதை விட அனைவரும் ஒரே கொள்கையின் அடிப்படையிலே செல்ல வேண்டும் என்ற எண்ணத்தின் அடிப்படைதான். அண்ணா அவர்கள் கூட ஆண்டவன் ஒருவன் உண்டு என்று சொன்னதாக வரலாறு கிடையாது.

**மாண்புமிகு திரு. கா. இராசா முகமது** : அப்படிப்பட்ட கொள்கை கொண்டவர்கள் முஸ்லீம்கள் நடத்துகிற மீலாடி நபி விழாவிலும், மற்ற மதவாதிகள் நடத்தும் விழாக்களிலும் கலந்து கொள்ளாமல் இருக்கலாம்.



"ஆண்டவனை நம்புகிறவன் முட்டாள், வழிபடுகிறவன் முட்டாள்" என்று நம்புகிறவர்கள் முஸ்லீம்கள் நடத்தும் விழாவில் பேசுகிறார்கள் என்று பார்க்கும்போதுதான் சந்தேகம் வந்திருக்கிறது.

**திரு. சோ. ஆறுமுகம்** : முஸ்லீம்கள் நடத்துகிற விழாவில் திராவிட முன்னேற்றக் கழகம் கலந்துகொள்கிறது என்றால், எந்தவித மத வித்தியாசமும் இல்லாமல் ஒரே தெய்வத்தை வணங்கக் கூடிய காரணத்தால், அவர்களைப் பாராட்டக் கூடிய வகையிலே கலந்து கொள்ளுகிறார்களே, தவிர, அதை உற்சாகப்படுத்த வேண்டும் என்பதற்காக அல்ல என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. கா. இராசாமுகமது** : பாராட்ட வேண்டும் என்றால், மறைமுகமாக உற்சாகப்படுத்துகிறார்கள் என்றுதானே அர்த்தம். அதை வரவேற்கக் கூடியவன் நான், மறுக்கக் கூடியவன் அல்ல. மத நம்பிக்கை தனிப்பட்டவர்களுடைய கொள்கை. மாண்புமிகு உறுப்பினருடைய தலைவர் தன்னுடைய குங்குமம் பத்திரிகையை வெளியிடும்போது, சங்கராச்சாரியார் படத்தைப் போட்டு விளம்பரப்படுத்தினார். அதையெல்லாம் பேச ரொம்ப நேரமாகுமா? சங்கராச்சாரியார் படத்தைப் போட்டால், விற்பனை ஆகுமென்று நம்பியிருக்கலாம். குங்குமம் பத்திரிகையில் சங்கராச்சாரியார் படம் வந்ததா இல்லையா? அதனுடைய உரிமையாளர் யார்?

**திரு. சோ. ஆறுமுகம்** : பத்திரிகைகளில் நாங்கள்கூட சினிமா நடிகைகளின் படங்களை முகப்பு அட்டைகளில் போடுகிறோம். அதற்காக நாங்கள் நடிகையின் ரசிகர்களாக ஆகிவிடுவோமா என்று கேட்க விரும்புகிறேன். பத்திரிகைகளின் அட்டைப் படத்திலே போடுவதைப்பற்றிச் சொல்லுவது கொள்கை ரீதியான தர்க்க ரீதியான வாதமாக இல்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அ.தி.மு.க. ஆட்சியில் தொழில் வளரவில்லை. மின்சார நிலைமை மோசமாகி மிகவும் சீர்குலைவு அடைந்துவிட்டது, சட்டம் ஒழுங்கு பாதுகாக்கப்படவில்லை, பொதுமக்களுக்குப் பாதுகாப்பான சூழ்நிலை இல்லை. உணவுப் பஞ்சம் ஏற்பட்டிருக்கிறது. இப்படிப்பட்ட நெருக்கடியான சூழ்நிலை தமிழகத்திலே இருக்கிறபோது, தமிழ் நாட்டினுடைய முதலமைச்சர் கோட்டைக்கு நாற்பது நாட்களாக வரவில்லை என்று பத்திரிகையில் செய்தி வருகிறது. அப்படியானால், இந்த மக்களுடைய பிரச்சினைகளை எந்த அளவுக்கு இந்த அரசு அறிந்திருக்கிறது என்பதை நாங்கள் தெரிந்துகொள்கிறோம். இவ்வளவு கடுமையான பிரச்சினைகள் இருக்கும்போது,

[1983 ஜனவரி 28

அமைச்சரவையைக் கூட்டி பிரச்சினைகளைத் தீர்க்க பரிகாரம் காண வேண்டாமா என்பதுதான் திராவிட முன்னேற்றக் கழகத்தின் கேள்வியாக இருக்கிறது என்பதை இங்கே நான் வைக்க விரும்புகிறேன்.

மாண்புமிகு அமைச்சர் ஒருவர் மதுரையில் பேசியிருக்கிறார். "நாதன் முடியிலிருந்த கருணாநிதி என்ற நாகப் பாம்பை எடுத்து தண்ணீரில் போட்டுவிட்டோம். விஷப் பல் பிடுங்கப்பட்ட தண்ணீர் பாம்பு கலைஞர்" என்று பேசியிருக்கிறார். அவர் இப்போது நாதன் முடியில் உட்கார்ந்திருக்கிறார். இப்போது விசேஷப் பாம்பு. எவ்வளவு காலம் அவர் அங்கே இருப்பார் என்பது ஒரு கேள்விக்குறியாக இருந்தாலும், அதை நாங்கள் வாதத்திற்காக ஒத்துக்கொள்கிறோம். எங்களுடைய தலைவர் விஷப் பாம்பு அல்ல, தண்ணீர் பாம்புதான். யாரையும் தீண்டாத, யாருக்கும் துன்பத்தை விளைவிக்காத, ஆனால் மக்களுடைய பிரச்சினைகளை கவனத்திலே கொண்டிருக்கக் கூடியவர் எங்களுடைய தலைவர் என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

"ஏசியாட் 82" விளையாட்டு முடிந்திருக்கிறது. வசதி வாய்ப்பு பெற்றவர்கள் அந்த விளையாட்டைப் பார்க்கச் சென்றதைப் பார்த்தோம். பார்த்து மகிழ்ந்திருக்கிறார்கள், அதிலே தவறு இல்லை. ஆனால் தமிழ் நாட்டு முதலமைச்சரோடு இன்னொருவர் சென்று உட்கார்ந்து அதைப் படம் பிடித்து பத்திரிகையில் பிரசுரம் செய்திருப்பது முதலமைச்சருக்கு மரியாதை தரக்கூடிய விஷயமா என்பதை இந்த அவையின் உறுப்பினர் என்ற முறையில் நான் இங்கே கேட்க விரும்புகிறேன்.

திரு. எஸ். ஆர். இராதா : மாற்றுத் தலைவர் அவர்களே, நேற்றைய தினம் மாற்றுத் தலைவராக இருந்த திரு. இராமமூர்த்தி அவர்கள் இந்த அவையில் ஒரு ரூலிங் கொடுத்தார்கள். வெளியே பேசுவதையெல்லாம் அவையிலே பேசுவது நல்லதல்ல என்று ரூலிங் கொடுத்திருக்கிறார். அவரை உட்கார வைத்துக் கொண்டே வெளியே வருகிற செய்தியைப்பற்றிப் பேசுவது என்பது எவ்வளவு தூரம் சரியாக இருக்கும் என்று மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆறுமுகம் அவர்கள் தெரிந்துகொள்ள வேண்டும்.

மாற்றுத் தலைவர் (திரு. சி. இராமலிங்கம்) : மாண்புமிகு உறுப்பினர் சப்ஜெக்டுக்கு வர வேண்டும்.



1983 ஜனவரி 28]

திரு. சோ. ஆறுமுகம் : முக்கிய பிரச்சினைகளில் இருந்து ஆட்சியாளர்கள் எப்படி நழுவுகிறார்கள் என்பதைச் சுட்டிக் காட்டுவதற்காகத்தான் இதையெல்லாம் சுட்டிக்காட்டுகிறேன். அதே அம்மையார் பிரஸ் கிளப்பைக் கூட்டிப் பேசியிருக்கிறார்கள்.

திரு. எஸ். ஆர். இராதா : சேலத்திலே சில சம்பவங்கள் நடைபெற்றிருக்கின்றன. அதையெல்லாம் நாங்கள் பேச வேண்டிய நிலை வரும். அதையெல்லாம் பேசக் கூடாது.

(முற்பகல் 11-30)

திரு. சோ. ஆறுமுகம் : தலைவர் அவர்களே, சேலத்திலே சில சம்பவங்கள் நடைபெற்றிருப்பதாகச் சொல்லி என்னை பயமுறுத்தி உட்கார வைத்துவிடலாம் என்று நினைக்கிறார்கள். அப்படி தைரியம் இருந்தால், அப்படி உண்மைகள் இருந்தால், அவர்கள் பேசுகின்றபோது சொல்லட்டும். அதற்கு நான் பதில் சொல்கின்றேன். அதற்குத் தயாராக இருக்கிறேன். இதை எல்லாம் பேசி திசை திருப்பவேண்டாம் என்று சொல்கிறேன். அந்தக் கட்சியிலே இருப்பவர்கள் யோசனை சொல்லியிருக்கிறார்கள். அதை அமைச்சர் அவர்கள் ஏற்றுக்கொள்ளக்கூடாதா? சொல்கிறேன், கேளுங்கள். செல்வி ஜெயலலிதா அவர்கள் அ.தி.மு.க. கட்சி தொடங்கி 10-வது ஆண்டு விழாவைக் கொண்டாடினார்கள். நல்ல விஷயங்கள் சொல்லும்போது . . .

டாக்டர் இரா. சனார்த்தனம் : அவையில் இல்லாத ஒருவர் பற்றி இப்போது தகவல் சொல்வது சரியல்ல.

திரு. சோ. ஆறுமுகம் : சொல்லிவிடுகிறேன். அதற்குள் ஏன் அவசரப்படுகிறீர்கள்? அவர்கள் பேசுகின்றபோது ஒரு அருமையான யோசனை சொன்னார்கள். இன்றைக்கு நகரிலே தண்ணீர் இல்லை. கர்நாடக மாநிலம் நமக்கு வஞ்சனை செய்தது. அதற்காக அவர்களிடத்திலே கெஞ்சத் தேவையில்லை. அப்படி மத்திய சர்க்கார் அதிலே தலையிடவில்லை. நமக்குத் தண்ணீர் விடுவதற்கு 1924 ஆம் ஆண்டு ஒப்பந்தத்தை அவர்கள் நிறைவேற்றவில்லை என்றால், தமிழக மக்களுக்குப் பாதுகாப்பு அளிக்காது என்றால், அவர்களுடைய தயவே தேவையில்லை. நான் ஒரு யோசனை சொல்லுகிறேன். அது என்னவென்றால் தமிழ்நாட்டிலே கடல் பகுதி இருக்கிறது. அந்தப் பகுதியிலே எல்லாம் எண்ணெய் வளங்கள் இருக்கின்றன. அந்த எண்ணெய் வளங்களையெல்லாம் எடுத்துக் கொண்டுபோய், பெருவாரியாக வெளிநாடுகளிலே விற்று, அங்கேயிருந்து ஐஸ் கட்டிகளை வாங்கிக்கொண்டுவந்து இங்கே அணைகளிலே போட்டு நிரப்பி தண்ணீராக்கி

பாசன வசதிகளையும், குடிநீர் வசதிகளையும் செய்துகொள்ளலாம்' என்று சொன்னார்கள். ஒரு நல்ல யோசனையைச் சொன்னார்கள். தொழில் அமைச்சர் அவர்கள் வேண்டுமென்றால் பரிசீலனை செய்து பார்க்கலாம். சாத்தியமில்லையா என்று பார்க்கலாம். மாண்புமிகு நீர்ப்பாசன அமைச்சர் அவர்கள் கூட இருக்கிறார்கள். அவர்கள் கூட யோசிக்கலாம்.

மாண்புமிகு திரு. சு. திருநாவுக்கரசு : மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, சட்டமன்றத்திலே அல்லது மேலவையிலே பேசுகிறபோது, வெளியே பேசிய பேச்சை இங்கே சொல்லி அதுவும் சம்பந்தப்பட்ட பிரச்சினையாக இருந்தாலும்கூட பரவாயில்லை—ஆனால் இங்கே பதில் சொல்கின்ற வாய்ப்பே இல்லாதவர்கள் கூறியதாக, செல்வி ஜெயலலிதா அவர்கள் ஏதோ சொன்னதாக,, அதைப் பத்திரிகையிலே போட்டிருப்பதாக—ஜல் கட்டி நிரப்பி தண்ணீர் விடவேண்டுமென்று சொன்னதாக நான் எதுவும் பார்க்கவில்லை, அவர் எந்தப்பத்திரிகையிலே பார்த்தார் என்பது தெரியவில்லை—ஏதோ பத்திரிகையிலே பார்த்ததை வைத்துக்கொண்டு இப்படி பதில் சொல்கின்ற வாய்ப்பு இல்லாத அவர் பேசிய பேச்சைப்பற்றி இங்கே வந்து பேசுவது முறைதானா என்பதை யோசிக்க வேண்டும். நமக்கு ஒன்று தெரிகிறது. அவர் என்ன பேசினாலும் அவர் பேச்சுக்கு செல்வி ஜெயலலிதா பதில் சொல்ல வேண்டுமென்று துடிக்கிறார்கள். அவர் போகின்ற இடத்திற்குத் தொடர்ந்து போகமுடியாது என்பதால் அப்படிப் பேசுகிறார்கள். தொடர்ந்து அவர்கள் விரும்பினால், பேசட்டும்.

திரு. சோ. ஆறுமுகம் : யாருடைய பதிலுக்காகவும் நாங்கள் காத்துக் கொண்டிருக்கவில்லை. திராவிட முன்னேற்றக் கழகத்தினர் அப்படி இருக்க முடியாது. வேண்டுமென்றால் அதிலே அமைச்சர் அவர்களுக்குத் தனி அக்கறை இருக்கலாம். அது வேறு. அவர்கள் சொன்னதைத் தான் நான் சொன்னேன். ஒரு கட்சியிலே சத்துணவுத் திட்டத்திலே மேல்மட்டக் குழு உறுப்பினர் சொல்லும்போது, அதைப் பற்றி நான் பேசாமல் எப்படி இருக்க முடியும்? இன்னொன்று மாண்புமிகு அமைச்சர் சொல்கின்றார். திரு. இராகவானந்தம் அவர்கள் குடிநீர் வாரியத் தலைவர் என்று கருது கிறேன். அவர் தொழிலாளர் நலத் துறை அமைச்சர். அவர் கூட சொல்கிறார். இங்கே தண்ணீர் இல்லை என்பதால் மெட்ராசுக்கு இரண்டு நாட்களுக்கு ஒரு முறை, சேலத்திற்கு 3 நாளைக்கு ஒரு முறை, ஆத்தூரிலே மூன்று நாட்களுக்கு ஒரு முறை தான் தண்ணீர் விடுவதாக பத்திரிகையிலே செய்தி வருகிறது.



மாண்புமிகு திரு. சு. திருநாவுக்கரசு : மாண்புமிகு அங்கத்தினர் அவர்கள் பேசுகின்றபோது கவனித்துக்கொண்டிருக்கிறேன். அமைச்சர்கள் பெயர் களை எல்லாம் சொல்லி இவர்கள் எல்லாம தேவையா என்கிற மாதிரி பேசு கிறார். வேண்டுமென்றே பேசுகிறார்கள் என்று கருதுகிறேன் அல்லது slip of the tongue ஆ என்று தெரியவில்லை.

திரு. சோ. ஆறுமுகம் : அந்த அமைச்சர் பூமிக்கு அடியில் மழைக்காலங் களில் வருகின்ற தண்ணீரைத் தேக்கி பயன்படுத்தலாம் என்று சொல்லி யிருக்கிறார்கள். இந்தப் பிரச்சினையைத் தீர்ப்பதற்கு, பூமிக்கடியிலே உள்ள தண்ணீரைப் பயன்படுத்தலாமா என்று உலக வங்கியிலே நாங்கள் பேச்சு வார்த்தை நடத்திக்கொண்டிருக்கிறோம் என்றும் அப்படி ஒரு திட்டம் இருக்கிறது என்றும் சொல்கிறார். உடனடித் தேவைகளைக் கவனிக்க செம்பரம்பாக்கத்தில் தண்ணீர் இல்லை, புழல் ஏரியில் இல்லை. சென்னை மாநகரத் தண்ணீர் பஞ்சத்தைப் போக்குவதற்கு ஆழ் கிணறுகள் தோண்டச் செய்திருக்கலாம். இந்தப் பிரச்சினையை தீர்க்க முனைப்பான போர்க்கால நட வடிக்கைகளை எடுத்திருக்கிறோம் என்று சொல்வதற்குப் பதிலாக இப்படிச் சொல்கிறார்.

மாண்புமிகு திரு. கா. இராசா முகமது : மாற்றுத் தலைவர் அவர்களே, மன்னிக்க வேண்டுகிறேன். ஏற்கெனவே இப்போது போர்க்கால நடவடிக்கை யாக இந்த அரசு என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறது என்பதை முதலிலே நாங்கள் அறிவித்திருக்கிறோம். மெட்ரோ வாட்டர் மூலமாக 400 புதை கிணறுகள் இங்கே போட்டுக்கொண்டிருக்கிறோம். அதுபோலவே கிரவுண்ட் வாட்டர் செல், பாசனத் துறையில் இருக்கக்கூடிய நிலத்தடி நீர் பிரிவின் மூலமாக பஞ்சட்டி போன்ற பகுதியிலுள்ள நிலத்தடி நீரை மேற்கொண்டுவந்து ரெட்ஹில்ஸ் போன்ற பகுதிகளுக்கு அனுப்பி அதை குடிநீருக்குப் பயன்படுத்த ஏற்பாடு செய்திருக்கிறோம். நிலத்தடிப் பிரிவினருக்குச் சொந்தமான கிட்டத்தட்ட 9 ராட்சத இயந்திரங்களை இப்போது தமிழகத்தின் பல்வேறு பகுதிகளிலிருந்து கொண்டுவந்து அந்த வேலை நடைபெற்றுக்கொண்டிருக் கிறது. ஏற்கெனவே உள்ள குழாய்களைப் பராமரித்துக்கொண்டிருக் கிறோம். இது குறித்து மாண்புமிகு அமைச்சர்களும் சம்பந்தப்பட்ட அலுவலர்களும் அறிக்கைகள் கொடுத்திருக்கிறார்கள். அந்த வேலை நடந் துகொண்டிருக்கிறது. இதற்கு அப்பாற்பட்டு இரண்டாவது கட்டமாக 'வருமுன் காக்க' என்ற அடிப்படையிலே அமைச்சர் அவர்கள் சொல்லியிருக் கின்ற ஒரு பகுதியை விட்டுவிட்டு, இன்னொரு பகுதியை மட்டும் சொல்லி,

ஏதோ இந்த அமைச்சர்களுக்கோ அரசுக்கோ அக்கறை இல்லாதது போல தேவையில்லாத குற்றச்சாட்டுகளைச் சொல்வது சரியல்ல. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அப்படிப் பேசக்கூடாது என்று கேட்டுக்கொள்கிறேன்.

**திரு. சோ. ஆறுமுகம்:** ஆக அந்த அடிப்படையிலே உடனடியான தேவைகளைப் பூர்த்தி செய்வதற்கு ஆட்சி பீடத்திலே இருப்பவர்கள் கவனம் செலுத்த வேண்டும் என்பதற்காகச் சொல்கிறேன். புழல் ஏரியில் உட்கார்ந்து வினை வாசித்துக்கொண்டு இருக்கக்கூடாது என்று சொல்கிறேன். வேறு ஒன்றுமில்லை.

இன்றைக்கு ஐ.ஏ.எஸ். அதிகாரிகள் இந்த ஆட்சியிலே 7, 8 பேர்கள் ராஜிநாமா செய்திருக்கிறார்கள். ஏன் அப்படிச் செய்திருக்கிறார்கள் என்று கேட்டால், சமீபத்திலே விலகிய ஒரு ஐ.ஏ.எஸ். அதிகாரி மனச்சாட்சிப்படி இந்த ஆட்சியில் என்னாலே பணியாற்ற முடியவில்லை என்று சொல்லியிருக்கிறார்கள் என்று பத்திரிகையிலே செய்தி வந்திருக்கிறது.

**மாற்றுத் தலைவர் (திரு. சி. இராமலிங்கம்):** அங்கத்தினர் அவர்கள் 37 நிமிடங்களாகப் பேசுகிறார்கள்.

**திரு. சோ. ஆறுமுகம்:** இடையிலே குறுக்கீடுகள் இருந்தன.

**மாற்றுத் தலைவர் (திரு. சி. இராமலிங்கம்):** இன்னும் 3 நிமிடங்கள் பேசலாம்.

**திரு. சோ. ஆறுமுகம்:** "மனச்சாட்சிப்படி இந்த ஆட்சியிலே எங்களாலே வேலை செய்யமுடியவில்லை. பணியை நிறைவேற்ற முடியவில்லை. பொதுமக்களுக்கு எங்களுடைய பணியைச் செய்ய முடியவில்லை" என்ற குற்றச் சாட்டு வருகிறது. இன்றைக்கு பல ஐ.ஏ.எஸ் அதிகாரிகள் அரசாங்கத்தின் தலையீடு காரணமாக, மந்திரிகள் தலையீடு காரணமாக நியாயத்தின் அடிப்படையிலே கடமையை நிறைவேற்ற முடியவில்லை என்று ராஜிநாமா செய்திருக்கிறார்கள். உயர்நீதி மன்றத்தில் இன்றைக்கு நீதிபதிகள்...

**மாண்புமிகு திரு. கா. இராசா முகமது:** மன்னிக்கவேண்டும். மாற்றுத் தலைவர் அவர்களே, இந்த குற்றச்சாட்டுக்காக மட்டுமே நான் சொல்ல விரும்பவில்லை. மக்கள் ஒரு நம்பிக்கை வைத்து ஒரு கட்சியைத் தேர்ந்தெடுத்து அனுப்புகிறார்கள். மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்கள் ஆட்சியை நடத்துகின்றபோது, அவர்கள் என்ன கொள்கைகளை நிறைவேற்ற வேண்டுமென்று சொல்கின்றார்களோ அவைகளை அவர்கள்



நிறைவேற்ற வேண்டும். அதற்குத்தான் ஐ.ஏ.எஸ். அதிகாரிகளே தவிர, அவர்களுக்கு என்று தனிக் கொள்கை இருக்க முடியாது. இந்தப் போக்குகளை கட்சிகளுக்கு அப்பாற்பட்ட ஒன்றாகக் கடைப் பிடித்தாக வேண்டும். இல்லையென்று சொன்னால் அதிகார வர்க்கத்தினுடைய ஆட்சிதான் தொடர்ந்து நடந்துகொண்டிருக்கும். தேர்தல்கள் தேவையில்லை. ஏற்கெனவே உள்ளாட்சி தேர்தல்கள் நடத்தவேண்டும் என்று பேசுகிறார்கள். மக்களுடைய பிரதிநிதிகள் இருந்தால்தான், பிரச்சினைகளைத் தீர்க்க முடியும் என்று சொல்கிறார்கள். காரணம அதிகாரிகளால் மட்டும் அதைச் செய்துவிட முடியாது. அந்தக் கொள்கையை நானும் ஏற்றுக் கொள்கிறேன். இங்கே ஒவ்வொருவரும் ஒவ்வொரு காரணத்தைச் சொல்லலாம். மனச்சாட்சி என்றால் அவர்கள் சொந்த மனச்சாட்சியாகவும் இருக்கலாம். அவர்களுக்கு நாட்டு நலனிலே எவ்வளவு அக்கறை இருக்கிறது என்பதைப் பார்த்துக்கொண்டுதான் இருக்கிறோம். என்ன காரணத்திற்காக ராஜிநாமா செய்தார்கள் என்பதைப்பற்றி தேவைபடுமானால், அரசு நடந்த விஷயங்களைச் சொல்லத் தயாராக இருக்கிறது. அந்த அதிகாரியைப் பற்றி நான் நன்கு அறிவேன். என்னுடைய இலாகாவிலே அநுபாதிரி சம்பவம் நிகழ்ந்து நாங்கள் விவாதித்திருக்கிறோம். மாண்புமிகு எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் உறுப்பினராக இருக்கக்கூடிய என்கோபெட்டில் அதிகாரிகள் எப்படி நடந்துகொள்கிறார்கள் என்று எழுதிக்கொடுத்திருக்கிறார்கள். எங்களிடம் இருக்கிறது. நாம் எதிர்க் கட்சியிலே இருக்கிறோம் என்பதற்காகப் பேசி அதிகார வர்க்கத்தின் ஆட்சியை நிலைநிறுத்த வேண்டுமென்று தயவுசெய்து கேட்க வேண்டாம. தவறு என்ன? என்ன காரணம் சொல்லி அவர்கள் வெளியே சென்றிருக்கிறார்கள்? அவர்கள் தைரியமாகச் சொல்லட்டும். அரசு பதில் சொல்லும். அதிலே தவறுகள் இருக்குமானால், அரசு பொறுப்பு எடுத்துக்கொள்ளும். ஆனால் தேர்ந்தெடுக்கப்பட்ட முதலமைச்சர் அவர்கள் கொள்கைதான் அதிகாரிகள் கொள்கையாக இருக்க முடியும். அதிகாரிகளுக்கு தனிக் கொள்கை இருக்க முடியாது என்பதை நான் இந்த நேரத்திலே சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

**திரு. சோ. ஆறுமுகம்:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள் விளக்கத்திற்கு நன்றி. அப்படி ஒரு அறிக்கை வருகிறபோது, உடனே அரசாங்கம் என்ன காரணத்தினாலே அவர் ராஜிநாமா செய்தார். என்ற காரணத்தைத் தெளிவு படுத்தியிருக்க வேண்டும்.

மாண்புமிகு திரு. கா. இராசா முகமது : ஏதாவது குற்றச்சாட்டு சொல்லி, காரணத்தைச் சொல்லி, "இப்படித் தலையீடு செய்ததால் என்னால் பணியாற்ற முடியவில்லை" என்று சொன்னால பரவாயில்லை. எத்தனை எத்தனையோ அதிகாரிகள் வருகிறார்கள். அவர்கள் ஏதோ மாமனார் இடம் இந்த ஆட்சி என்று நினைக்கிறார்கள். அவர்கள் இஷ்டப்படி வேலை செய்ய வேண்டுமென்று நினைக்கிறார்கள். சம்பிரதாயங்களை மீறி யாராவது ஒருவரை நியமித்துவிடுவது. நாம் ஏதாவது ஏழை ஒருவருக்கு வேலைவாய்ப்பு கொடுக்கவேண்டுமென்றால், எம்ப்ளாய்மெண்ட் ஆபிசிலேயிருந்து வரவேண்டியிருக்கிறது. ஆனால் ஆயிரம் ரூபாய் சம்பளத்தில் ஒருவரை நியமித்துவிடலாம், அது ராடிபிகேஷனுக்கு வரும். ஏன் நியமித்தார் என்றால் என்னுடைய மனச்சாட்சி பாதிக்கப்படுகிறது என்று ஒவ்வொருவரும் சொன்னால், இதற்கெல்லாம் அரசு பதில் சொல்லிக் கொண்டிருக்காது. அவர்கள் என்ன குற்றச்சாட்டு சொல்லியிருக்கிறார்கள் என்று சொல்லட்டும். நிச்சயமாக அதை மறுக்க அரசு கடமைப்பட்டிருக்கிறது. மறுத்து அறிக்கை வெளியிடும்.

(மாற்றுத் தலைவர் திரு. க. இராமமூர்த்தி தலைமை)

(முற்பகல் 11-40)

திரு. சோ. ஆறுமுகம் : மாற்றுத் தலைவரவர்களே, ஒன்றை மட்டும் சொல்லி முடித்துக்கொள்கிறேன். தமிழ் நாட்டில் இன்றைக்கு சட்டம் ஒழுங்கு பாதுகாக்கப்படவில்லை. காவல் துறை பொதுவாக, சுயேச்சையாக அனைத்து மக்களுக்கும் ஒரு பொது நண்பனாக இருந்து பணியாற்ற வேண்டிய துறை. இன்று அது ஆளும் கட்சியின், அதிகார வர்க்கத்திற்கு உட்பட்டு, அடியாட்களாக தமிழகத்தில் மாறியிருக்கிறது என்று சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். சமீபத்திலே திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய கழக அமைப்பினுடைய தேர்தல் நடைபெற்றது. அப்போது எங்களுடைய தலைவர், கலைஞர் அவர்கள் தொலைபேசி மூலமாகப் பேசிய செய்தியை டேப் செய்து, அந்த டேப்பை எங்களுடைய இயக்கத்தில் உள்ள ஒருவருக்குப் போட்டுக் காண்பித்து, எங்களுக்குள்ளே கருத்து மாறுபாடு ஏற்படச் செய்து, அந்தக் கட்சிக்கு இழுப்பதற்கு ஒரு உயர்தர போலீஸ் அதிகாரியாக இருப்பவர் செயல்பட்டதை மட்டும் எப்படி வரவேற்கிறீர்கள் என்று அறிய விரும்புகிறேன்.





மாண்புமிகு திரு. சு. திருநாவுக்கரசு : மாற்றுத் தலைவர் அவர்களே, இப்படி ஒரு குற்றச்சாட்டு ஏற்கெனவே பத்திரிகையில் வந்ததற்கு சம்பந்தப்பட்ட அதிகாரியே அப்படி நடைபெறவில்லை என்று அறிக்கை கொடுத்து, அது எல்லாப் பத்திரிகைகளிலும் வந்திருக்கிறது. அதை மாண்புமிகு உறுப்பினரவர்களுக்கு நினைவுபடுத்துகிறேன்.

திரு. சோ. ஆறுமுகம் : சம்பந்தப்பட்ட, இந்த அவையினுடைய உறுப்பினரே, 'போட்டு காண்பித்தார்கள்' என்று அறிக்கை விட்டார் என்பதை நான் தெரிவிக்க விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. திருநாவுக்கரசு : மாண்புமிகு உறுப்பினரவர்களின் கவனத்திற்கு ஒன்றைத் தெரிவிக்கிறேன். அதை மறுத்து, நான் அப்படிச் சொல்லவில்லை என்று அவரே மறுப்பு அறிக்கை விட்டிருக்கிறார். அதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. சோ. ஆறுமுகம் : அதை எந்தச் சூழ்நிலையில் விட்டார் என்பதும் எங்களுக்குத் தெரியும்.

மாண்புமிகு திரு. சு. திருநாவுக்கரசு : முதலிலே விட்ட அறிக்கையை எந்தச் சூழ்நிலையில் விட்டார் என்பதுதான் சந்தேகத்திற்குரியது.

மாற்றுத் தலைவர் (திரு. க. இராமமூர்த்தி) : இந்த அவை உறுப்பினர் ஒருவரைப் பற்றிய தகவல் என்பதால், ஒன்று அவர் இருக்கும்போது இந்தப் பிரச்சினை வரலாம் அல்லது இந்தப் பிரச்சினையை இந்த அவையிலே எழுப்பாமல் இருப்பது நல்லது. இன்னொரு உறுப்பினர் தொடர்பான செய்தி அல்லது சம்பவம் என்பதால் அவர் இருக்கின்றபோது இந்தப் பிரச்சினையை எழுப்பலாம் அல்லது இந்த அவையிலே இன்னொரு உறுப்பினரைப் பற்றிய விவாதம் கொஞ்சம் தேவையற்றது என்று கருதுகிறேன்.

திரு. சோ. ஆறுமுகம் : மாண்புமிகு மாற்றுத் தலைவரவர்களே நீங்கள் வழங்குகின்ற தீர்ப்பை நான் மதிக்கிறேன். ஏற்றுக்கொள்கிறேன். இது ஒரு முன் உதாரணமாகிவிடக்கூடாது என்பதற்காக. ஏனென்றால் மாண்புமிகு உறுப்பினர் திரு. சீதாபதி இந்த அவையின் உறுப்பினர் அவர் வராவிட்டால் நாங்கள் என்ன செய்வது?

மாற்றுத் தலைவர் (திரு. க. இராமமூர்த்தி) : இது தொடர்பாக பல அறிக்கைகள் வந்திருக்கின்றன. இந்த அவையினுடைய உறுப்பினர்கள் எத்தனை பேர்களுக்கும் தெரியும். அதுபற்றி பல அறிக்கைகள் வந்திருக்

கின்றன. ஒரு அறிக்கை, அதற்கு மறுப்பு அறிக்கை, அதற்கு மறுப்பு அறிக்கை என்று பல அறிக்கைகள் வந்திருக்கின்றன. ஆகவே இது பற்றிய, இன்னொரு உறுப்பினர் பற்றிய, விவாதம் இப்போது தேவையில்லை.

**திரு. ம. சங்கரலிங்கம் :** மாற்றுத் தலைவரவர்களே, வெளியிலே இருக்கிறவர்களைப்பற்றி இந்த அவையிலே பேசக்கூடாது. அவர்கள் இங்கே வந்து சொல்ல வாய்ப்பு இல்லை. இந்த அவையில் உள்ள உறுப்பினர் ஒருவர் விடுத்த அறிக்கையைப்பற்றி விமர்சிக்கும்போது இப்போது அவர் அவையில் இல்லாவிட்டாலும், இனி வரும்போது அவர் பேச, கருத்து சொல்ல வாய்ப்பு இருக்கிறது. ஆகவே இந்த அவையிலே இப்படி ஒரு முன் உதாரணத்தை வரையறுத்துவிட்டால், நல்ல விவாதத்தைத் தொடர்ந்து நடத்த முடியாத நிலை வந்துவிடக்கூடுமென்ற அச்சத்தைத் தெரிவித்து, தங்களுடைய தீர்ப்பை மறுபரிசீலனை செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. சு. திருநாவுக்கரசு :** மாண்புமிகு மாற்றுத் தலைவரவர்கள் சொன்னது போன்று ஓர் உறுப்பினர் இல்லாத நேரத்தில்கூட அவர் சொன்ன கருத்தைப் பற்றி விமர்சிக்கலாம், அது ஏதாவது பொதுப் பிரச்சினைபற்றி இருக்குமானால். ஆனால் அந்த உறுப்பினரைப்பற்றி விமர்சிப்பது, அவர் சொன்னதை மறுத்துச் சொல்வது என்பது அவர் இல்லாத நேரத்தில் பொருத்தமாக இராது. அவர் அதற்குப் பதில் சொல்ல வாய்ப்பாக இராது என்று கூறி, மாண்புமிகு தலைவரவர்கள் சொன்ன தீர்ப்பு பொருத்தமாக இருக்குமென்று தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. ம. சங்கரலிங்கம் :** மாண்புமிகு அமைச்சரவர்களும், தாங்களும் அளிக்கிற விளக்க உரையும், தீர்ப்பும் இந்த அவையில் ஹெல்த்தி டிஸ்கஷன் நடக்க வேண்டுமென்று தருவதனால், அதில் என்னுடைய கருத்தையும் தெரிவிக்க விரும்புகிறேன் இந்த அவையில் ஒருவரைப்பற்றிப் பழி சொல்லக் கூடாது. ஆனால் ஒரு உறுப்பினருடைய அறிக்கை பற்றி விளக்கத்தைச் சொல்வதில் தவறு இருப்பதாக நான் நினைக்கவில்லை. அவர்கள் பேசும் போது, விளக்கம் தரும்போது இவர்கள் திருத்திக்கொள்ள வாய்ப்பு இருக்கிறது. இல்லாவிட்டாலும் ரிக்கார்ட், குறிப்பு இருக்கிறது. இந்த அவையில் ஹெல்த்தி டிஸ்கஷன் நடக்க அருள்கூர்ந்து தாங்கள் உதவி செய்யும் நிலையில் இதற்கு விளக்கம் தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.



**டாக்டர் இரா. சனார்த்தனம் :** மாண்புமிகு உறுப்பினர் திரு. சித்தாபதி அவர்கள் முதல் தேதி வருகிறார்கள். அதுவரை பொருத்திருந்து சொல்லலாம்.

**மாற்றுத் தலைவர் (திரு. க. இராமமூர்த்தி) :** அவையில் இல்லாத, அவையின் உறுப்பினர் பற்றிச் சொல்வதில் தவறில்லை. வெளியிலே பல அறிக்கைகள்—அறிக்கை, மறுப்பு அறிக்கை என்று வந்துவிட்டதால், இதில் வீணான சர்ச்சை தேவையில்லையே என்று கருதினேன். அதற்காக இன்னொரு உறுப்பினர் பற்றிய வாதம் கூடாது என்பதல்ல. அதுதான் தேவை என்றால், இன்னொரு உறுப்பினர் வந்த பிறகும் அவரும் பதில் சொல்லும் அவசியம் ஏற்படும். எனவே விவாதத்தைத் தடை செய்வது என்பதல்ல. மாண்புமிகு உறுப்பினரவர்கள் மேற்கொண்டு பேசலாம்.

**மாண்புமிகு திரு. சு. திருநாவுக்கரசு :** மாற்றுத் தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினரவர்களின் கவனத்திற்கு ஒன்றைத் தெரிவிக்க விரும்புகிறேன். மாண்புமிகு உறுப்பினர் திரு. சித்தாபதி அவர்கள் விட்ட அறிக்கை ஒன்றுதான். பத்திரிகையில் வந்த செய்தியை மறுத்து 2, 3 அறிக்கைகள் விடவில்லை. முதலில் செய்தி வந்தது. காவல் துறை அதிகாரி தன்னிடம் டேப்பைப் போட்டுக் காட்டினார் என்று அவர் அவருடைய ஆதரவாளர்கள் மத்தியில் பேசியதாகச் செய்தி வந்தது. அது தவறு என்று அவர் அறிக்கை விட்டார். அவர் கையெழுத்திட்டு விட்ட அறிக்கை மறுப்பு அறிக்கைதான். பத்திரிகைகளில் அவர்கள் இஷ்டம்போல் போடலாம். அதை வைத்துக் கொண்டு பேசுவது, ஒரு உறுப்பினர் இல்லாத போது அவர் மறுத்ததை அவர் செய்தார் என்று குற்றச்சாட்டாக வலியுறுத்துவது தவறு என்று சொல்ல விரும்புகிறேன்.

**திரு. சோ. ஆறுமுகம் :** மாற்றுத் தலைவரவர்களே, சட்டம் ஒழுங்கைப் பாதுகாக்க வேண்டிய காவல் துறை எப்படியெல்லாம் நடந்துகொள்கிறது, ஒரு அரசியல் கட்சிப் பிரச்சினையிலே நேரடியாக எப்படித் தலையிடுகிறது என்பதற்கான ஆதாரத்தைத் தெரிவிப்பதால், இந்த அவையில் உள்ள ஓர் உறுப்பினர் தொடர்பு கொண்ட ஒரு தகவலைத் தெரிவிப்பதால், எதிர்காலத்தில் காவல் துறை இப்படிச் செயல்படக்கூடாது என்று சொல்லி அதை அரசு கூபேச்சையாகச் செயல்பட வைக்கும் என்ற நம்பிக்கையோடு சொல்கிறேன். எங்களை நம்பாதீர்கள் என்று சொன்னால், நான் கவலைப்படப் போவதில்லை.

இன்றையதினம் ஆளுநர் அவர்கள் உரையில் சுற்றுலா பற்றிச் சொல்லியிருக்கிறார்கள். உதகமண்டலத்தைச் சுற்றுலா மையமாக அபிவிருத்தி செய்ய நிதி ஒதுக்கியிருக்கிறார்கள். அதைப்போல ஏற்காடு, கொல்லி மலைப் பகுதிகள் எல்லாக் காலங்களிலும் சுற்றுலாப் பயணிகள் வந்து தங்கும் அளவிற்கு சீதோஷ்ண நிலைமை உள்ள மலைப் பிரதேசங்களாக இருக்கின்றன. ஆகவே ஏற்காடு, கொல்லிமலை ஆகியவற்றை சுற்றுலா மையமாக்க முயற்சி எடுத்து, அதற்கும் நிதி ஒதுக்கீடு செய்து, அவற்றைச் சுற்றுலா மையமாக்க வேண்டுமென்ற கருத்தைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

சேலம், தர்மபுரி மாவட்டங்களில் இன்றைக்குக் குடிக்க தண்ணீர் இல்லாமல் மக்கள் ஒரு மைல் தூரம் நடந்து தண்ணீர் எடுத்து வர வேண்டிய நிலைமை ஏற்பட்டிருக்கிறது. இன்றைக்குக் கிணறுகளில் தண்ணீர் இல்லாமல் பயிர்கள் எல்லாம் காய்ந்து, விவசாயிகள் பெருமளவிற்குத் துன்பத்திற்கு ஆளாகும் நிலைமை இருக்கிறது. மின்சாரத் தட்டுப்பாட்டால் மேலும் அவர்கள் துன்பத்திற்கு ஆளாகும் நிலைமை ஏற்பட்டிருக்கிறது. விவசாயம் பெருமளவிற்குப் பாதிக்கப்பட்ட மாவட்டங்களாக சேலம், தர்மபுரி மாவட்டங்கள் இன்றைக்கு அமைந்திருக்கின்றன. மாடுகளுக்குத் தீவனம்கூட இல்லை. இந்த ஆண்டு என்ன செய்வது என்ற கவலையிலே விவசாயப் பெருமக்கள் இருந்துகொண்டிருக்கும் நிலைமை ஏற்பட்டிருக்கிறது. இவைகளையெல்லாம் போக்குவதற்கு, இரண்டு மாவட்டங்களையும் வறட்சி மாவட்டங்களாக அறிவித்து, அங்கு வறட்சி துயர் தணிப்புப் பணிகளுக்கு அதிக நிதியை ஒதுக்கீடு செய்து, நிறைவேற்ற தகுந்த முயற்சியை ஆட்சியாளர்கள் மேற்கொள்ள வேண்டும். நீங்கள் விழா எடுப்பதாலும், விளம்பரம் செய்வதாலும், மக்களை அலட்சியப்படுத்துவதாலும் இந்த நாட்டு மக்கள் பெரும் துன்பத்திற்கு ஆளாகிக் கொண்டிருக்கிறார்கள். காக்கைக்கும் குயிலுக்கும் வித்தியாசம் தெரியாமல் நாட்டு மக்கள் வாக்களித்த காரணத்தாலே, ஆட்சி பீடத்தில் அமர்ந்துகொண்டு இந்த நாட்டு மக்களை ஏமாற்றிக் கொண்டிருக்கிறீர்கள் என்று சுட்டிக் காட்டி, அமைகிறேன்.

(முற்பகல் 11-50)

THIRUMATHI TARA CHERIAN : Hon. Vice-Chairman, I thank you for giving me an opportunity to participate in today's discussion on the Governor's Address. The Governor has conveyed his greetings for the New Year and Pongal to all the Members which I heartily reciprocate. This is the first time that the present Governor is addressing the joint session. In him and his wife we have two charming people and apart from that, he is a good administrator.



Before he became the Lieutenant Governor of New Delhi, he had experience in administration for many years and, therefore, with knowledge and experience, he has come to take over the governorship of Tamil Nadu and I hope he and the Cabinet Ministers will have proper rapport so that Tamil Nadu will be able to march forward. I wish him and his wife a successful career in our State.

As we all know, our Plan outlay has been approved by the Planning Commission. The only thing I would like to mention is that the Hon. the Chief Minister who is full of sympathy for poor people should make it a people's plan. The plan cannot be implemented successfully without the voluntary co-operation of all people, whether they are industrialists in the private sector, or other sections of people, the labour unions or people like us. The voluntary organisations should be made to become active participants in the work. When I appreciate all the points in the Governor's Address, I feel sorry that there is no mention about the Welfare Department, as such. Undoubtedly we call ourselves a Welfare State and all things like that. I wish a few lines had been mentioned in the Governor's Address about the Welfare Department and the work done by the voluntary organisations. The acceptance of the policies and programmes by the people as well as the voluntary organisations is very important and, therefore, I will be very happy if the Hon. the Chief Minister, in his reply to the debate, made a mention about the necessity for full participation of the people as such. I also want to congratulate the Government on the implementation of the Nutritious Midday Meal Scheme. There has been a lot of controversy, unwanted controversy, as to who started the scheme first. What is now needed is this. The Nutritious Meal Scheme has come to stay and even if there is any change of Government, people will be expecting that their children will be fed, until such a time when the family becomes self-sufficient and is able to feed its children. According to the statistics, there are 65 lakh children in the age group two plus to nine plus benefited by the scheme through 61,500 centres. In order to reduce the workload of the teaching staff, I find they are going to have about 35 thousand helpers. I have a little experience in this field, having been in the Corporation and having watched the programme from the ring-side seat, and I think any controversy between the teaching community and the administration should be avoided. During my mayoralty, there were about 36,000 school children who were fed and it would not have been possible for us to do that without the help and participation of the teachers. If we offer to give them a small remuneration for this kind of work, many of them will be prepared to help the implementation of the scheme. This is a

scheme which gives great benefit to the people. This fact has to be taken note of. I hope that the teachers and the newly appointed organisers will join together in implementing this noble programme. One cannot get away from the fact that there is an ideal combination of rice, dhall, oil and vegetables in the food that is given. Therefore, it is very essential that all should give their full co-operation in this matter. Being on the High Power Comittee for the implementation of this programme, I know the difficulties. The programme is only a few months old and the teething troubles are still there. I am sure that the Hon. the Chief Minister and the Government will appreciate any suggestions that are made. The programme has been launched with noble aims. Therefore, I appeal to the people to come forward with healthy criticism and constructive suggestions. After the programme was launched, in the beginning, there were some unhappy incidents like people stealing the provisions which was followed by raids, etc. But certainly there is a solution to all these problems. I hope that the Hon. Ministers will not misunderstand me if I say that, however noble the aim of the programme is, it could have been a little more pre-planned so that we might have identified all the loopholes. Though the programme was implemented at so short a time, many people have been benefited because their children have been fed. Therefore, it is now up to us to ask for suggestions from the people. For this I would suggest that suggestion-books may be opened and maintained. In the beginning, the Hon. Ministers were so vociferous that they rushed and started visiting a number of centres. Sir, everywhere in society, we have got good elements and bad elements. In the matter of this programme, the bad elements took advantage and went to the extreme. Now, I do hope that nothing will happen to this good scheme and that everybody will participate and respond positively.

Sir, as regards the Mahakavi Subramania Bharathiar Centenary Celebrations, I am glad that it has been celebrated with great cheer not only in Tamil Nadu but also in the capitals of other States. It is tragic to know that this great poet and his family starved themselves almost to death. This should serve as an eye-opener to us. We should see that people with talent are not allowed to suffer and that timely help is rendered to them. Therefore, I suggest that a small committee may be set up for this purpose. That committee should find out the economic status of various persons with different types of talent and, whatever be the level of education of a person, whether he is a Brahmin or a 'sudra', whether he belongs to this Party or that Party, the right person should be helped in times of difficulty.



Sir, there is a noble cause behind the scheme for providing employment to one member in a family. But, I think that a lot of trouble and difficulties may have to be faced in implementing this scheme. In order to keep up their promise, Government will have to find the necessary funds and implement this scheme. Moreover, the right persons will have to be chosen to get the benefits of this scheme. Here again, irrespective of his caste, creed and the Party to which he belongs, the right person should get the benefits of this scheme. In this connection, I would like to repeat what I had suggested many times on earlier occasions and state that what is needed is a good guidance bureau. The unemployed, the widows, the destitutes, the physically handicapped people should all know whom to approach for getting help. Therefore, I suggest that guidance bureaux may be started throughout the State, at the Taluk level, District level and the State Level. I hope that sufficient funds would be set apart by the Hon. the Finance Minister for this purpose. The services of the Social Welfare Department, the voluntary organisations, researchers, etc. can be pooled together for starting and running the guidance bureaux. Then only the unemployed people and physically handicapped people will be benefited and the general public also will know what the Government are doing for these people and what the voluntary organisations are doing for these people.

Sir, I think the Government brought about a law last year setting apart one per cent of the jobs for the blind and another one per cent for the deaf. By this, Government have given a guarantee that those blind persons and deaf persons would be given jobs. Therefore, I request the Government to place on the table of the House details about how many of those persons have been provided jobs during this one year. If the public come to know of the details, the frustration, if any, among the physically handicapped people will disappear and an enthusiasm will emerge among the children who are born physically handicapped.

(நண்பகல் 12·00)

In this connection I would like to say that the mentally retarded persons have not been considered as handicapped. The voluntary organisations which are helping the mentally retarded people have no money. Because of inflation and spiralling prices, it will not be possible for the voluntary organisations to take the whole burden without financial help. I do hope and pray that a time will come when they will be made use of for the implementation of welfare schemes of the Government.

[Thirumathi Tara Cherian] [1983 ஜனவரி 28

Now, coming to the language problem, various things are being talked and the people sometimes become fanatic about it. If only we would think about it in a proper way, we have every argument to say that Hindi cannot be thrust on non-Hindi speaking people. In this connection, I would like to say that during the centenary celebration of Bharathiyar, we must remember that he said that India was having many tongues but this sub-continent was one and indivisible. Rightly all the 14 languages have been recognised as national languages in the Constitution of India, which include Tamil. Apart from this, there are 24 minor languages and 24 tribal languages, and there are many more dialects, with or without scripts. It is significant that in the Constitution, Hindi has not been singled out as the only national language. On the other hand, all the major languages have been referred to as national languages and rightly so. There was also a move to include English which is the mother tongue of the Anglo Indian community. In their patriotic fervour, the patriots did not realise the need to include English. The drafters of the Constitution made Hindi, with English, as the official language. There was a proviso added that Hindi alone would be the official language at the end of 10 years. It would have to be at the discretion of the President. The proviso, added with the best of intentions, has created problems. It has created a rift between the Hindi-speaking people and the non-Hindi speaking people. The protagonists of Hindi, unfortunately, are all Hindi-speaking people and their mother-tongue is Hindi. Their line of argument will show that Hindi is spoken by the majority of people in India. Though I do not want to go into the details, a close examination will show that that argument is not correct. Hindi language is not spoken all over the country. The Hindi-speaking people are confined to one-fourth of the area of the country. If that argument is accepted, one may well claim that Chinese should be the language of the whole of Asia. Hindi has not got the inherent properties to function as an official language. Hindi came to be recognised only 100 years ago and it has not got that amount of capability which is needed. Hindi has got no literature worth its name. Rich vocabulary cannot be attained in Hindi. It is a mixture of Urdu and Hindustani. This triangular inadequacy is made good by the official patronage extended to Hindi. Therefore, no more invidious arguments could be advanced that English is a foreign language. Sir, I am a Tamilian and we, Tamilians, cannot afford to neglect English because we can see the writing on the wall. It is only the protagonists of Hindi who say that English is a foreign language. English is just as foreign to us as the system of Party-government, railway, car and the 'plane. People do not hesitate to utilise these things which are



1983 ஜனவரி 28] [Thirumathi Tara Cherian]

equally foreign inventions. As a matter of fact. English was one of the means which made our nation one unit by providing us a single channel of expression, unison of feelings, etc. What I am trying to say is that if the protagonists of Hindi denounce English, there are people who speak certain languages like Marathi who may denounce Hindi. Therefore, let us not neglect English. Let us, by all means, support and defend our language. But, Hindi can never become the official language, if we all join together and remain together. When the protagonists of Hindi try to denounce English, we should not provide them a kind of loophole to try to make Hindi the language of the country. That was why the late Thiru Anna and the Tamil Nadu Government adopted the bi-lingual formula of having English and Tamil only.

Now, the Hon. the Education Minister, Thiru Aranganayagam, who is a Post-Graduate and has also done Law, has made English also a subject in the Nursery schools. Today, if at all we are heard in the United Nations and other international forums, it is only in English. A time may come when there will be a Presidential Proclamation saying that English, along with Hindi, will be a national language. Till such time, what the Legislature of Tamil Nadu, both the Assembly and the Council, should do is to see that English is encouraged besides giving prominence to our own language. If that is done, nobody can oust English and make Hindi alone the national language. This is my belief and I hope that hon. Members belonging to various Parties and those who do not belong to Parties are one with me in this. We should all demand that Hindi should not be forced upon us. I am glad that the Prime Minister and her late father had given an assurance that as long as non-Hindi-speaking people do not want it, Hindi will not be imposed on them.

Sir, I would like to say one word on the subject of Family Planning and planned parenthood. Now, our State maintains a certain ranking, among the States, in the progress made in the implementation of the Family Planning programme. Perhaps, during the Emergency, the term 'Family Planning' became a misnomer because it was thought that people were forced to undergo operations compulsorily. Later, they wanted the implementation of the

(பிற்பகல் 12.10)

Programme to be mild in nature. Whatever may be our advancement in technology, whatever may be the expertise that we have and however economically strong we may be, we cannot march forward unless we have lesser mouths to feed and lesser people to be

[Thirumathi Tara Cherian] [1983 ஜனவரி 28

looked after. I am sure that the Hon. the Health Minister will bring together all agencies—individuals, Government Departments, voluntary organisations, etc.—and see that the Programme is successfully implemented. In the Central Social Welfare Board, there are 250 Family Planning Workers and their services can be utilised for holding camps. Sir, we do not have slides and films. But I can tell the Hon. Minister that we are having good workers. If we guarantee co-ordination and co-operation between the Government department and the other agencies, we can carry on the programme beautifully. Even in dtveloped countries, a lot of propaganda is being made about various methods. Today there is a Conference going in Connemara Hotel and many experts in the field have come. I do not know whether the Government have sent their representative or not. It is worthwhile to take in all that is good and we need not go by one method alone. Let us not adopt a single method wholesale.

Coming to the mention about social workers by the hon. Member Thiru Vasantha Pai, I think he meant only the social-minded people and civic-minded people. There are social workers and they also devote their attention to such problems. If a road is not clean, even the Hon. Minister residing in that road should take steps to see that it is cleaned. Everybody, including Advocates and Lawyers should take interest in such things. Unless the people take interest and look after the proper implementation of the schemes, the money that is being sanctioned will not be usefully spent. I congratulate the Government on their proposal to provide public conveniences but certain amount should be set apart for the purpose of keeping them clean and in a hygienic way. Otherwise, they will not be useful. I am indeed happy about the things mentioned in the Governor's Address. Unless they have the co-operation of the people, there will be no benefit. If there is a Citizens' Committee, it will help in the proper running of the Midday Meal Centres. The scheme is already a success, because people want it. The Citizens Committee would be in a position to make it efficient. It is because we would like to see that the children are fed. The Committee can be formed at different levels to give suggestions and help the Government in every possible way. With these words, I conclude and I thank you for giving me an opportunity. I would only like the Ministers, in their reply, to answer at least some of the points raised by me.



1983 ஜனவரி 28]

* திரு. காடுவெட்டி கண்ணப்பன் : மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, ஆளுநர் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின் மீது கருத்துக்களைச் சொல்வதற்கு அனுமதி அளித்த தங்களுக்கு என்னுடைய வணக்கத்தையும் நன்றியையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

ஆளுநர் உரையின்மீது மாண்புமிகு உறுப்பினர்கள் இந்த அவையில் தங்களின் கருத்துக்களையும், ஆலோசனைகளையும் எடுத்து வைப்பார்கள், ஆக்க பூர்வமான தங்களின் யோசனைகளை அரசுக்குச் சொல்லுவார்கள் என்று நான் எண்ணியிருந்தேன். சில நல்ல இதயம் படைத்த மாண்புமிகு உறுப்பினர்கள் ஆளுநர் உரையில் குறிப்பிடப்பட்டுள்ள பல நல்ல திட்டங்களை வரவேற்றும் அரசுக்கு நல்ல ஆலோசனைகளைச் சொல்லியும், தங்களுடைய கருத்துக்களையும் இங்கே எடுத்து வைத்தார்கள். ஆனால் மாண்புமிகு உறுப்பினர், மரியாதைக்குரிய திரு. ஆறுமுகம் அவர்கள் பேசும் போது, அவருடைய பேச்சு ஆலோசனையாக எனக்குத் தெரியவில்லை. மாறாக ஏதோ வேண்டுமென்றே பேச வேண்டும் என்ற கருத்தில், இந்த அவையில் குற்றச்சாட்டுகளைச் சொல்ல வேண்டும், ஊழலைப்பற்றிச் சொல்ல வேண்டும் என்ற எண்ணத்தில் கருத்துக்களைச் சொல்லியிருக்கிறார். அவர் ஆண்ட கட்சியைச் சார்ந்தவர். தமிழகத்தை 7½ ஆண்டுக் காலம் ஆண்ட கட்சியைச் சார்ந்தவர். ஆளுநர் உரையின்மீது விவாதத்தைத் தொடங்கும்போதே, இந்த ஆளுநர் உரையில் திட்டங்கள் இல்லை, இந்த ஆளுநர் உரையில் ஆக்க பூர்வமான யோசனைகள் இல்லை என்று ஆரம்பித்து ஒரு கருத்தைத் தெரிவித்தார்கள். அதாவது 22.56 கோடி ரூபாய் செலவில் கிராமங்களில் உள்ள பெண்களுக்குக் கழிப்பிடங்களைக் கட்டுகிற திட்டத்தைப்பற்றிக் குறிப்பிட்டுச் சொல்லி, இது ஆளும் கட்சிக் காரர்கள் பங்கு போட்டுக் கொள்வதற்காக இயற்றப்பட்ட திட்டம் என்று சொன்னார்கள். இதை எதற்காகச் சொல்லுகிறேன் என்றால், அவர்கள் ஆண்டவர்கள், அனுபவம் மிக்கவர்கள், எனவே அவர்களுடைய அனுபவத்தைத்தான் இப்போது சொல்லிக் கொண்டிருக்கிறார்கள் என்று தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

திரு. சோ. ஆறுமுகம் : On a point of order எங்கள் ஆட்சி 7½ ஆண்டுக் காலம் நடைபெற்றதாக மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டார்கள். திராவிட முன்னேற்றக் கழகம் தமிழகத்தில் 9½ ஆண்டுக் காலம் ஆட்சி நடத்தியது என்பதை அவர் நினைவில் கொள்ள வேண்டும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. காடுவெட்டி கண்ணப்பன் : திராவிட முன்னேற்றக் கழகம் 9½ ஆண்டுக்காலம் ஆட்சி புரிந்தது உண்மைதான். ஆனால் இவருடைய தலைவர், மரியாதைக்குரிய சட்டப்பேரவை எதிர்க் கட்சித் தலைவர் திரு. கருணாநிதி அவர்கள் ஆண்ட காலம் 7½ ஆண்டுகள்தான்.

திரு. சோ. ஆறுமுகம் : எங்கள் தலைவர் என்று சொன்னால் கூட அவர் திராவிட முன்னேற்றக் கழகத்தின் தலைவராகத்தான் ஆட்சி செய்தார் என்பதை மறந்துவிடக்கூடாது. எனவே திராவிட முன்னேற்றக் கழகம் தமிழகத்தில் 9½ ஆண்டுக்காலம் ஆட்சி புரிந்திருக்கிறது.

திரு. காடுவெட்டி கண்ணப்பன் : அதைத்தான் நான் சொன்னேன். அவருடைய தலைவர் 7½ ஆண்டுக்காலம் ஆண்டிருக்கிறார். அதன் காரணமாக அவருடைய அனுபவத்தை இங்கே அவையில் சொல்லுகிறாரா அல்லது அவருடைய தலைவரின் அனுபவத்தை இங்கே சொல்லுகிறாரா என்று எனக்குப் புரியவில்லை. எந்த அரசியல் கட்சியின் ஆட்சி நடைபெற்றாலும், ஆட்சி என்பது திட்டங்களைத் தரும்போதும், அதை எதிர்க் கட்சி வரிசையில் இருப்பவர்கள் விமரிசித்துப் பேசுவதும் அல்லது ஆதரித்துப் பேசுவதும் அல்லது அதற்கான ஆலோசனைகளைக் கூறுவதும் தவிர்க்க முடியாத தலையாய கடமையாக இருப்பதை அரசியல் நாகரிகம் உணர்ந்த அனைவரும் அறிவர்.

அந்த அடிப்படையில் அரசு ஒரு திட்டத்தை இங்கே எடுத்து வைத்திருக்கிறது. அதை நடைமுறைப்படுத்துவதற்கு முன்னாலேயே அதில் ஊழல் ஊழல் என்று சொன்னால். இது ஏதோ அவருடைய அனுபவரீதியாகச் சொல்லுவதாகத்தான் எனக்குத் தெரிகிறது.

அடுத்து, அவருடைய பேச்சின் முடிவில் இன்னொரு கருத்தையும் இங்கே தெரிவித்திருக்கிறார்கள். தமிழ் நாட்டு மக்கள் காக்கைக்கும் குயிலுக்கும் வேறுபாடு தெரியாமல் வாக்களித்துவிட்டதாகவே இவர்கள் ஆட்சிக்கு வந்துவிட்டார்கள் என்று குறிப்பிட்டார்கள். மயிலுக்கும் மந்திக்கும் வேறுபாடு தெரியாத காரணத்தாலே இப்படி நடந்துவிட்டது என்று தெரிவித்தார்கள். அவர் இந்தக் கருத்தைத் தெரிவிக்கவில்லை என்றாலும், அதைத்தான் சொல்ல விரும்பினார். ஜனவரி மாதத்திலே ஒரு தேர்தல் வருகிறது. தமிழ் நாட்டுமக்கள் மயிலுக்கும் மந்திக்கும் வித்தியாசம் தெரியாமல், அடைமானம் தெரியாமல் மந்திக்கு வாக்களித்தார்கள். ஆனால் அடுத்த மே மாதம் நடைபெற்ற தேர்தலின்போது மந்தி எது, மயில் எது என்று விவரம் புரிந்துகொண்ட காரணத்தாலே, தமிழ் நாட்டு மக்கள் எங்களை ஆட்சி



பீடத்திற்கு அனுப்பியிருக்கிறார்கள். எனவே, இப்படி மக்கள் தங்களுக்கு வாக்களிக்கவில்லை என்றால், குறை சொல்வதும், இப்படிக் குறை சொல்லுவதன் மூலம் மீண்டும் ஆட்சி பீடத்திற்கு வரலாம் என்றும் எண்ணி மக்களைப்பற்றி இப்படிப் பேசுவது வெறும் கேலிக்கூத்தாகத்தான் இருக்கும் என்பதை நான் மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆறுமுகம் அவர்களுக்கு நினைவுப்படுத்த விரும்புகிறேன். அவர் பேச ஆரம்பித்தபோது இன்னொரு கருத்தையும் தெரிவித்தார். அதாவது இந்தியை எதிர்க்கிற சக்தி என்பது ஏதோ திராவிட முன்னேற்றக் கழகத்திற்கு மட்டும்தான் இருப்பதைப் போலவும் அகில இந்திய அண்ணா திராவிட முன்னேற்றக்கழகத்திற்கு அச்சக்தி இல்லை என்பதைப் போலவும் பேசினார். ஆனால் நான் அவருடைய கட்சியின் தலைவர் திரு. கருணாநிதி அவர்களின்—வீரத்தை எந்தெந்த இடத்தில் இந்தி மொழியின் ஆதிக்கம் வந்தபோதெல்லாம் எப்படியெல்லாம் எதிர்த்தார் என்பதை ஒன்றன்பின் ஒன்றாகச் சொல்லுவது நலமாக இருக்கும் என்று கருதுகிறேன்.

1980 ஆம் ஆண்டு இந்த நாட்டில் அசெம்ளித் தேர்தல் நடைபெற்ற நேரத்தில் மரியாதைக்குரிய திரு. சேத்தி அவர்கள் மத்திய அமைச்சராக இருந்தார்கள். அந்த நேரத்தில் திராவிட முன்னேற்றக் கழகம் அவர்களோடு உடன்பாடு வைத்துக்கொண்டிருந்தது. அப்போது அவர் ஒரு கருத்தைச் சொன்னார். தமிழக மக்கள் "போகப் போக இந்தியைக் காலப் போக்கில் கற்றுக் கொள்வார்கள்" என்று சொன்னார். ஆனால் அப்போது இதை மறுத்துப் பேச திராணியில்லாமல் வாய் மூடி மௌனியாக அவருடைய கட்சியின் தலைவர் இருந்தார் என்பதை நான் சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

திரு. சோ. ஆறுமுகம் : முன்னாள் மத்திய அமைச்சர் திரு. சேத்தி அவர்கள் "காலப் போக்கில் இந்தியைத் தமிழக மக்கள் ஏற்றுக் கொள்வார்கள்" என்று பேசியபோது, அதை எங்களுடைய தலைவர் வரவேற்றுப் பேசினாரா, அல்லது அந்தக் கூட்டத்தில் எங்கள் தலைவர் இருந்தாரா என்பதையும் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தெளிவுபடுத்தினால், எங்களுக்கும் விளக்கம் அளிக்க உதவியாக இருக்கும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. காடுவெட்டி கண்ணப்பன் : அன்றைக்கு இரண்டு கட்சிகளுக்குமிடையே ஒரு லட்சிய உறவு இருப்பதாக, பிரிக்க முடியாத உறவு இருப்பதாகப் பேசினீர்கள். அதனால்தான் சொல்லுகிறேன், மத்திய அமைச்சர் இந்திப் பிரச்சினையில் அவ்வாறு பேசியபோது உங்கள் தலைவர் என்ன சொன்னார்?

**திரு. சோ. ஆறுமுகம் :** எங்கள் இரண்டு கட்சிகளுக்குமிடையே இருந்தது தேர்தல் உடன்பாடுதானே தவிர, கொள்கை உடன்பாடு அல்ல. லட்சிய உடன்பாடு அல்ல என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் உணர்ந்து கொண்டு பேச வேண்டும்.

**திரு. காடுவெட்டி கண்ணப்பன் :** அந்த உறவு எத்தகைய லட்சிய உறவு கொள்கை உறவு என்பதையெல்லாம் உங்களுடைய பத்திரிகையில் அப்போது பக்கம் பக்கமாக எழுதியதை தயவு செய்து எடுத்துப் பாருங்கள். மத்திய அமைச்சர் இந்திப் பிரச்சினையில் அத்தகைய கருத்தைச் சொன்னபோது, இதுவரை உங்கள் தலைவர் அதை மறுத்துச் சொன்னதில்லை.

**திரு. ம. சங்கரலிங்கம்:** தமிழகத்தைப் பொறுத்தவரையில், நம் இரு கட்சிகள் மட்டுமல்ல, தேசிய மட்டத்தில் இருக்கிற கட்சிகளோ கூட இந்திப் பிரச்சினையைப் பொறுத்தவரையில், தமிழகத்தில் இந்தி திணிக்கப்படுவதை வன்மையாக எதிர்க்கிறபோது, எப்போதோ மத்திய அமைச்சராக இருந்த திரு. சேத்தி அவர்கள் இந்தியைப் பற்றி ஒரு கருத்தைச் சொன்னபோது, இங்கே இந்தியை வன்மையாக எதிர்க்கிற கட்சியின் தலைவர் அதை எதிர்த்தாரா, அதற்குத் திராணியில்லாமல் அல்லவா இருந்தார் என்று சொல்லி, நமக்குள்ளேயே இந்தியை எதிர்க்கிற துணிவை நாமே பலக்குறைவுபடுத்துவது என்பது தேசிய மட்டத்தில் நம்மை நாமே பலகீனப்படுத்திக் கொள்ளதாக அமையும் என்பதால், இப்படிப் பேச வேண்டுமா என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் எண்ணிப் பார்க்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. கா. இராசா முகமது :** மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, இது ஒரு நல்ல உணர்வின் அடையாளம் என்று தான் நான் கருதுகிறேன். இரண்டு தரப்பிற்கும் இது பொதுவாக இருந்தால், அனைவருக்கும் நன்மை பயக்கும் என்பது என்னுடைய கருத்து. வீர வணக்க நாளை இரண்டு தரப்பிலும் மிகச் சிறப்பாக அஞ்சலி செலுத்தும் நாளாகக் கொண்டாடுகிறோம் என்பதை நினைவுபடுத்த விரும்புகிறேன். அதிலே பேசிய சிலர் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய இந்தி எதிர்ப்பு உணர்வுகளை சந்தேகப்படும்படியாகப் பேசினார்கள். மாண்புமிகு உறுப்பினர் திரு. சங்கரலிங்கம் அவர்கள் சொன்னவாறு, இந்த மாதிரியான பொது விஷயங்களில் உள்நோக்கோடு அரசியல் காரணங்களுக்காக ஒருவருக்கொருவர் குறை கூறிக்கொள்ளாமல் இருப்பது நல்லது என்ற கொள்கையை ஏற்றால், தமிழகத்திற்கு ஒட்டுமொத்தமாக நன்மை பயக்கும் என்பதை நானும் சொல்லிக்கொள்கிறேன்.



(பிற்பகல் 12-20)

**திரு. காடுவெட்டி கண்ணப்பன் :** இந்தி பிரச்சினைக்கு இருவரும் சேர்ந்து, தமிழகத்திலே உள்ள அத்தனை பேரும் சேர்ந்து ஒருங்கே நடவடிக்கை எடுக்க வேண்டுமென்ற மாண்புமிகு உறுப்பினர் திரு சங்கரலிங்கம் அவர்களின் மேலான கருத்தை முன்னவர் அவர்கள் ஏற்றுக்கொண்டதால், மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆறுமுகம் அவர்கள் பேசிய இந்தி பிரச்சினையை இத்தோடு விட்டுவிடுகிறேன் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். இந்தி பிரச்சினை என்று வருகிறபோது, நேற்றையதினம் கூட சட்டமன்றப் பேரவையில் மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவர் அவர்கள் ஒரு அழகான கருத்தைச் சொன்னார்கள். இந்தியைப் பொறுத்தவரையில், தமிழகத்தின் ஒட்டுமொத்தமான உணர்வு ஒன்றுதான். "இந்தியை இந்த நாட்டு மக்கள் எதிர்க்கிறார்கள்" என்ற உணர்வை பேரவையிலே எடுத்துச் சொன்னார்கள். இந்தி பிரச்சினையை பொறுத்த வரையில், நம்மை நாமே பாகுபடுத்திக் கொள்ள வேண்டாமென்று இரண்டு தலைவர்களும் சொன்ன காரணத்தாலே, இதை இத்தோடு விட்டுவிடுவதுதான் நாகரீகம் என்று கருதி விட்டுவிடுகிறேன்.

மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆறுமுகம் அவர்கள் ஒவ்வொரு அமைச்சராகச் சுட்டிக்காட்டி இந்த அமைச்சர் தேவைதானா, தொழில் துறை அமைச்சர் தேவைதானா, தொழிலாளர் நல அமைச்சர் தேவைதானா என்று கேட்டார். அப்படிக் கேட்கும்போது தொழிலாளர் நலத் துறை அமைச்சர் திரு. இராகவானந்தம் என்று சொல்லியிருந்தால் கூட பரவாயில்லை. அவருடைய பெயரை மட்டும் சொல்லி இவர் தேவைதானா என்று கேட்டார். அவருடைய இலாக்கா என்னவென்று கூட அவருக்குத் தெரியவில்லை. பிறகு "நீங்கள் எல்லாம் தூங்கிய காரணத்தாலேதான் கலர் படச்சுருள் தொழிற்சாலை உத்திரப் பிரதேசத்தில் உள்ள நைனிடாலுக்குப் போய்விட்டது" என்று சொன்னார். உண்மையிலேயே அது அங்கே போகிறதா இல்லையா என்பது வேறு பிரச்சினை. போய்விட்டது என்று சொல்லி அதற்குக் காரணம் கற்பித்திருக்கிறார்கள். ஏன் தூங்குகிறார்கள் என்ற கேள்வியைத் தொடுத்தார்கள். மைய அரசு தூங்கிக் கொண்டிருப்பவர்களுக்கு உதவி செய்யாமல் விழித்துக் கொண்டிருப்பவர்களுக்கு உதவி செய்கிறது என்பதை வாதத்திற்காக ஒப்புக்கொள்ளலாம். பிரதமர் பார்வையில் படுகிற நிலையில் மாண்புமிகு உறுப்பினருடைய கட்சியைச் சேர்ந்த 16 பேர் நாடாளுமன்ற உறுப்பினர்களாக அங்கே இருக்கிறார்கள். எனக்கு இருக்கிற சந்தேகமெல்லாம் அந்த 16 பேர் பாசாறு

மன்றத்தில் தூங்கிக் கொண்டிருக்கிறார்களா அல்லது குறட்டை விடாமல் பார்த்துக்கொண்டிருக்கிறார்களா என்பதுதான். அதை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் ஒத்துக்கொள்வார்கள் என்று கருதுகிறேன்.

**திரு. சோ. ஆறுமுகம் :** மாற்றுத் தலைவர் அவர்களே, தமிழகத்திற்கு நிதியாதாரங்களைப் பெற்றுத் தருவதிலும், தொழிற்சாலைகளை இங்கே உருவாக்குவதிலும், மத்திய அரசாங்கம் எந்தெந்த வகையிலே உதவ வேண்டும் என்று சொல்வதிலும், வறட்சிப் பணிகளுக்காக தமிழகத்தில் எப்படியெல்லாம் உதவி செய்ய வேண்டும் என்பதைப்பற்றியும் திராவிட முன்னேற்றக் கழக நாடாளுமன்ற உறுப்பினர்கள் மத்திய அரசிடம் வாதாடியிருக்கிறார்கள். அதே நேரத்தில் அ.தி.மு.க. வைச் சேர்ந்த 3 உறுப்பினர்கள் இருக்கிறார்கள். அவர்கள் என்ன செய்து கொண்டிருந்தார்கள் என்பதைத் தெரிவித்துவிட்டுப் பேசுவது பொருத்தமாக இருக்கும்.

**மாண்புமிகு திரு. கா. இராசா முகமது :** இந்தப் பிரச்சினையில்கூட அதே மாதிரி ஒரு முகமான கருத்து வைத்துக்கொள்வது நல்லதுதான். ஏனென்றால் திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்த சட்டமன்ற உறுப்பினர், காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த சட்டமன்ற உறுப்பினர், அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர், நம்முடைய கொறடா டாக்டர் சனார்த்தனம் ஆகிய எல்லோரும் சேர்ந்து உண்ணாவிரதம் இருந்து போராட்டம் நடத்தியிருக்கிறார்கள். ஆகவே காங்கிரஸ் தி.மு.க., அண்ணா தி.மு.க. ஆகிய எல்லாக் கட்சியினரும் பேதம் பார்க்காமல் இன்றைக்கு கலர் படச் சுருள் தொழிற்சாலை ஊட்டியில் வர வேண்டுமென்று கோரிக்கை விடுத்திருக்கிறார்கள். மாண்புமிகு முதலமைச்சர் அவர்களும், தொழில் துறை அமைச்சர் அவர்களும் அதற்கான நடவடிக்கையில் தீவிரமாக ஈடுபட்டிருக்கிறார்கள். எதிர்க் கட்சித் தலைவரும் சொல்லியிருக்கிறார்கள். குற்றச்சாட்டு சொல்ல வேண்டும் என்பதற்காக "நீங்கள் தூங்குகிறீர்களா, விழித்துக் கொண்டிருக்கிறீர்களா?" என்று ஒருவருக்கொருவர் பேசிக்கொள்வது இதிலே தேவையில்லை. அத்தொழிற்சாலை தமிழகத்திற்கு நியாயமான அடிப்படையிலே வர வேண்டும். வெளிநாட்டு நிபுணர்கள் கூட ஊட்டியில் இருப்பதுதான் நல்லது என்று சொன்னதற்குப் பிறகும், அரசியல் காரணங்களுக்காக அதை வெளிமாநிலங்களுக்கு எடுத்துச் செல்லும்போது, பிரச்சினைகளுக்கு வராமல் ஒட்டுமொத்தமாகக் கருத்துச் சொல்லுவதுதான் நல்லது. ஆளும் கட்சியின் மீது குற்றச்சாட்டு சொல்ல வேண்டுமென்றால், வேறு ஏதாவது சொல்லலாம். அப்படியில்லையென்றால் எங்களிடம் வந்து கேட்டால், தனியாக இரண்டு மூன்று குற்றச்சாட்டுக்



களைச் சொல்லுகிறோம். அதற்காக பொது விஷயத்தில் ஒருவொருக்கொருவர் மோதிக்கொள்ளாமல் இருப்பது நல்லது என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

**திரு. காடுவெட்டி கண்ணப்பன் :** அவையின் முன்னவர் அவர்கள் சொன்ன காரணத்தால், எதிர்க் கட்சி வரிசையில் உள்ள திரு. ஆறுமுகம் அவர்கள் சாட்டிய குற்றச்சாட்டை வாபஸ் பெறுவாரேயானால் நான் இதை இத்தோடு விட்டுவிடுகிறேன்.

**திரு. சோ. ஆறுமுகம் :** மாண்புமிகு அமைச்சர் சொன்ன மாதிரி தமிழகத்திற்கு அந்தத் தொழிற்சாலை வர வேண்டும் என்பதிலே மத்திய சர்க்காரிடத்திலே போராட வேண்டும் என்பதிலே ஆளும் கட்சி எந்த அளவிற்கு அக்கறை கொள்கிறதோ அதே அளவிற்கு திராவிட முன்னேற்றக் கழகமும் அக்கறை கொண்டுள்ளது. அதற்காக போராடத் தயாராக இருக்கிறோம். ஆனால் அவர்கள் ஏமாந்துவிட்ட காரணத்தால்தான் அந்தத் தொழிற்சாலை அங்கே போய்விட்டதோ என்ற ஐயப்பாட்டைச் சொல்ல உரிமை இருக்கிறது. ஆகவே வாபஸ் வாங்க வேண்டிய அவசியமில்லை.

**டாக்டர் இரா. சனார்த்தனம் :** எங்கள் கட்சி உறுப்பினரின் பேச்சில் அதிகக் குறுக்கீடுகள் இருப்பதால் நேரம் வீணாகிக் கொண்டிருக்கிறது.

**மாண்புமிகு திரு. சு. திருநாவுக்கரசு :** மாற்றுத் தலைவர் அவர்களே, நடந்து முடிந்த நாடாளுமன்ற கூட்டத் தொடரிலே கூட இது குறித்து நாடாளுமன்ற உறுப்பினர்கள் கேட்ட கேள்விக்கு பிரதமர் அவர்களே தலையிட்டு பதில் சொல்லுகிறபோது, "அது இன்னும் முடிவு செய்யப்படவில்லை" என்றும் "ஆய்வில் இருக்கிறது" என்றும் "முடிவு எடுக்கிறபோது தமிழகத்திற்கு முன்னுரிமை கொடுத்து முடிவு எடுக்கப்படும்" என்பதைப் போலவும் உத்தரவாதம் கொடுத்திருக்கிறார்கள். எனவே பிரதமரே முடிவு செய்யவில்லை என்று சொன்னதற்குப் பின்னாலே, மாண்புமிகு உறுப்பினர்கள், தி.மு.க. உறுப்பினராக இருந்தாலும் சரி, காங்கிரஸ் கட்சி உறுப்பினராக இருந்தாலும் சரி, அத்தனை பேரும் சேர்ந்து தமிழகத்திற்கு அந்தத் தொழில் வரவேண்டும் என்று வேண்டுகோள் வைப்பதுதான் பொருத்தமாக இருக்கும். வரும் என்ற நம்பிக்கையுடன் தான் இருக்கிறோம். நம்பிக்கையோடு இருப்போம். வலியுறுத்துவோம்.

[1983 ஜனவரி 28

திரு. காடுவெட்டி கண்ணப்பன் : மாற்றுத் தலைவர் அவர்களே, அந்தத் தொழிற்சாலை நமக்கு வரும் என்ற நம்பிக்கையோடு, அந்தத் தொழிற்சாலையை தமிழகத்திற்குத் தர வேண்டுமென்ற வேண்டுகோளை பிரதமர் அவர்களுக்கு விடுத்து இந்தப் பிரச்சினையை இத்தோடு விட்டுவிடுகிறேன்.

(மாற்றுத்தலைவர் திரு. சி. இராமலிங்கம் தலைமை.)

இங்கே பல பிரச்சினைகளைப் பற்றியெல்லாம் சொல்லி இந்த அரசு அவற்றையெல்லாம் நடைமுறைப்படுத்தப்போகிறதா, செயல்படுத்தப் போகிறதா என்ற சந்தேகத்தையெல்லாம்கூட எழுப்பினார்கள். சென்ற ஆண்டு நிதிநிலை அறிக்கையில் மத்திய சத்துணவுத் திட்டத்தை மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்கள் அறிவித்த நேரத்தில், அதிலே கூட சில பேர் ஐயப்பாட்டை உருவாக்கினார்கள். "இந்தச் சத்துணவுத் திட்டத்தை நடைமுறைப்படுத்த முடியுமா? இவர்கள் ஏமாற்றுகிறார்கள் இதை நடைமுறைப்படுத்தக்கூடிய சாத்தியக்கூறுகள் இருக்கின்றனவா? நிதிநிலை அறிக்கையில் அதற்குண்டான நிதியை ஒதுக்கவில்லையே" என்றெல்லாம் இந்த அவையில் எடுத்துச் சொன்னார்கள். ஆனால் அன்றைய தினமே புரட்சித் தலைவர் அவர்கள், நிச்சயமாக இந்தத் திட்டத்தை நிறைவேற்றியே தீருவேன் என்று உறுதியாகச் சொன்னார்கள். அதற்கான புனித நாளையும் குறிப்பிட்டார்கள். பேரறிஞர் அண்ணா அவர்கள் பிறந்த நாளான செப்டம்பர் 15 ஆம் நாள் இந்த உயர்ந்த அருமையான திட்டத்தைத் தொடங்க இருக்கிறேன் என்று சொன்னார்கள். அப்போதும் "செப்டம்பர் 15 ஆம் நாள் வரை காத்திருக்க முடியாது. விரைவிலே நடைமுறைப்படுத்துகிற சாத்தியக்கூறு இருக்கிறதா, இல்லாவிட்டால் ஏமாற்றுகிறார்கள்", என்ற ஐயப்பாட்டை இந்த மன்றத்திலேயும் சொன்னார்கள், வெளியேயும் சொன்னார்கள். அப்படிச் சொன்ன காரணத்தாலே தான், மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்கள் உலகமே போற்றுகிற மிகப் பெரிய திட்டத்தை ஜூலை மாதம் 1 ஆம் தேதியே இந்த நாட்டிலே அமுலாக்கினார்கள். 112 கோடி ரூபாய் செலவில் அமுலாக்கியவுடன் இடையிலே பெரியகுளம் தேர்தல் வந்தபோது, "தேர்தலுக்காக அடையாளம் காட்டப்பட்டுவிட்டது, சத்துணவுத் திட்டத்தை நிறைவேற்ற முடியாது, பெரியகுளம் தேர்தலுக்காகக் கொண்டுவரப்பட்ட திட்டம்" என்று சொல்லி தேர்தல் காலத்திலே இந்தத் திட்டத்தைக் கொச்சைப்படுத்தினார்கள்.



1983 ஜனவரி 28]

(பிற்பகல் 12.30)

மாற்றுத் தலைவர் (திரு. சி. இராமலிங்கம்) : திரு. காடுவெட்டி கண்ணப்பன் அவர்களும், செல்வி லீலாவதி அவர்களும் பேசி முடிக்கும் வரை அவையின் நேரம் நீட்டிக்கப்படுகிறது.

திரு. காடுவெட்டி கண்ணப்பன் : மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சத்துணவுத் திட்டம் என்று கொண்டுவந்தார்கள். அந்த வார்த்தையைக் கூட தமிழ் மரபுக்கு மாறாக, தமிழர் கலாசாரத்திற்கு, நாகரிகத்திற்கு மாறாக தமிழ் உணர்வுக்கு மாறாக தமிழ் இனத் தலைவர்கள் அதைப்பற்றி வாதம் செய்து, அதைப்பற்றி விமரிசனம் நடத்தினார்கள். இவ்வளவு விமரிசனத்திற்கும் பின்னாலே இன்றையதினம் நாடு போற்றும் இந்தத் திட்டத்தை, வளர்கின்ற தலைமுறையினரை எதிர்காலத்திலே இன்னல்களை வெற்றிகொள்கின்ற வீர நடைபோடுகின்ற மக்களாக ஆக்குகின்ற இந்தத் திட்டத்தை இந்த அரசு நடத்திக்கொண்டிருக்கிறது. நம்முடைய மாண்புமிகு அங்கத்தினர் திரு. சுவாமிநாதன் அவர்கள் இதைப்பற்றி மிகச் சிறப்பாகச் சொன்னார்கள். இந்த நாட்டிலே பசிப்பிணியை மட்டுமல்ல, அடிப்படை நோயைத் தீர்க்கக்கூடிய ஒரு உயர்ந்த திட்டம் இது என்பதை அவர்கள் தெளிவாகச் சொன்னார்கள். இன்றையதினம் இந்தியா பூராவும் கணக்கு எடுத்துப் பார்க்கின்றபோது, ஏறத்தாழ லட்சக்கணக்கான குழந்தைகள் காச நோயால் இறப்பதாகப் புள்ளிவிவரங்கள் சொல்லிக்கொண்டிருக்கின்றன. காச நோய் பரவ அடிப்படைக் காரணம் சத்துணவு இல்லாததுதான் என்று மருத்துவ வல்லுநர்கள் சொல்லிக்கொண்டிருக்கிறார்கள். எனவே, எதிர்காலத்தில் அந்தக் காச நோயைப் போக்குகின்ற அற்புதமான ஒரு திட்டமாக இந்தத் திட்டம் இருக்கிறது. இந்தத் திட்டத்தைக் கிண்டல் செய்தவர்கள்கூட இந்தத் திட்டத்தை ஏற்றுக்கொள்கின்ற அளவுக்கு தயாராகிக் கொண்டிருக்கிறார்கள். பக்கத்திலே உள்ள ஆந்திராவும் கர்நாடகமும் ஏன் இந்திய துணைக்கண்டம் முழுவதும் வரவேண்டுமென்ற ஆசையோடு உள்ள தலைவர்களாகத்தான் இன்றைய அரசியல் அரங்குகளில் அந்தத் தலைவர்கள் கருத்துக்களைப் பரிமாறிக்கொண்டிருக்கிறார்கள். ஏன் உலகத்திலே யுனெஸ்கோ என்று சொல்லப்படுகின்ற அந்த நிறுவனம் கூட இன்றைய தினம் அந்தப் புரட்சித் தலைவருடைய திட்டத்தை ஆராய்ச்சி செய்கின்ற அளவுக்கு இருக்கிறது. அந்தத் திட்டம் நாட்டு மக்களால் போற்றப்படுகிறது. அந்த அளவுக்கு அது உயர்ந்திருக்கிறது. உலகத்திலே இருக்கின்ற அனைத்து நாடுகளிலும் இருக்கின்ற குழந்தைகளைப் பள்ளிக்கு அழைக்கின்ற ஒரு திட்டமாக இது இருக்கிறது. இதுவரை ஆராய்ச்சி ரீதியாகக் கூட இதைச் சிந்திக்கவில்லை. ஆனால் புரட்சித் தலைவர் அவர்கள் கொண்டுவந்த

இந்தத் திட்டம் 3 மாதத்திற்குள் 2½ லட்சத்திற்கு மேற்பட்ட குழந்தைகளைப் பள்ளிக்கு சேர்த்திருக்கிறது. இது ஒரு சக்தி மிகுந்த திட்டமாக இருக்கிறது என்று சொல்லி யுனெஸ்கோ நிறுவனம் ஆராய்ச்சி செய்யக்கூடிய சூழ்நிலை இன்றையதினம் இருக்கிறது. அப்படிப்பட்ட அந்தத் திட்டத்திலே உள்ள குறைகளைச் சொல்லிக்கொண்டிருப்பவர்கள் இருக்கிறார்கள். இன்றைய தினம் பத்திரிகைகளைப் பார்ப்போமானால், இப்படிப் பாராட்டப்படுகின்ற மிக உயர்ந்த திட்டத்திலே பாச்சை விழாதா, பல்லி விழாதா, 4 பேர் வாந்தி எடுக்கமாட்டார்களா என்று பார்த்துக்கொண்டிருக்கிறார்கள், குறைசொல்வதற்காக. அந்த உணர்வுகளைத்தான் இன்றைய பத்திரிகைகளிலே பார்க்க முடிகிறது. பத்திரிகைகளில் தலையங்கம் அப்படித்தான் போடுகிறார்கள். அதைப்பற்றி எப்படி எழுதுகிறார்கள்? 'மதுரைக்குப் பக்கத்திலே 25 பிள்ளைகள் வாந்தி, மயக்கம்' புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள் திட்டத்திலே 25 குழந்தைகள் வாந்தி எடுத்ததாகச் சொல்லி அந்தப் பத்திரிகையிலே தலையங்கம் கொட்டை எழுத்துக்களிலே போடுகிறார்கள். உள்ளே படித்தால் மயக்கமா வாந்தியா என்று பார்த்தால், அங்கே பல்லி இருந்தது என்று ஒரு மாணவன் சொன்னானாம். மற்ற மாணவர்களுக்கு வாந்தி வந்ததைப்போல ஒரு உணர்வு ஏற்பட்டதாம். பத்திரிகை ஆசிரியர்கள், பத்திரிகை நடத்துபவர்கள் இப்படி எம்.ஜி.ஆர். ஆட்சியில் 25 பிள்ளைகள் வாந்தி என்று போட்டு, இவ்வளவு கேவலப்படுத்த வேண்டுமா? இன்றையதினம் நாடறிந்த மனிதராக தமிழ் நாட்டிலே இருந்துகொண்டிருக்கிறார்கள். இந்தியா பூராவும் பாராட்டுகின்ற திட்டம் இது. அந்தத் திட்டம் உலகம் பாராட்டுகின்ற ஒரு அருமையான திட்டம். அந்தத் திட்டத்தைக் கேவலமாக்க பல்லியின் பெயராலே, பாச்சையின் பெயராலே, கரப்பான் பூச்சி பெயராலே கிண்டல் செய்கின்ற ஒரு கேடுகெட்ட மோசமான உணர்வு படைத்தவர்கள் இந்த நாட்டிலே இன்னமும் இருக்கிறார்கள் என்று சொல்லிக் கொள்கிறேன். அதைப்பற்றி வேதனைப்படுவதா, வருத்தப்படுவதா என்று எனக்குத் தெரியவில்லை, இந்தத் திட்டம் புகப்புரட்சியை தமிழ் நாட்டிலே உருவாக்கக்கூடிய திட்டம். இன்றையதினம் ஜாதியைப்பற்றி பேசுகிறோம். பாரதியார் சொன்னார்கள் குடு குடுப்பைக்காரன் பாட்டில் சொன்னார்கள். எங்கு ஜாதிகள் குறைகிறதோ அங்கே சண்டைகள் தீருகிறது என்றார்கள். தமிழ் நாட்டிலே ஜாதிகள் குறையவில்லை. சண்டைகள் இல்லை என்ற நிலை வரவில்லை. ஜாதிகள்தான் சேருகின்றன. பாரதி கண்ட கனவு நினைவாகவில்லை. இன்றையதினம் தமிழ்நாட்டிலே மட்டுமல்ல, இந்தியாவிலே ஜாதிகள் சேர்கின்றன. சண்டைகள் தீரவில்லை. ஜாதிகள் சேர்கின்றனவே தவிர சண்டைகள் தீரவில்லை, ஜாதி சேர்கின்ற காரணத்தினாலே சண்டைகள் பிறக்கின்றனவே தவிர ஜாதிகள் குறைந்த பாடில்லை. அது மட்டுமல்ல, காசு பணத்தை வைத்து ஜாதியை இரண்டு பிரிவுகளாகப் பிரிக்கிறார்கள். ஒரு ஜாதி கவுண்டன் என்று இருக்கிறது. அதில் காசு இருந்தால் கவுண்டர் என்கிறார்கள். காசு இல்லாவிட்டால் கவுண்டன் என்கிறார்கள். நாய்க்கர் ஜாதியை எடுத்துக் கொண்டால், காசு இருந்தால் நாய்க்கர் என்கிறார்கள், காசு இல்லாவிட்டால் நாய்க்கன் என்கிறார்கள். வன்னியர் ஜாதியை எடுத்துக்கொண்டால், காசு இருந்தால் வன்னியர் என்கிறார்கள், காசு இல்லாவிட்டால் படையாச்சி என்கிறார்கள். முதலியார் ஜாதியை எடுத்துக்கொண்டால் காசு இருந்தால் முதலியார் என்கிறார்கள், காசு இல்லாவிட்டால் முதலி என்கிறார்கள். ஆக ஒரு இடத்திலே இரண்டு கூறாக ஜாதியைச் சேர்க்கிறார்களே தவிர வேறல்ல. ஆனால் இந்த மேன்மையான திட்டத்தின் காரணமாக பிஞ்சு குழந்தைகள் ஜாதியை மறந்து, பொருளாதார ஏற்றத்தாழ்வுகளை மறந்து அவர்கள் சோஷலிச சமுதாய உணர்வுகளைப் பெறுகிறார்கள். புரட்சித் தலைவர் அவர்கள் இந்தத் திட்டத்தை அறிவித்திருக்கிறார்கள். இவ்வளவு சிறப்பான திட்டத்திலே பல்லி விழாதா பூச்சி விழாதா என்று பார்த்துக் கொண்டிருக்கிறார்கள். இப்படியெல்லாம் இந்த நாட்டிலே இருக்கிறார்கள். 25 பிள்ளைகள் வாந்தி எடுக்காதா என்று பார்க்கிறார்கள். ஆனால் இப்போது கிண்டல் செய்தவர்கள் கேவலப்படுத்தியவர்கள் முட்டை கொடுக்கக் கூடாதா, அப்படிக் கொடுத்தால் பரவாயில்லை என்று சொல்கின்ற அளவுக்கு வந்திருக்கிறார்கள் என்று சொன்னால், அந்த மனப்போக்கை இந்த நேரத்தில் நாம் பாராட்டவேண்டும், அதை நாம் வரவேற்க வேண்டும். அதற்கு நாம் தயாராக இருக்கிறோம்.

வறட்சியைப்பற்றிப் பேசினார்கள். பலபேர்கள் சொன்னார்கள். தமிழ் நாட்டில் வறட்சி என்பது புதியது அல்ல. என்னுடைய அனுபவத்திலே சொல்கிறேன். 1965 லே மிகப் பெரிய வறட்சி வந்தது. 1975-லே வறட்சி வந்தது. இப்போதும் வறட்சி. ஆனால் அந்த வறட்சிக்கும் இந்த வறட்சிக்கும் இடையிலே வேறுபாடு இருக்கிறது. அந்த வறட்சி பருவ மழை பல பகுதிகளிலே குறைந்த காரணத்தினாலே ஏற்பட்டது. இந்த வறட்சி இறுதியாகப் பருவ மழை முற்றிலும் பொய்த்துவிட்டதாலே வந்த வறட்சி. 1965 லே வந்த வறட்சியைப் பார்த்தால், எலியையும் பெருச்சாளியையும் அடையாளம் காட்டிய வறட்சி. 1975 ஆம் ஆண்டு வறட்சி, வியாழக்கிழமை இரவு சோறு கூடாது என்று சொன்ன வறட்சி. 1975 லே ஒரு கிலோ அரிசி 3½ ரூபாய் அளவுக்கு ஏற்பட்டது. ஆனால் இன்று வறட்சி கடுமையாக இருந்தாலும்கூட, குளம் குட்டைகள் காய்ந்திருக்கக்கூடிய சூழ்

நிலை இருந்தாலும்கூட, இன்றைய அரசினுடைய விநியோக முறை, நிர்வாக முறை அந்த வறட்சி நிலைமை தெரியாதபடி செய்து வருகிறது. அந்த அளவுக்கு இந்த அரசு திட்டங்களை நிறைவேற்றி அமுல்படுத்தி வருகிறது. இப்போது இந்த வறட்சித் திட்டத்திலே அரசு சரியாகச் செயல்படவில்லை என்று சொன்னார்கள். 1965லும் 1975லும் ஏற்பட்ட வறட்சியை நாம் பார்த்திருக்கிறோம். இந்த நாட்டிலே இப்போது இருக்கின்ற வறட்சியை யும் நாம் பார்க்கிறோம். அதைப்பற்றிப் பல்வேறாகப் பேசுகிறார்கள். மேட்டூரில் தண்ணீர் இல்லை என்று சொன்னார்கள். இந்த வறட்சியைச் சமாளிக்க நம்முடைய அரசு 80 ஆயிரம் டன் அரிசி மாதந்தோறும் தேவை வேண்டுமென்று கேட்டார்கள். அது கேட்ட கேள்வி நிலையிலேயே இருக் கிறது. அதற்குப் பதில் வரவில்லை. "தாயைக் கொல்லும் பஞ்சத்தைத் தடுக்க முயற்சி உறார் கிளியே" என்று பாரதி சொன்னான். அவர்கள் வந்தே மாதரம் என்பார் கிளியே. "வாயைத் திறந்து சும்மா கிளியே வந்தே மாதரம் எனபார் கிளியே". இந்த தமிழ்நாடு பட்டினியால் சாகிறதே, இந்தத் தமிழக மக்கள் பட்டினியால் செத்துக் கொண்டிருக் கிறார்களே, அதைத் தடுப்பதற்கு 80 ஆயிரம் டன் அரிசி தேவையென்று சொல்கிறோம். ஆனால் அங்கே இருக்கின்ற அந்த வந்தே மாதரம் என்ற சொல்லுக்குச் சொந்தக்காரர்கள் அதற்கான பரிகாரத்தைக் காண முடிய வில்லை. வந்தே மாதரம் என்று சொல்வதிலேதான் காலத்தைக் கழிக் கிறார்களே தவிர, வேறு என்ன செய்ய இருக்கிறார்கள், இன்னமும் எப் போது விடிவு என்று தெரியவில்லை.

* திரு. க. இராமமூர்த்தி : மாண்புமிகு தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் வேகமாகப் பேசிக்கொண்டிருக்கிறார்கள் என்பதால் தலை யிடவேண்டாமென்று இருந்தேன். ஆனால் 1965 வறட்சியைப் பற்றிச் சொன்னார்கள். அதற்குப் பிறகு வந்த வறட்சியைப்பற்றிச் சொன் னார்கள். 1965-ல் வறட்சி இருந்த நிலைக்குப் பிறகு, பின்னாலே வந்த வறட்சியைப் பற்றி எல்லாம் சொன்னார்கள். இந்தியா முழுமையும் உணவைப் பெருக்குவதிலே இந்த மாநிலத்திலே இப்போது இருக்கின்றவர்கள், அதற்கு முன்னாலே இருந்தவர்களுடைய காண்ட்ரிபியூஷன் என்ன?





(பிற்பகல் 12-40)

மாற்றுத் தலைவர் (திரு. சி. இராமலிங்கம்) : மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பேசும்போது பதில் சொல்லலாமே. நேரம் அதிகமாகிறது.

* திரு. க. இராமமூர்த்தி : தலைவரவர்களே, 'வந்தே மாதரம்' தான் அந்தக் காண்ட்ரிபியூஷனைச் செய்திருக்கிறது. உணவுப் பெருக்கத்தை உருவாக்கியிருக்கிறது. 80 ஆயிரம் டன் என்பது மேடைப் பேச்சாகத்தான் இருந்து கொண்டிருக்கிறது. வறட்சி ஏற்படுகிறது என்ற நிலை ஏற்பட்ட பிறகு, உடனடியாக நிவாரணம் தேவை, பரிகாரங்கள் தேவை என்று குரல் கொடுக்கவில்லை. அதை அனுபவித்த பிறகுகூட, அதிலிருந்து பாடம் கற்றுக்கொள்ளவில்லை என்ற குற்றச்சாட்டை ஏற்றுக்கொள்வார்கள் என்று கருதுகிறேன். நாம் பல முறை வறட்சி நிவாரணம் பெற்று, பிறகு வேலை நடக்கும்போதே, நல்ல மழை பெய்து, முழுமையான அளவிற்கு நிவாரணம் வாங்க முடியவில்லை. எனவே 'வாய்ச் சொல்லில் வீராடி கிளியே' என்ற நிலையில்தான் நீங்கள் இருந்துகொண்டிருக்கிறீர்கள் என்று கருதுகிறேன்.

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : ரொம்ப நாளாக இந்தப் பிரச் சினையில் வாதிட்டிருக்கிறோம். முழுமையாக, தெளிவான விவரங்க ளோடு ஓர் அறிக்கை கொடுக்கவில்லை என்றால், அதனால் பயங்கரமான பாதிப்பு ஏற்படும். எனவே தாமதம்பற்றிச் சிந்திப்பதைவிட அறிக்கை "with all details" அனுப்பப்பட்டிருக்கிறது என்பதை எடுத்துக்கொள்ள வேண்டும்.

திரு. க. இராமமூர்த்தி : அந்த அறிக்கையின் முதல் பகுதி பருவ மழை பொய்த்த உடனே வந்திருக்க வேண்டும். கடைசியாக எப்போது வரும் என்று காத்திருந்து, அது பொய்த்த பிறகுதான் அனுப்புவோம் என்பது மாநிலத்தின் நலனுக்கு நல்லதல்ல.

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : மாவட்டக் கலெக்டர்களை அனுப்பி, அவர்களிடமிருந்து முழுமையான விவரங்களைப் பெற்று, அதற்குப் பிறகு அனுப்பினால்தான், அங்கே அதற்கு ரெகக்னிஷன் கிடைக்கும். அவசரப்பட்டு அனுப்பினால், அதற்குச் சரியான வகையில் மதிப்பு கிடைக்காது என்ற அச்சத்தின் விளைவாகத்தான், முழுமையான விவரங் களைச் சேகரித்து அனுப்பியிருக்கிறோம். முன்பு அவசரமாக அனுப்பியதை ஏற்றுக்கொள்ளவில்லை. நிராகரித்துவிட்டார்கள் என்பது தெரியும்.

* திரு. க. இராமமூர்த்தி : மாண்புமிகு அமைச்சரவர்கள் எவ்வளவு கட்டாயத்தில் இதைச் சொல்லுகிறார் என்பதை என்னால் உணர முடிகிறது. You have not declared the State as drought-hit. வறட்சியால் பாதித்திருக்கிறது என்று இந்த அரசு அறிவிக்கவில்லை. ஒரு மாநிலத்தின் ஆட்சியின் தலைவர்கூட வறட்சி நிலைமை இருக்கிறதென்று அறிவிக்கவில்லை.

திரு. காடுவெட்டி கன்னப்பன் : வறட்சியினுடைய முழு விவரங்களை அனுப்பவில்லை, குறித்த காலத்தில் அனுப்பவில்லை என்று சொன்னார்கள். அவர்கள் உட்கார்ந்துள்ள இடம் அப்படி. எதை வேண்டுமானாலும் சொல்லக்கூடிய இடத்தில் உட்கார்ந்திருக்கிறார்கள். உடனே அனுப்பினால், அவசரப்பட்டு அனுப்பிவிட்டார்கள், முழுமையான விவரம் இல்லை என்பார்கள். விவரங்களோடு முழுமையாக அனுப்பினால், தாமதமாக அனுப்பியிருக்கிறார்கள் என்பார்கள். அந்த இடம்தான் காரணம்.

* திரு. க. இராமமூர்த்தி : ஒவ்வொரு முறையும் வறட்சி நிவாரணத்தைப் பொறுத்தவரையில், தி.மு.க. ஆட்சியாக இருந்தாலும், அ.தி.மு.க. ஆட்சியாக இருந்தாலும், உரிய முறையில் உதவியிருக்கிறார்கள் என்று சொல்லி, மத்திய அரசுக்கு நன்றி தெரிவித்திருக்கிறார்கள். போதுமான அளவிற்குத் தரவில்லை என்று தெரிவித்தது இதுவரை கிடையாது.

திரு. காடுவெட்டி கன்னப்பன் : எனக்கு இருக்கும் கவலையைச் சொல்லி விடுகிறேன். அரை மணிக்குள் இந்த ஆட்சி கலைக்கப்படும், நாங்கள் மேற்பார்வை செய்துகொண்டிருக்கிறோம், கண்காணிப்பு செய்து கொண்டிருக்கிறோம் என்று மாநில அரசைக் கண்காணிக்கும் அரசுக்கு, வேதனைப்படும் மக்களுக்கு, பட்டினியால் சாகக் கிடக்கும் மக்களுக்கு 2 மாதத்திற்குத் தான் அரிசி இருக்கிறது, எனவே 80,000 டன் அரிசி மாதந்தோறும் அனுப்புங்கள் என்று சொல்லும்போது, கண்காணிக்கும் உரிமையுள்ள அந்த அரசுக்கு அதைச் செய்ய உரிமை இல்லை, தகுதி இல்லை, யோக்யதை இல்லை.

* திரு. க. இராமமூர்த்தி : மாண்புமிகு உறுப்பினரவர்கள் முன்னுக்குப் பின் முரணாகப் பேசி யோக்கியதைப்பற்றிச் சொல்லுகிறார்கள். பஞ்சம் இல்லாமல் காப்பாற்றிக் கொண்டிருக்கிறோம் என்று முதலில் சொன்னார்கள். இப்போது பட்டினி கிடக்கிறார்கள் என்று சொல்லுகிறார்கள். யோக்கியதை என்று எதை எடுத்துக்கொள்வது ?





திரு. காடுவெட்டி கன்னப்பன் : ஆட்சியை அரை மணிக்குள் கலைப்போம், கண்காணிக்கும் பவர் இருக்கிறது. ஒவ்வொரு ஆட்சியையும் கண்காணிக்கும் இடத்தில் இருக்கிறோம் என்று சொல்லுகிறவர்களுக்கு இது தெரியாதா ? மேட்டூரில் தண்ணீர் இல்லை என்று பல முறை சொல்லியாகி விட்டது. அதற்குப் பிறகு 2 அரசுகளையும் கூப்பிட்டுப் பேசி முடிவு காணும் சூழ்நிலையில் இருக்கிறவர்கள் அவர்கள். இந்திராதான் இந்தியா என்று ஒரு காலத்தில் கோஷம் போட்டவர்கள். தமிழகத்தின் ஒரு பகுதி தஞ்சை காய்கிறதென்றால், இந்தியாவின் ஒரு பகுதியாக அது இருக்கிறதென்று எடுத்துக்கொள்ள வேண்டும். தமிழகத்தில் ஒரு பகுதி காய்கிறது என்று புறக்கணித்தால், எப்படி அந்த நோக்கோடு நாம் பேச முடியும் ?

* திரு. க. இராமமூர்த்தி : மாண்புமிகு உறுப்பினரவர்கள் சொல்வதால் சொல்லுகிறேன். இதிலே எப்படி எல்லாம் அணுகி இருக்கிறோமென்று மாண்புமிகு நீர்ப்பாசனத்துறை அமைச்சரவர்களுக்குத் தெரியும். இன்னும் விளக்கமாகச் சொல்ல வேண்டுமென்றால், இந்தத் துறையிலே பேச்சுவார்த்தை நடத்திக் கொண்டிருக்கிறோம், சுமுக நிலை ஏற்படுமென்று புத்தியிலே உள்ளவர்கள் சொல்லுவது மாத்திரமல்ல, இதற்கு முன்னமேயே நாமும் சொல்லி வந்தோம் என்பதை எண்ணிப் பார்த்தால், இதில் உள்ள உண்மை விளங்கும்.

திரு. காடுவெட்டி கன்னப்பன் : நான் எதற்காகச் சொல்கிறேன் என்றால், இந்தியா இந்தியாவாக இருக்க வேண்டுமென்பதற்காகச் சொல்லுகிறேன். இப்போது ரெயில்வே துறையில் இந்தியைப் புகுத்தும ஆர்வம் இந்தியாவைக் காப்பதில் இருக்க வேண்டுமென்பதுதான் என்னுடைய ஆசை. இந்தியைப் புகுத்துவதில் காட்டும் போர்வம், இந்தியாவில் ஒரு பகுதி காய்கிறது என்று சொல்லும்போது, அதைத் தடுக்க ஏன் வரவில்லை ?

* திரு. க. இராமமூர்த்தி : பொதுவான பிரச்சினைகள் என்று சொல்லும்போது, சில உண்மை நிலைமைகளை இந்த அவையிலே விவாதிக்கவில்லை. அனைத்துக் கட்சிக் கூட்டத்தில் விளக்கமாக விவாதித்திருக்கிறோம். விவாதம் இங்கேயே தேவை என்றால், வைத்துக்கொள்ளலாம். நான் தயார்.

திரு. காடுவெட்டி கன்னப்பன் : நாங்கள் இந்தியாவாக இருக்க வேண்டுமென்று ஆசைப்படுகிறோம். இந்தியாவிலே எந்தப் பகுதி நட்டப்பட்டாலும், அது இந்தியாவைப் பாதிக்கும். எந்த ஒரு ப[illegible] உற்பத்திப்

பெருக்கம் ஏற்பட்டாலும், ஒட்டுமொத்தமாக இந்தியாவின் உற்பத்தி பெருகும் என்ற உணர்வோடு இந்தப் பிரச்சினையையும் அணுக வேண்டும். ஒருசீரான அணுகு முறை இல்லை என்பதை எல்லோரும் உணர்ந்திருக்கிறோம். இங்கே பிலிம் தொழிற்சாலை பற்றிச் சொன்னார்கள். [illegible]ரணபத்தில் இரண்டு ஆழ் கிணறுகள் தோண்டப்பட்டு, எண்ணெய் எடுக்கும் வேலை நடந்தது. இப்போது அது என்ன நிலையில் இருக்கிறதென்பது தெரியவில்லை.

நம்முடைய மரியாதைக்குரிய நீலகிரி பாராளுமன்ற உறுப்பினர் நாடாளுமன்றத்தில் பேசும்போது, தமிழ் நாட்டில் தொழிற்சாலைகளைக் கொண்டு வர வேண்டுமென்று சொன்ன நேரத்தில், இந்திய நாட்டின் பிரதமராக இருக்கும் இந்திரா காந்தி அம்மையார் அவர்கள் ஒன்றைச் சொன்னார்கள். வடக்கு வாடுகிறது, தெற்கு வாழ்கிறது என்ற வாதத்தை அவர்கள் பாராளுமன்றத்தில் வைத்திருக்கிறார்கள். இதை இல்லை என்று மாண்புமிகு உறுப்பினர்கள் சொல்ல முடியாது. வடக்கு வாடுகிறது, தெற்கு வாழ்கிறது, யார் சொல்லுவது? வேறு யாராவது சொல்லியிருந்தால், எவ்வளவு உணர்வுகளைச் சொல்லியிருப்பார்கள் என்று தயவு செய்து எண்ணிப் பார்க்க வேண்டும். இந்தியா பூராவையும் பார்க்கும் இடத்தில் உட்கார்ந்து கொண்டு, வடக்கு வாடுகிறது, தெற்கு வாழ்கிறது என்று சொல்கிறார்கள் என்றால், எப்படி இந்தியாவின் தேசிய உணர்வைக் காப்பாற்றுவது என்பதில்தான் நம்முடைய கவனம் செல்கிறது என்பதை இந்த நேரத்தில் சொல்வது பொருத்தமாக இருக்குமென்று கருதுகிறேன்.

(பிற்பகல் 12-50)

பல பிரச்சினைகளைப்பற்றி இங்கே கூறியிருக்கிறார்கள். கடைசியாக, இந்தியைப் பற்றி ஒரே ஒரு வார்த்தை. ஒரு அழகு வாய்ந்த உயர்ந்த கோபுரத்தின் மேலே ஒரு ஆலமர விதை விழுந்து முளைக்கிறது என்றால் அந்தச் செடியை செடியிலேயே களைந்துவிட வேண்டும். அதுவே மரமாகிவிட்டால், கோபுரத்தையே இடிக்க வேண்டிய சூழ்நிலை வரும். இந்தியா என்ற அழகு வாய்ந்த கோபுரத்திலே இன்றையதினம் இந்தி என்ற ஆலமர விதையை விதைத்திருக்கிறார்கள். அது இன்றைக்குச் செடியாக இருக்கிறது. அதுவே வளர்ந்து மரமானால், இந்தியா என்ற அழகு மிகுந்த, வண்ணமிக்க கோபுரம் சுக்கல் சுக்கலாக நொறுங்கி விழக்கூடிய சூழ்நிலை வரும். என்றைக்குமே அழகு குலையாமல், பார்த்துக்கொண்டிருக்க வேண்டுமென்று நாங்கள் ஆசைப்படுகிறோம். தேசியத்திலே





நம்பிக்கையுள்ளவர்களே, தேசியம் தேசியம் என்று சொல்லுபவர்களே, செடியிலேயே களைந்துவிடுங்கள். அப்படிச் செய்யாமல் இருக்கக்கூடிய சூழ்நிலை என்றைக்கும் வரவேண்டாம். கோபுரம் கோபுரமாகவே இருக்கட்டும். அந்த கோபுரத்தைக் கட்டிக்காப்பதிலே அக்கறையோடு நாங்கள் பார்த்துக்கொண்டிருக்கிறோம். தேசியம் என்று வாயளவில் பேசுபவர்களே, தேசியம் தேசியம் என்று வாயளவில் பேசாமல் இந்த விஷயத்தில் ஒரு நல்ல முடிவுக்கு விரைவில் வாருங்கள் என்று கேட்டுக்கொண்டு வாய்ப்பளித்தமைக்கு நன்றி கூறி அமைகிறேன்.

*செல்வி ஆ. லீலாவதி: மாற்றுத் தலைவரவர்களே, ஆளுநர் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின் மீது பேசுவதற்கு எனக்கு வாய்ப்பளித்தமைக்கு முதற்கண் என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். முதலமைச்சரின் சத்துணவுத் திட்டம் பாராட்டத்தக்க ஒன்று. "இரண்டு வயது முதல் நான்கு வயது வரையுள்ள 23 லட்சம் குழந்தைகள் 27,800 குழந்தை நல நிலையங்களிலும், ஐந்து வயது முதல் ஒன்பது வயது வரையுள்ள 42 லட்சம் குழந்தைகள் 33,700 பள்ளி நிலையங்களிலும், அன்றாடம் முழுமையான, நல்ல சத்துணவு அளிக்கப்பட்டு வருகின்றனர். பள்ளிக் கூடங்கள் மூடப்படும் முக்கியமான அரசு விடுமுறை நாட்கள் ஒரு சில நீங்கலாக, ஆண்டு முழுவதிலும் எல்லா நாட்களிலும் குழந்தைகளுக்கு உணவு அளிக்கப்பட்டு வருகிறது" என்று சொல்லப்பட்டிருப்பதை நான் வரவேற்கிறேன். மேலும் "தலைமை ஆசிரியர்களுக்கும், ஏனைய ஆசிரியர்களுக்கும் புதிய பொறுப்பு முழுவதும் நீங்குவதுடன், இதனால் 35,000 பேருக்கு வேலை வாய்ப்பு கிட்டும்" என்று சொல்லப்பட்டிருப்பதற்காகவும் என்னுடைய நன்றியைக் கூறிக்கொள்கிறேன். இப்போது அமைக்க இருக்கின்ற இந்த 35 ஆயிரம் அமைப்பாளர்களும் நல்ல முறையில் இயங்க வேண்டும். இவர்களும் 365 நாட்களும் பணி செய்ய வேண்டுமென்று உள்ளது. சனிக் கிழமை, ஞாயிற்றுக் கிழமை போன்ற தினங்களில் விடுமுறை அளிக்க வேண்டும். அப்போது குழந்தைகளுக்கு ரொட்டி, முட்டை, பால் போன்றவைகளைக் கொடுத்தால், அங்கு சமைக்கும் வேலை செய்பவர்களுக்கும் மேற்பார்வையிலிருப்பவருக்கும் ஓரளவு ஓய்வு கிடைக்கும். இந்த விஷயத்தில் அரசு ஆவன செய்யும் என்று நம்புகிறேன்.

அடுத்து, மகாகவி சுப்பிரமணிய பாரதியார் நூற்றாண்டு விழாக் கொண்டாட்டத்திற்கு ஆசிரியர்கள் நல்லமுறையில் ஒத்துழைத்திருக்கிறார்கள். இரண்டு நாட்களுக்கு முன்பு 26 ஆம் தேதி குடியரசு தின விழாவில் ஆசிரியப் பெருமக்கள் பெருமளவுக்கு பங்கெடுத்துக்கொண்டார்கள். அது சிறப்பாக அமைய ஆசிரியர்கள் முற்றிலும் உழைத்திருக்கிறார்கள்.

அதோடு இந்தச் சத்துணவுத் திட்டமும் முழுமையாக வெற்றி பெற ஆசிரியர்கள் தங்களுடைய முழு ஒத்துழைப்பையும் தந்திருக்கிறார்கள். மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்களும் ஆசிரியர்களைப் பாராட்டியிருக்கிறார்கள். 1982 ஆம் ஆண்டு கல்வித் துறையைப் பொறுத்தவரையில் இம் மாநில அரசு பாராட்டுக்களைப் பெற்றுள்ளது. இதற்கெல்லாம் காரணம் ஆசிரியர்கள்தான் என்பதை அரசே ஒத்துக்கொள்ளும் என்று நான் திட்டமாக நம்புகிறேன். ஆகையால் ஆசிரியர்களுக்கும் காவல் துறையில் வழங்குவது போல், எல்லா நன்மைகளையும் வழங்க வேண்டும். முக்கியமாக தனியார் பள்ளி ஆசிரியர்களுக்கு நேரிடையாகச் சம்பளம் கொடுக்க வேண்டும். இத் திட்டத்தை விரைவுபடுத்த வேண்டும். அப்படிச் செய்வது அவர்களை ஊக்குவிப்பதாக இருக்கும்.

அடுத்து, இத்தனை நாட்கள் சத்துணவுத் திட்டத்தை வெற்றிகரமாக நிறைவேற்றும் பணியில் ஈடுபட்டிருந்த ஆசிரியர்களுக்கு போனஸ் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அவர்களையும் உற்சாகப்படுத்த வேண்டும். அவர்கள் எந்த அளவுக்கு அரசுடன் ஒத்துழைத்தார்கள் என்பதை எண்ணிப்பார்த்து அவர்களுக்கு இந்த ஊக்குவிப்புத் தொகையை அளித்தால், மிகவும் நலமாக இருக்கும்.

அடுத்தபடியாக, ஆசிரியர்களுக்கு என்று தனியாக ஒரு வீட்டு வசதி வாரியம் அமைத்து, அவர்கள் ஒவ்வொருவருக்கும் வீட்டு வசதி ஏற்படுத்திக் கொடுக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன். ஆசிரியர்கள் தான் இந்த நாட்டின் முதுகெலும்பையொத்தவர்கள் என்பதை அனைவரும் உணருவார்கள். அவர்கள்தான் நாட்டின் எல்லா நலன்களுக்கும் பாடுபடுவார்கள். அதுபோல் கிராமப்புறங்களில் வாழும் ஆசிரியர்களுக்கு வீட்டு வாடகைப் படி அளித்தால் அந்த ஆசிரியர்களும் தங்களுடைய முழு ஒத்துழைப்பையும் அரசுக்கு அளிப்பார்கள்.

அடுத்து, ஒவ்வொரு வருவாய் கிராமத்திலும் பொதுமக்களுக்காக குறிப்பாக பெண்களுக்காக கழிப்பிடங்களைக் கட்டுவதற்கு அரசு தன்னுடைய முழுக் கவனத்தையும் செலுத்துவதற்காக என்னுடைய பாராட்டுகளைத் தெரிவித்துக்கொள்கிறேன். இப்போது பழுதடைந்த நிலையில் அநேக கழிப்பிடங்கள் இருக்கின்றன. அவைகள் உபயோகப்படுத்த முடியாத நிலையில் இருக்கின்றன. பொதுவாக இவைகளில் இன்றைக்கு பெண்கள் நுழைந்து செல்ல வேண்டியிருக்கிறது. இவைகளை உடனடியாக ரிப்பேர் பார்க்க வேண்டும். அதோடு சில கழிப்பிடங்களில் தண்ணீர் வசதி இல்லை. மிகவும்





மோசமான நிலையில் அவை இருக்கின்றன. அவ்வாறு மேலும் மேலும் இக்கழிப்பிடங்களை வைத்திராமல் பெண்கள் உபயோகிக்கும் வகையில் அரசு சரிசெய்ய வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

பொதுவாக, அரசு பல திட்டங்களைக் கொண்டுவரும்போது எல்லாம் அவை உண்மையிலேயே பொதுமக்களுக்கு உபயோகமாகவும், பயன்படும் அளவுக்கும் இருக்கின்றனவா என்று பார்க்க வேண்டும். இன்றைக்கு மாநகராட்சிப் பள்ளிகளிலே அநேக கழிப்பிடங்கள் கட்டியிருக்கிறார்கள். ஆனால் அவைகளை உபயோகப்படுத்த முடியவில்லை. ஆயிரக்கணக்கான பெண்கள் படிக்கும் பள்ளிகள் கூட இன்றையதினம் இம்மாதிரி இருக்கின்றன. இந்த வகையில் பல ஆயிரக்கணக்கான ரூபாய்களைச் செலவு செய்திருக்கிறார்கள். இப்படி எல்லாம் செலவு செய்தும் கூட, அவை உண்மையிலேயே பயன்பட முடியாத வகையில் இருக்கின்றன. இதற்கெல்லாம் அதிகாரிகளின் கவனக் குறைவு தான் காரணம் என்பதை நான் இங்கே தெளிவுபடக் கூறுகிறேன். பொதுவாக அரசு கொண்டு வருகின்ற திட்டங்களை நிறைவேற்றுவதற்கு அரசு அதிகாரிகளும் அரசுக்கு தங்களுடைய முழு ஒத்துழைப்பையும் நல்கி, திட்டங்களின் பலன்கள் வெகு விரைவில் பொது மக்களைச் சென்றடைய உதவி செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, இந்த வருடம் பருவ மழை பொய்த்திருப்பதால் நீர்த் தேக்கங்களில் தண்ணீர் இல்லாததால் விவசாயிகளுக்குக் கஷ்டமான நிலையும், மின்சாரப் பற்றாக்குறையும் ஏற்பட்டிருக்கிறது. அரசு அதிகமான மின் திட்டங்களைக் கொண்டு வருவதாக அறிவித்திருப்பதை நான் பாராட்டுகிறேன். மத்திய அரசும் இந்த விஷயத்தில் மாநில அரசுக்கு உதவியாக இருக்கும் என்று நான் நம்புகிறேன். எனக்கு ஆளுநர் உரையின் மீது பேசுவதற்கான வாய்ப்பினை அளித்தமைக்கு நன்றி கூறி அமர்கிறேன்.

**மாற்றுத் தலைவர் (திரு. சி. இராமலிங்கம்) :** மேலவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்று மீண்டும் அவை நாளை காலை 9-30 மணிக்குக் கூடும்.

பின்னர், அவை ஒத்திவைக்கப்பட்டது.

(பிற்பகல் 12-58)

### 4. அவைமுன் வைக்கப்பட்ட ஏடுகள்

#### *A. Statutory Rules and Orders.*

122. Notification issued with G.O. Ms. No. 1279, Commercial Taxes and Religious Endowments, dated the 19th November 1982 regarding shifting of Londonpet Checkpost at Krishnagiri-Bangalore Road. [Laid on the table of the House under section 53(5) of the Tamil Nadu General Sales Tax Act, 1959 (Tamil Nadu Act 1 of 1959).]

123. Notification issued with G.O. Ms. No. 486, Prohibition and Excise, dated the 3th July 1982 regarding consequential amendment to rule 3 and 12 of the Tamil Nadu Disposal of Articles (Confiscated under the Tamil Nadu Prohibition Act) Rules, 1979 [Laid on the table of the House under section 54(3) of the Tamil Nadu Prohibition Act, 1937 (Tamil Nadu Act X of 1937).]

124. Audit Report on the Annual Accounts of the Tamil Nadu Electricity Board for the year 1980-81 and Balance Sheet as on 31st March 1981 (English). [Laid on the table of the House under section 69(5) (*a*) of the Electricity (Supply) Act, 1948 (Central Act 54 of 1948).]

#### *B. Reports, Notifications and Other Papers.*

16. Sixteenth Report of the Committee on Public Accounts on the paragraphs pertaining to certain Departments in the Accounts of the Government of Tamil Nadu for the year 1976-77 and the report of the Comptroller and Auditor-General of India for the year 1976-77 (Civil) (Part II) (Tamil and English).



### இணைப்பு.

(231 ஆம் பக்கத்தில் உடுக்குறியிட்ட வினா எண் 30க்கான விடையைக் காண்க.)

(அ) தமிழ் நாட்டில் இரத்த சேமிப்பு வங்கிகள் மருத்துவப்பணி மற்றும் குடும்ப நலத்துறையின்கீழ் கீழ்கண்ட இடங்களில் இயங்குகிறது.—

| (1) | (2) | (3) |
|---|---|---|
| செங்கை மாவட்டம் | அரசினர் மாவட்ட தலைமை மருத்துவமனை | காஞ்சிபுரம். |
| | அரசினர் மருத்துவமனை | திருவள்ளூர் |
| | அரசினர் மருத்துவமனை | மதுராந்தகம் |
| வட ஆற்காடு மாவட்டம் | அரசினர் மாவட்ட தலைமை மருத்துவமனை | வேலூர். |
| | அரசினர் மருத்துவமனை | திருவண்ணாமலை. |
| | .. | குடியாத்தம். |
| | .. | ஆம்பூர். |
| | .. | திருப்பத்தூர். |
| | .. | வாணியம்பாடி. |
| சேலம் மாவட்டம் | அரசினர் மாவட்ட தலைமை மருத்துவமனை | சேலம். |
| | அரசினர் மருத்துவமனை | ஆத்தூர். |
| | .. | நாமக்கல். |
| | .. | மேட்டூர் அணை |
| தென் ஆற்காடு மாவட்டம் | அரசினர் மாவட்ட தலைமை மருத்துவமனை | கடலூர், |
| | அரசினர் மருத்துவமனை | திண்டிவனம். |
| | .. | விழுப்புரம். |
| | .. | சிதம்பரம். |
| | .. | விருதாச்சலம். |
| | .. | உளுந்தூர் பேட்டை |

| (1) | (2) | (3) |
|---|---|---|
| மதுரை மாவட்டம் | அரசினர் மாவட்ட தலைமை மருத்துவமனை | திண்டுக்கல். |
| | அரசினர் மருத்துவமனை | பழனி. |
| | ,, | கொடைக்கானல். |
| | ,, | திருமங்கலம். |
| | ,, | பெரியகுளம். |
| நீலகிரி மாவட்டம் | அரசினர் மாவட்ட தலைமை மருத்துவமனை | உதகமண்டலம். |
| | அரசினர் மருத்துவமனை | குன்னூர். |
| | ,, | கூடலூர். |
| முகவை மாவட்டம் | அரசினர் மாவட்ட தலைமை மருத்துவமனை | இராமநாதபுரம். |
| | அரசினர் மருத்துவமனை | விருதுநகர். |
| | ,, | அருப்புக்கோட்டை |
| | ,, | சிவகங்கை. |
| | ,, | இராசபாளையம். |
| கோவை மாவட்டம் | அரசினர் மாவட்ட தலைமை மருத்துவமனை | திருப்பூர் |
| | அரசினர் மருத்துவமனை | உடுமலைப்பேட்டை |
| | ,, | பொள்ளாச்சி |
| | ,, | மேட்டுப்பாளையம் |
| பெரியார் மாவட்டம் | அரசினர் மாவட்ட தலைமை மருத்துவமனை | ஈரோடு |
| | அரசினர் மருத்துவமனை | கோபிசெட்டிபாளையம் |
| | ,, | பவானி |
| | ,, | தாராபுரம் |



| (1) | (2) | (3) |
|---|---|---|
| கன்னியாகுமரி மாவட்டம் | அரசினர் மாவட்ட தலைமை மருத்துவமனை | நாகர்கோவில் |
| புதுக்கோட்டை மாவட்டம் | அரசினர் மாவட்ட தலைமை மருத்துவமனை | புதுக்கோட்டை |
| | அரசினர் மருத்துவமனை | அறந்தாங்கி |
| தஞ்சை மாவட்டம் | அரசினர் மாவட்ட தலைமை மருத்துவமனை | நாகப்பட்டினம் |
| | அரசினர் மருத்துவமனை | கும்பகோணம் |
| | ,, | மாயூரம் |
| | ,, | மன்னார்குடி |
| | ,, | பட்டுக்கோட்டை |
| நெல்லை மாவட்டம் | அரசினர் மாவட்ட தலைமை மருத்துவமனை | தூத்துக்குடி |
| | அரசினர் மருத்துவமனை | திருச்செந்தூர் |
| | ,, | கோவில்பட்டி (வி.அ.) |
| | ,, | தென்காசி |
| தருமபுரி மாவட்டம் | அரசினர் மாவட்ட தலைமை மருத்துவமனை | தருமபுரி |
| | அரசினர் மருத்துவமனை | கிருஷ்ணகிரி |
| | ,, | ஓசூர் (வி.அ.) |
| திருச்சி மாவட்டம் | அரசினர் மாவட்ட தலைமை மருத்துவமனை | திருச்சிராப்பள்ளி |
| | அரசினர் மருத்துவமனை | மணப்பாறை (வி.அ.) |
| | ,, | பெரம்பலூர் (வி.அ.) |
| | ,, | அரியலூர் (வி.அ.) |
| | ,, | கரூர் (வி.அ.) |

(ஆ) இரத்ததானம் செய்பவர்கள் கீழ்க்காணுமாறு ஊக்குவிக்கப்படுகிறார்கள்.

அ.ஆ. எண். 468 (மக்கள் நல்வாழ்வு, மற்றும் குடும்பநலம்) நாள் 26.2.75ன் படி கீழ்க்காணும் உணவுப் பொருட்கள் இரத்த தானம் கொடுக்கிறவர்களுக்கு இலவசமாக அளிக்கப்படுகிறது:—

1. ரொட்டி 200 கிராம் அல்லது முட்டை ஒன்று.

2. வெண்ணெய் 30 கிராம் அல்லது ஆரஞ்சுப்பழம் ஒன்று

3. காப்பித்தூள் அல்லது தேயிலைத்தூள் 7½ கிராம் (காப்பி அல்லது தேனீர் தயாரிக்க).

4. போர்ன்விட்டா அல்லது ஒவல்டின் ஏதாவது 15 கிராம்.

5. வெள்ளை சர்க்கரை 15 கிராம்.

6. இரும்புச் சத்து மாத்திரைகள் 25.

7. பால் 200 மில்லி.

அ.ஆ. எண். 2056, (மக்கள் நல்வாழ்வு, மற்றும் குடும்பநலம்), நாள் 23.11.79ன் படி கீழ்க்காணும் சலுகைகள் இரத்ததானம் கொடுப்பவருக்கு அளிக்கப்படுகிறது :—

1. ஏழுமுறை இரத்ததானம் அளித்த ஒருவர் சிகிச்சைக்காக மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டால் மருத்துவக் கட்டணம் குறைத்து வசூலிக்கப்படுகிறது.

2. இரத்ததானத்தன்று ஒரு நாள் சிறப்பு தற்செயல் விடுப்பு அளிக்கப்படுகிறது.

3. இரத்ததானம் கொடுப்பவர்களுக்கு ஊக்கத் தொகையாக ரூ. 15 அளிக்கப்படுகிறது.

மேலும் தனிப்பட்ட சேவை அமைப்புகள் இரத்ததான முகாம்கள் நடத்தும் பொழுது அருகிலுள்ள அரசு மருத்துவ மனைகள் மூலம் எல்லா வகையான உதவியும் அளிக்கப்படுகிறது.

(இ) 1979-80, 1980-81-ஆம் ஆண்டுகளில் சராசரியாக 9,098 நபர்கள் இரத்ததானம் செய்திருக்கிறார்கள்.

---

[ISSUED 21—9—1983

290
S. No. 142/51/5
ஆணையர் தமிழ்நாடு ஆவணக்காப்பகம் மற்றும் வரலாற்று ஆராய்ச்சி
5-9-1985
எழும்பூர் சென்னை-600 008

# TAMIL NADU LEGISLATIVE COUNCIL DEBATES

# OFFICIAL REPORT

SATURDAY 29th JANUARY 1983

Volume CXCI (No. 4)

GOVERNMENT OF TAMIL NADU
1983

Legislative Council Department
Fort St. George, Madras-600 009

Price Rs. 2.75 Paise]

S. No. 142/35/7 290

பக்கங்கள்

பொருளடக்கம்.

1. வினாக்கள்-விடைகள் 307—329

2. மேலவை விதி 52-ன் கீழ் அமைச்சரின் விவர அறிக்கை—

கேரளாவிலிருந்து மின்சாரம் பெறுவது குறித்து ஒப்பந்தம் குறித்து 329—330

3. ஆளுநர் உரையின் மீது விவாதம்—தொடர்ச்சி 330—405

4. அவை முன் வைக்கப்பட்ட ஏடுகள் 405

143130

D

V211,32'N83

N83.191.3-S

## தமிழ்நாடு சட்டமன்ற மேலவை.

சனிக்கிழமை, 1983 ஜனவரி 29.

தை 16, துந்துபி—திருவள்ளுவராண்டு 2014.

சென்னை, செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள மேலவை மண்டபத்தில் பகல் 9-30 மணியளவில் மாண்புமிகு மேலவைத் தலைவர் (டாக்டர் பொ. சிவஞானம்) அவர்கள் தலைமையில் அவை கூடியது.

### 1. வினாக்கள்—விடைகள்.

### உடுக்குறியிட்ட வினாக்கள்.

### நெய்வேலி பழுப்பு நிலக்கரி நிறுவன பள்ளி ஆசிரியர்கள்.

*31 வினா.—திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் : மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டு கிறேன்—

(அ) நெய்வேலி பழுப்பு நிலக்கரி நிறுவனத்தைச் சார்ந்த பள்ளி களில் பணியாற்றும் ஆசிரியர்களுக்கு மிகை ஊதியம் வழங்கப்படுகிறது என்பது உண்மையா?

(இ) ஆம் எனில், எவ்வளவு தொகை வழங்கப்படுகிறது?

(உ) இது எந்த அடிப்படையில் வழங்கப்படுகிறது?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : (அ) ஆம். சில ஆசிரியர்களுக்கு நெய்வேலி கார்ப்பரேஷன் ஊதிய விகிதத்தின்படி வழங்கப்படுகிறது.

(இ) மத்திய அரசு உத்தரவின்படி என்.எல்.சி. நிர்வாகத்தினர் 31—12—1973 முடிய நியமனம் செய்தவர்களுக்கு நெய்வேலி கார்ப்பரேஷன் ஊதிய விகிதத்தில் ஊதியம் வழங்கப்பட்டுள்ளது. அதன்படியே நிர்வாகத் தினரும் ஆசிரியர் மற்றும் ஆசிரியரல்லாதாரும் ஒப்பந்தமும் செய்து கொண் டுள்ளனர். இவர்களுடைய ஊழியப் பதிவேட்டிலும் கார்ப்பரேஷன் ஊதிய விகிதம் குறிக்கப்பட்டுள்ளது. 1—1—1974 முதல் நியமனம் செய்யப் பட்ட ஆசிரியர் மற்றும் ஆசிரியரல்லாதாருக்கு மாநில அரசு வழங்கும்

ஊதியம் வழங்கப்பட வேண்டுமென மத்திய அரசு ஆணை பிறப்பித்தது. இருப்பினும், 1—1—1974-க்கு முன்பாக நியமனம் செய்து பணிபுரியும் ஆசிரியர்களுக்கு கார்ப்பரேஷன் ஊதிய விகிதம்தான் வழங்கப்பட்டாலும், தமிழக அரசு ஊதிய விகிதம் மாநில நிதியிலிருந்து வழங்கப்படுகிறது. எனவே, கார்ப்பரேஷன் வழங்கும் அதிகப்படியான ஊதியத் தொகைபற்றிய விவரம் கணக்கில் எடுத்துக்கொள்ளப்படுவதில்லை.

(உ) மேலே (இ)-ல் குறிப்பிட்டபடி கார்ப்பரேஷன் ஊதிய விகிதப் 31—12—1973 வரை நியமனம் செய்தவர்களுக்கு அளிக்கப்பட்டு வந்தது. மத்திய அரசு ஆணையின்படி 1—1—1974 முதல் நியமனம் செய்பவர்களுக்கு மாநில அரசு வழங்கும் ஊதியமே வழங்கப்பட்டு வருகிறது. கார்ப்பரேஷன் ஊதிய விகிதத்திற்கும் மாநில அரசு ஊதிய விகிதத்திற்கும் உள்ள வித்தியாசத் தொகையை நெய்வேலி நிர்வாகத்தினரே ஏற்கின்றனர். அதனை மாநில அரசு மூலம் பெறுவதில்லை. பொது நிதியிலிருந்து ஏற்பதில்லை. எனவே, ஆசிரியர்கட்கு நெய்வேலி நிறுவனத்தால் அவர்கள் நிதியிலிருந்து கூடுதலாகக் கொடுத்தால், அதற்கு நாம் தடையாக நிற்க வேண்டியதில்லை.

திரு. சி. நா. லெட்சுமிகாந்தன்: மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் மிகவும் தெளிவான விவரங்களை இந்த அவையிலே கொடுத்திருக்கிறார்கள். அந்த விவரங்களின் அடிப்படையில்தான் அங்கே இப்போது பிரச்சினைகள் தோன்றியிருக்கின்றன. 31—12—1973 வரை நியமிக்கப்பட்டவர்களுக்கு மத்திய அரசின் ஊதிய விகிதத்தில் சம்பளம் கொடுக்கப்படுகிறது. 1—1—1974 முதல் வந்த ஆசிரியர்களுக்கு மாநில அரசினுடைய ஊதிய விகிதத்தின்படி சம்பளம் கொடுக்கப்படுகிறது, ஆகவே, ஒரே கல்வி நிறுவனத்திலே பணிபுரியும் ஆசிரியர்களில் ஒரு பாகுபாடு ஏற்பட்டு, மத்திய அரசின் ஊதிய விகித அடிப்படையில் சம்பளம் பெறும் ஆசிரியர்கள் என்று ஒரு பிரிவும், மாநில அரசின் ஊதிய விகித அடிப்படையில் ஊதியம் பெறும் ஆசிரியர்கள் என்று இன்னொரு பிரிவுமாக இருக்கிறார்கள். மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் சொன்ன கார்ப்பரேஷன் ஊதியம் என்பது மத்திய அரசின் ஊதியம். அதை வாங்கும் ஆசிரியர்களின் எண்ணிக்கை அதிகம். மாநில அரசின் ஊதிய விகித அடிப்படையில் ஊதியம் வாங்கும் ஆசிரியர்களின் எண்ணிக்கை குறைவு. இப்படி இவர்களின் எண்ணிக்கை குறைவாக இருப்பதால், இந்த வேறுபாட்டைப் போக்க தேவையான நடவடிக்கைகளை எடுக்க நெய்வேலி நிறுவனத்திற்கு நம்முடைய தமிழக அரசின் சார்பில் ஏதாவது அறிவுரை இந்த அரசு கூறுமா?



மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: நம்முடைய ஊதிய விகிதத்திற்கும் குறைவாகக் கொடுத்தால், அதில் நிச்சயமாக நாம் தலையிட்டு நம்முடைய ஊதிய விகிதத்தைப் பெற்றுத்தர முயற்சி எடுக்கலாம். நம்முடைய ஊதிய விகிதத்தைவிட அதிகமாகத் தரப்படும்போது, அதற்கென்று அதிகப்படியான தொகையும் அவர்களுக்கு நாம் தருவதில்லை. ஆகவே, இதைப்பற்றி அவர்களுக்கு நாம் ஒன்றும் சொல்வதற்கில்லை. அது அவர்களாகவே பார்த்துக் கொடுக்க வேண்டிய ஒன்றுதான்.

திரு. சி. நா. லெட்சுமிகாந்தன்: மாண்புமிகு தலைவர் அவர்களே, ஒரு விஷயத்தைத் தெரிவித்துக்கொள்ள ஆசைப்படுகிறேன். 1—1—1974-க்குப் பிறகும் மாநில அரசு அனுமதித்துள்ள அந்த ஊதிய விகிதத்தைவிட அதிகமாகக் கொடுப்பது என்ற முடிவுக்கு வந்து, அந்தத் தொகையை தாங்களே ஏற்றுக்கொள்வதாக ஒரு முடிவுக்கு வந்தால், அதற்கு நம்முடைய அரசு ஒப்புதல் அளிக்குமா?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: அவர்களுக்குக் கலெக்டர்களின் சம்பளம் கொடுத்தால்கூட நாங்கள்—இந்த அரசு தடையாக இருக்காது. (சிரிப்பு).

திரு. ம. சங்கரலிங்கம்: நெய்வேலி நிலக்கரி கார்ப்பரேஷன் நடத்துகின்ற ள்ளிகளில் அந்தக் கார்ப்பரேஷன் சம்பள விகிதத்தைப் பார்த்தால், கல்வித் றையிலே பணிபுரியும் ஆசிரியர்களுக்கு மட்டும் குறைவு என்றும் அங்கு ி புரியும் இதர பணியாளர்களுக்கு அதாவது மற்ற அலுவலர்களுக்கு ல்லாம் அந்தக் கார்ப்பரேஷனில் எந்த அளவுக்கு ஊதியம் நிர்ணயித்திருக் ர்களோ அதைக் கொடுத்துக் கொண்டிருக்கிறார்கள் என்றும் தெரிகிறது. ற்குக் காரணம் அங்கு பணிபுரியும் அசிஸ்டென்ட் மற்றும் இலாக்காக் ில் பணிபுரியும் அதிகாரிகளுக்கு அரசு மானியம் இல்லை. ஆனால், இந்த ிரியர்கள் பணிக்கு மட்டும் இந்த அரசு மானியம் கொடுக்கிறது. ஆகவே, நய்வேலி கார்ப்பரேஷனில் பணிபுரியும் ஆசிரியர்களுக்கும், அரசு மானியம் கொடுக்கும்போது அவர்களுக்குக் கொடுக்கப்படும் ஊதியத்தை அந்தக் கார்ப்ப ரேஷன் மானியமாகப் பெற்றுக் கொள்வதால், மற்ற ஊழியர்களைப்போல சம்பளம் கொடுக்க வேண்டும் என்று இந்த அரசு அவர்களுக்கு அறிவுரை வழங்குமா?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: அறிவுரை வழங்குகிறபோது, நாமும் அதற்கேற்ப நடந்துகொள்ள வேண்டும். என்.எல்.சி.-யில் பணி புரியும் ஆசிரியர்களுக்கு இதைத் தர வேண்டும் என்று சொல்லிவிட்டு, எங்கள்

பள்ளிக்கூடங்களிலே பணிபுரியும் ஆசிரியர்களுக்கு அதுபோன்று தராமல் இருந்தால், எங்களை மோசமான ஒரு நிலைமைக்கு அது கொண்டுபோய் விடும். மேலும் அவர்களிடம் அப்படி அதிகமாகத் தரவேண்டும் என்று சொல்லும் உரிமையும் இல்லை. அந்தச் சங்கத்தைச் சேர்ந்தவர்கள் கையெழுத்துப் போட்டிருக்கிறார்கள். இதுபற்றி அவர்கள் அந்தக் கார்ப்பரேஷனுக்கு எடுத்துச் சொல்லி இப்படியொரு பாகுபாடு இருப்பது நல்லதல்ல என்று வாதாடி, அதைப்போக்க முயற்சிக்க நடவடிக்கை எடுப்பதுதான் முறையாக இருக்கும்.

### சிறுபான்மையோர் நடத்தும் பள்ளிகள்.

* 32 வினா.—திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் மற்றும் செல்வி ஆ. லீலாவதி: மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறோம்—

(அ) சிறுபான்மையோர் நடத்தும் பள்ளிகளுக்கு அரசின் முழு தரப்படுகிறதா?

(இ) அப்பள்ளிகளின் நிர்வாகங்கள் அரசின் ஆணைகளை மீறுகின்றன என்று புகார்கள் வந்துள்ளனவா?

(உ) ஆம் எனில், அத்தகைய நிர்வாகங்களுக்கு மானிய உதவியை நிறுத்த அரசுக்கு சட்டப்படி அதிகாரம் உள்ளதா ?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: (அ) மற்றும் (இ) ஆம்.

(உ) தற்பொழுது வெளியிட்டுள்ள அரசாணையின்படி எந்த ஒரு சிறுபான்மையினர் நடத்தும் நிர்வாகத்தில் உள்ள பள்ளிகள் நடைமுறையில் உள்ள விதிகளை மீறினால் பள்ளிக் கல்வி இயக்குநர் சம்பந்தப்பட்ட பள்ளிக்கு அங்கீகாரத்திற்கு எவ்வித பாதிப்பும் இல்லாமல் மானியத்தை நிறுத்தி வைக்கலாம் என்று ஆணையிடப்பட்டுள்ளது.

திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன்: மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கூறியவாறு ஒரு ஆணை பிறப்பிக்கப்பட்டிருந்தாலும், சிறுபான்மையோர் நடத்தும் பள்ளிகள் எந்த ஆணையாக இருந்தாலும், அரசியல் சட்டத்திலே மைனாரிட்டிகளுக்குக் கொடுக்கப்பட்டிருக்கும் விசேஷ உரிமையைப் பயன்படுத்தி நீதிமன்றத்திற்குச் சென்று தடை வாங்கி விடுகிறார்கள். அப்படிப்பட்ட பிரச்சினைகளைச் சமாளிக்க அரசு என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறது.





மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: சிறுபான்மையோருக்கு இருக்கும் பிரத்தியேக உரிமைகளின் அடிப்படையில் சில வழக்குகள் இப்போது உச்சநீதிமன்றத்திற்குப் போயிருக்கின்றன. நீதிமன்றத்திலிருந்து நமக்குச் சாதகமாக தீர்ப்பு வந்தால், இவைகளைக் கட்டுப்படுத்தும் அதிகாரம் மாநில அரசுக்கு வரும்.

திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன்: எது சிறுபான்மையோர் நடத்தும் நிறுவனம் என்ற விளக்கம் கொடுப்பதிலேயே இப்போது கருத்து வேறுபாடு இருக்கிறது. அண்மையிலே மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் ஒரு கருத்தை வெளியிட்டிருப்பதாக அறிந்தேன். ஒரு கல்வி நிறுவனத்தில் சிறுபான்மை சமூகத்தைச் சேர்ந்தவர்கள் 50 சதவீதம் படித்தால்தான் அல்லது பணி புரிந்தால்தான், அவர்களை, அதாவது அந்த நிறுவனத்தை, சிறுபான்மையோர் நிறுவனம் என்று ஏற்றுக் கொள்ளலாமா என்று பரிசீலிக்கலாம் என்ற கருத்தை மாண்புமிகு கல்வி அமைச்சரவர்கள் வெளியிட்டிருக்கிறார்கள். அந்தக் கருத்துக்கு சட்டபூர்வமாக வடிவம் கொடுக்க ஏதாவது முயற்சி எடுக்கப்படுமா?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: அப்படிப்பட்ட முயற்சிகளை எடுக்கும் முன்பு மாண்புமிகு உறுப்பினர் போன்றவர்களுடைய கருத்துக்களைத் தெரிந்துகொள்ள வேண்டும் என்பதற்காகத்தான் அந்தக் கருத்தை அந்த நிகழ்ச்சியிலே நான் வெளியிட்டேன். அப்படிப்பட்ட கருத்துக்கள் வருவதன் அடிப்படையில்தான் மேற்கொண்டு நடவடிக்கை எடுக்க முடியும்.

செல்வி ஆ. லீலாவதி: இம்மாதிரியான நடவடிக்கைகள் எத்தனை பள்ளிகளில் எடுக்கப்பட்டிருக்கின்றன.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: அதுபற்றிய விவரங்கள் இப்போது என்னிடத்திலே இல்லை. குறிப்பாக அதுபற்றித் தனியாகக் கேட்டால் விவரங்களைத் தருகிறேன்.

திரு. க. இராமமூர்த்தி: இந்த அரசாணையில் இருக்கும் விதிகளை மீறும் சிறுபான்மையோர் பள்ளிகளைப் பற்றிக் கொடுக்கப்படும் புகார்களின் அடிப்படையில் அவர்கள் செய்யும் அத்துமீறல்கள் கண்காணிக்கப்படுகின்றனவா? அல்லது நிரந்தரமாகவே அதற்கென்று தனியாக ஒரு அமைப்பு வைத்து ஒரு 'பீரியாடிகல் சூப்பர்விஷன்' (Periodical Supervision) என்ற வகையில் அந்த அத்துமீறல்கள் இல்லாமல் பார்த்துக்கொள்ளும் முறையை அரசு கையாளுமா ?

[1983 ஜனவரி 29

*மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்:* சிறுபான்மையோர் நடத்தும் கல்வி நிறுவனங்களைப்பற்றி, அவர்களுக்கு என்னென்ன உரிமைகள் இந்த அரசியல் சட்டம் தந்திருக்கிறதோ அவைகளைப் பாதுகாக்க அரசு எல்லா விதமான சூழ்நிலைகளையும் உருவாக்கியிருக்கிறது. அவர்களது உரிமையிலே தலையிடவில்லை. ஆனால் ஆசிரியர்கள் பிரச்சினை என்று வரும்போது, அவர்களை திடீரென்று வேலையிலிருந்து நீக்குவதோ, அல்லது அவர்களுடைய பதவிகளுக்கு ஆபத்து ஏற்படுத்தும் நிலைமை உருவாக்கப்படும்போதோ அந்த ஆசிரியர்களும், அவர்கள் சார்பாக சங்கத்தினரும் எங்களிடம் புகார்கள் செய்யும்போது, அதுபற்றி நாங்கள் விசாரித்து தேவையான நடவடிக்கைகளை எடுத்து வருகிறோம். அதிலேகூட கொஞ்சம் தயக்கம் காட்ட வேண்டியிருக்கிறது. ஒரு ஆசிரியரை நிறுத்திவிட்டார்கள் என்று சொல்லி அவர்களுக்கு அளிக்கும் மானியத்தை நிறுத்தினால், எல்லா ஆசிரியர்களுக்கும் சம்பளம் கிடைக்காமல் போய்விடும் நிலைமை உருவாகிவிடும். அடிப்படையிலே இருக்கும் மிகப் பெரிய நோயைவிட, வைத்தியம் பெரிய பாதிப்பை ஏற்படுத்தும் நிலை வரக்கூடாது என்று அதிலேகூட காரியங்களை மிகவும் யோசித்துத்தான் செய்கிறோம்.

(முற்பகல் 9-40)

*டாக்டர் இரா. சனார்த்தனம்:* சிறுபான்மையோரால் நடத்தப்படும் பள்ளிகள் பெரும்பான்மையாக அரசின் ஆணைகளை ஏற்காத நிலை இருக்கிறது. அப்படிப்பட்ட தவறு செய்கின்ற பள்ளிகளை தண்டிப்பது முறையென்றாலும், அரசாணையை ஏற்று நடத்துகிற பள்ளிகளைப் பாராட்டுகிற நோக்கம் அரசுக்கு இருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

*மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்:* பாராட்டுகிறோம் என்பது மட்டுமல்லாமல், எந்தவிதக் குறையும் சொல்வதில்லை. சந்தர்ப்பம் கிடைக்கிறபோது, அந்த நிர்வாகங்களைப் பாராட்டி வருகிறோம்.

*திரு. க. மீனாட்சிசுந்தரம்:* சிறுபான்மையோருக்கு அரசியல் சட்டத்திலே தந்திருக்கிற உரிமையின் காரணமாக சிறுபான்மையோர் நடத்துகிற பள்ளிகளில் உள்ள நிர்வாகத்தினர் பெரும்பான்மையோர் மீது ஆதிக்கம் செலுத்துவதோடு அப்பள்ளிகளில் பணியாற்றுகிற சிறுபான்மையோருக்கே துன்பம் விளைவிப்பது மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கே தெரியும். ஆகவே அப்படிப்பட்ட நிர்வாகங்களைச் சீர்திருத்துவதற்காக அரசியல் சட்டத்திலே திருத்தம் கொண்டு வருவதற்கு ஏதேனும் முயற்சியை இந்த அரசு எடுத்திருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.



1983 ஜனவரி 29]

*மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்:* அரசியல் சட்டத்தைத் திருத்த வேண்டிய பொறுப்பு மத்திய அரசிடம் இருக்கிறது. மத்திய அரசில் உள்ள ஆளும் கட்சியினர் இப்படிப்பட்ட முயற்சிகளை எடுப்பார்களேயானால், நிச்சயமாக எங்களுடைய உறுப்பினர்கள் ஆதரவு தருவார்கள்.

*திரு. பா. ரா. தாமஸ்:* நிர்வாகங்கள் அரசாணையை மீறும்போது, மானியத்தை நிறுத்தினால், அதனால் ஆசிரியர்கள் பாதிக்கப்படுகிறார்கள் என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அந்த நிலை உருவாகும்போது, நேரிடையாகவே ஆசிரியர்களுக்கு ஊதியத்தை வழங்கிவிட்டால், அது நிர்வாகத்திற்கு ஒரு பாடமாக அமையும். அரசியல் சட்டத் திருத்தம் செய்ய வேண்டுமென்று கோரி உச்சநீதிமன்றத்திலே ஒரு வழக்கு உள்ளது. அதனுடைய நிலை என்ன? அத்தகைய திருத்தம் கொண்டு வந்தால், இந்த நிர்வாகங்கள் செயல்படும் நிலை உருவாகும்.

*மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்:* அப்படிச் செய்ய வேண்டுமென்ற கருத்தை நாம் வெளிப்படுத்தியிருக்கிறோம். செய்ய வேண்டியவர்கள் மத்திய அரசுப் பொறுப்பிலே இருக்கிறவர்கள். அரசியல் சட்டம் மத்திய அரசு மற்றும் பாராளுமன்ற அதிகாரத்திற்குட்பட்டது. அவர்கள்தான் திருத்தத்தைக் கொண்டுவந்து நிறைவேற்ற வேண்டும்.

*திரு. சி. இராமலிங்கம்:* சிறுபான்மையோர் நடத்துகிற பள்ளிகளால் இன்றைக்கு தமிழ் மொழி நாளுக்கு நாள் பின்னுக்குப் போகிறது என்ற கருத்து நிலவுகிறது. அது குறித்து அரசு எடுத்த நடவடிக்கை என்ன?

*மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்:* இது முழுக்க முழுக்க உண்மையல்ல. Jesuit Fathers ஆல் நிர்வகிக்கப்படுகிற கல்வி நிறுவனங்கள் "தமிழைத்தான் பயிற்சி மொழியாக ஏற்றுக்கொள்வோம்" என்று வெளிப்படையாகப் பிரகடனம் செய்து அதையே பின்பற்றி வருகிறார்கள். கல்விக் கொள்கை என்பதை அவரவருக்குச் சரியென்று படுவதையே வைத்துக்கொண்டிருக்கிறார்கள். அதிலே சிறுபான்மை, பெரும்பான்மை என்ற பிரச்சினை இல்லை. பெரும்பான்மையைச் சேர்ந்தவர்கள் கூட ஆங்கிலத்தைப் பயிற்சி மொழியாக வைத்துக்கொண்டு இன்று மிகப் பெரிய பாதிப்பை சமுதாயத்திலே உருவாக்கிக் கொண்டு வருகிறார்கள்.

*திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன்:* இது சம்பந்தமாக தமிழக அரசு தொடுத்த வழக்கு உச்ச நீதிமன்றத்திலே நீண்ட காலமாகத் தேங்கிக் கிடக்கிறது. அரசுத் தரப்பு வழக்கறிஞர்களுக்குத் தக்க அறிவுரை வழங்கி விரைவுபடுத்த நடவடிக்கை எடுக்க அரசு முயற்சி செய்யுமா?

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்:** முயற்சியை மேற்கொண்டு வருகிறோம். இருந்தாலும் உச்சநீதிமன்றம், உயர்நீதிமன்றம் ஆகியவைகள் சமுதாயத்தின் நலனுக்குத் தேவை என்ற அடிப்படையில் இதுபோன்ற முக்கியமான வழக்குகளை உடனடியாக எடுத்து தீர்ப்புகளைத் தருவார்களேயானால், அவர்கள் மிகப் பெரிய உதவியைச் செய்தவர்களாக ஆவார்கள்.

**செல்வி ஆ. லீலாவதி:** தவறு செய்யும் சிறுபான்மையினர் பள்ளி நிர்வாகங்களின் மீது நடவடிக்கை எடுக்க முடியாது என்றால், அங்கு பணி புரியும் ஆசிரியர்களுக்காகிலும் பாதுகாப்பு கொடுக்க முடியுமா? ஏனென்றால் சிறுபான்மையினர் பள்ளியில் 22 ஆண்டுக்காலம் வேலை செய்த ஆசிரியர்களைக் கூட வேலை நீக்கம் செய்திருக்கிறார்கள். அதனால் ஆசிரியர்களுக்குச் சேர வேண்டிய பென்ஷன், கிராச்சுயுட்டி போன்றவை கிடைக்காமல் போகின்றது. அதனால் அவர்களுக்காவது அரசு பாதுகாப்பு கொடுக்குமா?

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்:** அதற்காகத்தான் ஒரு சட்டத்தைக் கொண்டு வந்து சென்ற சட்டமன்றக் கூட்டத்தொடரிலேயே நிறைவேற்றினோம். ஆசிரியர்களுக்குப் பாதுகாப்புத் தருகிற பிரச்சினையில் அரசு அக்கறை எடுத்து வருகிறது. ஆனால் ஆசிரியர்களுக்கும், நிர்வாகத்திற்குமிடையே உள்ள பிரச்சினையில் அரசு தலையிடுகிறபோது, சிறுபான்மை இனத்தைச் சேர்ந்தவர்களே சிறுபான்மை இனத்திற்கு விரோதமாக அரசு செயல்படுகிறது என்பதைப்போல பிரச்சாரத்தில் ஈடுபடுகிறபோது, எங்களுக்குப் பாதுகாப்பாக யாரும் வருவதில்லை என்பதைக் குறிப்பிட விரும்புகிறேன்.

**கோயம்புத்தூர் தொழில்நுட்பக் கல்லூரியில் மாணவர்களுக்குத் தொல்லை.**

*** 33 வினா—திரு. ம. சங்கரலிங்கம்:** மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) கோயம்புத்தூர் தொழில்நுட்பக் கல்லூரியில் புதிதாகச் சேரும் தென் மாவட்ட மாணவர்கள், மற்ற மாணவர்களால் தொல்லைகளுக்கு உட்படுத்தப்படுகிறார்கள் என்ற புகார் அரசின் கவனத்திற்கு வந்துள்ளதா?

(இ) ஆம் எனில், அதன் மீது அரசு எடுத்த நடவடிக்கை யாது?

(உ) 1979 செப்டம்பர் 23 ஆம் நாள் இரவு, இத்தகைய சம்பவம் நடைபெற்றது உண்மையா?

(எ) ஆம் எனில், அது குறித்து அரசு ஏதேனும் விசாரணை செய்ததா?





(ஐ) ஆம் எனில், அதன் விவரம் யாது?

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்:** (அ) இல்லை.

(இ) இக்கேள்விக்கு இடமில்லை.

(உ) இல்லை.

(எ) மற்றும் (ஐ) இக்கேள்விகளுக்கு இடமில்லை.

**திரு. ம. சங்கரலிங்கம்:** எல்லாத் தொழில் கல்லூரிகளிலும் ராக்கிங் என்ற முறையில் புதிதாகச் சேர்கிற மாணவர்களுக்குத் தொல்லை கொடுத்து வருகிறார்கள். 1979-ல் நடந்த ஒரு சம்பவத்தைப்பற்றி நான் கேள்வி கேட்டிருந்தேன். தென் பகுதியிலிருந்து கோயம்புத்தூர் தொழில் நுட்பக் கல்லூரியில் சேர்ந்த மாணவர்களில் சிலர் முதல் இரண்டு நாட்களில் செய்யப்பட்ட ராக்கிங் காரணமாக தங்கள் படிப்பையே நிறுத்திவிட்டு வீட்டுக்குத் திரும்பி வந்த சம்பவங்கள் எனக்கு நன்றாகத் தெரியும். குறிப்பாக 1979 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதத்தில் ஒரு தொழில் நுட்பக் கல்லூரி மாணவர் படிப்பே வேண்டாமென்று திரும்பி வரவும், நான் உபதேசம் செய்து திருப்பி படிப்புக்கு அனுப்பிய பிறகு, அவர் கல்லூரிக்குச் சென்று "என்னைத் திருப்பி அழைத்துப் போகாவிட்டால், என் பிணத்தைத்தான் கொண்டு போக நேரிடும்" என்று எழுதிய கடிதத்தை என்னிடம் காட்டி, பிறகு வேறு ஒரு கல்லூரிக்கு மாற்றிவிட்டார்கள். அந்த நிலை அப்போது இருந்தது. அப்படிப்பட்ட நிலை இப்போது குறைந்திருந்தாலும், அவற்றை முழு அளவில் தடுக்க அரசு ஏதேனும் நடவடிக்கை எடுத்திருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்:** தென் மாவட்ட மாணவர்கள் என்ற அடிப்படையில் மோதல் ஏற்படவில்லை என்பதுதான் இந்தப் பதிலின் நோக்கமாகும். செப்டம்பர் 3 ஆம் தேதி மாணவர்களிடையே மோதல் ஏற்பட்டது. புதிதாகச் சேர்ந்த மாணவர்களுக்கு விழா எடுக்க வேண்டுமென்று ஏற்பாடு செய்ததில், அதற்கான மாணவர்கள் தலைவர் தேர்தலில் பங்கு கொண்டு வெற்றி பெற்ற ஒரு சாராருக்கும் தோல்வியடைந்த ஒரு சாராருக்கும் இடையே மோதல் ஏற்பட்டது. அதன் காரணமாக பிரச்சினை உருவாகியது. இப்போது பிரச்சினை இல்லை. மாண்புமிகு உறுப்பினருக்கு ஒன்றைச் சொல்ல விரும்புகிறேன். தென் மாவட்டம் அல்லாத மாணவர்கள் என்ற பிரச்சினைக்கு தென் மாவட்ட மாணவர்களே காரணமாக இருந்திருக்கிறார்கள். இராமநாதபுரம், மதுரை, திருநெல்வேலி, கன்னியாகுமரி மாவட்டங்களைச் சேர்ந்த மாணவர்கள் தொழில் நுட்பக் கல்லூரியில் தங்களுக்கென ஓர் அமைப்பை ஏற்படுத்திக்கொண்டு, அதன் மூலம் மோதல்களுக்குக் காரண

மாக இருந்து வருகிறார்கள். இந்தப் பிரச்சினையைத் தீர்க்க வேண்டும் என்பதற்காகத்தான் திருநெல்வேலியில் தொழில் நுட்பக் கல்லூரியையே ஆரம்பித்தோம்.

**திரு. ம. சங்கரலிங்கம்:** தென் பகுதியிலிருந்து கோயம்புத்தூருக்குப் போகிற மாணவர்கள், புதிய இடமாக இருப்பதால், கோயம்புத்தூர் பகுதியில் உள்ள மாணவர்கள் அதிக உரிமையோடு உலாவி வருவதால், தங்கள் பாதுகாப்புக்காக சங்கம் ஏற்படுத்த வேண்டிய நிலை ஏற்பட்டது என்று தெரிவித்தார்கள். திருநெல்வேலியில் தொழில் நுட்பக் கல்லூரி வந்துவிட்டதால், இந்த நிலை இப்போது மாறிவிட்டது. தமிழகத்திலே இந்த நிலை வருவது வருந்தத்தக்கது. பாதுகாப்புக்காக சங்கம் அமைக்கிற சூழ்நிலை இல்லாத நிலையில், எல்லா மாணவர்களும் கலந்து பழகுகிற முறையில், கல்லூரியின் ஆரம்பக் காலங்களில் அங்குள்ள ஆசிரியர்களும், முதல்வர்களும் சற்று கண்டிப்பாக இருந்தால், இதையெல்லாம் தவிர்க்கலாம். அதற்குண்டான அறிவுரையை அரசு வழங்குமா?

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்:** மாண்புமிகு எதிர்க் கட்சி உறுப்பினர் சொல்லுகிற யோசனை சிறந்த யோசனை. அந்த அடிப்படையில் ஆசிரியர்களையும், கல்லூரி முதல்வர்களையும் கேட்டுக்கொள்ளலாம். கோயம்புத்தூர், சேலம் போன்று எந்தக் கல்லூரியை எடுத்துக்கொண்டாலும், எல்லா மாவட்டங்களிலும் இந்தப் பிரச்சினை இருக்கிறது. குறிப்பாக கோவையில் கொஞ்சம் அதிகமாக இருக்கலாம். இந்தப் பிரச்சினை மட்டுமல்லாமல், வேறு பல பிரச்சினைகளுக்குக் காரணம், குறிப்பிட்ட சாரருடைய பாதுகாப்புச் சங்கங்கள்தான். பாதுகாப்புச் சங்கத்தை அமைத்துவிட்டு வேறு வேலை இல்லாமல் பிறருடைய பாதுகாப்பை பாதிக்கிற அளவிற்குத் தலையிடுகிறார்கள். பாதுகாப்புச் சங்கத்தை அந்த அடிப்படையிலே துவங்காமல், மாணவர்கள் எல்லாம் ஒன்றாக சகோதரர்கள் என்ற உணர்வை வளர்க்க வேண்டியது மிக்த் தேவை. அதற்காக ஆசிரியர்களும் கல்லூரி முதல்வர்களும் முயற்சி மேற்கொள்ள வேண்டும்.

**திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன்:** இந்தக் குறிப்பிட்ட கல்லூரியில் மட்டுமல்லாமல், பொதுவாக தமிழகத்திலே உள்ள பல கல்லூரிகளிலும், பல்கலைக் கழகங்களிலும் அண்மைக் காலமாக சாதிகளின் அடிப்படையில் சங்கங்கள் ஏற்படுத்தப்பட்டு சுயநல சக்திகளால் ஊக்குவிக்கப்பட்டு வளர்ப்பதன் காரணமாக அடிதடி, கொலை போன்ற சம்பவங்கள் நடைபெறுகின்றன. இப்படிப்பட்ட சாதி அடிப்படையில் தோன்றும் அமைப்புகள் கல்லூரி மற்றும் பல்கலைக் கழக வளாகத்திற்குள் இயங்காமலிருக்க, அரசு என்ன நடவடிக்கையை எடுத்திருக்கிறது என்று அறிய விரும்புகிறேன்.



(முற்பகல் 9-50)

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்:** இந்தப் பிரச்சினையைப் பற்றி நான் முதலிலேயே பதில் சொல்கின்றபோது குறிப்பிட்டேன். வேறு பல காரணங்களுக்காக அந்த அடிப்படையிலே பாதுகாப்புச் சங்கங்கள் என்று அவர்கள் வைத்துக்கொண்டிருக்கிறார்கள். அது தவறு என்பதை மாணவர்களே ஏற்றுக்கொண்டு செயல்பட்டுக்கொண்டிருக்கின்ற அளவுக்கு நிலைமைகளை உருவாக்க வேண்டும். அதற்கு அவர்களே ஒன்றாக இருந்து பழக வேண்டுமென்றும் ஆசிரியர்களும் இதற்கு ஒரு முயற்சியை மேற்கொள்ள வேண்டும் என்றும் கேட்டுக்கொள்வதன் அடிப்படையிலே மாண்புமிகு எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் சொன்ன யோசனையை நான் வரவேற்றேன் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**டாக்டர் இரா. சனார்த்தனம்:** விருந்தோம்பலுக்கு பேர்போனவர்கள் அந்த மாவட்டத்தினர். தென் மாவட்ட மாணவர்கள் வருகின்றபோது அவர்கள் ஏன் அப்படி இருக்கின்றார்கள்?

**மாண்புமிகு மேலவைத் தலைவர்:** கோவை மாவட்டத்தைச் சேர்ந்தவர்கள் விருந்தோம்பலுக்குப் பெயர் பெற்றவர்கள் என்று சொல்லப்பட்டிருக்கிறதா என்பது தெரியவில்லை.

**டாக்டர் இரா. சனார்த்தனம்:** அத்தோடு இதுசம்பந்தமாக மாணவர்கள் சர்வகட்சியினரைக் கூட்டிப் பேசுவதாக மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சில செயல்முயற்சிகளை மேற்கொண்டிருந்தார்கள். அது வெற்றி பெற்றிருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்:** எல்லாக் கட்சியினருடைய கூட்டத்தையும் நான் மூன்று முறை கூட்டியிருக்கிறேன் என்று கருதுகிறேன். அப்படி கூட்டி பல்வேறு பிரச்சினைகளை ஆராய்ந்து, அந்த அடிப்படையிலே நாம் அந்தப் பிரச்சினைகளை அணுகியதால், இந்த ஆண்டு ஓரளவுக்கு வெற்றி பெற்றிருக்கிறோம். இன்னும் 2, 3 மாத காலத்தில் இவைகள் எல்லாவற்றையும் வைத்து இன்னொரு பரிசீலிப்பு மேற்கொண்டால், அதன் பின்பு தக்க முடிவினை மேற்கொள்ளலாம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

## Arrears of Salary to Teachers.

*34. *Q.*—Thiru P. R. THOMAS: Will the Hon. the Minister for Education be pleased to state—

(*a*) whether it is a fact that a large number of teachers serving in Palaniammal Girls High School, Gopichettipalayam, Coimbatore has not yet been paid the arrears of salary for 1972-73;

(*b*) if so, the number of teachers so affected and the amount to be paid to them; and

(*c*) the reasons for the inordinate delay?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: (அ) மற்றும் (இ) இப்பள்ளியில் 12 ஆசிரியர்களுக்குச் சேரவேண்டிய நிலுவை ஊதியமான ரூ. 3,406 20-8-1980 அன்று ஆசிரியர்களுக்கு வழங்கப்பட்டுவிட்டது.

(உ) 12 ஆசிரியர்களின் ஊதியப் பதிவேடுகளும் சரிபார்க்கப்படுவதற்காக அலுவலகங்களிடையே நிகழ்ந்த கடிதப் போக்குவரத்தே இத்தாமதத்திற்கு காரணம்.

திரு. பா. ரா. தாமஸ்: மாண்புமிகு மேலவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் நடவடிக்கைகள் எடுத்ததற்கு நன்றி தெரிவித்துக்கொள்கிறேன். ஆனால் பொதுவாக நம்முடைய மாநிலத்திலே ஆசிரியர்களுடைய ஊதியங்களை நிர்ணயிப்பதிலே ஏற்படும் கால தாமதத்தைத் தவிர்க்க வேண்டுமென்பதற்காக மாண்புமிகு அமைச்சர் அவர்கள் 'டீச்சர்ஸ் கிரிவன்ஸ் கவுன்சில்' என்று அமைத்திருக்கிறார்கள். அதற்கு ஆணையும் கொடுத்திருக்கிறார்கள். இதுவரையிலே கல்வி மாவட்ட அளவில், வருவாய் மாவட்ட அளவில், மாநில அளவில் இதுவரையில் கூடாமல் இருந்ததே, அதை விரைவில் கூட்டி துரிதப்படுத்த அமைச்சர் அவர்கள் ஆணையிடுவார்களா?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: அந்தக் கவுன்சிலை ஏற்படுத்த வேண்டுமென்று அரசேதான் சொல்லியது. அதற்கான நடவடிக்கைகளையும் அரசுதான் எடுத்தது. குறிப்பிட்ட மாவட்டத்தில் கவுன்சில் உறுப்பினர் பெயர் கேட்கப்பட்டது. எல்லா சங்கத்தினரும் ஒரே ஒரு பெயரை கவுன்சிலுக்குச் சொல்கின்ற நிலைமை வந்தது. நாம் விதிகளைப் பார்க்கிறபோது அது பொருத்தமாக இல்லை என்ற அளவில், அந்த விதிகளை மாற்றவேண்டியிருந்தது. அந்தத் திருத்தம் செய்யப்பட்டு அது விரைவிலே வர இருக்கிறது. அந்த அடிப்படையிலேதான் கூடும்.





## Payment of Reasonable Expenses.

*35. *Q.*—Thiru E. S. VENKATESAN: Will the Hon. the Minister for Co-operation and Law be pleased to state, the steps taken by the Government to ensure that every person gets the payment of reasonable expenses due to him, for attending under sub-section (1) of section 160 of the Criminal Procedure Code, the investigation at any place, other than his residence?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: குற்றவியல் நடைமுறைக் கோவையின் பிரிவு 160 (2)-ன் கீழ் தன் இல்லமல்லாத வேறு இடங்களில் காவல் துறை அதிகாரிகளால் நடத்தப்படும் விசாரணைகளுக்குச் செல்பவர்களுக்கு தரப்பட வேண்டிய பயணப்படி மற்றும் அத்தியாவசியப்படி ஆகியவைகளை உயர்த்தி அரசு ஆணை பிறப்பித்துள்ளது.

திரு. ஈ. எஸ். வெங்கடேசன்: மாண்புமிகு மேலவைத் தலைவர் அவர்களே, நடைமுறையிலே காவல் நிலையத்திற்கு விசாரணைக்குப் போய் சாட்சியம் சொல்கின்றவர்களுக்கு நியாயமான செலவுத் தொகை கொடுப்பதாகத் தெரியவில்லை. அது உயர்த்தப்பட்டிருக்கிறது என்று அமைச்சர் அவர்கள் சொல்கிறார்கள். அது எவ்வளவு இருந்தது, இப்போது எந்த அளவுக்கு உயர்த்தப்பட்டது என்று தெரிவிக்க வேண்டும். அதுபோன்று அவர்கள் பணம் கொடுக்கும்போது ஏதாவது ரசீது கொடுத்து பெறப்படுகிறதா? ரிஜிஸ்டர்கள் இருக்கின்றனவா? அது தணிக்கை செய்யப்படுகின்றதா? இதுபற்றி மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தகவல் கொடுத்தால், நான் நன்றி உடையவனாக இருப்பேன்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: தலைவர் அவர்களே, கிரிமினல் புரோசிஜர் கோட் 160 (1)-ன் கீழ் மாண்புமிகு அங்கத்தினர் அவர்கள் கூறியவாறு, புலன் ஆய்வுக்காக வருகின்றவர்கள், பார்ட்டியாராக இருந்தாலும், சாட்சிகளாக இருந்தாலும், நிபுணர்களாக இருந்து வந்தாலும், அவர்களுக்கான பயணப்படி தர வேண்டுமென்று விதிகள் இருக்கின்றன. இந்த விதியை யொட்டி ஏற்கெனவே பயணப் படி கொடுக்கப்பட்டிருக்கிறது. போக்குவரத்துக்கான வாகனச் செலவும் அத்தியாவசியப் படிச் செலவும் தரப்பட்டு வந்திருக்கிறது. முன்பு என்ன தந்தார்கள் என்பது பற்றிய தகவல் இப்போது இல்லை. தற்போது உயர்த்தப்பட்டுள்ளது. 28—8—1982-ல் அரசாணை எண் 2245-ன் கீழ் இரண்டு தரமாகப் பிரித்து நிபுணர்களாக இருந்தால், அவர்கள் முதல் வகுப்பில் வந்திருந்தால், அவர்களுக்கு முதல் வகுப்பு பயணப்படியும், ஒரு நாளைக்கு 8 ரூபாய் அத்தியாவசியப்படியும் என்று உயர்த்தப்பட்டிருக்கிறது. மற்றவர்கள் இரண்டு தரமாகப் பிரிக்கப்பட்டு, ஒரு

தாத்தினருக்கு முதல் வகுப்பில் வந்திருந்தால், முதல் வகுப்புப் படியும் ஒரு நாளைக்கு ரூ. 4 அத்தியாவசியப்படியும் கொடுக்கப்படுகிறது. இரண்டாம் தாத்தினருக்கு, இரண்டாம் வகுப்பில் வந்திருந்தால் இரண்டாம் வகுப்பு பயணப்படியும், ஒரு நாளைக்கு ரூ. 4 அத்தியாவசியப்படியும் கொடுக்கப்படுகிறது. அப்படி உயர்த்தப்பட்டு உத்தரவிடப்பட்டிருக்கிறது. அது இப்போது நடைமுறையில் வந்திருக்கிறது. அந்த விதிகளின் அடிப்படையிலே கண்டிப்பாக அந்தந்தக் காவல் நிலையத்தில் ரிஜிஸ்டர்கள் மெயின்டெய்ன் செய்தாக வேண்டும். அதுபற்றிய தகவல் என்னிடம் இல்லை. அது நடைமுறையில் இருந்துதான் ஆக வேண்டும். அப்படி இருக்கும் என்று நம்புகிறேன். இருப்பதற்கு ஏற்பாடு பண்ணுவோம் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. ஈ. எஸ். வெங்கடேசன்:** ஏற்கெனவே நான் சொன்னபடி, காவல் நிலையங்களுக்கு வருகின்ற சாட்சிகளுக்குப் பணம் கொடுப்பது என்பது, எனக்குத் தெரிந்தவரையிலே, நடைமுறையில் இருப்பதாகத் தெரியவில்லை. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொல்கிறார்கள். அரசு நிச்சயமாக உத்தரவு அனுப்பியிருக்கும். அந்த உத்தரவு காவல் நிலையங்களில் நல்ல முறையிலே நிறைவேற்றப்படுகிறதா என்பதைக் கண்காணிக்க அரசு ஆவன செய்யும் என்று நினைக்கிறேன். மேலும் காவல் நிலையங்களுக்கு சாட்சி சொல்ல சென்றால், அவர்களுக்கு நியாயமான செலவு பெற உரிமையுண்டு என்பதால், அதை அறிவிக்கின்ற வகையிலே காவல் துறை நிலையங்களில் போர்டுகளிலும், மற்ற பத்திரிகைகளிலும் விளம்பரம் செய்து, அதை எல்லா மக்களும் தெரிந்து கொள்ளச் செய்வதற்கு அரசு முயற்சி செய்யுமா?

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு மேலவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறியதை நானும்கூட ஏற்றுக் கொள்கிறேன். காரணம் இப்படி காவல்துறை நிலையங்கள் புலன் ஆய்வு செய்கின்றபோது, பொதுமக்கள் அதிகாரிகள் முன்னால் சாட்சியங்கள் சொல்கின்றபோது, பயணப்படி உண்டு என்பது தெரியாமல் இருக்கின்ற நிலைமைகள் இருக்கலாம். அதுபற்றித் தெரிவிக்கக்கூடிய அளவுக்கு ஏற்பாடுகளைச் செய்வது நியாயமானது என்று கருதுகிறேன். அந்தப் பயணப்படி கொடுக்கப்படுகிறதா என்று சரியான முறையில் கண்காணிக்கப்படுகிறதா என்று பார்க்க வேண்டும் என்று உறுப்பினர் அவர்கள் விரும்புகிறார். அதற்கு கண்டிப்பாக தக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.





## *Repayment of Debts to Land Development Banks.*

§ 36. *Q.*—Thiru P. R. THOMAS (on behalf of Thiru D. SANTOSHAM): Will the Hon. the Minister for Co-operation and Law be pleased to state:

(*a*) whether it is a fact that the small farmers, who had already repaid fifty percent and more of their debts to the Land Development Banks, are still being threatened with coercive action in Kanyakumari District;

(*b*) whether it is a fact that in such notices issued by the Land Development Banks, the principal outstanding, plus interest, plus penal interest, are shown as principal; and

(*c*) whether there is any proposal with the Government to write off such amounts of small farmers owning below five acres of land?

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** (அ) பொதுவாக தவணை தவறிய எல்லா கடன்தாரர்களுக்கும் கடனைத் திருப்பிச் செலுத்த வேண்டுமென்றும் திருப்பிச் செலுத்தத் தவறினால் கடனை வசூல் செய்ய சட்டப்படி நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் நிலவள வங்கிகள் கடன்தாரர்களுக்கு நோட்டீஸ் அனுப்புகின்றன. இம்முறை எல்லா மாவட்டங்களிலும் கடைப்பிடிக்கப்படுகிறது.

(இ) இல்லை.

(உ) இல்லை.

**திரு. ம. சங்கரலிங்கம்:** சென்ற ஆண்டு கூட்டுறவுச் சங்கங்களில், நிலவள வங்கிகளில் கடன் வாங்கிய சிறு விவசாயிகளுக்குச் சலுகை அளிக்கின்ற அளவிலே 50 சதவிகிதம் அவர்கள் கட்டியிருந்தால், அவர்கள் மீது உடனடியாக ஜப்தி நடவடிக்கை இல்லை என்று அறிவிக்கப்பட்டிருந்தது. அந்த முறையில் கன்னியாகுமரி மாவட்டத்தைச் சேர்ந்த பகுதிகளிலே ஜப்தி நடவடிக்கைகள் நடந்ததால்தான், இந்த வினா எழுந்தது என்று நினைக்கிறேன். நம்முடைய மாநிலம் முழுவதிலும் வறட்சி ஏற்பட்டிருக்கிறது. குறிப்பாக கன்னியாகுமரி மாவட்டத்தில், மற்ற மாவட்டங்களைவிட மழை குறைவாக இருக்கின்றது என்று பத்திரிகைகளிலேகூட வந்திருக்கிறது. அங்கே 46 சதவிகிதம்தான் மழை பெய்திருக்கிறது. எவ்வளவு வேண்டுமோ அவ்வளவு பெய்யாமல், 46 சதவிகிதம்தான் பெய்திருக்கிறது. பிற மாவட்டங்களில் கூடுதல் மழை பெய்திருப்பதாகச் சொல்லப்பட்டிருக்கிறது. இந்த மாவட்டத்தில் 46 சதவிகிதம் மழைதான் பெய்திருக்கிறது. மற்ற மாவட்டங்களில் இப்போது 62 சதவிகிதத்திற்குப் பெய்திருக்கிறது. ஆகவே மொத்தத்தில்

கன்னியாகுமரி மாவட்டத்தில் குறைவாக மழை பெய்திருப்பதாக புள்ளி விவரங்கள் தெரிவிப்பதால், மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அங்கே இருக்கும் விவசாயிகளுக்குச் சலுகை அளிக்கின்ற வகையில் ஜப்தி நடவடிக்கைகள் இந்த ஆண்டு இல்லை என்று அறிவிப்பார்களா?

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு மேலவைத் தலைவர் அவர்களே, 31—12—1981-க்குள் கடன் பாக்கியைச் செலுத்திவிட வேண்டுமென்று பொதுவாக ஓர் அறிவிப்பு விடப்பட்டது. அதற்குப் பிறகு 31—1—1982-க்குள் கடனைச் செலுத்தத் தவறினால், சட்டப்படி நடவடிக்கை எடுக்கப்படும் என்று ஒரு தாக்கீது விடப்பட்டது. அதுவும் 10 ஏக்கருக்கு மேற்பட்ட நிலம் உள்ளவர்களுக்கு மட்டுமே அத்தகைய தாக்கீது அனுப்பப் பட்டது. ஆனால் நிலவள வங்கிக் கடனைப் பொறுத்தவரைக்கும், அது உலக வங்கியிடமிருந்து பெறுகின்ற நீண்டகாலக் கடன். மத்திய அரசுக்கு அதில் தொடர்பு இல்லை. உலக வங்கி (ஏ.ஆர்.டீ.சி.) அக்ரிகல்சுரல் ரிபைனான்ஸ் டெவலப்மெண்ட் கார்ப்பரேஷன் மூலமாக அந்தக் கடனைத் திருப்பி வாங்க வேண்டுமென்று, மத்திய அரசுக்கு தாக்கீது அனுப்பியிருக்கிறது. மத்திய அரசுக்கு இதிலே தவிர்க்க முடியாத நிலை இருந்தது. இந்த நிலையிலே உலக வங்கி அதிகாரிகள் தமிழகத்திற்கே வருகை புரிந்து இதையெல்லாம் பார்த்துவிட்டு, குறைந்தபட்சம் 50 சதவிகிதம் கடனையாவது வசூல் செய்தாக வேண்டும், இல்லை என்றால் ஏ.ஆர்.டி.சி. போர்த் ப்ரோகிராமுக்குக் கடன் இல்லை என்று முடிவெடுத்தார்கள். அதற்குப் பிறகுதான் நாம் நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று தாக்கீது அனுப்பினோம். சட்டப்படியாக கடனைக் குறிப்பிட்ட காலத்திற்குள் தரவில்லை என்றால், நடவடிக்கை எடுக்கப்படும் என்ற தாக்கீது அனுப்பப்பட்டுள்ளது. இது ஏற்கெனவே உலக வங்கி கடனுக்கு மேற்கொள்ளப்பட்ட உடன்படிக்கையாகும். அந்த அடிப்படையிலே தான் தாக்கீது அனுப்பப்பட்டது. நடவடிக்கை நோட்டீஸ் அனுப்பப் பட்டதே தவிர, நடவடிக்கை எடுக்கப்படவில்லை. வறட்சியின் காரணமாக இதுவரைக்கும் எந்தவித நடவடிக்கையும் எடுக்கவில்லை. அரசு தற்போது கூட ஒரு உத்தரவை அனுப்பியிருக்கிறது. அரசு ஒரு உத்தரவுகூட விட்டிருக்கிறது. தமிழகத்தின் எல்லாப் பகுதிகளிலும் வறட்சி அதிகமாக இருப்பதால், சம்பந்தப்பட்ட அதிகாரிகள் ஜப்தி நடவடிக்கையில் ஈடுபடக்கூடாது என்று தாக்கீது அனுப்பப்பட்டிருக்கிறது.

(முற்பகல் 10-00)

**திரு. க. இராமமூர்த்தி:** தலைவரவர்களே, கன்னியாகுமரி மாவட்டத்திலும், தமிழகத்தின் மற்ற மாவட்டங்களிலும் ஜப்தி நடவடிக்கை எடுக்கக் கூடாதென்று எந்தத் தேதியில் உத்தரவிடப்பட்டது? அதற்கு முன்னதாக





வேறு முறைகளிலே வசூல் நடவடிக்கை எடுப்பதற்கு இப்போதைய வறட்சி நிலை சாதகமாக இல்லை என்ற அடிப்படையிலே அரசு என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறது?

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு மேலவைத் தலைவர் களே, நமக்குள்ள சங்கடமான பிரச்சினை என்னவென்றால், அறவே நட வடிக்கை எடுக்க மாட்டோம் என்று உத்தரவிட்டால் மைய அரசு அல்லது மாநில அரசு முயன்றாலும்கூட, உலக வங்கியிலிருந்து ARDC Programme-ன் கீழ் கடன் வசதி பெறமுடியாது. எனவே, அதிகாரிகளின் கூட்டத்தைக் கூட்டி வறட்சி நிலைமைகளை விசாரித்து, கிட்டத்தட்ட எல்லா மாவட்டங்களிலும் பெரிய வறட்சி இருப்பதால், விவசாயிகள், உழவர்கள் அதிக பாதிப்புக்கு உள்ளாகி உள்ளதால், ஜப்தி நடவடிக்கை எடுக்கக்கூடாது என்று சொல்லியிருக்கிறேன். சென்ற மாதம் உத்தரவிட்டிருக்கிறோம். அதற்குப் பிறகு ஜப்தி நடவடிக்கை இல்லை. அதில் கண்டிப்பாக இருக்கிறோம்.

**திரு. காடுவெட்டி கண்ணப்பன்:** நிலவள வங்கிகளிலிருந்து பெற்ற கடனைத் திருப்பிக் கட்டுவதற்கு 2 மாதம் அல்லது 3 மாதம் காலக் கெடு கொடுத்து, முழுக் கடனையும் கட்டும் விவசாயிகளுக்கு அபராத வட்டி போன்றவற்றைத் தள்ளுபடி செய்ய அரசு முன்வருமா?

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் நல்ல ஆலோசனை கூறியிருக்கிறார்கள். ஏற்கெனவே குறுகிய காலக் கடன்களுக்கு அதை நடைமுறைப்படுத்தி வருகிறோம். நீண்ட காலக் கடன்களுக்கு நடைமுறைப்படுத்துவது நல்லதென்று ஆலோசனை சொல்கிறார்கள். இது குறித்து அரசு பரிசீலிக்கும்.

**கூட்டுறவு நூற்பாலைகள்.**

* 27 வினா—திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் மற்றும் திரு. க. மீனாட்சி சுந்தரம்: மாண்புமிகு தொழில் அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறோம்—

(அ) தமிழ்நாட்டில் தற்பொழுது எந்தெந்த மாவட்டங்களில் கூட்டுறவு நூற்பாலை அமைக்கப்பட்டுள்ளது?

(இ) கூட்டுறவு நூற்பாலை இல்லாத மாவட்டங்களில் அவற்றை அமைக்கும் திட்டம் ஏதும் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(உ) ஆம் எனில், அதன் விபரம் என்ன?

**மாண்புமிகு திரு. சு. திருநாவுக்கரசு:** (அ) தமிழ்நாட்டில் தற்பொழுது புதுக்கோட்டை, தர்மபுரி, கோவை மற்றும் நீலகிரி மாவட்டங்களைத் தவிர மற்ற எல்லா மாவட்டங்களிலும் கூட்டுறவு நூற்பாலைகள் உள்ளன.

(இ) மற்றும் (உ) கூட்டுறவு நூற்பாலைகள் இல்லாத புதுக்கோட்டை, மற்றும் தர்மபுரி மாவட்டங்களில் ஒவ்வொரு கூட்டுறவு நூற்பாலை, ஒவ்வொன்றும் ரூ. 706 இலட்சம் முதலீட்டுச் செலவினத்தில் நிறுவிட நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. இந்தப் புதிய நூற்பாலைகளை இரண்டு ஆண்டுகளுக்குள் நிறுவிட திட்டமிடப்பட்டுள்ளது. இந்த ஆலைகள் முழு அளவில் வேலை செய்யும்போது ஒவ்வொன்றிலும் சுமார் 800 பேருக்கு (450 இலங்கை அகதிகள் உள்பட) வேலை வாய்ப்பு ஏற்படும். இவ்வாறு புதிய நூற்பாலைகள் அமைந்திடும்போது கோவை மற்றும் நீலகிரி மாவட்டங்களில் மட்டுமே கூட்டுறவு நூற்பாலைகள் இராது.

கோவை மாவட்டத்தில் ஏற்கெனவே ஏராளமான தனியார் துறை நூற்பாலைகள் இயங்கி வருகின்றன. எனவே அங்கு ஒரு கூட்டுறவு நூற்பாலை அமைக்க அவசியமில்லை என அரசு முடிவு எடுத்துள்ளது.

நீலகிரி மாவட்டத்தில் நெசவாளர்கள் இல்லையாதலால் அங்கு கூட்டுறவு நூற்பாலை ஏற்படுத்த வாய்ப்பு இல்லை.

**திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன்:** தலைவரவர்களே, கூட்டுறவு நூற்பாலைகள் இல்லாத மாவட்டங்களில் ஆலைகளை அமைக்க அரசு நடவடிக்கை எடுத்திருப்பதாகச் சொன்னார்கள். அந்த ஆலைகளை அமைக்க முடிவு செய்து எத்தனை மாதங்கள் ஆகின்றன? இந்தத் திட்டப் பணிகள் முடிய ஏதாவது கால இலக்கு வரையறுக்கப்பட்டுள்ளதா?

**மாண்புமிகு திரு. சு. திருநாவுக்கரசு:** தலைவரவர்களே, நான் ஏற்கெனவே சொன்னதுபோல இரண்டு மாவட்டங்களைத் தவிர, மற்ற எல்லா மாவட்டங்களிலும் கூட்டுறவு நூற்பாலைகளை நிறுவ நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. கோவையில் தனியார் துறையில் ஏராளமான நூற்பாலைகள் இருக்கின்றன. நீலகிரி மாவட்டத்தில் நெசவாளர்கள் அதிகமாக இல்லை. இந்த இரண்டு மாவட்டங்களிலே கூட்டுறவு நூற்பாலைகள் இல்லை. மற்ற மாவட்டங்களில் இருக்கின்றன. இரண்டு மாவட்டங்களில் பணிகள் நடக்கின்றன. ஒன்று புதுக்கோட்டை, மற்றொன்று தர்மபுரி. இரண்டு ஆண்டுகளில் அது முடியும். மூன்று மாவட்டங்களிலே கூட்டுறவு நூற்பாலைகள் இயங்கும் இடத்திலே விரிவாக்கம் அல்லது புது ஆலைகள் என்று 5 இடங்





களில் பணிகள் நடக்கின்றன. அதுவும் இரண்டு ஆண்டுகளில் முடிவடையும். கட்டுமானப் பணி முடிந்து, மேற்கொண்டு நடவடிக்கை எடுக்கப்படும்.

**திரு. க. மீனாட்சிசுந்தரம்:** இரண்டு மாவட்டங்களைத் தவிர, ஏனைய மாவட்டங்களில் தொடங்கப்பட்ட நூற்பாலைகளில், ஒன்றுக்கு மேற்பட்ட நூற்பாலைகள் உள்ள மாவட்டங்கள் எத்தனை? ஒரேயொரு நூற்பாலை உள்ள மாவட்டங்களில் மேற்கொண்டு நூற்பாலைகளை ஏற்படுத்த அரசு முன்வருமா?

**மாண்புமிகு திரு. சு. திருநாவுக்கரசு:** ஒரு மாவட்டத்தில் 2 நூற்பாலைகள் இருக்கின்றன. இப்போது குறைந்தது ஒவ்வொரு மாவட்டத்திற்கும் ஒன்று இருக்க வேண்டுமென்ற அடிப்படையில்தான் இல்லாத மாவட்டங்களுக்கு ஒன்று என்ற முறையில் தோற்றுவித்திருக்கிறோம். இந்தப் பணிகள் முடிந்த பிறகு, விரிவாக்கத்தைப்பற்றி. புது தொழிற்சாலைகள்பற்றி யோசிக்கலாம்.

**திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன்:** தலைவரவர்களே, கூட்டுறவு நூற்பாலைகளில் உற்பத்தி செய்யப்படும் நூலை கைத்தறித் துறைக்கு மட்டும் விற்பதென்று முடிவு செய்யப்பட்டிருக்கிறதா? அல்லது அந்த நூலை கைத்தறித் துறைக்கு மட்டுமல்லாமல், பிற துறைகளுக்கும் விற்பனை செய்ய முடிவு செய்யப்பட்டிருக்கிறதா?

**மாண்புமிகு திரு. சு. திருநாவுக்கரசு:** மூலக் கேள்வியோடு சம்பந்தப்பட்டது இல்லை என்றாலும், ஒன்றைக் கூற விரும்புகிறேன். கூட்டுறவுத் துறை நூற்பாலைகளில் உற்பத்தியாகும் நூல்கள் அனைத்தையும் கைத்தறித் துறையில் முழுமையாகப் பயன்படுத்த முடியாது. 20, 40, 60 கவுண்ட்ஸ் என்று நூலிலே ரகம் இருக்கிறது. கைத்தறித் துறையில் எந்த ரகத்தை உபயோகப்படுத்த முடியுமோ அது அவர்களுக்கு ஒதுக்கப்படுகிறது. அவர்களுக்குத் தேவையில்லாத மற்ற ரகங்கள் வட மாநிலங்களில் விற்கப்படுகின்றன.

(மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் இரா. சனார்த்தனம் எழுந்தார்.)

**மாண்புமிகு மேலவைத் தலைவர்:** மூலக் கேள்விக்கு சம்பந்தமுள்ளதாக இருக்க வேண்டும்.

[1983 ஜனவரி 29

**டாக்டர் இரா. சனார்த்தனம்:** மாண்புமிகு அமைச்சரவர்கள் நீலகிரி மாவட்டத்தில் நெசவாளர்கள் இல்லை என்பதால், நூற்பாலை ஏற்படுத்த வில்லை என்று தெரிவித்தார்கள். ஆனால் இந்த நூற்பாலைகளில் இலங்கைத் தமிழர்களுக்கு வேலை வாய்ப்பு ஏற்படுகிறதென்று சொன்னார். இலங்கைத் தமிழர்கள் நீலகிரி மாவட்டத்தில் இருக்கிறார்கள். அவர்கள் வேலையில்லாமல் இருக்கிறார்கள். மேலும் நீலகிரி மாவட்டம் பின்தங்கிய மாவட்டமாக இருக்கிறது. இந்த நிலையைப் போக்க ஒரு நூற்பாலையை அங்கே நிறுவுவதுபற்றி மாண்புமிகு அமைச்சரவர்கள் மறு பரிசீலனை செய்வார்களா?

**மாண்புமிகு மேலவைத் தலைவர்:** மூலக் கேள்விக்கு சம்பந்தமுள்ள தென்றால் அமைச்சரவர்கள் பதில் சொல்லலாம்.

**மாண்புமிகு திரு. சு. திருநாவுக்கரசு:** இலங்கையிலிருந்து வருகின்ற அகதிகளுக்கு அல்லது ஆதி திராவிடர்களுக்கு என்று தனியாக நூற்பாலைகள் ஏற்படுத்தவில்லை. நூற்பாலைகளை ஏற்படுத்தும்போது, மைய அரசு ஐ.ஆர்.டி.பி-யிலிருந்து பணம் கொடுக்கிறது. இத்தனை சதவிகிதம் அகதிகளுக்கும், ஆதி திராவிடர்களுக்கும் இடம் கொடுத்தால், நிதி உதவி தருகிறோமென்று சொல்லுவதால், அதைப் பெற அந்த சதவிகிதத்தை அவர்களுக்கு ஒதுக்கி, அந்தப் பணத்தைப் பெற்றுக்கொண்டு எளிதில் தொழிற்சாலை அமைக்கும் முறையைப் பின்பற்றுகிறோம். முழுமையாக அகதிகளுக்கு என்று எந்த நடவடிக்கையும் இல்லை. ஆனால் நீலகிரி மாவட்டத்தில் வேலை வாய்ப்பு கருதி கூட்டுறவு நூற்பாலை வேண்டுமென்று சொல்லும் மாண்புமிகு உறுப்பினரவர்களின் கோரிக்கை அரசின் பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்படும்.

**சிமெண்டை கள்ளமார்க்கெட்டுக்காகப் பதுக்கி வைத்தல்.**

***38 வினா.—திரு. ம. சங்கரலிங்கம்:** மாண்புமிகு தொழில் அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) கன்னியாகுமரி மாவட்டம், நாகர்கோவில் நகரில் கள்ள மார்க்கெட்டுக்காகப் பதுக்கி வைக்கப்பட்டிருந்த சிமெண்டு, எவ்வளவு கண்டு பிடிக்கப்பட்டுள்ளது?

(இ) இது சம்பந்தமாக வழக்கு ஏதேனும் பதிவு செய்யப்பட்டுள்ளதா?

(உ) எந்த இடத்தில் யாரால் எத்தனை மூட்டைகள் பதுக்கி வைக்கப் பட்டிருந்தன?



1983 ஜனவரி 29]

(எ) மாவட்டத்தின் இதர இடங்களிலும் இதுபோல் பதுக்கி வைக்கப் பட்டிருந்த சிமெண்டு கண்டுபிடிக்கப்பட்டுள்ளதா?

(ஐ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

(ஒ) இதுபற்றி அரசு எடுத்த நடவடிக்கை என்ன?

**மாண்புமிகு திரு. சு. திருநாவுக்கரசு:** ஒரு விவர அறிக்கை@ அவையின் முன் வைக்கப்பட்டுள்ளது.

**திரு. ம. சங்கரலிங்கம்:** மாண்புமிகு தலைவரவர்களே, கன்னியாகுமரி மாவட்டத்தில் கைப்பற்றப்பட்டதாகிய சில புள்ளிவிவரங்களை இங்கே கொடுத்திருக்கிறார்கள். அதில் குறிப்பாக 1982 டிசம்பர் 13 ஆம் தேதி தக்கலை என்ற இடத்தில் ஒரு லாரி பிடிபட்டதாகவும், அந்த லாரியை திரு. சண்முகம் என்ற அதிகாரி கண்டுபிடித்து, அதையொட்டி நாகர்கோவிலில் ஆயிரம் மூட்டைகள் உள்ள கடையைக் கண்டு பிடித்ததாகவும், அதுபற்றி வழக்குகள் தொடர நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்றும் செய்தித்தாள்களில் செய்தி வந்தது. அந்தப் புள்ளி விவரம் இதில் ஏன் இடம் பெற வில்லை என்று கேட்க விரும்புகிறேன்.

(முற்பகல் 10-10)

**மாண்புமிகு திரு. சு. திருநாவுக்கரசு:** நான் கொடுத்திருக்கிற விவரத்தில் எங்கெங்கே என்னென்ன தவறுகள் நடைபெற்றன என்கிற தகவல்கள் இருக்கின்றன. அந்த அடிப்படையில் அதிகாரிகளின் கவனத்திற்கு வந்த முழுமையான விவரங்களைக் கொடுத்திருக்கிறேன். நானே நேரடியாகத் தலையிட்டு எடுக்கச் சொல்வதோ அல்லது விடச் சொல்வதோ இடையாது. அதற்கு சம்பந்தமும் இல்லை. இங்கே பத்திரிகையில் ஏதோ செய்திகள் வந்ததாகச் சொன்னார்கள். அதற்குரிய ஆதாரம், அடிப்படை ஒன்றும் என்னிடத்தில் இல்லை. ஏதாவது தவறு நடந்தது என்றால், அதை நிச்சயம் விட்டு விடுவதற்கான வாய்ப்பு இல்லை.

**திரு. ம. சங்கரலிங்கம்:** 1982 டிசம்பரில் தக்கலையிலே ஆயிரம் சிமெண்டு மூட்டைகளுடன் லாரி பிடிக்கப்பட்டது, மடக்கிக் கொண்டுவரப்பட்டது, லாரி ஓனரும் சம்பந்தப்பட்டவர்களும் தாழையூத்திலிருந்து கேரளாவிற்கு சிமிண்டைக் கொண்டு போகும்போது, கண்டு பிடிக்கப்பட்டு தப்பித்து விட்டார்கள் என்கிற செய்தி வந்தது. அகல ரெயில் பாதை வந்த பிறகு,

---

@ 406-409 ஆம் பக்கங்களில் இணைப்பாக அச்சிடப்பட்டுள்ளது.

தாழையூத்திலிருந்து திருவனந்தபுரத்திற்கு லாரி மூலம் சிமெண்டு போவதில்லை. ரெயில் மூலம்தான் சிமெண்டு கொண்டு போகப்படுகிறது. அரசு மூலமாக, சட்டபூர்வமாக அனுப்பப்படுகிற சிமெண்டு கூட ரெயில் மூலம் தான் கொண்டு செல்லப்படுகிறது. ஆனால் குறிப்பிட்ட இந்தத் தவறை அதிகாரிகள் கண்டுபிடித்தார்கள். இதுகுறித்து 13 ஆம் தேதி வானொலியில் கூட சொல்லப்பட்டது. 14 ஆம் தேதி தினத்தந்தியில்கூட செய்தி வந்தது. எப்படியோ அவர்கள் தப்பித்து விட்டார்கள். அரசுக்குத் தொடர்பு இருக்கிறது என்று நான் சொல்லவில்லை. ஆனால் இதுபற்றி அரசு மறுபடியும் பரிசீலித்து எந்தச் சூழ்நிலையில், எப்படி அவர்கள் தப்பித்தார்கள் என்பதைப்பற்றி அரசு அறிய முயற்சி எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. திருநாவுக்கரசு: ஏற்கெனவே இதுபற்றிய விவரத்தைச் சொன்னேன். ஆனால் இப்போது மாண்புமிகு உறுப்பினர் சொல்லியுள்ள விவரத்தை சம்பந்தப்பட்டவர்களிடம் விசாரிக்கச் சொல்லி பதில் சொல்லவும், தகுந்த நடவடிக்கை எடுக்கவும் ஆவன செய்யப்படும்.

Thiru G. VASANTHA PAI : Will the Hon. Minister consider whether it is the levy cement or the free cement that is going into the black-market, because there are complaints that some levy cement which has been given to persons on the basis of permits is also going into the black market and is sold at a very high price?

மாண்புமிகு திரு. சு. திருநாவுக்கரசு: நான் சொல்லியிருக்கிற பதில் ஏற்கெனவே லெவி, நான்-லெவி என்ற இரண்டு முறையில் விநியோகம் வருவதற்கு முன்னால் நடைபெற்ற குற்றச்சாட்டு பற்றியது.

Thiru J. M. MIAKHAN : Sir, I find that there are 14 names printed as the persons apprehended and among them, one name has appeared thrice. I want to know how one person apprehended once can go out and can be apprehended again and again.

மாண்புமிகு திரு. சு. திருநாவுக்கரசு: ஒருவர் மூன்று முறை திருட்டுக் குற்றத்திற்கு உள்ளாகி, குற்றவியல் நடவடிக்கை மேற்கொள்வது என்பது சட்டப்படி நடக்கக்கூடியது. முதன் முதலில் குற்றம் சாட்டப்பட்டவர் ஜாமீனில் வந்து, பிறகு மீண்டும் அதே தவறைச் செய்து, பிற்பாடு மீண்டும் குற்றவாளியாகக் கருதப்பட்டு தண்டிக்கப்படக்கூடிய வாய்ப்பு இருக்கிறது. (சிரிப்பு)





மாண்புமிகு மேலவைத் தலைவர்: வினாக்கள் 39, 40 ஒத்திவைக்கப்படுகின்றன.

வினாக்கள்-விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு—ஓர் உரையின் தொடக்கத்தில் இடப்பட்டிருக்கும் உடுக்குறி (*) அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்.]

## 2. மேலவை விதி 82-ன் கீழ் அமைச்சரின் விவர அறிக்கை.

கேரளாவிலிருந்து மின்சாரம் பெறுவது குறித்த ஒப்பந்தம் குறித்து.

மாண்புமிகு மேலவைத் தலைவர்: மாண்புமிகு மின்சார அமைச்சர் அவர்கள் மேலவை விதி 82-ன் கீழ் அவைக்கு ஒரு விவர அறிக்கையை அளிப்பார்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: மாண்புமிகு மேலவைத் தலைவர் அவர்களே, கேரள மாநில உபரி மின்சாரத்தை தமிழ்நாட்டிற்குப் பெற வேண்டும் என்பதற்காக கேரள மாநில மின்துறை அமைச்சரோடு நேற்று முற்பகலில் நான் நடத்திய பேச்சுவார்த்தைகளைத் தொடர்ந்து கீழ்க்காணும் ஒப்பந்தம் தமிழ் நாட்டிற்கும் கேரள மாநிலத்திற்கும் இடையில் ஏற்பட்டுள்ளது என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவிக்கக் கடமைப்பட்டுள்ளேன்.

கேரள மாநிலம் தனது தேவைக்கும் ஏற்கெனவே ஒப்புக்கொள்ளப்பட்ட இனங்களுக்கும் போக மீதம் உள்ள உபரி மின்சக்தியை தமிழ்நாட்டிற்கு கீழ்க்காணும் நிபந்தனைகளுக்குட்பட்டு வழங்கும்:—

1. இந்த ஒப்பந்தம் 12—2—1983 முதல் 31—12—1985 வரை அமுலில் இருக்கும்.

2. 12—2—1982 முதல் 11—2—1984 வரையான காலத்திற்கு யூனிட் ஒன்றுக்கு 35 காசுகள் எனவும், 12—2—1984 முதல் 31—12—1985 வரையான காலத்திற்கு கட்டண விகிதங்கள் 11—2—1984-க்குள் பேச்சுவார்த்தைகள் மூலம் முடிவு செய்யப்படும் என்றும் முடிவு செய்யப்பட்டது. மேற்குறிப்பிட்டுள்ள கட்டணம் மத்திய ஆயத் தீர்வை கட்டணமாகிய யூனிட்டுக்கு இரண்டு காசுகளையும் உள்ளடக்கியதாகும். மத்திய ஆயத் தீர்வையை அதிகப்படுத்தினால் அதனை தமிழ்நாடு கேரள அரசுக்கு வழங்கும். மத்திய

ஆயத் தீர்வையில் எந்தவித குறைவு ஏற்பட்டாலும் அந்த அளவிற்கு தமிழ்நாடு தான் செலுத்தவேண்டிய கட்டண விகிதங்களை குறைத்துக் கொள்ளும்.

3. மேற்குறிப்பிட்டுள்ள கட்டணம் உச்ச நேர தேவை கட்டணத்தை உள்ளடக்கியதல்ல. மாலை 6 மணி முதல் இரவு 9 மணி வரையில் ஆன உச்ச நேர காலத்திற்கான கட்டணம் தென்பிராந்திய மின்சார அமைப்பு முடிவு செய்துள்ள கட்டண அடிப்படையில் தமிழ்நாடு அரசு வழங்கும்.

3. ஆளுநர் உரையின் மீது விவாதம்—தொடர்ச்சி.

மாண்புமிகு மேலவைத் தலைவர்: ஆளுநர் உரையின் மீது விவாதம். திரு. மீனாட்சிசுந்தரம் கொடுத்துள்ள திருத்தத்தை முன்மொழிவார்.

திரு. க. மீனாட்சிசுந்தரம்: தலைவரவர்களே, என் பெயரால் கொடுக்கப் பட்டுள்ள கீழ்க்காணும் திருத்தங்களை நான் முன்மொழிகிறேன்.

"கீழ்க்கண்டதை தீர்மானத்தின் கடைசியில் சேர்த்துக்கொள்ளவும்:—

1. ஆளுநர் உரையில் தஞ்சை-திருச்சி-புதுக்கோட்டை மாவட்டங்களில் விவசாயத்திற்கு ஏற்பட்டுள்ள தண்ணீர் தட்டுப்பாடு, நாடு முழுவதும் ஏற்பட் டுள்ள குடிநீர் தட்டுப்பாடு, மின்சார வெட்டு-விலைவாசி ஏற்றம் ஆகியவை களுக்கு நிரந்தர தீர்வு காணப்படாமை;

2. ஆசிரியர்களுக்கும் அரசு ஊழியர்களுக்கும் அகவிலைப்படி உயர்வு பற்றியும், ஓய்வு பெறும்போது ரூ. 10.000 பற்றியும் எதும் குறிப்பிடப் படாமை;

3. அரசு தந்த உறுதிமொழிப்படி சத்துணவு மையங்களுக்குப் புதிய பொறுப்பாளர்கள் நியமிக்கப்படாமை,

4. தமிழ்நாடு தேர்வாணைக் குழுவினால் தேர்ந்தெடுக்கப்பட்ட கிராம நிர்வாக அதிகாரிகளுக்கு இதுவரையில் வேலை அளிக்கப்படாமை;

5. அரசால் பழி வாங்கப்பட்ட அரசு ஊழியர்கள்-ஆசிரியர்கள் பிரச் சினைகளைத் தீர்ப்பது பற்றி ஏதும் குறிப்பிடப்படாமை ஆகியவை பற்றி மேதகு ஆளுநர் அவர்களின் உரையில் ஏதும் குறிப்பிடப்படாததற்கு இந்த அவை தன் வருத்தத்தைத் தெரிவித்துக் கொள்கிறது".



திரு. சி. ரா. வெட்கமிகாந்தன்: மாண்புமிகு மேலவைத் தலைவர் அவர்களே, மேற்சொன்ன திருத்தத்தை நான் வழி மொழிகிறேன்.

மாண்புமிகு மேலவைத் தலைவர்: உறுப்பினர்களுக்கு ஒரு வேண்டு கோள். நேற்றைய தினமும், நேற்றைக்கு முன்தினமும், அதற்கு முந்தின தினமும் வழக்கம்போல் எல்லோரும் பேசும்போது அவர்களுக்குக் கொஞ்சம் அதிருஷ்டம் இருந்தது அவர்கள் பேசும்போது கொஞ்சம் கூடுதல் நேரம் கொடுத்தேன். இனி 2 நாட்கள்தான் இருக்கின்றன. ஒரு உறுப்பினர் கூட பேசாமல் இருக்க மாட்டார் என்று தெரிகிறது. எல்லோரும் பேச பெயர் கொடுத்திருக்கிறார்கள்.

டாக்டர் இரா. சனார்த்தனம்: தலைவர் உட்படவா? (சிரிப்பு).

மாண்புமிகு மேலவைத் தலைவர்: தலைவர் எப்போது வேண்டுமானாலும் பேசுவதற்கு அதிகாரம் இருக்கிறது. (சிரிப்பு). ஆனால் பேசுகிற சம்பிரதாயம் இல்லை. இந்த விவாதத்தை இன்றைக்குத் தொடர்ந்து திங்கட்கிழமைக்குள் முடித்தாக வேண்டும். இனி பேசுகிறவர்கள் முந்திய நாட்களில் பேசியவர்களை வழிகாட்டியாகக் கொள்ளாமல், இருக்கிற இரு நாட்களுக்குள் பேசுகிற நேரத்தை வரையறுத்துப் பேசி ஒத்துழைப்பு கொடுக்குமாறு கேட்டுக்கொள்கிறேன். நானே உட்கார்ந்து சபையை நடத்தி வைக்கிறேன். குறைந்த நேரத்தை வரையறுத்துத் தந்தேன் என்ற பாவத்தை நானே சம்பாதிக்க வைக்கிறேன். (சிரிப்பு). இப்போது திரு. இராமமூர்த்தி பேசுவார். அவருக்காக மட்டும் சொல்லுவதாக எடுத்துக் கொள்ள வேண்டாம் (சிரிப்பு).

* திரு. க. இராமமூர்த்தி: மாண்புமிகு மேலவைத் தலைவரவர்களே, இந்த ஆண்டு ஆளுநர் உரையின் மீது என்னுடைய கருத்துக்களைத் தெரிவிக்கின்ற வாய்ப்பினைப் பெற்றமைக்காக முதலிலே என்னுடைய நன்றியைத் தெரிவித் துக்கொள்கிறேன். இந்த ஆண்டு நடைபெற இருக்கின்ற பல்வேறு நிலை களை எடுத்துக் காட்டிய ஆளுநர் உரை என்ன காரணத்தினாலோ நிலைமை களை எடுத்துச் சொன்ன அளவிற்கு, அதற்கான பரிகாரங்கள் எப்படி காத்திருக்கின்றன என்பதை வேகத்தோடு, தெளிவாகத் தெரிவிக்கவில்லை என்பதை நான் ஆரம்பத்திலேயே சுட்டிக் காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். அதோடு மட்டுமல்ல, பல இடங்களில் திரும்பத் திரும்ப மத்திய அரசு இதிலே உதவிட வேண்டுமென்ற வேண்டுகோள்களையும், மத்திய அரசு துணை புரிந் திருக்கிறது என்கிற தகவல்களையும், மத்திய அரசை நாங்கள் கேட்டுக் கொள்ள விழைகிறோம் என்கின்ற அளவுக்கு பாதுகாப்பான வாசகங்களையும்

[திரு. க. இராமமூர்த்தி] [1983 ஜனவரி 29

சேர்த்திருக்கிறார்கள். நிலைமை இவ்வாறிருக்க ஆளும் கட்சித் தரப்பிலே யிருந்து பேசியவர்கள் ஆளுநர் குரலுக்கு எதிர் குரலாக வேக வேகமாக மத்திய அரசை அரசியல் கண்ணோட்டத்தோடு விமர்சிக்கின்ற நிலையைக் கண்டேன். மாநில அரசைத் தான் நான் சொல்கிறேனேயல்லாமல், ஆளும் கட்சியைச் சொல்லவில்லை. இந்த மாநிலத்தின் நலன் கருதி எவ்வளவு ஜாக்கிரதையாக, எவ்வளவு பாதுகாப்போடு மத்திய அரசோடு இந்த அரசு தொடர்பு கொள்ள விழைகிறது என்பதை ஆளுநர் உரையிலேயிருந்து மிகவும் தெளிவாகப் புரிந்துகொள்ள முடிகிறது. இதே நேரத்தில் ஆளுகின்ற பொறுப்பை ஏற்றிருக்கின்ற ஆளும் கட்சியினர் எந்த அளவுக்கு அதைப் புரிந்து கொள்ளாமல் எவ்வளவு நேர்மாறாகத் தாழ்த்திச் சொல்கிறார்கள் என்பதைப் பார்க்கும்போது, அப்படிப் பேசுவதற்கான உரிமை அவர்களுக்கு இருந்தாலும்கூட, இதனால் தமிழகத்தின் நலன் பாதிக்கப்படக் கூடாது என்கிற ஆதங்கம் எனக்கு இருக்கிறது. அதோடு இப்படிப்பட்ட நிலைமை களைத் தவிர்ப்பது நல்லது என்று சொல்லுவது என்னுடைய கடமை என்று கருதுகிறேன்.

ஆளுநர் உரையிலே சென்ற ஆண்டு அறிவிக்கப்பட்ட சத்துணவுத் திட்டம் பற்றி மிகப் பெருமையாகச் சொல்லப்பட்டிருக்கிறது. சத்துணவுத் திட்டம் இன்றைக்கு அமுல்படுத்தப்படுகிற நிலையிலே, ஒன்றிலே நான் அரசாங்கத் தைப் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். சத்துணவுத் திட்டத்தின்கீழ் ஓரளவுக்கு நல்ல சத்துணவு தரமான உணவாக குழந்தைகளுக்குக் கிடைக் கிறது. பல இடங்களில் நான் செல்கிறபோது, சாப்பிடுகின்ற மாணவர் களை அல்லது சிறுவர்களை அழைத்து உணவு எப்படி இருக்கிறது என்று நான் கேட்கின்றபோது, நல்ல உணவு என்று அவர்கள் சொல்கின்ற நிலையை என்னால் காண முடிகிறது. அந்த வகையிலே அரசாங்கம் இந்த ஏற்பாட் டினைச் செய்தமைக்கு நான் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். எத்தனை கோடி ரூபாய் என்பதல்ல, எத்தனை கோடி ரூபாய் செலவிட்டாலும் அத்தனை கோடிக்கான நிதி நிலைமைகளை செவ்வெனே வைத்துக்கொண்டு செலவிடும் வரையில், அந்தத் திட்டத்தை நல்ல முறையில் செயல்படுத்துகின்ற நிலை இருக்கும்வரை நான் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். அதே நேரத்தில் சத்துணவுத் திட்டத்தை ஒரு அரசியல் பிரச்சாரமாக மாற்றியமைக்கும் முறை அரசுக்கு நல்லதல்ல, அரசியல் கட்சிக்கும் நல்லதல்ல என்று எச்சரிக் காமல் இருக்க முடியவில்லை.



1983 ஜனவரி 29] [திரு. க. இராமமூர்த்தி]

(முற்பகல் 10-20)

சென்ற ஆண்டு நிதிநிலை அறிக்கையில், அந்த அறிக்கை கொடுத்தபோது அடுத்த ஆண்டிலிருந்து இந்தத் திட்டத்தைத் தொடங்குகிறோம் என்று சொன்னார்கள். ஆனால் என்ன நடைபெற்றது என்று சொல்லால், அந்த நிதிநிலை ஆண்டிலேயே அது துவங்கப்படவில்லை. ஏன் அந்தத் திட்டம் அந்த நிதிநிலை ஆண்டிலேயே துவங்கப்படவில்லை? இந்தக் கேள்வி நிதி ஆண்டு துவங்கிய பின்னர் கேட்கப்பட்டாலும், இந்தத் திட்டம் நிதிநிலை அறிக்கை கொடுக்கும் முன்னரே பரிசீலிக்கப்பட்டு அதன் பின்னர்தான் நிதி நிலை அறிக்கையிலே சொல்லப்பட்டது. அப்போதே நாங்கள் "இந்த அரசு போதுமான கவனம் இதிலே செலுத்தாமல் இப்படிப்பட்ட மிகப் பெரிய செலவுக்கு வழி வகுக்கும் திட்டத்தைப் போட்டிருக்கிறது, இதுபற்றி சரியான முறையிலே முனைந்து பல கருத்துக்களைப் பரிசிலித்து திட்டங்களைத் தீட்டுங்கள்" என்று சொன்னோம். ஆனால் சரியாகத் திட்டத்தைத் தீட்டா ததால் நிதிநிலை அறிக்கையிலே கொடுத்த தகவலுக்கு மாறாக 1 ஆண்டு என்று சொல்லி, பின்னர் அதிகமாகக் காலம் கடத்தித்தான் தொடங்கினார்கள். அப்படித் தொடங்கியபோது அதற்கு சமாதானம் என்ன வருகிறது என்று சொன்னால், அண்ணா பிறந்த நாளிலே தொடங்க வேண்டும் என்று நினைத்துக் கொண்டிருந்தோம், ஆனால் பாவிகளா நீங்கள் அவசரப்படுத்தி நிலைமைகளைக் கெடுத்ததனாலே அதற்கும் முன்னமேயே தொடங்குகிறோம் என்று சொன்னார்கள். இந்த அவையிலே நிதிநிலை அறிக்கையிலே ஒன்றைச் சொல்லி அதற்கு நிதி ஒதுக்கும்போது அதிலே என்ன சொல்லப்பட்டதோ அதற் கேற்ப அந்த ஆட்சி நடந்துகொள்ள வேண்டும். அப்படி இல்லாதபோதுதான் குறைபாடுகளைச் சுட்டிக் காட்டுகிறோம். அப்படிச் சுட்டிக் காட்டுகின்றபோது அது தவறு என்று எப்படிச் சொல்ல முடியும்? அண்ணாவை இந்த மாநிலத் திலே மதிக்காதவர்கள் யாரும் இல்லை. பெரியகுளம் இடைத் தேர்தலுக்கு வேண்டி காரியங்களை அவசரப்பட்டு வேகமாக ஆரம்பித்ததனாலேதான் சொல் கிறோம். ஜூலை 1-ஆம் தேதி ஆரம்பித்தவர்கள் கொஞ்சம் 15 நாட்கள் பொறுத்திருந்து இந்தத் திட்டத்தை பெருந்தலைவர் காமராசர் அவர்களின் பிறந்த நாளிலே தொடங்கியிருக்கக்கூடாதா? சத்துணவைப் போடும்போது, அந்தத் திட்டத்திலே அரசியலைக் கலக்க வேண்டும் என்று நினைக்கும்போது, எந்த நல்ல நோக்கத்துக்காகக் கொண்டு வரப்பட்டதோ அந்த நல்ல நோக்கம் உங்களுடைய சாதாரண அரசியலால் பாழாக்கப்படுகிறது என்ற வேதனையை நான் சொல்லிக்கொள்கிறேன்.

இன்னொன்றையும் நான் இங்கே குறிப்பிட்டாக வேண்டும். இன்றையதினம் ஆசிரியர்கள் glorified cooks என்று சொல்லப்படும் நிலைமை இருக்கிறது என்று ஆசிரியர்களுடைய பிரதிநிதிகள் சொன்னார்கள். இந்தக்

கருத்தை மாண்புமிகு உறுப்பினர் திரு. சந்தோஷம் அவர்கள் பேசும்போது கூட குறிப்பிட்டார்கள். இந்நிலையைத் தவிர்த்திருக்க வேண்டும். இன்றைக்கு அனுபவம் ஏற்பட்ட பின்னர், அந்த அனுபவத்தின் அடிப்படையிலே சில நடவடிக்கைகள் எடுப்பதை பெரிய குறை சொல்ல விரும்பவில்லை. ஆனால், இது பற்றி இன்றையதினம் ஒரு மோதல் வந்திருக்கிறது. இவைகளைப் பரிமாறுவது ஆசிரியர்களா அல்லது ஆசிரியர்களின் மேற்பார்வையிலே பரிமாறுவதா அல்லது தயாரிப்பாளர்கள் தனியாக, ஆசிரியர்கள் தனியாக என்று வைத்து வேறு யாராவது கண்காணிப்பதா என்பதுபற்றிய பிரச்சினைகள் இருக்கின்றன. இவைகளிலே அங்கே இருக்கும் பொருட்கள் திருட்டுப் போனால், அல்லது அவற்றில் ஏதாவது குறைந்து போனால்,, அவைகளை யார் கண்காணிப்பது என்ற சிக்கலும் இருக்கிறது. சிக்கல்கள் இந்த உணவு அளிப்பதைப் பாதிக்கக்கூடாது என்பதை இந்த அரசு உணர்ந்து, இப்போதாவது தக்க நடவடிக்கைகளை எடுக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன். சில பத்திரிகைகளைப் பார்த்தால், ஆங்காங்கே சில சம்பவங்கள் நடந்திருப்பது தெரிகிறது. குறிப்பாக ஒரு விஷயத்தை எடுத்துக்கொண்டால், ஒரு இடத்திலே, அங்கு உணவு தயாரிப்பவர் ஊரிலே இல்லை. வெளியூர் சென்று விட்டார். அடுத்த நாள் திரும்பி வந்த பிறகு 'நான் வராத நாளுக்கும் சேர்த்து இனிப்போடு போடுகிறேன்' என்று சொன்ன பிறகும், அந்த ஊரிலே ஒரு பெரிய கலவரம் ஏற்பட்டு, வன்முறை அளவுக்கு நிலைமைகள் வளர்ந்திருக்கின்றன. ஆகவே, இதையெல்லாம் எதிர்பார்த்து. இவற்றுக்கெல்லாம் மாற்று ஏற்பாடுகளை இந்த அரசு ஆரம்பத்திலேயே செய்திருக்கலாம். ஒரு பெரிய திட்டம் ஏறக்குறைய 117 கோடி ரூபாய் என்ற அளவிலே, அல்லது அதற்கு சற்று அதிகம் என்ற அளவிலே திட்டத்தைப் போடும்போது, அதற்குரிய மற்ற நடவடிக்கைகளைப் பற்றி சிந்திக்க வேண்டாமா? இவைகளையெல்லாம் தாண்டி நின்று, நான் கிராமப்புறத்திலேயிருந்து வந்தவன் என்ற உரிமையோடு, மிக மிகப் பின்தங்கிய வகுப்பிலிருந்து வந்தவன் என்ற உரிமையோடு கேட்கிறேன், சத்துணவுத் திட்டம் என்ற பெயரிலே மிக நல்ல உணவைப் போடுகிறார்கள், அதை நான் பாராட்டுகிறேன். ஆனால், வெறும் 'சோறு தின்னி'யாக நம்முடைய குழந்தைகளை மாற்ற வேண்டாம் என்று நான் இந்த நேரத்திலே கேட்டுக் கொள்கிறேன். பள்ளியிலே கல்வியின் தரம் குறையாமல் இருப்பதற்கு ஆசிரியர்களின் எண்ணிக்கையை அதிகப்படுத்த இந்த அரசு எந்தவிதமான முயற்சியும் எடுக்கவில்லை என்பது மிகவும் வேதனைக்குரிய விஷயமாக இருக்கிறது. இருக்கும் ஆசிரியர்களையும் சத்துணவை ஒட்டிய வேறு பணிகளில் ஈடுபடுத்தியிருக்கிறார்கள். அது சரியா, தவறா என்பதிலே நான் அதிகமாக போக விரும்பவில்லை. அரசு இதையெல்லாம் எதிர்பார்த்து ஆசிரியர்களின் எண்ணிக்கையையும் அதிகப்படுத்தியிருக்க வேண்டும். கிராமப்புறங்களிலே இருக்கும் குழந்தைகளின் கல்விக்கு யார் பொறுப்பு? என்ன உத்தரவாதம்?



அவர்கள் நகரங்களிலே படிக்கவில்லை. பெரிய நர்சரி பள்ளிகளிலே சென்று படிக்கவில்லை. அல்லது இங்கே இருக்கும் அமைச்சர் பெருமக்கள், மற்றவர்கள் பிள்ளைகள் படிக்கும் சூழ்நிலையிலே அவர்கள் படிக்கவில்லை. இந்த அரசு கல்வியினுடைய தரத்தைத் தாழ்த்துகிறது அல்லது மிகவும் பின்தங்கியவர்களுடைய கல்வி வாய்ப்புக்களைக் குறைத்து அவர்கள் பெறும் கல்வியின் தரத்தைத் தாழ்த்துகிறது என்பதை இந்த நேரத்திலே என்னால் சொல்லாமல் இருக்க முடியவில்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

குழந்தைகளைப் பொறுத்தவரையில், 2 வயதிலேயிருந்து 4 வயதுக்குட்பட்ட குழந்தைகள் 23 லட்சம் பேர்கள் இந்தச் சத்துணவுத் திட்டத்தின்கீழ் தமிழகத்திலே சாப்பிடுகிறார்கள். இவர்கள் சாப்பிடும் இடம் மொத்தம் 27,800 மையங்கள். அதைப்போலவே, 42 லட்சம் குழந்தைகள் 5 வயது முதல் 10 வயதுக்கு உட்பட்டவர்கள் இந்தச் சத்துணவைச் சாப்பிடுகிறார்கள். அவர்கள் 33,700 சத்துணவு மையங்களிலே உணவு அருந்துகிறார்கள். சராசரியாகப் பார்ப்போமானால் 2 வயது முதல் 4 வயது வரையுள்ள குழந்தைகள் ஒரு மையத்திற்கு 84 அல்லது 85 என்ற வகையிலே சாப்பிடுகிறார்கள். இதுதான் நிலைமை என்று சொன்னால் வறுமைக் கோட்டுக்குக் கீழே இருக்கும் குழந்தைகள் எல்லாம் இதிலே வந்துவிட்டார்கள் என்று பொருளா? 1-வது வகுப்பிலேயிருந்து 5-வது வகுப்பு வரைக்கும் படிக்கும் 5 முதல் 10 வயதுக்குட்பட்ட குழந்தைகள் ஒரு மையத்திலே சராசரியாக 125 குழந்தைகள்—அதாவது சென்னை போன்ற நகரங்களையும் சேர்த்து—இந்த மைய உணவுத் திட்டத்திலே சாப்பிடும் நிலை இருக்கிறது என்று சொன்னால் வறுமைக் கோட்டுக்குக் கீழே இருப்பவர்கள்—நான் சொல்கிறேன்—இன்னும் இந்தத் திட்டத்தின் கீழ் வந்து சாப்பிடவே இல்லை. அப்படிப்பட்ட நிலைமை இருக்கிறது என்று சொன்னால் அவர்கள் எப்போது கல்விக்கூடத்திற்கு வர இருக்கிறார்கள்? அதைப்பற்றியெல்லாம் இந்த அரசு ஒதுக்கப்படுமா கவனம் செலுத்த வேண்டாமா? இந்த உணவை மட்டும் வைத்துக் கொண்டு தம்பட்டம் அடித்துக்கொண்டிருக்கும்போது அதன் தொடர்பாக இருக்கும் கல்விக்கும் அதுபோல தம்பட்டம் அடிக்கும் நிலைமை இருந்தால் நான் முழுமையாகப் பாராட்டியிருப்பேன். ஆனால் அந்த நிலைமை இல்லாததால் இப்போது பாராட்டும்போதுகூட மிகவும் வேதனையோடுதான் பாராட்டுகிறேன். தீனி கொடுத்து வளர்க்கிறார்களே தவிர கல்வி கொடுக்காமல் முட்டாளாக்கி வைத்துக் கொண்டிருக்கிறார்களே என்ற வேதனை கிராம மக்களிடத்திலே இருக்கிறது என்பதை நான் இங்கே சுட்டிக்காட்ட விரும்புகிறேன். இந்தத் திட்டத்தின் மூலம் 2 லட்சத்து 63 ஆயிரம் மாணவர்கள் புதிதாகக் கல்விக்கூடங்களில் சேர்ந்திருக்கிறார்கள். மாணவர்களின் எண்ணிக்கை அதிகமாகியிருக்கிறது என்ற தகவல் கொடுத்திருப்பதால் ஏற்கெனவே பள்ளிக்கு வருவதற்குத் தயாராக இந்த வயது வரம்பில் இருந்தவர்கள் கல்வி [illegible]

[திரு. க. இராமமூர்த்தி] [1983 ஜனவரி 29

வராமல் இருந்திருக்கிறார்கள், அவர்களின் கல்வியில் இந்த அரசு இதுவரை கவனம் செலுத்தவில்லை என்ற குற்றச்சாட்டையும் நான் சுமத்த விரும்புகிறேன். இந்த அரசு செயல்படவில்லை. அதன் அடித்தளத்திலே இருக்கும் கல்வித் துறை சரியாகப் பணியாற்றவில்லை என்ற கருத்தை அவர்கள் அறிக்கை மூலம் அவர்களே ஒத்துக்கொண்டிருக்கிறார்கள் என்பதை ஆளுநரின் அறிக்கை சுட்டிக் காட்டியிருக்கிறது.

இங்கு கொடுக்கப்பட்டிருக்கும் ஆளுநர் உரை தமிழிலும் கொடுக்கப்பட்டிருக்கிறது. ஆங்கிலத்திற்கு மொழி பெயர்ப்பு வைத்திருக்கிறார்கள். ஆளுநர் உரை சர்ச்சையை (Controvers) உருவாக்குவதாக . . . .

மாண்புமிகு மேலவைத் தலைவர் : தமிழிலேயிருந்து ஆங்கிலத்திற்கு மொழி பெயர்த்திருப்பதாக ஏன் எடுத்துக் கொள்ளக்கூடாது? அப்படிச் சொன்னால் தமிழுக்குப் பெருமையாக இருக்குமே !

திரு. க. இராமமூர்த்தி : தமிழிலேயிருந்து ஆங்கிலத்திற்கு மொழி பெயர்த்திருந்தால் நல்லதுதான். ஆளுநர் அவர்கள் உரையில் இப்படித்தான் சொல்ல வேண்டுமா? உறுப்பினர்களை வலுச் சண்டைக்கு இழுப்பதற்குத்தான் ஒரு ஆட்சி இருக்கிறது என்றுதான் நினைக்க வேண்டியிருக்கிறது. என்ன சொல்லப்பட்டிருக்கிறது என்றால் 'மக்களில் விவரம் தெரிந்த, அறிவார்ந்த எல்லாப் பிரிவினரும், பத்திரிகையாளர்களும் இத்திட்டத்தை உளமாரப் பாராட்டியுள்ளனர்' என்று. இந்த 'அறிவார்ந்த' என்ற வார்த்தை படும்பாடு கொஞ்ச நஞ்சமல்ல. மக்களில் அறிவார்ந்த பிரிவினரும், பத்திரிகையாளர்களும் இந்தத் திட்டத்தைப் பாராட்டியிருக்கிறார்கள், அல்லது பாராட்டியவர்கள் எல்லாம் அறிவார்ந்தவர்கள் என்றால், இந்தத் திட்டத்தைப் பற்றி யாரும் குறை சொல்லக் கூடாதா? இது ஆளுநர் உரையிலே இடம் பெறலாமா?

(முற்பகல் 10-30)

இதுதான் உண்மை என்றால் ஆங்கிலத்திலே அந்த வார்த்தை இருக்கிறதா என்று பார்க்கிறேன்.

"This programme has drawn appreciation from all sections of the enlightened public and the Press."

இந்த ஆங்கிலச் சொற்களுக்கு அர்த்தம் தெரிந்தவர்கள் இங்கே இருக்கிறார்கள். தலைவர் அவர்களுக்கும் நன்றாகத் தெரியும். இந்த மாதிரியான தமிழ் வார்த்தைகளை ஆளுநர் மூலமாக அவையிலே படிக்க வைக்கின்ற நிலைமை



1983 ஜனவரி 29] [திரு. க. இராமமூர்த்தி]

எப்படி ஏற்படுகிறது? பொறுப்பு உணராதவர்களிடம் மொழி பெயர்ப்புப் பணி தரப்படுகிறது என்ற குற்றச்சாட்டைக் கடுமையாக இந்த ஆட்சி மீது சுமத்துகிறேன்.

டாக்டர் இரா. சனார்த்தனம்: தலைவர் அவர்களே, மொழி பெயர்ப்பு தவறு என்று சொல்ல முடியாது. "என்லைட்டண்டு" என்ற ஆங்கில வார்த்தைக்கு "அறிவார்ந்த" என்ற சொல் மக்களுக்கும் பத்திரிகையாளர்களுக்கும் வருகிறது. ஒரு சொல்லால் இரண்டையும் குறிப்பிடுவதாகக் கருதுகிறேன்.

திரு. க. இராமமூர்த்தி: ரொம்பவும் சந்தோஷம். மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய விளக்கம் நல்ல விளக்கம்தான். அதனால்தான் மொழி பெயர்ப்பை இப்படிக் கெடுத்துக் கொண்டிருக்கிறார்கள். இன்னும் . . .

மாண்புமிகு மேலவைத் தலைவர் : மாண்புமிகு உறுப்பினர் மொழி பெயர்ப்பிலேதான் இருக்கிறார்களோ !

திரு. க. இராமமூர்த்தி : அவர்களுடைய கொள்கையையே மாற்றுகிற அளவிலே மொழிபெயர்ப்பு செய்திருக்கிறார்கள். பின்னால் அதனையும் தங்கள் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

இரண்டாவதாக தன்னிறைவுத் திட்டத்தைப் பற்றிக் குறிப்பிட்டிருக்கிறார்கள். தன்னிறைவுத் திட்டம் இந்த நிதிநிலையாண்டோடு முழுமை பெறுகிறது என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். தமிழகத்திலுள்ள எல்லா கிராமங்களும், பஞ்சாயத்து ஒன்றியங்களும் நிறைவுபெறுகின்றன இந்த ஆண்டு என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். இந்தத் திட்டத்ினுடைய நோக்கத்தைப் பற்றியோ, அதற்கான செலவைப் பற்றியோ குறை சொல்லவில்லை. செலவிடப்பட்டிருக்கிற விதம் சரியல்ல, அதிலே கொள்ளையடிக்கப்பட்டிருக்கிற விதம் கொஞ்ச நஞ்சமல்ல. அது எல்லோருக்கும் தெரியும். இதற்குக் காரணம் எல்லோருக்கும் தெரியும். உள்ளாட்சி மன்றங்கள் இன்றைக்கு இயங்கவில்லை. ஆகவே சரியான கண்காணிப்பு இல்லை. அதனுடைய விளைவு என்னவென்றால், ரோடு போடுவதற்காகவும், தண்ணீர் தொட்டி கட்டுவதற்காகவும் கொடுத்த பணத்திற்கான கணக்கு வருகிறது. ஆனால் அங்கே ரோட்டையும் காணோம், தண்ணீர் தொட்டியும் காணோம். அதிகாரிகளுக்கு அல்லது சிபார்சு செய்தவர்களுக்குக் கமிஷன் போய்க்கொண்டே இருக்கிறது. இதை யாரும் மறுத்துவிட முடியாது. இந்த நிலையின் விளைவாக, தன்னிறைவுத் திட்டம் என்றாலே, கிராமங்களில் கேலியும், கிண்டலுமாகப் பேசுகிறார்கள்.

அதைப்போலவே பெண்களுக்கான கழிவு அறைகளைக் கட்ட வேண்டுமென்ற நல்ல திட்டத்தைக் கொண்டு வந்திருக்கிறார்கள். யார் யாருக்கு கான்ட்ராக்ட் கொடுக்கப் போகிறார்கள் என்று இப்போதே பேசிக்கொள்கிறார்கள். கழிவு அறை கட்டுவதற்காக 15 ஆயிரம் ரூபாய் என்று பஞ்சாயத்து யூனியனில் சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். சாமான்களுக்காக நான்காயிரம் ரூபாய் போக மீதி 11 ஆயிரம் ரூபாயில் செப்டிக் டாங்கும் கட்டிடமும் கட்ட வேண்டுமென்று சொல்லுகிறார்கள். அதுவும் பூமிக்கு அடியில் கட்டப் போகிறார்கள். பூமிக்கு மேலே கட்டினாலே இடிந்து விழும். இதைக் கட்டப் போகிறவர்கள் யார் யார் என்று இப்போதே சொல்லுகிறார்கள். ஆகவே மீண்டும் சொல்லுகிறேன், தன்னிறைவுத் திட்ட அறிவிப்புபோல இதுவும் ஒரு நல்ல அறிவிப்புதான். பஞ்சாயத்து அளவிலே ஒரு கமிட்டி போட்டிருக்கிறார்கள். அந்தப் புதிய அதிகாரப் பிரதிநிதிகள் ஆதிக்கம் செலுத்துவதால், இத்தகைய தவறுகளை, கோளாறுகளை அ.தி.மு.க. செய்கிறது என்று சொல்லுகிறார்கள். ஆகவே அவர்கள்தான் இத்தகைய தவறுகளுக்குக் காரணம் என்று சொல்லக் கூடிய அளவிற்கு தங்களை அறியாமலேயே உருவாக்கிவிடுகிறார்கள். எந்தப் பிரச்சினை வந்தாலும், நம்முடைய கட்சிக்கு என்ன பலன் வரும் என்பதிலே தான் கண்ணும் கருத்துமாக இருக்கிறார்கள். அப்படி இருப்பதைத் தவறு என்று நான் சொல்லவில்லை. அதற்காக எல்லோரையும் புறக்கணிக்க வேண்டுமென்று செயல்கள் நடைபெறுகின்றன என்ற குற்றச்சாட்டிலிருந்து நீங்கள் தப்ப முடியாது. இதனால் தமிழகத்திற்குக் கிடைக்க வேண்டிய பலன் கிடைக்காமல் போகிறது என்ற நிலைமையை எடுத்துச் சொல்ல வேண்டியது என்னுடைய கடமையென்று கருதுகிறேன்.

அடுத்ததாக, குடி நீர்ப் பிரச்சனை. அமைச்சர் அவர்கள் இங்கே இருக்கிறார்கள். அவரை நான் பாராட்ட வேண்டும். மற்றவர்கள் பாராட்டுகிறார்களோ இல்லையோ அவரைப் பாராட்ட எனக்கு உரிமை இருக்கிறது. சென்னை நகரத்தைப் பொறுத்த வரையில், கடுமையான குடிநீர்ப் பற்றாக் குறை ஏற்பட்டபோது, மாநகராட்சி மன்றம் விறுவிறுப்பாக வேலை செய்து நிலைமையைச் சமாளித்தது. ஆகவே அவரைப் பாராட்டுவதில் குறை கிடையாது. இந்தப் பிரச்சினையைப் பொறுத்த வரையில், நல்ல முறையில் செயல் பட்டிருக்கிறார்கள். சென்னையில் உள்ள குடிநீரில் உள்ள "பொலூஷன்" (Pollution) மாதிரி இந்தியாவிலேயே வேறு எங்கும் கிடையாது. தண்ணீரை வடிகட்டினாலும்கூட, ஒரு மணி நேரத்திற்குள் மஞ்சளாகப் போகிறது. கறுப்பு கறுப்பாக அடியில் நிற்கிறது. குடிநீரில் உள்ள "பொலூஷனைத்' தடுக்காவிட்டால், அரசாங்கம் எதைத்தான் செய்யப்போகிறது? மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இதைக் கண்காணிக்க





வேண்டும். அவரை மீறினது இது என்பது வேறு. நல்ல குடிநீரை வழங்க வேண்டியது ஓர் ஆட்சியின் கடமை. குடிநீர்ப் பிரச்சினையைப் பொறுத்தவரையில், எதிர்க்கட்சிகள் குற்றம் சொல்லுவதும் அதற்கு ஆளும் கட்சியிலிருந்து மறுப்பு சொல்லுவதும் என்ற அளவிலே நடைபெற்றால், இது எங்கே போய் முடியும் ? சென்னையினுடைய தண்ணீர்த் தேவையைப் பூர்த்தி செய்வதற்காக இதுவரை வீராணம், கட்டளை, கிருஷ்ணா என்று பல திட்டங்கள் வந்துவிட்டன.

**மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்:** "பொலூஷன்" என்ற கடுமையான வார்த்தையை மாண்புமிகு உறுப்பினர் உபயோகப்படுத்தியிருக்கிறார்கள். அது "பொலூஷன்" இல்லை. எந்த இடத்திலாவது இப்படி இருக்கிறது என்று சொன்னால், உடனடியாக நாங்கள் அதைச் சென்று தடுக்க வேண்டிய நடவடிக்கையை எடுக்க முடியும்.

**மாண்புமிகு மேலவைத் தலைவர்:** ஒருவேளை தமிழில் மொழி பெயர்த்தால் கடுமை குறையுமோ என்னமோ !

**மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்.** அதற்கு வேண்டிய நடவடிக்கைகளை நாங்கள் எடுத்துக்கொள்கிறோம். கலர் மாறியிருக்கிறது, வடிகட்டினால் கறுப்பாக வருகிறது என்பதை வைத்துக்கொண்டு Water is polluted என்ற முடிவுக்கு வர வேண்டாம் என்று பணிவோடு தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. க. இராமமூர்த்தி:** என்னை நான் திருத்திக்கொள்கிறேன். "வாட்டர் கன்டாமினேஷன்" Water contamination ) தண்ணீர் கெட்டுப் போயிருக்கிறது. நான் இப்படிச் சொல்வதால், மாண்புமிகு அமைச்சர் அவர்கள் என்னை வீட்டு வசதி வாரிய குடியிருப்பிலிருந்து வெளியே போ என்று சொல்லமாட்டார்கள் என்று நினைக்கிறேன். நான் லாயிட்ஸ் காலனியில் குடியிருக்கிறேன். தெரியாத்தனமாக பொருட்காட்சிச் சாலைக்குப் போனபோது ஒரு ஃபில்டரைக் (Filter) கொடுத்தார்கள். அதைக் குழாயில் மாட்டிவிட்டேன். என்னுடைய மகன் அந்த ஃபில்டரைக் கொண்டு வந்து காட்டி "பாருங்கள், இதில் எவ்வளவு தேங்கியிருக்கிறது. இதைத்தான் நாம் குடிக்கிறோம்" என்று சொன்னான். அதிகாரிகள் வசிக்கக் கூடிய இந்த லாயிட்ஸ் காலனியிலேயே இந்த நிலைமை என்றால், அதிகாரிகள் இல்லாத நிலையில் . .

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** நீங்கள் உறுப்பினராக இருப்பதால், உங்கள் மகன் அதைக் காட்டினான் போல் இருக்கிறது.

**திரு. க. இராமமூர்த்தி :** என்னுடைய மகளுக்கு இதை நான் எடுத்துச் சொல்ல முடியும் என்று தெரிந்திருப்பதில் மகிழ்ச்சி. குறைந்த காலத்திலே வேகமாகச் செயல்பட்டு நல்ல முறையில் குடிநீர்ப் பிரச்சினையை அமைச்சர் தீர்த்திருக்கிறார். ஆனால் நீண்ட கால அடிப்படையில் குடிநீர்த் தேவையை எப்படி சமாளிக்கப் போகிறார்? அதற்காக என்ன நடவடிக்கையை எடுத்திருக்கிறார்? வீராணம் திட்டம் ஆச்சு, கட்டளைக் கால்வாய் திட்டம் ஆச்சு, கிருஷ்ணா திட்டம் ஆச்சு. ஆந்திராவில் திரு. விஜயபாஸ்கர ரெட்டி முதலமைச்சராக இருந்தபோதே சொன்னார், "வாருங்கள், ஒப்பந்தம் தயாராக இருக்கிறது" என்று. என்ன காரணத்தாலோ, என்ன ஏற்பட்டதோ தெரியவில்லை, அந்த ஒப்பந்தம் கையெழுத்திடப்படவில்லை. இனிமேல் என்ன செய்யப் போகிறார்கள் என்று தெரியவில்லை. ஜஸ்டிஸ் கட்சி பாரம்பரையில் வந்த முதலமைச்சர் ஒருவேளை உடனடியாக ஒப்பந்தத்திற்கு வரலாம். அது எப்படியிருந்தாலும் கிருஷ்ணாவிலிருந்தோ, வீராணத்திலிருந்தோ, கட்டளைக் கால்வாயிலிருந்தோ தண்ணீர் வந்தால், அந்தத் தண்ணீரைத் தேக்கி வைப்பதற்கான ஏரிகள், குளங்கள், சேமிப்பு இடங்கள் எங்கே இருக்கின்றன? அதற்கு இந்த அரசு என்ன நடவடிக்கை எடுக்கிறது? அதற்காக எவ்வளவு நிதி ஒதுக்கீடு செய்திருக்கிறது? அதற்காக எவ்வளவு நில ஒதுக்கீடு செய்திருக்கிறது? சென்னை நகரத்தினுடைய மிகப் பெரிய தேவையைச் சமாளிக்க இந்த அரசு என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறது என்று ஒரு வார்த்தைகூட ஆளுநர் உரையில் இல்லை என்பதைப் பார்க்கும்போது, நான் மிகுந்த வேதனையடைகிறேன். இந்த அரசு நீண்ட காலத் திட்டங்களுக்காகச் செயல்படவில்லை. அன்றாடப் பிரச்சினைகளுக்காக அதிலிருந்து கிடைக்கிற வலிமைக்காக, புகழ்ச்சிகளுக்காகச் செயல்படுகிறார்கள் என்பதைப் பார்க்கும்போது, வேதனை ஏற்படுகிறது. அரசியல் கட்சிக்கு ஆட்சிப் பொறுப்பிலே இருப்பவர்களுக்கு அதுவும் தேவை. ஆனால் நீண்ட கால அடிப்படையில் திட்டங்களைத் தீட்ட வேண்டும். மாண்புமிகு அமைச்சர் திரு. இராசா முகமது அவர்கள் சொன்னதைப் போல, இந்த இடத்திற்கு யார் வேண்டுமானாலும் வரலாம். ஆனால் இந்த இடம் நிரந்தரமான இடம். இந்த இடம்தான் தமிழகத்தைக் காக்கிற இடம். நம்மை மட்டுமல்லாமல், நமக்குப் பின்னாலே வரப் போகிற "ஆயிரம் காலத்துப் பயிரைக்" காக்கப் போகிற இடம் இதுதான். இந்த நோக்கத்தோடு செயல்பட வேண்டும். சென்னை நகரத்திலே தண்ணீர்ப் பற்றாக்குறை வந்தால், அத்தனை பிரச்சினைகளுக்கும், இப்போது சமாளித்த மாண்புமிகு அமைச்சர் அவர்கள்தான் பொறுப்பை ஏற்றாக வேண்டும்.





(முற்பகல் 10-40)

நீண்டகாலத் திட்டத்தைத் தீட்டாமல், பாவிகள் இப்படி விட்டுவிட்டார்களே என்று வருகின்ற தலைமுறையினர் குற்றம் சாட்டினால், அது உங்களாலே எங்களையும் சார்ந்துவிடுகிறதே என்ற கவலையில் நான் இதைச் சொல்வதை என்னால் தவிர்க்க முடியவில்லை.

இன்னொன்று சொல்கிறேன். இந்த நேரத்திலே நான் எவ்வளவுதான் சென்னைக்கு, தமிழகத்திற்கு என்று பேசினாலும்கூட எங்கள் ஊரைப் பற்றி சொல்லாமலிருக்க முடியாது. திண்டிவனத்தில் நிரந்தரமாகத் தண்ணீர்ப் பற்றாக்குறை இருக்கிறது. இதற்கு யார் காரணம், எந்த இடம் காரணம் என்று அமைச்சருக்குத் தெரியும். திண்டிவனத்திலே தண்ணீர் இல்லை. இதை நாம் அரசியலை மறந்து பார்க்கவேண்டும். இரட்டணை கிராமம் என்று இருக்கிறது. அங்கிருந்துதான் திண்டிவனத்திற்கான தண்ணீர் கொண்டுவரப்பட்டிருக்கிறது. அந்த இரட்டணை கிராமத்திலேயிருந்து கோர்ட்டுக்குப் போவதெல்லாம் வந்திருக்கிறது. எந்தச் சூழ்நிலையில் அப்படி வந்தது என்பது தெரியும். எவ்வளவோ வேகமாக நடவடிக்கை எடுத்திருக்கலாம். இருந்தாலும் பரவாயில்லை. மாற்றுத் திட்டம் போட்டாவது தண்ணீர் கொடுக்க ஏற்பாடு செய்யுங்கள். இன்று ஒருவர் ஒரு கட்சியில் இருக்கிறார். அவர் பிறகு இன்னொரு கட்சிக்குப் போகிறார். அந்தக் கட்சியிலேயிருந்து இந்தக் கட்சிக்கு வருகிறார். தமிழகத்திலே இப்படியெல்லாம் நடக்கும். தமிழகத்திலே இருக்கின்ற ஆட்சி இதையெல்லாம் கருத்தில் கொண்டு செயல்படுவது நல்லதல்ல. இதற்குமேல் அதைப்பற்றிச் சொல்ல விரும்பவில்லை. அவர் பெயரைச் சொல்ல விரும்பவில்லை. இரட்டணையிலிருந்து திண்டிவனத்திற்கு தண்ணீர் வரவில்லை. அதிலே இன்னொரு கிணறு போட்டு தண்ணீர் கொடுப்பதற்கு நடவடிக்கை எடுத்திருக்கலாம். அப்படி இருந்தும்கூட அதிலே தாமதம். அதிலே அதிகாரிகள் காலதாமதப் படுத்தினார்கள். அதனுடைய விளைவாக சிலர் கோர்ட்டுக்குப் போகின்ற நிலைமையை ஏற்படுத்திக் கொடுத்திருக்கிறார்கள். தண்ணீரே கிடைக்கவில்லை. ஆனால், கோர்ட்டுக்குப் போக வாய்ப்பு ஏற்படுத்திக்கொடுத்திருக்கிறார்கள். இதற்கு மாற்றுத் திட்டம் இருக்கிறது. அதையும் பயன்படுத்தவில்லை. அதைச் செயல்படுத்தவில்லை என்பதைச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். இரட்டணை ஒரு முன்னாள் எம். எல். ஏ. வினுடைய சொந்த ஊர். இந்த விவரம் மட்டும் போதும் என்று நினைக்கிறேன். அதற்குமேல் பெயர் சொல்ல வேண்டாம் என்று நினைக்கிறேன்.

இரண்டாவதாக, தமிழகத்தின் வறட்சி நிலைமையைப் பற்றி இந்த நேரத்திலே சொல்வது என்னுடைய கடமை. இந்த வறட்சி நிலைமையைப் பற்றி, ஆளுநர் அவர்கள் உரையிலே என்ன குறிப்பிடப்பட்டிருக்கிறது? "ஆகவே மத்திய அரசு நிச்சயமாக ஏதோ செய்யும். உதவிக்கு வரும்" என்ற வார்த்தைகளைத்தான் மிகுந்த முன்னெச்சரிக்கையோடு ஜாக்கிரதையோடு பயன்படுத்தியிருக்கிறார்கள். இங்கே இருக்கின்ற வறட்சி நிலை என்ன? "பசியாலே, பஞ்சத்தாலே, பட்டினியாலே மக்கள் செத்துக்கொண்டிருக்கிறார்கள். இதற்கு ஏன் ஒரு ஆளும் கட்சி, ஒரு மத்திய ஆட்சி ஏன், வந்தே மாதரம் ஏன்?" என்றெல்லாம் பேசினார்கள். எனக்கு என்ன சொல்வது என்றே புரியவில்லை. வந்தேமாதரம் இருக்கிறதா இல்லையா என்பதல்ல. அது பல பேர்களை கதிகலங்க வைத்திருக்கிறது. ஆனால் மத்திய அரசினுடைய உதவியைக் கேட்கிறபோது, இங்கே இருக்கின்ற அரசாங்கம் முறையாகச் செயல்பட்டிருக்கிறதா? விவரங்களைச் சொல்கின்றபோது, நான் இங்கே ஒரு அரசியல் கட்சியாக நின்று பேசுகிறேன், இந்த அரசுப் பொறுப்பில் உள்ளவர்கள் தாங்கள் செய்யவேண்டிய கடமைகளைச் செய்தார்களா? மத்திய அரசுக்கு உரிய காலத்திலே அறிக்கை அனுப்பவில்லையா என்று கேட்டால், கடைசி மழை பெய்யவில்லை என்றால், அதற்குப் பிறகு அறிக்கை அனுப்பினால் நல்லது, முன்னாடியே அனுப்பினால் பணம் குறைந்துவிடும் என்று சொல்கிறார்கள். மற்ற மாநிலங்கள் எல்லாம் மத்திய அரசிடமிருந்து தங்கள் மாநிலங்களுக்காக வறட்சிக்காக மத்திய அரசிடமிருந்து உதவி கோரிப் பெற்றிருக்கின்றன. அந்தந்த மாநிலங்களுடைய முதலமைச்சர்கள் அல்லது சம்பந்தப்பட்ட அமைச்சர்கள் மத்திய அரசிடம் சென்று தங்களுடைய நிலைமைகளை எடுத்துச்சொல்லி, உதவி கோரிப் பெற்றிருக்கிறார்கள். இங்கே என்னவாயிற்று? வறட்சி இருக்கிறதா இல்லையா என்பதை அறிவிப்பதில் காலதாமதம் ஆகியிருக்கிறது. அதிகாரிகள் தெரிவிக்க காலதாமதமாகியிருக்கிறது. இதைப்பற்றி நான் என்ன சொல்வது என்று தெரியவில்லை. இதை ஏன் சொல்கிறேன் என்றால், வறட்சி இருக்கிறதா இல்லையா என்று சொல்வதில் இந்தக் கடமையை நிறைவேற்றுவதில் எவ்வளவு வேகமாக, எவ்வளவு தாமதம் செயல்பட்டிருக்கிறார்கள் என்பதை நாம் பார்த்துக்கொண்டிருக்கிறோம். சௌத் வெஸ்ட் மான்சூன், தென்மேற்குப் பருவ மழை எப்போது பொய்த்ததோ அப்போதே வறட்சி வந்துவிட்டது என்றுதான் அர்த்தம். வறட்சி வந்த பிறகு வறட்சியினுடைய முதல் நிலைமையைத் தெரிவித்து முதல் தவணையாக வறட்சி நிவாரண நிதி கேட்டிருக்க வேண்டாமா? இந்த நிதியைப் பெறாதது மிகப்பெரிய தவறு. இந்தத் தவறை இந்த ஆட்சி செய்திருக்கிறது. அதன் விளைவாக வறட்சியால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரணத்தை அளிக்க இந்த அரசு தவறியிருக்கிறது. இதற்கு என்னுடைய கட்சியின் தரப்பிலே, எதிர்த் தரப்பிலே இருந்து இந்த ஆட்சியின் மீது குற்றம் சாட்ட நான் கடமைப்பட்டிருக்கின்றேன்.





மின் பற்றாக்குறை. நாள் இருக்கிறது. இன்றைக்கு அதுகுறித்து நான் விரிவாகப் பேச விரும்பவில்லை. ஒன்று மட்டும் சொல்ல விரும்புகிறேன். 5 லட்சம் தொழிலாளர்களுக்கு லே ஆப் (Lay-off) கொடுத்து வீட்டுக்கு அனுப்பப்பட்டிருக்கிறார்கள். 5 லட்சம் தொழிலாளர்கள் அல்லது 5 லட்சம் குடும்பங்கள் கஷ்டப்படுகின்றன. எப்படி வேண்டுமானாலும் வைத்துக் கொள்ளுங்கள். இந்த நிலைமைகள் தமிழகத்திலே உருவாகியிருக்கின்றன. வானம் பொய்த்து விட்டது, மழை இல்லை, மின்சாரம் இல்லை என்பதெல்லாம் வேறு. அதெல்லாம் என்றைக்கும் இருக்கிறது. தமிழகத்திலே 10 ஆண்டுக்கு ஒரு முறை சாதாரணமாக வறட்சி வருவதுண்டு. ஆனால் இப்போது இரண்டு மூன்று தடவைகள் வந்திருக்கின்றன. ஆக அது தவிர்க்க முடியாதது. ஆனால் அதைத் தவிர்ப்பதற்கு வேண்டிய நடவடிக்கைகளை உரிய காலத்திலே எடுக்கத் தவறியது இந்த அரசின் தவறு என்று இந்த நேரத்திலே சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

காவிரி நீர்ப் பிரச்சினையைப் பொறுத்தவரையில், எனக்கு இப்போது மகிழ்ச்சி. நண்பர் திரு. சுவாமிநாதன் அவர்கள் இல்லாத நேரத்தில் பேசி விடக்கூடாதே என்று இருந்தேன். நல்லவேளையாக அவர்களும் வந்து விட்டார்கள். ஏனென்றால் அவர் இதுபற்றி விவரங்கள் தெரிந்தவர். அதனாலேதான் சொன்னேன். இந்த காவிரி நதி நீர்ப் பிரச்சினையை மத்திய ஆட்சியின் மத்தியஸ்தத்திற்கு நாம் விட்டிருக்கிறோமா? அதை மத்திய அரசு தீர்த்து வைக்க வேண்டும் என்று கேட்டிருக்கிறோமா? அப்படித் தீர்த்து வைக்க வேண்டுமென்று அதிகார பூர்வமாக சொல்லியிருக்கிறோமா? "நீங்கள் தீர்த்து வையுங்கள்" என்று என்னிடம் சொல்வது வேறு. மத்தியில் உள்ள ஆளும் கட்சி உறுப்பினராக இருக்கின்றதால், காங்கிரஸ் கட்சி என்பதால், தீர்த்து வைக்கலாம் என்று சொல்லலாம்.

திரு. ஜி. சுவாமிநாதன்: நான் ஒன்று நினைக்கிறேன். இரண்டு ஆண்டுகளுக்கு முன்னாலே என்று நினைக்கிறேன். அதை வேண்டுமானால் நாளை உறுதிப்படுத்திச் சொல்கிறேன். இதே அரசு, அ.தி.மு.க. அரசு கூட்டங்கள் நடத்திப் பார்த்து, "நாங்கள் மட்டுமே பேசி தீர்மானத்திற்கு வர முடியவில்லை. ஆகவே எங்கள் பேச்சுவார்த்தை தோல்வி அடைந்தது" என்று கருத்து தெரிவித்து அதற்குப் பிறகும் இதை டிரிபியூனலுக்கு விட்டுவிட

வேண்டுமென்று அவர்களுக்குக் கருத்து தெரிவித்த பிறகு, அப்படியும் டிரிபியூனலுக்கு விடாததால்தான், பேச்சு வார்த்தை தொடர்ந்து கொண்டிருக்கிறது.

திரு. க. இராமமூர்த்தி : அப்படியும் டிரிப்யூனலுக்கு விடாததால் என்பது மட்டுமல்ல, அந்த டிரிபியூனலுக்கு கொண்டுபோகவில்லை என்ற கருத்து தெரிவித்து பிறகு தொடர்ந்து பேச்சுவார்த்தை என்று தெரிவித்தார்கள். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அதற்கு அடுத்த கூட்டத்திற்கு வரவில்லை என்று நினைக்கிறேன். டிரிபியூனலுக்குப் போகவில்லை. ஆட்சியாளர்கள் எவ்வளவு வேகம் காட்டுகிறார்கள்? குற்றம் சாட்டுகிறோமே தவிர, அந்த அளவுக்கு வேகத்தோடு செயல்படவில்லை. அதுமட்டுமல்ல. குற்றம் சாட்டுவதற்கு என்றே இந்த மாதிரி நிலைமைகளை உருவாக்குகிறார்கள்.

திரு. ஜி. சுவாமிநாதன் : என்ன சொல்வது என்று எனக்குத் தெரியவில்லை. மாநில அரசு எங்களுடைய பேச்சுவார்த்தை தோல்வி அடைந்து விட்டது என்று சொல்லி தீர்மானமாக முடிவெடுத்து மத்திய அரசுக்கு "நீங்கள் இன்டர்ஸ்டேட் வாட்டர் டிஸ்பியூட் ஆக்ட்-ன்படி டிரிபியூனலுக்கு விட வேண்டுமென்று சொன்ன பிறகுங்கூட, அவர்கள் அதை டிரிபியூனலுக்கு விடவில்லை. அப்புறம் மாநில அரசு என்ன செய்வது? கோர்ட்டுக்குத்தான் போக வேண்டும். ஆகவேதான் அவர்கள் கோர்ட்டுக்குப் போகவேண்டுமென்றார்கள். அதற்குப் பதிலாக "மறுபடியும் பேச்சு வார்த்தை தொடருங்கள்" என்றார்கள். "நீங்கள் கோர்ட்டுக்குப் போக வேண்டும் என்று கட்டாயப்படுத்தாதீர்கள்" என்று மத்திய அரசு சொல்லி, "நாங்கள் எப்படியாவது தீர்த்து வைக்கிறோம்" என்று சொன்னதை நம்பி, மறுபடியும் அவர்கள் பேச்சு வார்த்தை நடத்தினார்கள். அதைவிட வேறு என்ன செய்ய முடியும்? அதைத்தான் நான் பேசுகிறபோது சொன்னேன். "அப்படி அதை அவர்கள் செய்யவில்லை என்று சொன்னால், கோர்ட்டுக்குப் போங்கள்" என்றேன். அதுதான் ஒரே வழி.

திரு. க. இராமமூர்த்தி : எனக்குக் கொஞ்சம் தகவல்கள் தெரியும். அதனாலேதான் சொல்கிறேன். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இந்தத் தரப்பிலே இருந்து சொல்லிக் கொண்டிருந்தால், நன்றாக இருக்கும். டிரிபியூனலுக்குப் போகவில்லை என்பது மட்டுமல்ல, நாம் பேச்சுவார்த்தையைத் தொடர்ந்தோம் என்பது மட்டுமல்ல, 'அவர்கள் சொன்னதாலே மட்டும் தொடர்ந்தோம் என்பது மட்டுமல்ல, அதற்கும்' மேலாகச் சொன்னார்கள். "எங்களுக்கே தட்டுப்பாடு இருக்கிறது. நாங்கள் பேசித் தீர்க்கலாம் என்று





முயற்சி செய்து கொண்டிருக்கிறோம்" என்று சொல்லித்தான் இங்கே அந்த முதலமைச்சர் அவர்களுக்கு விருந்து வைத்துப் பேச்சு வார்த்தையை ஆரம்பித்தோம்.

திரு. ஜி. சுவாமிநாதன் : மாநில அரசு மத்திய அரசிடம் "டிரிபியூனல் போடுங்கள்" என்று சொன்னார்கள். இன்டர்ஸ்டேட் வாட்டர் டிஸ்பியூட் ஆக்ட்டின் கீழ் டிரிபியூனல் வேண்டுமென்றார்கள்.

They have not appointed the tribunal. What can the State Government do? They can only go to Court.

திரு. க. இராமமூர்த்தி : டிரிபியூனல் அமைக்க வேண்டுமென்று சொன்னால், அப்படி எழுதினால், அத்தோடு பேச்சு வார்த்தை முடிந்து விட்டது என்று பொருள். அதற்குப் பிறகும் பேச்சு வார்த்தைக்குப் போகிறோம் என்று சொன்னால், என்ன அர்த்தம்? எனக்குப் புரியவில்லை. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னார்கள். "நான் தஞ்சாவூர் நிலச்சுவான்தார்களுடைய பிரதிநிதியாக டெல்லிக்குப் போனேன். போனது மட்டுமல்ல, பிரதமர் அவர்களைப் பார்த்து தஞ்சை மாவட்டம் காய்ந்து போய் விட்டது, உடனே தலையிட வேண்டும்" என்று கேட்டதாகச் சொன்னார்கள். அந்த அம்மையார் "நீங்கள் உங்கள் முதலமைச்சர் அவர்களிடம் பேசுவது தானே" என்று சொல்லிவிட்டுப் போய்விட்டார்கள் என்று உறுப்பினர் அவர்கள் சொன்னார்கள். இதைப்பற்றி இரண்டு தடவைகள் பேசினார்கள் என்று சொன்னார்கள். அடுத்த பிரதமரைப் பார்த்தும் சொல்லியிருக்கிறார்கள். திரு. மொரார்ஜி தேசாய் அவர்களைப் பார்த்தும் சொன்னார்கள். அவரும் அப்படித்தான் சொன்னார் என்றார். உறுப்பினர் திரு. சுவாமிநாதன் தஞ்சை நிலச்சுவான்தார்களுடைய பிரதிநிதியாகப் போய் பேசி இப்படி நடந்ததைப்பற்றிச் சொன்னார்கள். இந்தத் தகவல்களையெல்லாம் கொடுத்ததைப்பற்றி மகிழ்ச்சியடைகிறேன். "நான் அங்கே போய் சொன்னேன், பிரதமர் அவர்கள் கர்நாடக மாநில ஆட்சியைக் கூப்பிட்டுக் கேட்கவில்லை" என்று சொன்னார்கள். நிலச்சுவான்தார் என்ற முறையிலே அவர்களுடைய உணர்வை என்னாலே மதிக்க முடிகிறது. மத்திய ஆட்சி இதில் எப்படிச் செயல்பட முடியும் என்பதை நினைத்திருந்தால், அதற்கு அப்புறம் மாநில

சுயாட்சி, மாநில உரிமைகள், நமக்கு இருக்கின்ற கடமைகள் என்றெல்லாம் சொல்கிறோம். மத்திய ஆட்சியை எப்படி யார் யார் ஆட வைக்க நினைக்கின்றார்களோ அப்படி ஆடவில்லை என்ற கோபத்தை நம்மாலே பார்க்க முடிகிறது.

(மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் தலைமை)

(பிற்பகல் 10—50)

திரு. ஜி. சுவாமிநாதன் : துணைத் தலைவரவர்களே, என்னுடைய பேச்சிலே சொன்னேன். எங்களுக்கு அரசாங்கத்தைப்பற்றி கவலை கிடையாது. நாங்கள் தஞ்சை மாவட்ட விவசாயிகள். We have got our own riparian rights for thousands of years. அதனால் மாநில அரசு கேட்கிறதா, மத்திய அரசு கேட்கிறதா என்பது பிரச்சினையல்ல. எங்களுக்கு எங்களுடைய உரிமைகள் வழங்கப்பட வேண்டுமென்று சொல்லுவதற்கு தஞ்சை ஜில்லா விவசாயிகளுக்கு உரிமையிருக்கிறது. நீங்கள் உங்கள் மாநில அரசு மூலமாகத்தான் போக வேண்டுமென்று சொல்ல வேண்டிய அவசியம் அவர்களுக்கு இல்லை. அதையும் என்னுடைய பேச்சிலே சொன்னேன். நாளை இந்த மாநில அரசு செய்யவில்லை என்றால், தஞ்சாவூர் டிஸ்ட்ரிக்ட் கோர்ட்டிலே மாநில அரசு கொடுக்கவில்லை என்றோ, கர்நாடக அரசு கொடுக்கவில்லை என்றோ அல்லது மத்திய அரசு கொடுக்கவில்லை என்றோ கேஸ் போட உரிமையுள்ள நாங்கள் பிரதமரிடம் சொன்னோம். விவசாயிகள் என்ற உரிமையில் சொன்னோம். "நீங்கள் உங்கள் மாநில முதலமைச்சரிடம் போய் சொல்லுங்கள்" என்ற வார்த்தைகளை பிரதமரவர்களிடத்திலிருந்து எதிர் பார்க்கவில்லை. அதை எதிர்பார்க்க வேண்டுமென்ற நிலைமையும் எங்களுக்கு உருவாகவில்லை. ஏனென்றால் நாங்கள் Affected Party என்றால், போய் சொல்லமாட்டோமா? இதை நான் வளர்க்க விரும்பவில்லை. ஒரு (affected partv) கர்நாடகாவிற்குப் போய், அந்த மாநில முதல்வரிடம் தண்ணீர் கொடுக்க வேண்டுமென்று கேட்டார். அதில் தவறில்லை. தமிழ் நாட்டிலே தண்ணீர் இல்லை என்றால், போய்ப் பேசுவதில் தவறு என்ன இருக்கிறது? தவறில்லை. யாரிடத்திலும் பேசலாம்.

திரு. க. இராமமூர்த்தி: துணைத் தலைவரவர்களே, தஞ்சை நிலச்சுவான்தார் என்ற முறையில், அவர் அந்த உணர்வை நன்றாக வெளிப்படுத்தியிருக்கிறார். யாரிடத்திலும் போய் சொல்லலாம். சொன்ன உடனே ஒரு ஆட்சி தானாக இயங்க வேண்டுமென்று எதிர்பார்க்கும், தஞ்சை நிலச்சுவான்தாருடைய பாணி கொஞ்சம் வேடிக்கையானதுதான்.



திரு. எஸ். ஆர். இராதா : துணைத் தலைவரவர்களே, தஞ்சாவூர் பாணி என்று பொதுவாகப் பேசக்கூடாது. அப்புறம் எல்லோரும் தஞ்சாவூர் மூப்பனார் பாணி என்று சொல்லுகிறார்கள் என்று வந்துவிடக்கூடாது. ஏனென்றால் எல்லோரும் தஞ்சாவூர்.

டாக்டர் இரா. சனார்த்தனம் : துணைத் தலைவரவர்களே, ஒரேயொரு சந்தேகம். காவிரிப் பிரச்சினையில் அவர்களும் டிரிப்யூனல் அமைக்க மாட்டார்கள், நாமும் பேசக் கூடாது என்று சொன்னால், மாண்புமிகு உறுப்பினரவர்கள் என்ன செய்ய வேண்டுமென்று விரும்புகிறார் ?

திரு. க. இராமமூர்த்தி : முதலமைச்சர் வருவார். கேளுங்கள். சொல்லுவார். அதற்கு அடுத்ததாக இன்னும் ஒன்றைச் சொல்ல விரும்புகிறேன். தண்ணீர் வறட்சி ஏற்பட்ட போதெல்லாம், காவிரி வற்றிய போதெல்லாம் தண்ணீர் கேட்டோம். ஒவ்வொரு தடவையும் தண்ணீர் இல்லை, இல்லை என்று சொல்லிக்கொண்டே, கர்நாடக முதலமைச்சர் திரு. குண்டுராவ் அவர்கள் ஒவ்வொரு தடவையும் 5 டி.எம்.சி. தண்ணீர் கொடுத்தார். இப்படி 15 டி.எம்.சி. வறட்சி என்று நாம் கேட்டு, அவர்கள் கொடுத்தார்கள். அதற்குப் பிறகு நீங்களும் போனீர்கள், முன்னேற்றக் கழகத் தலைவரும் போனார்கள். தண்ணீர் கேட்டார்கள். கொடுக்க முடியாது என்று இப்பொழுது இருப்பவர் சொல்லிவிட்டார். கொடுத்தார்களே, அதைப்பற்றி ஒரு வார்த்தை நன்றி சொல்லும் உணர்வு வரவில்லையே! அதுவும் நம்முடைய நிலச்சுவான்தார் பாணியினுடைய தனித் தன்மையாக இருக்கலாம்.

திரு. ஜி. சுவாமிநாதன் : துணைத் தலைவரவர்களே, நன்றி சொல்ல வேண்டிய அவசியம் நமக்கில்லை. நமக்குப் பாரம்பரியமாக நீர்ப்பாசன உரிமை இருக்கிறது. அவன் தடை பண்ணி வைத்திருக்கிறான். தடை பண்ணியதற்கு அவன் மன்னிப்பு கேட்க வேண்டும். கொடுத்ததற்கு ஏன் நாம் நன்றி சொல்ல வேண்டும்?

திரு. க. இராமமூர்த்தி: அவனைக் கேட்கிறதில் உள்ள வேகம் இவனைக் கேட்கிறதிலே வரவில்லையே! அதிலே இருக்கிற வேகம்.... அவனைக் கேட்கிறதிலே இருக்கிற வேகம் இவனைக் கேட்பதிலே வரவில்லையே! அது என்ன மிராசுதார் பாணி என்று எனக்குப் புரியவில்லை.

திரு. ஜி. சுவாமிநாதன்: 'அவன்' என்பது 'பார்ட்டி'க்காகச் சொல்கிறேன். முதலமைச்சரைச் சொல்கிறேன் என்று தவறாக எடுத்துக்கொள்ள வேண்டாம். 'அவர்' என்பது முதலமைச்சருக்காகச் சொன்னேனே தவிர, சாதாரணமாகச் சொல்லும்போது, 'as an individual' 'ஒரு' Party என்ற முறையில் சொல்கிறேன்.

திரு. க. இராமமூர்த்தி: எப்படிச் சொன்னாலும் மிராசுதார் பாணி' என்பதில் மாற்றமில்லை. எதுவாக இருந்தாலும், இன்றைக்கு எதையும் சொல்ல முடியாத நிலையிலே இந்த ஆட்சி தன்னை பலகீனமான சிறையிலே அடைத்துக் கொண்டிருக்கிறது. காவிரித் தண்ணீரைப் பொறுத்தவரையில், பலகீனச் சிறையில் இருக்கிறது.

திரு. செ. முத்துசாமி: மிராசுதார் பாணி என்றால் என்ன என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்: மிராசுதார் பாணியா அல்லது 'பானியா'? (சிரிப்பு).

திரு. க. இராமமூர்த்தி: அது வேண்டாம். யார் யாருக்கு எப்படிப் பொருந்துகிறதோ அப்படி அப்படி அதை அர்த்தம் செய்து கொள்ளலாம். அதில் ஆட்சேபணையில்லை. என்னைப் பொறுத்தவரையில் இரண்டுக்கும் பொருள் கொள்ளத் தயார்.

காவிரிப் பிரச்சினையில் தடுமாறுவதைப் போலவே மின்சாரப் பிரச்சினையிலும் நாம் தடுமாறிக் கொண்டிருக்கிறோம். மாண்புமிகு மின் துறை அமைச்சரவர்கள் இங்கு இல்லை. அவர் இருந்தால் நன்றாக இருக்கும். அவர் திரும்பத் திரும்ப (Atomic Power Projects) அடாமிக் பவர் பிராஜக்ட்ஸ் பற்றிச் சொல்லியிருக்கிறார். உலகம் முழுவதும் இப்போது அடாமிக் பவர் பிராஜக்டை டிஸ்கரேஜ் (discourage) பண்ணுகிறார்கள். இப்போது புதிதாக அதை அமைப்பதில்லை. காரணம், அதனால், ஏற்படுகிற சாம்பல், மற்ற கழிவுகளையெல்லாம் எப்படி வெளியேற்றுவது என்ற மிகப் பெரிய சிக்கல் வந்திருக்கிறது. அப்படியே விட்டால், அது காற்றிலே பாவுமானால், மனிதர்களுடைய நலனுக்கு எதிராக அமையுமென்பதால் அவை அமைக்கப்படுவதில்லை. அடாமிக் பவர் பற்றி காலம் கடந்து நாம் யோசிக்கிறோம். ஒவ்வொரு முறையும் திட்டங்களைக் காலம் கடந்து சொல்வதில் நாம்





தனித் திறமை பெற்றவர்கள். அடாமிக் பவர் புராஜக்ட்ஸ் பற்றி இப்போது பேசாமல், நடைபெற வேண்டிய புதிய திட்டங்களில் விரைவாக ஈடுபடுவது நல்லது என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

உணவுப் பற்றாக்குறையைப் பொறுத்தவரையில், அதிகமாக இல்லை. நம்முடைய சட்ட அமைச்சர் அவர்கள் கொஞ்சம் நிதானத்திற்குப் பெயர் போனவர். அவர்கூட அவசரமாகச் சொன்னார். "ஆந்திராவில் திரு. ராமாராவ் வந்துவிட்டார், அரிசி வந்து கொட்டப் போகிறது, உடனே வரப் போகிறது" என்று சொன்னார். அது பத்திரிகையில்தான் வந்தது. இப்போது காணோம் என்பதோடு, ஏற்கனவே இருந்த நிலைமைதான் இப்போது தொடர்கிறது என்று சொல்கிறார்கள். பொறுப்பிலே இருக்கிறவர்கள் நீங்கள். நான் பேசலாம், மற்றவர்கள் பேசலாம், ஆனால் பொறுப்பிலே உள்ள அமைச்சர்கள், ஏதோ ஒரு அரசியல் கட்சிப் பிரச்சினையாக நினைத்துக் கொண்டு, நாளை வரப்போகும் தேர்தலுக்காக இன்றைக்கு உணர்ச்சிகளைத் தூண்டி விடுவது என்பது ஒரு ஆட்சிக்கு நல்லதல்ல. அதை கவர்னர் அவர்கள் மூலமாகச் சொல்ல வைத்திருக்கிறார்கள். என்ன செய்வது பாவம், ஜனநாயகத்தில் இந்தக் கொடுமையைத் தவிர்க்க முடியவில்லை.

உதகையில் அமையும் இந்துஸ்தான் போட்டோ பிலிம் தொழிற்சாலை பற்றி வேகம் வேகமாகப் பேசினார்கள். எப்படி நடக்கும், வடக்கு, தெற்கு என்றெல்லாம் பேசினார்கள். கடைசியில் தொழிலமைச்சரவர்கள், இதில் முடிவெடுக்கவில்லையென்று பிரதமரவர்கள் சொன்னார்கள் என்று சொன்னார்கள்.

இதுபற்றி பத்திரிக்கையில் வந்துள்ளதையும் படிக்கிறேன்.

When asked the location of the proposed Colour Film Project, Mr. Rao said: The Centre has yet to take a decision on the project itself. A team of top officials from Agfa Project, Belgium have visited the Factory and expressed complete satisfaction with the facilities available in the Company.

என்று சொல்லியிருக்கிறார்கள். சில திட்டங்களை வலியுறுத்தி வாங்கும் மனத் திண்மை வேண்டும். காமராஜ் அவர்கள் அதைத்தான் செய்தார்கள். சக்கரவர்த்தி ராஜகோபாலாச்சாரியார் தமிழக முதல்வராக இருந்து அதைத் தான் செய்தார்கள். பல்வேறு மாநிலங்களில் இருந்த காங்கிரஸ் முதலமைச்சர்கள் அதைத்தான் செய்தார்கள். மத்திய அரசு இப்படித்தான். உங்களுக்குப் புதிய அனுபவமாக இருக்கலாம். இரண்டு தடவை ஆட்சிக்கு வந்தாகிவிட்டது. மைய ஆட்சி என்ன என்பது பழகிப்போய் இருக்க வேண்டும்,

ஒரு ஆட்சி மத்தியிலே இருக்கும்போது, நமது தேவைகளை, உரிமைகளை வலியுறுத்தி, வல்லமையாகச் சொல்லும் தெளிவு நமக்கு வேண்டும். எல்லாவற்றையும் மேடைப் பிரச்சாரமாக வைத்துக் கொள்ளக்கூடாது.

மாண்புமிகு திரு. சு. திருநாவுக்கரசு : துணைத் தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. இராமமூர்த்தி அவர்கள் மைய அமைச்சர்களோடும், மற்ற மைய காங்கிரஸ் தலைவர்களோடும் நெருக்கமாக தொடர்பு உடையவர்கள். எனவேதான் அவர் பேசும்போது குறுக்கிட்டுச் சொல்வது பொருத்தமாக இருக்குமென்று நினைக்கிறேன். நமக்குப் பல்வேறு தகவல்கள் வருகின்றன. பத்திரிக்கையில் இப்படிச் செய்தி வந்திருக்கிறது. காங்கிரஸ் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் கேள்வி கேட்கும்போது, பிரதமர் அவர்கள் குறுக்கிட்டு "இன்னும் முடிவு செய்யப்படவில்லை" என்று சொல்லியிருக்கிறார்கள். இடையில் சம்பந்தப்பட்ட போர்டு மீட்டிங் நடக்கும்போது, அதிகாரிகளிடம் சொல்லப்பட்டு, அவர்கள் உத்திரப்பிரதேசத்திற்குப்போய், அங்கே இடத்தைப் பார்த்துவிட்டு வந்திருக்கிறார்கள். இடம் இன்னும் முடிவு செய்யப்படவில்லை என்று சொல்லிக்கொண்டே, அதற்கான பணிகள் நடக்க, உத்திரப்பிரதேசத்தில் அந்தத் தொழிற்சாலைகள் போகும் வாய்ப்புகள் ஏற்படும் வகையில், அதிகாரபூர்வமற்ற முறையிலே அங்கே, பரிசிலனைகள் நடக்கிறதோ என்று எண்ணுமளவிற்கு சந்தேகச் சூழ்நிலை ஏற்பட்டிருக்கிறது. எனவேதான் அங்கே போய்விடுமோ, போய்விடுமோ என்று, பேசுகிறார்கள். மாண்புமிகு உறுப்பினரவர்கள் பேசும்போது, அது முடிவாகவில்லை என்று ஒப்புக் கொள்கிற காரணத்தாலே, அது நிச்சயமாகத் தமிழ் நாட்டுக்குத்தான் வருமென்ற உத்திரவாதத்தைக் காங்கிரஸ் கட்சியின் சார்பிலே இங்கே தந்தால், அது மகிழ்ச்சி அளிப்பதாக இருக்கும்.

திரு. க. இராமமூர்த்தி : தமிழகத்திற்காக வலியுறுத்தும் உத்தரவாதத்தை என்னால் நிச்சயமாகத் தர முடியும்.

மாண்புமிகு திரு. சு. திருநாவுக்கரசு : வலியுறுத்துகிற உத்தரவாதமல்ல. அனைத்துக் கட்சிகளும் வலியுறுத்துகிறோம். 'வருகிறது' என்ற உத்தரவாதத்தை அவரிடம் கேட்கிறேன். மத்திய அமைச்சர்களுடனும், மற்றவர்களுடனும் அவருக்குத் தொடர்பு இருப்பதால்,

(முற்பகல் 11-00)

திரு. க. இராமமூர்த்தி: எனக்கு இருக்கிற தொடர்பை வைத்து நானே ஆட்சி நடத்த முடியுமா? எனக்கு இருக்கிற தொடர்பை வைத்து நான் அமைச்சர் ஆகிவிட முடியாது. ஆகவே அதைச் செய்ய வேண்டிய பணிக்கு





வலியுறுத்துகின்ற பொறுப்பினை நிச்சயமாக உங்களோடு சேர்ந்து, தமிழகத்திலேயிருக்கின்ற இதிலே அக்கறையுள்ள மற்ற அரசியல் கட்சிகளோடு சேர்ந்து நானும் எடுத்துக்கொள்வேன் என்பதைச் சொல்லிக்கொள்கிறேன். ஆனால் அதேநேரத்தில் ஒன்றை நாம் புரிந்துகொள்ள வேண்டும். எந்தத் தொழிற்சாலை அமைத்தாலும், தமிழகத்திலே என்ன நடக்கிறது? அமைச்சர்களுடைய தொகுதிகளில் வேலை கொஞ்சம் அதிகமாக நடக்கிறதா இல்லையா? புதிய தொழிற்சாலைகள் அங்கே போகின்றனவா இல்லையா? அதேபோல் இந்தியா என்று வரும்போது, மத்திய அமைச்சர்களுடைய தொகுதிகளுக்கும் தொழிற்சாலைகள் போகலாம். ஆனால் நாம் நமக்குக் கிடைக்க வேண்டியதை அங்கிருந்து கேட்டுப் பெற வேண்டியது நம்முடைய கடமை பொறுப்பு என்பதையும் மறந்து விடக்கூடாது.

மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன்: அமைச்சர்களுடைய இடத்திற்குத் தொழிற்சாலைகள் போய்விடுகின்றன என்று பேச்சோடு பேச்சாக உறுப்பினர் இங்கே குறிப்பிட்டார். ஆனால் எந்தெந்த அமைச்சர்கள் அப்படிச் செய்து கொண்டார்கள் என்று சொன்னால், முதலமைச்சர் என்கிற முறையில் நான் நடவடிக்கை எடுப்பேன். (சிரிப்பு)

திரு. க. இராமமூர்த்தி: மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அடிக்கடி புதுக்கோட்டை மாவட்டத்திற்குச் சென்று வருபவர்கள். புதுக்கோட்டையிலே எப்படி வளர்ச்சி வந்திருக்கிறது என்பது தெரியும். நான் குறைவாகச் சொல்லவில்லை. புதுக்கோட்டை பல காலம் புறக்கணிக்கப்பட்டது, வளர்ச்சியில்லாமல் இருந்தது. ஆனால் அதைப்பற்றி எடுத்துச்சொல்ல வேண்டிய இரண்டு பேர் சட்டமன்ற உறுப்பினர்களாக மட்டுமல்லாமல், அமைச்சர்களாக இருக்கிற காரணத்தாலே, அந்தப் பகுதி வளர முடிகிறதா இல்லையா என்பதைப் பார்க்க வேண்டும். இது ஜனநாயகத்தில் தவிர்க்க முடியாதது. (சிரிப்பு)

மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன்: உறுப்பினர் சொன்ன சொல்லுக்கும் விளக்கத்திற்கும் சம்பந்தமிருப்பதாகத் தெரியவில்லை. ஆனால் மீண்டும் சொல்கிறேன். இப்போதும் உறுப்பினர் சொல்கிற பேச்சை எந்தக் கருத்தில் சொன்னார் என்று நான் கருதுகிறேன் என்றால், இங்கே அமைச்சர்கள் இருக்கிற இடத்திற்கு அதிகமாகத் தொழிற்சாலைகள் போகிறதா என்று கேட்டால், ஏதோ அவர்கள் செல்வாக்கைப் பயன்படுத்திக் கொண்டு தங்களுடைய மாவட்டத்திற்கோ, தொகுதிக்கோ அதிகமாக வசதிகளைச் செய்து கொண்டு விட்டார்கள், செய்து விட்டார்கள் என்று மனதில் தொனிக்கிறது. அப்படி இல்லையென்று சொல்லுவார்களானால், நான் மகிழ்ச்சியடைவேன்.

திரு. க. இராமமூர்த்தி : வசதிகள் என்றால், புதிய தொழிற்சாலைகளைத் துவக்குவதும் வசதிகள் தான். வேலைவாய்ப்புகளை அதிகப்படுத்துவதும் வசதிகள்தான். அந்தந்தப் பகுதிகளில் வேலைகள் நடைபெறுகிறபோது, இது அமைச்சருடைய பகுதி அல்லது தொகுதி என்று சொல்வது தவறில்லை. புதுக்கோட்டை என்ன? புதுக்கோட்டையில் அந்த நிலைமை ஏற்படவில்லையா? இன்றைக்கு கொஞ்ச நேரத்திற்கு முன்பு மாண்புமிகு தொழிலமைச்சர் ஒன்றைச் சொன்னார். ஒரு நூற்பாலை துவக்குவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது என்று சொன்னார். எடுக்கப்பட்டிருப்பது ஒரு அரசாங்கத்தின் முறையான நடவடிக்கைகளாக இருக்கலாம். அதிலே வேகம் எப்படி வருகிறது? வேகம் எப்படி வேகமாக வருகிறது? எப்படி வேலைகள் நடைபெறுகின்றன அல்லது நிறைவேறுகின்றன என்பதைப் பார்க்கும்போது, நிச்சயமாக ஒரு சட்டமன்ற உறுப்பினர் ஆளும் கட்சியைச் சார்ந்தவராக இருந்தால், அல்லது அமைச்சராக இருந்தால், இன்னும் வேகமாக நடைபெறுவதைப் பார்க்கலாம். புதுக்கோட்டையில் அது நடக்கிறது.

மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன் : மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவரவர்களே, நான் குறிப்பிடுவதற்காக மன்றத் துணைத் தலைவரவர்களும், உறுப்பினர்களும் தவறாகக் கருத மாட்டார்கள் என்று நினைக்கிறேன். நான் ஒரு சொல்லைக் கேட்டுவிட்டுத்தான் இங்கே வந்தேன். திண்மை இருக்குமானால் கேட்டு வாங்க வேண்டும், மத்திய அரசிடமிருந்து என்று இங்கே பேசினார்கள். நான் வருவதற்குக் கொஞ்சம் முன்னாலே இவ்வாறு பேசினார்கள். காமராஜர் அவர்கள் இருக்கும்போது கேட்டு வாங்கவில்லையா என்று சொன்னார்கள். நான் காமராஜர் அவர்களைக் குறைத்து மதிப்பிடவில்லை, குறை கூறவும் இல்லை. அண்ணா அவர்கள் சட்டமன்றத்தில் அன்று சொன்னதை இங்கே நான் நினைவுபடுத்துகிறேன். "நீங்கள் மாற்றுக் கட்சிக்காரர்கள் என்று கருதாதீர்கள். எங்களையும் நீங்கள் பயன்படுத்திக் கொள்ளுங்கள். நாங்கள் அங்கே வற்புறுத்துகிறோம். எங்களுக்குத் தொல்லை ஏற்படுத்தப்படுகிறது. ஆகவே தமிழகத்திற்கு இன்னின்ன வசதிகளைச் செய்து தர வேண்டுமென்று சொல்லி, அதைக் கேட்டு வாங்குவதற்கு என்னைப் பயன்படுத்திக் கொள்ளுங்கள், எங்களைப் பயன்படுத்திக் கொள்ளுங்கள்" என்று அண்ணா அவர்கள் அன்றைக்குச் சொன்னார்கள். அப்போதும் ஏதோ குறை இருந்திருக்க வேண்டும். வாங்காமல் இருந்திருக்க வேண்டும். வராமல் இருந்திருக்க வேண்டும். ஆகவே அண்ணா அவர்கள் அப்படிப் பேசியிருக்க வேண்டும். அப்போது மரியாதைக்குரிய அமரர் காமராஜர் அவர்கள் எந்தவித குறுக்கீடும் இல்லாமல்தான் இருந்தார்கள்.





அதை மற்றவர்களும் ஒத்துக்கொண்டார்கள். ஆகவே அண்ணா அவர்களுக்குப் பிறகு, அந்தத் "திண்மை" ஓரளவுக்கு எங்களுக்கும் இருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. க. இராமமூர்த்தி : "திண்மை" என்கின்ற வார்த்தையை நான் தவறான அர்த்தத்தில் சொல்லவில்லை. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தவறு என்று கருதுவார்களானால், அதற்கு வருத்தம் தெரிவிக்கத் தயார். ஆனால் நேற்று என்ன நடந்தது என்பது மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்குத் தெரியாது. "யோக்கியதை" என்ற வார்த்தையே இங்கு பேசப்பட்டது. யோக்கியதை இருக்குமானால் என்று உங்கள் தரப்பிலிருந்து எங்களைப் பார்த்துச் சொல்லப்பட்டது. என்னைப் பார்த்து, காங்கிரஸ் கட்சியைப் பார்த்துச் சொல்லப்பட்டது. நான் அந்த வார்த்தைக்கு வார்த்தை பயன்படுத்த வேண்டுமென்பதற்காகச் சொல்லவில்லை. மனத் திண்மை என்பது ஒரு தைரியத்தோடு, வலிமையோடு சொல்ல வேண்டுமென்பதற்காகச் சொன்னேன். மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு அது இல்லை என்பதற்காகச் சொல்லவில்லை. அப்படி செயல்பட வேண்டுமென்பதற்காக வார்த்தைகளாக அவை வந்தன. ஒருவேளை அது மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய உணர்வுகளைப் பாதிக்குமானால், நான் நிச்சயமாக வருத்தத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன். இதிலே எனக்கொன்றும் ஆட்சேபணை இல்லை. ஆனால் இன்னொன்றையும் சொல்கிறேன். அண்ணா அவர்கள் "என்னைப் பயன்படுத்திக் கொள்ளுங்கள்" என்று சொன்னார்கள். அதோடு மட்டுமல்லாமல் பயன்படுத்திக் கொள்ளவும் செய்தார்கள். அவர்கள் முதலமைச்சராக இருந்தபோதும் பயன்படுத்திக்கொள்ளச் செய்தார்கள். எதிர்க்கட்சித் தலைவராக இருந்தபோதும் பயன்படுத்திக்கொள்ளச் செய்தார்கள். ஏனென்றால் நாட்டின் நலனைப் பொறுத்தவரையிலும், அவர் கட்சியைப் பற்றிப் பார்க்கவில்லை. ஆட்களைப் பற்றிப் பார்க்கவில்லை. நீங்களும் அப்படிப் பயன்படுத்திக் கொள்ள வேண்டுமென்று விரும்புகிறேன்.

(மாண்புமிகு மேலவைத் தலைவர் தலைமை)

மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன் : மாண்புமிகு மேலவைத் தலைவரவர்களே, அதைத்தான் தொழிலமைச்சர் மாண்புமிகு திரு. திருநாவுக்கரசு அவர்கள் இங்கே குறிப்பிட்டார்கள். நீங்களும் அந்த உத்தரவாதத்தைத் தாருங்கள் என்று அவர்கள் கேட்டதற்குக் காரணமே நீங்களும் எங்களோடு சேர்ந்து துணிச்சலோடு உதவுங்கள் என்று தான் பொருளே தவிர வேறு ஒன்றுமில்லை என்பதைக் கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

திரு. க. இராமமூர்த்தி : மாண்புமிகு தலைவரவர்களே, நல்ல கருத்தை இங்கே மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தெரிவித்திருக்கிறார்கள். எங்கள் கட்சியைப் பொறுத்தவரையில், எங்களுக்குத் துணிச்சல் தேவையில்லை. அதில் தேவையானதை நாங்களே போய் சொல்கிற நிலைமையில் தான் இருந்துகொண்டிருக்கிறோம். நிச்சயமாக அதிலே எந்தவிதமான தடையும் இல்லை. இது ஒரு கட்சிக்கு அப்பாற்பட்ட பிரச்சினை. இதை ஒரு கட்சிப் பிரச்சினையாக மாற்றுகிற முயற்சி நடந்து கொண்டிருக்கிறது. இது நல்லதல்ல.

மாண்புமிகு மேலவைத் தலைவர் : 50 நிமிடமாகப் பேசிக் கொண்டிருக்கிறார்கள். சீக்கிரம் முடிக்க வேண்டும்.

திரு. க. இராமமூர்த்தி : அதோடு நேற்றைய தினம் ராயபுரத்திலிருந்து சென்னைத் துறைமுகத்திற்கு 50 லட்சம் ரூபாய் செலவில் மின்சார கூட்ஸ் (Goods Rail) ரெயில் நேற்றிலிருந்து ஓடத் துவங்கியிருக்கிறது என்கிற செய்தி வந்தது. மத்திய அரசு எப்படிச் செயல்படுகிறது என்பதைச் சொல்கிறேன். இன்னமும் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். பல முதலீடுகள் செய்யவில்லை என்று சொல்கிறார்கள். எனக்குக் கிடைத்த தகவலை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அவையில் இருப்பதால் சொல்கிறேன். அவருக்கும் இது தெரியும் என்று நினைக்கிறேன். ஸ்ரீஹரிகோட்டாவில் ராக்கெட் ஏவு தளம் அமைந்திருக்கிறது. தமிழகத்தில் தான் முதலில் இடம் கேட்டார்கள். அதற்கு அப்புறம் தான் ஆந்திரத்திற்குப் போனது என்பது எனக்குக் கிடைத்த தகவல். அதுபோல் தும்பா ராக்கெட் தளம் இன்றைக்கு திருவனந்தபுரத்தில் அமைந்திருப்பதற்குக் கூட தமிழகத்தில்தான் முதலில் அமைக்க இடம் கேட்டார்கள். அதற்குப் பிறகுதான் தும்பா ப்ராஜெக்ட் கேரளாவிற்குப் போயிற்று என்பது எனக்குக் கிடைத்த தகவல். அதுபோல் Dry Dock பிரச்சினையைப் பொறுத்தவரையிலும், மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஏற்கெனவே . . .

திரு. ஜி. சுவாமிநாதன் : தும்பா ப்ராஜெக்ட் பற்றி எத்தனை வருஷத்திற்கு முன்னால் கேட்டார்கள்? அப்போது யார் ஆட்சியில் இருந்தது? அப்புறம் கேட்டு ஏன் போயிற்று?

திரு. க. இராமமூர்த்தி : கேட்டு ஏன் போயிற்று என்பதைத்தான் நான் சொல்ல வந்தேன்.



திரு. ஜி. சுவாமிநாதன் : தும்பா ப்ராஜெக்ட் பற்றிக் கேட்டபோது யார் ஆட்சியில் இருந்தது ?

திரு. க. இராமமூர்த்தி : யார் ஆட்சியில் இருந்தார்கள் என்பது அடுத்த கேள்வி. மத்திய அரசு இந்த மாநிலத்தைப் புறக்கணிக்கவில்லை. அவர்கள் வாய்ப்பு கிடைக்கும் போதெல்லாம் இங்கே முதலீடு செய்வதற்கு எப்படி முன்வந்திருக்கிறார்கள் என்பதைத்தான் நான் தகவலுக்காகச் சொன்னேன். ஏன் போயிற்று என்பதை நீங்கள் சொல்லுங்கள்.

திரு. ஜி. சுவாமிநாதன் : தும்பா ப்ராஜெக்ட் பற்றிக் கேட்டபோது யார் இங்கே ஆட்சியில் இருந்தார்கள் ? அப்போது உங்களுடைய கட்சிதானே ஆட்சியில் இருந்தது. அப்போது அவர்கள் திண்மையாகக் கேட்கவில்லையா, மன உறுதி இல்லையா என்பதை நான் அறிய விரும்புகிறேன்.

திரு. க. இராமமூர்த்தி : நீங்கள் உங்கள் பதிலை முதலில் சொல்லுங்கள். அதற்குப் பிறகு நான் என்னுடைய பதிலைச் சொல்லுகிறேன். நான் சொல்லுவது மத்திய அரசு இங்கே முதலீடு செய்வதற்குத் தயங்கவில்லை. வாய்ப்புக் கிடைக்கும் போதெல்லாம் இங்கே முதலீடு செய்ய முன் வந்தது என்பதுதான்.

மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன் : மாண்புமிகு தலைவரவர்களே, என்னுடைய பதிலிலே இதுபற்றி விளக்கமாகச் சொல்கிறேன். ஆனால் இப்போது நேரிடையாகவே சொல்கிறேன். அங்கிருந்து யோசனை வரும். பிறகு வேறு ஒரு செல்வாக்கு இங்கே குறுக்கிடும். உடனே இடம் மாற்றப்படும். அதுதான் தொடர் கதையாக இருக்கிறது.

திரு. க. இராமமூர்த்தி அந்த இடத்தில்தான் நமக்கு வழிகாட்டிவிட்டுப் போனார் அண்ணா அவர்கள். அந்த மாதிரி குறுக்கீடுகள் வருகின்ற போது தான் “என்னைப் பயன்படுத்திக் கொள்ளுங்கள்” என்று அண்ணா அவர்கள் சொன்னார்கள். குறுக்கீடுகள் வருகின்றபோது, அந்தக் குறுக்கீடுகளைத் தாண்டிச் செயல்படுவதற்கு ஆளும் கட்சி, எதிர்க்கட்சி என்கிற பாகுபாடு இல்லாமல் தமிழகத்தின் மொத்த நலன் கருதி, தமிழகத்தினுடைய மொத்தத் தேவை என்ன என்கின்ற அளவிலே எல்லோரையும் அணைத்துப் போகின்ற ஒரு துணிச்சல் இருந்தது.

**மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன் :** அந்தத் துணிச்சல் இருந்த தால்தான், கொஞ்சம் கசப்பாக இருந்தாலும், அவர்களுக்கு ஞாபகப்படுத்துகிறேன். ஆட்சியிலே இருந்த ஒரு கட்சியே போராட்டம் நடத்த வேண்டிய ஒரு நிர்ப்பந்தம் இந்த நாட்டிலே ஏற்பட்டது.

**திரு. க. இராமமூர்த்தி :** எனக்கு என்ன என்பது புரியவில்லை. புரிகிற மாதிரி சொன்னால் பரவாயில்லை.

**மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன் :** சேலம் இரும்பாலைப் பிரச்சினை வந்தபோது, அதற்காக அண்ணா அவர்கள் தலைமையிலிருந்த ஆட்சி இருக்கும்போது, போராட்டம் நடத்தி இந்திய அரசுக்குத் தெரிவிக்க வேண்டிய கட்டாயம் ஏற்பட்டது.

**திரு. க. இராமமூர்த்தி :** அண்ணா அவர்கள் இல்லாத காலத்திலே அந்த இரும்பாலை எப்படி ஆயிற்று என்பதை நாம் பார்க்கிறோம். அது தான் இப்போது வந்திருக்கிற நிலைமை. அண்ணா அவர்கள் இல்லாத நிலையில்.

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** அப்போது இரும்பாலைக்காக பிரதமரிடம் சென்ற தூதுக் குழுவிற்கு நான் தலைவனாக இருந்தேன்.

**திரு. சோ. ஆறுமுகம் :** திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சியிலே இருந்த போது, அண்ணா அவர்களே அறிவித்து எழுச்சி நாளைக் கொண்டாடினார்கள். இரும்பாலை வேண்டுமென்று அண்ணா அவர்களுடைய மறைவுக்குப் பிறகு வலியுறுத்தப்பட்டு வந்தது. ஆனால் அதே இரும்பாலை வந்து இப்போது உருட்டாலையாக மாறிவிட்டிருக்கிறது. இதே நேரத்தில் அனுமதித்த விசாகப்பட்டிண இரும்பாலை இன்றைக்கு விசாகப்பட்டிணத்தில் முழுமையான உருக்காலையாக உருவாகியிருக்கிறது. ஆகவே இதை எதிர்த்து தமிழகத்திலே நாம் அனைவரும் சேர்ந்து சேலம் இரும்பாலையை முழுமையாக உருவாக்கப் போராடுவதற்கு காங்கிரஸ் கட்சியிலே இருப்பவர்களும் தயாரா என்பதை நானும் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

**திரு. க. இராமமூர்த்தி :** உறுப்பினர் கேட்டு பிரயோஜனம் இல்லை. இது ஆளும் கட்சியிலே கேட்டு நாம் எல்லோரும் சேர்ந்து முடிவு எடுக்க வேண்டிய ஒன்று.

(முற்பகல் 11—10)

**மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன் :** ஆளும் கட்சியும் சேர்ந்து கேட்கிறது.



**திரு. க. இராமமூர்த்தி :** இந்த அரசோடு நாங்களும் துணை நிற்கிறோம் என்று உறுதியாகத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** சீக்கிரம் முடித்துக் கொள்ள வேண்டும்.

**திரு. க. இராமமூர்த்தி :** சீக்கிரம் முடித்துக் கொள்கிறேன்.

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** இன்னும் எவ்வளவு நேரம் வேண்டும் என்று இறுதியாகச் சொல்லுங்கள்.

**திரு. க. இராமமூர்த்தி :** பத்து நிமிடங்கள் போதும் கடைசியாக....

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** கடைசியாக, கடைசியாக என்று ஐந்து தடவைகள் சொல்லியாகிவிட்டது.

**திரு. க. இராமமூர்த்தி :** நேற்றையதினம் ஒரு தகவல் கிடைத்தது. மாண்புமிகு அமைச்சர் திரு. இராசா முகமது அவர்கள் தெளிவாக ஒரு கருத்தைச் சொன்னார்கள். ஐ.ஏ.எஸ். அதிகாரிகள் பதவி விலகுவதைப் பற்றி, இராஜிநாமா செய்வதைப்பற்றிச் சொல்லும்போது, "ஐ.ஏ.எஸ் அதிகாரிகள் தனித்து இயங்கிவிட முடியாது. ஆட்சியினுடைய கொள்கைகளை நிறைவேற்றும் வகையில்தான் அவர்கள் அரசாங்கத்தின் அதிகாரிகளாகப் பணியாற்ற முடியும். அந்த வரம்புக்கு மீறுவார்களேயானால், அவர்களை, அந்த ஐ.ஏ.எஸ். அதிகாரிகளை, எந்த ஆட்சியும் வைத்துக்கொள்ள முடியாது. அப்படிப்பட்டவர்களை வெளியே அனுப்ப வேண்டியது நம்முடைய கடமை. அவர்களாகவே வெளியே சென்றால் இன்னும் நல்லதுதான்" என்று சொன்னார்கள். மாண்புமிகு அமைச்சர் அவர்களின் கருத்தை நான் முழுக்க முழுக்க ஆதரிக்கிறேன். மேலும், நான் எச்சரிக்கையாக ஒன்றைச் சொல்கிறேன். பல அதிகாரிகள், பல நேரங்களிலே, ஆளும் கட்சி சார்பிலே, அரசுத் தரப்பிலேயிருந்து சில பாராட்டுதல்களை வாங்குகிறார்கள். அவைகளை எப்படிப்பட்ட சூழ்நிலையிலே வாங்குகிறார்கள் என்று பார்க்க வேண்டும். அந்த அடிப்படையிலே அவர்கள் எல்லை மீறிப் போகும்போது, அதை அரசாங்கமே பார்க்கிறது, சரி இதற்கு மேலே இவர்களை விட்டு வைக்க முடியாது என்ற நிலைமை வந்து வெளியே போகச் சொல்கிறது. எனக்கு அந்த அனுபவம் ஏற்பட்டது. ஆனால், ஐ.ஏ.எஸ். அதிகாரிகளிடத்திலே அந்த அனுபவம் ஏற்படவில்லை. இன்னொரு காவல் துறை அதிகாரியிடத்திலேதான் அந்த அனுபவம் ஏற்பட்டது. அது முதலமைச்சர் அவர்

களுக்குத் தெரியும். ஆனால் என்ன ஆயிற்று? நான் குறை சொன்னபோது ஒன்றுமே நடக்கவில்லை. கடைசியாக டெலிகிராபிக் ஆர்டரிலே அவர் 'டிரான்ஸ்பர்' ஆனார். இன்னும் 'ரீ-போஸ்டிங்' ஆர்டர் கிடைக்கவில்லை. ஏன் இதைச் சொல்கிறேன் என்றால், இந்த வரம்பை மீறுகின்ற நிலைமை யாருக்கு எதிராக எங்கே எப்போது நடந்தாலும், தடுக்கும் நிலைமை வந்தால்தான் அதிகாரிகள் ஒரு கட்டுக்கோப்பான கட்டுக்குள்ளே இருப்பார்கள். எந்த நிலைமையையும் தாண்ட முடியும் என்ற தைரியம் அவர்களுக்கு வந்தால், அது கொஞ்சம் கொஞ்சமாக அங்கேயிருந்து பிறகு இங்கே வந்து விடும். அந்த நிலைமையிலேதான் இதுபோன்ற நிலைமைகள் வருகின்றன. இன்னொன்றையும் பார்க்கிறேன். சில முக்கிய அதிகாரிகள், சில சிக்கலான முக்கியமான கட்டங்களிலேயிருந்து விலகுகிறபோது நான் ஒன்றைப் பார்க்கிறேன். விலகுகின்ற அதிகாரிகள் அனைவரும் விலகிய உடனே நான்கு ஆயிரம், ஐந்து ஆயிரம், ஆறு ஆயிரம் ரூபாய்க்குப் பெரிய முதலாளிகளிடம் வேலைக்குப் போகிறார்கள் என்பதைப் பார்க்கும்போது, அவர்கள் பதவியிலே இருந்தபோது இவர்களுக்கு எப்படி உற்ற துணையாக அவர்கள் இருந்திருப்பார்கள் என்பதைப் புரிந்து கொள்ள முடியும். அப்படிப்பட்ட அதிகாரிகள் மிகத் தெளிவாகவும் வேகமாகவும் ஆளும் கட்சிக்கு எதிராக இருப்பவர்கள் மீது சில நேரங்களில் செயல்பட்டுவிட்டு, நாங்கள் உங்களிடம் 'நல்ல பிள்ளைகளாக இருக்கிறோம்' என்று ஆளும் கட்சிக்குக் காட்டிவிட்டு, அதைப் பயன்படுத்திக்கொண்டு பல தவறுகளைச் செய்கிறார்கள். கடைசியாக உங்களிடமும் அது பலியவில்லை என்ற நிலைமை வருகிறபோது, இராஜினாமா செய்கிறார்கள். ஆகவே இதிலே எச்சரிக்கையாக இருக்க வேண்டியது அரசாங்கத்தின் கடமை என்பதை இந்த நேரத்திலே சொல்லிக் கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன்: நேரம் அதிகமாகப் போகிறது. இருப்பினும் ஒரு உண்மையைச் சொல்ல நான் கடமைப்பட்டிருக்கிறேன். ஏதோ சில நேரங்களிலே எங்களுக்குச் சிலர் நல்லவர்களாக நடப்பதாகவும் அவர்களை நம்பியதன் விளைவாகப் பின்னால் அதே தவறைச் செய்ய நாங்கள் அனுமதிக்கவில்லை என்றும் அவர்கள் வெளியே செல்கிறார்கள் என்றும் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கருத்தைச் சொல்கிறார்கள். ஆகவே, நாங்கள் அனுமதிக்கவில்லை என்பதை ஏற்றுக்கொள்கிறார்கள், நன்றி. இந்த அரசைப் பொறுத்தவரையில், அப்படி எந்த அதிகாரிகளையும் நாங்கள் பயன்படுத்திக் கொள்வதில்லை என்பதை இந்த அவையிலே தெரிவித்துக்கொள்கிறேன். நிரூபித்தால் அதற்கேற்ற நடவடிக்கையை ஏற்றுக்





கொள்ளத் தயாராக இருக்கிறோம். இந்த நிலைமைகளை உருவாக்கியவர்கள்தான் இதற்குப் பொறுப்பு ஏற்க வேண்டும் என்பதுதான் என்னுடைய கருத்தாகும். எதற்கெடுத்தாலும் பத்திரிகைகளிலே அறிக்கை விடுகின்ற துணிச்சலை சில அதிகாரிகளுக்கு ஏற்படுத்தித் தந்தவர்கள்தான் இதற்குப் பொறுப்பாவார்கள். முன்பு அப்படி இல்லை, இப்போது துணிச்சல் ஏற்பட்டிருக்கிறது. காரணம் அதற்கென்று விளம்பரம் தருவதற்கு சில பத்திரிகைகள்—ஒன்றிரண்டு என்று வைத்துக்கொண்டால்கூட—தயாராக இருப்பதுதான். அதுமட்டுமல்ல, அறிக்கை வெளியிடுவதற்கு முன்பாக அவர்கள் மீது என்னென்ன குற்றங்கள் சாட்டப்பட்டன, எதனால் அவர்களுக்கு இந்த நிலைமை ஏற்பட்டது, தற்காலிக வேலைநீக்கம் அவர்களுக்கு ஏன் ஏற்பட்டது என்பதை எந்த அதிகாரியாவது சொல்கிறாரா? அறிக்கை வெளியிடும்போது, தன்மானத்தோடு வாழ முடியவில்லை அல்லது சாமர்த்தியத்தோடு செயல்பட முடியவில்லை என்றெல்லாம் தான் சொல்கிறார்களே தவிர, இந்தக் குற்றச்சாட்டுகளை எங்கள் மீது சுமத்தி எங்களைத் தற்காலிகமாக வேலைநீக்கம் செய்திருக்கிறார்கள் என்று வெளியிட்டது உண்டா? இங்கே இருந்துகொண்டு கர்நாடகத்திலே நிதி அமைப்பை ஏற்படுத்துவதா? அந்த நிதி அமைப்பிலே பங்குகொள்வதா? அதற்கு என்று இங்கே வசூல் செய்வதா? இதை ஒரு மாவட்ட ஆட்சித் தலைவர் செய்யலாமா? இதை அனுமதிக்கலாமா? இதுபோன்ற பிரச்சினைகளுக்கெல்லாம், நான் 7 ஆம் தேதி பதில் சொல்லும்போது விளக்கமாகச் சொல்கிறேன். ஆனால், பொதுவாக இத்தகைய குற்றங்களை யார் செய்தாலும், அதற்கு ஆதாரமாக என்னென்ன எடுத்துக்காட்டினாலும், அந்தக் குற்றச்சாட்டுகளுக்குச் சொந்தக்காரர்கள் அதை ஏற்றுக்கொள்ளவேண்டியவர்கள். அறிக்கை வெளியிடுவதற்கு ஆதரவு தருவதுதான் இந்தப் பரிதாப நிலைமைக்கு அடிப்படைக் காரணம் என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. க. இராமமூர்த்தி: மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சொன்ன விளக்கத்திற்கு நன்றி. ஒரு விவரத்தை இப்போது நான் இங்கே சொல்ல விரும்பவில்லை. அது என்னுடைய சொந்த விவகாரம். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கேட்டால், தனியாகச் சொல்கிறேன். ஆனால், அதிலே சம்பந்தப்பட்ட அதிகாரி, நான் யார் பெயரிலே குறை சொன்னேனோ, அந்த அதிகாரி அதற்குப் பிறகு ரொம்ப நன்றாக இருந்தார். அதற்குப் பிறகு வேறொருவர் வந்து குறை சொன்னபோது, 'டெலிகிராபிக் ஆர்டர் மூலமாக டிரான்ஸ்பர்' செய்யப்பட்டார். இப்போது கடைசியாக ரிசைன் பண்ணியிருக்கிற திரு. கங்கப்பா அவரே பல இடங்களிலே தகவல் சொல்கிறார், பாதுகாக்கப்பட்ட சென்ட்ரல் மான்யுமென்ட்லே, பாதுகாக்கப்பட்ட பகுதிகளிலே

கோயிலை உருவாக்கினார்கள்; இல்லை கோயிலை வைத்தார்கள், அல்லது மற்ற நடவடிக்கைகளை எடுத்தார்கள். Perhaps, he became very popular al o. ஆனால் அது சட்டத்தை மீறிய செயல் என்பதோடு மட்டுமல்ல, அந்தச் சட்டம் மீறப்படாமல் தடுக்க வேண்டிய கடமை அங்கே மாவட்ட ஆட்சித் தலைவருக்கு இருந்தது. ஆனால், அவர் செய்யவில்லை. அரசாங்கம் அங்கே நடவடிக்கை எடுக்கவில்லை. அதனால் என்ன வாயிற்று? இன்னொரு இடத்திலே அவர் மீறும்போது, அவர் மீது நடவடிக்கை எடுக்கப்படுகிறது. அதைத்தான் நான் சொல்கிறேன். ஆகவே, இதை ஏதோ ஒருவருக்காக, அல்லது இன்னொருவருக்காக என்று சொல்லவில்லை. பொதுவாகவே, நாம் எச்சரிக்கையாக இருந்தாக வேண்டும். அதிகாரிகள் ஒரு ஆட்சியைக் கட்டுப்படுத்துகின்ற நிலைமைக்கு இடம் கொடுக்க ஜனநாயகத்தின் பெயரிலே நாம் தயாராக இல்லை, ஆகவே, இந்த நேரத்திலே அரசாங்கத்தின் கவனத்திற்கு இதைக் கொண்டு வருவது என்னுடைய கடமை என்று கருதினேன், கொண்டு வந்திருக்கிறேன்.

மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன் : வேலூர் கோட்டையிலே நடந்த நிகழ்ச்சிக்கு அந்த மாவட்ட ஆட்சித் தலைவர் பொறுப்பேற்றிருக்கிறார். ஏன் நடவடிக்கை எடுக்கவில்லை என்று, கேட்கிறார்கள். மக்களுடைய எண்ணத்தை மதிப்பதில் தவறில்லை. இவர் வைக்கச் சொல்லவில்லை. அதிலே போய் கலந்து கொள்கிறார். அவர் ஒரு ஆதி திராவிடர். அவர் கலந்து கொள்வதை நாம் தடுக்க முடியாது. அது அவருடைய உரிமை. ஆனால், ஒரு ஆட்சி நடத்துகின்ற பொறுப்பிலே இருக்கும்போது, சட்ட திட்டத்திற்கு உட்பட்டுத்தான் அவர்கள் செயல்பட முடியும். இது கூடாது என்று உத்தரவு கிடையாது. அதை ஏன் வைத்தார் என்பதல்ல. மக்களுடைய எண்ணத்தை மதித்து விட்டுக் கொடுக்கப்பட்டது. அதில் எதிர்ப்பும் இல்லை. ஆதரவும் இல்லை. அவர் மீறிப் போனதற்காக நடவடிக்கை எடுக்க வேண்டிய அவசியம் நேரவில்லை.

திரு. க. இராமமூர்த்தி : மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சொல்வதிலே எவ்வளவு நியாயம் இருக்கிறது என்று என்னாலே ஏற்றுக் கொள்ள முடியவில்லை. நான் மிகுந்த மரியாதையோடு சொல்கிறேன்; காவல் துறை அதிகாரி திருடன் வீட்டிலே கொடுக்கின்ற விருந்துக்கா போக முடியும்? மாவட்ட ஆட்சித் தலைவர் சட்டத்தைத் தாண்டிச் செயல்படுகின்ற ஒரு செயலுக்கு அவர் காரணமாக இருந்தாரா இல்லையா என்று பார்த்து தடுத்திருக்க வேண்டும். ஆனால் அதிலே அவரே பங்கேற்கிறார் என்பதால், "நான் அதை அன்றைக்குச் செய்தேன், அன்றிலேயிருந்து இந்த ஆட்சிக்கு என் மீது வஞ்சம் இருந்தது", என்று இன்றைக்கு அவர் சொல்லும் நிலைமைகள் இருக்கின்றன.





மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன்: இன்றைக்கு நான் உண்மையைச் சொல்லியாக வேண்டிய கட்டாயத்தில் இருக்கிறேன். நடக்கும் என்பது தெரியாது. ஆனால் நடந்து விட்டது. அதை வெளியே எடுத்துப் போய் விடலாமா என்று கேட்டபோது, நான்தான் "கூடாது, அங்கு தொல்லைகள் நேராமல் பார்த்துக்கொள்ள வேண்டும்" என்று சொன்னேன்.. ஆகவே, அந்தப் பொறுப்பை நான் ஏற்றுக்கொள்கிறேன்.

திரு. க. இராமமூர்த்தி : நடந்த பிறகு ஏற்பட்ட சங்கடத்தை என்னாலே உணர முடிகிறது. ஆனால் நடக்க விட்டவர் மீது நடவடிக்கை இல்லை. அதுதான் என்னுடைய வருத்தம் எல்லாம். நடந்த பிறகு Popular Sentiments.க்கு எதிராக ஆட்சி போக முடியாது. மக்களுடைய உணர்வுக்கு எதிராக, அங்கே ஏற்பட்டுவிட்ட அந்தப் புதிய சூழ்நிலைக்கு எதிராகப் போக முடியாது. அது நல்லதல்ல. அதை நான் ஒத்துக் கொள்கிறேன். ஆனால், இந்த நிலைமையை வளரவிட்ட, ஆரம்பத்திலேயே தடுக்கக்கூடிய நிலைமையிலே அதற்குரிய அதிகாரத்திலே இருந்த அந்த அதிகாரி மீது, அவர் செயல்படாததற்கு, என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டது?

மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன் : அதை எதிர்த்து என்ன செய்வது, அங்கே எந்தச் சூழ்நிலையில் நடவடிக்கை எடுப்பது என்பதற்கு எந்தவிதமான சட்ட விதிமுறையும் இல்லை. கோயிலுக்கு உள்ளே, சிலையில்லாத கோயிலுக்கு உள்ளே சிலையை வைத்தால், அதற்கு என்ன செய்வது என்பது பற்றி அதற்கென்று தனி விதிவிலக்கோ அல்லது விதி முறைகளோ இல்லை. ஆகவே, அமைதி காப்பதுதான் அங்கே பிரச்சினையாக இருந்தது தவிர, சட்டத்திற்குப் புறம்பாக அவர் செய்தார் என்பதற்கு எந்தவிதமான நியாயமும் இல்லை.

(முற்பகல் 11-20)

திரு. க. இராமமூர்த்தி : மாநில அரசாங்கத்தின் சொத்தாக இருந்தாலும், மத்திய அரசின் சொத்தாக இருந்தாலும், அதற்குப் பாதுகாப்பு அளிக்க வேண்டியது இங்கேயுள்ள அரசுதான். பாதுகாக்கப்பட்ட நினைவுச் சின்னமாக (மான்யூமெண்டாக) அறிவிக்கப்பட்ட ஒன்று, மத்திய அரசினுடைய சொத்து. அதைப் பாதுகாக்கின்ற பொறுப்பு இந்த மாநிலத்தில் முறையாக அமைந்த அரசினுடையது.

மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன்: மேலவைத் தலைவர் அவர்களே, அவருடைய நல்ல விளக்கத்திற்கு நன்றி கூறுகிறேன். மைய அரசையும், தமிழக அரசையும் தேர்ந்தெடுப்பவர்கள் மக்கள். மக்கள் எதை விரும்புகிறார்களோ, எதைச் செய்ய வேண்டுமென்று துணிந்து செய்து விட்டார்களோ, அதை வேறு பிரச்சினைகள் எழாமல் பாதுகாப்பதுதான் மக்களுடைய வாக்குகளைப் பெற்ற அமைச்சர்கள், அதிகாரிகள் ஆகியவர்களுடைய கடமை. இதுதான் அங்கே செய்யப்பட்டிருக்கிறது. ஆகவே மத்திய அரசுக்குச் சொந்தம் என்று சொல்ல முடியாது. மக்களுக்குச் சொந்தம். மக்களுக்குச் சொந்தமான ஒரு சிறிய சிலைக்குக் கூட ஆபத்து ஏற்படுத்தப் படவில்லை. மேலும் மரியாதை அதிகப்படுத்தப்பட்டிருக்கிறதே தவிர, ஆயிரக்கணக்கான மக்கள் சென்று வழிபடுகிற ஆலயமாக ஆக்கப்பட்டிருக்கிறதே தவிர, அதை யாரும் குறை கூறி எதிர்த்து போராட்டம் துவங்கவில்லை. இதை எல்லோரும் சேர்ந்து ஏற்றுக் கொண்டார்கள் என்பது பொருள்.

திரு. க. இராமமூர்த்தி: மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் உணர்வை மதிக்கிறேன். இந்தச் சூழ்நிலையில் அதிகாரிகள் . . . . .

மாண்புமிகு மேலவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் கேட்ட 10 நிமிடத்திற்கு மேலும் ஆகிவிட்டது. ஆனால் இன்னும் அந்த இடத்திலேயே நிற்கிறார்களே.

திரு. க. இராமமூர்த்தி: இத்தகைய சூழ்நிலைகளால்தான் மாவட்ட ஆட்சித் தலைவர் மக்கள் தலைவராக மாறும் நிலை ஏற்படுகிறது. அடுத்து, இந்தப் பிரச்சினையைப்பற்றி ஒன்றே ஒன்று சொல்லவேண்டும் என்று நினைத்தேன்

மாண்புமிகு மேலவைத் தலைவர்: அதுதான் சங்கடமானதே.

திரு. க. இராமமூர்த்தி: ஆளுநர் உரையில் ஆங்கிலத்தில் "This Government would, therefore, like to urge upon the Government of India to take necessary steps for adhering to the assurances given earlier."



என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. அதையே இன்னும் பாதுகாப்பாக தமிழில் சொல்லியிருக்கிறார்கள். "ஏற்கெனவே கொடுத்துள்ள வாக்குறுதிகளின்படி நடப்பதற்கு அவசியமான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு மத்திய அரசை வலியுறுத்த இவ்வரசு விழைகிறது". மொழி பெயர்ப்பை எவ்வளவு கெட்டிக்காரத்தனமாகப் பண்ணியிருக்கிறார்கள் என்பதோடு மட்டுமல்லாமல். . .

மாண்புமிகு மேலவைத் தலைவர்: எனக்கும் இது சம்பந்தப்பட்ட விஷயம். ஆங்கிலத்திலே இல்லாதது தமிழிலே இருக்கிறதா? அல்லது தமிழிலே இல்லாதது ஆங்கிலத்திலே இருக்கிறது என்று சொல்கிறார்களா?

திரு. க. இராமமூர்த்தி: இல்லாதது என்பது மட்டுமல்லாமல் ஆங்கிலத்தில் அதனுடைய அர்த்தம் வேறு. தமிழில் கொடுக்கப்பட்டிருக்கிற விதத்தின் மூலம் . . .

மாண்புமிகு மேலவைத் தலைவர்: அர்த்தம் என்பது அவரவர் பண்ணிக் கொள்வது. டெக்னிக்கலாக வார்த்தை விடுபட்டுப் போயிருக்கிறதா, அல்லது கூடியிருக்கிறதா?

திரு. க. இராமமூர்த்தி: டெக்னிக்கலாக வார்த்தையில் வலிமை இல்லாமல் செய்யப்பட்டிருக்கிறது. ஆங்கிலத்தில் உள்ள வலிமை தமிழில் இல்லை.

மாண்புமிகு மேலவைத் தலைவர்: அதற்கு என்ன காரணம் என்று மாண்புமிகு உறுப்பினர் நினைக்கிறார்?

திரு. க. இராமமூர்த்தி: என்ன காரணம் என்பதைச் சொல்ல வருகிறேன். மொழித் தீர்மானம் வந்தபோது பேசிய பேச்சுக்களை வைத்திருக்கிறேன். தலைவர் அவர்கள் அன்றைக்குப் பேசிய பேச்சையும் வைத்திருக்கிறேன்.

மாண்புமிகு மேலவைத் தலைவர்: நான் ஆதரித்திருக்கிறேன்.

திரு. க. இராமமூர்த்தி: அண்ணாவினுடைய தீர்மானம் நிறைவேற்றப் பட்டபோது, இன்றைய முதலமைச்சர் அவர்கள் அந்த அவையில் இருந்தார்கள். 1968 ஆம் ஆண்டு ஆளுநர் உரையில் "இம்மாநில பள்ளிகள் அனைத்திலும் தமிழ், ஆங்கிலம் ஆகிய இரண்டு மொழிகள் மட்டுமே கற்பிக்கப்பட வேண்டும் என்ற இந்தச் சட்டமன்றப் பேரவை முடிவை செயல்படுத்த இந்த அரசு ஏற்கெனவே நடவடிக்கைகளை மேற்கொண்டு விட்டது" என்று சொல்லியு

திட்டத்தைச் சொன்னார்கள். அன்றைக்கு அந்தத் தீர்மானத்திற்கு எதிராக காங்கிரஸ் இல்லை, ஆதரவாக வாக்கு அளிக்கவில்லை. அதே நேரத்தில் தமிழகத்தினுடைய உணர்வுகளைப் பிரதிபலிக்கின்ற அண்ணாவின் அமைச்சரவையின் தீர்மானத்திற்கு எதிராக யாரும் இருக்கக் கூடாது என்ற உணர்வோடு காங்கிரஸ் வாக்கெடுப்பிலே கலந்து கொள்ளவில்லை, வேறு கட்சிகளும் கலந்து கொள்ளவில்லை. இன்று சொல்லுவது போலவே, அன்றைக்கு தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டியின் தலைவராக விளங்கிய முன்னாள் மத்திய நிதியமைச்சர் திரு. சி. சுப்பிரமணியம் அவர்கள் அப்போதே சொல்லியிருக்கிறார்கள்.

He said: "The two-language formula would cut off Madras from other States of the country and also would take away its voice in the administration at the Union Government level. The unilateral decision to scrap the three-language formula by the Madras State would not solve the language problem but would only adversely affected the people of Madras"

இப்படி இருமொழிக் கொள்கையின் விளைவாக பாதிப்பு ஏற்படும் என்று எச்சரிக்கை தெரிவித்திருந்தார். அதே நேரத்தில் "இரு மொழிக் கொள்கையை அமுல்படுத்த வேண்டிய கட்டாய நிர்ப்பந்த சூழ்நிலை ஏற்பட்டிருக்கிறது. அதை நடத்தியே தீருவேன்" என்று திராவிட முன்னேற்றக் கழக அமைச்சரவை அண்ணா அவர்களின் தலைமையில் முடிவு எடுத்தபோது, அதற்கு எதிராக யாரும் வாக்களிக்கவில்லை. அந்தத் தீர்மானத்திற்கு இருந்த பெரிய வலிமையே அதுதான். அப்படி அண்ணா அவர்கள் தன்னோடு எல்லோரையும் அழைத்துச் சென்றார்கள். அன்றைக்கு டாக்டர் ஹண்டே அவர்கள் பேசினார்கள். அவர் தன்னுடைய கொள்கையாக மட்டும் பேசவில்லை. அன்றையதினம் கட்சியைத் தோற்றுவித்த தலைவராக விளங்கிய மூதறிஞர் இராஜாஜி அவர்களின் கருத்து உட்பட என்று சொல்லி, அதன் அடிப்படையிலே ஒரு திருத்தத்தைக் கொடுத்தார்கள். அதிலே சொல்லியிருக்கிறார்கள். "... but regret to note that the Government has caused great alarm in the minds of the students as Government had caused great alarm in the minds of the students as well as parents by threatening to remove English from the medium of instruction in Government colleges from the next academic year.





.... that a measure of this type contemplated by this Government does incalculable harm to the furtherance of the prospects of the student community for higher studies and also in the matter of seeking openings in the Centre and that the Governor's Address is also silent on the protection given to the minority languages such as Telugu, Urdu, Malayalam and Kannada, all of them being languages regularly in vogue even before the creation of Madras Presidency."

இந்தத் தீர்மானம் வந்தபோதும் சரி, கொள்கை அறிவிக்கப்பட்டபோதும் சரி, மாறுபட்ட கருத்துக்கள் இருந்தன என்பதைச் சுட்டிக் காட்டுவதற்காகத்தான் இதைச் சொல்கிறேன்.

**மாண்புமிகு திரு. சு. திருநாவுக்கரசு :** மாண்புமிகு உறுப்பினர் படிக்கிற போது முரண்பட்ட கருத்துக்களைச் சொன்னார். அண்ணா அவர்கள் கொண்டு வந்த இருமொழிக் கொள்கையை காங்கிரஸ் கட்சி ஆதரித்தது, அதனாலேயே எதிர்த்து வாக்களிக்கவில்லை என்று சொன்னார்கள். பிறகு திரு. சி. சுப்பிரமணியம் அவர்கள் தன்னுடைய ஆங்கில உரையில் இருமொழிக் கொள்கையைக் கொண்டு வந்த காரணத்தாலே தமிழகம் தனியாகத் துண்டிக்கப்படுகிறது என்று எதிர்த்துப் பேசிய பேச்சுக்களையும் சொன்னார்கள். காங்கிரஸ் கட்சி எதிர்க்கிறதா அல்லது ஆதரிக்கிறதா? மாண்புமிகு உறுப்பினர் என்ன சொல்லுகிறார்கள்? எதிர்க்கிறார்களா, ஆதரிக்கிறார்களா?

**திரு. க. இராமமூர்த்தி :** இருமொழிக் கொள்கைக்கு உடன்படவில்லை என்று அன்றைக்கே சொன்னோம், இன்றைக்கும் சொல்லுகிறோம். இரு மொழிக் கொள்கையை அமுல்படுத்துவதன் மூலமாக சில நிலைமைகளைச் சமாளிக்கலாம் என்று அரசு கருதுகிறபோது, அந்த நன்மைகள் கிடைக்காமல் நாம் குறுக்கே நிற்கக்கூடாது என்று நாங்கள் மட்டுமல்லாமல், அன்றைக்கிருந்த பல அரசியல் கட்சிகள் கருதி, அதற்கு உடன்பாடாக வாக்கெடுப்பில் கலந்து கொள்ளவில்லை.

**திரு. ம. சங்கரலிங்கம் :** தலைவர் அவர்களே, ஒரு சிறு விளக்கம் கேட்க விரும்புகிறேன். 1967-ஆம் ஆண்டு அண்ணா அவர்கள் முதலமைச்சராக இருந்து அந்தத் தீர்மானத்தைக் கொண்டு வந்தபோது திரு. சி. சுப்பிரமணியம் அவர்கள் பேசியதாகக் குறிப்பிட்டார்கள். அப்போது திரு. சி. எஸ். அங்கு இருந்தாரா என்பதே ஐயப்பாடாக இருக்கிறது. ஆகவே வெளியே பேசினாரா? சட்டமன்றத்திலேயிருந்து பேசியதாகச் சொல்லுகிறார்.

[1983 ஜனவரி 29

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** தீர்மானத்தைப் பற்றி வெளியே யிருந்து அறிக்கை விட்டிருக்கிறார். மாண்புமிகு உறுப்பினர் இப்போது என்ன சொல்லுகிறார் என்பதைப் பற்றிச் சொல்ல வேண்டும். இன்றைய நடைமுறையைச் சொல்ல வேண்டும். இப்படி முன்பு பேசியதையெல்லாம் உவமானமாக எடுத்துச் சொன்னால் எப்போது முடிவது ?

**மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே :** தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. இராமமூர்த்தி அவர்கள் மிகச் சாமர்த்தியமாக அன்றைக்கு நடைபெற்ற நிகழ்ச்சியைப் பற்றிச் சொல்லுகிறார்கள். இரு மொழிக் கொள்கையைக் கொண்டு வர வேண்டுமென்று பேரறிஞர் அண்ணா அவர்கள் தீர்மானத்தைக் கொண்டு வந்தார்கள். அந்தத் தீர்மானத்தின் மீது பேசும் நேரத்தில், முழுமையாக ஆதரித்து வாக்கெடுப்பில் கலந்து கொண்டு, தீர்மானத்திற்கு வாக்களிக்க வேண்டுமென்று மூதறிஞர் இராஜாஜி அவர்கள் சொன்னார்கள்.

(முற்பகல் 11-30)

அதே நேரத்திலே இங்கே மதிப்பிற்குரிய திரு. சி. சுப்பிரமணியம் அவர்களுடைய பெயரை இழுத்த காரணத்தினாலேயே, மூதறிஞர் இராஜாஜி அவர்களை அழைத்து மும்மொழித் திட்டத்திற்கு நாம் வாக்கு அளிக்க வேண்டுமென்றும், இதை எதிர்த்துப் பேச வேண்டும் என்றும் சொன்னதற்கு திரு. இராஜாஜி அவர்கள் "முடியாது, திட்டவட்டமாக இரு மொழிக் கொள்கை தான்" என்று சொன்னார்கள். இன்றைக்கு இங்கிலீசை எடுத்து விடக் கூடாது என்று இன்னொரு இடத்திலே கவர்னர் உரையிலே பேசுகின்றபோது, அதற்குக் கொடுத்த திருத்தத்தை மாண்புமிகு உறுப்பினர் திரு. இராமமூர்த்தி அவர்கள் சாமர்த்தியமாக இங்கே கொண்டு வந்து கொடுத்திருக்கிறார்கள்.

**திரு. க. இராமமூர்த்தி :** அதிலே இன்னொரு இடத்திலே தெளிவாகச் சொல்லியிருக்கிறார்கள். இன்னொரு இடத்திலே இருக்கிறது. அது கிடைத்தது நல்லதாக இருக்கிறது.

**திரு. செ. முத்துசாமி :** இந்தி மொழியை மத்திய அரசு அலுவலகங்களில் ஊழியர்களிடையே எல்லா இடங்களில் திணிக்கிறார்களே, அதைப்பற்றி உறுப்பினர் அவர்களுடைய கருத்து என்ன என்று கூற வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். அது சரிதானா ?



1983 ஜனவரி 29]

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** இந்த விவாதம் நீண்டு கொண்டு போகிறது. ஏறக்குறைய $1\frac{1}{2}$ மணி நேரம் ஆகிறது. இன்றைக்கெல்லாம் இப்படியே பேசிக் கொண்டிருந்தால், மற்ற உறுப்பினர்கள் எப்படிப் பேச முடியும் ?

**திரு. க. இராமமூர்த்தி :** மாண்புமிகு டாக்டர் ஹண்டே அவர்கள் அந்த ஆளுநர் உரையிலே உள்ளதைப்பற்றிச் சொல்லியிருக்கிறார்.

**மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே :** ஒரு நிமிடம். இன்னொன்று என்னவென்றால் மாண்புமிகு அங்கத்தினர் திரு. முத்துசாமி அவர்கள் சொன்ன மாதிரி, தமிழகத்தைப் பொறுத்தவரையில், மாநிலத்தினுடைய ஆட்சி மொழியாக, தொடர்பு மொழியாக இருமொழி திட்டம், ஆங்கிலம் வேண்டுமென்று மிகத் தெளிவாகச் சொல்லியிருக்கிறார்கள். எதிர்காலத்திலே வரக்கூடிய சூழ்நிலையை அறிந்து அவர்கள் கொண்டு வந்தார்கள். இப்போது இருக்கின்ற மிகப் பயங்கரமான பிரச்சினையெல்லாம் எந்த இடத்திற்குச் சென்றாலும், இந்தித் திணிப்பு நடந்து கொண்டிருக்கிறது. மற்ற விஷயங்களில் ஒத்துழைப்பு கொடுத்திருப்பதுபோல மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இதிலும் சொன்னால் நன்றாக இருக்கும்.

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், அத்தோடு விட்டுவிட்டு, இன்றைக்கு இருக்கின்ற நிலையை வைத்து அவருடைய கருத்துக்களைச் சொல்வது நல்லது. படித்துச் சொல்வதை எல்லாம் வைத்துக்கொண்டால், இப்போது முடியாது. அதிலே ஒவ்வொருவரும் மறுத்து பதில் சொல்லிக்கொண்டிருந்தால், சபையை எப்படி நடத்த முடியும் ?

**திரு. க. இராமமூர்த்தி :** டாக்டர் ஹண்டே அவர்கள் சொன்னதுதான் இது. அதை எடுத்துச் சொன்னால், விளக்கமாக இருக்கும் என்று நினைக்கிறேன்.

"The spirit of the resolution should not be disturbed by obstructing or voting against it.

Congress party also did not vote against the D.M.K. sponsored resolution because they did not want to go against the spirit of it. That is the only thing I want to say."

நான் சொல்லவில்லை. மாண்புமிகு டாக்டர் ஹண்டே அவர்கள் அந்த அவையிலே சொன்னது. இதை எதற்காகச் சொல்கிறேன் என்றால், இந்த மொழி பிரச்சினையிலே . . . ,

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** முடிக்கின்ற நேரத்திலே, மறுபடியும் . . .

**மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே :** The Spirit of the resolution should be like that. The other parties should not obstruct it or vote against it. என்று நான் தெளிவாகவே சொல்லியிருக்கிறேன். அந்த அளவுக்கு 'அப்ஸ்ட்ரக்ஷனிஸ்ட் டேக்டிக்ஸ்' இருக்கக்கூடாது என்பதை அந்த நேரத்திலேயே நான் சொல்லியிருக்கிறேன். அதை இந்த நேரத்திலேயும் சொல்கிறேன். இதைவிட எடுத்துக்காட்டு தேவையில்லை.

**திரு. க. இராமமூர்த்தி :** 'அப்ஸ்ட்ரக்ஷனிஸ்ட் டேக்டிக்ஸ்' கூடாது என்று சொல்கின்ற நேரத்திலே, அந்த அவையில், மாநிலத்திலே இருந்த பல அரசியல் கட்சிகள் அன்றைக்கு உடன்பாடாக இல்லை. ஆனால் . . .

**மாண்புமிகு திரு. சு. திருநாவுக்கரசு :** ஒரே ஒரு கேள்வி. அப்படி யென்றால், இப்போது போலவே அப்போதும் சட்டமன்றக் கட்சிகளுக்குள்ளே மாநில கட்சித் தலைவர்களுக்குள்ளே ஏதாவது கருத்து வேறுபாடு இருந்ததா?

**திரு. க. இராமமூர்த்தி :** I cannot explain further

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** மாண்புமிகு அங்கத்தினர் அவர்கள் முடிவுக்கு வரவேண்டும்.

**திரு. க. இராமமூர்த்தி :** அவர்கள் விடமாட்டேன் என்கிறார்களே.

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** அங்கத்தினர் அவர்களே எங்கோ போகின்றார்கள். அவர்களும் என்ன பண்ணுவார்கள் ?

**திரு. க. இராமமூர்த்தி :** மொழிக் கொள்கையைப் பொறுத்தவரையிலும், மொழித் திட்டத்தைப் பொறுத்தவரைக்கும், தமிழகத்தின் மீது இந்தித் திணிப்பு என்பதற்கு காங்கிரஸ் நிச்சயமாக எதிராக இருக்கிறது. அதிலே கிஞ்சித்தும் சந்தேகம் இல்லை. அச்சப்பட வேண்டியதில்லை. ஒன்றை நான் தெளிவாகச் சொல்லிக்கொள்கிறேன். பெருந்தலைவர் காமராசர் அவர்கள் செயல்படுத்திக் காட்டியிருக்கிறார்கள். அதிலே எந்தவிதமான மாற்றமும் இடையாது. அதே நேரத்திலே நான் ஒன்று சொல்ல விரும்புகிறேன். தானே சொன்னது, தமிழ் மொழி பயிற்சி மொழி ஆக்குவிக்கப்படும் என்பது மட்டுமல்ல; அண்ணா அவர்கள் கொடுத்த உறுதி மொழியை 5 ஆண்டுகளுக்குள்ளாக இதை முழுமையாக நிறைவேற்றித் தருவோம் என்று சொல்லி, இன்றைக்கு





உங்களுடைய பல பேர்களுடைய குழந்தைகள் தமிழைப் பயிற்சி மொழியாக ஏற்று படிக்கவில்லை என்பதையும் சொல்ல விரும்புகிறேன். நம்முடைய மொழிக் கொள்கையை நாம் எப்படிப் பின்பற்றுகிறோம் என்பதைப் பார்க்க வேண்டாமா ? அத்தோடு மட்டுமல்ல. இந்தித் திணிப்பிற்கு எதிராக இருக்கின்ற அதே நேரத்திலே, நமது மொழிக்கு எதிராக செயல்படுகின்றவர்களைக் கண்டிப்பதற்கு நமக்கு வேகம் வேண்டும். நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கட்சியைச் சேர்ந்தவர்தான் கர்நாடகத்திலே சட்டசபை உறுப்பினர், அவர் உள்ளே போய் தமிழிலே பதவிப் பிரமாணம் ஏற்றுக் கொண்டதால் என்ன நடந்தது என்று பார்த்தோம்.

**மாண்புமிகு மேலவைத் தலைவர்:** மாண்புமிகு அங்கத்தினர் அவர்களுக்கு உறுதியாகச் சொல்கிறேன். இன்னொரு மாநிலத்தினுடைய அவை நிகழ்ச்சியைப்பற்றி இங்கே குறிப்பிடுவது முறையல்ல. அதுபற்றி வேண்டாம். அது வேண்டாம். அதை விட்டுவிட்டு, மேற்கொண்டு பேசலாம். அது தப்பு.

**திரு. க. இராமமூர்த்தி :** எது தப்புங்க?

**மாண்புமிகு மேலவைத் தலைவர்:** அங்கே மாநில அவையிலே நடந்த நிகழ்ச்சியை இங்கே குறிப்பிட்டுப் பேசுவது, இன்னொரு மாநிலமாகிய நாம் சொல்வது, முறையானது அல்ல.

**திரு. க. இராமமூர்த்தி:** நான் அந்த அவையின் புரோசீடீங்ஸ் பற்றிப் பேச வில்லை. உறுப்பினர் பதவிப் பிரமாணம் எடுத்துக் கொள்வதைத் தொடர்ந்து ஏற்பட்ட நிகழ்ச்சிகள் நமக்குத் தெரியும். அவர் வெளியே வந்த பிறகு நடந்ததை நாம் பேசலாம் அல்லவா ? வெளியே வந்த பிறகு என்ன நடந்தது? அவர் வெளியே வந்த பிறகு போலீஸ் பாதுகாப்போடு வீட்டுக்குப் போக வேண்டிய நிலை அவருக்கு ஏற்பட்டது. அதைக் கண்டித்து ஒருவரும் இங்கே பேசக் காணோமே. இந்தித் திணிப்பு என்ற நிலைமை வருகின்றபோது, அதிகார பூர்வமாக வந்தால், நிச்சயமாக எதிர்க்கிறோம். அது கொல்லைப் புறமாக வர, தனி இலாகாவை ஏற்றிருக்கின்ற அமைச்சர்கள் அல்லது அவர்களுடைய வேகம், நிலைமை புரியாத அதிகாரிகள் மூலமாக வருமானால், அதைத் தடுத்து நிறுத்துவதற்கு இந்த அரசு எடுக்கின்ற நடவடிக்கைகளுக்கு நாங்கள் ஆதரவாக இருக்கிறோம். ஆனால் அதே நேரத்திலே இன்னொன்றையும் சொல்ல விரும்புகிறேன். தமிழகத்திலேதான் மற்ற மாநிலங்களைவிட மிக அதிகமாக இந்தியைத் தனியாகக் கற்பவர்களுடைய எண்ணிக்கை அதிகரித்துக் கொண்டிருக்கிறது என்பதை மறந்துவிடக் கூடாது. நம்மைப் பொறுத்தவரைக்கும், என்ன செய்கிறோம் என்றால், நாம் இந்தியை விரும்பப் படாமல் கற்று . . . .

மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன்: மாண்புமிகு மேலவைத் தலைவர் அவர்களே, மன்னிக்க வேண்டும். இது பிரச்சினைக்குரியதாக ஆக்கப்படுகிறது என்றாலும், யாரும் இங்கே பேசவில்லை என்று சொல்கிறார்கள். இங்கே பேசவில்லை. எங்கு பேச வேண்டுமோ அங்கே பேசுகிறோம். எப்படி மத்திய அமைச்சரவைக்குத் தகவல் தெரிவிக்க வேண்டுமோ அப்படி அதைத் தெரிவித்திருக்கிறோம். எப்படி அந்த அதிகாரிகளுடன் தொடர்பு கொள்ள வேண்டுமோ அப்படி தொடர்பு கொண்டிருக்கிறோம். அதை நாங்கள் ஒழுங்காகச் செய்து கொண்டிருக்கிறோம். ஆனால் திரு. நாகராஜன் போன்றவர்களுக்கெல்லாம் ஆதரவு கொடுக்கின்றவர்கள் எந்தக் கட்சிக்குச் சொந்தக்காரர்களோ அவர்கள்தான் இதைப்பற்றிக் கொஞ்சம் அதிகமாகச் சிந்திக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

திரு. க. இராமமூர்த்தி: சிந்திக்கலாம். * *

மாண்புமிகு மேலவைத் தலைவர்: இப்படியே பேசிக்கொண்டிருந்தால் எப்படி? விவாதம் எப்படி முடியும்? உறுப்பினர் அவர்கள் முடிக்க வேண்டும்.

திரு. க. இராமமூர்த்தி: ஆகவே இந்தித் திணிப்புக்கு எதிராக . .

மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன்: மேலவைத் தலைவர் அவர்களே, * * * என்று சொன்னாரே தவிர, எங்கு, எதற்காக, எப்போது என்று சொன்னால், நான் பதில் சொல்லியாக வேண்டும். குறிப்பேட்டிலே ஏற்றப்படுகின்ற காரணத்தினால்.

மாண்புமிகு மேலவைத் தலைவர்: இந்த விஷயத்தை விட்டுவிட்டு மேலே போகலாம். இன்னொரு மாநிலத்திலே நடந்தது என்பதுபற்றியதை எடுத்து விடலாம். குறிப்பிலேயிருந்து அகற்றிவிடுவோம்.

மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன்: இல்லையில்லை. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், * * * என்று கேட்டார்கள். ஆகவே எங்கே போனேன். யாருக்காகப் போனேன் எப்படி போனேன், எப்போது போனேன் என்று சொல்லவேண்டியிருக்கும்

* * தலைவரின் ஆணைப்படி நீக்கப்பட்டது.





மாண்புமிகு மேலவைத் தலைவர்: விவாதத்தைச் சுருக்கத்தில் முடிக்க வேண்டுமென்பதற்காக * * * என்று மாண்புமிகு அங்கத்தினர் அவர்கள் கூறியதை குறிப்பிலிருந்து நீக்கி விடுகிறேன். அங்கத்தினர் அவர்கள் தயவுசெய்து விவாதத்தில் முடிவுக்கு வருமாறு கேட்டுக்கொள்கிறேன்.

திரு. க. இராமமூர்த்தி : மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சொன்னது போல, அந்தக் கர்நாடக நிலைமையில் என்ன நடவடிக்கை எடுத்தார்களோ, அதுபோல் இந்திப் பிரச்சினைகளிலேயும் நடவடிக்கை எடுத்திருப்பார்கள் என்று நான் நம்புகிறேன். எடுத்திருந்தால் சொல்லலாம். பிரதமருடைய கவனத்திற்குக் கொண்டுவந்து, "இந்த மாதிரி தீவறு நடைபெறுகிறது. இதை தமிழகம் ஏற்காது, இது தவறு" என்ற கருத்தை அவர்கள் சொல்லியிருந்து, அதற்குப் பிறகு ஆளுநர் அவர்கள் உரையிலே மற்ற இடங்களிலே இது வந்திருந்தால், அது இன்னும் நன்றாக இருந்திருக்கும். இந்தியைப் பொறுத்த வரையிலே, அது ஆதிக்க மொழியாக வருகின்றபோது அதை எதிர்த்து நிற்பதற்கு காங்கிரஸ்காரர்கள் யாருக்கும் சளைத்தவர்கள் அல்ல என்ற அந்த உறுதியை இந்த நேரத்திலே சொல்லி, அதிலே நாங்களே எடுத்துக்காட்டாக விளங்குகின்றவர்கள் என்பதையும் எடுத்துச் சொல்லி, அதே நேரத்திலே இந்தியைப் படிக்கக்கூடாது, தாங்கள் விரும்பினால்கூட என்ற நிலை ஏற்படுவதை, நாங்கள் ஏற்க முடியாது. கொடுத்த வாக்குறுதியை இன்னமும் அவர்கள் நிறைவேற்றவில்லை, அண்ணா அவர்கள் கொடுத்த வாக்குறுதியை இன்னமும் நிறைவேற்றாதவர்களாக இருந்து கொண்டிருக்கிறீர்கள் என்பதையும் இந்த நேரத்திலே அவையின் கவனத்திற்குக் கொண்டு வந்து என்னுடைய உரையை முடிக்கிறேன்.

மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன்: மேலவைத் தலைவர் அவர்களே, நான் பதில் சொல்ல வேண்டுமென்று சொன்னதற்காகச் சொல்கிறேன். பிரதம அமைச்சருக்கு எந்தெந்த நேரத்தில் இந்தியைப்பற்றி எப்படியெல்லாம் தெரிவிக்க வேண்டுமோ அந்த அளவில் அத்தனை கடிதங்கள் எழுதியிருக்கிறேன். நான் நேரிலேயும் சொல்லியிருக்கிறேன்.

திரு. வி. வி. வி. ஆனந்தம்: மாண்புமிகு மேலவைத் தலைவர் அவர்களே, மேதகு ஆளுநர் அவர்களுடைய உரையின் மீதான விவாதத்தில் கலந்து கொண்டு பேசுவதற்கான வாய்ப்பு அளித்தமைக்காக நன்றி தெரிவித்துக்கொள்கிறேன். நம்முடைய தமிழகத்தில் இப்போது மிகப் பெரிய பிரச்சினையாக

* * தலைவரின் ஆணைப்படி நீக்கப்பட்டது.

இருப்பது, பருவ மழை பொய்த்ததால் ஏற்பட்ட வறட்சி நிலை. அந்த வறட்சி நிலை காரணமாக கிராமப் பொருளாதாரம் பெரிதும் பாதிக்கப்பட்டிருக்கிறது. மழை இல்லாததன் காரணமாக கிராமங்களில் விளைபொருட்கள் விளைச்சல் இல்லை. ஆகவே கிராமத்திலுள்ள விவசாயிகள் தங்கள் விளைச்சலுக்குக் குறைந்த அளவு விலை பெற்று அவதியுறுகிறார்கள். நல்ல விலை கிடைக்காமல் அவதிப்படுகிறார்கள். அதே நேரத்தில் நெல் விலை அதிகமாக இருக்கிறது. கரும்புக்கு நிர்ணயித்த விலையில் சீனி ஆலைகள் கூடவும் கொள்முதல் செய்யவில்லை. அவர்கள் பல இடங்களிலே கரும்புக்கு நல்ல விலையில்லாமல் உற்பத்தி செய்த கரும்பை அழித்துவிடுகிறார்கள். ஓர் புறம் பற்றாக்குறையாக இருக்கிறது. அதே சமயத்தில் விலை கிடைக்காமல் விளைந்ததை அழிக்கிறார்கள். அது மட்டுமல்ல, தஞ்சாவூரில் காவிரி நீர் சரிவர வராததால் ஏற்பட்ட வறட்சி நிலையும் இருக்கிறது. அத்துடன் விளைவுகள் இல்லாத நிலைமை ஏற்பட்டிருக்கிறது. உற்பத்திப் பொருள்களுக்கு நல்ல விலை கிடைக்கவில்லை. காரணம் தஞ்சை மாவட்டத்திலேயிருந்து நெல்லை மற்ற மாவட்டங்களுக்குக் கொண்டு வரக்கூடாது என்று இருக்கிறது. ஏகபோகமாக அரசு கொள்முதல் செய்ய வேண்டுமென்ற உத்தரவின் காரணமாக அங்கேயுள்ள விவசாயிகளுக்கு நல்ல விலை கிடைக்கவில்லை.

(முற்பகல் 11.40)

அதே நேரத்தில் பிற மாவட்டங்களில் அவற்றை உபயோகிப்பவர்கள் விலை அதிகமாக இருப்பதால், மிகவும் அவதியுறுகிறார்கள். கிராமப் பொருளாதாரம் முன்னேறினால்தான் இந்த நாட்டில் முன்னேற்றம் காண முடியும். நம்முடைய நாட்டில் 75 சதவிகிதம் கிராம மக்கள் இருக்கிறார்கள். கிராமங்களில் உள்ள மக்களுக்கு, அதிலும் பெரும்பாலான கூலி வேலை செய்கிற மக்களுக்கு மிகக் குறைந்த கூலிதான் கிடைக்கிறது. பெண்கள் 3 முதல் 6 ரூபாய் வரை ஒரு நாளைக்குப் பெறுகிறார்கள். ஆண்கள், 5 முதல் 10 ரூபாய்வரை ஒரு நாளைக்குப் பெறுகிறார்கள். அதுவும்கூட ஆண்டு பூராவும் கிடைப்பதில்லை, மாதம் பூராவும் கிடைப்பதில்லை. எனவே கிராமங்களில் உள்ள கூலி வேலை செய்கிறவர்கள் மிகவும் அவதியுறுகிறார்கள். அதனால் கிராமங்களைக் காலி செய்துவிட்டு, நகரங்களுக்கு வருகிறார்கள். இது நல்லதல்ல. ஆகவே கிராமங்களில் சிறு தொழில்களை ஏற்படுத்தி, அவர்களுக்கு நல்வாழ்வு அளிக்க வேண்டும். அப்போதுதான் அவர்களுக்கு விவசாய வேலை இல்லாத நேரத்திலும் அந்தத் தொழில்களின் மூலமாக நல்ல வருமானம் கிடைக்கும். அப்போதுதான் கிராமங்களில் உள்ள மக்கள் செழிப்பாக வாழ்க்கை நடத்தலாம். அவர்கள் நகரங்களுக்கு வருவதையும் தவிர்க்க முடியும்.





அடுத்து, சீனி ஆலைகள் ஒரு குறிப்பிட்ட விலையில் கரும்பைக் கொள்முதல் செய்கின்றன. ஆனால் பொது விற்பனையில் விற்கும் சீனியை டெண்டர் கோரி, அதன்மூலம் விற்பனை செய்கிறார்கள். ஆனால் டெண்டர்களை ரிஜெக்ட் செய்துவிட்டு, அதற்குக் கூடுதல் விலை அறிவிக்கிறார்கள். வேறு வழியின்றி அந்த வணிகர்கள் கூடுதல் விலைக்கு வாங்க வேண்டிய நிலை ஏற்பட்டிருக்கிறது. இன்றைய தினம் கூட்டுறவுத் துறையில்தான் சீனி ஆலைகள் இருக்கின்றன. அப்படியிருந்தும் கோரிய டெண்டர்களுக்குக் கொடுக்காமல், அதை மறுத்து, கூடுதல் விலைக்குக் கொடுக்கிறார்கள். டெண்டரில் கூறப்பட்டுள்ள விலை ஆலையைப் பாதிக்குமென்றால், மறு ஏலம் விட வேண்டுமே தவிர, எல்லா டெண்டர்களையும் மறுத்துவிட்டு, கூடுதல் விலை கேட்பது விலைவாசி ஏற்றத்திற்குக் காரணமாக இருக்கிறது. இதைத் தடுக்க வேண்டும்.

ஆலைகளுக்கு கோதுமை நிர்ணய விலைக்கு வருகிறது. ஆனால் அந்த ஆலைகளில் உற்பத்தியாகும் ரவை, மைதா ஆகியவற்றை நிர்ணயித்த விலைக்கு விற்பதில்லை. இது குறித்தும் ஆவன செய்ய வேண்டும்.

சத்துணவுத் திட்டம் நல்ல திட்டம்தான். ஆனால் அதை அமுல் நடத்துவதில் பெரிய ஊழல்கள் இருக்கின்றன. மாண்புமிகு சமூக நல அமைச்சரவர்கள் நேரில் திடீர் விஜயம் செய்து, அதைக் கண்டறிந்தார். 50 குழந்தைகளுக்கு உணவு போடுகிறோமென்று உணவுப் பொருள்களை வாங்கிக்கொண்டு, 20 குழந்தைகளுக்குப் போடுகிறார்கள். இப்படிப்பட்ட ஊழல்கள் களையப்பட வேண்டும். அதிலும் ஆசிரியர்களை சத்துணவு விநியோகத்திலிருந்து விடுவிக்க வேண்டும். ஏனென்றால் ஆசிரியர்கள் கல்வியைப் போதிப்பதில் கவனம் செலுத்த வேண்டும். இப்போது கல்வி கற்பிக்கப்படுவதில்லை. கிராமங்களில் கல்விக்கூடங்களில் படிக்கிறவர்களுக்கு, 4 ஆம் வகுப்புவரை படித்த மாணவர்களுக்கு ஒருசில வார்த்தைகளைக்கூட ஒழுங்காக எழுதத் தெரியாத நிலை இருக்கிறது. சிறு குழந்தைகளுக்கு ஆத்திசூடி போன்ற உலக நீதிகளைக் கற்பிக்க வேண்டும். ஒன்பது வயதுவரை கல்வியை வேறு மொழிகளில் கற்பித்தால் அது சிறந்ததல்ல. அது மன வளர்ச்சியையும், மூளை வளர்ச்சியையும் பாதிக்குமென்று நிபுணர்கள் சொல்லுகிறார்கள். இப்போது எங்கு பார்த்தாலும் ஆங்கிலத்தைக் கற்பிக்கும் நர்சரிப் பள்ளிகள் அமை

திருக்கின்றன. இது பிற்கால சந்ததிகளின் அறிவு வளர்ச்சியைப் பாதிக்குமென்று கருதுகிறேன். ஒன்பது வயதுக்குப் பின்னால் அவர்கள் எந்த மொழியை விரும்பினாலும் கற்கலாம். என்ஜினியரிங் துறையிலே, மருத்துவத் துறையிலே தமிழிலேயே கற்பிக்கப்பட்டால், இன்னும் சிறந்து விளங்குவார்கள் என்பதில் ஐயமில்லை. எத்தனையோ நாடுகளில் அவரவர்கள் தாய்மொழியில் தான் கல்வி பெறுகிறார்கள். நம்முடைய நாட்டில்தான் அந்நிய மொழியில் பயில்கிறோம். இந்த நிலை மாற வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

சென்னை நகரின் குடிநீர்ப் பிரச்சினையைத் தீர்க்க பல திட்டங்களைப் போட்டும், அவை செயல்படாமல் இருக்கின்றன. இந்த அளவில் குறைந்த செலவில் பழவேற்காடு ஏரியிலிருந்து தண்ணீர் கொண்டுவரும் திட்டத்தைப் பரிசீலிக்கலாம். அதற்கு 10 கோடி ரூபாய்தான் ஆகும். பழவேற்காடு ஏரியின் ஒரு பகுதி ஆந்திராவில் இருந்தாலும், அதற்கு வரும் நீர் வீணாகக் கடலில் சென்று சேருகிறது. அந்த நீர் வீணாகச் சென்று கடலில் கலக்காமல், சென்னைக்கு அந்தத் தண்ணீரைக் கொண்டு வர ஏற்பாடுகளைச் செய்யலாமென்று கருதுகிறேன்.

விருதுநகருக்கு அருகில் ஆனைக்குட்டம் என்ற இடத்தில் சிறிய அணை கட்ட மாண்புமிகு நீர்ப்பாசனத் துறை அமைச்சரவர்கள் 1980-ல் அடிக்கல் நாட்டியிருக்கிறார்கள். ஆனால் இன்றுவரை எந்தவித வேலையும் அங்கு நடக்கவில்லை. அந்த அணையைக் கட்டுவதால், 4,500 ஏக்கர் நிலங்களுக்குப் பாசன வசதி கிடைக்கும். விருதுநகரிலும் குடிநீர் தட்டுப்பாடு இல்லாமல் இருக்கும். இப்போது அணைக்கட்டிலிருந்துதான் குடிநீருக்காக நீர் ஏற்றம் செய்யப்படுகிறது. அங்கே அணையைக் கட்டினால், நிலத்தடி நீர் வற்றாமல் இருந்து, குடிநீர் தட்டுப்பாடும் விருதுநகரில் இல்லாமல் இருக்கும். இந்தத் திட்டத்தில் இதுவரையில் எந்தவித வேலையும் ஏன் செய்யவில்லை என்பது புரியவில்லை. அந்தத் திட்டத்தை ஏற்று நடத்த வேண்டும்.

அடுத்து, உள்ளாட்சித் தேர்தல்களை விரைவில் நடத்த வேண்டும். நகராட்சிகளிலும், மற்ற இடங்களிலும் சுகாதாரம் நன்கு பராமரிக்கப்படவில்லை. சுகாதாரக்கேடு எங்கும் இருக்கிறது. விருதுநகரில் வீடுகளில் உள்ள கழிப்பிடங்களில் உள்ள கழிப்பை வெளியிலே விட்டுவிடுகிறார்கள். அதனால் ரோடுகளிலே நடக்க முடியவில்லை. எத்தனையோ முறை ஆணையாளர் அவர்களிடம் சொல்லியும், இது குறித்து எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை. 'செப்டிக் டாங்க்' இருந்தால், இந்தப் பிரச்சினை இராது. உள்ளாட்சித்



தேர்தல்கள் நடந்தால்தான், நகராட்சிகளில் உள்ள இன்னல்களை அதிகாரிகளிடம் எடுத்துச் சொல்லி, தகுந்த நடவடிக்கைகளை எடுக்க ஏதுவாக இருக்கும். எனவே உள்ளாட்சித் தேர்தல்களை விரைவாக நடத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இன்றையதினம் வறட்சியின் காரணமாக மின் பற்றாக்குறை ஏற்பட்டிருக்கிறது. புனல் மின்சாரக் குறைவு ஏற்பட்டிருக்கிறது. அதே சமயத்தில் அனல் மின் நிலையங்களும் நிலக்கரி சப்ளை இல்லாமல் பாதிக்கப்பட்டிருக்கின்றன. இதன் காரணமாக சிமெண்ட் உற்பத்தி பெரிதும் பாதிக்கப்பட்டிருக்கிறது. மேலும் பல தொழில்களுக்கு நிலக்கரி இல்லாமையால், அங்கெல்லாம் சரியான அளவிற்கு வேலையில்லை. அதனால் தொழில் பாதிக்கப்பட்டு, வேலை இழப்பு ஏற்பட்டிருக்கிறது. இந்தமாதிரியான பாதிப்புகள் தமிழகத்திற்குப் புதிதல்ல. அடிக்கடி வருகின்றன. எனவே நீண்டகால, எதிர்கால நோக்கில் இந்தமாதிரி பற்றாக்குறை வாராமல் பல திட்டங்களைச் செயல்படுத்த வேண்டும். சூரிய சக்தியிலிருந்தும், கடல் அலைகளிலிருந்தும் மின்சாரம் எடுக்கும் திட்டத்தை ஆராய வேண்டும். கிராமங்களில் குடிநீருக்கும், விவசாயத்திற்கும் தண்ணீர் இறைக்க காற்றாடி இயந்திரங்களை உபயோகிக்க மானியம் கொடுக்கலாம் அல்லது கடன் உதவி அளிக்கலாம்.

(மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் தலைமை)

சாண எரிவாயுத் திட்டத்தைச் செயல்படுத்துபவர்களுக்கு மானியம் அளிக்கலாம். காற்று இயந்திரம், சாண எரிவாயு ஆகியவற்றின் மூலமாக கிராமங்களில் முன்னேற்றம் காண வசதியாக இருக்கும்.

அடுத்து, சாலை வசதிகளுக்குக் கணிசமான நிதி ஒதுக்கியிருப்பதை வரவேற்கிறேன். கிழக்குக் கடற்கரைச் சாலை அமைக்க ஒரு திட்டத்தை முன்வரைவு செய்திருக்கிறார்கள். இது முக்கியமான சாலை; ராணுவ முக்கியத்துவம் வாய்ந்தது. கடலில் உள்ள மீன் வளத்தைப் பெருக்க, அவற்றை நகரங்களுக்குக் கொண்டு செல்ல அந்தச் சாலை பெரிதும் உதவியாக இருக்குமென்று கருதுகிறேன். விளாத்திக்குளம், பெருநாழி என்ற இரண்டு ஊர்களையும் இணைக்கும் சாலையில் பாலம் இல்லாமல் இருக்கிறது. அங்கு பாலம் கட்ட வேண்டும். கிராமச் சாலைகள் இரண்டு மாவட்ட எல்லையில் இருந்தால், அதில் 2 மாவட்ட ஆட்சித் தலைவர்களும் கவனம் செலுத்தாமல் இருக்கிறார்கள். அதனால் இணைப்பு ஏற்படாமல் இருக்கிறது. அந்த இணைப்புகளை ஏற்படுத்த வேண்டும். அரியானா, பஞ்சாப் போன்ற மாநிலங்களில் போவதற்கு ஒரு சாலையும், வருவதற்கு ஒரு சாலையும் அமைத்து, அவ்

றுக்கு இடையில் உள்ள பகுதியில் யூகலிப்டஸ் மரங்களை வைத்திருக்கிறார்கள். பெருவாரியான மரங்களை நட்டிருக்கிறார்கள். அதேபோன்று நமது மாநிலத்திலும் சாலை ஓரங்களில் மரங்களை நட்டு வருகிறார்கள். அதை வரவேற்

(முற்பகல் 11-50)

கிறேன். கிழக்குக் கடற்கரை சாலையிலும், சென்னை-விழுப்புரம் சாலையிலும் இரு வழி சாலைக்கான வழிவகை செய்து நடுவில் மரங்களை நட வேண்டும்.

அடுத்து, மதுவிலக்கைப் பொறுத்தவரையில், மாண்புமிகு முதலமைச்சர் மிகத் தீவிரமாக மீண்டும் அதை அமல்படுத்துவேன் என்று மூதறிஞர் இராஜாஜி அவர்களின் பிறந்த நாளில் சொல்லியிருக்கிறார். கிராமப்புறத்திலுள்ள ஏழையெளிய மக்களின் நல்வாழ்வுக்கு இது மிகவும் அவசியம். மதுவிலக்கைத் தீவிரமாக அமல்படுத்தாமல் என்ன நன்மைகளைச் செய்தாலும் அவையெல்லாம் வீண் விரயம். இன்றையதினம் கிராமப்புறத்திலுள்ள மக்கள் தாங்கள் பெறும் பெருவாரியான வருவாயை குடிக்காகச் செலவிடுகிறார்கள். இதன் காரணமாக அவர்கள் வாழ்க்கையில் வளம் பெற முடியவில்லை.

அடுத்து, சட்டம்-ஒழுங்குப் பிரச்சினையைப் பொறுத்தவரையில், நம்முடைய காவல் நிலையங்களில் உள்ள காவலர்களின் எண்ணிக்கை மிகவும் குறைவாக இருக்கிறது. ஆறு போலீசார்தான் இருக்கிறார்கள். சில காவல் நிலையங்களில் இன்ஸ்பெக்டர், சப்-இன்ஸ்பெக்டர் மற்றும் 6, 7 காவலர்கள் இருக்கிறார்கள். ஆனால் பொதுவாக காவல் நிலையங்களில் காவலர்களின் எண்ணிக்கை மிக மிகக் குறைவு. எங்காவது குற்றம் நடைபெறும்போது, காவல் நிலையத்திற்கு 'போன்' பண்ணினால், அங்கு போதுமான காவலர்கள் இருப்பதில்லை.

**திரு. சோ. ஆறுமுகம் :** 10 பேர் 'கோரம்' இருக்க வேண்டும். 'கோரம்' இல்லாத நிலையில் அவையைத் தொடர்ந்து நடத்திக்கொண்டிருப்பது சரிதானா?

(மாண்புமிகு திரு. கா. இராசா முகமது அவர்கள் அவைக்கு வந்து அமர்ந்தார்கள்)

**திரு. வி. வி. வி. ஆனந்தம் :** 'போன்' பண்ணும்போதெல்லாம் காவலர் இல்லை என்று பதில் சொல்லுகிறார்கள். அதுபோல் பொது நிகழ்ச்சிகளுக்கு பாதுகாப்புக்காக காவலர்கள் தேவை என்றால் கூட பக்கத்துக் காவல் நிலையங்களிலிருந்து தான் வரவழைத்து பந்தோபஸ்து ஏற்பாடுகளைச் செய்கிறார்கள். 'போன்' பண்ணும்போதெல்லாம் ஒரே காவலர்தான் காவல் நிலையத்தில் இருக்கிறார். ஆகவே காவல் நிலையங்களில் காவலர்கள் எண்ணிக்கையை அதிகப்படுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.



அடுத்து, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஒன்றை அறிவித்திருந்தார்கள். அதாவது தலைநகரம் திருச்சிக்கு மாற்றப்படும் என்று அறிவித்திருந்தார்கள். ஆனால் இதுபற்றி ஆளுநர் உரையில் ஒன்றும் இல்லாதது கண்டு வருந்துகிறேன். இதை நிறைவேற்றுவதன் மூலம் நல்ல பலன் ஏற்படும். இத்திட்டத்தை விரைவில் அமுல்படுத்த வேண்டுமென்று நான் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

(மாற்றுத் தலைவர் திரு. சி. இராமலிங்கம் தலைமை)

அடுத்து, தர்மபுரி மாவட்டத்தைப் பொறுத்தவரை அது ஒரு பின்தங்கிய மாவட்டம். சேலத்திலிருந்து தர்மபுரிக்கு ஓசூர் வழியாக உள்ள ரெயில் பாதையை பிராட்கேஜ் பாதையாக மாற்ற வேண்டும். இது குறித்து மத்திய அரசிடம் தமிழக அரசு வற்புறுத்த வேண்டும். இந்த ரயில் பாதையை அமைக்கும்போதே, பிற்பாடு பிராட்கேஜ் ஆக மாற்றும் எண்ணத்துடன் பாலங்கள் எல்லாம் அதற்கேற்ற வகையில் கட்டப்பட்டன. ஆகவே இதை பிராட்கேஜ் ஆக மாற்றுவதால், அரசுக்கு அதிகமாகச் செலவு ஒன்றும் ஏற்படாது. இதனை நிறைவேற்றினால், தர்மபுரி மாவட்டத்திலுள்ள ஓசூரிலும் மற்ற இடங்களிலும் பெரிய பெரிய தொழில்கள் ஏற்பட வசதி ஏற்படும்.

அடுத்து, இராமநாதபுரம் மாவட்டத்தைப் பொறுத்தவரையிலும், அதுவும் ஒரு பின்தங்கிய மாவட்டம்தான். பொதுவாக ஒரு மாவட்டத்தில் தொழில்கள் பெருகினால்தான், அந்த மாவட்டம் வளம் பெறும். ஆகவே சேது சமுத்திரத் திட்டத்தை நிறைவேற்றுவதன் மூலம் அங்கு தொழில்கள் பெருக வாய்ப்பு ஏற்பட்டு, அந்த மாவட்டம் வளம் பெற முடியும் என்பதால், இத்திட்டத்தை உடனே நிறைவேற்ற வேண்டுமென்று இவ்வரசு வலியுறுத்த வேண்டுமென்று கேட்டுக்கொண்டு என் உரையை முடித்து அமைகிறேன்.

* **திரு. நீலநாராயணன் :** மாற்றுத் தலைவரவர்களே, இந்த ஆண்டு நடைபெற்றுக்கொண்டிருக்கிற ஆளுநர் உரையின் மீதான விவாதத்தில் என்னுடைய கருத்தைச் சொல்கின்ற வாய்ப்பினை அளித்தமைக்கு என்னுடைய நன்றியறிதலைத் தெரிவித்துக் கொள்கின்றேன். பொதுவாக ஆளுநர் உரை இந்த ஆண்டு அரசு நிறைவேற்றப்போகிற திட்டங்கள், அதனுடைய கொள்கை

கள், கோட்பாடுகள், இவற்றினை எடுத்து வைக்கின்ற ஓர் உரையாகவே மதிக்கப்பட்டு, அதன் மீது இங்கே விவாதங்கள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. ஆளும் கட்சியைச் சார்ந்தவர்கள் ஆளுநர் உரையைப் பாராட்டிப் பேசுவதும், எதிர்க் கட்சியைச் சார்ந்தவர்கள் இன்னின்ன செய்யத் தவறியிருக்கிறது இந்த அரசு, அவைகளைய செய்வதற்கு அரசு இன்னின்ன வகையில் செயல்பட வேண்டுமென்று சொல்லி அரசுக்கு ஊக்கமும், உற்சாகமும் அளிக்கும் வகையில் கருத்துக்களை எடுத்து வைப்பதும்தான் வழக்கம். அது தான் ஜனநாயகத்தில் ஒரு மரபாகவும் இருந்து வருகிறது. ஆகவே நான் எதிர்க் கட்சியிலே இருப்பவன் என்கிற முறையிலே சிலபல கருத்துக்களை இங்கே எடுத்து வைக்க விரும்புகிறேன். நான் அப்படி கருத்துக்களை எடுத்து வைக்கும்போது, ஆளும் கட்சித் தரப்பிலே இருப்பவர்கள் தயவுசெய்து ஆத்திரப்படாமல் நான் சொல்லுகின்ற கருத்துக்களைப்பற்றி யோசிக்க வேண்டுமென்று பணிவன்புடன் கேட்டுக்கொள்கிறேன். ஆளும் கட்சியினர் பாராட்டுவது என்பது அவ்வளவு பெரிதல்ல. காரணம் காக்கைக்கும் தன் குஞ்சு பொன் குஞ்சு என்று சொல்லுவார்கள். அந்த முறையிலே அவர்கள் பாராட்டு அமைந்திருந்தாலும் இருக்கக்கூடும். என்னைப் பொறுத்தவரையில், இந்த உரையைப் பொறுத்தவரையில், இரண்டு விஷயங்களுக்காக நான் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். அதில் ஒன்று தமிழகத்தினுடைய உயிர் மூச்சாக இருப்பது மொழிப் பிரச்சினை. அந்த மொழிப் பிரச்சினை பற்றி நல்லதொரு கருத்தை இந்த உரையிலே அவர்கள் எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். அதற்காக நான் பாராட்டுத் தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன். இந்த அவை நடைபெற்றுக்கொண்டிருக்கின்ற கால கட்டத்தை எண்ணிப் பார்க்கின்றபோது, ஆளும் கட்சித் தரப்பிலேயிருந்து கடந்த இரண்டு மூன்று நாட்களாகப் பேசப்பட்டு வருகின்ற பேச்சினைக் கணிக்கும்போது, உண்மையிலேயே இதுவரையிலே தமிழகத்திலே இருந்து வந்த நிலைமைகளை ஆளும் கட்சி மாற்றிக்கொண்டு, இன்றைய தினம் பகிரங்கமாக தாங்கள் யார் என்பதைக் காட்டித் தீர வேண்டிய கட்டாயத்திற்கு வந்திருக்கிறார்கள். இப்படி நான் சொல்வதிலே மாறுபட்ட கருத்து இருக்காது என்று நான் கருதுகிறேன். காரணம் என்ன என்பதை அவர்களே புரிந்து கொண்டிருப்பார்கள்.

(மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் தலைமை)

என்றாலும்கூட இன்றைய தினம் இந்த இந்தி பிரச்சினையைப் பற்றிப் பேசும்போது ஆளும் கட்சித் தரப்பிலேயிருந்தாலும் சரி, எதிர்க்கட்சித் தரப்பிலேயிருந்தாலும் சரி, எல்லோரும் சேர்ந்து ஒரே முகமாக கருத்துக்களை எடுத்துச் சொல்லுகின்ற சூழ்நிலை உருவாவது தமிழகத்தின்



அரசியலுக்கு இன்றைய ஆரோக்கியமான ஒரு சூழ்நிலை என்பதை தயவுசெய்து யாரும் மறந்துவிடக் கூடாது. இந்தி எதிர்ப்பினைப் பொறுத்தவரையில், கட்சிகளுக்குள்ளே இருக்கின்ற உணர்வுகள் ஒன்றுபட்ட தன்மையுடையதாக இருக்கும். ஆனால் அவற்றை நடைமுறைப்படுத்துவதிலே அவர்கள் சில அளவுகோல்களை வைத்துக் கொண்டிருக்கிறார்கள். அந்த அளவுகோலை வைத்துக்கொண்டு பார்க்கும்போது, திராவிட முன்னேற்றக் கழகத்தைப் பொறுத்தவரையில், திட்டவட்டமாக, தெளிவாக ஒன்றிரண்டு கருத்துக்களைத் தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன். எள்ளளவுக்கேனும் இந்தி கட்டாயப் பாடமாக இங்கே நுழையும் என்று சொன்னால், அதைத் தீவிரமாக எதிர்ப்பதற்கு திராவிட முன்னேற்றக் கழகம் என்றைக்கும் தயங்காது. எள்ளளவு என்பது கூட அல்ல, எள்ளின் மூக்கு நுனி அளவுக்குக் கட்டாயமாக இந்தி திணிக்கப்படும் என்கிற சூழ்நிலை ஏற்பட்டால், அது யாரால் இருந்தாலும் சரி, அதை எதிர்ப்பதற்கு திராவிட முன்னேற்றக் கழகம் தயங்காது என்பதை நான் இங்கே சுட்டிக்காட்ட, ஆசைப்படுகிறேன், நேற்றையதினம் மாண்புமிகு உறுப்பினர் ஒருவர் பேசியபோது, "இந்தி எதிர்ப்பிலே உங்களுடைய நிலை என்ன ?" என்று கேட்டதை நினைக்கும்போது, தமிழகத்தையும் அதனுடைய ஒப்பற்ற தலைவர் கலைஞர் அவர்களுடைய இந்தி எதிர்ப்பு உணர்ச்சியையும் அவர் மறந்து விட்டாரோ அல்லது நினைக்கவில்லையோ என்பதை நான் அறியேன். அந்த உறுப்பினர் தன்னுடைய பேச்சை சந்தேகப்படுகின்ற அளவுக்கு அமைத்துக்கொண்டதற்காக உண்மையிலேயே நான் வருந்துகிறேன். நிச்சயமாக, திட்டவட்டமாக ஒன்றை நான் சொல்கிறேன். காமன் பண்டிகையிலே வருகின்ற எரிந்த கட்சி எரியாத கட்சி என்கின்ற லாவணியைப் பாடுவதற்காக நான் இதைச் சொல்லவில்லை. இந்தி எதிர்ப்பு என்பது ஏகோபித்த ஒரே குரலாக இருக்க வேண்டும். உங்களுடைய பேச்சால் விபரீதங்கள், சின்னாபின்னங்கள் ஏற்பட்டு விடக்கூடாது. நான் இந்த நேரத்தில் கடந்த கால வரலாற்றினுள்ளே நுழைய விரும்பவில்லை. யார் யார் பாளை சிறையிலே இருந்தார்கள். யார் யார் விதி விலக்குக் கேட்டார்கள் என்கின்ற எண்ணங்களையெல்லாம், உணர்வுகளையெல்லாம் அடுக்கடுக்காக எடுத்து வைத்து திராவிட முன்னேற்றக் கழகம் எந்த அளவுக்கு முனைப்பாக இருக்கிறது என்பதைச் சுட்டிக்காட்டு

(நண்பகல் 12-00)

வதற்காக நான் இங்கு வரவில்லை. பிரச்சினை பொதுப் பிரச்சினையாக இருப்பதால், எந்தக் கட்சியாக இருந்தாலும், இந்த மொழிப் பிரச்சினையிலே யாருடைய மனதும் புண்படாத வகையிலே நாம் நம்முடைய பேச்சை அமைத்துக் கொள்ள வேண்டும் என்பதை நான் தெளிவாக வலியுறுத்

கடமைப்பட்டிருக்கிறேன். இங்கே காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த நண்பர் திரு. இராமமூர்த்தி அவர்கள் சுட்டிக்காட்டினார்கள். "நீங்கள் ஆளுநர் அவர்கள் உரையிலே இந்தப் பிரச்சினைபற்றிப் பேசுகின்றபோது அல்லது குறுக்கிடுகின்றபோது 'வலியுறுத்த விழைகின்றது' என்று சுட்டிக்காட்டினார்களே தவிர, திட்டவட்டமாக இந்திபற்றிய உங்கள் கருத்து என்ன என்பதைப் பற்றி ஏன் சொல்லவில்லை" என்ற பொருள் படக்கூடிய அளவுக்கு அவர்கள் கேட்டிருக்கிறார்கள். உண்மையிலேயே அது கேட்கப்பட வேண்டிய கேள்விதான். நானும் ஆளும் கட்சியைப் பார்த்துக் கேட்கிறேன், "திட்டவட்டமாகத் தெளிவாக உங்களுடைய கருத்தை எடுத்து வையுங்கள், உங்களுடைய பின்னாலே நின்று போராட இங்கே இருக்கும் திராவிட முன்னேற்றக் கழகம் இரட்டைக் குழல் துப்பாக்கியாக துணை நிற்கத் தயாராக இருக்கிறது." அதுமட்டுமல்ல, மற்ற கட்சிகளும் தங்களுடைய ஆதரவை தரத் தயாராக இருக்கும் இந்த நிலைமையிலே எதற்காக அரசு பயந்துகொள்ள வேண்டும்? எதற்காக நெளிவு சுழிவோடு வார்த்தைகளை அமைத்துக் கொள்ள வேண்டும்? இங்கே திரு. இராமமூர்த்தி அவர்கள் எடுத்துக்காட்டும் அளவுக்கு நிலைமைகள் இருப்பதற்காக நான் பரிதாபப்படுகின்றேன். இருந்தாலும் நிச்சயமாக நல்லதொரு சூழ்நிலை இந்த மொழிப் பிரச்சினை குறித்து இருக்கிறது என்பதைப் பார்க்க மகிழ்ச்சியடைகிறேன். இதில் தகுந்தவாறு ஒரு முடிவு எடுப்பது இங்கே இருக்கும் அத்தனை கட்சிகளின் பொறுப்பும் கடமையுமாகும் என்பதையும் நான் சுட்டிக் காட்டுகிறேன்.

அடுத்தபடியாக, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் சத்துணவுத் திட்டத்தைப் பற்றி இங்கே பேசப்பட்டது. எங்கள் கட்சியும் சேர்ந்துதான் பாராட்டியிருக்கிறது. அது நல்ல திட்டம் தான். அதை யாரும் மறுக்கமாட்டார்கள் என்று நான் நம்புகிறேன். இதை வரவேற்கமாட்டோம் என்று யாரும் சொல்லவும் மாட்டார்கள். ஆனால் ஆளுநர் அவர்களின் உரையிலேகூட 3 பக்கங்களுக்குக் குறையாமல் இந்தத் திட்டத்தைப்பற்றிப் பாராட்டியிருக்கிறார்கள். பாராட்ட வேண்டியதுதான். அதை நான் மறுக்கவில்லை: இன்னும் அதிகமாக என்னென்ன வார்த்தைகள் உண்டோ அத்தனையும் சேர்த்து பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறோம். ஆனால் பாராட்டுகின்ற போது, ஏற்படுகின்ற சில நிலைமைகளை இந்த அவையினுடைய கவனத்திற்குக் கொண்டுவரக் கடமைப்பட்டிருக்கிறேன். பள்ளியிலே மாணவர்களுக்கு விடுமுறை நாள் வருகின்றபோது, அதற்கு முன் தினமே சத்துணவை அவர்களுடைய கரங்களிலே அவர்கள் சாயந்திரம் வீட்டுக்குப் போகும்போது கொடுத்து அனுப்பும் பழக்கத்தை இந்த அரசு ஏற்படுத்தி இருக்கிறது என்று ஆளுநர் அவர்களின் உரையிலே சுட்டிக்காட்டியிருக்கிறார்கள். அதே நேரத்தில்,



சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு அனுப்பியிருக்கிறது. அந்த சுற்றறிக்கை எண் 1101/82, கல்வி இலாக்காவிலிருந்து சென்றிருக்கிறது. "விடுமுறை நாளுக்கு முன்னாள் அந்தக் குழந்தைகளுக்கு இனிப்பு வழங்குங்கள், அது போதும்" என்று அதிலே சுட்டிக்காட்டப்பட்டிருக்கிறது. ஆனால், எது இப்போது உண்மையிலே நடைபெற்றுக்கொண்டிருக்கிறது? அரசு சுற்றறிக்கையிலே சொல்லியிருப்பதுபோல, ஞாயிற்றுக்கிழமை விடுமுறை என்று சொன்னால், சனிக்கிழமை மாலையே இனிப்பு வழங்குகிறார்களா அல்லது சத்துணவு வழங்குகிறார்களா, எதைக் கொடுக்கிறார்கள் என்று எனக்குப் புரியவில்லை.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: ஞாயிற்றுக்கிழமைகளிலே இனிப்பை வழங்கவில்லை. ஞாயிற்றுக்கிழமைகளிலேயும் சாப்பாடுதான் போடுகிறார்கள். முக்கியமான பண்டிகை நாட்கள் என்று 19 நாட்களைப் பொறுக்கி, அதற்கு முந்திய நாள், பிந்திய நாள் பண்டிகையாக இருந்தால், இனிப்பு போடச் சொல்லியிருக்கிறோம். ஞாயிற்றுக்கிழமைகளில் எல்லாம் சாப்பாடுதான் போடுகிறார்கள்.

திரு. நீலநாராயணன்: அந்த அரசாணையிலே 'விடுமுறை நாள்' என்றுதான் இருக்கிறது.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: இது நாடு பூராவும் பரவலாக நடைபெறும் திட்டம். இத்திட்டத்தைப்பற்றி கவர்னர் அவர்களின் உரை மூலமாகத் தெரிந்துகொள்ள முயல்வது வேதனையாக இருக்கிறது.

திரு. நீலநாராயணன்: அது சரிதான் இருந்தால், வரவேற்கிறோம். ஓராண்டு காலமாக இந்தத் திட்டம் நடைமுறையிலே இருக்கிறது. அதனுடைய விளைவாக பள்ளிக் குழந்தைகள், சிறார்கள் இன்றைக்கு சத்துணவு பெற்று புஷ்டியோடு வாழும் நிலைமையை பெற்றிருக்கிறார்கள். ஆனால், மற்றொன்றையும் நாம் எண்ணிப்பார்க்க வேண்டும். இந்த அரசு இந்தத் திட்டத்தை அவசர அவசரமாகச் செயல்படுத்தியதன் விளைவோ அல்லது ஒழுங்காக இந்தத் திட்டம் செயல்படுவதற்குரிய நேரம் இல்லாத காரணத்தாலோ என்னவோ ஒரு குறை ஏற்பட்டிருக்கிறது. அந்தக் குறையை நான் இங்கே சுட்டிக்காட்ட விரும்புகிறேன். பிள்ளைகள் கல்விக்கூடங்களுக்கு கல்வி கற்கச் செல்கிறார்கள். அங்கே அவர்களுக்கு சத்துணவு கொடுப்பதை 'வேண்டாம்' என்று சொல்லவில்லை. ஆனால், சத்துணவோடு கூட அவர்களுக்கு எந்த அளவுக்குக் கல்வி கொடுக்கப்படுகிறது [illegible]

ஆண்டிலே கல்வி கொடுக்கப்பட்டது என்பதைப் பார்த்தால், கல்வி கற்பிக்க வேண்டிய ஆசிரியப் பெருமக்கள் கல்விக் கூடத்திலே இல்லை. அவர்கள் சமையற் கூடங்களிலேதான் இருக்கிறார்கள், சந்தைக் கடையிலே இருக்கிறார்கள், காய்கறிக் கடைகளிலே இருக்கிறார்கள். இப்படிப்பட்ட நிலைமைகள் பள்ளிக்கூடங்களிலே ஏற்பட்டிருக்கிறபோது, பிள்ளைகள் எங்கே இருப்பார்கள்? விளையாட்டுத் திடலிலே இருக்கிறார்கள், மரத்தடியிலே இருக்கிறார்கள், அவர்கள் கண்ட கண்ட இடங்களிலே விளையாடிக்கொண்டிருக்கிறார்கள். இந்தச் சூழ்நிலை ஏற்படும் என்று கருதித்தான் ஆசிரியர்கள் ஒருமுகமாகப் போராடினார்கள். "எங்களை அந்த வேலையிலிருந்து விடுவித்து விடுங்கள். தயவுசெய்து குழந்தைகளுக்குக் கல்வி அளிக்கும் பெரும் பொறுப்பினை நாங்கள் ஏற்றுக்கொண்டிருக்கிறோம். எங்களுக்கு இந்தப் பொறுப்பை அளிக்காதீர்கள்" என்று மன்றாடினார்கள். எந்த அளவுக்கு அந்தக் கோரிக்கையை இந்த அரசு செயல்படுத்தியிருக்கிறது என்று தெரியவில்லை. நான் ஆசிரியர் ஒருவரைப் பார்த்துக் கேட்டேன். இந்தப் பணி எப்படி நடைபெறுகிறது என்று கேட்டபோது, மிகவும் சுருக்கமாக பாரதியாருடைய பாடல் ஒன்றை உதாரணத்திற்காகச் சொல்லிவிட்டு அவர் போய்விட்டார்.

"செருப்புக்குத் தோல் வேண்டி செல்லக்குழந்தையை உரிப்பதுண்டோ?" என்று அந்தப் பாடலைச் சொல்லிவிட்டு சென்றுவிட்டார். ஆகையால் இந்தப் பணியைச் செய்ய ஆசிரியர் சமுதாயத்திற்குப் பதிலாக வேறு ஆட்களைப் போட வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். இந்த அறிக்கையிலே சொல்லியிருக்கிறார்கள், "1 லட்சத்திற்கு மேற்பட்டவர்கள் புதிதாகப் போடப்பட்டிருக்கிறார்கள். இருந்தாலும் போதவில்லை. போதாததால் ஆசிரியர்கள்தான் இந்த வேலையையும் கவனிக்க வேண்டும்" என்று சொல்கிறார்கள். மேலும் இப்போது 35 ஆயிரம் பேர்களை இந்த வேலையில் அமர்த்தவிருக்கிறார்கள் என்று அறிக்கையின் மூலம் அறிய முடிகிறது. அந்த உறுதிமொழி நிறைவேற்றப்பட்டால், ஒருவேளை ஆசிரியர்கள் சுமை குறையலாம். ஆகவே, வெகுவிரைவிலேயே அந்த உறுதிமொழியை நிறைவேற்ற வேண்டும், அதை நிறைவேற்றி நல்லமுறையில் இந்தத் திட்டம் செயல்படச் செய்ய வேண்டும்



அதோடுகூட மற்றொன்றையும் தெரிவிக்க விரும்புகிறேன். ஆளுநர் அவர்களின் உரையிலே யார் இதைப் பாராட்டிக்கொண்டிருக்கிறார்கள் என்பதைப் பற்றியெல்லாம் சொல்லியிருக்கிறார்கள். நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் திரு. சுவாமிநாதன் அவர்கள் கூட இந்தத் திட்டத்தை வெளி மாநிலங்களிலே இருக்கும் அரசுகள் கூட எப்படி எப்படி இதைப் பாராட்டியிருக்கிறது என்று மிகவும் அழகாக சுட்டிக்காட்டினார்கள். அதே சமயத்திலே ஒன்றை இந்த அவையினுடைய கவனத்திற்கு நான் கொண்டுவருகிறேன். 'ஆனந்த விகடன்' பத்திரிகையிலே 13 மற்றும் 19 ஆம் தேதிகளிலே நாட்டினுடைய பிரதமர் இந்திரா காந்தி அவர்களைப் பேட்டி கண்டு சகோதரி சிவசங்கரி அவர்கள் எழுதியிருக்கிறார்கள்.

(மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் தலைமை)

(பிற்பகல் 12-10)

இந்தத் திட்டத்தைப்பற்றி வெகுவாக அந்த அம்மையாரிடம் அவர்கள் கூறியிருக்கிறார்கள். அம்மையார் அவர்களும், "நல்ல திட்டம்தான், ஏற்றுக்கொள்கிறேன். ஆனால் இது இப்போது மட்டும்தான் வந்திருக்கிறது என்று கருதாதீர்கள். இதற்கு முன்னாலேயே நானும்கூட பல இடங்களில் இந்தத் திட்டத்திற்கு அடிகோலியிருக்கிறேன்" என்று கூறியிருக்கிறார்கள். "அப்படியொரு நல்ல திட்டத்தை நீங்கள் ஏன் நாடு பூராவும் விரிவாக்கக்கூடாது?" என்று அம்மையாரைப் பார்த்து திருமதி சிவசங்கரி அவர்கள் கேட்டிருக்கிறார்கள். அதற்கு இந்தியப் பிரதமர் அவர்கள் சொன்ன பதில் 'ஆனந்த விகடன்' பத்திரிகையில் வந்திருப்பதை அப்படியே சொல்கிறேன். நீங்களும் சிந்திக்க வேண்டும் என்பதற்காகத்தான் சொல்லுகிறேன்.

"கேள்வி.: இவ்வளவு நல்ல திட்டத்தை நீங்கள் நாடு முழுவதும் ஏன் அமுல்படுத்தவில்லை?

அதற்குப் பிரதமருடைய பதில்: "அதற்குக் காரணம் இருக்கிறது. இந்தியா மாதிரி பெருமளவிற்கு ஏழைகள் உள்ள நாட்டில் எதையும் சிந்தித்து நிதானமாக நடைமுறைக்குக் கொண்டுவர வேண்டும். இன்று ஒருநாள் பொழுதை மட்டும் நினைக்காமல் எதிர்காலத்தைப்பற்றிச் சிந்திக்க வேண்டும். தொழில் கூடம் போன்றவற்றை அமைத்து ஏதேனும் ஒரு கூடுதலான வரும்படி கிடைக்கச் செய்வதால் கால ஓட்டத்தில் அதிக நன்மை பயக்கும் என்று நாங்கள் நினைத்து செயல்படுத்துகிறோம். இருப்பதை வாரி இறைத்துவிட்டு நாளை ஒன்றுமில்லை என்ற நிலைமையை விட நிதானமாக

ஒவ்வொரு நாளாக முன்னேறுவது முக்கியம்." என்று பிரதமர் அவர்கள் கட்டிக்காட்டியிருக்கிறார்கள். இதற்குள்ளே புகுந்து விவாதம் செய்ய விரும்பவில்லை.

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :** மாண்புமிகு தலைவர் அவர்களே, சத்துணவுத் திட்டத்தைப்பற்றி பிரதமர் அவர்களுடைய கருத்துக்களை உறுப்பினர் அவர்கள் சொன்னார்கள். பிரதமர் அவர்கள் மட்டுமல்லாமல், வேறு சிலரும் அப்படிச் சொல்லியிருக்கிறார்கள். "தொழில் ஆரம்பிக்கலாமே, ஏன் இப்படி செலவு செய்கிறார்கள்?" என்று கேட்கிறார்கள். தொழில் ஆரம்பிக்காமல் இல்லை. தொழில் துறை தொழிலை ஆரம்பித்து அதற்கான காரியங்களைச் செய்து கொண்டிருக்கிறது. அதற்கும் மேலாக கூடுதலாக செய்யப்படும் திட்டம்தான் சத்துணவுத் திட்டம். தொழில் வளர்ச்சிக்காக ஒதுக்கப்பட்ட நிதியை எடுத்து சத்துணவுத் திட்டத்திற்காகப் பயன்படுத்தவில்லை. அப்படிச் சொல்லுவது தவறான அபிப்பிராயம். இங்கே இருக்கின்றவர்கள் சொன்னாலும், டில்லியிலே இருக்கின்றவர்கள் சொன்னாலும், அது சரியில்லை. திராவிட இயக்கத்தைச் சேர்ந்தவர் மாண்புமிகு உறுப்பினர் என்பதால, ஒன்றை அவருக்குச் சொல்கிறேன். திராவிட இயக்கம் என்பது இந்த நாட்டிலே இருக்கின்ற பெரும்பான்மையான மக்களின் நலனில் அக்கறை கொள்ளும் இயக்கமாகும். திராவிட இயக்கத்திற்கு சமூக நீதிதான் முக்கியமானது, மற்றவர்கள் அடுத்தபடியாகத்தான். பொருளாதாரத் துறை நிபுணர்களில் இரு பிரிவினர் உண்டு. சமூக நீதிக்கு முதலிடம் தருவது நல்லது என்று கருதும் பொருளாதார அறிஞர்களும் இருக்கிறார்கள். அந்த அறிஞர்களுடைய கருத்தைப் பார்க்கும்போது, அது திராவிட இயக்கத்திற்குச் சரியாகப் பொருந்தி வருகிறது. பொருளாதார முன்னேற்றத்திற்கு முதலிடம் தந்தால் என்ன கதியாகும் என்பதற்கு எடுத்துக் காட்டாக இருப்பதுதான் இந்திய நாடு. சமூக நீதியை மறந்துவிட்டு பொருளாதார அடிப்படையில் எந்தத் திட்டத்தை நிறைவேற்றினாலும், இந்தியா போன்ற நாட்டில் ஏழ்மை, வறுமைதான் இருக்கும், உண்மையான பொருளாதார முன்னேற்றம் இருக்காது என்பதை இந்த மன்றத்தின் மூலமாக பிரதமர் உட்பட அத்தனை பேருக்கும் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. நீலநாராயணன் :** இது பிரதமருடைய குற்றச்சாட்டு, என்னுடைய குற்றச்சாட்டு அல்ல. நான் சொல்ல வந்தது எந்த நிதியை அதற்காக ஒதுக்குகிறார்கள் என்று கேட்க அல்ல. அப்படி நடைபெறக்கூடிய காரியம் நிரந்தரமாக நடைபெறுவதற்குரிய வழிவகைகளைச் செய்ய வேண்டும் என்பதற்காகத்தான் சொல்கிறேன். அதற்கு முன்னதாக மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் குறுக்கிட்டு கூறியிருக்கிறார்கள். இது ஒரு நல்ல திட்டம்தான்.



**திரு. ஜி. சுவாமிநாதன் :** துணைத் தலைவர் அவர்களே, நான் பேசுகின்றபோது ஒன்றைச் சொன்னேன். இதற்காக ஆகும் செலவு ரெவின்யூ எக்ஸ்பண்டிச்சர் அல்ல, டெவலப்மென்ட் எக்ஸ்பண்டிச்சர்தான் என்பது அந்தக் கருத்து. யுனெஸ்கோ மூலமாக

"It can be considered, it should be considered to be developmental expenditure and not a revenue expenditure"

என்று இது போன்று குழந்தைகளுக்கு சத்துணவு வழங்கும் செலவைப்பற்றிக் குறிப்பிட்டிருக்கிறது. ஏனென்றால் எவரும் குழந்தைகளுக்குச் சரியான உணவு இடுவது என்பது, நாட்டுக்கு முதலீடு எவ்வளவு முக்கியமோ அதுபோல முக்கியமானது. குழந்தைகளுக்கு உணவு இடுவது என்பது நல்ல தொழிலாளர்களை உருவாக்குவது போல ஆவதால், டெவலப்மெண்ட் எக்ஸ்பெண்டிச்சர் என்று சொல்லி உலக நாடுகள் அத்தனைக்கும் சர்க்குலர் அனுப்பியிருக்கிறார்கள். அங்குள்ள பொருளாதார நிபுணர்கள் ஆராய்ந்து இந்தக் கருத்தை வெளியிட்டிருக்கிறார்கள் என்பதை மாண்புமிகு உறுப்பினர் திரு. நீலநாராயணன் அவர்களுக்குத் தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்:** துணைத் தலைவர் அவர்களே, இன்னுமொரு கருத்தைச் சொல்கிறேன். நம் நாட்டைப் பொறுத்த வரையில், ஜனத்தொகைப் பெருக்கம் ஒரு தடையல்ல. சத்துணவு இல்லாத காரணத்தாலே, மூளை வளர்ச்சி இல்லாமல் "சப்-ஸ்டாண்டர்ட் சிட்டிசன்ஸ்" அதிகமாகி இருக்கிறார்கள் என்பதுதான் மிக முக்கியமான பிரச்சினை. அப்படிப்பட்டவர்கள் பல்வேறு சந்தர்ப்பங்களில் இந்த நாட்டுக்கு எதிர்பார்க்க முடியாத அளவிற்குப் பெருங்கேடுகளைச் செய்து கொண்டிருக்கிறார்கள். சப்-ஸ்டாண்டர்ட் சிட்டிசன்ஸ் என்று பிரச்சினையை அடிப்படையாக வைத்துப் பார்க்கும்போது, இது மக்கள் தொகை பெருக்கப் பிரச்சினையை விட பேராபத்து விளைவிக்கும் என்பது அறிஞர்கள், மருத்துவர்கள் ஆகியவர்களுடைய கருத்தாகும். அந்த அடிப்படையிலே பார்க்கும்போது, சத்துணவுத் திட்டம் என்பது பெரிய ஆபத்திற்கு எதிராக முக்கியமான ஒரு திட்டத்தை நிறைவேற்றுகிறோம் என்று பொருள். பொருளாதார நிபுணர்கள் இந்த அடிப்படையிலே பார்க்கமாட்டார்கள். அவர்களும் இந்த அடிப்படையிலே பார்க்க வேண்டும் என்பதற்காகத்தான் இந்தச் சந்தர்ப்பத்தில் சொல்லுகிறேன்.

**திரு. நீலநாராயணன் :** நல்லதொரு பிரச்சினையைப் பற்றிப் பேசிக் கொண்டிருக்கிறோம். இதை ஒரு விவாதமாக ஆக்கக்கூடாது என்று நான் கருதுகிறேன். நான் சொல்ல விரும்புவதெல்லாம் இந்தத் திட்டம் நீண்ட நெடு நாட்களுக்கு நீடித்திருக்க வேண்டும் என்பதற்காகத்தான் மாண்புமிகு

உறுப்பினர் திரு. சுவாமிநாதன் அவர்கள் ஒன்றைச் சுட்டிக் காட்டினார்கள். இதற்காக உலக நிறுவனங்களிடமிருந்து நிதியுதவி பெறப்படுகிறதா என்பது இந்த அறிக்கையிலே இல்லை. எப்படியாவது யார். யாரிடமிருந்து பெற்றுத் தீர வேண்டுமோ அவர்களிடமிருந்து பெற்றுத் தீர வேண்டிய ஏற்பாடுகளைச் செய்ய வேண்டும். அந்த ஏற்பாடுகளை யெல்லாம் தெரிந்துகொள்வதற்காகத் தான் நான் இதைக் குறிப்பிடுகிறேன். பிரதமர் அவர்கள் சொல்லியிருப்பதைப் போல, இன்றைக்கு இருப்பதைச் செலவழித்துவிட்டு நாளைக்கு இருக்காது என்ற அவல நிலை இருக்கக் கூடாது. ஆகவே இந்தத் திட்டத்தை நிரந்தர மாக்குவதற்கான முயற்சியை எடுக்க வேண்டும். அதற்காக என்ன முயற்சி செய்து கொண்டிருக்கிறார்கள் என்று கேட்க விரும்புகிறேன். இந்தத் திட்டத்தை எதிர்ப்பதாக தயவுசெய்து கருத வேண்டாம்.

அடுத்து, குடிநீர் பிரச்சினை பற்றிப் பேச விரும்புகிறேன். அதைப் பற்றிப் பல பேர் பேசியிருக்கிறார்கள். சென்னையைப் பொறுத்தவரையில், குடிநீர்ப் பிரச்சினை ஓரளவு தீர்ந்து விட்டது என்று சில பேர் சொல்கிறார்கள். குடிநீர்ப் பற்றாக்குறை கிடையாது என்று இந்த மன்றத்திலே சில பேர் பேசியிருக்கிறார்கள். ஆனால் ஆளுநர் அறிக்கையிலே ரூ. 17.50 கோடி செலவில் 75,000 துளைக் கிணறுகள், குழாய்க் கிணறுகள், ஆழ் கிணறுகள், கை பம்புகள், ஆகியவை நிறுவுவது போன்ற நடவடிக்கைகளில் அரசு ஈடுபட்டிருப்பதாகக் கூறப்பட்டிருக்கிறது. இந்த அறிக்கையிலே இருப்பதால் ஏற்றுக்கொள்கிறோம். ஆனால் அதே சமயத்தில் மார்ச் மாதத்தில் பள்ளிக் கூடங்கள் சீக்கிரமாகத் தேர்வுகளை நடத்தி விடுமுறை விட வேண்டும் என்றும், பல்கலைக் கழகம் சீக்கிரமாக தேர்வுகளை முடித்துக்கொண்டு விடுமுறை விட வேண்டும் என்றும் சொல்லியிருப்பதாகச் செய்திகள் வந்த வண்ணம் இருக்கின்றன. எந்த அளவுக்கு இந்த அரசு குடிநீர்ப் பிரச்சினையில் ஆக்கப்பூர்வமான நடவடிக்கைகளை எடுத்திருக்கிறது என்பதை எண்ணிப் பார்க்க வேண்டும் என்பதற்காகத்தான் இதைச் சுட்டிக் காட்டுகிறேன். நேற்றைய தினம் கூட திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பிலே குடிநீர்ப் பிரச்சினையை தீர்க்க வேண்டும் என்றும், அந்தப் பணியிலே அரசின் கவனத்தை ஈர்க்க வேண்டும் என்பதற்காகவும் சென்னையில் உள்ள எல்லா தி. மு. க. எம். எல். ஏ. க்களும், எங்கள் மாவட்டச் செயலாளர் அவர்களும் சேர்ந்து போராடி சிறை சென்றிருக்கிறார்கள். அவர்களையெல்லாம் எங்கே அடைக்கப் போகிறார்கள் என்பதை அறிவதற்காக நேற்றைய தினம் நான் காவல் துறை கமிஷனர் அலுவலகம் சென்று ஒரு அதிகாரியைச் சந்தித்து "இவர்களை எங்கே கொண்டு செல்லப் போகிறீர்கள்? சென்னை மத்திய சிறைச்சாலைக்கா அல்லது வேறு எங்காவது கொண்டு செல்லப் போகிறீர்களா?" என்று கேட்டேன். "சென்னை சிறைச்சாலையில் உள்ள குடிநீர்ப் பிரச்சினையைப்பற்றி எங்களுக்குத் தெரியாதா? வேறு எங்கேயாவது அனுப்ப வேண்டுமா என்பது சாயங்காலம்தான் தெரியும்" என்று கூறினார்கள். பிறகு சாயங்காலம் விடுதலை செய்துவிட்டார்கள். இதை எதற்காகச் சொல்கிறேன் என்றால், குடிநீர்ப் பிரச்சினை இன்னும் தீர்க்கப்படாமல் இருக்கிறது என்பதைச் சுட்டிக்காட்டுவதற்காகத்தான். அத்தியாவசியமாகத் தேவைப்படக் கூடிய இடங்களிலேகூட இந்தப் பிரச்சினை எப்படியெப்படி சுற்றி வந்து கொண்டிருக்கிறது என்பதை இந்த அவையின் மூலமாக இந்த அரசு உணர்ந்துகொள்ள வேண்டும் என்பதற்காகத்தான் இதைச் சுட்டிக் காட்டுகிறேன். விரைவாக, இதற்கு நடவடிக்கைகளை இந்த அரசு எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.



(பிற்பகல் 12-20)

அதற்கு அடுத்து வறட்சி. வறட்சியைப் பற்றி இங்கே பரவலாகப் பேசப் பட்டிருக்கிறது. அதைப்பற்றி நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் திரு. இராமலிங்கம் அவர்கள்கூட நேற்றைய தினம் விரிவாக எடுத்துக் கூறினார்கள். "1965-ல் பஞ்சம் வரவில்லையா? 1973-லே வறட்சி ஏற்படவில்லையா? இப்போது அதுபோல் ஏற்பட்டிருக்கிறது. ஆக இது புதிதாக வந்து விட வில்லை" என்றார்கள். இப்படியெல்லாம் அவர்கள் சொல்லிக் கொண்டிருந்தார்கள். அது இயற்கையாக வந்து கொண்டிருப்பதுதான். அது தானாகவே சமாளிக்கப்படும் என்ற வகையிலே இங்கே சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். நான் சொல்ல வருவது, இயற்கை உற்பாதத்தால் வறட்சி எப்போது ஏற்படும் என்று சொல்ல முடியாது. அது எந்த சமயத்திலும் வரலாம். கடந்த காலத்திலே வந்திருக்கிறது. இப்போதும் வந்திருக்கிறது. அது அரசினுடைய குற்றமல்ல. ஆனால் இருக்கின்ற அரசு இந்த வறட்சியைப் போக்குவதற்கு, நிவாரணம் காண்பதற்கு என்னென்ன வழிவகைகளைக் கடைப் பிடித்திருக்கிறது, என்னென்ன முறைகளைக் கையாண்டு வருகிறது என்பதைத்தான் எண்ணிப் பார்க்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். திராவிட முன்னேற்றக் கழக அரசு இந்த மாநிலத்தை ஆண்டு கொண்டிருந்தபோது, பஞ்சம் ஏற்பட்டது. வறட்சி ஏற்பட்டது. அப்போது போர்க்கால நடவடிக்கை போல என்னென்ன முறைகளிலே பணியாற்றியது என்பதை சரித்திரம் கூறிக் கொண்டிருக்கிறது. அந்த சரித்திரத்தை நினைவுபடுத்துகிறேன். இப்போது நிலவரம் எப்படி இருந்து கொண்டிருக்கிறது? இந்த நாட்டிலே இருக்கின்ற பிரச்சினைகளுக்கு ஆளும் கட்சி மட்டும் தானா பொறுப்பு என்று நேற்றைய தினம் கேட்டார்கள். "பாராளுமன்றத்திலே இருக்கின்ற உங்களுடைய

உறுப்பினர்கள் இதைப்பற்றிக் கேட்கக்கூடாதா?" என்று கேட்டார்கள். அவர்களுக்கு நான் நினைவு படுத்தக் கடமைப்பட்டிருக்கிறேன். தமிழகத்திலே வறட்சி என்றவுடன், தமிழகத்திலே மழை பொய்த்துவிட்டது, இங்கே பஞ்சம், பட்டினி தாண்டவமாடுகின்ற சூழ்நிலை உருவாகப் போகிறது, பஞ்சம் வந்து விட்டது என்ற நிலை வந்தவுடனே, டெல்லி பாராளுமன்றத்தில் திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்கள் கிளர்ந்தெழுந்து மத்திய அரசை அன்றைய தினம் கேட்டார்கள். தமிழகத்தின் பஞ்ச நிவாரணத்திற்கு மத்திய அரசு என்ன செய்திருக்கிறது என்று அன்றைய தினம் கேட்டார்கள். அவர்களிடமிருந்து பதில் வந்தது. மத்திய அரசுத் தரப்பிலேயிருந்து, மாண்புமிகு அமைச்சர் திரு. சுவாமிநாதன் அவர்கள் சொன்னார்கள். என்ன சொன்னார்கள்? "எனக்குக் கடிதம் வந்திருக்கிறது. ஆனால் இன்னும் எந்த அளவுக்கு அங்கே நிலைமைகள் இருக்கின்றன என்பதைப்பற்றிப் பூர்வாங்கமான மெமோராண்டம், டிடெயில்ட் மெமோராண்டம் எதுவும் எங்களுக்கு வரவில்லை" என்று சொன்னார்கள். அதைத்தான் அவர்களால் சொல்ல முடிந்தது. இந்த பதிலிலிருந்து என்ன நினைக்கத் தோன்றுகிறது? இந்த மாநிலத்திலே இருக்கின்ற ஆளுங்கட்சி அரசு அந்தச் செயலைச் செய்யத் தவறிவிட்டது என்பதைத் தான் இந்த சந்தர்ப்பத்திலே சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். இப்போதுகூட அந்த அறிக்கையிலே என்ன சுட்டிக் காட்டியிருக்கிறார்கள்? தெரிவிக்கப்பட்டிருக்கிறது என்று சொல்லப்பட்டிருக்கிறதைத் தவிர்த்து, வலியுறுத்தி எங்களுடைய மாநிலத்திற்கு இவ்வளவு கோடி ரூபாய் தேவை என்று திட்டவட்டமாகக் கேட்கப்பட்டிருக்கிறது என்ற நிலைமை இல்லை. இது எதைக் காட்டுகிறது? அலட்சியப்படுத்தி நடந்து விட்டோம் என்ற நிலைமை தான் ஏற்பட்டுள்ளது. 120 கோடி ரூபாய் செலவாகும் என்று நாங்கள் தெரிவித்திருக்கிறோம் என்பதோடு அறிக்கை முடிந்து விட்டிருக்கிறது. அது பரிபூர்ணமான நிலைமையல்ல என்பதை இந்தச் சந்தர்ப்பத்திலே சுட்டிக் காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதற்கு அடுத்து, இந்த அறிக்கையைப் பொறுத்தவரையில், அரசு பல பிரச்சினைகளுக்குத் தீர்வு காண முடியாமல் இருக்கிறது. நாங்கள் எல்லாம் எதிர்பார்த்துக் கொண்டிருந்தோம். நாட்டிலே பல பிரச்சினைகள் இருந்து கொண்டிருக்கின்றன. வேலையில்லாத் திண்டாட்டம் இருந்து கொண்டிருக்கிறது. தொழிலாளர் பிரச்சினைகள் ஏராளமாக இருந்து கொண்டிருக்கின்றன. விவசாயிகளுடைய பிரச்சினைகள் அதிகமாக இருந்து கொண்டிருக்கின்றன. இந்தப் பிரச்சினைகளுக்கு இவர்கள் முடிவு எடுத்திருக்கிறார்களா என்பதை எண்ணிப் பார்க்கின்றபோது, நிச்சயமாக இந்த அறிக்கையில்





திருப்திகரமாகக் கூறப்பட்டிருக்கிறது என்று எங்களாலே சொல்லிக்கொள்ள முடியவில்லை. எந்த நிலைமையை எடுத்துப் பார்த்தாலும் சரி, அப்படித் தான் இருக்கிறது. ஆசிரியர்களுடைய நிலைமைகளுக்கு முடிவு காணவில்லை. மாணவர்களுடைய பிரச்சினைகளுக்கு முடிவு காண முடியவில்லை. விவசாயிகளுடைய நிலைமைகளுக்கும் முடிவு காணவில்லை. வியாபாரிகளுடைய பிரச்சினைகளுக்கு முடிவு காணப்படவில்லை. அவர்கள் இன்னமும் ஒரு முனை வரி குறித்து கேட்டுக்கொண்டிருக்கிறார்கள். கடைசியாக இந்த அரசு எதையும் கண்காணிக்காத நிலைமையில்தான் நடந்து கொண்டிருக்கிறது. இருக்கும் நிலைமைகளுக்கு ஏற்ப ஒத்துழைத்துக் கொண்டிருக்கின்ற என். ஜி. ஓக்கள் நிலைமை என்ன? இதைப்பற்றி ஏதாவது சொல்லப்பட்டிருக்கிறதா? என். ஜி. ஓக்கள் நிலைமை இப்படி என்று சொன்னால், அவர்களுக்கும் மேலாக பொறுப்பேற்றுக் கொண்டிருக்கின்ற ஐ. ஏ. எஸ். அதிகாரிகள் நிலைமை என்ன என்பதை சற்று நேரத்திற்கு இந்த அவையிலே நாம் பார்த்தோம். அந்த விவாதங்களை நாம் பார்க்கின்றபோது உண்மையிலேயே எனக்கு மிகுந்த வருத்தமாக இருக்கிறது. மிகுந்த பரிதாபத்தோடு நான் இதைச் சொல்ல விரும்புகிறேன். இரட்டைப் புலவர்கள் பாடிய . . .

டாக்டர் இரா. சனார்த்தனம்: மாண்புமிகு உறுப்பினர் பேச்சில் குறுக்கிடுவதற்கு வருத்தப்படுகிறேன். திரு. இராமமூர்த்தி அவர்கள் அதிகாரிகள் நல்ல நிலைமையில், பெரிய வேலைகளுக்கு ஏற்பாடு செய்து கொண்டு மேலே போயிருக்கிறார்கள் என்றுதான் சொன்னார்கள்.

திரு. நீலநாராயணன்: நல்ல நிலைமை என்பதல்ல அந்த நிலைமை. அந்தப் பிரச்சினைக்கு உள்ளே மீண்டும் போனால், நெருக்கடியாக ஆகிவிடும். அந்த நிலைமையை உருவாக்க நான் விரும்பவில்லை. பொதுவாக என்.ஜி.ஓக்களுடைய குறைகள், ஐ. ஏ. எஸ். அதிகாரிகளுடைய குறைகள் தீர்க்கப்படுவதில்லை என்ற நிலைமைதான் இருக்கிறது. என்.ஜி.ஓக்கள் இவர்களைப் பார்க்கிறார்கள். அதே மாதிரி, ஐ.ஏ.எஸ். அதிகாரிகள் அவர்களைப் பார்க்

கிறார்கள். இவர்கள் இந்த நிலைமையிலேதான் இரண்டு பேர்களுடைய நிலைமைகள் இருக்கின்றனவே தவிர்த்து வேறல்ல. இரட்டைப் புலவர்கள் சொன்னதாக ஒரு பாடல் உண்டு. இரட்டையரில் ஒருவர் பாடினார்,

" தேங்கு புகழ் ஆங்கூர் சிவனே அல்லாடியப்பா
நாங்கள் பசித்திருக்க ஞாயமோ;" என்று பாட

மற்றவன் பாடினான்—

"போங்காணும் கூறு சங்கு தோல் முரசு கொட்டு முழக்கமல்லால் சோறு கண்ட மூளியார் சொல்"—"நாங்கள் பசித்திருக்க ஞாயமோ" என்று என்.ஜி.ஓவினர் கேட்டால், "சோறு கண்ட மூளியார்" என்றுதான் ஐ.ஏ.எஸ். ஆபீசர்களால் கூற முடிகிறது. இந்த இரண்டு பேர்களுடைய பிரச்சினைகள் அப்படி இருந்து கொண்டிருக்கின்றன. அவர்களுடைய பிரச்சினைகளை அக்கறையோடு கவனித்து தீர்வு காண வேண்டும். அது இன்னும் முடிய வில்லை. பல ஆண்டுகளாக அவர்கள் போராடிக் கொண்டிருக்கிறார்கள். அவர்களுக்காகவாவது ஒரு நல்ல நிலவரத்தை உருவாக்கி நல்லதொரு சுமுக மான சூழ்நிலைக்கு கொண்டுவர இந்த அரசு முயற்சி எடுத்துக் கொள்ள வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

திரு. சி இராமலிங்கம் : துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. நீலநாராயணன் அவர்கள் அதிகாரிகள் பற்றியெல்லாம் பேசி னார்கள். ஆனால் இந்த நாட்டிலே வறட்சியால் ஓராண்டாக மழையே இல்லாமல், கூலி விவசாயிகள், விவசாயிகள், நெசவாளர்கள் மற்றவர்கள் எல்லாம் துன்பப்படுவது திரு. நீலநாராயணன் அவர்கள் கண்களுக்குத் தெரிய வில்லை. அவர்களைப் பற்றி ஒரு வார்த்தை கூட பேசவில்லை. இந்த அரசு ஏழைகளுக்கு, விவசாயிகளுக்கு நன்மைகள் செய்கின்றார்கள். சிந்திக்கிறார்கள் என்பதைத் தவிர்த்து வேறல்ல. என்.ஜி.ஓக்கள் எந்தவிதமான கவலையும் இல்லாமல் வாழ்கின்றார்கள் அல்லது வசதியுடன் இருக்கின்றார்கள். அவர் களைப் பற்றி உறுப்பினர் அவர்கள் பேசுவது என்ன நியாயம்?

* திரு. சோ. ஆறுமுகம் : துணைத் தலைவர் அவர்களே, நேற்று முன் தினம் மாண்புமிகு உறுப்பினர் திரு. இராமலிங்கம் அவர்கள் பேசுகிறபோதே இந்த விவசாயத் தொழிலாளர்கள், நெசவாளர்கள் அனைவரையும் குறித்து ஏழைகள் அதிகமாகி விட்டார்கள் என்றும் அவர்கள் வேதனையில் இருக்கின் றார்கள் என்றும், ஆளுங்கட்சித் தரப்பிலே சொல்லிவிட்டார்கள். அதைப் பற்றி அவர்களே எடுத்துச் சொல்லிவிட்ட காரணத்தால்தான், அதைப்பற்றி நாங்கள் பேசவில்லை.



திரு. சி. இராமலிங்கம் : மேலவைத் துணைத் தலைவர் அவர்களே, அவர் கள் வறட்சியால், பருவமழை தவறியதால் கஷ்டப்படுகிறார்கள், வேதனைப் படுகிறார்கள் என்று சொன்னேன்.

திரு. க. மீனாட்சிசுந்தரம் : மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அங்கத்தினர் அவர்கள் என். ஜி. ஓக்கள் வசதியாக இருக்கிறார்கள் என்று சொல்வது எந்த விதத்தில் என்று எனக்குப் புரிய வில்லை. அதை நான் மறுப்பதற்கு முனைகிறேன்.

திரு. சி. இராமலிங்கம் : துணைத் தலைவர் அவர்களே, அவர்கள் வேதனை இதுதான். 4 அணா கிடைப்பது 8 அணாவாகக் கிடைக்கவில்லையே என்பது தான். ஆனால் விவசாயிகள், நெசவாளர்கள் படுகின்ற வேதனையைப் பற்றி சொல்லவில்லை. நான் வளர்த்த திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினராக இருந்தும், அவர்களுக்காகப் பேசாமல் இவர்களுக்காக, வசதியுள்ளவர்களுக் காகப் பேசுகிறார்கள். அவர்கள் நிம்மதியாக இருப்பவர்களுக்காக வாதாடு கிறார்கள். நான் அண்ணா அவர்கள் மீது பற்றுள்ளவன் என்ற முறையிலே அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தில் இருந்துகொண்டு பணிவன்போடு கேட்டுக் கொள்கிறேன். ஏழைகளுக்காக வாதாடுங்கள் என்றுதான் கேட்டுக் கொள்கிறேன்.

திரு. க. மீனாட்சிசுந்தரம் : துணைத் தலைவர் அவர்களே, என்.ஜி.ஓக் களும் ஏழைகள்தான் என்று குறிப்பிட விரும்புகிறேன்.

திரு. சி. இராமலிங்கம் : துணைத் தலைவர் அவர்களே, இன்றைக்கு அரசு வேலையில் இருக்கின்ற என். ஜி. ஓக்கள் யாரும் ரூபாய் 500-க்குக் குறைந்த சம்பளத்தில் இல்லை. அவர்கள் ஏழைகள் அல்ல.

திரு. நீலநாராயணன் : மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே . . . .

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் : நான் மாண்புமிகு உறுப் பினர்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன். அவையிலே உட்கார்ந்து கொண் டிருப்பவர்கள் தலைவர் அனுமதி இல்லாமல் யார் பேசினாலும் முறையல்ல. அனுமதியின்றி எழுந்து நின்று பேசுகின்ற நாகரிகத்தை வளர்க்க வேண்டா மென்று கேட்டுக்கொள்கிறேன்.

திரு. நீலநாராயணன் : துணைத் தலைவர் அவர்களே, என் ஜி. ஓக்கள் பற்றிச் சொல்வதற்குப் பதிலாக, விவசாயிகள் பிரச்சினைகளைக் கவனிக்க வில்லை, வியாபாரிகளுடைய பிரச்சினைகளைக் கவனிக்கவில்லை. ஆசிரியர்கள் பிரச்சினைகளைக் கவனிக்கவில்லை என்று நான் சொல்லவில்லை என்கிறார்

கள். நான் அங்கம் அங்கமாகச் சொன்னேன். மாணவர்களைப் பற்றி கவனிக்கவில்லை, ஆசிரியர்கள் பிரச்சினைகளைக் கவனிக்கவில்லை தொழிலாளர்களைப் பற்றி—விவசாயிகளைப் பற்றி—வியாபாரிகளைப் பற்றி சமுதாயத்தில் இருக்கின்ற எல்லாத் தரப்பினரையும், யார் யார் பாதிக்கப்பட்டிருக்கிறார்களோ அவர்களைப் பற்றியெல்லாம் சொன்னேன். கடைசியாகத்தான் என். ஜி. ஓக்களைப் பற்றி சொன்னேன்.

(பிற்பகல் 12-30)

அவர்களைப் பற்றியெல்லாம் கவனிக்க வேண்டுமென்று அரசுக்கு வலியுறுத்துவதற்குத்தான் இவைகளைச் சொல்லிவிட்டு, இறுதியாக இதைச் சொன்னேன். ஐ.ஏ.எஸ். அதிகாரிகள் பிரச்சினை பற்றி மட்டும் கூற வேண்டுமென்று கருதவில்லை. அதிலும் உண்மை இருக்கிறது என்று கருதிக்கொண்டு, என்.ஜி.ஓ., ஐ. ஏ எஸ் அதிகாரிகள் பற்றிச் சொன்னேன். அப்போது இரட்டைப் புலவர் பாடல் ஞாபகம் வந்ததால், அதைச் சொன்னேனே தவிர, என். ஜி. ஓவினருக்காக மட்டும் வாதாடுகிறேன் என்றல்ல.

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் :** இன்னும் இரண்டு உறுப்பினர்கள் பேச வேண்டியிருப்பதால் மாண்புமிகு உறுப்பினரவர்கள் விரைவில் முடிக்க வேண்டும்.

**திரு. நீலநாராயணன் :** துணைத் தலைவரவர்களே, உணவுப் பஞ்சத்தைப் பற்றிச் சில வார்த்தைகள் கூறி, என்னுடைய பேச்சை முடித்துக் கொள்கிறேன். இந்த நாட்டின் உணவு நிலைமை பற்றி இந்த அறிக்கையிலே சொல்லப்பட்டிருக்கிறது. இன்றைய தினம் கையிருப்பு—1,30,000 டன் அரிசியும், 2,00,000 டன் நெல்லும் கையிருப்பில் இருக்கிறது என்று சொல்லப்பட்டிருக்கிறது. ஆக, 2 லட்சம் டன் அரிசி இந்த நாட்டின் கையிருப்பாக இருக்கிறதென்று ஆளுநர் அவர்கள் உரையில் சொல்லப்பட்டிருக்கிறது. ஆனால் தேவை எவ்வளவு என்று சொல்லும்போது, சத்துணவிற்காக ஏறக்குறைய 17,000 டன் அரிசி. ரேஷன் மூலமாக நாம் விநியோகிப்பது 86,000 டன் அரிசி. ஆக ஒரு மாதத்திற்குத் தேவை ஒரு லட்சம் டன் அரிசி என்று ஆகிறது. அப்படி கணக்குப் பார்க்கும்போது, இன்னும் இரண்டு மாதங்களுக்குத்தான் நமக்குக் கவலையில்லை என்று தெரிகிறது. ஆனால் மார்ச் 15-ஆம் தேதிக்குப் பின்னால் இந்த நாட்டின் நிலவரம் எப்படி இருக்கும்? அதற்குள் அரிசியை இங்கே கொண்டு வருவதற்கு இந்த அரசு என்ன முயற்சி எடுத்திருக்கிறது என்பது பற்றிய விவரங்கள் அறிக்கையில் இல்லை. செலவைச் சொல்லியிருக்கிறார்கள். இருப்பைச் சொல்லியிருக்கிறார்கள். எப்படி சமாளிக்கப் போகிறோமென்பதற்கு விளக்கம் இல்லை. மழை பெய்யும், பெய்துவிடுமென்ற நம்பிக்கையில் இருக்கிறார்களா? அல்லது வேறு என்ன திட்டங்களை வைத்திருக்கிறார்கள் என்பது சொல்லப்படாததால், எதிர்காலத்தில் ஒரு இருண்ட சூழ்நிலை என்ற நிலைமைதான் இன்றைய தினம் என்னைப் போன்றவர்களின் கண் முன்னால் இருக்கிறது. சென்ற கூட்டத் தொடரில், பட்ஜெட் கூட்டத் தொடரில் பேசும்போது பல பேர் சுட்டிக் காட்டினார்கள், "நம்முடைய உணவு நிலைமை எப்படி இருக்கிறது தெரியுமா? வெளி நாட்டுக்கு அரிசி அனுப்பிக் கொண்டிருக்கிறோம், வெளி மாநிலங்களுக்கு அரிசி அனுப்பிக் கொண்டிருக்கிறோம்" என்றெல்லாம் இங்கே பலபட எடுத்துக் கூறப்பட்டது. அப்போது நான் ஒன்றை நினைவுபடுத்தினேன். "இப்போது நீங்கள் பேசுவது சிறப்பாக, அழகாக, எடுப்பாக இருந்து கொண்டிருக்கிறது, ஆனால் அடுத்து வருகின்ற நிலைமைகளை மனதிலே வைத்துக்கொண்டு, கொஞ்சம் கையிருப்பை வைத்துக்கொண்டு, வெளி மாநிலங்களுக்குக் கொடுங்கள், அதை வரவேற்கிறோம்" என்று நானே சுட்டிக் காட்டினேன். இந்த அவையிலே, இன்றைய தினம் நிலவரம் மாறிவிட்டிருக்கிறது. என்ன செய்யப் போகிறார்கள்? எனக்குப் புரியவில்லை. நான் சொன்னால், சாபம் கொடுக்கிறேன் என்று கருதக்கூடாது. மார்ச் 15க்குப் பின்னால் பிரஞ்சுப் புரட்சியின்போது பிரான்சு நாடு எப்படி இருந்ததோ அப்படிப்பட்ட ஒரு சூழ்நிலை ஏற்படுமோ என்று சந்தேகப்படுகிறேன். அந்த அளவிற்குப் பற்றாக்குறை வந்திருக்கிறது. ஏற்கெனவே மழை இல்லை. வறட்சி தாண்டவம் ஆடுகிறது. மின்சாரம் இல்லை. புதிய தொழில்கள் இல்லை. இருக்கின்ற தொழிற்சாலைகளும் மூடப்படுகின்ற சூழ்நிலையிலே இருக்கின்றன. செண்ட் பர்சண்ட் பவர் கட் என்று நாட்டில் நிலைமை மோசமாகிக் கொண்டிருக்கிறது. ஆகவே துரித நடவடிக்கைகளை எடுக்க வேண்டும். அந்த வேலையை விட்டுவிட்டு, இந்த அரசு வேறு வேலைகளில் ஈடுபட்டுக் கொண்டிருக்கிறது. வேறு வேலை என்றால், எதிர்க் கட்சிகள் என்னென்ன முறையில் பணியாற்றிக் கொண்டிருக்கின்றன, அவர்களில் யாரைத் தூண்டில் போட்டு இழுக்கலாம் என்ற பணியில் அரசு இயந்திரம் முடுக்கிவிடப்பட்டிருக்கிறது. நியாயமான, ஆக்கபூர்வமான வழிகளில் அரசு இயந்திரம் பயன்படுத்தப்படவில்லை என்று பகிரங்கமாகக் குற்றம் சாட்ட விரும்புகிறேன். நிலைமைகளைத் தெளிவாகப் புரிந்து கொண்டு, கடமையைச் செய்ய அரசு முன்வர வேண்டும். பிற கட்சிகளை எந்த அளவிற்கு ஒடுக்கிவிடக் கருதுகிறார்களோ அது கனவாகத்தான் முடியுமென்று சுட்டிக்காட்ட விரும்புகிறேன். எங்கள் கட்சித் தலைவர் டாக்டர் கலைஞர் அவர்களைத் தனிமைப்படுத்திவிடலாமென்று கருதுகிறார்கள். இந்த ஆட்சிக்கும் சரி, மற்றவர்களுக்கும் சரி, ஒன்றை நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். அவர் தன்னந்தனியாக நின்று, தமிழ் நாட்டுக்கு, தமிழ் மக்களுக்கு

தமிழ் மொழிக்குப் பாடுபடும் ஆற்றலும், அருகதையும் பெற்றவர்கள். அவரை தனிமைப்படுத்தி விடலாம், ஒழித்து விடலாம் என்று கனவு கண்டால், அது பகல் கனவாகத்தான் இருக்கும். உங்கள் ஆட்சி இயந்திரத்தை அதற்குப் பயன்படுத்தாமல், நாட்டுக்குத் தேவைப்படும் நன்மைகளைச் செய்ய முன் வாருங்கள். அதற்கு ஆட்சி இயந்திரத்தைப் பயன்படுத்துங்கள் என்று வலியுறுத்திக் கேட்டுக்கொள்கிறேன். மேற்கொண்டு இந்த நிலைமைகள் நீடிக்க வேண்டாமென்று கேட்டு அமைகிறேன்.

Thiru J. M. MIAKHAN : Mr. Deputy Chairman, Sir, I thank you for giving me this opportunity to speak on the Governor's Address.

Sir, the Nutritious Meal Programme is really a good scheme. But it has not been properly planned. It is a very massive scheme requiring the services of a number of personnel and plently of preliminary work should have been done. Somehow, it has been launched and about Rs. 112 crores out of the tax-payers' money has been spent. But, I do not think that it has been properly implemented. The Government have assured that the number of the beneficiaries of this programme will be about 65 lakhs. It is good. But education is more important. The teachers, Headmasters, etc. are engaged more in cooking the meals and supplying them to the children than in imparting education. By this education is suffering, to a grant extent. Quite rightly we spend on Education more than 33 per cent of our Budget Estimates and that amount which we spend should not go waste. Therefore, care should be taken to see that education also is imparted to the children in addition to giving them nutritious meals. I am not finding fault with the programme as such. But, here are plenty of loopholes in its implementation and, therefore, it has to be properly planned. The teachers and Headmasters should definitely be relieved of this item of work. I am glad to know that they are going to be relieved of this work and that about 35,00 persons are going to be appointed to look after this work. Such things have to be planned well in advance and implemented properly. If it is properly implemented, this will be a really good scheme.

Sir, there is a mention in the Governor's Address about the construction of public conveniences. Even now in many bus-stands and other public places, these public conveniences have been installed. For using them, a person has to pay fifteen paise or even twenty paise in some places. This fee seems to be a little bit exorbitant. I think that no fee should be charged if a person uses the public convenience for the purpose of urination only. If it is used for taking bath or for passing stools, a fee of 5 paise or 10 paise has to be charged, because,



then only people will have the sense of responsibility that they should use the public convenience properly. Therefore, it will be better if the present rates are reduced so that more people may be attracted to use these public conveniences.

As regards water scarcity, many hon. Members have spoken exhaustively on the subject. Of course, the monsoon has failed and as a result we are in a very great predicament. I do not think we can do much about it. The only thing that we can do is to plan everything in advance and see that we make use of the ground-water that is available. Even now, much of the ground-water has been exhausted and we have to dig deeper and deeper to get water for our requirements. As far as Madras City and its environs are concerned, good work is being done for supplying water to the public and I congratulate the Government on the work that is being done. But, in the suburban areas, I find that the scheme for water-supply is not being properly implemented. It is said that several thousands of bore-wells have been installed but they have not been evenly distributed over all areas. For example, in Alandur, a Municipal area, 23 bore-wells have been put up. But not a single bore-well has been put up in any of the areas where Muslims reside. All of them are very poor people and they reside in congested areas. The reason advanced for not putting up the bore-well is that the lorry could not go into those areas for installing the bore-well. If it is requested that a bore-well may be put up at least in the proximity of those areas, it is said that water

(பிற்பகல் 12-40)

might not be available there. Some reason is given but it is not proper. Whatever amenity is given it should be evenly distributed among all the people.

As regards electricity, I know that we are in a fix, because we have exhausted all our hydel resources and even the available hydel resources could not be fully utilised due to lack of sufficient water in the dams. We have to depend on the thermal units only. There is also great difficulty, because we have to get coal from Singareni and other coal-fields in the North. We are not able to get it because we do not get sufficient wagons to shift the coal from the coal-fields. We have to exist from day to day, that is to say, we are having only hand to mouth existence. We are not able to have enough stock of coal and the coal supplied is also of very poor quality. It is either mixed with sand, etc., or is in powder form. It cannot be used in thermal units. But we are using it, since we have no other go. When this poor quality coal is used, it gets stuck up and there is break-down. That is the main reason for break-down. The people in the thermal

units can neither swallow it nor tell it in public, because the supply is made by the Central Government. Further, there is under-weight in the quantity supplied. The underweight is caused by pilferage in transit. The coal loaded in the coal-fields does not mix here safely, because there is pilferage on the way in the Railway Line. The coal that reaches here is of poor quality and lesser in weight. Some private people are prepared to ensure guaranteed supply of good quality coal. They know how and where to pull wires. For doing anything, some wire-pulling is necessary. Those people may be entrusted with this work so that good quality coal reaches the destination in proper time. By this, unnecessary break-downs can be avoided to a great extent. We are also switching over to fuel oil in some places. Here also there is some difficulty. Now as it is, Madras, Refineries are supplying oil. In the long run it may not be able to supply it, because it is also a scarce commodity and we cannot completely rely upon it. The cost of production may also go up. I know the Electricity Board is finding it difficult to make both ends meet. It is in deficit for about Rs. 270 crores and it wants to increase the rates to some extent and it is inevitable. The have to do it.

In this connection, I would like to say that some of the entrepreneurs of Coimbatore and other places have come forward to have their own captive generators to produce electricity and they want some facilities to be given to them. They should be allowed to import foreign generating sets directly. If it is done through the Government agency, it will take two years to get it. They say that they will be able to get it at half the cost and also within 2 months. The Central Government must come forward to relax the rules and allow the people to import these sets directly so that they may start their own power generation. Our Government and the Electricity Department have stated that they will not be able to procure them. These people are ready to import them, provided they are given permission and if they produce excess power, they should be allowed to sell it at cost price to the neighbouring industry which is in need and which is prepared to buy it. They should be exempted from tax on that account. The Government should come to a decision in the matter early and they will be able to sell the surplus power to others also.

It is good that the Tamil Nadu Electricity Board has relaxed certain rules regarding the laying of lines across the road and also laying of underground lines. Now, this should be made a permanent feature and those who desire to generate electricity by themselves should be given encouragement. I think that 15 units have come forward to install their own generating sets by investing Rs. 80 crores. They have applied to the Tamil Nadu Government for permission to do this and



the Tamil Nadu Government are considering their request. I hope that the request will be considered favourably. The Government should see that such people who come forward to produce electricity on their own are given the necessary licences and other help. If that is done, the shortage of electricity can be minimised to a great extent. In distribution also, we should see which are the essential sectors which require electricity. Now for example the cinema theatres have five shows a day. This is not very essential for us, especially during a period of crisis like the present one. Of course, cinema is a poor man's entertainment and cinemas may be necessary for the purpose of entertainment. But it is not absolutely essential at the expense of other things. There are more than 1,000 theatres in the whole of Tamil Nadu.

*மாண்புமிகு திரு. இராம. வீரப்பன்:* மாண்புமிகு துணைத் தலைவாவர்களே, திரை அரங்குகளிலே காட்சி நடத்துகிறார்கள் என்றால் ஒரு குறிப்பிட்ட அளவிற்குத்தான், அனுமதிக்கப்பட்ட அளவுக்குத்தான் மின்சாரத்தை அவர்கள் உபயோகப்படுத்த முடியும். அதை மீறுகிறார்கள் என்று சொன்னால், அவர்கள் சொந்தத்தில் ஜெனரேட்டர் வைத்துக்கொண்டு நடத்திக்கொண்டிருக்கிறார்கள் என்று பொருள். மக்களுக்குப் பொழுது போவது என்பது ஒருபுறம் இருக்க, அவர்கள் காட்சிகளை நடத்துவதன் மூலம் அரசாங்கத்திற்கு வருமானமும் வருகிறது. அவர்கள் வருமானத்தைப் பெருக்குவதற்காக நாம் அவர்களுக்கு மின்சாரம் கொடுக்கவில்லை. அவர்களே மின்சாரத்தை உற்பத்தி செய்து வருமானத்தைப் பெருக்கிக்கொள்கிறார்கள்.

Thiru J. M. MIAKHAN: That is what I say. These people can be asked to have their own generating set and produce electricity. Considering the quantum of electricity consumed by the cinema theatre and the cost of production, it will be profitable for them to have their own generating sets. The electricity thus saved can be diverted for use by the small-scale industries.

*திரு. க. இராமமூர்த்தி:* திரை அரங்குகள் பயன்படுத்தும் மின்சாரம் மிக மிகக் குறைவு. அதை நிறுத்தக் கூடிய நிலை வந்தால், அதனால் இன்னும் வேலை வாய்ப்புக் குறைவு ஏற்பட்டு பெரிய தொல்லைகள் வந்து விடும்.

Thiru J. M MIAKHAN: I am not asking that they should have all the cinemas closed down.

*டாக்டர் இரா. சனார்த்தனம்:* மின்சாரத்தைப்பற்றி ஒரு நல்ல கருத்தை நான் இங்கே குறிப்பிடுகிறேன். ஒரு பொருட்காட்சிக்கோ அல்லது திரை அரங்குக்கோ எவ்வளவு பேர் வருகிறார்கள் என்பதைப் பார்க்கும்போது,

அவ்வளவு பேர்களுடைய வீட்டிலும் விளக்குகள் போன்றவற்றைப் பயன்படுத்தாத காரணத்தால் அந்த வகையில் நமக்கு மின்சாரம் ஒரு பெரிய சேமிப்புதான். (சிரிப்பு).

Thiru J. M. MIAKHAN : I thank the hon. Member for the information. But, still, I say that I am not asking for the cinema-theatres to be completely closed down. What I say is . . .

திரு. ஜி. சுவாமிநாதன்: எனக்குத் தெரிந்தவரையில், பல பேர் பகலில் தான் சினிமாவுக்குப் போகிறார்கள். (சிரிப்பு).

Thiru J. M. MIAKHAN : Of course, as the hon. Member has said, cinema-theatre also enables many people to come into politics and also as Chief Ministers of States. That is also there and that is another thing. I am not saying that these people must be denied electricity. They can have their own generating sets and produce electricity and have 5 shows or 6 shows. They can afford to do this whereas the small-scale industries cannot afford to have their own generating sets. Similarly, the posh hotels can be asked to have their own generating sets. The electricity that is saved by doing all these things can be diverted to the small-scale industries. Therefore, distribution of electricity on these lines may be thought of.

Now, the schools are going to be re-opened shortly and the printing of text-books, note-books, etc. have got to be done. The printing presses made a representation that they might be allowed an extra quota of electricity to complete the printing orders for text-books, etc. I am glad that the Hon. the Minister for Electricity, has graciously accepted their request. The Hon. the Education Minister also said that he would recommend the grant of extra quota of electricity to printing presses to enable them to complete the printing orders from Government.

(பிற்பகல் 12-50)

Similarly proper distribution of the available electrical energy should be ensured so that the industries may not suffer. Already our State is having fewer industries than in many other States like Haryana and Punjab. If energy is not given, these industries will go to other States and our State will suffer. Therefore, in the long run, they must have proper perspective not only in respect of agriculture but in respect of small scale industries so that the small scale industries may be able to get at least some energy to run the industry and avoid the unemployment of the workers.





(Thiru J. M. Miakhan)

There is also an alternative source for power. Though some attempts are made in that direction, I do not think proper efforts are made to tap the alternative sources of energy. On many occasions, I have mentioned that wind power could be tapped for production of electricity and it could be directly used for agriculture and for other works requiring energy. The other day I found that solar cells had been developed and that the cost had also been brought down to a great extent. It was stated that one unit of current could be produced for Rs. 4. Those who can afford to pay Rs. 4 per unit can take to the use of solar power. If these solar cells are used in far-flung areas, we can also avoid unnecessary transmission losses and also the cost of transmission through long-winding wires for long distances. These solar cells can be given at a subsidised cost to those people. Thus the Government will be saving a lot on capital expenditure in providing over-head wires for long distances. The Government of Tamil Nadu can consult the Mettur Chemicals and others in this regard because they are making investigation and research in this field. They also say that the cost of the cells can be reduced still further and the efficiency of the cells can be increased to such an extent that bulk quantity of energy could be generated by these cells.

Similarly molasses are not being used in the proper way, except for the fact of using the bagasse for manufacture of paper. Even now gases are emanating and they go unutilised. In big Sugar Mills, gas could be used for production of energy for lighting and other purposes. If we go to Cuddalore, we see the gas that emanates from the Sugar Mills is polluting the air. The pollution of the atmosphere can also be avoided by utilising the gas for this purpose. Proper measures should be taken to use the gas profitably and there is a sizable quantity available. I would request the Government to bestow some attention on this. In certain countries a law has been enacted that alcohol must be mixed with petrol for running cars. Though alcohol may be costly, this also should be investigated and it should be ascertanieed whether it is feasible.

So far as agriculture is concerned, we have drought and dearth of rain-fall. Whatever the agriculturists may produce, they must get a fair price. Now the farmers are not allowed to sell their produce to others. They are not able to shift the paddy to other places. Even from their own fields, they are not able to shift the paddy to their homes. The agricultural labourers who are paid their wages in kind are not able to sell the paddy and buy other things required by them. These things should not be allowed to continue. The agriculturists should get a reasonable return over and above what they have spent on the inputs. At present, they are not able to get back even what they have invested in agriculture. If this situation continues, in course

of time, the farmers will think that it is not economical for them to continue to grow paddy. In that case, they will not grow paddy any more and they will switch over to some other commercial crop. If that happens, the result will be disastrous for Tamil Nadu and for the country. Therefore, the farmers should be encouraged and they should get proper prices for their produce. Moreover, they should be allowed to sell the produce without any restrictions. Only if there is a free market, the agriculturists will be able to get proper prices.

Sir, a comprehensive Co-operative Societies Bill has been prepared and a Joint Select Committee has gone into that Bill. The Joint Select Committee has taken strenuous efforts and the Bill was before the Committee for more than two years. The Bill may be brought before the Legislature and enacted so that the people may be benefited by it and the Members of the Joint Select Committee may also feel happy that their efforts have not gone waste.

Sir, having referred to some general matters, I would now like to say a few words about the Wakf Board. The affairs of the Wakf Board are in a mess. I do not know how many times I have spoken about this in this House. Every time some sort of an assurance is given but nothing is being implemented. Several thousands of cases are pending with the Wakf Board and they are not able to dispose of them. Some Special Tribunal or Special Court or some such process should be thought of for disposing of those cases because some cases are pending for more than thirty years and even for three generations. By this delay, sizable income from those properties are being allowed to be wasted by the Wakfdars, the people who manage the Wakfs. I do not say that everybody is, like a crocodile, eating those funds. But there are a few people who are wasting huge sums of money and utilising the money for the benefit of their own families and their kith and kin, without utilising it for the purpose for which it is meant. Such things have to be set right. These funds will be of benefit not only to the Muslims but to the entire people of Tamil Nadu. For example, in Thanjavur district, there are very many Wakfs which observe the 'Khandoori' festival during which time several thousands of people are to be fed. In certain months, at the time of Ramzan, Id-ul-Fatr, etc., they have to prepare and distribute food to some thousands of poor people. The food is not necessarily to be partaken by Muslims alone Anybody can come and take the food. The Wakfs used to do this preparation and distribution of food every year for 10 days, 6 days or 5 days, depending on the custom. But, now only one-tenth of the quantity of food that used to be prepared in the past is prepared and distributed. The remaining money is being swallowed by the people who run Wakfs. This should be set right. Just as the institutions



under the Hindu Religious Endowments department are run efficiently, this Walk Board also should be run efficiently. I, therefore, request that the Wakf Board may be reorganised. I am not speaking about particular persons. What I say is that the present set-up is not proper. It should be decentralised. I have already made that suggestion and it has been accepted by the Government on the floor of the House. I do not know why it has not been implemented so far. We can have Regional Boards. After all, the persons who come into these Boards are not going to be elected and the Government can have their own people on these Boards. At present, there are 15 Members on the Wakf Board. If the Regional Boards come into existence, the Government can have 75 or 90 of their own people on those Boards. Then at least all the regions will be represented and the Members from each region will have personal knowledge about the condition of the Wakfs in that region. Now, mostly people in and around Madras and one or two persons from other places are being put in the Wakf Board. They do not even attend the meetings properly. They are also not being consulted properly. If the Wakf Board is decentralised, people who are parties to cases can get redress quickly. Now, people have to come all the way from places like Kanyakumari, Tirunelveli, etc. to Madras. On coming to Madras, they find that their cases have been adjourned and they have to go back. For several months, the meetings of the Wakf Board have not been held at all and even unilateral action is being taken.

*டாக்டர் இரா. சனார்த்தனம்:* மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் வக்ஃப் போர்டைப்பற்றிப் பேசிக்கொண்டிருக்கிறார்கள். இப்போது 1 கோடி ரூபாய் ஒதுக்கியிருக்கிறார்கள். 850 புதிய அமைப்புக்கள் எல்லாம் வரப் போகின்றன.

(பிற்பகல் 1-00)

Thiru J. M. MIAKHAN : I just want to know whether the Government of Tamil Nadu are giving that sum of Rs. 1 crore to the Wakf Board. I really welcome that gesture shown by the Government and really thank the Government for apportioning the said sum to the Wakf Board. I should know whether this is going to be spent properly. Already the funds in the hands of the Wakf Board are not spent properly, and for the purpose for which they are meant. The amount is spent on giving of loans to their employees. I do not object to the giving of loans but they should be given loans from out of other funds and this fund should not be utilised for that purpose.

*திரு. கி. இராமலிங்கம்:* நான் குறுக்கிடுவதற்கு மன்னிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். வக்ப் போர்ட் பற்றிப் பேசுகின்றபோது சென்னையிலே மவுண்ட் ரோடு, கனை பஜார், திருநெல்வேலி

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்: மவுண்ட் ரோடு என்று ஒன்று இல்லை.

திரு. சி. இராமலிங்கம்: அண்ணா சாலை, ஜமீன் பல்லாவரம், இசா பல்லாவரம் போன்ற இடங்களிலேயெல்லாம் வக்ப் போர்ட்டுக்கு இருக்கும் சொத்துக்களை தனியார் அபகரித்துக்கொண்டிருக்கிறார்கள். இதையெல்லாம் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் ஒத்துக்கொண்டு அந்தச் சொத்துக்களை வக்ப் போர்டோடு சேர்த்துக்கொள்ள முன்வருவார்களா?

Thiru J. M. MIAKHAN: That is what I also say. There are certain properties which are not being used for the purposes for which they are meant. They are being unauthorisedly occupied by other people whether they are Muslims or non-Muslims, they should be evicted and the properties should be taken over by the Wakfs and proper management and administration of the same should be ensured. I accept the suggestion of the hon. Member and I agree with this suggestion. I have not more particulars but it will take much time. I can throw much light on the affair but I do not think the hon. Members will be interested in that. Sincere efforts will have to made. Now it is not possible for a single person to dispose of about 35,000 cases. The Government wanted one year's time to file cases. How much time will it take for one person to dispose of 35,000 cases? That is the question. In addition to he cases that are pending in the High Court, several cases are pending in the Wakf Board itself and no decision is taken. I want the Wakf Board to be democratised and decentralised. Proper set-up should be arranged so that the people may be benefited ahd the benefit may not go only to Wakfdars. One Wakf Board for example, is running a college. Are there not Muslim students in that College? Several Wakfs are indeed for the general public. O course, a few may be fir the running of Malras in which case only Muslims will be attending and learning Arabic language or Islamic culture. Only Muslims will go there. But a majority of them are meant to benefit the general public. They are not properly administered and that is what I am saying I have got an entire file with me. There is also a representation given by the people. They have formed an Association. Their rights are being denied. They are not being consulted even on simple matters. I would request the Hon. Minister for Wakfs and also the Government of Tamil Nadu to go into the affiair and settle the matter in the proper manner. I thank the Hon. the Chief Minister for giving one crore of rupees for the amelioration and repair of mosques. What happens is that the money is not properly spent. There is a small mosque in Chromepet, where Qaide Milleth prayed. It has no





(Thiru J. M. Miakhan)

income and it has not even one coconut tree from whiih it ian have some inlome. Only from ut of the contribution of the public, expenses are met. For that also they have given a notice to a person who has been the Muthavalli and who is not now the Muthavalli, asking him to pay Rs. 2,842 just to tease him. At the same time, some people are allowed to the swallow lakhs of rupees. This is the state of affairs. I want this Government not to neglect it but to look into it and do some justice.

Sir, I want to mention one more thing regarding electricity supplied to mosques, etc. For domestic consumptionn of electricity we are charging at 45 paise per unit and for shops and establishments, etc., we are charging at a higher rate. I request the Hon. the Minister for Electricity to bestow some attention on this and see that the Temples, Mosques, Churches and other religious institutions and also the school are charged at the same rates at which the domestic consumers are charged. These institutions are not profit-making organisations. They are public bodies and the schools are imparting education. Therefore, I request that these institutions may be charged at the rates applicable to the domestic consumers.

With these words, I thank you for giving me an opportunity to speak on this occasion.

(பிற்பகல் 1-00)

*திருமதி சீதாதேவி கிருஷ்ணசாமி: துணைத் தலைவர் அவர்களே, மேதகு ஆளுநர் அவர்களின் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின் மீது பேச வாய்ப்பு அளித்தமைக்காக தங்களுக்கு நன்றி தெரிவித்துக்கொள்கிறேன். ஆளுநர் அவர்கள் சட்டமன்ற உறுப்பினர்கள் அனைவரும் மகிழத்தக்க அளவில் புத்தாண்டு வாழ்த்தையும், பொங்கல் வாழ்த்தையும் மிகவும் அழகாக தமிழில் பேசியதற்காக எனது பாராட்டையும் நன்றியையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

1—7—1982 முதல் கிராமப் பகுதிகளிலும் 15—9—1982 முதல் நகரப் பகுதிகளிலும் மாண்புமிகு முதலமைச்சர் சத்துணவுத் திட்டம் மிகவும் சிறப்பாக தமிழகத்தில் உள்ள தாய்மார்களின் பாராட்டுக்களோடு செயல்பட்டு வருகிறது. பள்ளிக்கூடங்கள் மூடப்படும் முக்கியமான அரசு விடுமுறை நாட்கள் ஒரு சில நீங்கலாக ஆண்டு முழுவதிலும் எல்லா நாட்களிலும் குழந்தைகளுக்கு உணவு அளிக்கப்பட்டு வருகிறது. ஆனால் விடுமுறை நாட்களுக்கு முதல் நாள் மாலையிலேயே அவர்களுக்குச் சத்துணவு வழங்கப்படுகிறது. இந்த ஏற்பாட்டினால் ஆண்டு முழுவதிலும் எல்லா நாட்களிலும் அவர்களுக்கு சத்துள்ள உணவு கிடைக்கிறது. இத்திட்டத்தின் காரணமாக

[திருமதி சீதாதேவி கிருஷ்ணசாமி] [1983 ஜனவரி 29

கிராமப் பகுதிகளில் ஒரு இலட்சத்து நாற்பதாயிரம் ஆதரவற்ற பெண்களுக்கு வேலை வாய்ப்பு கிடைக்கப் பெற்றிருக்கிறது. உணவு அளிக்கும் நிலையங்கள் பலவற்றிலும் முப்பத்தைந்தாயிரம் அமைப்பாளர்கள் நியமிக்கப்பட்டு, சத்துணவுத் திட்டத்தின் கீழ் உணவு அளிக்கும் காரணமாக ஏற்பட்டுள்ள புதிய பொறுப்பிலிருந்து விடுபட்டு ஆசிரியர்களை முழுவதுமாகக் கல்வி கற்பிக்கும் பணியில் ஈடுபடச் செய்ய திட்டம் தீட்டியிருப்பது குறித்து அரசைப் பாராட்ட வேண்டும். மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்களுடைய இச்சீரிய திட்டத்தால் தமிழகம் நல்ல கல்வியும் உடல் வளமும் உள்ள புதிய தலைமுறையை அடையப் போகிறது. இதற்காக தமிழகத்திலுள்ள தாய்மார்கள் புரட்சித் தலைவருக்கு நன்றி சொல்லக் கடமைப்பட்டிருக்கிறார்கள். சத்துணவுத் திட்டத்திற்காக பொதுமக்களிடமிருந்து இதுவரை இரண்டு கோடி ரூபாய்க்கு மேல் நிதி கிடைத்திருப்பதிலிருந்து மக்களின் ஆதரவும் மிகுந்த வரவேற்பும் இத்திட்டத்திற்கு இருக்கிறது என்பது தெளிவாகத் தெரிகிறது. மேலும் இத்திட்டம் முதியோர்களுக்கும் நீட்டிக்கப்பட்டிருப்பதற்காக நன்றி கூற வேண்டும். குழந்தைகளுக்கு வாரம் ஒரு முறையேனும் முட்டை வழங்கினால் மிகச் சிறப்பாக இருக்கும். அத்துடன் சொட்டியையும் உடைகளையும் வழங்க ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

1982 ஆம் ஆண்டின் ஒப்புயர்வற்ற க்ரப்ஸ்காயா கல்விப் பரிசினை யுனெஸ்கோ தமிழ்நாட்டிற்கு வழங்கியிருப்பதற்காக கல்வித் துறையின் சிறந்த பணிக்கு நான் நன்றி சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

குடும்பத்தில் ஒருவருக்கு வேலை வாய்ப்பு அளிக்க திட்டமிட்டிருப்பதற்காக அரசுக்கு நன்றி செலுத்த விரும்புகிறேன். அடுத்து, கிராமங்களில் பெண்களுக்காக பொதுக் கழிப்பிடங்களைக் கட்டுவதற்காக நிதியொதுக்கி திட்டமிட்டிருப்பதன் மூலம் கிராமப் பெண்களின் பெரிய பிரச்சினைக்கு அரசு தீர்வு கண்டிருக்கிறது. அதற்காக கிராமப் பெண்களின் சார்பாக அரசுக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். கழிப்பறைகளைச் சுத்தமாக வைத்திருக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று இந்த நேரத்தில் கேட்டுக்கொள்கிறேன். பேருந்து நிலையங்களில் இயங்கும் கழிப்பிடங்களில், முதல் தர கழிப்பிடங்களில், அதற்கான கட்டணம் 10 காசுகளாக இருந்ததை 15 காசுகளாக உயர்த்தியிருக்கிறார்கள். அதை மீண்டும் பத்து காசுகளாகக் குறைக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

தமிழ் நாட்டின் எல்லைக்குள் ஓடும் காவிரி கிளை நதிகளின் குறுக்கே அணைகள் கட்டவிருப்பது மக்களின் தண்ணீர்ப் பிரச்சினையைக் குறைக்க உதவும் நல்ல திட்டமாகும். ஆதி திராவிடர்களுக்காக நல்ல பல திட்டங்களை மேற்கொண்டு செயல்படுத்தியிருப்பதற்காக நன்றி கூறுகிறேன்.



1983 ஜனவரி 29] [திருமதி சீதாதேவி கிருஷ்ணசாமி]

பேருந்துகளில் புகை பிடிக்கக்கூடாது என்று எழுதியிருக்கிறார்கள். ஆனால் பயணிகள் புகை பிடிக்கிறார்கள். அதைத் தடுக்க அரசு நடவடிக்கை எடுக்க வேண்டுமென்ற கருத்தைக் கூறிக்கொண்டு பேச வாய்ப்பளித்தமைக்காக நன்றி தெரிவித்து அமர்கிறேன்.

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் : மேலவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்றன. மீண்டும் அவை 31—1—1983 திங்கட்கிழமை காலை 9-30 மணிக்குக் கூடும்.

பின்னர், அவை ஒத்தி வைக்கப்பட்டது.

(1-09)

### 4. அவைமுன் வைக்கப்பட்ட ஏடுகள்.

### A. Statutory Rules and Orders.

125. Notifications issued with G.O. Ms. No. 543, Labour and Employment, dated the 11th March 1982 in regard to bringing into force the provisions of the Tamil Nadu Handloom Workers (Conditions of Employment and Miscellaneous Provisions) Act, 1981 and in G.O. Ms. No. 723, Labour and Employment, dated the 7th April 1982 in regard to the framing o rules thereunder. [Laid on the table of the House under section 57 (4) of the Tamil Nadu Handloom Workers (Conditions of Employment and Miscellaneous Provisions) Act, 1983 (Tamil Nadu Act 61 of 1981).]

### B. Reports, Notifications and Other Papers.

Nil.

## இணைப்பு.

(21 ஆம் பக்கங்களில் உடுக்குறியிட்ட வினா எண் 38-க்கான விடையைக் காண்க.)

(அ) கன்னியாகுமரி மாவட்டம் நாகர்கோவில் நகரில் கள்ளமார்க்கெட்டுக்காகப் பதுக்கி வைக்கப்பட்டிருந்த சிமெண்டு எவ்வளவு கண்டு பிடிக்கப்பட்டுள்ளது?

கன்னியாகுமரி மாவட்டத்தில் நாகர்கோவில் நகரில் கள்ள மார்க்கெட்டுக்காகப் பதுக்கி வைக்கப்பட்டிருந்த சிமெண்ட் 1981-ம் வருடம் முதல் இதுவரை 344 மூட்டைகள் கண்டு பிடிக்கப்பட்டன.

(இ) இது சம்பந்தமாக வழக்கு ஏதேனும் பதிவு செய்யப்பட்டுள்ளதா?

நாகர்கோவிலில் கள்ள மார்க்கெட்டுக்காக சிமெண்டு பதுக்கி வைத்திருந்தது தொடர்பாக 1981-ம் வருடம் முதல் 6 வழக்குகள் பதிவு செய்யப்பட்டன.

(உ) எந்த இடத்தில் யாரால், எத்தனை மூட்டைகள் பதுக்கி வைக்கப் பட்டிருந்தன?

1981-ம் வருடம் முதல் இந்நாள்வரை நாகர்கோவில் நகரில் கள்ள மார்க்கெட்டுக்காகப் பதுக்கி வைக்கப்பட்டிருந்ததாகச் சந்தேகப்பட்டவர்களிடம் கைப்பற்றிய சிமெண்ட்டு மூட்டைகளும் இடமும் குற்றவாளிகள் பெயரும் கீழே குறிப்பிடப்பட்டுள்ளன:—

| காவல் நிலைய குற்ற எண் | கைப்பற்றிய இடம் | கைப்பற்றப் பட்ட மூட்டைகள் | குற்றவாளிகளின் பெயர்கள் |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| 1) கோட்டாறு 717/81 | செட்டிகுளம் ஜங்சன் | 22 | 1) திரு. முருகன் த/பெ திரு. ஆறுமுகம் செட்டியார், இடலாக்குடி.<br>2) திரு. ஜமாலுதீன் ஜமீனா டிரேடர்ஸ், செட்டிகுளம். |
| 2) கோட்டாறு 1111/81 | செட்டிகுளம் ஜங்சன் | 19 | 1) திரு. ஜமாலுதீன் த/பெ. அப்துல் ரகுமான் செட்டிகுளம் ஜங்சன். |



| காவல் நிலைய குற்ற எண், | கைப்பற்றிய இடம். | கைப்பற்றப் பட்ட மூட்டைகள். | குற்றவாளிகளின் பெயர்கள். |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| 3) கோட்டாறு 1112/81 | செட்டிகுளம் சந்திப்பு | 46 | 1) திரு. இசக்கிமுத்து த/பெ. இளைய பெருமாள், நெய்யூர்<br>2) திரு. சக்பட் த/பெ. திரு. கஸ்பா இணையம்<br>3) திரு. குமரேசன் த/பெ. திரு. செம்பு லிங்கம் செட்டிகுளம். |
| 4) கோட்டாறு 1140/81 | செட்டிகுளம் சந்திப்புப் பக்கம் | 7 | 1) திரு. சூசை விநாயகம், த,பெ. அந்தோணி, பள்ளம்.<br>2) திரு. தங்கசாமி, த/பெ. திரு. நாராணயவடிவு, செட்டிகுளம். |
| 5) கோட்டாறு 354/81 | கோட்டாறு | 200 | 1) திரு. கோமதி நாயகம் த/பெ. திரு. சுப்பிரமணிய பிள்ளை தூத்துக்குடி.<br>2) திரு. கிருஷ்ணசாமி, த/பெ. சுயம்பு லிங்கம், தூத்துக்குடி.<br>3) திரு. கணேஷ், த/பெ. திரு. குமார சாமிப் பணிக்கர், மீனாட்சிபுரம்.<br>4) திரு. அமீர் அலி, த/பெ. திரு. மைதீன் ஷா, செட்டிகுளம் சந்திப்பு. |
| 6) கோட்டாறு 718/81 | செட்டிகுளம் | 50 | 1) திரு. முருகன், த/பெ. திரு. ஆறுமுகம் செட்டியார், இடலாக்குடி.<br>2) திரு. ஜமாலுதீன் சபீனா டிரேடர்ஸ் செட்டிகுளம். |

சிமெண்ட்டு பதுக்கி வைத்தவர்கள் மீது இன்றியமையாப் பண்டங்கள் சட்டம் 6 (எ) பிரிவின் கீழ் நடவடிக்கை எடுக்கப்பட்டு 94 மூட்டைகள் பறிமுதல் செய்து ஆணை பிறப்பிக்கப்பட்டது. விசாரணையின் போது தமிழ்நாடு ஆதித் திராவிடர் வீட்டு வசதி வாரியம் ஒப்பந்தக்காரர் ஒருவரிடமிருந்து கைப்பற்றப்பட்ட 200 மூட்டைகளும் வீட்டு உபயோகத்திற்கு வைக்கப்பட்டிருந்த ஒருவரிடமிருந்து கைப்பற்றப்பட்ட 50 மூட்டைகளும் மொத்தம் 250 மூட்டைகள் உண்மையான உபயோகத்திற்காக வைக்கப்பட்டிருந்ததாகத் தெரிய வந்ததால் அவை உரிமையாளர்களிடம் திருப்பிக் கொடுக்க ஆணை பிறப்பிக்கப்பட்டது.

(எ) மாவட்டத்தில் இதர இடங்களிலும் இதுபோல் பதுக்கி வைக்கப்பட்டிருந்த சிமெண்ட்டு கண்டுபிடிக்கப்பட்டுள்ளதா?

1981-ம் வருடம் இந்நாள் வரை கன்னியாகுமரி மாவட்டத்தில் நாகர் கோவில் நகரம் நீங்கலாக இதர இடங்களில் கள்ள மார்க்கெட்டுக்காகப் பதுக்கி வைத்திருந்ததாகச் சந்தேகப்பட்டு 321 மூட்டைகள் கைப்பற்றப்பட்டன.

(ஐ) ஆம் எனில் அதன் விவரம் என்ன?

தக்கலை காவல் நிலையக் குற்ற எண் 65/81 சம்பந்தமாக திரு. டி. ஆர். சுந்தரம் என்பவரிடமிருந்து 190 மூட்டைகளும், குளச்சல் காவல் நிலைய குற்ற எண் 217/81 சம்பந்தமாக திரு. தேவதாசன், திரு. பாபு, திரு. சுந்தர ராஜ் ஆகிவர்களிடமிருந்து கைப்பற்றப்பட்ட 9 மூட்டைகளும் சேர்த்து மொத்தத்தில் 199 சிமெண்ட்டு மூட்டைகள் இன்றியமையாப் பண்டங்கள் சட்டம் பிரிவு 6 (எ)-ன்படி நடவடிக்கை எடுத்து அரசுக்குப் பறிமுதல் செய்து ஆணை பிறப்பிக்கப்பட்டது.

குழித்துறை காவல் நிலையக் குற்ற எண் 107/82 தொடர்பாக திரு. பொன்னையா நாடாரிடமிருந்து கைப்பற்றப்பட்ட 107 மூட்டை சிமெண்ட் அரசுப் பணிக்கு ஒதுக்கப்பட்டது எனத் தெரிய வந்ததால் ஒப்பந்தக்காரரான திரு. பொன்னையா நாடாருக்குத் திருப்பிக் கொடுக்க ஆணை பிறப்பிக்கப்பட்டது.

குழித்துறை காவல் நிலைய குற்ற எண் 82/82 சம்பந்தமாக திரு. தாசன் திரு. கிருஷ்ணன் ஆகிய இருவர்களிடம் 15 மூட்டை சிமெண்டு கைப்பற்றப்பட்டது. கைப்பற்றப்பட்ட சிமெண்ட்டு மூட்டைகள் இன்றியமையாப் பண்டங்கள் சட்டம் 6 (எ) பிரிவின்படி அரசுக்கு ஏன் பறிமுதல் செய்ய நடவடிக்கை தொடரக்கூடாது என விளக்கம் கேட்டு குறிப்பாணை அனுப்பப்பட்டது.



(ஒ) இதுபற்றி அரசு எடுத்த நடவடிக்கை என்ன?

கள்ளமார்க்கெட்டுக்காகப் பதுக்கி வைக்கப்படும் சிமெண்ட்டு மூட்டைகளைக் கண்காணிக்க உணவுப்பொருள் குற்றப் புலனாய்வுக்காவல் ஆய்வாளர் பொறுப்பில் இம்மாவட்டத்தில் ஒரு காவல் துறை பிரிவு செயல்பட்டு வருகிறது. தவிர மாவட்ட வழங்கல் அலுவலரும் ஒவ்வொரு வட்டத்திலும் ஒவ்வொரு வட்டார வழங்கல் அலுவலரும் இது தொடர்பாக நடவடிக்கைகள் எடுத்துக் கொண்டிருக்கிறார்கள். அவ்விதம் பதுக்கி வைக்கும் நபர்கள் மீது வழக்கு தொடரப்பட்டு அவ்வப்போது தக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

[ISSUED 29—7—1983

COMMISSIONER OF TAMILNADU
ARCHIVES & HISTORICAL RESEARCH
21 SEP 1983
EGMORE, MADRAS-8

S.No. 146/55/9

# TAMIL NADU LEGISLATIVE COUNCIL DEBATES

# OFFICIAL REPORT

MONDAY 31st JANUARY 1983

Volume CXCI (No. 5)

©
GOVERNMENT OF TAMIL NADU
1983

*Legislative Council Department*
*Fort St. George, Madras-600 009.*

Price Rs. 2.75 *Paise*]

பொருளடக்கம்.

S.No.1445/10

(2910)

பக்கங்கள்.

1. அரசின் தீர்மானம்—
கேள்வி நேரம் கைவிடப்படல் குறித்து .. 411

2. கவன ஈர்ப்புத் தீர்மானங்கள் .. .. 411

3. ஆளுநர் உரையின் மீது விவாதம்—தொடர்ச்சி.. 413-522

4. அவை முன் வைக்கப்பட்ட ஏடுகள் .. .. 523

143130

D

V211,32'N83
N83.191.3-5

## தமிழ் நாடு சட்டமன்ற மேலவை.

---

திங்கட்கிழமை, 1983 ஜனவரி 31.

---

தை 18, துந்துபி. திருவள்ளுவராண்டு 2014.

---

சென்னை, செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள மேலவை மண்டபத்தில் முற்பகல் 9-30 மணியளவில் மாண்புமிகு மேலவைத் தலைவர் (டாக்டர் ம. பொ. சிவஞானம்) அவர்கள் தலைமையில் அவை கூடியது.

### 1. அரசின் தீர்மானம்.

### கேள்வி நேரம் கைவிடப்படல் குறித்து.

மாண்புமிகு திரு. கா. இராசா முகமது : மாண்புமிகு மேலவைத் தலைவர் அவர்களே,

"மேலவை விதி 22-ன்கீழ் இன்று கேள்வி நேரம் கைவிடப்படலாம்" என்ற தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

மாண்புமிகு மேலவைத் தலைவர் : அவை முன் உள்ள பிரச்சினை—

"மேலவை விதி 22-ன் கீழ் இன்று கேள்வி நேரம் கைவிடப்படலாம்".

தீர்மானம், அவையின் முடிவிற்கு விடப்பட்டு, ஒருமனதாக நிறைவேற்றப் பட்டது.

### 2. கவன ஈர்ப்புத் தீர்மானங்கள்.

மாண்புமிகு மேலவைத் தலைவர் : அடுத்து, கவன ஈர்ப்புத் தீர்மானங்கள். திரு. ஈ. எஸ். வெங்கடேசன் அவர்களுடைய கவன ஈர்ப்புத் தீர்மானத்தை பிறகு எடுத்துக்கொள்ளலாம்.

அடுத்த கவன ஈர்ப்புத் தீர்மானம், மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இல்லாததால், இன்னொரு சமயத்திற்கு தள்ளிவைக்கப்படுகிறது.

[1983 ஜனவரி 31

### 3. ஆளுநர் உரையின் மீது விவாதம்—தொடர்ச்சி.

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** இன்றைய விவாதத்தை இன்றைக்கு முடித்தாக வேண்டும். அடுத்த நாளிலே, எதிர்க் கட்சித் தலைவர் அவர்களும், சர்க்கார் தரப்புத் தலைவர் அவர்களும் பேசுவார்கள். அதனால் இன்றைக்கே முடிக்கவேண்டியிருப்பதால், நேரத்தில் முடித்து ஒத்துழைக்க வேண்டுமென்று எல்லோரையும் கேட்டுக்கொள்கிறேன். ஒவ்வொரு உறுப்பினரும் அதற்கு ஒத்துழைத்தால்தான் இந்த நிலை சாத்தியமாகும்.

**திரு. பா. ரா. தாமஸ் :** மாண்புமிகு தலைவர் அவர்களே, ஆளுநர் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்திலே கலந்துகொண்டு பேச வாய்ப்பளித்தமைக்கு நன்றியைத் தெரிவித்து, ஆசிரியர்கள், பட்டதாரிகள் முற்போக்கு முன்னணி சார்பில் என்னுடைய கருத்துக்களைக் கூற முன்வருகிறேன். அரசியல் சட்டத்தின் 45-வது பிரிவிலே, நாட்டிலே கட்டாய இலவசக் கல்வித் திட்டத்தை அமுல்படுத்த வேண்டுமென்பதற்காக, அரசியல் சட்டம் புகுத்தப்பட்ட காலத்திலேயே, அதற்கு உறுதியளிக்கப்பட்டது. ஆனால் 30 ஆண்டுக் காலம் ஆகியும்கூட கட்டாய இலவசக் கல்வியானது அமுல்படுத்தப்படாது இருக்கிறது. ஒருவேளை மத்திய அரசும் மாநில அரசும் இதை அமுல்படுத்தாததற்கு பல காரணங்கள் கூறலாம். ஒருவேளை, நிதிப் பற்றாக்குறை, பெற்றோர்கள் ஏற்றுக்கொள்ளாத நிலை, கட்டாயக் கல்வியை எதிர்க்கும் நிலை, சமூகப் பொருளாதார நிலை இவைகள் காரணமாக எந்த மாநில அரசும் இதை முழுமையாக அமல்படுத்த முயலாமல் இருந்திருக்கலாம். முன்பு நண்பகல் உணவுத் திட்டம் என்று கொண்டுவரப்பட்டு, வறுமைக் கோட்டிற்குக் கீழே உள்ள 14 வயதுக்குட்பட்ட குழந்தைகளுக்கு இலவச உணவு அளிப்பது என்று இருந்தது. மேலும், மூன்றாவது வகுப்பு வரையிலே தடங்கல் இல்லாமல் வகுப்பு உயர்வு கொடுக்கப்பட்டது. தவிர, இலவசப் பாடப் புத்தகங்கள், இலவசக் கரும்பலகை எல்லாம் கொடுத்து வழக்கப்படுத்தினாலும், முழுமையாக குறிக்கோள் அமுல்படுத்தப்படவில்லை. இப்போது 14 வயதுவரையில் கட்டாய இலவசக் கல்வியை அமல்படுத்தியும், நாட்டிலே எழுத்தறிவின்மையைப் போக்க முடியாத நிலையில் இருக்கிறோம்.

இந்த நண்பகல் உணவுத் திட்டத்தைப் பொறுத்து சில ஐயப்பாடுகள் தோன்றியிருக்கின்றன. நம்முடைய முதலமைச்சர் அவர்களுடைய சத்துணவுத் திட்டத்தை குழந்தைகளின் ஒன்பதாவது வயது வரை அமுல் படுத்துகிறோம். ஏற்கெனவே 14 வயது வரையுள்ள ஏழைக் குழந்தைகளுக்கு, 8 ஆம் வகுப்பு வரையில் கொடுத்துவந்த திட்டம் கைவிடப்பட்டதா என்று அறிய விரும்புகிறேன். இதற்கு முன்பு 20.50 லட்சம் பேருக்கு முதலாவது முதல் எட்டாவது வகுப்பு வரை கொடுத்தோம். அதைப்பற்றி அரசு



1983 ஜனவரி 31] [திரு. பா.ரா.தாமஸ்]

திட்டவட்டமாக அறிவிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அதற்கு மேல் பல முயற்சிகளை மேற்கொண்டு வெற்றி பெறாததால், மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சத்துணவுத் திட்டத்தை அமுல்படுத்திய பிறகு பெருத்த மாற்றத்தை நாம் பார்க்கிறோம். கிராமப்புறங்களிலேயும் நகர்ப்புறங்களிலேயும் குழந்தைகள் சுறுசுறுப்பாகப் பள்ளிக்குச் செல்வதை நாம் பார்க்கிறோம். அவர்கள் அங்கு நல்ல உணவைப் பெற்று திடகாத்திரமானவர்களாக ஆகி எதிர்காலத்தில் நல்ல சந்ததியினரை உருவாக்குகின்ற ஒரு சூழ்நிலை உருவாவதைக் குறித்து நான் பாராட்டுகிறேன்.

ஆசிரியர்களை இந்தப் பணியிலேயிருந்து முழுமையாக விடுவிக்க வேண்டுமென்ற கோரிக்கையை மாண்புமிகு முதலமைச்சர் அவர்களும் அரசும் ஏற்றுக்கொண்டதற்கு நன்றி தெரிவித்துக்கொள்கிறோம். ஆனால் 65 லட்சம் குழந்தைகள் பள்ளிக்கு வரக்கூடிய நிலை உருவாகியிருக்கிறது. இதனால் பள்ளிகளில் குழந்தைகள் சேர்க்கை 2.63 லட்சம் அதிகரித்திருக்கிறது. இந்தச் சேர்க்கை முதலாவது வகுப்பிலிருந்து எட்டாவது வகுப்பு வரையில் நிகழ்ந்திருக்கலாம். டிராப்-அவுட்ஸ் ஆன குழந்தைகள்கூட பள்ளிக்கு வந்து கொண்டிருக்கிறார்கள். ஆகவே பணியிடங்களை ஒதுக்கும்போது, பரவலாக ஆசிரியர்கள் பணியிடங்கள் ஒதுக்கப்பட வேண்டியிருக்கிறது. அது மட்டுமல்ல. வருகின்ற ஐந்தாறு ஆண்டுகளில் மேலும் மேலும் ஆசிரியர்கள் எண்ணிக்கை தேவைக்கு ஏற்ப அதிகரிக்கக்கூடிய நிலை இருக்கிறது. காரணம் இன்றைக்கு 2.63 லட்சம் குழந்தைகள் அதிகமாகச் சேர்க்கை இருக்கிறது. இதற்கு ஏற்றவாறு நிதி ஒதுக்கீடும் செய்ய வேண்டும் என்று வலியுறுத்திக் கூற ஆசைப்படுகிறேன்.

இத்தோடு, இந்த சமயத்திலே கிராமப்புறங்களில் ஏற்றத்தாழ்வுகளைப் போக்கக்கூடிய ஒரு சூழ்நிலை உருவாகியிருக்கிறது. அனைத்துக் குழந்தைகளும் ஒன்றாக உட்கார்ந்து உணவு சாப்பிடுகிறார்கள். சமத்துவமான, ஒரு வேறுபாடு இல்லாத அளவில் சமமாக உட்கார்ந்து உண்ணக்கூடிய நிலை ஏற்பட்டிருக்கிறது. அதே நேரத்திலே இரண்டு முதல் ஐந்து வயது வரை புள்ளோருக்கு பால்வாடிகள் ஆரம்பித்திருக்கிறோம். அங்கு நல்ல உணவு கொடுத்துக்கொண்டிருக்கிறோம். ஆனால் கிராமப்புறத்திலே இருக்கின்ற குழந்தைகள் எல்லாம் இதில் முழுமையாகப் பங்குகொள்ளமுடியாத இடர்ப்பாடுகள் ஏற்பட்டிருக்கின்றன. அவர்கள் வெகுதூரம் வந்து பால்வாடியிலே உணவு பெறவேண்டியிருக்கிறது. நம் கல்வி அமைச்சர் அவர்கள் "நாம் நாற்றங்கால் பள்ளிகள் தொடங்க இருக்கிறோம்" என்றார்கள். ஏறத்தாழ 33 ஆயிரம் நாற்றங்கால் பள்ளிகள் ஆரம்பிக்கப்பட இருக்கின்றன. இதை நினைத்துப்பார்க்கும்போது, நாம் அங்கும் பயிற்சி பெற்ற ஆசிரியர்களை நியமிக்க முன்வர வேண்டுமென்று வலியுறுத்திக் கூற விரும்புகிறேன்.

ஆளுநர் அவர்கள் உரையிலே, தமிழகமானது யுனெஸ்கோ விருதான க்ரப்ஸ்காயா விருதைப் பெற்றிருக்கிறது என்று சொல்லியிருக்கிறார்கள். அந்தப் பரிசைப் பெற்றிருக்கிறார்கள். இதற்கு நம்முடைய கல்வி அமைச்சர் அவர்களையும் நமது கல்வித் துறையையும் அரசையும் பாராட்டுகிறேன். எழுத்தறிவைப் பெருக்குவதிலே தமிழகம் முதன்மையாக இருக்கிறது என்பது போற்றத்தக்கது. இதற்கு நம்முடைய மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் மிகவும் பாராட்டப்படவேண்டியவர்கள். ஆனால் இதற்கும் மேலாகவே மற்ற மாநிலங்கள் போட்டி போடக்கூடிய நிலைமைகள் உருவாகியிருக்கின்றன. பிற மாநிலங்களில் உள்ளவர்கள் இந்தப் பரிசைப் பெற முயற்சி எடுப்பதும், அதற்கு முயல்வதும் நியாயமானதாகும். தமிழகத்திலேயும் தொடர்ந்து உயர்ந்த நிலையை நிலைநிறுத்த வேண்டுமென்றால், நம்முடைய மாநிலத்திலே ஏராளமான கல்விக்கூடங்கள் தொடங்கப்பட வேண்டும். அப்படி கல்விக் கூடங்கள் தொடங்கப்படுமானால், கூடுதலான பள்ளிக்கூடங்களுக்கு ஏற்ப போதுமான அளவுக்கு ஆசிரியர்கள் நியமிக்கப்பட வேண்டும். இப்போதுகூட சத்துணவுத் திட்டத்திலே என்ன குறை சொல்லப்படுகிறது என்று சொன்னால், இத்தனை மாணவர்கள் கூடுதலாகச் சேர்ந்திருந்தபோதும்கூட, அதை ஈடுகட்டக்கூடிய அளவுக்கு, மாணவர்கள்-ஆசிரியர்கள் விகிதாசாரப்படி, தேவையான ஆசிரியர்கள் நியமிக்கப்படவில்லை என்று சொல்லப்படுகிறது. அதைப் போக்கக்கூடிய அளவிலே புதிதாகப் பள்ளிக்கூடங்கள் ஆரம்பிக்க வேண்டும். அதற்கேற்ப நிதி ஒதுக்கீடும் செய்ய வேண்டும். கல்வியே எல்லாவற்றையும் சாப்பிடுகிறது, வருவாயில் கால் சதவிகிதத்தைச் சாப்பிடுகிறது என்றாலும்கூட, அது நம்முடைய மாநிலத்தின் எதிர்காலத்திற்கான மூலதனமாக, ஒரு 'அசெட்'-டாக இருக்கிறது. இன்றையதினம் 112 கோடி ரூபாய் செலவு என்று இருந்தாலுங்கூட, அது ஒரு மூலதனம். எதிர்காலத்திலே ஒளிமயமான ஒரு பொற்காலத்தை நாம் படைத்துக் கொண்டிருக்கிறோம் என்பதைச் சொல்ல விரும்புகிறேன். இந்தப் பணி யிடங்களைப் பற்றிச் சொல்லிக் கொண்டிருக்கும்போது, 'தனியார் பள்ளி (கட்டுப்படுத்தும்) சட்டம்' என்று இருக்கிறது, அந்தச் சட்டத்தின்படி சிறுபான்மையோர்-நிர்வாகத்தினர், அவர்கள் வேண்டுமென்றால், பள்ளியைத் தொடங்கலாம், பள்ளியைத் திறக்க எந்தவிதமான என்டோமென்ட்டும் இல்லாமல் தொடங்கலாம் என்ற நிலை இருக்கிறது. அதிலே நம்முடைய அரசு ஒரு சிறிய மாற்றத்தைச் செய்யக் கடமைப்பட்டிருக்கிறது. அப்படிப் பட்ட நிர்வாகத்தில் என்டோமென்ட் எதுவும் இல்லாமல் பள்ளிகளைத் திறந்துவிட்டு ஆசிரியர்களுக்குப் பணி கொடுக்கிறார்கள். அதற்காக நாங்களும் பரிந்துரை செய்கிறோம். நாங்கள் அமைச்சர் அவர்களை அணுகுகிறோம், அரசை அணுகுகிறோம். "அங்கு பணியிடங்கள் கொடுங்கள். பள்ளிகள்





சரியாகச் செயல்படவில்லை" என்று சொல்கிறோம். அந்தப் பள்ளிகளில் ஒரு சிறு தொகையை ஆசிரியர்களுக்கு ஊதியமாகக் கொடுக்கின்றார்கள். அரசு கொடுக்கின்ற முழுமையான தொகையை, ஊதியத்தை அவர்களுக்குக் கொடுக்காமல் இருக்கின்றார்கள். ஆசிரியர்கள் மிகவும் அவல நிலையில்

(முற்பகல் 9-40)

இருக்கிறார்கள். அதற்கு என்ன காரணம் சொல்லப்படுகிறதென்றால், அரசியல் சட்டத்திலே

"All Minority Communities shall have the right to establish and administer educational institutions of their choice."

என்று சொல்லப்பட்டிருப்பதாலே, அவர்கள் ஆரம்பித்து விடுகிறார்கள். கல்வி மானியத்திலே நாம் நிதி ஒதுக்கீடு செய்வதற்கு மேலாக ஆசிரியர்களுக்கான பணியிடங்கள் கேட்டால், எப்படிக் கொடுக்க முடியுமென்று அரசுத் துறையிலே சொல்லுகிறார்கள். அதற்கு ஒரு வரையறை செய்ய வேண்டும். Recognition has also been given without aid. இரண்டு நிலை உருவாகியிருக்கிறது. இதை மாற்றுவதற்கு திட்டவட்டமாக தனியார் பள்ளிகளைக் கட்டுப்படுத்தும் சட்டத்திலே ஒரு குறிப்பு கொடுக்க வேண்டும். முன் அனுமதி கொடுத்தால்தான் சிறுபான்மையினர் பள்ளிகளை ஆரம்பிக்க இயலும் என்றும் அப்படி முன் அனுமதியின்றி பள்ளிகளை ஆரம்பித்தால், அதனால் ஏற்படும் பணச் சுமையை இரண்டு, மூன்று ஆண்டு களுக்கு அவர்களே தாங்கிக் கொள்ள வேண்டுமென்றும் ஒரு நிலையை உருவாக்க வேண்டும்.

கடந்த ஓராண்டுக் காலமாக பாரதியார் நூற்றாண்டு விழாவைக் கொண்டாடியிருக்கிறோம். எங்களுடைய கட்சித் தலைவரவர்கள்கூட ஒரு கருத்தைச் சொன்னார். இந்த விழாவைக் கொண்டாடுவதில் வீண் விரயமாகிறது என்ற நிலை மக்களுடைய எண்ணத்திலே உருவாகாமல் பார்த்துக்கொள்ள வேண்டும். பெரும் அரசியல் கட்சித் தலைவர்கள், அறிவியல் வல்லுனர்கள், யாராக இருந்தாலும், விழா எடுக்கும்போது, அதற்காகப் பணத்தைச் செலவு செய்யும்போது, வீண் விரயமில்லாமல் தடுக்க நடவடிக்கை எடுத்தால்தான், மக்களுடைய மனது நிறைவுறுமென்று கூறிக் கொள்கிறேன். வரும் ஆண்டுகளிலும் தொடர்ச்சியாக டிசம்பர் 11 ஆம் தேதியை, பாரதியார் பிறந்த தினத்தை, நாட்டின் ஒருமைப்பாட்டு தினம் என்று கொண்டாட இருப்பது முன்மாதிரியான ஓர் எடுத்துக்காட்டாகும். இந்திய நாட்டின் ஒருமைப்பாட்டைக் காப்பதில் தமிழகம் எந்த அளவிற்கு முன்னணியில் இருக்கிறதென்பதை இது எடுத்துக் காட்டுவதாக இருக்கிறது.

மற்றொரு காரியத்தையும் அதில் புகுத்திக்கொள்ள வேண்டும். நம்முடைய மாநிலத்தில் இன்றுள்ள நிலை என்னவென்றால் மாநிலத்தின் உரிமைகள், கடமைகள், மத்திய அரசின் உரிமைகள், கடமைகள் என்ன என்பதில் கருத்து மோதல் ஏற்பட்டிருக்கிறது. நம்முடைய முன்னேற்றம் தடைப்படக்கூடிய நதி நீர் பிரச்சினை, நிதி ஒதுக்கீடு பிரச்சினை, ஜனாதிபதி ஆட்சியைப் புகுத்துவது அல்லது மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட மாநில ஆட்சியை அகற்றுவது, விசாரணைக் குழுவை அமைத்து மாநில அரசைச் சிறுமைப் படுத்துவது, மாநில அரசை நகராட்சிபோல் நடத்துவது—இப்படி பல பிரச்சினைகள் இருக்கின்றன. எனவே பாரதியார் பிறந்த தின விழாவை பரவலாக்கி, எல்லா மாநிலங்களிலும் கொண்டாடுவதுடன், கருத்தரங்குகள் நடைபெறும் நிலையை உருவாக்க வேண்டும். மத்திய அரசு, மாநில அரசுகளின் கடமைகள் என்ன என்பதை உருவாக்கினால் நல்லது. மாநில அரசுகளும் மைய அரசும் இதைப்பற்றிச் சிந்தித்து, நல்ல முடிவை உருவாக்கினால், நல்ல முறையில் நாட்டின் ஒருமைப்பாடு நிலைத்து நிற்க வாய்ப்பு ஏற்படும். இப்போது மத்திய அதிகார வரம்பிலே 97 பிரிவுகள் இருக்கின்றன. மாநில அதிகார வரம்பிலே 66 பிரிவுகள் இருக்கின்றன. கூட்டு முயற்சியில் 47 பிரிவுகள் இருக்கின்றன. சில சமயங்களிலே,

The Centre prevails upon the State Government and over-powers the State Government

என்று கருத்து மோதல் இருக்கிறது. முதலிலே பாரத நாட்டின் ஜனாதிபதி அவர்களால் நீதிபதி திரு. செடல்வாட் அவர்கள் தலைமையிலே ஒரு குழு அமைத்து, மைய, மாநில அரசுகளின் கடமை என்ன என்று அவர்கள் 1969 ஜூனிலே அறிக்கை வெளியிட்டார்கள். மாநிலங்களுக்கு அதிக அதிகாரங்களை வழங்க வேண்டுமென்று அவர்கள் அதில் தீர்ப்பு கூறியிருக்கிறார்கள். ஆனால் அதற்கு சட்டத் திருத்தம் தேவை என்று அவர்கள் சொல்லவில்லை. ஆனால் தமிழ் நாட்டில் டாக்டர் பி. வி. ராஜமன்னார் குழு அளித்த அறிக்கையில் திட்டவட்டமாகக் கூறியிருக்கிறார்கள். மாநில அரசினுடைய உரிமைகளை, அதிகாரங்களை அதிகப்படுத்த சட்டத் திருத்தம் கொண்டுவர வேண்டுமென்று சொல்லியிருக்கிறார்கள். அந்த அடிப்படையிலே, இன்றைய தினம் இந்தியாவிலே புதிய சூழ்நிலை உருவாகிக் கொண்டிருக்கிறது. மாநிலங்களிலும், மத்தியிலும், ஒரே கட்சியின் ஆட்சி என்றில்லாமல் மாநிலங்களில் வேறு கட்சிகள் அமர்ந்து கொண்டிருக்கும் நிலையில், தக்க மாற்றங்களைச் செய்ய அகில இந்திய அடிப்படையிலே பாராளுமன்ற உறுப்பினர்கள், சட்டப் பேரவை, மேலவை உறுப்பினர்கள் எல்லோரும் கருத்தொருமித்து, நல்ல முறையில் சட்டத் திருத்தத்தைக் கொண்டு வர வேண்டும். கட்டுப் பொறுப்பிலே பல பிரிவுகளைச் சேர்க்க வேண்டிய நிலை இருக்கலாம். மாநிலங்களின் அதிகாரத்திற்குள் இருக்கும் சில பிரிவுகளை



மத்திய அரசுக்குக் கொண்டுவர வேண்டிவரும். நதி நீர் பங்கீடு, மின்சாரம் போன்றவற்றைக் கொடுக்க வேண்டியிருக்கலாம். அப்படி மாற்றியமைக்க வேண்டிய நிலை உருவாகியிருப்பதால், அதற்கு நம்முடைய அரசு முன் நின்று, தக்க நடவடிக்கைகள் எடுக்க வழி காண வேண்டும். இந்திய ஒருமைப்பாட்டைக் காக்க வேண்டுமென்ற ஒரே காரணத்தைக் கொண்டு நம்முடைய அரசு கொண்டாடும் பாரதியார் விழாவை அடிப்படையாகக் கொண்டு, இந்தக் கருத்தை உருவாக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சரவர்கள் இங்கே இருக்கிறார்கள். அவர்கள் மிகவும் துடிப்பாக மாநிலத்திலுள்ள உள்ளாட்சித் துறையை நல்ல முறையிலே நிர்வகித்து வருகிறார்கள். அதற்காகப் பாராட்டுக்களைத் தெரிவித்துக்கொள்கிறேன். இருந்தாலும் அதிலுள்ள சில குறைபாடுகளைத் தெரிவித்துக்கொள்கிறேன். கடந்த 10 ஆண்டுகளாக அங்கே மக்கள் பிரதிநிதிகள் இல்லை.

Bureaucracy is like fire—invaluable as a servant but ruinous when it becomes a master.

ஒரு எஜமானனாக அதிகார வர்க்கம் மாறிவிட்டால், அவர்களுடைய சாம்ராஜ்யத்தை நிலைநிறுத்திக்கொண்டு, மக்களுடைய உணர்வுகளை மதிக்காது, மக்களின் உணர்வுகளுக்கு எதிரான நிலையில் அவர்கள் ஈடுபடும் நிலையைப் பார்க்கிறோம். தமிழகத்தில் 378 பஞ்சாயத்து யூனியன்களில் எங்கே மக்கள் பிரதிநிதிகள் இருக்கிறார்கள் ? எல்லாப் பஞ்சாயத்து யூனியன்களையும், நகராட்சிகளையும், மாநகராட்சிகளையும் அவர்கள் கட்டிக் காக்க முடியும். ஆனால் நீதியை நிலைநாட்ட முடியாது என்பதால் சொல்கிறேன். அமைச்சரவர்களுடைய ஆற்றலைக் குறைத்துச் சொல்லவில்லை. மதுரையிலே பார்த்தோம். மாண்புமிகு முதலமைச்சரவர்களே பேசியிருக்கிறார்கள். எல்லா உயர்மட்ட அதிகாரிகளும் பொல்லாதவர்கள் அல்ல, திறமையற்றவர்கள் அல்ல. ஒருசிலர் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகளை மதிக்காமல், அவர்களுடைய உணர்வுகளை மதிக்காமல் இருக்கிறார்கள். அவர்கள் வெளியே போவது நல்லது. அண்மையில் மதுரையில் அனைத்துக் கட்சிக்காரர்களும் சேர்ந்து ஒரு தீர்மானத்தை நிறைவேற்றுகிறார்கள். வெளியே போய் அந்த அமைப்பின் உயர்மட்ட அதிகாரி ஒரு அறிக்கை கொடுக்கிறார். அது அந்த மன்றத்தையே அவமதிப்பதாக இருக்கிறது. அதுமட்டுமல்ல. மாநிலத்திலே நம்முடைய மேல் மட்ட, குரூப் 1 அதிகாரிகள், அனுபவம் மிக்கவர்கள், ஆற்றல் மிக்கவர்கள் இருக்கிறார்கள். அவர்களையெல்லாம் ஐ.ஏ.எஸ். அந்தஸ்து கொடுத்து உயர்ந்த அதிக விழுக்காட்டை ஒதுக்க வேண்டும். இப்போது 18 சதவிகிதம் என்று இருக்கிறது. அதை 50 சதவிகிதமாக உயர்த்த வேண்டும். இப்போது பெரிய வெற்றிடம் ஏற்பட்டிருக்கிறது.

அதிகாரிகள், பிரதிநிதிகளை எதிராகக் கருதும் நிலை இருக்கிறது. ஆட்சிப் பொறுப்பிலே உள்ள கட்சிக்காரர்களே, அதிகாரிகளுக்கு எதிர்க் கட்சியாக மாறும் நிலை இருக்கிறது. ஜனநாயகத்திலே பயிற்சிக் களமாக இருக்கும் உள்ளாட்சித் துறை சூனியமாக மாறிவிட்டிருக்கிறது. நிர்வாகத்திலே கருத்துக்களைச் சொல்லும் வாய்ப்புகளின்மை, மக்களுடன் நேரடியாகத் கொள்ள முடியாத நிலை. நிர்வாகத்திலே கருத்துக்களைச் சொல்ல முடியாத நிலைகள் இவற்றை இந்த சூனியத்தினால் ஏற்படுத்திவிட்டோம். எனவே உள்ளாட்சித் தேர்தல்களை உடனடியாக நடத்த வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு:** தலைவரவர்களே, உள்ளாட்சித் துறைத் தேர்தல்களைச் சீக்கிரமாக நடத்த வேண்டுமென்பதற்காகத்தான் அரசாங்கம் பல்வேறு நடவடிக்கைகளை எடுத்துக்கொண்டிருக்கிறது. குறிப்பாக இன்று உயர்நீதி மன்றத்திலே அரசின் சார்பிலே தீர்ப்பு இருந்தாலும், அதை எதிர்த்து உச்ச நீதி மன்றத்திற்கு ஒருசிலர் அப்பீல் செய்ததால்தான், இப்போது அந்தத் தேர்தல்களை நடத்த முடியாத சூழ்நிலை ஏற்பட்டிருக்கிறது. ஆகவே அனைத்துக் கட்சித் தலைவர்களையும் கூட்டி, இருக்கின்ற நிலைமைகளை விளக்கி, அவர்களிடத்திலே பேசியிருக்கிறோம். அந்த மேல் முறையீடு, உச்ச நீதிமன்றத்தில் இருப்பதை உடனடியாக முடிவு அடையச் செய்ய நடவடிக்கைகளும் எடுக்கிறோம். அது முடிந்தவுடன் தேர்தல்களை உடனே நடத்தலாம்.

**திரு. பா. ரா. தாமஸ்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சரவர்களுக்கு நன்றி தெரிவித்துக்கொள்கிறேன். உள்ளாட்சித் துறையிலே உள்ளவர்கள், பணியாற்றுபவர்கள் நிர்வாகத் திறமை வாய்ந்தவர்களாகவும், அனுபவம் மிக்கவர்களாகவும் இருக்கிறார்கள். அவர்களுக்குப் பதவி உயர்வு கொடுக்க வேண்டும். முழுமையாக மாநகராட்சிகளுக்கான சட்டத்திருத்தம் கொண்டு வருவோமென்று சொல்லியிருக்கிறார்கள். அப்போதாவது இதைச் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

(முற்பகல் 9-50)

மின்சார உற்பத்தியைப் பொறுத்தவரையில், மின்சாரத்தில் தான் ஒரு நாட்டின் முன்னேற்றம் இருக்கிறது. தொழில் வளர்ச்சியும் இன்னும் பல்வேறு வளர்ச்சிகளும் மின்சாரத்தைப் பொறுத்துத்தான் இருக்கின்றன. நிலக்கரிப் பற்றாக்குறை இருக்கிறது. கப்பல் வாங்கப் போனால், மத்திய அரசு தடை செய்கிறது. நீர் மின்சாரம் உற்பத்தி செய்யலாமென்று பார்த்தால், அதற்கு



நம்மிடம் தண்ணீர் இல்லை. ஆகவே ஒவ்வொரு மாவட்டத்திலும் அனல் மின் நிலையங்களை அமைக்க வேண்டிய கால கட்டத்திற்கு நாம் வந்திருக்கிறோம். சக்தி வாய்ந்த அமைச்சர் அவர்கள் இந்தத் துறையில் அமைச்சராக இருக்கிறார்கள். அவர்களே ஒரு பொறியாளர்.

**மாண்புமிகு மேலவைத் தலைவர்:** மின்சாரமே சக்தி வாய்ந்ததுதான். (சிரிப்பு)

**திரு. பா. ரா. தாமஸ்:** தலைவரவர்கள் சொல்வதை அப்படியே ஏற்றுக் கொள்கிறேன். தொடர்ந்து இன்றுவரை அவர்கள் வெகு சாமர்த்தியமாக இந்தப் பிரச்சினையைச் சமாளித்திருக்கிறார்கள். அதேசமயத்தில் ரிஜினல் எலெக்ட்ரிசிட்டி அதாரிடி ஏற்படுத்துவதன் மூலம் நம் மாநிலத்தின் உரிமை பாதிக்கப்படும் என்று சொன்னார்கள். நான் ஒரு கருத்தைச் சொல்கிறேன். வடக்கே 'தாமோதர் வேலி கார்ப்பரேஷன்' இருப்பது போல் தெற்கேயும் மத்திய அரசு, கேரள அரசு, தமிழ் நாடு அரசு ஆகிய மூன்று அரசுகளும் சேர்ந்து ஒரு அமைப்பை ஏற்படுத்தி, மேற்கு நோக்கிப் பாய்கிற நதிகளை இணைத்து, பண்டமாற்று முறையிலே இப்பிரச்சினைக்கு நல்லதொரு தீர்வுகாண வழிவகை வகுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். நதிகளைப் பொறுத்தவரையிலும், தேசியமயமாக்க வேண்டுமென்று சொல்லும் போது, மின்சாரத்தையும் தேசியமயமாக்க வேண்டுமென்ற கருத்து வரவில்லையா? இதையும் மாண்புமிகு அமைச்சரவர்கள் சிந்திக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, ஆசிரியர்களுடைய பணிப் பாதுகாப்புபற்றி ஒன்றைச் சொல்கிறேன்.

**மாண்புமிகு மேலவைத் தலைவர்:** மணி பாதுகாப்பா?

**திரு. பா. ரா. தாமஸ்:** பணிப் பாதுகாப்பு பற்றி.

**மாண்புமிகு மேலவைத் தலைவர்:** கடிகாரத்தைப் பார்த்து உறுப்பினர் பேசியதால் "மணி பாதுகாப்பு" என்று நான் நினைத்தேன். (சிரிப்பு)

**திரு. பா. ரா. தாமஸ்:** நிச்சயமாக குறிப்பிட்ட நேரத்திற்குள் முடித்து விடுகிறேன். 14 ஆசிரியர் சங்கங்கள் கூடி ஒரு தீர்மானத்தை நிறைவேற்றியிருக்கின்றன. மார்ச் மாதம் 12 ஆம் தேதி அவர்கள் டெமான்ஸ்ட்டிரேஷன் நடத்தவிருக்கிறார்கள். ஒரு ஆசிரியர் ஒரு பள்ளி நிர்வாகத்தால் பள்ளியிலிருந்து நீக்கப்பட்டால், மீண்டும் அவர் பள்ளியில் சேர்க்கப்படும்வரை அல்லது தீர்ப்பு வரும்வரை அவர்களுக்குக் கட்டாயம் அரசு ஊதியம் வழங்க

வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இதை நான் வலியுறுத்திக் கூறக் கடமைப்பட்டிருக்கிறேன். பத்திரிகையில் நான் ஒன்றைப் பார்த்தேன். தியாகராஜர் கல்லூரியிலே ஒரு அமளி ஏற்பட்டு ஒரு கார் கூட எரிக்கப் பட்டிருக்கிறது. அங்கு என்ன அநீதி நடந்திருக்கிறது என்று பார்க்க வேண்டும். அந்த அமளி மாநிலத்தின் எல்லா இடங்களுக்கும் பரவாமல் பார்த்துக்கொள்ள வேண்டும். "நோ ஒர்க்—நோ பே" என்ற அடிப்படையில் சென்ற ஆண்டு அரசு ஒரு ஆணையை வெளியிட்டது. அதை நிறை வேற்றினால், ஆசிரியர் சமுதாயம் வெகுவாக பாதிக்கப்படும் என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன். ஆகவே ஒரு ஆசிரியர் ஒரு பள்ளியிலிருந்து வெளியேற்றப்பட்டால், அந்த ஆசிரியர் சம்பந்தமான தீர்ப்பு வரும்வரை அவருக்கான ஊதியத்தை அரசே வழங்க வேண்டுமென்று நான் வலியுறுத்திக் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, உணவுப் பற்றாக்குறை நமக்கு ஒரு சோதனை. மதுரையில் குவிண்டால் ஒன்றுக்கு 30 ரூபாயிலிருந்து 100 ரூபாய் வரை விலை ஏறி யிருக்கிறது. அரிசி கிலோ ஒன்றுக்கு 2½ ரூபாயிலிருந்து 3 ரூபாய்க்கு ஏறியிருக்கிறது. இதற்காக, தேவைப்படும் உணவுப் பொருள்களை பிற மாநிலங் களிலிருந்து இறக்குமதி செய்தாவது நிலைமையைச் சமாளிக்க வேண்டும்.

குடிநீர் பிரச்சினையை நல்லமுறையில் தீர்க்க வேண்டும்.

அடுத்து, விவசாயத்தைப்பற்றி ஒன்றே ஒன்றைச் சொல்கிறேன். கண்மாய்கள், குளம் குட்டைகளில் பாசித் தீர்வை வேண்டாமென்று சொல்கிறோம். நீர்ப்பாசன அமைச்சர் அவர்கள் ஒன்றை அறிவித்திருக் கிறார்கள். விவசாயிகளைக் கொண்ட குழு அமைத்து அவர்களுடைய கட்டுப் பாட்டுக்குள் இது இருக்கும்படி பார்த்துக்கொள்ள வேண்டும். மீனவர் கூட்டுறவுச் சங்கத்திற்குக் கொடுக்காமல் விவசாயக் குழுவினரிடத்தில் இதற்கான பொறுப்பை ஒப்படைத்து இதற்கு நல்லதொரு தீர்வைக் காண வேண்டுமென்று கேட்டு வாய்ப்பு தந்தமைக்கு மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களுக்கு நன்றி கூறி, அமர்கிறேன்.

* THIRU A. R. DAMODARAN: Mr. Chairman, Sir the Governor's Address of 1983 is a sombre document and, delivered as it is in the context of a very severe drought situation coupled with an unparallelled crisis in the Power sector, the people of Tamil Nadu are naturally greatly exercised over how the Government are going to tackle this very severe problem that is facing the State.



Sir, the failure of the monsoon was evident and obvious to all of us and I am somewhat surprised at the statements made by certain Ministers of the Central Government that Tamil Nadu has not yet sent a report on the drought situation in Tamil Nadu. Sir, a report on drought conditions can only be sent after proper investigations and I am sorry that, like the Directors of the East India Company who insisted on certificates from their Collectors, the Government of India should also insist upon what could only appear to be a bureaucratic requirement regarding the failure of rains in Tamil Nadu. Those of us who have watched the behaviour of the monsoons over the past two seasons are only too well aware, as 19 Members of Parliament from the Congress Party should also be aware, that Tamil Nadu is facing a very severe situation in so far as drought is concerned and we require the assistance of the Government of India, not only in terms of additional grants to tackle the drought situation and to provide employment in the rural areas, but, what is far more important, to tackle the food situation which is fast deteriorating in this State. Valiant attempts have been made, including attempts by the Hon. the Minister for Metro Water Supply Thiru Raghavanandam, to attract the mercy of the God of Rain in the distinguished and melodious company of Kunnakkudi Vaidyanathan. But, unfortunately, these efforts have been in vain, possibly because the Hon. Minister is not beloved of the God, possibly because Gods are usually cruel in such matters. Nonetheless, apart from these vain pleadings that we have made, there can be little doubt that in the coming months, we will be facing a very severe situation on account of shortage of drinking water, shortage of water for irrigation, shortage of water for industries, shortage of water in Madras City and in the urban areas. While some have said that this kind of drought situation had existed in the past, we must also realise that, quantitatively speaking, a drought in 1983 is a very much more serious matter than a drought in 1973 or 1963 because of the very simple factor that our population has increased by over 18 per cent in the past decade and the requirement of drinking water necessarily increases with growth of population and also because of the vast increase in the industrial use of water, namely, water-supply diverted to industries. I am sure the Government of Tamil Nadu will do every-

thing possible, especially in view of the Hon. the Finance Ministers assurance that the finances of the Tamil Nadu Government are quite satisfactory and that our Plan effort will not be impeded by various schemes which we have introduced in 1982-83. I am sure that, with the resources of the State which appear to be in a satisfactory state according to the Hon. the Finance Minister, we will be able to tackle these measures in a very urgent manner.

One point I would like to mention regarding the shortage of water is that an unnecessary panicky situation should not be created in the metropolitan area and conflicting statements should not be issued by various authorities as to whether Madras City is to be evacuated or not, as to whether examinations are to be postponed, or preponed or not held at all. All these statements are to be given only if the Government tell us that we will not have water or that the City should be evacuated. If such a thing happens, whether the people will go is another problem altogether. I hope that the Universities will not act in a panicky manner and create great hardship to lakhs of our students who are all geared up and are ready to take the examinations. I fail to

(முற்பகல் 10-00)

see how the postponement of examinations is likely to alleviate the water situation in Madras because obviously we cannot send out our children from Madras City. Where will we send them? There is no place in Tamil Nadu which is having abundant supply of water and, even if we could evacuate, where will all these children or all these parents go? Therefore, all talk of evacuation is, in my opinion, hardly necessary and the Government should sit with the University authorities and ensure that the examinations are conducted at the proper time, at the usual time, because great chaos will be created in the educational field if this is not done.

A parallel to the drought situation, is the food situation in Tamil Nadu. Our paddy production, in terms of rice production, has fallen by 50 per cent. It is estimated that, as against 6.2 million tonnes, our anticipated production is likely to be only 3.8 million tonnes. The demands on the public distribution



system have also increased and it is imperative that an early assurance should be obtained from the Government of India, from the neighbouring States, from wherever it is possible, that we will have enough rice for the public distribution system. But, in the meantime, chaos is being created in the administrative field by the various restrictions that are imposed on the transport of foodgrains within the State itself. I would like to refer to the order that has recently been passed regarding the movement of rice or paddy from Thanjavur district. We were informed, a few years ago, that the whole of India was going to be one food zone. We have now descended to the level where even one State is not going to be a single zone but where independent Collectors are going to rule that their districts are going to be independent zones. The consequences of this action are going to be disastrous. Coupled with this is the fact that an announcement has been made that the public distribution system is going to issue rice only to persons with income below Rs. 1,000. May I ask the Government: "If you ban trading in Thanjavur district, if you ban movement of rice from one district which is at least nominally surplus in rice production compared to the other districts, where are the people going to buy rice in the open market?" The Collector of Tirunelveli has said that he is going to make Tirunelveli a zonal district and he is not going to allow rice to move out from Tirunelveli. There are Collectors in South Arcot, North Arcot and Chengalpattu who will not even wait for Government Orders to impose restrictions. They are so knowledgeable in administration that they will make their districts independent zones because every district is deficit. I would plead with the Government not to indulge in such short-term solutions which are no solutions at all, not to impose restrictions which are clearly illegal also, not to force the traders and the consumers to go to Court to obtain redress, but to sit with the people involved and think of how to solve the problem. They are not going to solve the problem by procuring 7 lakh tonnes for the public distribution system and forcing people with incomes above Rs 1,000 to buy non-existent rice in a market where rice does not flow." I hope that these restrictions, which are already being relaxed, will be removed. That is why I mention that there is no interaction at all between the Government, the District authorities, the traders, the consumers and the thousands of

people involved in the consumption of food articles. I would reinforce the plea made, not only by traders, not only by consumers, but by Members of this Hon. House that the District Administration today seems to exist in isolation, governed and policied by bureaucrats alone. We do not have in this House 21 Members who should have come from the Panchayat Union Councils and the Municipalities. In our Districts, the District Development Councils are existing in vacuum. There are many District Development Councils where meetings have had to be adjourned because there was not quorum. The Government want to carry out a drought relief programme of the magnitude of Rs. 190 crores. This is only an estimate and it may go up to Rs. 240 crores and it may go even higher depending upon the circumstances. I mention this because gradually we are finding that even Members of the Legislature are not properly acquainted with what is happening in our districts. The Government will never be able to solve a problem in the way in which our British administrators sought to solve a problem by sanctioning a sum of Rs. 200 crores in the Secretariat and asking 100 officers in the districts to carry out the programme. I want Advisory Councils to be established for essential commodities in every district. The plea has been made in Tiruchirappalli that Advisory Councils should be established for traders and consumers to supervise the distribution of essential commodities. A few months ago I made a plea to the Hon. the Minister for Food and Civil Supplies and also to the Hon. the Minister for Transport that in the distribution of petroleum commodities, advisory committees were necessary at the State and district levels. The Hon. Ministers were convinced with my argument and they were good enough to sanction advisory councils. At the State level, meetings have also been held and we have had discussions. Fortunately there is no problem as far as distribution of diesel is concerned, where controls have been removed, and at the State level with reference to kerosene distribution. But in many districts, the District Collectors, who pose as very knowledgeable persons in public distribution and in the distribution of essential commodities, have not cared to act upon the instructions of the Government and have refused to convene the advisory committees at the district level because they seem to think that they know everything about the public distribution system. I would request the Government to



send instructions to every District Collector that it is necessary, especially in view of the drought situation, that we should have advisory committees of consumers, traders and Government officials to supervise the distribution of essential commodities and to ensure that even procurement operations are done in a fair manner. One corollary of these restrictions is that within a few weeks, perhaps even within 2 weeks, the Collectors are going to tell the Government that even these district-wise restrictions are not enough, that they have not been able to procure paddy or rice from the millers and that, therefore, we should resort to a levy system; and then the Government will follow their advice and resort to a system of levy on farmers. After resorting to a system of levy on farmers, the Government will give Rs. 15 more per quintal, when the fall in production is 50 per cent. I cannot understand this psychology of our Government which is persecuting the farmers in this manner. All of us are representatives of the farmer community. All of us say that we come from rural areas and, in my opinion, when the Government should compensate the farmers for the tremendous task accomplished in raising food crops during a year of acute drought, instead of encouraging them in all their activities, the Government are giving them a sop of Rs. 15 per quintal and expect the farmers to be happy, deliriously happy, at the magnificent generosity of this Government. I would plead with the Government that unless they radically revise their procurement policies, unless they give, not a fair price, but more than a fair price, during the period of drought, the production of foodgrains will not only fall but will be permanently affected in Tamil Nadu. Thousands of acres have gone over to the cultivation of commercial crops. Thousands of acres have gone over to the cultivation of casuarina and fuel trees. I do not say that they are not important. Considering the energy situation, it is also important. But I would plead with the Government that, instead of trying to sequeeze the farmers and the traders and trying to justify all these operations because the Government are having the public distribution system distributing 8 or 9 lakh tonnes of rice to consumers, the Government should see that the production apparatus is not affected. I wish that the Hon. the Minister for Agriculture, who should countenance and support the plea of the agriculturists,

will plead vehemently, though not in this House, but at least in the Cabinet meeting, to ensure that justice is done to the farming community.

(முற்பகல் 10-10)

Sir, reference was made to the Cauvery Waters' dispute. The hon. Member Thiru Swaminathan referred to it and the hon. Member Thiru Ramamoorthy also referred to it. I do not know if the Government consider it a dispute at all because so far they have been acting in a friendly manner with both the neighbouring States as well as with the Government of India. Sir, I am not quoting the Budget documents and I shall do it during the Budget discussions. From 1971, every Minister for Irrigation has made a laconic statement in this House that he will discuss these matters with his colleagues across the border and that he will discuss this with the Irrigation Minister at the Centre. Sir, there is a book called the "Guinnes Book of World Records". In this book all sorts of feats are recorded. If a person swallows 25 glass tumblers, it is recorded as a world feat. I have written to Guinnes to record the assurances of the Hon. the Ministers for Irrigation in Tamil Nadu as a world record because for ten years we have been fooling about with this problem. We have not cared for the 3,50,000 acres of agricultural land which are going desolate and waste in Thanjavur district and now the Hon. Minister says that a dispute is still pending. Sir, I would like to know from him one simple matter. According to the 1924 Agreement—which we all adhere to and say that it is still in force and which the Karnataka Government say, expired in 1974—the Cauvery Waters Agreement was an agreement on flows of water into the Krishnarajasagar Dam. The flow of water was supervised by Tamil Nadu engineers as well as by Karnataka engineers. May I know from the Government, as authoritatively as possible, whether from 1974 any data has been given by the Government of Karnataka to the Government of Tamil Nadu regarding the flow of water into the Krishnarajasagar Dam? Now, they may have bilateral talks with their friends across the border, who may be in power or who may not be in power today. That is a matter between them. But, what interests the farmer is: if the Government believe that the flow agreement is still in force, then, why did they not take this matter at least to the





Court and file a Writ in the Supreme Court saying that until this issue is settled, the flow-data should be supplied to the Tamil Nadu Government? The Government have not done it. Now, two dams have been built across the Cauvery in the upper reaches and the flow to the Krishnarajasagar Dam has been affected. All that we have been able to do is to make an appeal, a humble appeal, to the Government of Karnataka, to its Hon. Chief Minister Thiru Gundu Rao, to release 5 tmc. of water; and, for this great favour, my hon. friend Thiru Ramamoorthy wants us to thank that Government also for releasing this 5 tmc.

THIRU K. RAMAMOORTHY: That was only in comparison with the present Chief Minister who has refused to do even that.

THIRU A. R. DAMODARAN: The hon. Member Thiru Ramamoorthy is anxious to draw distinctions between the present Chief Minister and the past Chief Minister. As far as I am concerned, I refer to the Chief Minister of Karnataka without any reflection on personalities. Whether it is Thiru Hegde or Thiru Gundu Rao, he will protect the interests of that State. But, what I am asking is what we are doing in Tamil Nadu. I agree that we cannot unilaterally go and refer the matter to an Inter-State River Waters Disputes Tribunal. There again, the hon. Member Thiru Ramamoorthy must realise that only if the Prime Minister nods her head, the matter will be referred to a Tribunal. The Prime Minister has not yet nodded her head. What are we going to do? Do we keep waiting for the nods of persons in power in a matter that is of such vital importance to the people of Tamil Nadu? I demand—I do not make a request, I demand—that a deadline should be set. Even if they have bilateral negotiations or trilateral negotiations or multilateral negotiations, if an agreement is not reached by 31st March 1983, then, the Government of Tamil Nadu should write to the Government of India and state: "We have tried negotiations but the negotiations have broken down. We will not have any more discussions and this matter must be referred, under the Inter-State River Waters Disputes Act, to a Tribunal for decision." Pending the decision of the Tribunal, the 1924 agreement, that is, the flow agreement, should be held to be in force. I realise the difficulties of the Government in coming to a decision on this

subject, not merely because the riparian rights of the ryots of Thanjavur are involved but those of us who have watched the political situation realise that sometimes the Governments have hesitated to take action because they do not know on which side they will be. Whatever that may be, Tamil Nadu cannot afford to neglect the riparian rights of a large number of people because of the political ambitions of political parties, whether it is D.M.K. or A.I.A.D.M.K. which may be hesitating to take a quick decision. Otherwise, millions of people will one day have only desolate lands. Therefore, a decision should be taken on this subject. I would appeal to the Hon. the Chief Minister to convene his Cabinet as urgently as possible and to reach a decision because the people of Tamil Nadu are not going to keep quiet on this matter for any continued length of time.

Sir, the power situation is one thing with which I would not like to deal now and it is a matter that will have to be taken up when the Power Debate takes place. But I would like to mention that quite apart from all the difficulties that we have had with the Central Government not sanctioning this or that project, I am one of those who have been pleading from 1968, when Anna introduced his resolution, that the second mine cut in Neyveli should be taken up, but it took about 12 years for the Government of India to announce the second mine cut at Neyveli. We must realise that power is not something which will come up in two or three years. It takes 7 years for a thermal unit to come to fruition. The delay in sanctioning a power project will affect the power target of a State. It is true that the BHEL equipment has also been found defective in some areas and there is some argument about it. It is also true that the coal which has to be transported from Calcutta and Singareni does not arrive in time and that we do not have sufficient coal on hand. With all that, may I ask the Government what the maintenance schedule of the thermal plants is and what they have been producing? Neyveli is producing 75 per cent to 80 per cent of its installed capacity, whereas the other two units, apart from the Basin Bridge plant, are suffering due to poor maintenance and flogging of the thermal equipment, because we do not have resources and there is no time for maintenance. I would request the Hon. Minister, who is also a technocrat himself, not only to tackle these problems



with the help of the State experts but not to hesitate in calling whomsoever he likes. In fact, when he went a few months ago to Japan to view the working of power plants, I thought we would have some new changes in this field. But we now want 1,000 MW nuclear power plant. In Japan they are revising their views and they want to have such a plant in mid-ocean. When such is the case, it is to be considered whether we should have any nuclear power plant, especially when we have no concept of security and no concept of guarding our nuclear installations, where dangerous radio-active fuel will be kept. I am really concerned about it and I think the answer to the problem in Tamil Nadu will be to ask for a third mine cut in Neyveli even now, so that we may have additional 1000 MW at least in the year 1990. I would wish that advance planning be taken up at this stage and, incidentally, I would like to mention that although we have allocated 35 per cent to 40 per cent of the Annual Plan outlay to power projects, one must confess that hereafter it may be a little difficult for us to allocate more funds for State sectors because of various activities that we have taken up. I will refer to that in the end.

(முற்பகல் 10-20)

Sir, I would like to say a few words on the question of language because this matter has attracted one hour and 25 minutes of Thiru Ramamoorthy's speech. Members of this House cannot be silent and I think no further comment is necessary than this. Sir, I switch off my television set at 8-45 p.m. because, after that, I am not interested in hearing "qawwalis" and "ghazals" sung by 65-year-old ladies. At least if they put young ladies, I may not switch off the television set. But, watching these

மாண்புமிகு மேலவைத் தலைவர்: நான் ரசிக்கிறேன் அதை.

Thiru A. R. DAMODARAN: What I wish to mention is that we are not against Hindi. The hon. Member, Dr. Muthiah Chettiar of Chettinad, perhaps in order to synchronize with the thinking of certain Members of the ruling Party, went to the extent of advocating the banning of Hindi films in Tamil Nadu. I hope that the Hon. Minister will not seriously take that advice because the hon. Member also mentioned that educational institutions receiving grants-in-aid and teaching Hindi should also be

disaffiliated. If that is done, the first University to be disaffiliated will be the Annamalai University where there is a Hindi Professor. I hope that such extremist attitudes will not be adopted. In fact, the Tamil Nadu Government have permitted Hindi as an optional subject in their Matriculation Schools. The CBSE Schools are teaching Hindi. The Hindi Prachar Sabha is propagating Hindi. I myself read Hindi up to the age of 16 Because I was educated in Delhi, I had to do it. There is an old saying: 'When in Rome, behave as Romans do'. When in Hindi Nadu, I had to study Hindi. I know a little Hindi, enough to get into a tram-car or to travel by a taxi. Beyond that, I do not know much Hindi.

மாண்புமிகு மேலவைத் தலைவர்: எனக்கு இங்கிலீஷ் தெரிந்த மாதிரியாக.

Thiru A. R. DAMODARAN: தங்களுக்கு எவ்வளவு இங்கிலீஷ் தெரியும் என்பது எனக்குத் தெரியாது. அதனால் நான் 'கம்பேர்' பண்ண முடியாது.

Anyhow, I only mention that we have no deep-rooted prejudice against Hindi. We are not against any of the regional languages in India. But, we definitely do not want Hindi to be prescribed as a compulsory subject for entrance to Government Departments, nationalised Banks and Central sector undertakings. Even the Oil Companies today have Hindi captions and English translations. In all the Banks, the loan application forms that we fill up are in Hindi and English. There is a very strong Hindi sector which is trying to enforce the study of this language in the South. I would plead with the hon. Member Thiru Ramamoorthy that, on this language question, we need no longer fight. As far as I am concerned, I am glad that at least in so far as English is concerned, the Tamil Nadu Government have said very cautiously that English can continue to be a link language. For this small mercy, I am grateful to them. I am one of those who believe that, in addition to these regional languages, we must have a link language and that, preferably, it should be English. That will help us to unify our country. I would, therefore, plead with the hon. Members of the Congress Party, who play a very important role, that we should not still make this an issue of contention in



the Southern States. All the Southern States are likely to have a unified opinion on this subject and I would wish that on this matter the Government of India should respect the late Pandit Jawaharlal Nehru's assurance and ensure that nothing is done to disrupt the integrity of our country.

Sir, the other matter is the most important matter which is covered in the first paragraph of the Governor's Address. I shall refer to it only in five minutes because others have each dealt with it for half an hour. It is about the Chief Minister's Nutritious Meals Programme. Sir, no Tamilian, perhaps even no Indian, will say that this programme is bad. In fact, it is a very good programme. I remember that when my mother was alive, even till the last of her days, before we all ate lunch or dinner, she used to place a handful of rice for the birds to eat. There is also another customary tradition in Tamil Nadu. When we have the ritual of ancestor-worship, it is customary for those of us who observe it on "Amaavaasai" or on the day of the "thithi" to feed poor people. Whether it is hundred persons or a thousand persons depends upon the capacity of that person. No Tamilian will ever say that this programme is not good. I do not also deny what the hon. Member Thiru Swaminathan stated while quoting profusely from the United Nation documents that nutrition is very important. Of course, it is important. Even in our house, the first thing we do is to feed the children and keep them healthy. There is nothing absolutely wrong in the Government saying that it will have a programme in this way which is going to cost Rs. 112 crores in 1982–83 and which will probably cost Rs. 150 to 160 crores in 1983–84. But one thing I would like them to understand clearly. In 1980 when we lifted Prohibition, it was stated that Rs. 700 crores would be generated during the Sixth Five-Year Plan for Power projects, Agriculture, Co-operation, Industrial Development and for other sectors of the Plan. One sector of the Plan is Social and Community Development under which this Chief Minister's Nutritious Meal Programme comes. I would like the people of Tamil Nadu to appreciate clearly that if it is a matter of policy with the Government that they consider the C.M.N.M.P. should come under the Social and Community Development programme, they must be clearly told that there is bound to be a cut in Plan outlay in all other sectors of the economy and that the people must be prepared

[Thiru A. R. Damodaran] [1983 ஜனவரி 31

for this cut. It is not correct to assume that there will not be any cut on account of the C.M.N.M.P. The consumers of power should not grumble at a 40 per cent cut which will remain for the next 10 years because power is going to be in short supply. There will be the same cut in the field of agriculture, co-operation and industrial development. Therefore, I would like the Government of Tamil Nadu not to mention in the sophisticated language of the Hon. the Finance Minister that there would be no cut in future Plan outlay because a Rs. 845 crore plan has been sanctioned and approved for 1983-84. I would like to ask a simple question. If this sum of Rs. 112 crores had not been spent, would you have only a Rs. 845 crore plan or would you have a Rs. 957 crore plan? This is simple arithmetic. Therefore, when some of us express grave misgivings about the future development plan of Tamil Nadu not only in this particular sector but in almost all the other parallel sectors which are equally important, food production, power production, science and technology, development of solar energy for de-salination plant, development of solar and wind power for energy sources, the exploitation of lignite–all these sectors are likely to be affected–I would like the Government of Tamil Nadu to consider very deeply that this C.M.N.M.P., which is of course a matter of faith with them, does not affect the other sectors because no political party which introduces a scheme such as this has ever been able to withdraw the same without falling out of power. Even in some other Asian countries like Sri Lanka, Indonesia, etc., it is said that such a subsidised programme of food is in vogue. I have here authority to show that even Roman Emperors in 214 B.C. tried to capture power by distributing food at half the cost and by distributing gold sovereigns from the Treasury. We have, of course, our own Mangalyam scheme. Since there was no such mangalyam, they had distributed gold sovereigns and it is all past history. I would request the Government of Tamil Nadu to consider all aspects and if they consider this scheme to be a part of the plan, they should include it in their plan and say to the Government of India that it is our State Plan and that the Government do not care about the other sectors. We are in a grave crisis as far as food is concerned and as far as power is concerned. I would request the Government of Tamil Nadu to consider these matters and not to say that all those who express misgivings about the scheme belong to the vast



1983 ஜனவரி 31] [Thiru A. R. Damodaran]

body of unenlightened public opinion and the class of journalists who are criticising the Government because they want to criticise the Government. We are not interested in it and we are not politicians. At least I am not a politician and I do not belong to any political party. I welcome the scheme from the emotional aspect. Heart responds but the head does not nod. I would only plead with the Government of Tamil Nadu not to embark on such ambitious schemes which, though desirable, are not feasible at the present moment without grave implications for the State's economy and its growth. Thank you.

(முற்பகல் 10-30)

திரு. ஆ. நல்லசிவன்: மாண்புமிகு மேலவைத் தலைவர் அவர்களே, ஆளுநர் அவர்கள் உரையின் மீது என் கட்சியின் சார்பில் சில கருத்துக்களைக் கூற விரும்புகிறேன். ஆளுநர் உரையில் தமிழ் நாட்டில் உள்ள இன்றைய நிலைமைகளை, உண்மையான நிலைமைகளைப் படம்பிடித்துக் காட்டவில்லை என்பது என் கட்சியின் கருத்து, என் கட்சியின் அபிப்பிராயம். குறிப்பாக இந்த ஆளுநர் உரையினுடைய கடைசிப் பக்கத்திலேகூட அவர்கள், "எனது உரையில், இவ்வரசு எய்தியுள்ள சாதனைகளையும், எதிர்நோக்கியுள்ள சிக்கல்களையும், வருங்காலத்திற்கென எண்ணியுள்ள திட்டங்களையும் நான் உங்கள் முன் வைத்துள்ளேன்" என்று சொல்லியிருக்கிறார்கள். அப்படிச் சொல்கின்றபோது, எதிர்நோக்கியுள்ள சிக்கல்கள் என்று கூறுகிறார்கள். தமிழ் நாட்டிலே எதிர்நோக்கியுள்ளவை பெரிய சிக்கல்கள். அது பெரிய நெருக்கடி. அந்த நெருக்கடி அரசுக்குத் தெரியவில்லையா என்று எனக்குத் தெரியவில்லை. இந்த அரசு ஆட்சிக்கு வந்துகிட்டத்தட்ட 5½ ஆண்டுகள் ஆகிவிட்டன. இந்த 5½ வருடத்திலே இப்போது போல கஷ்டமான நிலைமைகளைத் தமிழக மக்கள் எதிர்நோக்கியது கிடையாது. கஷ்டமான நிலையில் தமிழ் நாடு இருக்கிறது. ஆனால் தமிழ் நாட்டு நிலைமையைப்பற்றிக் குறிப்பிடுகின்றபோது, இங்கே சிக்கல், 'டிபிகல்ட்டீஸ்' அல்லது 'கன்பவுண்டட் கிரிட்டிகல் பொசிசன்ஸ்" என்றுகூட சொல்லத் தயாராக இல்லை இந்த அரசு. உண்மை நிலைமை வெறும் 'டிபிக்கல்ட்டீஸ்' தானா? தென் மேற்குப் பருவ மழை பொய்த்துவிட்டது. குறுவை பாதிப்பு ஏற்பட்டிருக்கிறது. குறுவைப் பாதிப்பினால் உணவு உற்பத்தி பாதிக்கப்பட்டிருக்கிறது. அதற்குச் சரியான புள்ளிவிவரம் இருக்கிறதா என்ற சந்தேகம் எனக்கு இருக்கிறது. புள்ளிவிவரத்தில் கொடுக்கப்பட்டிருப்பதை விட அதிகமான பாதிப்பு இருக்கிறது என்று நான் நினைக்கிறேன். சம்பா பாதிப்பு ஏற்பட்டிருக்கிறது.

தண்ணீர் கிடைக்கவில்லை. சம்பா பற்றி ஏன் அறிக்கையிலே இல்லை? தண்ணீர் கிடைக்கவில்லை. ஆகவே நிலத்தடித் தண்ணீரைக் கொண்டுவர வேண்டும் என்று முடிவுகள் செய்தபோதிலும், சம்பா பயிர் உற்பத்தியில் பெரிய பிரச்சினை இருக்கிறது. மின்சாரப் பற்றாக்குறை இருக்கிறது. தமிழ் நாட்டிலே இந்த எச்.டி. லைன்சில் வருகின்ற 75 பர்செண்ட் கட்டின் காரணமாக தொழில்கள் பாதிக்கப்பட்டிருக்கின்றன. அவற்றின் உற்பத்தி பாதிக்கப்பட்டிருக்கிறது. தொழிற்சாலைகளுக்கு 'லே ஆப்' கொடுக்கப் பட்டிருக்கிறது என்பதை அரசாங்கமும் ஒத்துக்கொள்கிறது. குடிநீர் பிரச்சினையும் பெரிய பிரச்சினையாக இருக்கிறது. சென்னை நகரத்திலே குடிநீர் பிரச்சினை பெரிய பிரச்சினையாக இருக்கிறது. குடிநீர் பொறுப்பு ஏற்றிருக்கின்ற அமைச்சர் அவர்கள் போன மாதத்திலேயே இனிமேல் ஆல்ட்டர்நேடிவ் டேசிலேதான் தண்ணீர் சென்னைக்குக் கிடைக்கும் என்று சொல்லியிருக்கிறார்கள். அதைப்பற்றி இப்போது ஒன்றும் பேசாமலிருக் கிறார்கள். இப்போதுகூட பிப்ரவரி 15-க்குப் பிறகுதான் பார்த்து சர்க்கார் அறிவிக்கும் என்ற நிலை இருக்கிறது. இப்போது இருக்கின்ற குடிநீர்ப் பற்றாக்குறை காரணமாக, சென்னை நகரமே காலியாகிக் கொண்டிருக்கின்ற நிலைமைகள் இருக்கின்றன. அப்படி குடிநீர் சமாசாரம் இருப்பதை நாம் பார்க்கிறோம். அப்புறம் அரிசி மீண்டும் ஒரு கிலோவுக்கு ரூ. 4 என்று தமிழகம் பூராவும் விற்க ஆரம்பித்தாகிவிட்டது. இதுபோல் மற்ற பொருள் களின் விலைகளும் ஏறிக்கொண்டிருக்கின்றன. அடுத்த ஜூன் மாதம் வரைக்கும் மழை இருக்கப்போவதில்லை. நம்முடைய மாண்புமிகு மின்சார அமைச்சர் அவர்கள் கோளாவிலே இருந்து மின்சாரம் கிடைப்பதுபற்றியும். அந்த ரேட்டைப்பற்றியும் சொன்னார்கள்.

உணவு தானியம்பற்றிச் சொல்லும்போது, ஒரு லட்சம் டன் அரிசிதான் இருக்கிறது. இரண்டு லட்சம் டன் நெல்தான் இருக்கிறது. இது பிப்ரவரிக்கு மேல் போகாது என்று நிதி அமைச்சர் அவர்கள் சொல்லிக்கொண்டிருக் கிறார்கள். இவ்வளவு வைத்துக்கொண்டு, 'மீட்டிங் தி டிபிசல்ட்டீஸ்' என்று சொல்லிக்கொண்டிருக்கின்றார்கள். எதிர்நோக்கியிருக்கின்ற நிலைமைகளைச் சொல்கின்றார்கள். ஏன் இப்படி 'அண்டர்பிளே' பண்ணிச் சொல்கின்றார்கள் என்று தெரியவில்லை. என்ன காரணம் என்று கேட்கின்றபோது, என்ன சொல்கின்றார்கள்? இந்த ஐந்து வருடக்காலத்திலே இந்தக் கட்சி ஆட்சிக் காலத்திலே இது போன்று, தமிழ் நாட்டிலே ஒட்டுமொத்தமாக பொருளாதாரப் பிரச்சினையும், உணவுப் பிரச்சினையும், மின்சாரப் பிரச்சினையும் ஏற்பட்டிருக்கின்றனவா? குடிநீர்ப் பிரச்சினை ஏற்பட்டிருக்கிறதா? இந்த 5½ வருடகாலத்தில் எப்போதாவது இந்த மாதிரியான நிலைமைகளா



'பேஸ்' பண்ணியிருக்கிறார்களா? இப்படிப்பட்ட சிக்கல்கள் இருக்கும்போது, இதையெல்லாம் இவர்களே சமாளிப்பார்களா? அப்படிப்பட்ட சிக்கல்கள் வரும்போது, யார் யாருக்குப் பொறுப்பு இருக்கிறது? இயற்கைக்குக்கூட இதில் கொஞ்சம் பொறுப்பு இருக்கிறது. அதுபோலவே மத்திய அரசுக்கும் மாநில அரசுக்கும்கூட பொறுப்பு இருக்கிறது. இந்த நேரத்திலே இந்தப் பொறுப்புகளையெல்லாம் இந்த அரசு ஏற்கவேண்டியிருக்கும் என்பதால் இப்படிச் சொல்கிறது. அந்தக் காலத்திலே மாதம் மும்மாரி பெய்ததா என்று கேட்டால் மந்திரி மாதம் மும்மாரி பெய்தது என்று சொல்வது மாதிரி இருக்கிறது. தமிழ் நாட்டில் மக்களுக்கு உள்ள சிரமத்தைச் சொல்லாம லிருப்பது சரிதானா? அதற்குப் பொறுப்பு ஏற்கவேண்டியிருப்பதால், இந்த அரசினர் நீங்களும் காம்ப்ளசண்ட்டாக இருந்துகொண்டு மக்களையும் காம்பளசன்டாக இருக்க வைத்திருக்கிறார்கள். அரசினர் உண்மையான நிலையைப் பிரதிபலிக்கவில்லை. தமிழ் நாட்டிலுள்ள அவசர நிலையை, கஷ்ட நிலையை அரசினர் பிரதிபலிக்கவில்லை என்று சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். சர்ப்பிளஸ் மின்சாரம் இருந்தால்தான் தருவோம் என்று சொல்லியிருக்கிறார்கள். அப்படி சர்பிளஸ் இருந்தால்தான் கிடைக்கும். அப்படியென்றால் அடுத்த ஜூன் வரையிலே 75 சதவிகிதம் கட்டை நாம் 'மேக் அப்' பண்ணவேண்டிய அளவுக்குத்தான் இருக்கிறோம். கோளாவிலே இருந்து மின்சாரம் கிடைக்குமா என்பது சந்தேகமாக இருக்கிறது. இதை நம்முடைய சர்க்கார் தஸ்தாவேஜுகளைப் பார்த்தால், சொல்ல முடியும். இந்த அரசு ஏற்கெனவே பஞ்சாயத்து போர்டு, முனிசிபாலிட்டிஸ், கோ-ஆப்ப ரேட்டிவ் அமைப்புகளிலே எல்லாம் தேர்தல் வேண்டாம் என்று வைத்தாயிற்று. ஐந்தரை ஆண்டுக் காலமாக அது வேண்டியதில்லை என்று வைத்தாயிற்று. சட்டசபை தேர்தல் இவர்கள் கையிலே இல்லை. அது மத்திய அரசு கையிலே இருக்கிறது. அதுவும் ஐந்து வருடத்திற்கு ஒரு முறை வந்துவிடுகிறது. அல்லது மத்திய அரசு கலைத்துவிட்டு நடத்தவேண்டியிருக்கிறது. ஐந்து வருடங்கள் கழிந்து நடத்த வேண்டும் என்று நடத்துகிறார்கள். அது இவர்கள் கையிலே இருக்கிறமாதிரி தெரியவில்லை. தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர் உள்ள சபை செயல்பட அனுமதிப்பதில்லை. அவர்களை 'கம் இன்டு எக்ஸிஸ்ட்டன்ஸ்' என்ற அளவுக்கு அனுமதிப்பதில்லை என்ற கொள்கையை அரசாங்கம் வைத்திருக்கிறது என்று பொதுவாகவே சொல் கின்றார்கள். நம்முடைய அவையிலேயே மூன்றில் ஒரு பங்கு இல்லாமல் இருப்பதை மாண்புமிகு அங்கத்தினர் திரு. எ. ஆர். தாமோதரன் அவர்கள் சொன்னார்கள். இன்னொன்று சட்ட மன்றத்தை வருடத்திற்கு இரண்டு தடவைகள் நடத்துகின்ற, கூட்டுகின்ற நிலைமை இருந்தது. 'விண்டர் செஷன்' என்று இருந்தது. குறிப்பாக போன ஏப்ரல் 10 ஆம் தேதி கூடி

இப்போது ஜனவரி மாதம் 27 ஆம் தேதி பட்ஜெட் செஷன்ஸ்க்கு கூடுகின்ற அளவில் இருக்கின்றது. ஓராண்டு பூராவும் ஒரு தடவைதான் கூடுகிறது. இந்த ஆட்சி வந்த பிறகு அவ்வாறு நடந்திருக்கிறது. இது 1952-க்குப் பிறகு 1982-ல் மட்டும் தான் சட்டசபை இவ்வளவு குறைவாக நடந்திருக்கிறது என்பது என்னுடைய அபிப்பிராயம். 1952ஆம் ஆண்டுக்குப் பிறகு இவ்வளவு குறைவான நாட்கள் சட்டசபை நடந்தது இல்லை. 1982-லேதான் இவ்வளவு குறைவான நாட்கள் கூடியிருக்கின்றது என்பதை கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். அதுவும் போன தடவை சட்டசபையில் கொடுத்த வாக்குறுதியைக்கூட அரசு நிறைவேற்றவில்லை. சென்ற ஏப்ரலிலே கூட்டம் முடியும்போது கோ-ஆப்பரேட்டிவ் மசோதா, பொறுப்புக்குழுவிற்குப் போய் வந்து சட்டசபை முன் இருந்தது. அந்த சபையில் நிறைவேற்றப்படாமல் இருந்தது. ஒன்றரை ஆண்டுக்குப் பிறகு வந்த மசோதா என்று எடுத்துச் சொல்லி பேசினபோது, ஸ்பெஷலாக ஜூலை மாதத்திலே அதற்காக அவை கூட்டப்படும் என்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பேரவையிலே வாக்குறுதி கொடுத்தார்கள். ஆனால் ஜூலையில் கூட்டப்படாமல், செப்டம்பரிலே கூட்டப்பட்டது. பெரியகுளம் தேர்தல் வந்ததன் காரணமாக ஐந்து நாட்கள் ஒத்தி வைக்கப்பட்டது. அப்போதும் சபையிலே வாக்குறுதி கொடுக்கப்பட்டது. நவம்பரில் கூட்டம் கூட்டப்படும் என்று வாக்குறுதி கொடுக்கப்பட்டது. ஆனால் நவம்பரிலே கூட்டப்படாமல் ஜனவரி மாதம் 24 ஆம் தேதி வழக்கம்போல் கூட்டப்பட்டது. பட்ஜெட் செஷனிலிருந்து பட்ஜெட் செஷனுக்குக் கூடுகிறது என்ற நிலை இருக்கிறது. ஆறு மாதத்திற்கு ஒரு முறை கூட வேண்டும். அந்த 'கேப்' தான் இருக்கிறது. அதிலே ஒரு ஐந்து நாட்கள் நடத்திவிட்டு பெரியகுளம் தேர்தலை சாக்காக வைத்துக் கொண்டுவிட்டார்கள். சட்டமன்றம் வருடத்திற்கு ஒரு தடவைதான் கூடுவது என்று ஆகிவிட்டது. ஆறு மாதத்திற்குள் கூடவேண்டும். ஐந்து நாட்கள் இடையில் நடத்திவிட்டார்கள். இப்போது பட்ஜெட் போடாமல் முடியாது. ஆகவே பட்ஜெட்டுக்காகக் கூட்டம் கூட்டியிருக்கிறார்கள். இந்த மாதிரி புறக்கணிக்கப்படுவதால், சபைக் கூட்டத்தை அருவறுப்பது போன்ற 'டென்டன்சி' அரசாங்கத்திற்கு இருக்கிறது என்று சொல்கிறேன். அதற்கு என்ன சமாதானம் சொன்னாலும் ஏற்க முடியாது. இந்தச் சட்டமன்றத்தை இதற்கு இடையிலே ஒரு வருடத்திற்கு இடையிலே ஒரு 10, 15 நாட்களாவது கூட்டுவதற்கு அவகாசம் இல்லை என்றால், அது நியாயம் என்று தமிழ் நாட்டு மக்கள் ஏற்றுக்கொள்ளுவார்களா? ஒரு 'எலெக்டட் பாடி'-யை. ஸ்டேட் லெவலில் இருக்கின்ற 'பாடி'-யை எதிர்க்க அரசு தயாராக இல்லை என்று முடிவு கட்டுவது, அதிலே ஏற்படக்கூடிய சங்கடங்களை, சிரமத்தை அரசு எதிர்க்கத் தயாராக இல்லை என்று முடிவுகட்டுவது சரியல்ல. அப்படி அரசு தன் நடவடிக்கை முழுவதையும் இந்த 5½ வருட காலத்திலே எவ்வளவுதூரம்





சந்தித்திருக்கிறது? இந்த இன்ஸ்டிடியூஷன் பூராவும் அமலுக்கு வரவிடாமல் செய்வதுதான் அரசின் கருத்து. இருக்கின்ற பிரச்சினைகளை எவ்வளவு தூரம் 'பேஸ்' பண்ணாமல் தவிர்ப்பது என்பதுதான், அரசின் கோட்பாடாக ஆகிவிட்டது என்பதை யோசித்துப்பார்க்க வேண்டும். இதைப்பற்றித் தமிழ் நாட்டிலே என்ன கருத்து உருவாகியிருக்கிறது என்பதைப் பார்க்க வேண்டும். அதற்கு என்னதான் சமாதானம் இப்போது சொன்னாலும், ஒரு நாளைக்கு பதில் சொல்லவேண்டியதாக இருக்கும் என்பதை அரசின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். இந்த சட்டமன்றத்தைப் புறக்கணிப்பது சரியில்லை. வருடத்திற்கு ஒரு தடவை கூடுவது சரியில்லை என்பதுதான் என்னுடைய அபிப்பிராயம்.

(முற்பகல் 10-40)

அடுத்தபடியாக, தமிழ் நாட்டின் நிலையைப் பற்றிச் சொல்லும்போது, அதற்கு என்ன காரணம் என்பது குறித்து ஒரு விஷயத்தைச் சொல்ல விரும்புகிறேன். குறிப்பாக தமிழகத்தின் கவலைக்குரிய விஷயம் சம்பா பயிர் தான். இதற்குத் தண்ணீர் வேண்டுமென்ற பிரச்சினையிலே தமிழ் நாட்டிலுள்ள எதிர்க் கட்சிகள் தமிழ் நாட்டு ஜனங்களுக்குச் செய்வார்கள் என்று சொன்னார்கள். 1924-லே ஏற்படுத்தப்பட்ட காவிரி நதி நீர் ஒப்பந்தம் காலாவதியாகிவிட்ட பிறகும்கூட, அந்தப் பிரச்சினையைப்பற்றிப் பேச மத்திய அரசு கால தாமதம் செய்தாலும், மத்திய அரசு ஏதோ அரசியல் நோக்கத்திற்காகக் காலதாமதம் ஏற்படுத்தினாலும், உடனடியாக ஒரு பிரச்சினையைப்பற்றி தமிழகத்தின் எதிர்க் கட்சியினர் எல்லோரும் கேட்டார்கள். கர்நாடகாவில் அவர்கள் தேக்கி வைத்துள்ள தண்ணீரை, கபினி அணையில் அவர்கள் தேக்கி வைத்துள்ள தண்ணீரை உபயோகிக்க அவர்களுக்குக் கால்வாய் இல்லாததால், அதை தமிழ் நாட்டின் சம்பா பயிருக்குப் பயன்படுத்துவதற்காக 30 டி.எம்.சி. தண்ணீர் கொடுத்து, உதவ வேண்டுமென்று வற்புறுத்த ஏற்பாடு செய்யலாம் என்று தமிழ் நாட்டு எதிர்க் கட்சிகள் எல்லாம் சேர்ந்து, இந்தப் பிரச்சினையிலே உடனடியாக மத்திய அரசை வலியுறுத்த தமிழ் நாட்டில் அர்த்தால் நடத்தப்பட்டது என்பதைப் பார்த்தோம். தமிழ் நாடு அரசுகூட, அந்த அளவிற்கு மைய அரசு இந்த விஷயத்தில் பாரபட்சமாக அரசியல் நோக்கோடு நடந்து கொண்டிருக்கிறது என்பதை அவர்களாகச் சொல்ல முன்வரவில்லை. எதிர்க் கட்சிகள் கூட தஞ்சை, திருச்சி மாவட்டங்களில் அல்லது பாதிக்கப்பட்ட மாவட்டங்களில் தண்ணீர் விட மத்திய அரசு மறுக்கிறது என்பதைச் சொல்ல அர்த்தால் செய்யப் போனபோது, தான் மட்டும் அதில் ஒதுங்கி நிற்க வேண்டாமென்று நினைத்து, அந்தக் கட்டத்தில் தமிழ் நாடு பூராவும் அர்த்தால் செய்யா

மென்று ஆளும்கட்சி கூறியதை நாங்கள் வரவேற்கிறோம். தண்ணீர் பிரச்சினையில் மத்திய அரசுமீது அதிருப்தியைத் தெரிவிப்பதில் ஒதுங்கி நிற்கக்கூடாதென்ற அரசியல் நோக்கத்திற்காகத்தான் இதைச் செய்தார்கள். தொடர்ந்து தமிழ் நாடு அரசு என்ன செய்தது? கொக்கு தலையிலே வெண்ணெய் வைத்து பிடிப்பதுபோல திரு. குண்டு ராவைத் தேர்தலிலே ஆதரித்து வேலை செய்தார்கள். அதன் மூலமாகத் தமிழ் நாட்டிற்கு தண்ணீரைக் கொண்டு வரலாமென்று நினைத்தார்கள். திரு. குண்டு ராவ் வருஷக் கணக்கில் தண்ணீர் கொடுக்கத் தயாராக இல்லை. தேர்தலில் ஆதரித்ததாலா தண்ணீர் கொடுக்கப்போகிறார்? அதனால் இப்போது வந்துள்ள முதலமைச்சர், 'அவரை ஆதரித்தீர்கள், நான் ஏன் கொடுக்க வேண்டும்?" என்று கேட்கிறார்.

**மாண்புமிகு திரு. கா. இராசா முகமது:** தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. நல்லசிவன் அவர்கள் ஒரு தேசியப் பிரச்சினையை இவ்வளவு கொச்சைப்படுத்திப் பேச வேண்டாமென்று நான் கருதுகிறேன். கர்நாடக முதல்வர் திரு. குண்டு ராவைத் தேர்தலில் ஆதரிப்பதற்கு முன்னாலேயே கர்நாடக அரசு 1,600 மில்லியன் கன அடித் தண்ணீரை நமக்கு ஒதுக்கியிருக்கிறது—16 டி.எம்.சி. தண்ணீரை முதலிலே கொடுத்திருக்கிறார்கள். காவிரிப் பிரச்சினையிலே ஒரு நிரந்தரத் தீர்வு காண்பதற்கு முன்பு, அவர்கள் சேமித்து வைத்த தண்ணீரில் கொஞ்சம் கொடுங்கள் என்று கேட்கிறோம். இதற்கும் தேர்தலுக்கும் சம்பந்தப்படுத்துவது, அதனால் இப்போதுள்ள அரசு தர மாட்டேன் என்று சொல்கிறது என்று சொன்னால், தேசியப் பார்வை, சர்வ தேசப் பார்வை எல்லாம் குருடாகிவிட்டது என்று மக்கள் நினைத்துவிடுவார்கள். எனவே அப்படிப்பட்ட உள்நோக்கம் கற்பித்துப் பேச வேண்டாமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**திரு. ஆ. நல்லசிவன்:** தலைவரவர்களே, தேசியப் பார்வை குருடாகிவிட்டது என்றால், நீங்கள் அரசியலில் சீப் லெவலுக்கு இறங்கிவிட்டீர்களே என்று கேட்க விரும்புகிறேன். என்னுடைய பாயின்ட் என்னவென்றால் கர்நாடகத் தேர்தலிலே ஒரு கட்சி போட்டி போடும்போது, கட்சிக்குக் கட்சி ஆதரிப்பதை நான் ஆட்சேபணை சொல்லவில்லை. ஆனால் கர்நாடகத் தேர்தலில் திரு. குண்டு ராவை ஆதரிப்பதற்குக் காரணம் அதற்குப் பிறகு அவரிடமிருந்து தண்ணீர் வாங்குவதற்காகத்தான் என்று பேசினதால் சொல்கிறேன்.





**மாண்புமிகு திரு. கா. இராசா முகமது:** தலைவரவர்களே, அப்படி என்றால், இப்போது திரு. ஹெக்டே அவர்கள் தர மறுப்பது நியாயம் என்று உறுப்பினரவர்கள் கருதுகிறார்களா? அப்படிப் போய்விடக்கூடாது. திரு. குண்டு ராவ் அவர்களை ஆதரித்ததால் கிடைக்காமல் போய்விட்டது, திரு. ஹெக்டே சொல்வது நியாயமானது என்று சொல்லி, அதை நியாயப் படுத்த வேண்டாமென்று மாண்புமிகு உறுப்பினரவர்களின் நன்மைக்காகவும் சொல்கிறேன்.

**திரு. ஆ. நல்லசிவன்:** தலைவரவர்களே, நான் நியாயப்படுத்தவில்லை. கர்நாடகத் தேர்தலிலே அரசியல் பிரச்சினையை வைக்காமல், தண்ணீர் பிரச்சினையை வைத்து ஆதரித்ததால்தான் சிக்கல் வந்திருக்கிறது. அதில் ஏன் தண்ணீர் பிரச்சினையைச் சம்பந்தப்படுத்துகிறீர்கள்? அரசியல் கொள்கைகளுக்காக ஆதரிக்கிறேன் என்று பேசுங்கள். அவரை ஆதரிப்பதால் தண்ணீர் கிடைக்குமென்பதால், அவர் போன பிறகு, இவர் தண்ணீர் இல்லை என்கிறார். இதில் தண்ணீர் பிரச்சினையை சம்பந்தப்படுத்துகிறீர்கள் என்பதுதான் என்னுடைய வாதம். இந்தப் பிரச்சினையை, தண்ணீர் பிரச்சினையை, கர்நாடகத் தேர்தலில் சம்பந்தப்படுத்த வேண்டிய அவசியமில்லை. ஒரு கட்சியை மற்றொரு கட்சி ஆதரிக்க எத்தனையோ காரணங்கள் இருக்கின்றன. அப்படி ஆதரித்திருக்கலாம்.

**மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன்:** மாண்புமிகு தலைவரவர்களே, தங்களிடம் ஒரு சந்தேகத்தைக் கேட்க விரும்புகிறேன். தேர்தலிலே நாங்கள் என்ன பேசினோம் என்பதுபற்றி மேலவையில் விளக்கம் தர வேண்டிய அவசியம் உண்டா? அதைப்பற்றித்தான் விவாதிக்க ஆளுநர் அவர்கள் உரையிலே இந்த வாய்ப்பை எங்களுக்கெல்லாம் அளிக்கின்றீர்களா?

**மாண்புமிகு மேலவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினரவர்கள் தன்னுடைய கருத்தைச் சொன்னார்கள். அதற்கு நீங்கள் கட்டாயம் பதில் கொடுத்தாக வேண்டுமென்று இல்லை. ஆனால் தவறான தகவல் கொடுத்தால் அதை மறுக்க உரிமையுண்டு. மறுக்கலாம்.

**மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன்:** மாண்புமிகு மேலவைத் தலைவரவர்களே, நான் என்ன பேசினேன் என்பதை மாண்புமிகு உறுப்பினரவர்கள் தெளிவாகச் சொன்னால், நான் பதில் சொல்லத் தயாராக இருக்கிறேன்.

**திரு. ஆ. நல்லசிவன்:** தலைவரவர்களே, அவர் என்ன பேசினார் என்பதை —நான் அந்தக் கூட்டத்திற்குப் போகவில்லை—பத்திரிக்கையில் வந்ததைப் படித்து, சொன்னேன். இப்போது மீண்டும் கூறுகிறேன். அவர்கள்

திரு. குண்டு ராவ் அவர்களை கர்நாடகத் தேர்தலில் ஆதரித்துப் பேசியபோது, அதற்குக் காரணம், நாங்கள் திரு. குண்டு ராவை ஆதரிப்பது தமிழ் நாட்டின் நன்மைக்காகத்தான், திரு. குண்டு ராவ் அவர்களை ஆதரித்தால்தான், கர்நாடகத் தண்ணீர் தமிழ் நாட்டுக்குக் கிடைக்கும் என்று பேசியதாகப் பத்திரிகையில் பார்த்தேன். கர்நாடகத் தேர்தலிலே அப்படி தண்ணீர் பிரச்சினையைச் சம்பந்தப்படுத்தியிருக்க வேண்டாமென்று நான் கூறினேன்.

**மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன் :** மாண்புமிகு மேலவைத் தலைவரவர்களே, ஒரு விளக்கம் சொல்வதற்கு வாய்ப்பு தந்ததற்காக நன்றி.

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** நேற்று சொல்லத் தவறியதால், இன்று வாய்ப்பு கிடைத்திருக்கிறது.

**மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன் :** தலைவரவர்களே, அங்கு நான் பேசியபோது மிக மிகத் திட்டவட்டமாக ஒன்றைக் குறிப்பிட்டேன். மறைந்து போன திரு. தேவராஜ் அர்ஸ் அவர்கள் இருக்கும்போது, ஒகேனக்கல் திட்டத்தை ஏற்றுக்கொண்டு அதைப் பரிசீலிக்கலாமென்று என்னோடு அந்த இடத்திற்கு வர ஒப்புக்கொண்டதாகப் பத்திரிகையில் வந்திருக்கிறது. நானும் பேசியிருக்கிறேன், அவர்களும் பேசியிருக்கிறார்கள். ஆனால் 'எதிர்க் கட்சி' என்று வந்த உடனே, ஒகேனக்கல் திட்டத்தை ஏற்றுக்கொள்ள முடியாது என்று அவர் பேசினார். ஆனால் அந்த நேரத்தில் காவிரித் தண்ணீரைத் தமிழகத்திற்குக் கொண்டு வர அவசியம் ஏற்பட்டபோதெல்லாம் திரு. குண்டு ராவ் அவர்கள் தர முன் வந்தார்கள் என்றும், இதுபோன்ற நிலையில் எதிர்க் கட்சிகள் இருப்பது இந்த நாட்டுக்கு நல்லதல்ல என்றும், திரு. குண்டு ராவ் ஆட்சிக்கு வந்தால் நிச்சயமாக அது கிடைக்குமென்ற நம்பிக்கை இருக்கிறது என்றும் சொன்னேன். அதை இப்போதும் வலியுறுத்திக் கூற விரும்புகிறேன்.

**திரு. ஆ. நல்லசிவன் :** மத்திய அரசு, இந்தப் பிரச்சினையிலே தலையிட மறுக்கிறதென்பதை இந்த அரசு சரிவர உணர்ந்திருக்கிறதோ என்னவோ, உணர்ந்திருக்கிறோம் என்று சொல்ல மறுக்கிறதே. எனவே மத்திய அரசு இதில் அரசியல் விளையாட்டு விளையாடுகிறது. பொறுப்பான ஒருவர், பொது வாழ்க்கையில் உள்ள திரு. கிருஷ்ணசாமி கவுண்டர் அவர்கள் நடத்துகிற பத்திரிகையில் எழுதியிருக்கிறார். தமிழ் நாட்டு தூதுக் குழு டெல்லிக்குப் போனபோது, திரு. ராவ் பிரேந்திர சிங் அவர்களோடு பேசியபோது, காவிரித் தண்ணீர் கொடுக்க வேண்டுமென்று கேட்டபோது, பெரியகுளத்திலே வேறு கட்சிக்கு ஓட்டுப் போடுங்கள், நாங்கள் தண்ணீர் கொடுக்கிறோம் என்று பேசியதாக வந்திருக்கிறது.



**திரு. க. இராமமூர்த்தி :** தலைவரவர்களே, அது மறுக்கப்பட்டிருக்கிறது. சம்பந்தப்பட்ட அமைச்சரே அதை மறுத்திருக்கிறார். இரண்டாவதாக, அவர்கள் இந்த அவையிலே இல்லை. ஏற்கெனவே மறுக்கப்பட்டது அது. பத்திரிகையில் வந்ததுதான் அடிப்படை என்றால், அதற்கு மறுப்பும் பத்திரிகையில் வந்திருக்கிறது. அதற்குப் பிறகும், அப்படித்தான் சொன்னார் என்று இந்த அவையில் கூறுவது நல்லதல்ல.

**திரு. ஆ. நல்லசிவன் :** திரு. கிருஷ்ணசாமி கவுண்டர் சொன்னதைச் சொல்வது என்னுடைய பொறுப்பு. மறுத்ததைச் சொல்ல வேண்டியது அவருடைய பொறுப்பு.

**திரு. க. இராமமூர்த்தி :** கிருஷ்ணசாமிக் கவுண்டர் சொன்னார் என்று சொல்லிக்கொண்டிருந்தால், அப்புறம் உறுப்பினர் அவர்கள் அரசியல் விளையாட்டுதான் விளையாடுகிறார்கள் என்று சொல்வது எனக்குச் சுலபம். அது இந்த அவைக்கு நல்லதல்ல.

**திரு. ஆ. நல்லசிவன் :** மத்திய காங்கிரஸ் கட்சி என்ன விளையாட்டு விளையாடுகிறது என்பது நாடு பூராவும் அறிந்த விஷயம்.

**திரு. க. இராமமூர்த்தி :** கம்யூனிஸ்ட் கட்சி அதைவிட பெரிய விளையாட்டு விளையாடுகிறது என்பதும் நாடு அறிந்த விஷயமாகும்.

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** மாண்புமிகு உறுப்பினரவர்களைப் பேசவிடுங்கள்.

**திரு. க. இராமமூர்த்தி :** மத்திய அமைச்சரே அதை மறுத்திருக்கிறார்...

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** மாண்புமிகு உறுப்பினரவர்கள் அதைச் சொல்லிவிட்டார்கள். அது போதும்.

**திரு. ஆ. நல்லசிவன் :** ஒரு மத்திய அமைச்சர், பொறுப்பான தூதுக் குழுவிடம் சொன்னதோடு, அரசியல் காரணங்களுக்காக பிறகு மறுத்திருக்கலாம். அது வேறு விஷயம்.

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** மாண்புமிகு உறுப்பினரவர்கள் ஒன்றைச் சொல்லும்போது, அவையிலே அது மறுக்கப்பட்டிருக்கிறது என்று நினைவுபடுத்துவதிலே தவறில்லை.

**திரு. ஆ. நல்லசிவன் :** தலைவரவர்களே, மறுக்கப்பட்டதை ஆட்சேபிக்கவில்லை. அவர்கள், மறுப்பு என்று ஏர் உழவன் பத்திரிக்கையில் போடவில்லை. அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். அவர்கள் 'மறுத்தார்' என்று சொன்னால் ஒத்துக்கொள்வேன். காவிரிப் பிரச்சினை பெரிய பிரச்சினை. மத்திய அரசிடம் நதிகளை தேசியமயமாக்குதல் என்ற திட்டத்தை வைத்திருக்கிறார்கள். மத்திய அரசிடம் அதைக் கொடுத்தால், அது என்ன வாகுமோ என்று நினைக்கிறேன்.

(முற்பகல் 10—50)

**திரு. ஜி. சுவாமிநாதன் :** நதிகளை தேசியமயமாக்க வேண்டுமென்று சொல்கிறார்கள். தனியார் உடைமைகளைத்தான் தேசியமயமாக்க முடியும். நதிகளை எப்படி தேசியமயமாக்க முடியும் ? அவை தேசத்தின் உடைமை அல்லவா? அதையேதான் திரும்பத் திரும்பச் சொல்லிக்கொண்டிருக்கிறார்கள். அது என்ன ?

**திரு. ஆ. நல்லசிவன் :** அது உறுப்பினர் அவர்களுக்குத் தெரியாது. தேசியவுடைமை என்றாலும்கூட மாநிலத்தின் நலன் என்று வரும்போது அது தேவைதான்.

**திரு. ஜி. சுவாமிநாதன் :** தனியார் உடைமைகளைத்தான் தேசியமயமாக்க முடியும். நதிகளை எப்படி தேசிய உடைமை ஆக்க முடியும் ?

**திரு. ஆ. நல்லசிவன்:** என்னுடைய நேரத்தை எடுத்துக்கொண்டால் என்னை யார் காப்பாற்றுவது ?

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** நான் காப்பாற்றுகிறேன். (சிரிப்பு)

**திரு. ஆ. நல்லசிவன் :** வறட்சி நிலைபற்றி மாண்புமிகு முதலமைச்சர் அவர்களும், ரெவின்யூ அமைச்சர் அவர்களும் மத்திய அரசுக்குத் தகவல் கொடுத்திருப்பதாகச் சொல்லியிருப்பதை நான் பார்த்தேன். ஆனால் அது எனக்குத் திருப்தியளிக்கவில்லை. இப்போதுகூட நம்மிடம் இருக்கின்ற குடிநீர் ஜூன் மாதம் வரைகூட வராது. வறட்சிபற்றிய தகவல் அரசுக்கு டிசம்பர் 15ஆம் தேதிக்குள் வந்திருக்கவேண்டும். சவுத் வெஸ்ட் மான்சூன் கூட நமக்குச் சாதகமாக இல்லை. தமிழ் நாட்டிலே இருக்கின்ற அணைகளைப் பார்த்தால், திருநெல்வேலி மாவட்டத்திலிருக்கின்ற பாபநாசம் அணைக்கட்டைத் தவிர, மற்ற எதிலும் தண்ணீர் இல்லை. நார்த் வெஸ்ட், சவுத் வெஸ்ட் மான்சூன் ஒன்றும் நமக்குச் சாதகமாக இல்லை. இப்போது





ஜூன் மாதம் பெய்யக்கூடிய மழையை நம்பிக்கொண்டுதான் நாம் இருக்கிறோம். ஜூன் மாதம் வரை நிவாரணம் தேவை என்று இப்போது கூறியிருக்கிறார்கள். இதுபற்றிய தகவலை நிச்சயமாக மத்திய அரசுக்கு டிசம்பர் முதல் வாரத்திலேயே தந்திருக்க வேண்டும். தமிழ் நாடு வறட்சியை நோக்கிப் போய்க்கொண்டிருக்கிறது என்கிற விவரம் டிசம்பர் 15 ஆம் தேதிக்கு முன்னாலேயே மாநில அரசுக்குக் காலா காலத்தில் தெரிந்து சொல்லியிருக்கவேண்டும். டிசம்பர் 31ஆம் தேதிவரை மழை இல்லை என்று பார்த்துக்கொண்டு, பயிர்கள் எல்லாம் பொசுங்குகிறதா இல்லையா என்று பார்த்துக்கொண்டு, அதன்பிறகு சொல்லியிருக்கிறார்கள். டிசம்பர் 31ஆம் தேதிவரை வறட்சி நிலைமையைப் பார்த்துக்கொண்டிருக்க வேண்டிய தேவையில்லை. ராஜ்யசபையில், லோக் சபையில் எல்லாம் இதுபற்றிக் கேட்கிற நேரத்தில் தமிழக அரசுக்கு இதுபற்றிக் கவலையில்லை என்று சொல்லக்கூடிய அளவுக்கு அங்கு இந்தத் தகவல் அனுப்பப்படவில்லை. பார்லிமென்டின் கவனத்திற்கு இது கொண்டுபோகப்படவில்லை. ஏற்கெனவே இதற்காக ரூபாய் முப்பது கோடி ஒதுக்கி ரூபாய் பதினைந்து கோடி செலவு செய்திருக்கிறார்கள். இன்னும் ஆறு மாதத்திற்கு 100 கோடி ரூபாய்க்கு மேல் தேவை. அப்படிப்பட்ட ஒரு அபாயம் தமிழ் நாட்டிற்கு ஏற்பட்டிருக்கிறது.

மின்சாரத்தைப் பொறுத்தவரையில், ஒன்றைச் சொல்கிறேன். மின்சார வாரியத்திலே மெயின்டினன்ஸைப் பொறுத்தவரையில் அது சரியாக நடைபெறவில்லை. நமக்குத் தேவையான அளவு உற்பத்தி செய்வது மற்றும் விநியோகம் செய்வது எல்லாம் மாநில அரசின் பொறுப்புக்கு உட்பட்டதுதான். தூத்துக்குடி மின் உற்பத்தியில் தகராறு ஏற்பட்ட பிறகு, அங்கு உற்பத்தி எண்பத்தி மூன்று மெகாவாட் என்கிற நிலைக்கு வந்தது. பிறகு பி.டபிள்யூ.டி. செயலாளர் அங்குபோய்க் கிட்டத்தட்ட பத்து நாட்கள் உட்கார்ந்தார். எதனால் தகராறு என்று பார்த்து 'பெல்' அதிகாரிகளைக் கொண்டுவந்து சரிபார்த்தபிறகு, 300 மெகாவாட்டுக்கு மேல் மின் உற்பத்தி செய்யப்பட்டது. இதிலிருந்து மின்சார வாரியம் மெயின்டனன்சைப் பொறுத்தவரையில், எப்படிக் கவனக் குறைவாக இருக்கிறது என்பதை நாம் அறிய முடிகிறது. நீர் மின் நிலையங்களில் தண்ணீர் இல்லாத நிலையில் மின் உற்பத்தி பாதிக்கப்பட்டிருக்கும் நேரத்தில் அனல் மின் நிலையங்களிலும் மின்சார வாரியம் போதிய கவனத்தைச் செலுத்தவில்லை என்பதை நாம் காண முடிகிறது.

அடுத்து, இந்த அரசைப் பொறுத்தவரையில், வீட்டுக்கு ஒருவருக்கு வேலை கொடுப்பதாகச் சொல்கிறார்கள். ஏற்கெனவே தமிழ் நாட்டிலே இருக்கின்ற ரப்பர் தொழிலில் 2,500 தொழிலாளர்கள் கடந்த நான்கு மாதங்களாக, நவம்பர் மாதத்திலிருந்து வேலையில்லாமல் இருக்கிறார்கள். இதனால் பதினைந்தாயிரம் பேர் சாப்பாடு இல்லாமல் கஷ்டப்படுகிறார்கள்.

*** மாண்புமிகு திரு. இராம. வீரப்பன் :** அரசு ரப்பர் தோட்டத்தில் வேலை இல்லாமல் இல்லை. ஆனால் வேலை செய்யாமல் வீட்டில் இருந்துகொண்டிருக்கிறார்கள். மக்களுக்கும் அரசுக்கும் நஷ்டத்தை உண்டு பண்ணிக் கொண்டிருக்கிறார்கள்.

**திரு. ஆ. நல்லசிவன் :** வேலை இருக்கிறது. ஆனால் அரசைப் பொறுத்தவரையில், அவர்களுக்கு போனஸ் இல்லையென்று சொல்லியிருக்கிறது. பக்கத்துத் தோட்டங்களில் வேலை பார்க்கிற 4,000 தொழிலாளர்களுக்கு போனஸ் இருக்கிறது. ஆனால் அரசுத் தோட்டத்திலே வேலை பார்க்கிற தொழிலாளர்களுக்கு போனஸ் இல்லை. சட்டப்படி கொடுப்பதற்கு இடம் இருக்கிறது. டிபார்ட்மெண்டுகளிலே இருக்கக்கூடிய தொழில்களில் வேலை செய்கிற தொழிலாளர்களுக்கு அவ்வாறு கொடுப்பதற்கு அரசாங்கத்திற்கு 'டிஸ்கிரிஷனரி பவர்' இருக்கிறது. இந்த அதிகாரத்தைப் பயன்படுத்தித்தான் செண்ட்ரல் கவர்மெண்ட்டின் கட்டுப்பாட்டுக்குள் இருக்கின்ற பி அண்டு டி., ரயில்வே போன்றவைகளில் வேலை பார்க்கின்ற தொழிலாளர்களுக்கு போனஸ் கொடுத்தார்கள். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தொழிற் சங்கப் பிரதிநிதிகளுடன் பேசும்போது, அரசு 'கன்சிடர்' பண்ணும் என்று சொன்னார்கள். மத்திய அரசு கொடுத்திருப்பதைச் சுட்டிக்காட்டுகிறோம்.

*** மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் :** அரசாங்க ஊழியர்களுக்கு போனஸ் தாலாமென்று சட்டத்தில் இடம் இருக்கிறது என்று இங்கே சொன்னார்கள். அரசாங்கமே தாங்களாகவோ அல்லது டிபார்ட்மெண்ட் மூலமாகவோ தொழிற்சாலை நடத்தினால், அங்குள்ள தொழிலாளர்களுக்கு போனஸ் கொடுக்க வேண்டாமென்று மத்திய அரசால் உருவாக்கப்பட்ட 1965 ஆம் ஆண்டுச் சட்டத்திலே இருக்கிறது. ஆனால் அரசாங்க ஊழியர்களுக்கு போனஸ் கொடுக்க ஸ்டேட் கவர்மெண்ட்டுக்கு அதிகாரம் இல்லை.

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** இன்னும் ஐந்து நிமிடம்தான் இருக்கிறது.

**திரு. ஆ. நல்லசிவன் :** அதற்குள் முடித்து விடுகிறேன். பொதுவாக அரசு ஊழியர்கள் என்றால், அவர்களில் இரண்டு பிரிவினர் இருக்கிறார்கள். ஒரு பிரிவினர் தொழிற் சங்கத்திற்குள்ளே வாரமல் பணியாற்றுபவர்கள். அவர்கள் தொழிற் சங்கச் சட்டத்திற்குள்ளே வர முடியாது. அவர்கள் தொழிற் சங்கச் சட்டத்தின் கீழ் ரெஜிஸ்டர் பண்ணவும் முடியாது. அவர்கள் சொசைட்டி ஆக்ட்-ன் கீழ்தான் ரெஜிஸ்டர் பண்ண முடியும். இன்னொரு பிரிவினர் தொழிற் சங்கச் சட்டத்தின் கீழ் உட்பட்டு, தொழிற் சங்கச் சட்டத்தின்படி ரெஜிஸ்டர் பண்ணி தொழிலாளர்களாகப் பணியாற்றுபவர்கள். ரப்பர் போர்டில் பணியாற்றும் தொழிலாளர்கள் தொழிற் சங்கச் சட்டத்தின்கீழ் ரெஜிஸ்டர் பண்ணியிருப்பவர்கள். இதையொத்த மத்திய அரசுத் துறைகளான ரெயில்வே, பி அண்டு டி போன்றவைகளில் பணியாற்றிக்கொண்டு தொழிற் சங்கச் சட்டத்தின்படி ரெஜிஸ்டர் பண்ணியிருக்கும் தொழிலாளர்களுக்கு மத்திய அரசு இதனை அளித்திருக்கிறது. அதேபோல் எங்களுக்கும் தாருங்கள் என்று மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்களிடத்தில் தொழிற் சங்கப் பிரதிநிதிகள் பேசியிருக்கிறார்கள். அதற்கு அமைச்சர் அவர்கள் அப்படிக் கோர உங்களுக்கு உரிமையில்லை என்று சொல்லியிருக்கிறார்கள். இப்போது மாண்புமிகு தொழிலாளர் நல அமைச்சர் அவர்களும் தர மறுக்கிறார்கள்.



**மாண்புமிகு திரு. இராம. வீரப்பன் :** தொழிற் சங்கப் பிரதிநிதிகளுடன் பேசும்போது, அவர்கள் போனஸ் வேண்டுமென்று கேட்டார்கள். "அப்படி போனஸ் கொடுக்க சட்டத்தில் வேறு வழியில்லை, இடமில்லை, அரசுப் பொறுப்பிலே நடத்தப்படுகிற ஒரு நிர்வாகத்தில் போனஸ் தர இயலாது" என்று அவர்களுக்குத் தெரிவிக்கப்பட்டது. போனஸ் வேண்டாம் எக்ஸ்—கிரிஷியா என்றாவது கொடுங்கள் என்று கேட்டார்கள். அப்படிக் கொடுப்பதற்கும் சட்டத்தில் இடமில்லையென்றும் அதுபற்றிப் பரிசீலித்துத்தான் சொல்ல முடியும் என்றும் சொன்னேன். போனஸ் கேட்டார்கள், ஆனால் கொடுக்க மறுத்துவிட்டார்கள் என்று சொல்வதைப் பார்க்கும்போது, ஏதோ சென்ற ஆண்டுவரை போனஸ் கொடுத்துக்கொண்டிருந்த மாதிரியும் இந்த ஆண்டுதான் திடீரென்று இல்லாமல் செய்துவிட்டது போலவும் இங்கே சொன்னார்கள். இதுவரை போனஸ் எதுவும் இல்லை. இப்போது புதிதாகக் கேட்க ஆரம்பித்திருக்கிறார்கள். பேச்சுவார்த்தை நடத்திக் கொண்டிருக்கும் போதே திடீரென்று வேலை நிறுத்தத்திற்கு நோட்டீஸ் கொடுத்துவிட்டு வேலை நிறுத்தம் செய்துகொண்டிருக்கிறார்கள். இதுதான் நடந்தது.

**மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் :** மாண்புமிகு உறுப்பினர் இங்கே சட்டத்தைப் பற்றித் தவறான கருத்தைச் சொன்னார். அது தவறான கருத்து என்று நான் விளக்கம் சொன்னேன். அப்படிக் கொடுப்பதற்குச் சட்டத்தில் இடமில்லை.

**திரு. ஆ. நல்லசிவன் :** 'எக்ஸ்-கிரேஷியா' என்கிற முறையில் கொடுக்கலாம். அதற்கு சட்டத்தில் இடமிருக்கிறது என்று நான் திரும்பவும் சொல்கிறேன். இதற்கான அதிகாரம மத்திய அரசுக்கு மட்டுமல்லாமல் மாநில அரசுக்கும் இருக்கிறது. மத்திய அரசு எக்ஸ்-கிரேஷியா கொடுக்கலாமென்று சட்டத்தில் இடம் இருக்கிறது. அப்படி இல்லையென்றால், எப்படி மத்திய அரசு இரண்டு அடானமஸ் கார்ப்பரேஷன்களுக்குக் கொடுக்கிறது? மத்திய அரசு 24 நாள் சம்பளத்தை 'எக்ஸ்-கிரேஷியா பேமன்ட்' என்கிற முறையில் கொடுத்திருக்கிறது. அந்த வகையில் இந்தத் தொழிலாளர்களுக்கும் மாநில அரசு கொடுக்கலாம். ஒரு தொழிலை ஆரம்பித்து ஐந்து வருடம் முடிந்துவிட்டால் கொடுக்கலாமென்று சட்டத்தில் இருக்கிறது. இவர்களும் இந்தத் தொழில் ஆரம்பிக்கப்பட்டு ஐந்து வருடங்கள் முடிவடைந்த பிறகுதான் கேட்டிருக்கிறார்கள். ஸ்டிரைக் நோட்டீஸ் கொடுத்துவிட்டார்கள், ஆகவே இவர்களுக்குத் தர வேண்டாம் என்று அரசு முடிவு செய்வது நியாயம்தானா? இப்படி ஒரு அரசு செய்யலாமா? ஸ்டிரைக் நோட்டீஸ் கொடுத்ததற்காக இப்படிச் செய்வது சரியல்ல.

கடைசியாக, சத்துணவுத் திட்டத்தைப்பற்றி ஒன்றைச் சொல்கிறேன். பிற பல அடிப்படையான முக்கியப் பிரச்சினைகளிலே அரசு தீர்வு காணாமல் இருக்கும்போது, சத்துணவுத் திட்டத்தை மட்டும் காட்டி பாம்பாட்டிக்காரன் நல்ல பாம்பைக் காட்டி படம் எடுக்க வைத்து வித்தை காட்டுவதுபோல் செய்வது சரியில்லை.

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** 'ஆக்ஷன்' நன்றாக இருக்கிறது. (சிரிப்பு)

(முற்பகல் 11—00)

**திரு. ஆ. நல்லசிவன் :** இந்தச் சத்துணவுத் திட்டம் என்பது பிள்ளைகளுக்கு வயிறு நிறையும் விஷயம்தான். மாண்புமிகு உறுப்பினர் திரு. தாமோதரன் அவர்கள் சொன்னதுபோல, இதற்குத் தேவைப்படும் ஏறக்குறைய 120 கோடி ரூபாய் நியாயமான முறையில் செலவிடப்படுவதால், இதற்கு ஏற்படும் செலவில் ஒரு பங்கை மத்திய அரசு ஏற்றுக்கொள்ள வேண்டும். நம்முடைய பிளாக் ஸ்டேட்டிலே 120 கோடி ரூபாயைக்கூட நமக்குத் தரும்போது சேர்த்துத் தரவேண்டும் என்று நாம் மத்திய அரசை வற்புறுத்த வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். ஆனால், இந்தச் சத்துணவுத் திட்டம் மட்டும் தமிழ் நாட்டு மக்களின் பிரச்சினைகளைத் தீர்க்கவில்லை என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன். மற்ற பெரிய பெரிய பிரச்சினைகள் இருக்கும் போது, அவற்றைப்பற்றி மக்கள் மத்தியிலே கொந்தளிப்பு ஏற்படாமலிருக்க





அவர்களிடத்திலே இந்தச் சத்துணவு திட்டத்தைக் காட்டுகின்றார்கள். அதற்குத்தான் இது பயன்படுகிறது என்பதை நான் சொல்லிக் கொள்கிறேன். மேலும் சென்ற ஆண்டு இந்தச் சட்டமன்றம் அதிக நாட்கள் கூடவில்லை. குறைந்த பட்சம் 300 நாட்களாவது இந்த சட்ட சபையைக் கூட்டவேண்டும். சட்டமன்றத்திலே இருப்பவர்கள் பொது அறிவு மிக்கவர்கள். பொது ஞானம் உடையவர்கள், பொது மக்களின் பிரச்சினைகளைத் தெரிந்தவர்கள். அவர்களின் இந்த ஆற்றலை இந்த அரசு பயன் பயன்படுத்திக்கொள்ள வேண்டும். 1982ஆம் ஆண்டிலே எவ்வளவு என்றால் 31 நாட்கள்தான். அதுதான் மிகவும் குறைவாக இருந்தது. ஆகவே, சட்ட சபையை அதிக நாட்கள் கூட்டவேண்டும் என்று கேட்டுக்கொண்டு, என்னுடைய பேச்சை முடித்துக்கொள்கிறேன்.

**திரு. ஈ. எஸ். வெங்கடேசன் :** மாண்புமிகு தலைவர் அவர்களே, ஆளுநர் உரையிலே சத்துணவுத் திட்டம், வேலை வாய்ப்பு அதிகரிப்புத் திட்டம், தாழ்த்தப்பட்டோர், பிற்படுத்தப்பட்டோர் மேம்பாட்டுக்கு ஏற்பாடுகள் போன்ற நல்ல அம்சங்கள் இருக்கின்றன. அதனால், ஆளுநர் உரைக்கு நன்றி தெரிவிக்கும் இந்தத் தீர்மானத்திற்கு ஆதரவு தர விரும்புகின்றேன். சத்துணவு திட்டம் ஒரு நல்ல சிறந்த திட்டம். இந்த நாட்டின் வருங்கால சிற்பிகளான குழந்தைகளை ஆரோக்கியமாக வளர்க்க ஏற்பாடு செய்யும் திட்டம் இது. இதிலே அரசு நல்முறையிலே ஈடுபாடு கொண்டிருக்கிறது. குழந்தைகள் நாட்டின் வருங்கால சிற்பிகள், பிரஜைகள், அவர்களை ஆரோக்கியமாக வளர்த்தால்தான், இந்த நாடு முன்னேறும். மேலும் சத்துணவுத் திட்டத்திலே வேலை வாய்ப்புக்கும் இடமிருக்கிறது. குறிப்பாகப் பெண்களுக்கு அதிக அளவில் வேலைவாய்ப்பு இருக்கிறது. இந்தச் சத்துணவுத் திட்டம் எல்லோராலும் போற்றப்படுகிறது. யாரும் சத்துணவுத் திட்டத்தைக் குறை கூறவில்லை. அதிலே உள்ள நடைமுறை பற்றியும். கையாளப்படும் முறைகளைப்பற்றியும் தான் குறை கூறினார்கள். சிலர் சொல்கிறார்கள், இந்தத் திட்டம் பள்ளிகளை சமையற்கூடமாகவும், ஆசிரியர்களை சமையற்காரர்களாகவும் ஆக்குகிறது என்று. அந்தக் குறைகளையெல்லாம் நீக்க இந்த அரசு முயற்சிக்கவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். எனக்கொரு எண்ணம் தோன்றுகிறது. இந்தச் சமையல் திட்டத்தை விட்டுவிட்டு, எல்லாக் குழந்தைகளுக்கும் ரொட்டி, பால், முட்டை போன்றவைகளைக் கொடுத்தால் நல்லது. அந்த வகையான உணவுகள் அவர்களுக்கு மிகவும் அதிக சத்துள்ளதாக இருக்கும். ஆகவே, இதையும் அரசு நன்றாகப் பரிசீலனை செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

[திரு. ஈ. எஸ். வெங்கடேசன்] [1983 ஜனவரி 31

ஆளுநர் அவர்கள் உரையிலே 12-வது பாராவிலே ஒரு திட்டத்தைப்பற்றிச் சொல்லப்பட்டிருக்கிறது. அது நல்ல திட்டமாகச் சொல்லப்பட்டிருக்கிறது. ஆனால் அதைப்பற்றி எனக்கு ஒரு பெரிய சந்தேகம் ஏற்பட்டிருக்கிறது. அது தவறாகக்கூட இருக்கலாம். ஆகவே, அந்தச் சந்தேகத்தைத் தவிர்க்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். (12-வது பாராவில் இருப்பது என்னவென்றால், "மக்களுக்கு ஏற்பட்டுள்ள இன்னலை ஓரளவேனும் குறைக்க, அவர்களின் நலன் கருதி கிடைக்கின்ற நீரைப் பயன்படுத்தும் பொருட்டு, தமிழ் நாட்டின் எல்லைக்குள் ஓடும், காவிரி கிளை நதிகளின் குறுக்கே அணைகள் கட்டுவதுபற்றி இவ்வரசு யோசித்து வருகிறது" என்று சொல்லப்பட்டிருக்கிறது. அதே 12-வது பாராவிலே முதலிலே "காவிரி பாசனப் பகுதியில் நீர்ப் பற்றாக்குறை காரணமாக வறட்சி நிலைமை இருந்து வருகிறது" என்றும் சொல்லப்பட்டிருக்கிறது. அதற்குப் பிறகு 13-வது பாராவிலே, "காவிரி மூலம் மிகக் குறைந்த நீர் வருகிறது" என்று சொல்லப்பட்டிருக்கிறது. ஆகவே காவிரி நதியிலே நீர் இல்லாதபோது, அதன் கிளை நதிகளிலே எப்படி நீர் வரும்? எப்படி அணை கட்டுவது?" என்ற சந்தேகம் வருகிறது. தண்ணீர் உபரியாக இருந்தால்தான், அதிலே அணையினைக் கட்டி வீணாகும் தண்ணீரைத் தடுத்து, அதை மக்களுக்குப் பயன் படுத்தும் வகையிலே செயல்படுத்தும் திட்டம் வரும். இங்கே நீர் இல்லாத போது, அணையைக் கட்டும் எண்ணம் எப்படி இந்த அரசுக்குத் தோன்றியது என்றே தெரியவில்லை. இது போன்ற வீணான திட்டங்களை மனதில் வைத்துக்கொண்டு செயல்படுத்தி, மக்களின் வரிப்பணத்தை வீண் விரயம் செய்யக்கூடாது என்று நான் சொல்லிக்கொள்கிறேன். மேலும், இதுபற்றி அரசு தீவிர பரிசீலனை செய்ய வேண்டும் என்றும் கேட்டுக்கொள்கிறேன்.

ஆளுநர் அவர்களின் உரையிலே நல்ல அம்சங்கள் இருந்தாலும், மொத்தத்திலே பார்க்கும்போது, அது மக்களுக்கு அவ்வளவு மகிழ்ச்சியூட்டுவதாக இல்லை. இக்கட்டான உணவு நிலைமை, தண்ணீர் பற்றாக்குறை, மின்சாரத் தட்டுப்பாடு, மின்கட்டண உயர்வுபோன்ற மக்களை பாதிக்கும் நிலைமைகள் உள்ளன. இருந்தாலும் அரசு அவைகளிலே தீவிர கவனம் செலுத்துவதாகவும் இந்தக் குறைபாடுகளைப் போக்கப் பாடுபடுவதாகவும் குறிப்புகள் இந்த அறிக்கையிலே இருப்பதற்கு நன்றி தெரிவித்துக்கொள்கிறேன். நேற்றுகூட மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள் கேரள மாநில அமைச்சர் அவர்களோடு ஒப்பந்த நடவடிக்கைகளைச் செய்திருக்கிறார்கள். அதற்கு நான் என்னுடைய பாராட்டுதல்களைத் தெரிவித்துக்கொள்கிறேன். இதைப் போல மற்ற குறைபாடுகளையும் களைய விரைவில் தக்க நடவடிக்கையை எடுக்க வேண்டும்.



1983 சனவரி 31] [திரு. ஈ. எஸ். வெங்கடேசன்]

இப்போது அரசு இயந்திரம் சரிவர இயங்கவில்லை. மிகவும் மெத்தனமாகத்தான் இருக்கிறது. மெத்தனம் என்பது மட்டுமல்ல, அலட்சியப் போக்கும் காலதாமதமும் ஏற்படுகின்றன. இதைத்தான் என்னைப் பொறுத்த வரையில் நான் காண்கிறேன். அந்த நிலைமை எனக்கே ஏற்பட்டிருக்கிறது. நான் அதற்கு ஒரு உதாரணத்தைச் சொல்கிறேன். அண்மையில் பிரதமர் அவர்கள் சென்னைக்கு இரண்டாம் தேதி வந்தார்கள். அவர்களுடைய வருகை குறித்து எம். எல். சி. என்ற முறையிலே எனக்கு ஒரு அறிவிப்பு வந்தது. 27—12—1982 என்று அந்த அறிவிப்பு தேதியிடப்பட்டிருந்தது. அதுமட்டுமல்ல, 'மோஸ்ட்-இம்மீடியட்' என்று போட்டு, "By special messenger" எனவும் குறிப்பிடப்பட்டிருந்தது. அதிலே என்ன சொல்லப்பட்டிருந்தது என்று சொன்னால்,

"If you desire to attend the reception and farewell ceremonies, kindly inform over telephone to No. 66500 or 23160 by 12.00 noon on 30th December 1982 so that we can arrange to send you admission pass in time."

ஆனால் நான் மிகவும் வருத்தத்தோடு சொல்கிறேன், 30—12—1982 ஆம் தேதி மத்தியானத்திற்குள் சொல்ல வேண்டும் என்ற அந்த அறிவிப்பு என்னிடம் வந்தது 31—12—1982 சாயந்திரம். இவ்வளவு மெத்தனமாகவும், நிதானமாகவும், காலதாமதமாகவும் அரசு இயந்திரம் செயல்படுவதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கவனித்து, இந்தப் போக்கைத் தவிர்க்கத் தக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன். நான் சொல்கிறேன், அவர்கள் நேரடியாகவே, 'அட்மிஷன் பாஸ்' அனுப்பி இருக்கலாம். அப்படியில்லாமல், "வருவதாக இருந்தால் சொல்லுங்கள், அனுப்புகிறோம்" என்று சொல்ல வேண்டிய தேவையில்லை. இந்த நாட்டினுடைய பிரதமர் வருகிறார், அங்கு சட்டமன்ற உறுப்பினர்கள் எல்லோரும் வர வேண்டும் என்று வேண்டுகோள் விடுத்திருக்க வேண்டும். அதை விட்டு விட்டு, நீங்கள் வருவதாக இருந்தால் போன் செய்யுங்கள் என்று சொல்லியிருப்பது அவ்வளவு நல்லதல்ல. "மோஸ்ட்-இம்மீடியட்" என்று போட்டிருந்தும்,

By Special Messenger

என்று போட்டிருந்தும், 30—ம் தேதிக்குள் சொல்ல வேண்டும் என்று கேட்டிருந்தும், அந்தக் கடிதம் 31ஆம் தேதிதான் வருகிறது. அதுவும் Messenger தான் கொண்டு வந்தார். 'போஸ்டல் டிலே' என்று கூட சொல்ல முடியாது. இந்த நாட்டுப் பிரதமரின் வருகைபற்றி சட்டமன்ற உறுப்பினர்களுக்கு அறிவிப்பதிலே இப்படி நடந்துகொண்டால், மற்ற காரியங்களிலே அரசு எப்படிச் செயல்படுமென்பதை ஊகித்துக் கொள்ளலாம்.

இன்னொரு சம்பவம். உயர்நீதி மன்றத்திலே நீதிபதிகள் பதவிகள் எவ்வளவு காலியாக இருக்கிறது, அவற்றைப் பூர்த்தி செய்ய ஏன் காலதாமதம் ஆகிறது என்று ஒரு கேள்வி நான் 15—6—1980-ல் கேட்டிருந்தேன். அந்தக் கேள்வி 26—6—1980 ஆம் நாளன்று அனுமதிக்கப்பட்டிருக்கிறது, கிட்டத் தட்ட இரண்டரை வருஷம் ஆகிறது. நாளது வரையில் எந்தவிதமான பதிலும் அது சம்பந்தமாகக் கிடைக்கவில்லை. சம்பந்தப்பட்ட துறை சரியாகச் செயல்படாமல் இந்த அரசுக்குத் தகவல் கொடுக்கவில்லை என்று நான் நினைக்கிறேன். அதனால்தான் அமைச்சர் அவர்களால் அதற்கான பதில் சொல்ல முடியவில்லை போலிருக்கிறது. நான் கேட்ட கேள்வி வெகு சாதாரணமானது. இரண்டரை வருடமாக இருக்கிறது. ஒரு கேள்விக்குரிய பதிலைச் சொல்ல எவ்வளவு நாட்களாகும்? அதுவும் ஒரு சாதாரண கேள்விக்கு ஏன் இவ்வளவு நாட்கள்? ஏன் காலியாக இருக்கிறது என்று சொல்ல என்ன கஷ்டம், அதைத் தொடர்ந்து ஏன் பூர்த்தி செய்ய காலதாமத மாகிறது என்று சொல்வதிலே என்ன கஷ்டம் என்று தெரியவில்லை. நிச்சய மாக அந்தப் பதிலை இதற்குள்ளாகக் கொடுத்திருக்க முடியும். இன்றைய தினம் வரையில் எவ்வளவோ மாற்றங்கள் அங்கே ஏற்பட்டிருக்கும். ஆகவே, இனிமேல் இந்த மாதிரிக் குறைகள் இல்லாதளவிற்கு இந்த அரசு இயந்திரம் சரியாக இயங்கும் வகையிலே தக்கவாறு கவனித்து அமைச்சரவை நட வடிக்கை எடுக்க வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

(மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் தலைமை)

(முற்பகல் 11-10)

கடைசியாக, ஒன்றைச் சொல்லி முடித்துக்கொள்ள விரும்புகிறேன். இந்த அரசைப் பொறுத்தவரையில், மதுவிலக்கில் மிகுந்த நம்பிக்கை இருப்பதாகச் சொல்லப்படுகிறது. மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கும் மதுவிலக்கில் நிரம்ப ஈடுபாடு இருப்பதாகச் சொல்லப்படுகிறது. குடி, குடியைக் கெடுக்கும் என்று தெரிந்தும், அதைப்பற்றி விளம்பரப்படுத்திக்கொண்டும், தமிழகத்தில் பெரும்பான்மையான அளவுக்கு நிறையச் சாராயக் கடைகள் நடத்துவதற்கு அரசாங்கம் அனுமதி கொடுத்திருக்கிறது. இத்தகைய சாராயக் கடைகள் நம்மிடையே பல குடிகாரர்களை உருவாக்கியிருக்கின்றன. அதைப்பற்றிக்கூட நான் கவலைப்படவில்லை. குடிகாரர்கள் அதிகமான காரணத்தால், நாட்டில் பல குடும்பங்கள் கெட்டுப்போய்விட்டன என்பது அனைவருக்கும் தெரியும். பல குடும்பங்கள் குடியின் காரணமாகச் சீரழிந்துவிட்டன. ஆனால் அப்படிப்பட்ட குடிகாரர்களை நல்வழிப்படுத்துவதற்கு குடியின் கேடுகளை விளக்குவதற்கு இந்த அரசு ஏதாவது வழிவகை செய்திருக்கிறதா? எனக்குத்





தெரிந்தவரையில் ஒன்றும் செய்யவில்லை. குறிப்பாகக் குடியின் கேடுகளைப் பற்றி மக்களிடத்தில் தெளிவாகவும், விளக்கமாகவும் எடுத்துச் சொல்லப்படு வதாகத் தெரியவில்லை. இன்றையதினம் சென்னை போன்ற இடங்களில் குடியினால் சீரழிந்தவர்களை நல்வழிப்படுத்துவதற்கு என்றே சில தனிப்பட்ட அமைப்புகள் இயங்கி வருகின்றன. அப்படிப்பட்ட நல்வழிப்படுத்தும் அமைப்புகளுக்கு அரசு நல்லாதரவு தர வேண்டும் என்று கேட்டுக்கொள்ள

T. T. Ranganathan Clinical Research Foundation

என்ற அமைப்பு அடையாறில் இத்தகைய குடிப்பழக்கத்திற்கு அடிமையானவர்களையும், அதன் காரணமாகச் சீரழிந்தவர்களையும் காப்பாற்றுவதற்காகச் செயல்பட்டு வருகிறது. குடியின் காரணமாகச் சீரழிந்த ஒரு குடும்பத்தின் கதி மற்றவர்களுக்கு வரக்கூடாது என்ற எண்ணத்தின் காரணமாக இந்த அமைப்பு உருவாக்கப்பட்டிருக்கிறது. குடியினால் இறந்து போனவர் ஒருவரின் மனைவிதான் இந்த அமைப்பை உருவாக்கி குடிக்கு அடிமையானவர்களையும் அவர்கள் குடும்பங்களையும் சீர் படுத்தி நல்வாழ்வடைய சிறப்பாக நடத்தி வருகிறார். அதைப்போலவே 'ஆல்காலிக் அனானிமஸ்' என்ற இன்னொரு அமைப்பும் இருக்கிறது. இந்த அமைப்பு உலகம் முழுவதும் இயங்கி வருகிறது. சென்னையில் உள்ள இத் தகைய அமைப்புகள் மிகவும் சிறப்பாகப் பணியாற்றி வருகின்றன. பல குடும்பங்கள் பயனடைந்துள்ளன. அப்படிப்பட்ட அமைப்புகளுக்கு அரசு நல்ல வகையில் உதவி செய்ய வேண்டும் என்று எடுத்துச் சொல்ல விரும்பு கிறேன். அதுமட்டுமல்ல அப்படிப்பட்ட அமைப்புகளைப் போன்று குடிக்கு அடிமையானவர்களை மீட்க புதிய அமைப்புகளை மேலும் உருவாக்க அரசு முன்வர வேண்டும். குடிக்கு அடிமையானவர்களை மீட்பது என்பது கஷ்ட மான காரியம்தான். அதற்கு இப்படிப்பட்ட அமைப்புகள் இருந்தால், மிகவும் உதவியாக இருக்கும். மேற்கூறிய அமைப்புகளுக்கு அரசு வெறும் பண உதவி மட்டுமல்லாமல், வேறு எந்தெந்த வகைகளில் உதவி செய்ய முடியுமோ அப்படி யெல்லாம் உதவி செய்ய முன்வர வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். ஏனென்றால் தமிழ் நாட்டில் அதிகமான அளவுக்கு இன்றையதினம் சாராயக் கடைகள் இருக்கின்றன. அதன் காரணமாக பலர் குடிக்க ஆரம்பித்து விட்டார்கள். எனவே குடிப்பழக்கத்திலிருந்து மக்களை மீட்பதும், அவர் களுக்கு உதவி செய்வதும் அரசின் கடமையாகும். குடி என்பது ஒரு பழக்கம் கூட அல்ல, அது ஒருவகையான வியாதி என்றுகூட சொல்லப்படுகிறது. சைக்கலாஜிகல் மருத்துவம் தேவை என்று சொல்லப்படுகிறது. எனவே அப்படிப்பட்ட வியாதியிலிருந்து மக்களை மீட்பதற்கு இப்படிப்பட்ட

அமைப்புகளின் பணி நிரம்பத் தேவைப்படுகிறது என்ற காரணத்தால், அவைகளுக்கு அரசு முன்வந்து பெருமளவுக்கு எல்லா வகையிலும் உதவி செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொண்டு என்னுடைய உரையை முடித்துக் கொள்கிறேன்.

**திரு. ஜேப்பியார் :** மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் அவர்களே, மேதகு ஆளுநர் அவர்களின் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின்மீது நானும் கலந்துகொண்டு பேசுவதற்கான நல்வாய்ப்பு தந்ததற்கு நான் உள்ளபடியே நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். இத்தீர்மானத்தின் மீது பேசுவதற்கு முன்னால், இம்மாமன்றத்தில் இரண்டு மாண்புமிகு உறுப்பினர்கள் அண்மையில் மணி விழாக் கண்டிருக்கிறார்கள் என்ற காரணத்தால், அவர்களுக்கும் இம் மன்றத்தின் மூலமாக என்னுடைய வாழ்த்துக்களையும் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். ஏன் அவர்களுக்கு இன்றையதினம் வாழ்த்துக்களைத் தெரிவிக்க விரும்புகிறேன் என்றால், தற்போது நமக்கு நிரம்ப வேலைகள் இருக்கின்றன. நிரம்ப வேலைகள் என்பவை யாவை என்பது ஆளுநர் உரையில் விளக்கமாகச் சொல்லப்பட்டிருக்கிறது.

சில பிரச்சினைகளைப் பொறுத்தவரையில், நாம் அனைவரும் ஒன்றாகச் சேர்ந்து ஒட்டு மொத்தமான முறையில் சில கருத்துக்களைச் சொல்லும் பொறுப்பு நமக்கு இன்றைக்கு ஏற்பட்டிருக்கிறது. எனவே அப்படிப்பட்ட பொறுப்புக்களில் அவர்களும் தங்களை இணைத்துக் கொள்வார்கள் என்ற நல்ல நம்பிக்கையோடுதான் நான் இதைக் குறிப்பிடுகிறேன். அப்படி மணி விழாகண்ட உறுப்பினர்கள் யார் யார் என்று இங்கே சில உறுப்பினர்கள் கேட்கிறார்கள். மாண்புமிகு உறுப்பினர் திரு. ஏ. ஜே. தாஸ் அவர்களும் நம்முடைய அருமை அண்ணன் மாண்புமிகு உறுப்பினர் திரு. நீலநாராயணன் அவர்களும்தான் அண்மையில் அறுபது வயதை அடைந்து மணி விழா கொண்டாடியிருக்கிறார்கள். என்றாலும் அவர்களெல்லாம் எங்களைப் போலவே இன்னும் இளைஞர்களாகப் பணியாற்ற முன்வர வேண்டும் என்று கேட்டுக்கொள்ள விரும்புகிறேன். அது என்ன பணியென்றால் தற்போது நம்மையெல்லாம் எதிர் நோக்கியிருக்கிற மொழிப் பிரச்சினைதான். நம்முடைய தாய் மொழியான தமிழ் மொழியை திராவிட மொழிகளுக்கு எல்லாம் மூலமொழியான தமிழ் மொழியை மறைமுகமாகவே ஒழிக்க வேண்டும் அல்லது வேண்டுமென்றே இரண்டாம்தர மொழியாக ஆக்கவேண்டும் என்ற முயற்சிக்கு எதிராக, எண்ணத்திற்கு எதிராக, நாம் அனைவரும் ஒன்றாகச் சேர்ந்து போராடுகிற அளவுக்கு அவர்கள் இளமை பெற வேண்டும் என்று இந்த நேரத்தில் அவர்களுக்கு வேண்டுகோள் விடுக்கிறேன்.





பேரறிஞர் அண்ணா அவர்களால் தமிழகத்தில் இனி இரட்டை மொழி ஆட்சிதான் என்று அறிமுகப்படுத்தப்பட்ட பிறகு, இனி தமிழகத்தில் இரண்டு மொழிகள் மட்டுமேதான் இருக்க வேண்டும் என்ற நம்முடைய முடிவுக்கு இணங்க நாம் செயல்பட்டு வருகிறபோது, அதிலிருந்து பின்வாங்குகிற நிலையில் மத்திய அரசு இன்றையதினம் இந்தியைப் புகுத்த ஆரம்பித்திருக்கிறது. இரயில்வே நிலையங்களில் முதலில் தமிழ் மொழியிலும் இரண்டாவதாக இந்தியிலும், மூன்றாவதாக ஆங்கிலத்திலும் எழுதப்பட்டிருந்த பெயர்ப் பலகைகளிலிருந்து, நாம் எடுத்த முடிவின் அடிப்படையில், நாம் சொன்ன கருத்துக்களின் அடிப்படையில் மத்திய அரசு இந்தி மொழியிலிருந்த சொற்களையெல்லாம் நீக்கினார்கள். நாமும் பூரிப்படைந்தோம். நாம் சொன்னதை ஒப்புக் கொண்டார்களே, நம்முடைய இரட்டை மொழிக் கொள்கையை ஏற்றுக்கொண்டார்களே, நாம் இந்தியை எந்த நேரத்திலும் ஏற்றுக்கொள்ள மாட்டோம் என்று சொன்னதை ஒப்புக் கொண்டார்களே என்று நம்பி சந்தோஷப்பட்டோம். அப்படி நம்பியிருந்தபோது, "நாங்கள் அதை ஏற்றுக்கொள்ளவில்லை" என்று மறைமுகமாக இன்றையதினம் மீண்டும் இரயில்வே நிலையங்களில் உள்ள பெயர்ப் பலகைகளில் அழிக்கப்பட்ட இந்தி எழுத்துக்கள் மீண்டும் அதே இடத்தில் நமது கண்களையெல்லாம் உறுத்திக்கொண்டு தெரிய ஆரம்பித்துவிட்டன. அதைப்போலவே அஞ்சல் நிலையங்களிலும் முன்பு எடுக்கப்பட்ட இந்தி எழுத்துக்கள் மீண்டும் பழையபடி நம்மையெல்லாம் மிரட்டுவதைப்போல் இன்றையதினம் காட்சியளிக்கத் தொடங்கிவிட்டன. இன்னும் சொல்லப்போனால், தேசிய உடைமையாக்கப்பட்ட வங்கிகளில்கூட காசோலை பெறுவதற்கான படிவங்களும், செக்குகளும் முழுவதுமாகவே இந்தி மொழியில்தான் இருக்கின்றன. அங்கே இருக்கிற "லெட்டர் பேட்'-கள்கூட இந்தி மொழியில்தான் இருக்கின்றன. தமிழக மக்களான, தமிழ் மொழியைத் தாய் மொழியாகக் கொண்ட நமது மக்கள் அத்தகைய தேசிய வங்கிகளில் பணம் போடுகிறார்கள். அவர்கள் அத்தனை பேரும் இங்கே வாழ்கிறவர்கள். இந்த மாநிலத்தில் பிறந்தவர்கள். இந்த மண்ணுக்குச் சொந்தக்காரர்கள். ஆனால் நாம் போடுகிற பணத்திலிருந்துதான் அத்தகைய வங்கிகளுக்கு வருவாய் வருகிறது. ஆனால் அத்தகைய வங்கிகளில்கூட நம்முடைய பணத்திலிருந்து வருகிற வருவாயைப் பெறுகிற வங்கிகளில்கூட இந்தி மொழியைத் திணிக்கிற வகையில் இன்றைய தினம் மத்திய அரசு நேரிடையாகவோ, தங்களின் அதிகாரிகள் மூலமாகவோ, மறைமுகமாகவோ செயல்படுகிறது என்பதை நினைத்துப் பார்க்கிறபோது, மீண்டும் 1965 ஆம் ஆண்டு போராட்டத்தை நமக்கு அவர்கள் நினைவுபடுத்துகிறார்களோ. அல்லது மீண்டும் அத்தகைய ஒரு எழுச்சி நம் மத்தியிலே உருவாக வேண்டும் என்று கருதுகிறார்களோ என்றுதான் நாம் நினைக்க

வேண்டியிருக்கிறது. நீங்கள் என்னதான் தமிழகத்தில் சட்டம் போட்டாலும் சரி, நாங்கள் எங்கள் இஷ்டப்படிதான் நடப்போம், நாங்கள் அதை மதிக்க மாட்டோம் என்று சொல்லுவதைப்போல் இருக்கிறது.

இன்னும் ஒருபடி மேலே போய்ச் சொல்ல வேண்டுமென்றால், இங்கே ரிசர்வ் வங்கி என்று ஒன்று இருக்கிறது. நாம் சென்னை மாநகரில் பேரறிஞர் அண்ணா அவர்களின் பெயரால் ஒரு சாலையை 15 ஆண்டுகளுக்கு முன்னால் வைத்திருக்கிறோம். இந்த அண்ணா சாலையைக் குறித்து நான் ஏற்கெனவே ரிசர்வ் வங்கிக்குக் கடிதம் எழுதியிருக்கிறேன். நீங்கள் அனுமதி தருகிற அனைத்து தேசிய மயமாக்கப்பட்ட வங்கிகளுடைய கிளைகளுக்கும் இன்னும் "மவுண்ட் ரோடு கிளை" என்றே போடுகிறீர்களே அதை மாற்றி அண்ணா சாலைக் கிளை என்று போடுங்கள் என்றால், முடியாது என்கிறார்கள். கேட்டால் அதை மத்திய அரசுதான் எங்களுக்குச் சொல்ல வேண்டும் என்று சொல்லுகிறார்கள். மத்திய அரசு சொன்னால்தான் நாங்கள் செய்வோம் என்று அங்கே இருப்பவர் சொல்கிறார். இப்படி நடைபெறுகிற நிலைகளைப் பார்க்கிறபோது, தமிழ் மொழியை இவர்கள் எப்படியாவது அழித்து விடுவார்களோ அல்லது நாம் பேசுகிற நம்முடைய தமிழ் மொழியை இனி பேச வேண்டாம் என்று சொல்லுவார்களோ என்றுகூட நாம் அச்சப்பட வேண்டியிருக்கிறது.

அதுமட்டுமல்ல, தனியார் பள்ளிகளைப் பலர் நடத்துகிறார்கள் அப்படிப்பட்ட பள்ளிகள் அரசின் அங்கீகாரத்திற்கு வருகிறபோது ஒன்றை நம்மாலே கவனிக்க முடிகிறது. அத்தகைய பள்ளிகள் தங்கள் பள்ளிகளைப் பள்ளிகள் என்று குறிப்பிடாமல் "வித்யாலயா" என்று குறிப்பிட்டுக் கொண்டிருக்கின்றன. இப்படி சமஸ்கிருதம் கலந்த இந்தியில் "ஆதர்ஷ் வித்யாலயா", "சாரஸ்வதி வித்யாலயா" என்று தமிழ் நாட்டில் பெயர் வைக்கிற நிலைமையைப் பார்க்கிறோம். இப்படித் தமிழ் மொழியில் பள்ளிகள் என்று சொல்லப்படாமல், அவைகள் எல்லாம் சமஸ்கிருதம் கலந்த மொழியில், இந்தியில், வித்யாலயா என்று அழைக்கப்படுவதன் மூலம் தமிழகத்தில் இனி எதிர்காலத்தில் பள்ளி என்ற சொல்லுக்கே வாய்ப்பில்லாமல் 'வித்யாலயா' என்றே சொல்லப்படுகிற நடைமுறை வழக்குக்கு வந்துவிடுமோ என்ற அச்சம் ஏற்படுகிறது. எனவே 'வித்யாலயா' என்று அழைத்துக் கொள்ளுகிற பள்ளிகளுக்கு அரசு அங்கீகாரமோ, பண உதவியோ செய்யக்கூடாது என்பதை நான் இங்கே தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

இன்றையதினம் தமிழகத்தில் சத்துணவுத் திட்டம் கொண்டு வரப்பட்டதன் காரணமாக ஏறத்தாழ 70 லட்சம் மாணவர்கள், இளஞ் சிறார்கள் சாப்பிடுகிற நிலை உருவாகியிருக்கிறது இன்றும் பலர் அதைப்பற்றிப் பலவிதமாகச்



சொல்லிக்கொண்டிருக்கிறார்கள். "அது நிறுத்தப்பட்டுவிடும், அது நின்று விடும்" என்றெல்லாம் மனித இதயம் இல்லாதவர்கள் பேசுகிறார்கள். சாப்பாட்டில் பல்லி விழுந்துவிட்டது, அதில் விஷம் இருந்தது என்று விஷமத்தனமான முறையில் பேசுகிறார்கள். பல்லி விழுவில்லை என்றால்கூட, இவர்களே பல்லியைப் பிடித்துப் போடுவார்களோ என்ற அச்சம்கூட நமக்கு வருகிறது. அந்த அச்சத்தின் காரணமாகத்தான் சொல்லுகிறேன். இவர்கள் அதை மட்டும் சொல்லவில்லை. மழைகூட வரக்கூடாது, மழை வந்தால் நாடு செழித்துவிடும், ஆகவே அது வராமல் இருக்க வேண்டும் என்று கூட எண்ணுகிறவர்கள் இருக்கிறார்கள். இவர்களெல்லாம் தமிழ் நாட்டில்தான் இருக்கிறார்கள். நம்மோடுதான் இவர்களும் இருக்கிறார்கள். நாட்டில் மழை வரக்கூடாது, அதன் காரணமாக மின்சாரம் நமக்கு ஒழுங்காகக் கிடைக்கக் கூடாது. சாப்பாடு நமக்கு ஒழுங்காகக் கிடைக்கக்கூடாது என்றுகூட எண்ணுகிறார்கள்.

(முற்பகல் 11-20)

**திரு. செ. முத்துசாமி:** துணைத் தலைவர் அவர்களே, பல்லியைப் பிடித்து விடுகிறார்கள் என்று சொல்லும்போது, பல்லியையும், பாம்பையும் பிடித்து விடக்கூடியவர்களை நம்பியா சத்துணவுத் திட்டத்தை ஒப்படைத்து நடத்தி வருகிறார்கள் என்று கேட்க விரும்புகிறேன். அத்தகைய சந்தேகம் எப்படி வரலாம்? இப்படிப்பட்ட சந்தேகத்தை எழுப்புவது தர்மம் ஆகாது.

**திரு. ஜேப்பியார்:** அப்படிப்பட்ட சந்தேகப் பிரச்சினை மாண்புமிகு உறுப்பினருக்கு வரக்கூடாது. "பல்லி விழுந்துவிட்டது, வாந்தி எடுத்து விட்டார்கள் பார்த்தீர்களா?" என்று சொல்லுகிறபோது, ஒருவேளை விழா விட்டால்கூட, பிடித்துக்கொண்டு வந்து போட்டு தங்களுக்கு ஆதாயம் தேடுகிறவர்களும் இருக்கிறார்கள் என்பதற்காகத்தான் சொல்லுகிறேன். இந்தத் திட்டத்தை நடத்துவோம் என்பதில் எங்களுக்கு நிறைய நம்பிக்கை இருக்கிறது. இதை நடத்தியே காட்டுவோம். யார் சொன்னாலும், எதைச் சொன்னாலும் இது நடைபெறும். புரட்சித் தலைவர் அவர்கள் நடத்திக் காட்டுவார்கள் என்ற நல்லெண்ணம் இருப்பதால், சந்தேகத்திற்கு இடமில்லை. ஆசிரியப் பெருமக்கள் மீது உயர்ந்த எண்ணங்களை புரட்சித் தலைவர் கொண்டிருக்கிறார் என்பது மாண்புமிகு உறுப்பினருக்கே தெரியும். எதிர்க்கட்சியாக இருந்த போது, ஆசிரியர்கள் ஊர்வலம் வந்தது. அப்போது அவரே எதிர் நின்று வரவேற்று சிற்றுண்டி தந்து, கோரிக்கையை நிறைவேற்றுவேன் என்று பேசிய புரட்சித் தலைவர் என்றைக்கும் ஆசிரியப் பெருமக்களின் மனம் நோக வைக்க மாட்டார்கள். அப்படிப்பட்ட நல்ல உள்ளம் படைத்த அவருக்குக் காலக்கெடு தருகிறார்கள். "இந்தக் காலக் கெடுவிற்குள் முடிக்காவிட்டால் என்ன

நடக்கும் தெரியுமா?" என்று கேட்கிறார்கள். இதற்கு முன்பு அப்படி "என்ன நடக்கும் தெரியுமா?" என்று கேட்டவர்கள் எல்லாம் இப்போது எங்கே இருக்கிறார்கள் என்று தெரியவில்லை. "நாங்கள் நினைத்தால் இந்த ஆட்சியை ஐந்து நிமிடத்தில் மாற்றுவோம்" என்று பெரியகுளத்திலே கூறி இந்த ஆட்சியை அவலப்படுத்திய அவர்கள் இப்போது எங்கே இருக்கிறார்கள் என்று தெரியவில்லை. இப்படிப்பட்ட ஆயிரக்கணக்கான மிரட்டல்கள் அலை மோதிக் கொண்டிருக்கின்றன. இதையெல்லாம் பார்த்துப் பழக்கப்பட்டவர் மாண்புமிகு புரட்சித் தலைவர் முதல்வர் அவர்கள். ஆகவே ஆசிரியர்களுக்குத் தலைமை தாங்கிச் செல்லுகிறவர்கள்தான் இப்படி மிரட்டிக் கொண்டிருக்கிறார்கள். ஆனால் அந்த ஆசிரியர்களைக் கேட்டால், "எங்களுக்கு இருந்த வாழ்வு பறி போகிறது. குழந்தைகளுக்கு அழகாகச் சாப்பாடு பரிமாறுகிறபோது குழந்தைகளோடு இன்பத்தோடும், அரவணைப்போடும், பந்த பாசத்தோடும் இருந்தோம். யாரோ சிலர் சேர்ந்து இதை எடுத்துவிட்டார்கள்" என்று வருத்தப்படுகிறார்கள் என்பதை எண்ணிப் பார்க்கிறபோது, ஒருவேளை தலைமையைத் தாங்குபவர்கள் தவறான கருத்துக்களைச் சொல்லிவிட்டார்களோ, அல்லது தவறாகத் திசை திருப்பிவிட்டார்களோ, தங்களுடைய இலாபத்திற்காக, தங்களுடைய தலைமையைத் தக்கவைத்துக்கொள்ளுவதற்காக திசை திருப்பிவிட்டுவிட்டார்களோ என்று எண்ணத் தோன்றுகிறது.

திரு. க. மீனாட்சிசுந்தரம்: மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, சங்கத்தை நடத்துகிறவர்களுக்குக் களங்கம் விளைவிக்கும் வகையிலே மாண்புமிகு உறுப்பினர் பேசிக்கொண்டிருக்கிறார்கள். மூன்று பெரிய சங்கங்கள், அரசினுடைய அங்கீகாரத்தைப் பெற்ற அவர்களுடைய சங்கமும் சேர்ந்து இதைக் கூறியிருக்கின்றன. அரசு அங்கீகாரம் பெற்ற அவர்களுடைய சங்கமும் இதைத் தடுத்து நிறுத்தியிருக்கிறது என்பதை உணர்ந்து, அந்தச் சங்கத்தின் அங்கீகாரத்தை ரத்து செய்து எங்களோடு அனுப்பி வைப்பாரா என்று அறிய விரும்புகிறேன்.

திரு. ஜேப்பியார்: எந்தச் சங்கத்தின் தலைமையையும் தக்க வைத்துக் கொண்டு ஆட்சியை நடத்த வேண்டுமென்ற அவல நிலை இல்லை. ஆனால் நடக்கிற நிலைமையைச் சொல்லுவது எங்களுடைய கடமை.

திரு. செ. முத்துசாமி: சங்கங்கள் என்று சொன்னால் . . .

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. முத்துசாமி அவர்கள் பிறகு பேசவிருக்கிறார்கள். அப்போது சுருக்கமாக பதில் சொல்லலாம்.





திரு. செ. முத்துசாமி: தக்க வைத்துக்கொள்வதற்காக இதைச் செய்கிறார்கள் என்று சொல்லுகிறார்கள். இது உண்மைதான். ஆசிரியர்களுடைய உணர்வுகளை, ஆசிரியர்களுடைய வேண்டுகோள்களை, ஆசிரியர்களுடைய கஷ்டங்களைப் பிரதிபலித்து சங்கத் தலைமையைத் தக்க வைத்துக்கொள்ளுகிறோம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. ஜேப்பியார்: என்னைப் பொறுத்தவரையில், சங்கம் தேவை. சங்கம் என்றைக்கும் இருக்கும். ஆனால் தலைமைதான் மாற்றப்பட்டிருக்கும். கால்க்கெடு தருகிற அளவிற்கு, "இந்த அரசு இதைச் செய்யாவிட்டால், என்ன நடக்கும்?" என்று கேள்வி கேட்கிற அளவிற்கு இன்று சங்கத்தின் நடவடிக்கைகள் மேலோங்கி நிற்கின்றன. இதை புரட்சித் தலைவர் அவர்கள் மனதிலே வைத்துக்கொண்டு ஆயிரக்கணக்கான ஆசிரியர்களுக்கு இன்றைக்கு வேலை வாய்ப்பு அளித்திருக்கிறார்கள். வேலைவாய்ப்புத் தருவதற்கு அவர்கள் ஒத்துழைத்திருக்கிறார்கள். இன்றைக்கு 35 ஆயிரம் பேருக்கு வேலைவாய்ப்பு தரப்பட்டிருக்கிறது. பல இலட்சம் குழந்தைகள் உணவு பெறுகிற இந்தத் திட்டத்தாலே பல ஆயிரக்கணக்கான ஆசிரியர்கள் வேலை பெறுகிறார்கள்.

அடுத்து, இந்தி என்பது எந்த உருவிலே வந்தாலும் சரி, அதை யார் கொண்டு வந்தாலும் சரி, இந்தி வர வேண்டுமென்று யார் முயற்சி செய்தாலும் சரி, "நாங்கள்தான்" என்று தைரியமாகக் கூறிக்கொண்டு கொண்டுவந்தாலும் சரி, அதை இங்கே வரவிடமாட்டோம். இந்த பூமி தந்தை பெரியார், பேரறிஞர் அண்ணா அவர்களுடைய பூமி. இந்தப் பூமியைக் காவல் காக்கிறவர் புரட்சித் தலைவர். ஆகவே எந்த ஒரு மொழி ஆதிக்கத்தையும் இங்கே கொண்டுவந்துவிட முடியாது என்பதைச் சொல்லிக்கொள்கிறேன். சில வங்கிகளிலும், மத்திய அரசாங்க அலுவலகங்களிலும், இரயில்வே நிலையங்களிலும் இருக்கும் இந்திச் சொற்கள் அழிக்கப்பட வேண்டும், தமிழும் ஆங்கிலமும்தான் இருக்க வேண்டும். இங்கே இந்திக்கு வேலையில்லை. இங்கே படித்தவர்கள் மத்தியில் நம்முடைய தாய்மொழி, மூத்த மொழி தமிழ் மொழியில்தான் எழுதப்பட வேண்டுமென்ற நிலைமையை உருவாக்க வேண்டும். இதற்கு இடைஞ்சலாக யாரும் இருக்க மாட்டார்கள் என்று கருதுகிறேன். திரு. ஏ. ஜே. தாஸ் அவர்கள் 60 வயதை அடைந்தவர்கள். திரு. நீலநாராயணன் அவர்கள் 60 வயதை அடைந்து மணி விழாவைக் கொண்டாடியவர்கள். அவர்கள் எல்லாம் கூட இளைஞர்களாக வர வேண்டும். திரு. இராமமூர்த்தி அவர்களும் வருவார்கள் என்று கருதுகிறேன். இதிலே மாறுபட்ட கருத்து இருக்காது என்று கருதுகிறேன். இது இன்றைக்கு முளைக்க ஆரம்பித்திருக்கிறது. இதை அடியோடு அழிக்க வேண்டுமென்று கூறி, ஆளுநர் உரைக்கு நன்றி சொல்லி அமர்கிறேன். வணக்கம்.

திரு. பி. முனுசாமி: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மேதகு ஆளுநர் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின் மீது பேச வாய்ப்பு அளித்தமைக்காக நான் நன்றி தெரிவித்துக்கொள்கிறேன்.

முதலமைச்சர் சத்துணவுத் திட்டத்தைப்பற்றி மாண்புமிகு உறுப்பினர்கள் பலர் இங்கே பாராட்டிப் பேசியிருக்கிறார்கள். குறிப்பாக கிராமப்புறங்களில் வாழ்கிற தாழ்த்தப்பட்ட, பிற்படுத்தப்பட்ட மக்கள், சமுதாயத்தில் நலிந்த மக்கள் ஆகியவர்களுக்குப் பயன்படுகிற வகையில் நமது தமிழக முதலமைச்சர் அவர்களால் கொண்டுவரப்பட்டிருக்கிற ஒரு நல்ல விசேஷத் திட்டம். மறைந்த மாபெரும் தலைவர் திரு. காமராஜ் அவர்கள் காலத்தில் கொண்டு வந்த பழைய திட்டத்தை விரிவுபடுத்தி மேலும் பல இலட்சம் குழந்தைகள் பயன்பெறக்கூடிய வகையிலே முதல்வர் அவர்கள் இந்தத் திட்டத்தைக் கொண்டுவந்திருக்கிறார்கள். வறுமைக் கோட்டிற்குக் கீழேயுள்ள மக்கள் வயிறாறப் புசிக்கின்ற அளவிற்கு இந்தத் திட்டம் கிராமப்புறங்களில் நல்ல முறையில் செயல்பட்டு வருகிறது. இருந்தாலும் கூட சத்துணவுத் திட்டத்தின் பெயரால் சில தவறுகள் நடைபெற்றுக்கொண்டு வருகின்றன. கிராமப்புறங்களில் சத்துணவுத் திட்டத்திற்குப் பொறுப்பாளர்களாக இருக்கிற சில பேர் இந்தத் திட்டத்திற்கு இடையூறு செய்கிற வகையில் நடந்துகொள்கிறார்கள். கிராமப்புறங்களில் சத்துணவுத் திட்டம் வெற்றிகரமாக நடைபெறுவதற்கு இந்தப் பொறுப்பாளர்கள் ஒத்துழைப்பார்களேயானால், இத்திட்டம் நிச்சயமாகச் சிறப்புப் பெறும் என்பதைச் சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன். கிராமப்புறங்களில் உள்ள எல்லாக் கட்சி நண்பர்களும் ஒத்துழைத்தால், நிச்சயமாக இத்திட்டம் மேலும் வளரும். மற்ற மாநில அரசுகளும் இந்தச் சத்துணவுத் திட்டத்தைப் பின்பற்றக்கூடிய அளவிற்கு இது ஒரு நல்ல திட்டமாக உள்ளதால், இதை நல்ல முறையில் செயல்படுத்த வேண்டுமென்று இந்த அரசை மிகத் தாழ்மையோடு கேட்டுக்கொள்கிறேன்.

அது மட்டுமல்லாமல், வீட்டுக்கு ஒருவருக்கு வேலை என்ற திட்டத்தையும் இந்த அரசு கொண்டு வந்திருக்கிறது. வீட்டுக்கு ஒருவருக்கு வேலை தருகிற திட்டத்தை ஏற்கெனவே ஆறாவது ஐந்தாண்டுத் திட்டம் உருவாக்கியபோது குறிப்பிட்டிருக்கிறார்கள். வறுமைக் கோட்டிற்குக் கீழ் உள்ள மக்கள், வேலையில்லாத் திண்டாட்டத்தில் உள்ள மக்கள் தமிழகத்திலேதான் அதிகமாக இருக்கிறார்கள் என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். அதை உணர்ந்துதான் கடந்த ஆண்டு 700 கோடி ரூபாயாக இருந்த இந்தத் திட்டத்தை இந்த ஆண்டு 800 கோடி ரூபாய் அளவிற்கு, அதாவது 100 கோடி ரூபாய் அளவிற்கு உயர்த்தித் தந்திருக்கிறார்கள். ஏனென்றால் வேலையில்லாத் திண்டாட்டம் பரவலாக தமிழகம் பூராவும் இருந்து கொண்டிருக்கிறது. பெருந்தலைவர் காமராசர்





(முற்பகல் 11-30)

அவர்கள் காலத்திலே இலவசக் கல்வித் திட்டத்தைக் கொண்டுவந்தபோது, அதன்மூலமாகப் பயன்பெற்ற மாணவர்கள், இளைஞர்கள் இன்றைக்கு படித்து பட்டதாரிகளாக இந்த நாட்டில் இருக்கின்றபோது, அவர்களுக்கு வேலை வாய்ப்பு உருவாக்கித் தருகின்ற அளவுக்கு நாம் வேலைவாய்ப்பை உருவாக்கித் தரவேண்டும். இன்றைக்கு மத்திய அரசு கொண்டுவந்திருக்கின்ற ஆறாவது ஐந்தாண்டுத் திட்டத்தின் மூலமாக அவர்கள் குறிப்பிட்டபடி, ஏறக்குறைய 15 கோடி ரூபாய் அளவில் இந்த வேலை வாய்ப்புத் திட்டத்தை உருவாக்க வேண்டுமென்று தமிழக அரசும் வீட்டுக்கு ஒருவருக்கு வேலை என்ற இந்த திட்டத்தைக் கொண்டுவந்திருக்கிறது. இந்தத் திட்டத்தை நல்ல முறையில் செயல்படுத்த வேண்டுமென்று இந்த அரசை நான் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, தன்னிறைவுத் திட்டம். இந்தத் தன்னிறைவுத் திட்டம் மூலமாக கிராமப்புறங்களில் சாலைகள் போடுகின்ற வேலை, பள்ளிக்கூடங்கள் கட்டுதல் மற்ற பிற வேலைகள் செவ்வனே நடைபெறுகிறதா என்று பார்த்தால், நிச்சயமாக இல்லை. அங்கே தன்னிறைவுத் திட்டத்தின்படி அந்தத் திட்ட வேலைகளை எடுக்கின்ற காண்ட்ராக்டர்கள் அந்தத் திட்டத்தை உருப்படியாக நடைபெறச் செய்யாமல், வேறு பல வழிகளில் அதைப் பயன்படுத்திக்கொண்டிருக்கிறார்கள். ஆக தன்னிறைவுத் திட்டம் எல்லாம் சரியான முறையில் செயலாற்றப்படவில்லை. இந்த ஆண்டு தன்னிறைவுத் திட்டத்தை பேரூராட்சிகளிலும் விரிவுபடுத்துவதற்கு ஒரு திட்டத்தை இந்த அரசு இப்போது கொண்டு வந்திருக்கிறார்கள். அடுத்து, பேரூராட்சிகளில் தன்னிறைவுத் திட்டத்தின் மூலமாக நடைபெறுகின்ற தவறுகள் அங்கு நடைபெறாமல் பார்த்துக்கொள்ள வேண்டும். ஏனென்றால் நல்ல எண்ணத்தோடு கொண்டுவருகின்ற இந்தத் திட்டங்களை எல்லாம், சரியான முறையில் பயன்படுத்திக்கொள்ளாமல், தங்கள் சொந்த தன்னிறைவுத் திட்டமாக அங்கே இருக்கின்ற கட்சி நண்பர்கள் பயன்படுத்திக்கொள்கின்றார்கள். ஆகவே தன்னிறைவுத் திட்டத்தை ஒழுங்காகச் செயலாக்குவதற்கு, பேரூராட்சிகளில் இந்தத் திட்டம் நடைபெறுகின்றபோது, அதை மிகவும் உன்னிப்பாக கவனித்து ஆவன செய்ய வேண்டுமென்று இந்த நேரத்தில் கேட்டுக்கொள்கிறேன். பிரதம மந்திரியின் 20 அம்சத் திட்டம் சமுதாயத்தில் நலிந்த, தாழ்த்தப்பட்ட மக்களுக்காகவே இருக்கிறது. அதில் 3 அம்சங்களை ஒதுக்கியிருக்கிறார்கள். வீடு இல்லாதவர்களுக்கு வீட்டு வசதி செய்து தருவது. அது போன்று இன்னும் பல திட்டங்கள் இருக்கின்றன. அடுத்து, வேலைவாய்ப்புத் திட்டம். வேறு திட்டங்களும் இருக்கின்றன. 20 அம்சத் திட்டத்தின் மூலமாக மத்திய அரசும் மாநில அரசும் இணைந்து செயல்படுகின்ற திட்டங்கள் இருக்கின்றன, இவைகளையெல்லாம் மிகவும் ஜாக்கிரதையாகச் செய்ய வேண்டும். ஏனென்றால் இன்றைக்கு தாழ்த்தப்பட்ட மக்களுக்கு,

வீடு இல்லாத மக்களுக்கு வீட்டு வசதி செய்து தருகிறோம் என்று சொல்லிக் கொண்டு, இந்த அரசு இந்தத் திட்டத்தைக் கொண்டு வருகிறது. ஆனால் வீட்டுவசதியற்ற மக்களுக்காக வசதி செய்வது குறித்து ஒரு குறிப்பிட்ட உதாரணத்தைச் சொல்ல விரும்புகிறேன். அது சரியாகச் செயல்படுத்தப்படவில்லை என்று சொல்லிக்கொள்கிறேன். பொன்னேரி தாலுக்காவில் அத்திப்பட்டு என்ற கிராமத்தில் தாழ்த்தப்பட்ட மக்கள் குடும்பங்கள் 27 வாழ்கின்றார்கள். அரசாங்கத்திற்குரிய களம் புறம்போக்கு நிலத்தில், 27 குடும்பத்தினர் வீடுகளை அமைத்துக்கொண்டு ஓராண்டு காலமாக அங்கே இருந்து வருகிறார்கள். நாம் 20 அம்சத் திட்டத்தின் மூலமாக ஏழைகளுக்குக் குடிமனை வழங்குகிறோம் என்றுதான் அந்தத் திட்டத்தைக் கொண்டு வந்திருக்கிறார்கள். அந்தத் திட்டத்தின் மூலமாக மக்கள் குடிமனை பெறலாம். அங்கே 27 குடும்பங்கள் கடந்த ஓராண்டு காலமாக வீடுகட்டிக்கொண்டு வாழ்கின்றன. இடையில் அந்தத் தொகுதி சட்டசபை உறுப்பினர் அவர்கள் அங்கு குடியிருக்கின்ற மக்களை அணுகி, "நீங்கள் இங்கே குடிசை போட்டது தவறு, இது களம் புறம்போக்கு, ஆகவே ஒரு ஆளுக்கு அதாவது ஒரு குடும்பத்திற்கு சத்துணவுத் திட்டத்திற்காக ஆயிரம் ரூபாய் தாருங்கள். அப்படித் தந்தால், அதை நிரந்தரமாக ஆக்கி பட்டா வாங்குவதற்கு அரசாங்கம் மூலமாகக் கொடுப்பதற்கு ஏற்பாடு செய்கிறேன்" என்று சொல்லிக் கேட்டிருக்கிறார்கள். அந்த ஏழை மக்கள் எங்கேயிருந்து அந்த ஆயிரம் ரூபாயைத் தருவார்கள்? அதற்குப் பிறகு அவர்கள் அப்படித் தருவதற்கு எங்களுக்கு வசதி வாய்ப்பு இல்லை. ஆகவே எங்களுக்குக் கொடுக்க முடியாது என்று சொல்லிவிட்டார்கள். இருந்தாலும்கூட சட்டமன்ற உறுப்பினர் அங்கே ரெவின்யூ அதிகாரிகளை வைத்துக் கொண்டும், காவல் துறையினரை வைத்துக்கொண்டும் அங்கேயிருந்து குடிசைகளைப் பிரித்துப் போட்டிருக்கிறார்கள். அதுமட்டுமல்ல. எந்தவிதமான முன் அறிவிப்பும் கொடுக்காமல் குடிசைகளைப் பிரித்திருக்கிறார்கள். அங்கு இந்த மக்கள் குடிசைகள் போட்டதற்கு முன்பு ஏற்கெனவே வேறு 5 குடிசைகள் இருக்கின்றன. அந்தக் குடிசைகளில் இருப்பவர்கள் வரி கட்டி வருகிறார்கள். இருந்தாலும்கூட, சட்டமன்ற உறுப்பினர் அவர்கள் அவருடைய வேகத்திலே அந்த மக்களையெல்லாம் அங்கேயிருந்து அப்புறப்படுத்திவிட வேண்டும் என்று சொல்லி, அவர்களையெல்லாம் அப்புறப்படுத்தியிருக்கிறார்கள். அங்கே ஏற்கெனவே இருந்த 5 குடிசைகள் 10 ஆண்டுகளாக இருக்கின்றன. அவர்கள் வரி ரசீதை வைத்துக்கொண்டு கோர்ட்டுக்குப் போயிருக்கிறார்கள். கோர்ட்டுக்குச் சென்று 'ஸ்டே' வாங்கியிருக்கிறார்கள். அப்படியிருந்தும் சட்டமன்ற உறுப்பினர் அவர்கள் மீண்டும் அவைகளை எப்படியாவது அப்புறப்படுத்த வேண்டும் என்று சொல்லி அவர்கள் வீடுகளை குண்டர்களை வைத்துக்கொண்டு பிரித்திருக்கிறார்கள்.





**மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் :** உறுப்பினர் அவர்கள் எந்த ஏரியா என்று சொல்ல வேண்டும்.

**திரு. பி. முனுசாமி :** பொன்னேரி தாலுக்காவில் அத்திப்பட்டு கிராமம். மீண்டும் கூறுகிறேன் * அவர்கள் அதிகாரிகளோ குண்டர்களை வைத்துக் கொண்டு வீடுகளைப் பிரித்தார்கள்.

**மாண்புமிகு திரு. கா. இராசா முகமது :** மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், தொடர்ந்து * என்று சொல்கின்றார்கள். பெயரைச் சொல்லாவிட்டாலும், அது அவை மரபுக்கு உகந்தது அல்ல. பொதுவாகச் சொல்லலாம். ஆளும் கட்சிக்காரர்கள் செய்கிறார்கள் என்று வேண்டுமானால் சொல்லலாம். * என்று சொன்னால், அது சரியல்ல. அவையின் உறுப்பினர் அவர்கள் குற்றச்சாட்டுக்களைச் சொல்லலாம். ஆதி திராவிட மக்களுக்கு ஏதாவது துன்பம் இழைக்கப் பட்டிருந்தால், அதை உடனடியாக கவனிக்கிறோம். * என்று சொன்னதை நீக்கலாம் என்று கருதுகிறேன்.

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் :** * என்று சொன்ன பகுதியை அவைக்குறிப்பிலிருந்து நீக்குமாறு சொல்லிக்கொள்கிறேன்.

**திரு. பி. முனுசாமி :** * ஆளும்கட்சி உறுப்பினராக இருப்பதால் சொல்கிறேன்.

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் :** உறுப்பினர் அவர்கள் திரும்பவும் அப்படியே சொல்கிறார்.

**மாண்புமிகு திரு. கா. இராசா முகமது :** * அல்லது அவர் ஆளும் கட்சியினரா என்பதல்ல. அப்படி யார் தலையிட்டிருந்தாலும், அது தவறுதான். அவையின் மரபு கருதி இன்னொரு அவையிலே இருக்கின்ற உறுப்பினரைப் பற்றி இந்த அவையில் சொல்ல வேண்டாம் என்பதற்காகத் தான் சொல்கிறேன்.

**திரு. பி. முனுசாமி :** அதற்குப் பிறகு முறையாக அவர்கள் கோர்ட்டுக்குச் சென்றிருக்கிறார்கள். அவர்கள் ஸ்டே ஆர்டர் வாங்கியிருக்கிறார்கள். இருந்தாலும் அந்த இடத்திலிருந்து அவர்களை அப்புறப்படுத்த வேண்டும் என்று சொல்லி பலமுறை மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் மூலமாக பல தொல்லைகள் தருகின்ற அளவுக்கு ஆளும்கட்சி உறுப்பினர் அவர்கள் செய்திருக்கிறார்கள். அந்தக் குடிசைகளைப் பிரிக்க ஏற்பாடு செய்துகொண்டு

* தலைவரின் ஆணைப்படி நீக்கப்பட்டது.

**டாக்டர் எம். ஏ. முத்தையா செட்டியார் :** தலைவரவர்களே, உறுப்பினரவர்கள் இந்தி வேண்டுமென்று சொல்கிறாரா, வேண்டாமென்று சொல்கிறாரா. தெளிவாகச் சொல்ல வேண்டும்.

**திரு. க. இராமமூர்த்தி :** இங்கே இருக்கும் இரு மொழித் திட்டத்திலே ஆங்கிலம் பயிற்சி மொழியாக இருக்கக்கூடாதென்று சொன்னோம். ஐந்து வருடங்களுக்குள் தீர்த்து விடுவோமென்று சொல்லி, 8 வருடங்கள் ஆகி விட்டன. ஆகவே மொழிப் பிரச்சினையில் குழப்பம் வேண்டாம் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் :** இந்தி வேண்டுமா, வேண்டாமா என்றுதான் கேட்கிறார்.

**திரு. பி. முனுசாமி :** தலைவரவர்களே, எனக்கு முன்பு என்னுடைய தலைவரவர்கள் சொன்னார்கள். இதில் குறுக்கே நிற்கப் போவதில்லை. இருந்தாலும் சில கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன். அதற்கு சந்தர்ப்பம் தருமாறு கேட்டுக்கொள்கிறேன். இன்றைக்கு தேசிய ஒருமைப்பாடு கொண்டாடுகிற நாம், மும்மொழித் திட்டத்தை நம் அருகிலுள்ள கர்நாடகம், ஆந்திரம், கேரளம் பின்பற்றும்போது, இங்கே பின்பற்ற முடியவில்லை. ஆந்திரத்தில் உள்ள மக்கள் மும்மொழித் திட்டத்தின் மூலமாகப் படித்து, பாராளுமன்றத்தில் இந்தியில் பேசும் அளவிற்கு இருக்கிறார்கள். கேரளாவிலுள்ள மக்கள் மும்மொழித் திட்டத்தின் மூலமாக இந்தி படித்து பாராளுமன்றத்திலும், மற்ற துறைகளிலும் இந்தியில் பேசும் அளவிற்கு வளர்ந்திருக்கிறார்கள். அது போலத்தான் கர்நாடகத்திலும் இதன்மூலம் அந்த மொழிகள் அழிந்து விடவில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. சோ. ஆறுமுகம் :** மாண்புமிகு உறுப்பினரவர்கள் ஆந்திராவிலும், கர்நாடகாவிலும் மும்மொழி படிக்கிறார்கள், அதைப்போல தமிழகத்திலும் மும்மொழித் திட்டம் வேண்டுமென்று காங்கிரஸ் கட்சியின் சார்பில் விரும்புகிறாரா ?

**திரு. க. இராமமூர்த்தி :** தலைவரவர்களே, காங்கிரஸ் கட்சி மும்மொழித் திட்டத்தில் திட்டவட்டமான நம்பிக்கைகொண்டு இருக்கிறதென்பதைப் பல முறை சொல்லியிருக்கிறோம். இன்றும் சொல்கிறேன், நாளையும் சொல்வோம்.

**திரு. சோ. ஆறுமுகம் :** நேற்றைய தினம் மாண்புமிகு உறுப்பினர் திரு. இராமமூர்த்தி அவர்கள் பேசும்போது, பேரறிஞர் அண்ணா அவர்கள் கொண்டு வந்த இரு மொழிக் கொள்கையை நாங்கள் ஆதரிக்கிறோம், எந்த வகையிலும் இந்தி இங்கு புகுத்தப்படுவதை விரும்பவில்லை என்று பேசினார்களே.





**திரு. க. இராமமூர்த்தி :** என்னைத் தவறாக கோட் ( quote ) செய்கிறார். அதை ஏற்கவில்லை என்றாலும்கூட, அந்த உணர்வுகளுக்கு எதிராக இருக்கக்கூடாது என்பதற்காக வாக்கெடுப்பில் கலந்துகொள்ளவில்லை என்று தெளிவாகச் சொன்னேன். மற்ற கட்சிகளும் அந்த நிலையில் இருந்தார்கள். மும்மொழித் திட்டத்தில் எங்களுக்குள்ள நம்பிக்கை உறுதியானது. அதில் மாறுபாடு இல்லை. ஆனால் இந்தி ஆதிக்கமாக, கட்டாயமாக இந்த மாநிலத்திற்கு வருவதற்கு நாங்கள் இடம் கொடுக்கவில்லை. அந்த உணர்வுகளில் மற்றவர்களோடு கலந்திருக்கிறோமென்றுதான் சொல்லியிருக்கிறேன். இதில் குழப்புவதற்கு ஒன்றுமில்லை. உங்களைப் பொறுத்த வரையில், நீங்கள் கொண்டு வந்த சட்டத்தையே இன்னமும் அமலுக்குக் கொண்டுவரவில்லை. நீங்கள்தான் குழப்பத்திலேயே இருந்து கொண்டிருக்கிறீர்கள்.

**திரு. ஜேப்பியார் :** தலைவரவர்களே, இரு மொழிக் கொள்கை என்று சொல்லுகிறோம், இந்தி வேண்டாமென்று சொல்லுகிறோம். இந்தி வேண்டுமென்று மாண்புமிகு உறுப்பினர் திரு. இராமமூர்த்தி அவர்கள் மக்கள் மத்தியிலே வந்து சொல்லத் தயாரா ? நாங்கள் வேண்டாம், வேண்டாம் என்று சொல்லுகிறோம். வேண்டுமென்றால் அவர்கள் மக்கள் மத்தியில் இந்தி வேண்டும், வேண்டும் என்று சொல்லத் தயாரா ?

**திரு. க. இராமமூர்த்தி :** இரு மொழித் திட்டத்தைக் கொண்டு வந்து, தமிழ் மட்டுமே பயிற்று மொழியாக இருக்கும், 5 ஆண்டுகள் அவகாசம் என்று சொன்னார்கள். இன்றைக்கு உங்கள் வீட்டுக் குழந்தைகள் ஆங்கிலத்தில் படிக்கிறார்கள். சாதாரணமானவர்களின் குழந்தைகள் படிக்க முடியாமல் இருக்கிறார்கள். உங்கள் மொழிக் கொள்கையிலேயே உங்களுக்கு நம்பிக்கையில்லை. கட்டாய இந்தித் திணிப்புக்கு நாங்கள் எதிராக இருக்கிறோம். காங்கிரஸ் தலைமை அதில் தெளிவாக இருக்கிறது. ஆனால் நீங்கள் உங்கள் கொள்கைக்கு விரோதமாகச் செயல்படுகிறீர்கள்.

**டாக்டர் எம். ஏ. முத்தையா செட்டியார் :** மாண்புமிகு உறுப்பினரவர்கள் மணியார்டர் பாரம் பார்த்திருக்கிறார்களா. இந்தியும் ஆங்கிலமும் அதில் இருக்கிறது. தமிழில் இல்லை.

(முற்பகல் 11-50)

**திரு. க. இராமமூர்த்தி :** நீங்கள் தான் நடவடிக்கை எடுத்திருக்க வேண்டும். நான் கவர்ன்மெண்ட் நடத்தவில்லை. நீங்கள் தான் நடத்துபவர்கள் பக்கத்தில் இருக்கிறீர்கள். You are the Government. You should have taken my assistance. As one sharing the sentiments, you should come up with the proposal. எங்களைக் கேட்டால் நாங்கள் என்ன செய்வது ? நீங்கள் தான் கவர்ன்மெண்ட், ஆட்சியை நடத்திக்கொண்டிருக்கிறீர்கள்.

திரு. பி. முனுசாமி : மறைந்த முன்னாள் பிரதமர் நேருஜி அவர்களுடைய உறுதிமொழியையும், இந்நாள் பிரதமர் இந்திரா காந்தி அவர்களுடைய உறுதி மொழியையும் நாங்கள் மதிக்கிறோம். அவர்கள் சொன்ன உறுதிமொழியை நிச்சயமாக காங்கிரஸ் கட்சி பின்பற்றும். அதில் சந்தேகம் வேண்டாம். என்றைக்கும் அதை மீறி நடக்க மாட்டோம் என்பதைக் குறிப்பிட விரும்பு கிறேன். ஒன்றை நான் இங்கு குறிப்பிடக் கடமைப் பட்டிருக்கிறேன். நான் தாழ்த்தப்பட்ட வகுப்பைச் சார்ந்தவன் என்கிற முறையில் அடிக்கடி வட மாநிலங்களில் நடைபெறுகின்ற மாநாடுகளுக்குச் செல்கின்ற வாய்ப் பினைப் பெற்றவன். என்னைப் போன்ற தாழ்த்தப்பட்ட வகுப்பைச் சார்ந்த பல ஊழியர்கள் அவற்றில் கலந்துகொள்கின்ற வாய்ப்பினைப் பெற்றிருக்கிறார்கள். அப்போதெல்லாம் அங்கு பேசுகிறவர்களில் பெரும்பாலா னவர்கள் இந்தியில் தான் பேசுகிறார்கள். இன்றைக்கு இந்தியாவில் தாழ்த்தப் பட்ட மக்கள் 15 கோடி பேர் இருக்கிறார்கள். உண்கின்ற உணவால், உடுக் கின்ற உடையால், பேசுகின்ற மொழியால் இவர்கள் உண்மையிலேயே வேறு பட்டிருந்தாலும், இனத்தால் இவர்கள் தாழ்த்தப்பட்டவர்கள்தான். ஆனாலும் இந்தி பேச முடியவில்லையே என்ற ஏக்கம் அங்கே போகின்றபோதெல்லாம், எங்களைப் போன்றவர்களுக்கு ஏற்படுகிறது. தாழ்த்தப்பட்ட மக்களாகிய எங்களுக்காவது அதை உரிமையை வழங்க வேண்டும். குறிப்பாக ஆதி திராவிட நலப் பள்ளிகளில் பயிலும் தாழ்த்தப்பட்ட மாணவர்கள் இந்தியைப் பயிலும் உரிமையை இந்த அரசு ஏற்படுத்தித் தர வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

(மாண்புமிகு மேலவைத் தலைவர் தலைமை)

அடுத்து, மின்சாரத்தைப் பொறுத்தவரையில், இந்த அரசு செயல்படுத்து கின்ற திட்டங்கள் நல்ல திட்டங்கள் தான் என்றாலும்கூட, இன்றைக்கு மின் சார உற்பத்தியைப் பொறுத்தவரையில், தமிழகம் பின்தங்கியிருக்கிறது. இந்நிலையில் ஒரு சந்தோஷமான செய்தியை நேற்று நான் படித்தேன். நமது மின் அமைச்சர் அவர்களும் கேரள மின் அமைச்சர் அவர்களும் ஒரு ஒப்பந்தம் செய்து, அந்த ஒப்பந்தப்படி கேரள அரசு நமக்கு உதவுவதாக வாக்குறுதி அளித்திருக்கிறார்கள். மற்ற மாநிலங்களில் தனியார் துறையில் தொழிற்சாலைகளை ஆரம்பிக்க முன்வருகின்ற அதிபர்களுக்கு அந்த அரசாங் கங்களே மின்சாரம் உற்பத்தி செய்துகொள்வதற்கான அனுமதியை அளிக் கின்றன. இப்படிப்பட்ட அதிகாரத்தை தொழில் அதிபர்களுக்கு அந்தந்த அரசாங்கங்கள் வழங்கியிருப்பதால், அங்கு தொழில்களை அமைக்க தொழி லதிபர்கள் பெருவாரியாக முன்வருகிறார்கள். அதேபோல தம்முடைய மாநிலத்திலும் பெரிய பெரிய தொழில்களை நடத்துகின்ற தொழிலதிபர்கள் அவர்களுடைய தேவைக்கான மின்சாரத்தை அவர்களே உற்பத்தி செய்ய





முன்வந்தால், அதற்கான அனுமதியை நமது அரசு அளித்து, தமிழ் நாடு தொழிலில் மேன்மையுற வழிவகை செய்ய வேண்டுமென்று நான் இந்த சந்தர்ப்பத்தில் கேட்டுக்கொள்கிறேன். தொழில்கள் வளர்வதுடன் நமது மாநிலத்தில் அதை வகையில் மின்சாரமும் மிச்சப்படும். அந்த மின்சாரத்தை நாம் நமது நாட்டு மக்களுக்குப் பயன்படுத்திக்கொள்ளலாம். தனியாரும், பெரிய தொழில்களை நடத்துகின்ற தொழிலதிபர்களும் இதற்கு முன் வந்து, இத்திட்டத்தை நிறைவேற்ற ஒத்துழைக்க வேண்டுமென்று கேட்டுக்கொள் கிறேன்.

அடுத்து, சட்டம் ஒழுங்கைப் பொறுத்தவரையில், ஓரளவுக்கு சட்டம் ஒழுங்கு பாதிக்கப்பட்டிருக்கிறது என்பதையும் நான் சொல்வேன். எங்கு பார்த்தாலும் ஜாதிக் கலவரங்களும், ஜாதியின் பெயரால் அமைப்புகளும் சங்கங்களும் ஏற்படுத்தப்பட்டிருக்கின்றன. இந்த ஜாதிக் கலவரங்களால், கொடுமைகளால், அரிசன மக்கள் வெகுவாக பாதிக்கப்படுகிறார்கள். குறிப் பாக இன்றைக்கு காவல் நிலையங்களில் நூற்றுக்கு 99 பேர் தாழ்த்தப்பட்டவர் கள் அல்லாதவர்கள் பணியாற்றுகிறார்கள். அதிகாரிகள் மட்டத்திலும் இதே தான் நிலைமை. ஆகவே தான் அரிசனங்கள் கொண்டு போகின்ற புகார்கள் மீது நேர்மையாக, ஒழுங்காக நடவடிக்கை மேற்கொள்ளப்படவில்லை, அல்லது கவனம் செலுத்தப்படவில்லை. ஆதி திராவிடர்களுடைய நலன்களைக் கவனிக்க மற்ற துறைகளில் தனியாகச் சிறப்பு அதிகாரிகள் இருப்பதுபோல், காவல் துறையிலும் ஒரு சிறப்பு அதிகாரியை நியமித்து, அரிசன மக்களுடைய பிரச்சினைகள் கவனிக்கப்படுகின்றனவா என்று கண்காணித்து, அவர்களுடைய பிரச்சினைகளுக்கு உடனடியாகத் தீர்வு காண வேண்டுமென்று நான் மாண்பு மிகு முதலமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன். இன்றையதினம் இப் படிப்பட்ட ஒரு வசதி இல்லாததால், சாதாரணமான சிறிய சிறிய பிரச்சினை கள் எல்லாம் பெரிய பிரச்சினைகளாக, ஜாதிப் பிரச்சினைகளாக வளர்ந்து கொண்டிருக்கின்றன. சட்டம் ஒழுங்கைச் காப்பாற்றும் வகையில் இதனை உடனடியாகச் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொண்டு, எனக்கு வாய்ப்பளித் தமைக்கு மாண்புமிகு தலைவரவர்களுக்கு நன்றி கூறி அமைகிறேன்.

*திரு. செ. முத்துசாமி : மாண்புமிகு மேலவைத் தலைவர் அவர்களே, மேதகு ஆளுநர் உரையின் மீது பேசுவதற்கான வாய்ப்பு கொடுத்ததற்காக நன்றி தெரிவித்துக்கொள்கிறேன். தமிழக அரசைப் பொறுத்தவரையில், கொள்கையாக ஆளுநர் உரையில் சத்துணவுத் திட்டம் மிகத் தெளிவாகச் சொல்லப்பட்டிருக்கிறது. 1957 ஆம் ஆண்டு பள்ளிகளில் புகுத்தப்பட்டு, ஆசிரியர்கள் தலை மீது விழுந்த இந்த மதிய உணவுச் சுமை இந்த முதலமைச் சர் அவர்கள் காலத்திலே விடுதலை பெற்றிருக்கிறது என்பதை அறியும்போது,

நான் மிகப் பெருமையோடு முதலமைச்சர் அவர்களைப் பாராட்டுகிறேன். அதுமட்டுமல்ல, சத்துணவுப் பிரச்சினை என்று சட்டசபையில் வந்தபோது, ஆசிரியர்களுக்கு எந்தவிதத் தொல்லையையும் தர மாட்டேன், தாய்க் குலத்தை வைத்து நடத்துவேன் என்று முதலமைச்சர் அவர்கள் அறிவித்தார்கள். அதற்காக அன்றைக்கே நான் நன்றி செலுத்தினேன். அதற்குப் பின்னால் கல்வித் துறையில் இருப்பவர்களுக்கு ஒரு பெரிய ஆசை. சோற்றைத் தாங்களே போட்டாக வேண்டுமென்ற ஆசை. சோற்றிலே அவர்களுக்கு ஏற்பட்ட ஆசை ஆசிரியர்கள் தலைமீது சுமத்தப்பட்டது. அதற்காக இதிலே முன் நின்று, தான் தான் எல்லாவற்றையும் செய்தேன் என்று பறைசாற்றிக் கொண்டிருந்தார் ஒரு கல்வித் துறை இயக்குநர். அது மட்டுமல்லாமல், 10 பேரிடத்தில் பேசுகிறார் என்றால், அதில் ஒன்பது பேரிடத்தில் உண்மையற்றதையே சொல்வதை வழக்கமாக பேசிக்கொண்டிருந்த ஒரு கல்வித் துறை இயக்குநரைப்பற்றி உண்மையை உணர்ந்ததும், அந்த நபரை இந்த இலாகாவிலிருந்தே மாற்றிய மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் செயலை மனதார, நெஞ்சாரப் பாராட்டுகிறேன். காரணம் கல்வித் துறையிலே நடந்துகொண்டு வந்த பல்வேறு தவறுகளுக்கு அவர் தான் காரணமாக இருந்திருக்கிறார். ஆனாலும் அப்படிப்பட்ட ஒரு இயக்குநரை கல்வியமைச்சர், "3 ஆயிரம் ரூபாய் சம்பளத்தை வாங்கிக்கொண்டு 6 ஆயிரம் ரூபாய்க்கு வேலை செய்பவர்" என்று பேசினார். ஆனால் அதற்கு அடுத்த நாளே மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அவரை வேறு ஒரு துறைக்கு மாற்றுகிறார். இத்தகைய செயலைச் செய்ததற்காக நான் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களைத் திரும்பவும் பாராட்டுகிறேன். அவர் அலுவலகத்தில் இருந்ததில்லை. செக்ரட்டேரியட் செல்கிறேன், செக்ரட்டேரியட் செல்கிறேன் என்று சொல்வது, ஆனால் வேறு வெளியிடங்களுக்குச் சென்றுகொண்டிருப்பது தான் அவர் வேலை. அலுவலைச் செய்யாமல் இருந்தவர் மீது எடுத்த இந்த நடவடிக்கை நியாயமானது. மேலும் கெடாமல் கல்வித் துறையைக் காப்பாற்றியுள்ளீர்கள். மனந்திறந்து மீண்டும் முதலமைச்சர் அவர்களைப் பாராட்டுகிறேன்.

முதலில் சத்துணவுத் திட்டத்தை பள்ளிகளுக்குத் தான் கொண்டு வருகிறோம் என்று சொன்னார்கள். உடனே நான் சார்ந்திருக்கிற தமிழ் நாடு தொடக்கப் பள்ளி ஆசிரியர் கூட்டணி இயக்கம் ஜூன் 5 ஆம் தேதி இந்தத் திட்டம் ஆசிரியர்கள் தலையில் கொடுக்கப்படுமானால், கல்வி கெடும், கல்வி போதனை கெட்டுவிடும் என்று தமிழ்நாடு ஆசிரியர் கூட்டணி பொதுக்குழுவில் தீர்மானமிட்டுத் தெளிவாக்கினோம். இதற்கு வேலையில்லாத ஆசிரியர்களைப் பயன்படுத்த வேண்டுமென்று சொன்னோம். ஆகஸ்ட் 6 ஆம் தேதி





சத்துணவு உயர்மட்டக் குழு கூடி 31 ஆயிரம் திருக்குறளாசிரியர்களைப் போடுவதாக முடிவெடுத்து அறிவித்தது. இதற்கு உடனே நன்றி சொன்னோம். அதனை மனதாரப் பாராட்டினோம். காலம் கெடு கேட்கவில்லை. ஆனால் இடையிலே நடைபெற்றிருக்கிற நிகழ்ச்சிகளைச் சொல்கிறேன். செப்டம்பர் மாதம் நடைபெற்ற சட்டமன்றக் கூட்டத் தொடரிலே கேட்டுக் கேட்டுப் பார்த்தேன். குறள் ஆசிரியர்களை நியமிப்பது குறித்து மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் சரியாக பதில் சொல்லவில்லை. இந்த நிலையில் தான் நான் சார்ந்திருக்கிற இயக்கம் போராட்டத்தை அறிவித்தது. ஆனால் செப்டம்பர் 19 ஆம் தேதி தமிழ்நாடு ஆசிரியர் கூட்டணி மாநிலப் பொதுக்குழு போராட முடிவு செய்தது. பெரியகுளம் இடைத் தேர்தல் அப்போது நடைபெற்று வந்தது. இந்த நேரத்தில் எங்கள் போராட்டத்தை வெளியிட்டு எங்களுடைய போராட்டத்தை அரசியல் பிரச்சினைக்குள்ளாக்க வேண்டாமென்று கருதி, தேர்தல் முடியும்வரை நிறுத்தி விட்டு, முடிவுகள் அறிவிக்கப்பட்ட பின்னர், போராட்டம் பற்றி அறிவித்தோம். இந்த நிலையில் தான் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் போராடிக்கொண்டிருந்த ஆசிரியர் சங்கத்தின் சார்பில் என்னை அழைத்து, அரசு தலைமைச் செயலர் மூலம் நேரடியாகப் பேச்சுவார்த்தை நடத்தி, மிகச் சிறப்பான ஒரு முடிவையும் அறிவித்திருக்கிறார்கள். அதற்காக மாண்புமிகு முதலமைச்சர் அவர்களை நான் நெஞ்சாரப் பாராட்டுகிறேன். மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய அணுகுமுறையை நான் பாராட்டுகிறேன். இன்றைக்கு மாணவர்களுக்கு நல்ல கல்வியைக் கொடுக்க ஆசிரியர்களை இதிலிருந்து விடுவித்து ஒரு கொள்கையாகவே இதனை அறிவித்திருக்கிறார்கள். இதை நான் இந்த அவையின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். பள்ளிகளில்

(நண்பகல் 12-00)

உணவு அளிக்கும் திட்டத்தின் காரணமாக, ஏற்பட்டுள்ள பொறுப்பிலிருந்தும் மற்ற பொறுப்புக்களிலிருந்தும் தலைமையாசிரியர்களும் ஏனைய ஆசிரியர்களும் விடுவிக்கப்பட்டு, அவர்களை கல்வி கற்பிக்கும் பணியிலேயே ஆழ்ந்து ஈடுபடச் செய்யும் பொருட்டு, உணவு அளிக்கும் பள்ளிகள் பலவற்றில் அதற்கென்று அமைப்பாளர்களை அரசு நியமிக்க முடிவு செய்து தலைமையாசிரியர்களுக்கும், ஏனைய ஆசிரியர்களுக்கும் உள்ள புதிய பொறுப்பு முழுவதும் நீங்குவதுடன், இதனால் 35 ஆயிரம் பேருக்கு புதிய வேலைவாய்ப்பு கொடுத்திருக்கும் இந்த அரசை நான் பாராட்டுகிறேன். இந்த விஷயங்களைப் பொறுத்தவரையில், எனக்கு எத்தகையதான கருத்துவேறுபாடும் இல்லை. ஒரு கொள்கையைத் திட்டவட்டமாக அறிவித்த இந்த அமைச்சரவையை நான் பாராட்டுகிறேன். ஆனால் வருத்தத்திற்குரிய

ஒரு விஷயத்தையும் நான் இங்கே சொல்ல விரும்புகிறேன். இந்த துறைக்குச் சம்பந்தப்பட்ட மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் இருக்கிறார்கள். அவர் 'கேன்டீன் மேனேஜர்'களாக ஆசிரியர்கள் செயல்பட விடமாட்டேன் என்று சொன்னார்கள். ஆசிரியர்கள் சமையற்காரர்களாக ஆகிக்கொண்டிருக்கிறார்கள் என்று வேதனையோடு சொன்னார்கள். அமைச்சர்கள் அத்தனை பேரும் கூடி முடிவு எடுத்து, பின்னர் அதைக் கொள்கையாக ஆளுநர் உரையில் அறிவிக்கிறார்கள். அந்த ஆளுநர் அவர்களின் உரையின் மீது மாண்புமிகு உறுப்பினர் ஒருவர் பேசும்போது, அதைப்பற்றி மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் கொள்கைக்கு எதிராகப் பேசியுள்ளார் "ஆசிரியர்கள் எல்லாம் இதை விரும்புகிறார்கள், ஆனால் இந்த சங்கங்கள் எல்லாம் ஆசிரியர்களுடைய உணர்வுகளை உண்மையாக பிரதிபலிக்கின்றனவா, என்று நான் எண்ணவேண்டியிருக்கிறது, மக்களுக்கு இதைத் தெரிவிக்க வேண்டியிருக்கிறது" என்றெல்லாம் சொல்லிவிட்டு, "இதை மீண்டும் பரிசீலிக்க வேண்டிய கட்டாயத்திலே இருக்கிறோம்" என்று அவர் சொல்கிறார். நான் கேட்கிறேன், ஒரு ஆட்சி அமைப்பிலே, அதாவது இந்திய ஆட்சி அமைப்பிலே, ஒரு அமைச்சரவை ஒரு முடிவெடுத்து, அதை ஆளுநர் அவர்கள் கொள்கையாக அறிவித்து படித்துவிட்ட பிறகு, அந்தக் கருத்துக்கு எதிராகப் பேசுவதற்கு ஒரு அமைச்சருக்கு, அமைச்சர் என்ற அந்தஸ்திலே இருப்பவருக்கு என்ன தகுதி இருக்கிறது? அப்படிச் சொல்வார்களேயானால், அவர் இந்த அமைச்சரவையிலே தொடர்ந்து எப்படி அமைச்சராக இருக்க முடியும்? இருக்கத் தகுதி கிடையாது. இந்தப் பிரச்சினையை அடிப்படைப் பிரச்சினையாக நான் எழுப்புகிறேன். மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்கள் இந்தப் பிரச்சினையிலே ஆழ்ந்து சிந்தித்து முடிவு எடுக்க வேண்டும். ஆளுநர் உரைக்கு நன்றி தெரிவிக்கவேண்டிய ஆளும் பொறுப்பிலே இருக்கும் மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் அரசு கொள்கைக்கு எதிராக, இதிலே என்ன சொல்லப்பட்டிருக்கிறதோ அதற்கு எதிராக, அதாவது ஆழ்ந்த கல்விப் பொறுப்பில் ஆசிரியர்களை முழுமையாக ஈடுபடுத்த வேண்டும் என்று முடிவெடுத்திருக்கும் ஆட்சியின் கொள்கைக்கு எதிராக ஆசிரியர்களே சோறு போட வேண்டும் என்பதைப் பரிசீலிக்க வேண்டியிருக்கிறது என்று—பேசிய உறுப்பினர் அவர்களின் மீது இருந்த கோபத்தால்—ஆளுநர் அவர்களுடைய கொள்கைக்கு எதிராக அமைச்சர் அவர்கள் பேசியது எந்தவிதத்தில் நியாயம்? இது குறித்து மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தக்க முடிவு எடுக்க வேண்டும். அமைச்சரவையின் கூட்டுப் பொறுப்பிலே அமைச்சராக அவர்கள் இங்கே இருக்கிறார்கள். இந்தக் குற்றச்சாட்டை நான் மிகவும் கடுமையாகச் சுமத்துகிறேன். இதற்கு அவர்கள் பொறுப்பு ஏற்றேயாக வேண்டும். இந்தக் கொள்கைக்கு எதிராகப் பேசிய



கல்வியமைச்சருக்கு இந்த அமைச்சரவையிலே நீடிப்பதற்கு தகுதியில்லை என்பது என்னுடைய ஜனநாயக ரீதியான அழுத்தமான கருத்து என்பதைத் திட்டவட்டமாகத் தெரிவிக்க விரும்புகிறேன்.

அடுத்தபடியாக, இங்கே கல்வித் துறை 2.63 இலட்சம் மாணவர்கள் இந்த ஆண்டு சேர்க்கப்பட்டிருக்கிறார்கள் என்று ஒரு புள்ளிவிவரம் தந்திருக்கிறது. நான் மகிழ்ச்சியடைகிறேன். இது மொத்தப் புள்ளி விவரம். இந்த கல்வித் துறை சொல்லிவந்ததெல்லாம் என்ன? இந்த ஆண்டு சத்துணவு போட்டதினால் 2.63 இலட்சம் மாணவர்கள் பள்ளியில் கூடுதலாகச் சேர்ந்திருக்கிறார்கள் என்று சொல்லி வந்தார்கள் அது உண்மைதானா? சென்ற ஆண்டு பள்ளி வயது பிள்ளைகளின் சேர்க்கை 1.87 லட்சம். இந்த ஆண்டு 2.63 லட்சம். கூடுதலாகச் சேர்ந்து இருப்பது 80 ஆயிரம் பிள்ளைகள். உண்மையைச் சொன்னால், இப்போது கல்வித் துறைக்கு என்ன நஷ்டம் வந்துவிடும், என்ன கேடு வந்துவிடும்? மூன்றாம் ஆண்டைவிட சென்ற ஆண்டு கூடுதலாகச் சேர்ந்திருக்கக்கூடிய பள்ளி வயது பிள்ளைகள் 60 ஆயிரம் பேர்கள் தான். இந்த ஆண்டு சென்ற ஆண்டைவிட 80 பேர்கள் தான் கூடுதலாகச் சேர்ந்திருக்கிறார்கள். கல்வித் துறையிலே உண்மைகளைப் பூதாகாரப்படுத்தி சில செய்திகளைச் சொல்லிவிடுவதே இந்தத் துறைக்குப் பழக்கமாகிவிட்டது. அதற்கு முழுப் பொறுப்பாக இருந்துவந்த இயக்குநரை இப்போது இந்த அரசு நீக்கிவிட்டது. ஆனால் இன்னும் அந்தக் கல்வித் துறை அப்படியே செய்து வர அனுமதிக்கலாமா? அப்படியானால் இதைப்பற்றி உண்மைகளை அறிய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இதுகுறித்துப் பரிசீலிக்க உத்தரவிட வேண்டும். நான் இந்த அமைச்சரவையை பணிவோடு கேட்டுக் கொள்கிறேன். மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் நன்றாகச் செயல்படுகிறார் என்பதிலே எந்தவிதமான சந்தேகமும் இல்லை. ஆனால் இவ்வளவு பெரிய தவறைச் செய்யலாமா? நாட்டையே ஏமாற்றிக் கொண்டிருக்கும் அளவுக்குத்தான் இந்தப் புள்ளிவிவரங்கள் இருக்கின்றன என்பதை இங்கே சொல்லாமல் நான் வேறு எங்கே போய்ச் சொல்வது? இன்னொன்றையும் சொல்கிறார். இந்தச் சங்கங்கள் தங்களைப் பாதுகாத்துக் கொள்ளவேண்டும் என்பதற்காக இவைகளைச் செய்கின்றன என்று சொல்கிறார். திரு. ஜேப்பியாரும் சொன்னார் நான் சொல்கிறேன், இந்த ஆட்சி, தன்னை ஆட்சியில் தக்கவைத்துக் கொள்வதற்காக பல நன்மைகளைச் செய்து, அதாவது for the survival என்ற வகையிலே இந்த ஆட்சி பலவற்றை மக்களுக்குச் செய்துதான் ஆகவேண்டும், அதைப்போல, ஆசிரியர்கள் சங்கங்களும் தங்களுடைய தலைமையைத் தக்கவைத்துக்கொள்ள ஆசிரியர்களுடைய உணர்வுகளை, ஆசிரியர்களுடைய குறைகளை எடுத்துச் சொல்லிப் போராடுகிறோம். மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள்

[திரு. செ. முத்துசாமி] [1983 ஜனவரி 31

நீண்டகாலத்திற்கு முன்னால் ஒரு சங்கத்திற்குச் சட்ட ஆலோசகராக இருந்தார். அந்தச் சங்கமும் போராடியது. தமிழ்நாடு ஆசிரியர் கூட்டணி தான் முதலில் போராட்டத்தில் கலந்தது. அதற்குப் பிறகு, இன்றைக்கு 'தாங்கள் தான் ஆதாரபூர்வமாகப் போராடுவதாக' ஒரு சங்கம் சொல்கிறது. அதுவும் போராடியது.

திண்டிவனம் பகுதியில், உணவு பரிமாறும் நேரத்தில், சத்துணவுப் பணியில் ஈடுபட்டிருந்த ஆசிரியர் ஒருவர் கத்தியால் குத்தப்பட்டு ஜிப்மர் ஆஸ்பத்திரியிலே சேர்க்கப்பட்டு உயிர் பிழைத்தார். அதுபற்றி இதுவரையில் எந்தவிதமான அறிக்கையும் விடவில்லை. நான் கேட்கிறேன்; மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் சத்துணவுத் திட்டத்தை ஆசிரியர்கள் நடத்துகிறோம். நீண்டகாலமாகிவிட்டதால் தயவுசெய்து அந்த விஷயத்தை மறந்துவிடக்கூடாது. கல்வி அமைச்சரோ, கல்வி இலாக்காவோ அதுபற்றி ஒரு அனுதாபமாவது தெரிவித்திருக்கிறதா என்றால் இல்லை. அந்த ஆசிரியர் கத்திக்குத்து பட்டிருக்கிறார். அவர் ஒருதவறும் செய்ய வில்லை. கமிட்டிக்காரர்கள் அவரிடம் வந்து கணக்கு கேட்டார்கள். 'உங்களிடம் கணக்குக் காட்ட எங்களுக்கு இன்ஸ்ட்ரக்ஷன் இல்லை' என்று அந்த தலைமையாசிரியர் சொன்னார். உடனே அவரைக் கத்தியால் குத்தி னார்கள். நான்கு இடங்களிலே 'சதக் சதக்' என்று 'சினிமாவிலே போடுவதுபோல' குத்திப்போட்டார்கள். அவரை ஜிப்மர் ஆஸ்பத்திரியிலே கொண்டுபோய் சேர்த்து இப்போது உயிர் பிழைத்திருக்கிறார். இதைப்பற்றி ஒரு வார்த்தை கூட சொல்லவில்லை, கண்டிக்கவில்லை. நான் கேட்கிறேன், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் திட்டத்திற்கு இவ்வளவு சர்வீஸ் செய்திருக்கிறோமே, இத்தனை மாதங்கள் சர்வீஸ் செய்திருக்கிறோமே, 40 ரூபாய் தந்திருக்கிறார்களா, ஒரு 25 ரூபாயாவது தந்திருக்கிறார்களா? 'கவிதை எழுதியதால் பரவசப்பட்டேன்' என்று பத்திரிகையிலே அறிக்கை விடக்கூடிய அளவுக்கு இருக்கும் மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்களைப் பார்த்துக் கேட்கிறேன். கவிதை எழுதினால் அவர்களுக்குப் பரவசம் வருகிறது. கத்தியால் குத்தப்படுகிறார்கள், கை 12 இடங்களிலே வெட்டப்பட்டு, அரக்கோணத்திலே ஒருவர் தாக்கப்பட்டிருக்கிறார். அவர்கள் சொன்ன ஒருவரைப் போடவில்லை என்று சொல்லி வகுப்பறையில் கை ஒடியும் வரை ஒரு ஆசிரியரை அடித்திருக்கிறார்கள். அதைப்பற்றி ஒரு வார்த்தை கூட தெரிவிக்கவில்லை. பத்திரிகையிலே அறிக்கை விடும்போது, இந்த ஆசிரியர் சமுதாயம், வேதனைப்படுகிறது. அதற்கு தாங்கள் விடவே மாட்டோம் குண்டர்கள் மீது நடவடிக்கை எடுப்போம் என்று சொல்லவில்லை. மாண்புமிகு முதலமைச்சர் அவர்களிடம் இருப்பதுதான் போலீஸ் இலாக்கா.

இந்த நிலைமைகள் இருப்பதால், பாதுகாப்பு இல்லாமல், அல்லல்பட்டு, வேலைப் பட்டு, கத்திக் குத்து பட்டு, வாழ்வதா, சாவதா என்ற நிலைமையிலே தான் இந்த ஆசிரியர் இயக்கங்கள், இந்த ஆசிரியப் பெருமக்கள் இருக்கிறார்கள் என்ற சஞ்சலத்தை நாங்கள் தெரிவித்திருக்கிறோம். அப்படிப்பட்ட ஆசிரியப் பெருமக்கள் துடித்து எழுந்ததால்தான், தந்தை பெரியார் அவர்களின் வழியே, அவருடைய கொள்கையை நிலைநாட்டப்பட்டதால்தான் இந்த ஆட்சியை அமைத்திருக்கிறோம். நாங்கள் எல்லாம், இந்த ஆசிரியப் பெருமக்கள் எல்லாம் சுயமரியாதைக் கொள்கையிலே வளர்ந்தவர்கள். சுய மரியாதையோடு நாங்கள் வளர்ந்ததால் தான் இந்த ஆட்சி வந்தது. ஆனால் இப்போது எங்களால் சுயமரியாதையோடு இயங்க முடியவில்லை. இந்தச் சத்துணவுத் திட்டத்தால் அப்படி சுயமரியாதையோடு இயங்க முடியவில்லை என்று சொன்னதைப் புரிந்துதானே மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஒரு நல்ல முடிவை இப்போது எடுத்திருக்கிறார்கள். அதற்காக மீண்டும் அவர்களை நான் மனதாரப் பாராட்டுகிறேன். ஆனால், இதற்கு எதிரான கருத்தை மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். அவருக்கு ஒரே கோபம். எங்களுடைய போராட்டம் நடந்தபோது, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களே, இந்தப் போராட்டத்தை நேரடியாகப் பரிசீலித்தார். கல்வி அமைச்சரை விலகியிருக்கச் செய்துவிட்டார். பின்னர் உண்மை நிலைமைகளை அறிந்துகொண்டு, அதுபற்றி நல்லபடியான ஒரு முடிவை எடுத்து, அதை இங்கேயும் அறிவித்திருக்கிறார்கள். மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்களுக்கு ஒரு கோபம் இருந்திருக்கலாம். அதை இப்படியா காட்டிக்கொள்வது! அதையும் இந்த அவையிலே இப்படியா வெளிப் படையாகக் காட்டுவது? இது என்னதான் தர்மம்? ஒரு முதலமைச்சர், ஒரு அமைச்சரவை எடுத்த முடிவிற்கு, கொள்கை அறிவிப்பிற்கு எதிராக கல்வி அமைச்சர் அவர்கள் இப்படிச் சொன்னதற்கு உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று சொல்லி, இந்த விஷயத்திலே இதற்குமேலே நான் போக விரும்பவில்லை.

கல்வித் துறையிலே இன்னும் பல பிரச்சினைகள் இருக்கின்றன. அதை யெல்லாம் சொல்லித்தானாக வேண்டும். எல்லாவற்றையும் சொல்லாவிட்டாலும் சிலவற்றைச் சொல்கிறேன். இந்தச் சத்துணவுத் திட்டத்தைப் பொறுத்த வரையில், இந்தப் பிரச்சினையிலே 'வெல்ஃபேர் பள்ளிகள்', அதாவது 'நலப் பள்ளிகள்' பொறுப்பாளர் நியமனம் இல்லை ஏன்? கனிவோடு பார்த்து அங்கேயும் மாற்று ஆசிரியர்களைப் போட வேண்டும். இல்லையானால் கல்வி போதனை அங்கு கெடும். இப்போது புதியதாக 35 ஆயிரம் பேர்களை இந்த அரசு நியமிக்கவிருக்கிறது. அப்போது இந்தப் பள்ளிகளுக்கும் சேர்த்துப் போட வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

[திரு. செ. முத்துசாமி] [1983 ஜனவரி 31

கல்வித் துறையிலே இருந்து சில நேரங்களிலே சரியான தகவல்கள் அமைச்சரவைக்கு வருவதில்லை. நாங்கள், ஆசிரியர்களின் பிரதிநிதிகள், அது பற்றிச் சொல்லி, சரியான தகவல்களைச் சொல்லியேயாகவேண்டும். நாங்கள் சொல்லும் கருத்துக்கள் உண்மையானவைகளா இல்லையா என்பதைக் குறித்து வைத்து இந்த அரசு பரிசீலிக்க வேண்டும். அதுபற்றிய விவரம் போதாது என்று சொன்னால், நாங்கள் மீண்டும் தருகிறோம். நாங்கள் ஆதாரத்தோடு தருகிறோம். இந்தக் கட்சியின் மீது, அதாவது ஆட்சிக் கட்சியின் மீது சார்போ அல்லது அதனுடைய ஆதரவோ அல்லது வேறொரு கட்சியை ஆதரிக்க வேண்டிய எண்ணமோ அல்லது அவசியமோ 'இந்தப் பிரதிநிதி'யைப் பொறுத்தவரையில் கொஞ்சமும் இல்லை. ஆனால், இந்தக் கல்வித் துறையில் நடக்கும் காரியங்களை இந்த அவையிலே சொல்லத்தான், சொல்லி நிவாரணம் காணத்தான், என்னைத் தேர்ந்தெடுத்திருக்கிறார்கள் என்பதை நிச்சயமாக இந்த அரசு புரிந்துகொள்ள வேண்டும். இந்தக் கல்வித் துறை என்ன செய்து கொண்டிருக்கிறது? 1—6—1981-லே எல்லாப் பஞ்சாயத்து யூனியன் ஆசிரியர்களும் அரசு ஊழியர்களாக ஆக்கப்பட்டார்கள். ஆனால் அவர்களுக்கு இது வரையிலும் எந்தவிதமான பணி விதிகளும் வரவில்லை. அதே சமயத்தில், எத்தனை விழாக்கள், என்னென்ன கோலாகலங்கள், துறை அமைச்சர் அதிகாரிகள் எத்தனை முறை எங்கெங்கெல்லாம் சென்று வந்தார்கள், எத்தனை முறை டைரக்டர் இங்கும் அங்கும் ஓடிக்கொண்டிருந்தார், என்னென்ன ஆர்ப்பாட்டங்களையெல்லாம் செய்துகொண்டிருந்தார். இந்த நாட்டிலே இன்றையதினம் பல்வேறு சங்கடங்கள், பிரச்சினைகள் இருக்கின்றன. ஆனால் இந்த அதிகாரிகள் விழாக்களைக் கொண்டாடுவதை இன்னும் நிறுத்தவில்லை. இன்னும் நான் ஒருபடி மேலே சென்று சொல்கிறேன், அமைச்சர் அவர்கள் கூட விழாக்களைக் குறைத்துக்கொள்வது இந்த கால கட்டத்திலே நல்லது. தண்ணீர், மின்சாரம் இல்லாமல் தவிக்கும் மக்களின் பிரச்சினைகளைக் கேட்கச் செல்லுங்கள். ஒரு விழாவை நடத்தும்போது ஏராளமான மின்சாரம் அதற்குப் பயன்படுத்தப்படுகிறது. நான் உங்கள் மீது, இந்த அரசின் மீது வைத்திருக்கும் அன்பின் காரணமாகத்தான் இவைகளையெல்லாம் சொல்கின்றேன். 1—6—1981 முதல் 1982 கடைசி வரை இத்தனை நாட்களும் ஊரைச் சுற்றிக்கொண்டிருந்த அந்த டைரக்டர் எங்களுக்கு சர்வீஸ் ரூல்சை இன்னும் ஏற்படுத்தவில்லை. இன்றைய இயக்குநர் செயலகத்திற்கு அனுப்பியுள்ளார். இன்று இப்போது நிர்வகாணப்படாமல்

(பிற்பகல் 12-10)

உள்ளது. இதன் காரணமாக இன்றையதினம் எம்.ஏ., பி.டி., படித்துவிட்டு நடுநிலைப் பள்ளிகளில் இருக்கிற ஆசிரியர்களுக்குப் பதவி உயர்வு இல்லை. ஏற்கெனவே ஊராட்சி ஒன்றியங்களில் இத்தகைய ஆசிரியர்களுக்குக் கிடைத்து



1983 ஜனவரி 31] [திரு. செ. முத்துசாமி]

வந்த சலுகைகள் நிறுத்தப்பட்டுவிட்டன. வீடு கட்ட கடன் இல்லை. காரணம் கேட்டால், இன்னும் பணி விதிகள் வரவில்லை என்று சொல்லுகிறார்கள். இத்தகைய நிலைமைகள் இன்னும் நீடிப்பது ஏன் என்றுதான் கேட்க விரும்புகிறேன். இதையெல்லாம் நான் இங்கே குறிப்பிடுவதற்குக் காரணம் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தயவு செய்து இவைகளை கவனத்தில் எடுத்துக்கொள்ள வேண்டும் என்பதற்காக. இதனைப் பொறுத்த வரையில், விரைவில் திட்டவட்டமான முடிவை எடுக்க வேண்டும். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் நினைத்தால் முடியாததொன்றில்லை. முதலமைச்சர் அவர்கள் ஒன்றை நினைத்தால், அதை முடிக்கக்கூடிய சக்தி படைத்தவர். "முடிப்பதை நினைப்பவன்" என்ற படத்தையே எடுத்து நடித்திருக்கிறார். அத்தகைய முதலமைச்சர் அவர்கள் ஆசிரியர்கள் வாடிக் கொண்டிருப்பதை எண்ணிப் பார்க்க வேண்டும், முடிக்கவேண்டும்.

திரு. சோ. ஆறுமுகம் : மாண்புமிகு தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் நமது மாண்புமிகு முதலமைச்சர் அவர்களைக் குறிப்பிடும்போது "முடித்ததை நினைப்பவன்" என்று தவறுதலாகக் குறிப்பிடுகிறார். அவர் "நினைத்ததை முடிப்பவன்" என்ற பெயரைப் பெற்றவர் என்பதை நினைவுபடுத்த விரும்புகிறேன்.

மாண்புமிகு மேலவைத் தலைவர் : மாண்புமிகு உறுப்பினர் கூட "நினைத்ததைத்தான்" சொல்கிறார். (சிரிப்பு)

திரு. செ. முத்துசாமி : மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆறுமுகம் அவர்கள் என்னை விட அதிகமாகச் சினிமா படங்களைப் பார்ப்பவர். எனவே அவர் சொல்கிற திருத்தத்தை நான் ஏற்றுக்கொள்கிறேன். நினைத்ததை முடிப்பவன் என்பதைத்தான் மாற்றிச் சொல்லிவிட்டேன். "நினைவு நல்லது வேண்டும்", அதை நல்ல வகையில் முடிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, ஆசிரியர்களின் பிள்ளைகளுக்கு ஆசிரியர் பணி நியமனங்களில் முன்னுரிமை தர வேண்டும் என்ற ஒரு வேண்டுகோளை நான் பலமுறை குறிப்பிட்டிருக்கிறேன். அதை ஒருமுறை சொல்லும்போது, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களே "இது ஒரு நல்ல கருத்து" என்று சொன்னதோடு, நான் இதைப்பற்றி எதிர்க் கட்சித் தலைவர்களிடமும் கலந்து பேசி நல்ல முடிவை எடுப்பேன் என்று குறிப்பிட்டார். எனவே அதை மீண்டும் இங்கே நினைவுபடுத்தி அதை உடனடியாகப் பரிசீலித்து முடிவெடுத்து அமுலுக்குக் கொண்டுவர வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

மேல்நிலை, உயர்நிலைப் பள்ளிகளைப் பொறுத்தவரை, வேலைநாட்கள் 200 என்றிருந்தது. ஆனால் மேல்நிலை, உயர்நிலைப் பள்ளிகளைப் பொறுத்த வரையில், அந்த வேலை நாட்களை 20 நாட்கள் அதிகப்படுத்தி 220 நாட்கள் என்று வைத்திருக்கிறார்கள். பாடத்திட்டம் மாறவில்லை. பாடத் திட்டங்கள் எந்த வகையிலும் உயர்த்தப்படவில்லை. ஆனால் 2-7/8 நாட்கள் என்றிருந்த ஈட்டிய விடுப்பை மாற்றி 10 நாட்களுக்கு "பிரிவிலேஜ் லீவு" என்று கொடுத்திருக்கிறார்கள். ஆனால் 200 நாள் என்றிருந்த வேலை நாட்களை எந்தக் காரணத்தாலே 220 நாட்களாக மாற்றியிருக்கிறார்கள் என்று புரியவில்லை. கல்வித் துறைக்குக் கொஞ்சமாவது ஞானம் இருக்க வேண்டாமா? 20 நாளை எதற்காக அதிகரிக்கிறோம் என்ற ஞானம் அந்தக் கல்வித் துறைக்கு இருக்க வேண்டாமா என்று தான் கேட்கிறேன். ஒரு விவரம் தெரிந்த துறையாக கல்வித் துறை இருக்க வேண்டாமா? எதற்காக 20 நாட்கள் அதிகரிக்கப்பட்டிருக்கின்றன என்ற காரணத்தை ஆசிரியர்களுக்கு அந்தத் துறை தெரிவிக்க வேண்டாமா? ஒரு கல்வித் துறைக்கு இப்படி வேலை நாட்களை அதிகரிப்பதற்கான காரணத்தைத் தெரிவிப்பதற்கான தெளிவு இருக்க வேண்டாமா? இதைத்தான் நான் கேட்கிறேன். இந்தப் பிரச்சினையைப் பொறுத்த வரையில், நான் சென்ற முறையே கூட கேட்டேன். இது வரை பதிலில்லை என்றால், என்ன பொருள்? இதைவிட வேடிக்கை என்ன வென்றால், இதனைச் சலுகைப் பட்டியலிலே அறிவித்தார்கள். கல்வித் துறைக்கு இருக்க வேண்டிய விஷயம் இப்போது இல்லை என்றுதானே அர்த்தம். அதை நான் குற்றமாக, இங்கே குறையாகச் சொல்லிக் கொண்டிருக்கிறேன். எனவே மீண்டும் பழையபடி 20 நாட்களைக் குறைக்க வேண்டும்; வேலை நாட்களை மீண்டும் 200 நாட்களாக ஆக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன், செய்ய வேண்டும் என்று சிபாரிசு செய்கிறேன். வலியுறுத்துகிறேன்.

அடுத்து, கல்வித் துறையில் சி.ஈ.ஓ. பதவி உயர்வு கொடுக்கப்படுகிறது. டிஈஓ என்பவர் பி.எ., பி.டி. யாக உள்ளவர் வருகிறார். பிறகு மீண்டும் சிஈஓ ஆகப்போகிறார். ஆனால் ஹையர் செகண்டரி பள்ளிகளில் உள்ள தலைமை ஆசிரியர்கள் எம்.ஏ. பி.எட். எம்.எட். எல்லாம் படித்திருந்தாலும், அப்படிப் பட்டவர்களுக்கு நேரடியாக சி.ஈ.ஓ. பதவி உயர்வு இல்லை என்ற நிலை இருக்கிறது. அவர்களுக்கும் இத்தகைய பதவி உயர்வை பணிமூப்பு அடிப்படையில் நேரடியாக சி.ஈ.ஓ. பதவி வழங்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

சத்துணவைப் பொறுத்த வரையில், மாண்புமிகு உறுப்பினர் திரு. வெங்கடேசன் ஒரு கருத்தை இங்கே குறிப்பிட்டிருக்கிறார். அதாவது சத்துணவுத் திட்டத்தின் கீழ் மாணவர்களுக்கு ரொட்டியும் பாலும் மற்றும்



முட்டையும் தரலாம் என்று குறிப்பிட்டார். தற்போது ஆந்திரத்தில் புதிதாகப் பொறுப்புக்கு வந்திருக்கும் முதலமைச்சர் திரு. என். டி. ராம ராவ் அவர்கள் பள்ளிகளில் இனி சமையல்கூடம் இருக்காது, காரணம் பள்ளிகளை நாங்கள் சமையல் கூடங்களாக ஆக்க விரும்பவில்லை. எனவே மாணவர்களுக்குப் பாலும் ரொட்டியும் வழங்கப்படும் என்று அறிவித்திருக்கிறார். நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்களேகூட ஓரிடத்தில் பேசும் போது, முதலில் மாணவர்களுக்கு சத்துணவுத் திட்டத்தின்கீழ் ரொட்டியும் பாலும்தான் கொடுக்க யோசித்தோம் என்று சொல்லியிருக்கிறார். முதலமைச்சர் அவர்களே கூட முதலில் ரொட்டியும் பாலும் தான் வழங்க வேண்டுமென்று ஏற்கெனவே சிந்தித்திருக்கிறார்கள். இப்போது நமக்குப் பக்கத்திலே இருக்கிற மாநிலத்தில் ரொட்டியும் பாலும் வழங்க இருப்பதால், நாமும் அப்படியே மாணவர்களுக்கு ரொட்டியும் பாலும் சத்துணவாக வழங்கலாம், அதை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் எண்ணிப் பார்த்து ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, நமது மாநிலத்தில் தனியார் பள்ளிகளானாலும் சரி, தனியார் கல்லூரிகளானாலும் சரி, அவைகள் மாணவர்களிடமிருந்து நன்கொடை வசூலிக்கக்கூடாது என்று பள்ளிக் கல்வி இயக்குநர் அவர்களிடமிருந்து ஒரு சுற்றறிக்கை அனுப்பப்படுகிறது. ஆனால் இப்படிப்பட்ட சுற்றறிக்கை அனுப்பப்பட்ட பிறகும், அத்தகைய பள்ளிகளில் வழக்கம்போல் நன்கொடை வசூலிக்கிறார்கள். அதையெல்லாம் நம் கல்வித் துறையைச் சார்ந்த அதிகாரிகள் வேடிக்கை பார்த்துக் கொண்டிருக்கிறார்கள் என்பது மட்டுமல்ல, அத்தகைய நன்கொடைகள் வாங்குகிற பள்ளிகளில் நடைபெறும் அனைத்து விழாக்களுக்கும் இவர்கள் சென்று கலந்து கொண்டு பாராட்டுப் பெற்றுக் கொண்டிருக்கிறார்கள். அவர்கள் வாங்கித் தருகிற விமான டிக்கட்டைப் பெற்றுக் கொண்டு பயணம் செய்கிறார்கள். அவர்கள் வாங்கித் தருகிற முதல் வகுப்பு ரயில் டிக்கட்டுகளைப் பெற்றுக்கொண்டு பயணம் செய்கிறார்கள். அது மட்டுமல்ல. அவர்களுடைய ஏஜென்டுகளைப் போல் பணியாற்றுகிறார்கள். என்னைப் பொறுத்தவரையில், நமது கல்வித் துறையில் உள்ள அதிகாரிகளின் போக்கு இன்னும் கொஞ்சமும் மாறவில்லை, கொஞ்சமும் மாறவில்லை. இதைச் சொல்லும்போது உள்ளபடியே நான் மிகுந்த வேதனைப்படுகிறேன். இப்போதிருக்கிற இயக்குநரைப்பற்றி நான் குறிப்பிடவில்லை. அவர் இருக்கிற இடத்தில் இருந்து கொண்டு ஒழுங்காக உத்தியோகம் பார்த்துக்கொண்டிருக்கிறார். ஆனால் கீழ் மட்டத்தில் இருப்பவர்களின் நிலையில் எந்த மாறுதலும் இல்லை. ஒரு பெரிய அதிகாரி ஒரு இடத்திற்கு வருகிறார் என்றால், அவருக்குக் கீழே

உள்ள அதிகாரிகள் அனைவரும் அவரை ரயிலடியில் வந்து சந்திக்க வேண்டுமென்று இன்னமும் விரும்புகிறார்கள். தங்கள் முன்னாலே அவர்களெல்லாம் வரிசையாக வந்து நிற்க வேண்டும் என்று விரும்புகிறார்கள். இப்படிப்பட்ட பத்தாக்கள் வேறு எந்த மாநிலத்தில் இருக்கின்றன என்று கேட்க விரும்புகிறேன். திரு. என். டி. சுந்தரவடிவேலு அவர்கள் ஒரு காலத்தில் வகுத்து வைத்த கொள்கைகள், ஏற்பாடுகள் இன்னும் மாறவில்லை, நீங்கவில்லை என்பதைத்தான் பார்க்கிறோம். ஒரு சி. ஈ.ஓ. வருகிறார், என்றால், தலைமை ஆசிரியரிலிருந்து அனைவரும் அவரை ரயிலடியில் வரவேற்க வந்து சேர வேண்டும் என்ற நிலை இன்னும் இருக்கிறது. இதிலெல்லாம் ஒரு மாற்றம் வேண்டாமா? அவர்களும் மனிதர்கள்தானே? அவர்களுக்கு எல்லாம் சுயமரியாதை இருக்கிறதல்லவா? சுயமரியாதை உள்ள நாடல்லவா இது? இங்கே இன்னும் இப்படிப்பட்ட காரியங்கள் நடைபெறலாமா? அதிகாரிகளுக்கு துறையிலே ஜீப்புகள் வழங்கப்பட்டிருக்கின்றன. அவற்றில் அவர்கள் பயணம் செய்யக்கூடாதா? பணக்காரர்கள் தருகிற அம்பாசிடர் கார் அல்லது பாரின் கார் வர வேண்டும் என்று எப்படி அவர்களாலே எதிர்பார்க்க முடிகிறது? என்ன வேடிக்கை இது? இவர்களெல்லாம் அரசாங்க ஊழியர்கள் அல்லவா? இதெல்லாம் பலமுறை என்னால் இங்கே எடுத்துச் சொல்லப்பட்டவைகள்தாம். இருந்தாலும் இத்தகைய நிலைமைகள் சீர்திருத்தப்படாததன் காரணம் என்ன? இதில் கல்வியமைச்சருக்கு என்ன உடன்பாடா? எதற்காகச் சொல்கிறேன் என்றால், இன்றையதினம் கல்வித் துறையில் சில ஏஜென்சிகளையே உண்டாக்கி விட்டார்கள். அவர்களிடம் பணம் கொடுத்தால், நியமனங்கள்கூட நடக்கின்றன. மாறுதல்கள்கூட அவர்களிடம் பணம் கொடுத்தால் நடக்கின்றன. இவைகளையெல்லாம் நான் ஏற்கெனவே சொல்லியும்கூட, இதுவரை நடவடிக்கை எடுக்காததன் காரணம் என்ன? கல்வி அதிகாரிகள் சில நேரங்களில் நியமனங்கள் ஏலம் விடப்படுகின்றன. இவ்வளவு கருத்துக்களையும் குறைகளையும் பலமுறையும் எடுத்துச் சொல்லியும்கூட, இவற்றை நீக்குவதற்கான எண்ணமோ பிரதிபலிப்போ நடவடிக்கையோ கல்வியமைச்சர் அவர்களிடமோ கல்வித் துறையிலோ இல்லையே என்பதைத்தான் காண்கிறேன். அதுமட்டுமல்ல. சத்துணவைப்பற்றி ஏற்பட்ட ஒரு வேதனையான நிகழ்ச்சியை இங்கே என்னால் சொல்லாமலிருக்க முடியவில்லை. ஒருமுறை முன்னாள் இயக்குநராக இருந்த திரு. வெங்கடசுப்பிரமணியம் அவர்களைப் போய்ப் பார்த்தபோது, அவர் சொல்லுகிறார், "ஆசிரியர்களுக்கு என்ன வருமானமய்யா இருக்குது? ஏதோ தின்னுட்டுப் போறான்" * ஒரு ஆசிரியரிடம் சொல்லுகிற இலக்கணமா இது? . . .

* தலைவரின் ஆணைப்படி நீக்கப்பட்டது.



டாக்டர் இரா. சனார்த்தனம்: அவையில் இல்லாத ஒருவரைப்பற்றி. . .

மாண்புமிகு மேலவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் * என்று சொன்ன வார்த்தை அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகிறது. குற்றச்சாட்டுகளைச் சொல்வதில் தவறு இல்லை. ஆனால் அதே நேரத்தில் அவையில் வார்த்தைகளை எச்சரிக்கையாக உபயோகப்படுத்துவது நல்லது என்பதை மட்டும் அவருக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. செ. முத்துசாமி: தலைவர் அவர்களே, என்னுடைய இளமைத் துடிப்பின் காரணமாக. . .

மாண்புமிகு மேலவைத் தலைவர்: இன்னுமா இளமைத் துடிப்பு இருக்கிறது?

திரு. செ. முத்துசாமி: தலைவர் அவர்களேகூட ஒருமுறை இங்கே பேசும்போது இன்னும் இளமையாக, இளைஞராக இருப்பதாகக் குறிப்பிட்டிருக்கிறீர்கள். அந்த நிலையில் தங்களைப் பார்த்து நானும் இளைஞனாக இருக்க ஆசைப்படுவதில் தப்பில்லை என்றே கருதுகிறேன். எனினும் பிரச்சினையின் அநியாயத்தை ஆழமாகப் பார்க்கிறபோது, தாங்க முடியாமல் வார்த்தையைச் சொல்லிவிட்டேன். மாண்புமிகு தலைவர் அவர்கள் அதை மாற்றியதற்கு நான் நன்றி தெரிவித்துக்கொள்கிறேன். அதைச் சொன்னதற்குக் காரணம் இத்தகைய அநியாயங்கள், அக்கிரமங்களைக் கண்டு நாம் பொங்கி எழ வேண்டாமா? "பாதகம் செய்பவர்களைக் கண்டால் பயங்கொள்ளலாகாது பாப்பா, மோதி மிதித்துவிடு பாப்பா . . ." என்று கவிஞன் பாரதி பாடினான். "சிறுமை கண்டு பொங்குவாய்" என்றும் பாடினான். ஆனால் நான் அப்படி மோதி மிதித்துவிடக்கூடச் சொல்லவில்லை.

மாண்புமிகு மேலவைத் தலைவர்: கவிஞன் பாடியதெல்லாம் பாராளுமன்ற வார்த்தைகளாக ஆகிவிட முடியாது. நல்ல வேளையாக மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அதற்கு அடுத்த வரியைச் சொல்லாமல் விட்டுவிட்டது நல்லதாகப் போய்விட்டது.

திரு. செ. முத்துசாமி: கல்விக் கூடங்கள் இனி நன்கொடை வாங்கக்கூடாதென்று ஆந்திரத்தில் இப்போது ஒரு அவசரச் சட்டம் போடப்பட்டிருக்கிறது. நான் இங்கே இருக்கிற அமைச்சரைக் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன். தயவுசெய்து அப்படிப்பட்ட ஒரு அவசரச் சட்டத்தைக் கொண்டு வாருங்கள். இல்லையென்றால் கண்டிப்பாக நன்கொடை வாங்கத்தான் செய்வார்கள். அட்மிஷன் என்றாலே ஏதாவது ஒரு வகையிலே பணம் வசூலித்து விடுகிறார்கள். கல்வித் துறையிலே இப்படிப்பட்ட ஒரு முன்னேற்ற

* தலைவரின் ஆணைப்படி நீக்கப்பட்டது.

மான முறைகள், ஒரு சீர்திருத்தமான முறை வரக்கூடாதா, சீர்திருத்தமான முறையில் கல்வித் துறை இயங்கக்கூடாதா என்றுதான் கேட்க விரும்புகிறேன். நம்முடைய கல்வித் துறையை ஒரு "ஸ்ட்ரீம் லைன்" செய்தாக வேண்டும். இன்றைய கல்வித் துறையை போக்கு மிகத் தவறான போக்காக இருக்கிறது. சரியில்லாத போக்காக இருக்கிறது என்பதை மிகுந்த வேதனையோடு சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். அடுத்து. . ,

*மாண்புமிகு மேலவைத் தலைவர் :* மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு இன்னும் 7 நிமிடங்கள் இருக்கின்றன. நேரத்தில் அவையை முடிக்க வேண்டும். மேலும் இரண்டு மூன்று பேர் பேச வேண்டும். ஏற்கெனவே அவருக்குக் கொடுக்கப்பட்ட நேரத்தைக் குறைக்க மாட்டேன். அதற்குள் பேசி முடிக்க வேண்டும் என்பதை மட்டும் நினைவுபடுத்த விரும்புகிறேன்.

*திரு. செ. முத்துசாமி :* அடுத்து கல்வித் துறையின் 1981-ம் ஆண்டு சாதனைப் பட்டியலில் கல்வித் துறை சாதனை என்று ஒன்றை வெளியிட்டிருக்கிறார்கள். அதில் இரண்டு அம்சங்களைக் குறிப்பிட்டிருக்கிறார்கள். ஒன்று "ஆசிரியர்களுக்குத் தனியான வீட்டு வசதி வாரியம் அமைக்கப்படுகிறது" எங்கேயும் சாதித்து முடித்தவைகளை மட்டும்தான் சாதனைப் பட்டியலில் போடுவார்கள். செய்யாத ஒன்றைச் சாதனைப் பட்டியலில் போட்டு புதிய சாதனையை உருவாக்கிய சாதனை கல்வித் துறையைத்தான் சாரும். இதற்கு அந்தத் துறையின்மீது உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும். நான் பலமுறை இதைப் பற்றிப் பேசியிருக்கிறேன். பலமுறை கேட்ட பிறகாவது அப்படிப்பட்ட வீட்டு வசதி வாரியம் ஒன்றைக் கொண்டு வந்திருக்கிறார்களா என்றால், அதுவுமில்லை. இப்படி நடக்காத ஒன்றை அரசாங்கத்தின் சாதனைப் பட்டியலில் போட்டு விளம்பரப்படுத்துவது எப்படி நியாயமாகும்? கல்வித் துறையில் எப்படி இப்படிப்பட்ட தவறு நடக்கிறது? ஆங்கிலத்தில் சொல்லுவதென்றால், இதை ஒரு பெரிய 'பிளண்டர்' என்று சொல்ல வேண்டும். மன்னிக்க முடியாத பெரிய தவறு அல்லவா இது? அதுமட்டுமல்ல. இன்னொன்றையும் சொல்லியிருக்கிறார்கள் அந்தச் சாதனைப் பட்டியலில். தனியார் துறைப் பள்ளிகளில் ஆசிரியர்களுக்கு நேரடியாக ஊதியம் வழங்கப்படுகிறது. நான் கேட்கிறேன். அப்படி வழங்கப்படுகிறதா? இது உண்மையா? உண்மையே இல்லாத பொய்யை—பொய் என்று சொல்லக்கூடாது—இப்படி உண்மையே இல்லாத செய்தியை தைரியமாக வெளியிட்டிருக்கிற ஒரு அநாகரிகமான போக்கைக் கல்வித் துறையைத் தவிர வேறு எங்கேயும் பார்க்க முடியாது என்று என்னாலே ஆதாரத்தோடு சொல்ல முடியும். நான் தவறான செய்தி சொல்லுதானால் என்மீது என்ன நடவடிக்கை வேண்டுமானாலும் எடுங்கள். இது உண்மையில்லை என்றால் நான் இந்த வகையில் என்னுடைய பொறுப்பைக்கூட ராஜினாமா செய்யத் தயாராக



இருக்கிறேன். 1981 ஆம் ஆண்டு கல்வித் துறையின் சாதனைப் பட்டியலில் இவை இரண்டும் எப்படி வந்தன? யார் இவைகளைத் தந்தார்கள்? இவைகளையெல்லாம் மிகப் பெரிய சாதனைகளைப்போல் ஆசிரியர்கள் பார்த்துப் பேச மாட்டார்களா? மாண்புமிகு கல்வியமைச்சர் அவர்களுக்கு அப்படிப்பட்ட போக்கு இருப்பது மிகவும் தவறானதாகும். அவர் ஆசிரியராக இருந்து இந்தப் பொறுப்புக்கு வந்தவர் என்று சந்தோஷப்பட்டோம். ஆனால் அதனால்தானோ என்னவோ அவர் அதிக விவகாரங்களைச் செய்கிறாரோ என்று எண்ணுகிற சங்கடம் எங்களுக்கு இருக்கிறது. இதையெல்லாம் சொல்லாமலும் இருக்க முடியவில்லை. உண்மையற்ற போக்கு அரசாங்கத்தி

(பிற்பகல் 12-20)

னுடைய நடவடிக்கைகளில் வருவது எந்த வகையிலே தர்மம்? இதற்கு நிச்சயமாக மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பதில் சொல்ல வேண்டும். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் விசாரணை செய்து சொல்ல வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். சென்ற பட்ஜெட் கூட்டத்தின்போது "வீட்டு வசதி வாரிய அமைச்சர் அவர்களும் நானும் (கல்வியமைச்சர்) பேசிக்கொண்டிருக்கிறோம்" என்று சொன்னார்கள். இன்னும் பேசினார்களோ இல்லையோ தெரியவில்லை. இருவரும் பக்கத்தில் பக்கத்தில்தான் உட்கார்ந்து கொண்டிருக்கிறார்கள். அவர்கள் இருவருக்கும் இடையிலே நல்ல உறவும் இருக்கிறது. அப்படியிருந்தும் ஒரு நடவடிக்கையும் எடுத்ததாகத் தெரியவில்லை. ஆனால் காவல் துறை அதிகாரிகளுக்கு வீட்டு வசதி வாரியம் வந்து விட்டது. ஆசிரியர்கட்கு சாதனைப் பட்டியலில் வந்ததே தவிர, ஒரு வீடு கட்டியதாகத் தெரியவில்லை. இன்னும் அமைப்பே வரவில்லை. எந்த ஆட்சி பொறுப்பில் இருந்தாலும் இது தர்மம் இல்லை. நாகரிகமும் அல்ல. அது அக்கிரமம், அநியாயம். இதற்கு முடிவு கட்டுங்கள் என்று வேண்டுகிறேன். இதற்கு கல்வித் துறைதான் முழுப் பொறுப்பையும் ஏற்க வேண்டும். இதற்கான நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, இப்போது விலைவாசி ஏகமாக ஏறிவிட்டது. இப்படிப்பட்ட நிலையிலும் கிராமங்களில் பணிபுரியக்கூடிய ஆசிரியர்களுக்கு பத்து ரூபாய் தான் கிராம ஊக்கப்படியாகத் தருகிறோம். பத்து ரூபாய்க்கு வீடு கிடைக்கிறதா? இப்படி எங்களுடைய சங்கடங்களைக் கூறும்போது, சாதாரண மக்களைச் சுட்டிக்காட்டுவது நியாயமல்ல. சாதாரண மக்களும் நியாயம் பெறவேண்டும். 36 வருடங்களுக்குப் பிறகும் வறுமைக் கோட்டிற்குக் கீழே உள்ள கேவலமான நிலையை அகற்றுவதற்கு நடவடிக்கை எடுத்துச் செய்யட்டும். அதிலே எங்களுக்கு ஆட்சேபணை இல்லை. ஆனால் பஞ்சப்படியைப்

பொறுத்த வரையில், நாங்கள் கேட்கும்போது, "நாங்கள் நோட்டு அச்சடிக்கிறோமா? என்று முதலமைச்சர் அவர்கள் கேட்பது எங்கள் இதயத்திலே வேதனை ஏற்படுத்துகிறது. நோட்டு அடிக்கும் அதிகாரத்தை வேண்டுமானால் மத்திய அரசிடமிருந்து கேட்டு மாநில அரசு பெற்றுக்கொள்ளட்டும். நாங்கள் சந்தோஷப்படுகிறோம். இந்த அரசு நோட்டு அச்சடித்தாலும் எங்களுக்குச் சம்பளம் வந்தால்தானே! அவர்கள் நோட்டு அச்சடித்தால் மட்டும் எங்களுக்குச் சம்பளம் வருமா? பக்கத்திலே ஆந்திர மாநிலம் இருக்கிறது. ஆந்திர மாநிலத்திலே உள்ளவர்கள் போராடும்போது, "ஆந்திராவில் ஐந்து ஊதியக் குழுக்களை அமைத்து சம்பளம் உயர்த்தியுள்ளோம். ஆனால், தமிழ் நாட்டில் மூன்று ஊதியக் குழுக்களைத்தான் போட்டிருக்கிறார்கள். ஆந்திராவில் உள்ள ஆசிரியர்களுடைய சம்பளம் தமிழ் நாட்டில் உள்ளவர்களின் சம்பளத்தைவிட 120 ரூபாய் அதிகமாக இருக்கிறது. எழுத்தர்களுடைய சம்பளம் இவ்வளவு அதிகமாக இருக்கிறது" என்று கூறி பட்டியல் போட்டுக் கொடுத்தார்கள். மீண்டும் போராடி மேலும் சம்பள உயர்வு பெற்றிருக்கிறார்கள். பக்கத்து மாநிலமான ஆந்திரமும் இந்த அரசியல் சட்டத்திற்குட்பட்டு நடக்கிற மாநிலம்தான். தென் மாநிலங்களிலேயே தமிழகத்திலேதான் ஆசிரியர்களுடைய சம்பளம் குறைவாக இருக்கிறது. இதை சவால் விட்டுச் சொல்கிறேன். இதிலே உண்மை இல்லையென்றால் என் மீது நடவடிக்கை எடுக்கலாம். தென் மாநிலங்களிடையே அதிகமான சம்பளத்தைக் கொடுத்துக் கொண்டிருந்த தமிழக அரசு இன்றைக்குக் குறைந்த சம்பளத்தைக் கொடுத்துக் கொண்டிருப்பது நியாயம்தானா? இப்படிக் கேட்கும்போது ஆசிரியர்களைப் பற்றி விமர்சனம் செய்கிறார்கள். எந்தச் சமுதாயமாக இருந்தாலும் விமர்சிப்பது என்பதை நியாயமாக ஏற்றுக்கொள்கிறேன்.

சத்துணவுத் திட்டத்தைப் பொறுத்த வரையில், யாராக இருந்தாலும், தவறு செய்தால் கண்டிக்கப்பட வேண்டியவர்கள் என்று நான் தெளிவாகச் சொல்லியிருக்கிறேன். அதிலே கருத்து வேறுபாடு இல்லை. ஆனால் விளம்பரம் செய்து வேலைப்படுத்தியதிலேதான் ஆத்திரம் பிறந்தது. கோவையிலே ஒரு சி.இ.ஓ. ஒன்று உள்ளார். இவர் அங்கு மாவட்டக் கல்வி அதிகாரியாக நீண்ட காலம் பணிபுரிந்தார். பின் அங்கேயே மாவட்ட சர்வே அதிகாரியானார். பின்னர் கோவையிலேயே முதன்மைக் கல்வி அதிகாரி ஆனார். பதவி உயர்வு பெற்று மதுரைக்குச் சென்றவர் ஒரு மாதத்தில் மீண்டும் கோவைக்கு மாற்றப் பட்டார். அவர், மீண்டும் அதே ஊரிலே வந்து அமர வேண்டுமென்று அப்படி என்ன அக்கறை அவருக்கு? அவருக்கு இலாக்காவின் மீது நம்பிக்கை இல்லையா? வேறு யாரும் நம்பிக்கைக்குரியவராக இல்லையா? அப்படி என்ன இரகசியம் அவருக்கும் இருக்கும்? அதிலே கல்வியமைச்சருக்கு வெஸ்டட் இன்டரஸ்ட் என்ன என்று கேட்க விரும்புகிறேன். அவர் எவ்வளவு பேரைக்





கெடுத்து வருகிறார் என்பதை அறிய விசாரணை வைத்தால் தெரியும். ஆசிரியர்கள் மத்தியில் பொறுக்க முடியாத அளவிற்கு வேதனை இருக்கிறது. நியமனம் மாற்றம் எல்லாமே பணமின்றி நடப்பதில்லை. ஒரு முறை நான் சொன்னபோது, "இலட்சக்கணக்கில் கொள்ளையடிப்பவர்கள் கொள்ளை யடிக்கும்போது, உங்களுடைய எம்.எல்.ஏ. என்னோடு மட்டும் சண்டைக்கு வருகிறார்களே!" என்று எங்கள் சங்க ஆசிரியர்களிடம் கேட்டிருக்கிறார். இதையெல்லாம் நாங்கள் எங்கே சென்று, யாரிடத்திலே சொல்லுவது? இன்றைக்குப் பெரும்பாலான நிலைமைகள் இப்படி ஆகிவிட்டன. சாதாரண மக்களுக்கு மாறுதல் கிடைப்பதில்லை. மாறுதல் கேட்டுச் சென்றால், ஒரு ஆளைச் சொல்லுகிறார். அவரிடம் சென்று பார்த்தால், அவர் பணம் கொடுக்க வேண்டும் என்று சொல்லுகிறார். அப்படி பணம் கொடுத்தால் ஆர்டர் வருகிறது. என்ன அக்கிரமம் இது? தயவுசெய்து சி.ஐ.டி. இலாக்காவைப் பயன்படுத்தி விசாரணை செய்து முடிவுக்கு வாருங்கள் என்று கேட்க விரும்புகிறேன்.

கடைசியாக ஒன்றே ஒன்றைச் சொல்ல விரும்புகிறேன். நகராட்சிகளில் ஆசிரியர்களுக்கு ஒதுக்கவேண்டிய வீடுகளை தனிப்பட்ட வியாபாரி களுக்காக அரக்கோணம் நகராட்சியில் ஒதுக்கியிருக்கிறார்கள். அதை அவர்களுக்கே விற்க ஏற்பாடுகளைச் செய்திருக்கிறார்கள். இதனைத் தடுத்து நிறுத்துவதோடு இந்த வீடுகளை நகராட்சி ஆசிரியர்களுக்கு வழங்க வேண்டும். நகராட்சிப் பள்ளிகளிலும், உள்ளாட்சித் துறை நிர்வாகத்தில் நடக்கக் கூடிய காரியங்களைப் பார்த்தால், மிகவும் கொடுமையாக இருக்கிறது என்பதைச் சொல்லி, இவற்றைத் தடுக்க உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்து, ஒரே ஒரு வேண்டுகோளை மட்டும் விடுக்கிறேன். கல்வித் துறை யில் இதுவரையில் இவ்வளவு பெரிய தவறுகள் நடந்ததில்லை. இதற்கெல்லாம் முன்னுதாரணம் இல்லை. அந்தத் தவறுகளையெல்லாம் நான் விவரமாகச் சொல்லியிருக்கிறேன். அதுவும் ஆதாரத்தோடு சொல்லியிருக்கிறேன். அதற்குத் தகுந்த நடவடிக்கைகளை முதலமைச்சர் அவர்கள் எடுப்பார்கள் என்று நம்புகிறேன். அவருடைய நல்லுணர்வில் நான் நம்பிக்கை வைத்திருக்கிறேன், ஆசிரியர் சமுதாயம் நம்பிக்கை வைத்திருக்கிறது. உண்மை வெளியே வரட்டும். உண்மைகளை வெளியே கொண்டுவர முதலமைச்சர் அவர்கள் சரியான நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று பணிவோடு சொல்லி, அதே சமயத்தில் உரிமையோடு முதலமைச்சருக்கும் இந்த அமைச்சரவைக்கும் இதைச் செய்க என்று தெரிவித்துக்கொண்டு, இந்த அளவிற்கு அனுமதி அளித்ததற்காக நன்றி தெரிவித்து அமர்கிறேன். வணக்கம்.

**திரு. எஸ். ஆர். இராதா:** மாண்புமிகு தலைவர் அவர்களே, ஆளுநர் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின் மீது நடைபெறுகின்ற விவாதத்திலே பங்குகொள்ள எனக்கு வாய்ப்புத் தந்ததற்காக முதலில் நன்றி தெரிவித்துக்கொள்கிறேன்.

இங்கே பல்வேறு பிரச்சினைகள் பேசப்பட்டன என்றாலும், இன்றைக்கு அதிகமாக பல்வேறு இதயங்கள் கூர்ந்து கவனித்துக் கொண்டிருக்கின்ற பிரச்சினை மொழிப் பிரச்சினை. இந்தப் பிரச்சினையில் யார் யார் எந்தெந்த நிலையை எடுக்கிறார்கள் என்று தமிழகத்திலே இருக்கின்ற மக்கள் கூர்ந்து கவனித்துக் கொண்டிருக்கிறார்கள். இங்கே எல்லா அரசியல் கட்சிகளைச் சேர்ந்தவர்களும் தங்களுடைய கருத்துக்களைச் சொல்லியிருக்கிறார்கள் என்றாலும், மாண்புமிகு உறுப்பினர் திரு. முனுசாமி அவர்கள் இதுவரையில் யாரும் சொல்லாத அதிசயமான கருத்தைத் துணிந்து சொல்லிவிட்டதைக் கேட்ட நேரத்தில், எனக்கு உள்ளபடியே மிக மனவருத்தமாக இருந்தது என்பதை முதலிலே தெரிவித்தாக வேண்டும். இதுவரையில் யாருக்கும் இது போன்று பேசுகின்ற தைரியம், எண்ணம் வரவில்லை. ஆனால் திரு. முனுசாமி அவர்கள் வட நாட்டிற்குச் சென்று வந்த காரணத்தால், காங்கிரஸ் கூட்டங்களில் கலந்து கொண்டதால், அங்கே இந்திவாலாக்கள் ஏற்பாடு செய்திருந்த கூட்டங்களில் பேசுகின்ற பேச்சு புரியாததால், அவர்கள் மீது கொண்ட கோபத்தால், இங்கே வந்து ஆதி திராவிடர்கள் இந்தி மொழியைப் படிக்க தனியாக வாய்ப்பு ஏற்படுத்தித் தர வேண்டும் என்று கூறி, இங்கே இருக்கின்ற ஆயிரக்கணக்கான ஆதி திராவிடர்களைக் கொண்டு வந்து, இந்தப் பிரச்சினையில் ஈடுபடுத்தியிருப்பது அவ்வளவு நல்லதல்ல என்பதைப் பணிவோடு இந்த மன்றத்திலே தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

தந்தை பெரியார் அவர்கள், பேரறிஞர் அண்ணா அவர்கள் ஆதி திராவிட மக்களுடைய முன்னேற்றத்திற்காகப் பாடுபட வேண்டுமென்று எடுத்துக் கொண்ட பிரச்சினைதான் மொழிப் பிரச்சினை. ஆகவே அரிசனங்கள் இந்தி படிக்க வேண்டுமென்று அவர் சொல்லுவதை நிச்சயமாக தமிழ் நாட்டிலுள்ள மக்கள் ஏற்றுக்கொள்ள மாட்டார்கள். ஆதி திராவிட மக்களே கூட ஏற்றுக் கொள்ள மாட்டார்கள் என்று துணிந்து சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். இப்போது இந்தி மொழியை தேசிய மொழியாகக் கருதிக் கொண்டு படிப்பதை யாரும் தடுக்கவில்லை. யார் வேண்டுமானாலும் இந்தியைப் படிக்கலாம், இந்தியைத் தெரிந்துகொள்ளலாம். அதிலே குறுக்கீடு இல்லை. கட்டாய மொழியாக்கப்பட்டு கட்டாயம் படித்துத்தான் தீர வேண்டும், என்று சொல்லுவதைத்தான் எதிர்த்துக் கொண்டிருக்கிறோமே தவிர, இந்தி படிப்பதையோ, தெரிந்துகொள்ளுவதையோ எதிர்க்கிறோமா என்றால்,



நிச்சயமாக இல்லை. திரு. முனுசாமி அவர்கள் இந்தி மொழியைப் படிக்க வேண்டுமென்றால், தெரிந்துகொள்ள வேண்டுமென்றால், யாரும் நிச்சயமாக அதற்குக் குறுக்கே வரமாட்டார்கள். திராவிட இயக்கம் இந்த மொழிப் பிரச்சினையில் போராடியதன் விளைவு, நீண்ட நெடு நாட்களாக அதை எதிர்த்த மூதறிஞர் இராஜாஜி அவர்களே அதிலுள்ள நியாயத்தை உணர்ந்து கொண்டு, வரலாற்றிலே உள்ள நிலையைத் தெரிந்துகொண்டு, மத்திய அரசோடு அவருடைய கருத்தை மாற்றிக்கொண்டு அதற்குத் துணையாக வந்தார்கள்.

(பிற்பகல் 12-30)

அப்படியென்றால், தமிழகத்திலே இருக்கின்ற காங்கிரஸ் கட்சிக்கு வித்தூன்றியவர் என்று சொல்லக்கூடிய, மூதறிஞர் இராஜாஜி அவர்களே, எல்லாவிதத்திலும் வல்லுநராக விளங்கிய அவர்களே இந்த நிலைக்கு வருகிறார் என்று சொன்னால், 1983-ஆம் ஆண்டிலே திரு. முனுசாமி அவர்கள் ஒரு புதிய குரலை எழுப்புவார் என்று சொன்னால், நான் பணிவோடு தெரிவித்துக்கொள்வேன், அது காங்கிரஸ் இயக்கத்தை அழிப்பதற்கு எடுக்கின்ற மிகப்பெரிய முயற்சியாகத்தான் இருக்கும் என்பதைச் சொல்ல வேண்டியிருக்கும்.

**திரு. ஏ. ஜே. தாஸ்:** மாண்புமிகு மேலவைத் தலைவர் அவர்களே, திரு. முனுசாமி அவர்கள் தன்னுடைய சொந்தக் கருத்தாகத்தான் சொன்னார். அதுவே கட்சியினுடைய கருத்து என்பதல்ல.

**மாண்புமிகு மேலவைத் தலைவர்:** அதனாலேதான் அவர் கவலைப் படுகிறார். அதனாலே காங்கிரஸ் பலவீனப்படுமோ என்றுதான் சொல்கிறார். அது வேண்டாமே என்பதற்காகத்தான் சொல்கின்றார்.

**திரு. எஸ். ஆர். இராதா:** உள்ளபடியே திரு. ஏ. ஜே. தாஸ் அவர்களுக்கு நான் என் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜேப்பியார் அவர்கள் தாஸ் அவர்களின் 60-வது ஆண்டு வாழ்த்துச் செய்தி தெரிவித்தார்கள். நானும் அதிலே இணைத்துக்கொள்கிறேன். இப்படிப்பட்டவர்கள் இருந்தால்தான், அந்த இயக்கம் வாழ்வதற்கு வழிவகை ஏற்படும். அப்போதுதான் அதற்கு ஒரு வரைமுறை ஏற்படும். ஏனென்றால் நாட்டு மக்களுடைய நிலையை அவர்கள் மறந்ததால்தான், அவர்கள் அழிந்து கொண்டிருக்கின்றார்கள் என்பதை அவர்கள் சிந்திக்க வேண்டும் என்று சொல்வதற்காகத்தான் இப்படிச் சொல்கின்றேனே தவிர வேறல்ல. நான் மீண்டும் மீண்டும் மொழிப் பிரச்சினையிலே தெளிவுபடுத்தவேண்டிய நிலை, இந்த நாட்டிற்குக் கிடையாது. இந்த நாட்டிலே இருப்பவர்கள், தமிழ்

நாட்டைப் பொறுத்தவரைக்கும் சாதாரணமான மாணவர்களிலேயிருந்து பெரியவர்கள், வயதானவர்கள், சாகப்போகின்ற கிழவர்கள் வரைக்கும் இந்த மொழிப் பிரச்சினையை முழுமையாகத் தெரிந்து வைத்திருக்கிறார்கள்.

**மாண்புமிகு மேலவைத் தலைவர்:** நான் ஆட்சேபிக்கிறேன். மாண்புமிகு அங்கத்தினர் அவர்கள் சாகப்போகின்றவர்கள் என்று சொல்வதை நான் ஆட்சேபிக்கிறேன். கிழவர் என்று சொன்னால் போதுமானது.

**திரு. எஸ். ஆர். இராதா:** மாண்புமிகு மேலவைத் தலைவர் அவர்கள் சொன்னதை நான் ஒத்துக்கொள்கிறேன். அவர்கள் சாகக்கூடாது. ஏனென்றால் மொழிப் பிரச்சினைபற்றித் தெரிந்தவர்கள் சாகக்கூடாது என்பதில் மிக்க அக்கறை கொண்டிருக்கிறேன். அந்த அளவுக்குத் தெரிந்திருக்கின்றவர்கள் இந்தப் பிரச்சினையில் ஒரு புதிய கருத்தைச் சொல்லத் துணிகிறார்கள் என்று சொன்னால், இன்னமும் தமிழ் நாட்டினுடைய நிலைமையைத் தெரிந்துகொள்ள, புரிந்துகொள்ள தவறியிருக்கிறார்கள் என்று தான் சொல்வேன். நான் வேதனைப்படுகிறேன். உங்களுக்கு இந்த நிலைமைகள் தெரியவில்லை என்று சொன்னால், இங்கே இருக்கின்றவர்களுக்குத் தெரியவில்லை என்றால், இங்கேயிருந்து 1,500 மைலுக்கு அப்பால் இருப்பவர்களுக்கு எப்படி நாம் தெரிவிக்க முடியும்? நாங்கள் இப்படி இருக்கின்ற நிலைமையிலேயே, இந்தியை இவ்வளவு வேகமாக எதிர்க்கின்ற நேரத்திலேயே, மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியையோ இந்திய கம்யூனிஸ்ட் கட்சியையோ இன்னும் ஒத்துழைப்பு தரப்போகிறீர்களா என்றால், அவர்கள் மத்திய சர்க்காரை வேறு எதற்காகவோ, சண்டைக்கு வாருங்கள் என்று அழைக்கின்றார்களே தவிர, இந்த மொழிப் பிரச்சினைக்கு நாங்கள் வருகிறோம், சண்டைக்கு வருகிறோம் என்று சொல்லவில்லை.

**மாண்புமிகு மேலவைத் தலைவர்:** அவையின் நேரம் இந்த விவாதம் முடியும் வரை நீட்டிக்கப்படுகிறது.

**திரு. ஆ. நல்லசிவன்:** மாண்புமிகு தலைவர் அவர்களே, இந்த இந்திப் பிரச்சினையிலே மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியும், இந்திய கம்யூனிஸ்ட் கட்சியும் அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் துணைக்கு வரவில்லை என்று மாண்புமிகு அங்கத்தினர் திரு. இராதா அவர்கள் குறைபடுகிறார்கள். நாங்கள் எங்களுடைய கொள்கையைச் சொல்லியிருக்கிறோம். இந்த நாட்டிலுள்ள 14 தேசிய மொழிகளும் ஆட்சிமொழியாக வர ஒத்துக் கொள்கிறீர்களா? ஆங்கிலம் உட்பட என்று நான் கேட்கிறேன். ஆங்கிலம் உள்ளிட்ட எல்லாவற்றையும் நான் சொல்கிறேன். உங்களுடைய பிரச்சாரம் இரு மொழிக் கொள்கையே தவிர, வேறல்ல. தேசம் முழுவதும் ஆட்சி





மொழிப் பிரச்சினைபற்றி வெளியே பிரச்சாரம் பண்ணமாட்டேன் என்கிறார்கள். இங்கேதான் கவுண்டர் பண்ணி சொல்கிறார்கள். வேறு ஒன்று மில்லை.

**மாண்புமிகு திரு. கா. இராசா முகமது:** மாண்புமிகு மேலவைத் தலைவர் அவர்களே, இரு மொழிக் கொள்கை என்பது தமிழகத்தைப் பொறுத்தது. ஒவ்வொரு தேசிய மொழியையும் ஏற்றுக்கொள்ள வேண்டும் என்பதுதான் அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய கொள்கை. ஒட்டுமொத்தமாக பேரறிஞர் அண்ணா அவர்களுடைய தலைமையிலே திராவிட முன்னேற்றக் கழகமாகச் செயல்பட்டுக்கொண்டிருந்த கால கட்டத்திலே, 1965-லே போராட்டம் நடந்தபோது, திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய மொழிக் கொள்கையாக தெளிவாக பேரறிஞர் அண்ணா அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். அனைத்து மொழிகளையும் ஆட்சி மொழியாக ஆக்க வேண்டும். தொடர்பு மொழியாக ஆங்கிலம் இருக்க வேண்டும். அதுதான் திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய அன்றைய கொள்கை. மொழிக் கொள்கையில் அந்தப் பிரச்சினையில் மிகத் தெளிவாக மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி, இந்திய கம்யூனிஸ்ட் கட்சி கூட அதைச் சொல்லியிருக்கலாம் என்று நினைக்கிறேன். அதிலே கருத்து வேறுபாடு உருவாக்க விரும்பவில்லை. இது மிகத் தெளிவாக அன்று சொல்லப்பட்ட கொள்கை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**மாண்புமிகு மேலவைத் தலைவர்:** நேரம் ஆகின்றது. உறுப்பினர்கள் அவருடைய பேச்சிலே குறுக்கிடவேண்டாம் என்று கேட்டுக்கொள்கிறேன். உறுப்பினர் அவர்கள் பேச அனுமதிக்கவேண்டும்.

**திரு. எஸ். ஆர். இராதா:** தலைவர் அவர்களே, இன்னொரு கருத்து தெளிவாக்கப்பட்டது என்பதிலே மகிழ்ச்சி அடைகிறேன். திராவிட இயக்கத்தினுடைய மொழிக் கொள்கை என்பது நீண்ட நெடுங்காலமாகவே இந்தியாவிலே இருக்கின்ற அனைத்து மொழிகளையும் அடிப்படையாகக் கொண்டு, அந்த மொழிகள் அந்தந்த மாநிலங்களில் வளரவேண்டும் என்ற அடிப்படையிலேதான் தமிழுக்கும் முக்கியத்துவம் கொடுக்க வேண்டும் என்று கொண்டு வந்தோமே தவிர, வேறு எந்த தேசிய மொழியும் வளரக்கூடாது என்பதல்ல. அதாவது மாநில மொழியாக இருக்குமானால், அதைத் தடுக்க வேண்டுமென்று நான் விரும்பவில்லை. பேரறிஞர் அண்ணா அவர்களே விளக்கங்கள் கொடுத்திருக்கிறார்கள். என்னைப் போன்றவர்கள், ஆரம்ப காலத்திலே பள்ளிக்கூடத்திலே படித்துக்கொண்டிருந்தபோது, இந்த மொழி உணர்ச்சியிலே திராவிடர் இயக்கத்திலே கவரப்பட்டு, கழகத்திலே இணைந்தோம். அப்படி இந்த இயக்கத்திலே வந்தவர்கள் நாங்கள். மற்றவர்கள் எல்லாம் இந்த மொழிப் பிரச்சினையைப்பற்றிப் பேசிய நேரத்திலே

எல்லாம் எங்களுக்கு நிச்சயமாக வேகம் வரும். அந்த வேகம் அதிகரிக்கின்ற அளவுக்கு உணர்வுகள் வரும். இந்த இயக்கத்திலே சேர்வதற்கு இந்த அடிப்படைக் காரணம் தான் இருந்தது. இந்த மொழிப் பிரச்சினையால் ஈர்க்கப்பட்டு அந்த இயக்கத்திற்கு வந்தோம். நான் திராவிட இயக்கத்திற்குச் செல்கின்ற நேரத்தில் எனக்கு இருந்த எதிர்ப்பு அவருக்குத் தெரியாது. நான் இந்த மொழிக்கு ஆதரவாக இருந்தேன். என்னுடைய சமுதாயமான சௌராஷ்டிரர் மொழியும் இந்தி மொழியும் ஒத்த மொழியாக இருக்கும். என்னுடைய சமுதாயத்தினர் என்னை எதிர்த்தார்கள். அப்படி இருந்தும் இந்த உணர்வோடு நான் சேர்ந்திருக்கிறேன் என்று சொன்னால், அதைப் பார்க்க வேண்டும். இன்றைக்கு இந்தி படிக்க வேண்டுமென்று ஒரு குரல் தமிழ் நாட்டில் இருக்கின்றது என்றால், அது ஆபத்துதான். அதை நாம் நிச்சயமாகக் கவனித்தாக வேண்டும். இன்றைக்கு திடீரென்று நாம் இந்தி படிக்க வேண்டுமென்று ஒரு குரல் எழுப்பப்படுகிறது என்று சொன்னால், நாம் நிச்சயமாக அதைப்பற்றிக் கவனித்தாக வேண்டும். இந்த ஆபத்து வருவதற்கு இன்றைக்குக் காத்துக் கொண்டிருக்கிறது. இன்றைக்கு வடமாநிலத்திலே இருப்பவர்கள் எதிர்பார்த்துக்கொண்டிருக்கிறார்கள். யாராவது தமிழ் நாட்டிலே இப்படி ஆட்கள் கிடைக்கமாட்டார்களா என்று அவர்கள் இருக்கின்றார்கள். அந்த ஆட்களை வைத்துக்கொண்டு மீண்டும் இந்தியை உள்ளே அனுப்பிவிட முடியாதா என்று அவர்கள் எண்ணிக்கொண்டிருக்கிறார்கள். நான் பணிவோடு அங்கத்தினர் அவர்களுக்குச் சொல்லிக் கொள்கிறேன். யாரும் அதற்கு பலியாக வேண்டாம். அவர்கள் அதற்குப் பலியாகத்தான் போகிறோம் என்று சொன்னால், அது அவர்கள் அழிவுக்கு வழியாகிவிடும். அவர்கள் அழிவுக்கு நாங்கள் யாரும் நிச்சயமாக ஒரு உத்தரவாதம் தர முடியாது. அதைச் செய்துதான் தீர வேண்டுமென்ற நிலைமை வந்தால், தமிழ் நாட்டிலே எந்தத் தலைவர் வந்தாலும், இந்தியை தமிழ் மக்களிடையே புகுத்திவிட முடியும் என்று கருதினால், அது நிச்சயமாகப் பகல் கனவாகத்தான் முடியும். யார் தலைவராக இருந்தாலும் முடியாது என்பதை நான் இங்கே உறுதியாகச் சொல்லக் கடமைப் பட்டிருக்கிறேன். நான் இவ்வளவு சொல்வதற்குக் காரணம் மத்திய அரசை எதிர்க்க வேண்டுமென்ற போர் உணர்வு, எங்களைப் போன்றவர்களுக்கு நிச்சயமாக இருக்கிறது. பிரச்சினைகளை எதிர்க்க வேண்டுமென்பதிலே நாங்கள் நிச்சயமாக எதற்கும் தயங்கமாட்டோம். ஆனால் எதற்கெடுத்தாலும் எதிர்க்க வேண்டும், எதற்கெடுத்தாலும் மத்திய சர்க்காரிடம் போராட வேண்டுமென்று சொல்கின்ற நேரத்திலேதான், நாங்கள் மாறுபடுகிறோம். மாண்புமிகு உறுப்பினர் திரு. நல்லசிவன் அவர்கள் நன்றாகச் சொன்னார்கள். காவிரி பிரச்சினைக்காகப் போய் கர்நாடகத்திலே இருக்கின்ற ஒரு ஆளும் கட்சிக்கு ஆதரவாகப் போகிறார்களே என்று சொல்கின்ற நேரத்திலே



எனக்குக்கூட வேதனையாக இருக்கிறது. ஒருவேளை அப்படிக்கூட போய் விடுவோமோ என்ற கவலை எனக்கு வருகிறது. ஒன்றை நான் சொல்ல வேண்டும். இன்றைக்கு ஒரு நல்ல எதிர்க்கட்சியாக இருப்பவர்கள் நியாயமாகச் சிந்திக்க வேண்டும். மத்திய சர்க்காரோடு ஒத்திருக்கின்ற கட்சியின் மாநிலத்திற்கு பிரச்சினை என்று வருகின்றபோது, ஒத்த கட்சி ஆளுகின்ற நேரத்திலே, மாநிலத்திலே எதிர்க் கட்சிப் பிரச்சினை வருகின்ற நேரத்திலே மத்திய சர்க்கார் குறுக்கே வராது. இன்றைக்கு எதிர்க் கட்சிகள் ஆளுகின்ற மாநிலத்தில் பிரச்சினைகள் வருகின்ற நேரத்திலே மத்திய சர்க்கார் தடுத்துச் சொல்வது என்று இருக்கிறது. நான் ஒன்றைக் கேட்கிறேன். இது எல்லா எதிர்க் கட்சிகளுக்கும் தெரிகிறது. கேரளாவிலே எதிர்க் கட்சி கம்யூனிஸ்ட் கட்சி ஆண்டுகொண்டிருந்தது. அந்த நேரத்திலே தமிழ் நாட்டிலே எதிர்க் கட்சியாக இருக்கின்ற, திராவிட முன்னேற்றக் கழகம், அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் இருந்த காலத்திலே அவர்கள் எந்தப் பிரச்சினையைத் தீர்க்க முன்வந்தார்கள்? ஒரு சாதாரண உணர்வாவது வந்திருக்க வேண்டுமா வேண்டாமா? இரண்டு எதிர்க் கட்சி மாநிலங்களுக்கிடையே பிரச்சினை வந்து மத்திய அரசு தலையிடக்கூடாது என்று நாங்களே தீர்த்துக்கொள்கிறோம் என்ற நிலையில், இதே மத்திய அரசுக்கு அதிலே மத்திய அரசு வரக்கூடாது என்ற உணர்வு வந்திருந்தால், நிச்சயமாகப் பாராட்டியிருக்கலாம். அதே உணர்வை எதிர்க் கட்சியில் இருப்பவர்கள் வலியுறுத்த வேண்டும். அதற்கான முயற்சிகளை எடுத்துக் கொள்ள வேண்டும் என்பதை இந்த நேரத்திலே சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதைப்போல இன்றைக்கு அதிகமாகப் பேசப்படுகின்ற விஷயம் இந்த சத்துணவுத் திட்டம். இந்த சத்துணவுத் திட்டத்திலே நாங் வேகமாகப் பேசிக் கொண்டிருக்கிறோம். யார் யாரோ பல்வேறு கருத்துக்களைச் சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். ஆனால் ஒன்று மட்டும் தெரிகிறது. அவ்வளவு பேர்களும் இதை ஆதரிக்கிறோம் என்று சொல்லி விட்டுத்தான் இதிலே குறைகளைச் சொல்லிக்கொண்டிருக்கிறார்களே தவிர, யாரும் எதிர்க்கிறேன் என்ற அளவிலே வரவில்லை என்பதிலே நான் மிகுந்த மகிழ்ச்சியடைகிறேன். ஆதரிக்கிறேன் என்றும் வரவேற்கிறேன் என்றும் சொல்லிவிட்டு, குறைகளைச் சொல்லி இப்படிச் செய்யக்கூடாதா, அப்படிச் செய்யக்கூடாதா என்று அருமை நண்பர் திரு. முத்துசாமி அவர்கள் ரொம்ப வேகமாக, இன்றைக்கு காரசாரமாகப் பேசினார்கள். அவர்கள் "எனக்கு இளமைத் துடிப்பு" என்று சொன்னார்கள். 12¼ மணிக்கு, 12½ மணிக்கு அது அவருக்கு வரக்கூடாது என்று சொன்னாலும், நான் பணிவோடு சொல்லிக்கொள்கிறேன், அந்தத் துடிப்பு இருக்க வேண்டும்.

மாண்புமிகு மேலவைத் தலைவர்: எந்தெந்த நேரத்திலே எந்த வார்த்தை வரலாம் என்பதை எச்சரிக்கையோடு தெரிவிப்பது நல்லது.

[1983 ஜனவரி 31

திரு. எஸ். ஆர். இராதா : அவர்கள் ஒன்றைச் சொன்னார்கள். பக்கத்திலே இருக்கின்ற மாநிலத்திலே இருக்கின்ற முதலமைச்சர் அவர்கள் எவ்வளவோ நல்ல காரியங்களைச் செய்கின்றார்களே, அவரைப் போல நீங்கள் செய்யக் கூடாதா?" என்றார்கள். அவர் இன்னொன்றையும் சொல்லியிருக்கலாம். அவர்கள் நன்றாகச் சொன்னார்கள். இந்த ஆசிரியர்கள் டியூஷன் எடுப்பதையே நான் அனுமதிக்கப்போவதில்லை என்று. திரு. முத்துசாமி அவர்கள் இதை மௌனமாக இருந்து ஆதரிக்கிறார் என்றாலும், நான் உள்ளபடியே ஆசிரியர்களுக்கு இதைச் சொல்லியாக வேண்டும்.

திரு. செ. முத்துசாமி : இப்போதே டியூஷன் எடுக்கக் கூடாது என்றுதான் இருக்கிறது. அப்படி எடுக்கின்றதாக இருந்தால், பெர்மிஷனோடுதான் எடுக்க வேண்டுமென்று தமிழ் நாடு கல்வித் துறையில் செயலில் இருக்கிறது. அதனாலே புதிதாக வரப்போவது இல்லை. அது ஏற்கெனவே இருக்கின்ற ஒன்றுதான்.

திரு. எஸ். ஆர். இராதா : ஆக ஏற்கெனவே நடைமுறையிலே இருக்கின்ற விதிகளை ஆசிரியர்கள் கூட்டணிகள் மீறிக்கொண்டிருக்கின்றன என்பதையும் ஒத்துக்கொண்டாக வேண்டும். ஆசிரியர்கள் பள்ளிக்கூடத்திலே சொல்லிக் கொடுக்கின்ற நேரத்தைவிட டியூஷனிலேதான் அதிகமாகக் கழிக்கிறார்கள். இன்றைக்கு நாட்டிலே இருக்கின்ற நிலைமைகளைத் தான் வைத்து மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சொன்னார்கள். கல்வித் தரத்தை வளர்ப்பதற்கு இந்தப் பணியிலேயிருந்து விடுவிக்கப் போகிறேன் என்று சொன்னார்கள்.

திரு. க. மீனாட்சிசுந்தரம் : தலைவர் அவர்களே, ஆசிரியர்களைப்பற்றி ஒட்டுமொத்தமாகச் சொல்வது தவறு. எங்கேயாவது குறிப்பிட்ட இடம் இருந்து சொன்னால், அது நலமாக இருக்கும்.

திரு. செ. முத்துசாமி : தலைவர் அவர்களே, ஆந்திராவில் கொடுப்பது போல சம்பளம் கொடுத்தால், சம்பளம் அதிகப்படுத்திக் கொடுத்தால், டியூஷன் எடுப்பதை விட்டுவிடலாம். அப்படி நிறுத்தினால் ஆட்சேபணை இல்லை.

மாண்புமிகு மேலவைத் தலைவர் : அங்கத்தினர் கொஞ்சம் சகிப்புத் தன்மை காட்டி, பேசுகின்றவர்களை அனுமதிக்க வேண்டும்.

திரு. எஸ். ஆர். இராதா : மாண்புமிகு உறுப்பினர் திரு. முத்துசாமி அவர்கள் அவருடைய உணர்வைச் சொல்லிக்கொண்டிருக்கிறார்கள். சம்பளம் அதிகம் கொடுத்தால், முதலில் டியூஷன் வேண்டாமென்று சொன்னார்கள். சம்பளம் கொடுத்தால் டியூஷனை நிறுத்திவிடுகிறோம் என்று சொல்கின்றார்கள். அது நல்லதல்ல. அவர்கள் சொல்கின்ற கருத்துக்களிலே தெளிவாக இருக்க வேண்டும். டியூஷன் வேண்டாமென்று சொல்லுகிறார்கள்.





1983 ஜனவரி 31] [எஸ். ஆர். ஆர். இராதா]

(பிற்பகல் 12-40)

இன்றைக்கு ஒரு முதலமைச்சர் சொல்கிறார் என்றால், நீங்கள் ஏற்றுக் கொண்டாக வேண்டுமென்பதல்ல. பள்ளிகளில் கல்வித் தரம் வேண்டு மென்பதில் எல்லோரும் அக்கறை கொண்டிருக்கிறார்கள். கல்வித் தரத்தைப் பொறுத்தவரையில் இன்றைக்கு என்ன நிலைமை? எந்த ஆசிரியர்களாக வேண்டுமானாலும் இருக்கட்டும், தமிழ் நாட்டிலுள்ள பெரியவர்களைக் கேட்டுப் பாருங்கள். இன்றைக்கு சத்துணவு போடும் காரணத்தாலே எங்களால் கல்வியைக் கற்றுத் தர முடியவில்லை என்றால், இன்றைக்கு நான் பகிரங்கமாக, மனப்பூர்வமாக கூறக் கடமைப்பட்டிருக்கிறேன், 5 ஆம் வகுப்பு வரை படித்த குழந்தைகளுக்கு இன்றைக்கு தமிழில் 'அ', 'ஆ' சரியாக எழுதத் தெரியவில்லை. அந்த அளவிற்கு வைத்திருக்கிறார்கள். அந்த நிலையில் பல பள்ளிகளை வைத்திருக்கிறார்கள்.

திரு. க. மீனாட்சிசுந்தரம் : தலைவரவர்களே, இது ஆசிரியர்களுடைய பொறுப்பு மட்டுமல்ல; அரசாங்கத்தினுடைய கல்வித் திட்டத்தினுடைய பொறுப்புமாகும். அதற்கு வேண்டுமானால் ஆதாரத்தோடு சொல்கிறேன்.

திரு. எஸ். ஆர். இராதா : மாண்புமிகு உறுப்பினர் திரு. மீனாட்சிசுந்தரம் அவர்கள் சட்டத்திலே இருக்கிறது, திட்டத்திலே இருக்கிறது என்று சொல்லி அவர் தப்பித்துக்கொள்ளப் பார்க்கிறார். நான் அதை ஏற்றுக்கொள்ளத் தயாராக இல்லை.

மாண்புமிகு மேலவைத் தலைவர் : மாண்புமிகு உறுப்பினர்களுக்கு ஒன்று சொல்கிறேன். அவர் கருத்தை அவர் சொல்கிறார். ஒவ்வொருவரும் மறுத்தால் நேரம் போதாது. அபிப்பிராயம்தான் சொல்லுகிறார்.

(திரு. க. மீனாட்சிசுந்தரம் எழுந்தார்)

என்னால் ஒன்றைத்தான் அனுமதிக்க முடியும். தவறான ஒன்றைச் சொன்னால், தன்னிலை விளக்கத்தின்கீழ் ஒரு உறுப்பினர் அந்தப் பேச்சாளரைக் குறுக்கிடலாம். வேறு எதையும் அனுமதிக்க முடியாது.

திரு. எஸ். ஆர். இராதா : நான் சொல்வது, ஆசிரியர்கள் அத்தனை பேரும் அந்தத் தவறு செய்துவிட்டார்கள், எல்லோரும் பணிக்குப் போகவில்லை, பாடம் சொல்லிக் கொடுக்கவில்லை என்பதல்ல. நான் அதிகமாகச் சாட்டும் குற்றச்சாட்டுகளின்கீழ் நேரடியாக இந்த இரண்டு பேரும் வந்ததால் சொல்கிறேன். இந்தக் கூட்டணியிலே அனேகமாக சந்தா தருகிறவர்களும், மன்றத்திலே இருப்பவர்களும்தான் இருக்கிறார்கள். அதிக நேரம் அதில் போவதால்தான் கல்வியின் தரம் வேகமாகப் பாதிக்கப்படுகிறது.

திரு. க. மீனாட்சிசுந்தரம்: தலைவரவர்களே, கல்வித் துறை என்ன செய்து கொண்டிருக்கிறது என்று கேட்க விரும்புகிறேன்.

மாண்புமிகு மேலவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினரவர்கள் இதற்கு பதில் சொல்ல வேண்டியதில்லை. மேலே பேசலாம்.

திரு. எஸ். ஆர். இராதா: தலைவரவர்களே, சொல்வதால், நான் பதில் சொல்லவில்லை. இன்றைக்கு தமிழ் நாட்டிலுள்ள ஏழை, எளியவர்கள் தங்களுடைய ஐந்து வயதுக் குழந்தைகளைப் படிக்க வைக்க எண்ணும்போது, அவர்களுக்கு மிகப் பெரிய ஏமாற்றமாக இருக்கிறது என்பதை தமிழ் நாட்டிலுள்ள அத்தனை பேரும் உணர்வுபூர்வமாக ஒப்புக்கொண்டிருக்கிறார்கள். நீங்கள் வேகமாக ஆசிரியர்களுக்காகப் பேசுங்கள், நீங்கள் அதற்காகப் போராடுங்கள், நாங்கள் நிச்சயமாக குறுக்கே நிற்கத் தயாராக இல்லை. தமிழ் நாட்டு சமுதாயத்தை யார் கெடுக்கிறார்கள் என்பதைக் கண்டு பிடித்தாக வேண்டும். அதுதான் இன்றைக்கு உள்ள நிலை. இன்றைக்கு அந்த ஆராய்ச்சி தமிழ் நாட்டு மக்களிடத்தில் வந்துவிட்டது என்பதை மட்டும் இந்த நேரத்திலே குறிப்பிட்டுக் கூறுகிறேன். இந்தத் திட்டம்பற்றி எவ்வளவு விமர்சனங்கள், எவ்வளவு வேடிக்கைகள் பேசப்பட்டன என்பதை நான் தெரிந்து கொண்டிருக்கிறேன். ஆசிரியர்களாக இருக்கிறவர்கள் இந்தத் திட்டத்தைப்பற்றிச் சொல்லும்போது, இந்தத் திட்டத்திலே இந்தத் தவறு இருக்கிறதென்று சொன்னால், அது ஒரு ஆட்சிக்கு நன்மையாக இருக்கும். ஒரு நண்பர் "இந்தத் திட்டத்திலே சோறு போடுவதுபோல் காட்டி, குடியரசு நாளிலே முதலமைச்சருடைய கையைப் படமாகப் போடுகிறீர்களே" என்று கேட்டார். நான் தி.மு.க.-விலே ஆரம்ப நாளிலிருந்து உறுப்பினராக இருந்தவன். தி.மு.க. ஆட்சிக் கட்சியானதற்குப் பிறகு, பேரறிஞர் அண்ணா அவர்களுக்குப் பிறகு, கலைஞர் கருணாநிதி அவர்கள் முதலமைச்சராக ஆனதற்குப் பிறகு, எவ்வளவு பெரிய விளம்பரம் நடைபெற்றது என்று அன்றைக்கு எதிர்க் கட்சிக்காரர்கள் சொன்னார்கள். கக்கூசிலிருந்து கோட்டை வரை முதலமைச்சர் படமா என்று பேசிய பேச்சு என்னுடைய இதயத்தில் இருக்கிறது. இன்றைக்கு சாதாரணக் கையைப் பார்த்து, இவ்வளவு கோபம் வருகிறதென்றால், அந்தக் கையிடம் கோபத்தைக் காட்டியிருக்க வேண்டாமா? கைக்கு அடக்கமாக இருந்துகொண்டு, அதைக் கேட்கிற நேரத்தில் உங்களுக்குக் கோபம் வருகிறதென்று சொன்னால், எனக்குக் கோபம் வராதா? அதுவல்ல பிரச்சினை. இந்தத் திட்டத்திலே இன்ன தவறு என்று சொன்னால், நான் நிச்சயமாக அதை ஏற்றுக்கொண்டிருப்பேன். அந்தக் காலத்திலே இராமலிங்க அடிகள் சொல்லுவதற்குக்கூட முடியாத திட்டத்தையும், பாரதியார் அவர்கள் சொன்ன திட்டத்தையும்—ஆயிரம் சத்திரங்கள் கட்டுவதைவிட, ஒரு ஏழைக்குப் பள்ளி வசதி செய்தால், அதைப்





பாராட்டுவேன் என்று சொன்னாரே, அந்தத் திட்டத்தையும்—இணைத்து, சோறும் போட வேண்டும், அதே நேரத்தில் கல்வியும் பெற வேண்டும் என்று சொல்லி, 12 ஆண்டுகளுக்கு ஒருவருக்கு உத்தரவாதம் கிடைக்கிறதென்றால், இதற்கு முனைப்பாக அத்தனை கட்சிகளும் சேர்ந்து ஒத்துழைத்து, இதற்காக வழி வகைகளைச் சொல்வதை விட்டு, குற்றம், குறை சொல்லும் நிலைமை ஏற்படுவதை நான் பரிதாபத்தோடு பார்க்க வேண்டிய நிலை இருக்கிறது. இந்தத் திட்டத்தின் அடிப்படையில் பற்பொடி கொடுக்கிறோமென்று சொல்லுகிறார்கள், பற்பொடியில் காரமில்லை என்கிறார்கள். "நீ பல் விளக்கி இருக்கக்கூடாது, உன் பல் சரியில்லை" என்பதுதான் அதற்குக் காரணம், பற்பொடியில் குறையில்லை. பல பேர்கள் இமிடேஷன் பல் வைத்துக்கொண்டு, பற்பொடி காரமில்லை என்கிறார்கள். எப்படி காரம் தெரியும்? நீங்கள் போட்டிருப்பது பொய்ப் பல். நாங்கள் போட்டுள்ள திட்டம் 12 வயதிற்குள்ள குழந்தைகளுக்குத்தான். ஒருவன் சாப்பிடும் உணவு வாய் வழியாகப் போகும் போது, பல்லுக்குள் அந்த உணவுப் பொருள்கள் தங்கி, அதனால் வியாதி வருகிறதென்பது சாதாரணமானவர்களுக்கும் தெரியும். அதனால்தான் வியாதி வருகிறது, அதைத் தடுக்க வேண்டுமென்ற எண்ணத்தில் புரட்சித் தலைவர் அவர்கள் ஒரு திட்டத்தைக் கொண்டு வந்தால், அதை நீங்கள் கேலி செய்கிறீர்கள் என்றால், உள்ளபடியே உங்களைப் பார்த்துப் பரிதாபப் படுகிறேன்.

இந்த ஆட்சியிலே விழாக்கள் கொண்டாடுகிறார்கள், பெரிய விழாக்கள் நடத்துகிறார்கள், அதனால் வீண் செலவாகிறது என்று சொல்லுகிறார்கள். ஆனால் விழாவிலே கலந்துகொண்டு பேசும்போது பாராட்டுகிறார்கள். அடுத்த விழாவிற்கு அழைக்கவில்லை என்றால், இது என்ன பெரிய விழா என்று கேட்கிறார்கள். அதுதான் பரிதாபத்திற்குரிய விஷயம். பாரதியாருக்கு, பெரியாருக்கு நூற்றாண்டு விழா கொண்டாடுகிறோம், தமிழ் மாநாடு கொண்டாடுகிறோம் என்றால், தமிழகத்திலுள்ள மக்கள் அத்தனை பேரும் அதைப் பாராட்டிக் கொண்டிருக்கிறார்கள். பெரியாருக்கு நூற்றாண்டு விழா எடுக்கும்போது, எத்தனை பேர்கள் எத்தனை கேள்விக்குறி போட்டார்கள்; தந்தை பெரியாருக்கு வக்காலத்து வாங்கிக் கொண்டு, இவ்வளவு கோடி ரூபாய் செலவு செய்கிறார்கள் என்று சொன்ன நேரத்தில், நான் மனப்பூர்வமாக அன்றைக்குப் பாராட்டினேன். பார்ப்பனச் சமுதாயத்திலுள்ள, பெரியாரை எதிர்த்த அந்தச் சமுதாயத்திலுள்ள அதிகாரிகள் எல்லாம் பெரியார் நூற்றாண்டு விழாவில் நடு ரோட்டில் ஊர்வலம் வந்து, பெரியார் வாழ்க என்று சொன்ன சரித்திரம் படைத்தோம். பெரியாருக்கு நூற்றாண்டு விழா எடுக்கிறார்கள் பார்த்தீர்களா, இவர்கள் பழைய கறுப்பு சட்டைக்காரர்கள் என்று சொன்னார்கள். உடனே பாரதியார் நூற்றாண்டு விழா எடுத்தவுடன்,

இப்போது மாறிவிட்டார்கள் என்று சொல்கிறார்கள். உங்கள் பார்வையிலே கோளாறு. உங்களுடைய பார்வையை மாற்றியாக வேண்டும். கலைஞர் கருணாநிதி அவர்கள் சொன்னதுபோல, கண்ணாடியை மாற்றியாக வேண்டும். அதை மாற்றினாலொழிய, உங்கள் பார்வை மாறாது. பெரியார் நூற்றாண்டு விழாவில் அவர் கொள்கைகளை எடுத்துச் சொல்கிறோம். பாரதியார் நூற்றாண்டு விழா கொண்டாடுகிறோமென்றால், தமிழ்ச் சமுதாயத்திலே ஒரு கவிஞனை உலகுக்கு அறிமுகம் செய்து, அந்தக் கவிஞன் எடுத்த தேசிய நிலையை மற்ற மாநிலத்துக்காரர்கள் உணர வேண்டுமென்று சொன்னோம். அந்த மாநிலங்களில் அந்த உணர்வு வரவில்லை என்று நினைக்கிறோம். அந்த மாநிலங்களுக்கு பாரதியைக் காட்டி, தேசிய உணர்வு வர வேண்டுமென்றால், தமிழை மதிக்க வேண்டும், இந்தியைப் புகுத்தக்கூடாது என்று சொல்லிட அந்த விழாவைப் பயன்படுத்தினோம். முதலமைச்சரின் விளம்பரத்திற்காகச் செய்கிறார்கள் என்று சொல்லுகிறார்கள். நான் பணிவோடு தெரிவித்துக் கொள்கிறேன். எங்களுடைய முதலமைச்சருக்கு இன்றைக்கு விளம்பரம் தேவையில்லை. அவர் எங்கே நிற்கிறாரோ அங்கே கூட்டம் கூடுகிறது. கூட்டத்தைத் தேடிப் போய் நிற்க வேண்டிய நிலை அவருக்கு இல்லை. இன்றைக்குக்கூட பழைய படங்கள் ஓடுகின்றன. அதை யாரும் தடுக்க முடியாது. அவரைப்பற்றிப் பேசினால், உங்களுக்குத்தான் விளம்பரம் வரும். நிச்சயம் அவருக்கு விளம்பரமில்லை. பிரச்சினைகளைக் கொள்கை ரீதியாக அணுக வேண்டும். இந்த உரையிலே சொல்லியிருக்கிறார்கள், குடும்பத்திற்கு ஒருவருக்கு வேலை தருகிறோமென்று திட்டம் போட்டு அதற்காக 15 கோடி ஒதுக்கியிருக்கிறோமென்று. அந்தத் திட்டத்தை வரவேற்று, எப்படிச் செய்யலாமென்பதற்கு வழி வகை சொல்லுங்கள். யாரால் சொல்ல முடிந்தது? இன்றைக்கு ஒவ்வொரு வீட்டிலே ஒருவரை அரசாங்க உத்தியோகத்திலோ, அரசாங்கச் சார்புள்ள உத்தியோகத்திலோ நியமிப்பதென்பது சாதாரண சாதனையா? இன்றைக்கு 15 கோடி அதற்காக, ஒதுக்கி, அதை தமிழ் நாட்டு மக்களுக்குச் சொல்லியிருக்கிறோம். இந்தத் திட்டத்தை மனம் திறந்து பாராட்டக்கூடாதா? பாராட்டினால் நாடா கெட்டு விடும்?

இன்றைக்குச் சொல்கிறேன், என்னுடைய நண்பர் ஒருவர் சொன்னார். ஆளுநர் அவர்கள் உரையிலே பெண்களுக்குக் கழிப்பிடம் கட்டுவதற்கு 22 கோடி ரூபாய் ஒதுக்குகிறார்கள், தண்ணீருக்கு எங்கே போவது என்ற சந்தேகத்தைக் குறிப்பிட்டார்கள். அது வெளியிலே போகிறவர்களுக்கு வருகிற சந்தேகம். 22 கோடி ரூபாய் திட்டத்தில் கட்டுகிறோமென்றால் தண்ணீர் இல்லாமலா கழிப்பிடம் கட்டுவோம்? அந்த வசதி இல்லாமலா செய்வோம்? அதற்கு யோசனையாகச் சொல்லலாம். 'கை பம்ப்' வையுங்கள் அல்லது



பக்கத்தில் டாங்க் கட்டுங்கள் என்று. நல்ல யோசனையாக இருந்தால் கேட்கலாம். கக்கூஸ் போகிறவர்களுக்கு இது எல்லாம் தெரியும். இன்னொன்று சொன்னார். இதை ஏன் செய்கிறார்கள் என்றால், ஆட்சிக் கட்சியிலே இருக்கிறவர்கள் கொள்ளை அடிக்க, காண்ட்ராக்ட் அடிக்க என்றும் சொல்லப்பட்டது. நான் பணிவோடு சொல்லிக்கொள்கிறேன். துணிந்து சொல்கிறேன். அண்ணா தி.மு.க.-வைப் பொறுத்தவரையில், இன்றைக்கு காண்ட்ராக்டர்கள் எண்ணிக்கையைப் பாருங்கள். அதே நேரத்தில் எத்தனை காங்கிரஸ்காரர்கள், தி.மு.க.-காரர்கள் இருக்கிறார்கள் என்பதை அரசாங்கத்தின் மூலமாக வாங்கித்தரத் தயாராக இருக்கிறேன். இன்றைய வரையில் காங்கிரஸ் காண்ட்ராக்டர் ஒருவரும் வெளியே போகவில்லை. இன்றைய வரையில்

(பிற்பகல் 12-50).

திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சார்ந்த காண்டிராக்டர்கள்தான் அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சார்ந்த காண்டிராக்டர்களை விட அதிகமாக, 10 மடங்கு அதிகமாக இருக்கிறார்கள். அண்ணா திராவிட முன்னேற்றக் கழகக்காரர்கள் தான் இந்த விஷயத்தில் ஏமாந்து போகிறார்கள். இதுதான் உண்மையும் கூட. ஆளும்கட்சிக்காரர்கள் இங்கே கொள்ளையடிக்கிறார்கள் என்று சொன்னார்கள். ஆனால் உண்மையிலேயே ஏமாந்திருப்பது ஆளும் கட்சிக்காரர்கள்தான். எதிர்க் கட்சியைச் சார்ந்தவர்களுக்குத்தான் கொள்ளையடிக்கத் தெரிகிறது. எங்கள் கட்சியைச் சார்ந்தவர்களை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அதற்கு அனுமதித்ததே இல்லை. எங்களில், பல பேர் காண்டிராக்டர்களாக வேண்டுமென்று நினைத்தால், போயிருக்க முடியும். ஆனால் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் உன்னிப்பாகப் பார்த்துக்கொண்டிருப்பதால், ஆளும் கட்சியைச் சார்ந்தவர்களைவிட பல மடங்கு எதிர்க் கட்சிக்காரர்கள்தான் அதிகமாக காண்டிராக்டர்களாக இருக்கிறார்கள்.

அடுத்து, இங்கே காவிரி நீர் பிரச்சினைபற்றிச் சொன்னார்கள். இது மிக மிக முக்கியமான பிரச்சினை. அதுவும் தஞ்சையிலிருக்கிற எங்களுக்கு இது மிகப் பெரிய பிரச்சினை. முன்னாள் நீதிபதியாக இருந்த மாண்புமிகு உறுப்பினர் ஒருவர் ஒன்றைக் கேட்டார். காவிரியில் தண்ணீர் இல்லை, எங்கே போய் மறுபடியும் அணை கட்டப்போகிறீர்கள் என்று கேட்டார். அவர் பேசியதைக் கேட்ட எனக்கே கூட வேடிக்கையாக இருந்தது. ஆனால் உண்மையில் எந்த நோக்கத்தில் புதிதாக அணைகளைக் கட்டப் போகிறோம் என்பதைப் பார்க்க வேண்டும். வருகிற கொஞ்சம் தண்ணீரைப் பயன்படுத்தி, வீணாக்காமல் இருக்க புதிய திட்டத்தைக் கொண்டு வருகிறோம். தண்ணீர் இனி காவிரியில் வராது என்றவுடன் வருகிற தண்ணீரைப் பயன்படுத்தி

அணையைக் கட்ட வேண்டுமென்று சொல்கிறோம். ஆனால் இவர்கள் பேசுவதைப் பார்க்கும்போது 15, 20 ஆண்டுகளுக்கு முன்பு வைகை அணை கட்டப்படும்போது நாங்கள் வேடிக்கையாகப் பேசிக் கொண்டிருப்போம், அதுதான் நினைவுக்கு வருகிறது. தஞ்சையைப் பொறுத்தவரையில், காவிரியை நம்பித்தான் இன்றைக்கு விவசாயம் நடைபெற வேண்டிய நிலை இருக்கிறது. ஒரு விவசாயம் முடிந்து விட்டது. அடுத்த விவசாயத்திற்கு வழி தெரியாமல் தவித்துக்கொண்டிருக்கிறார்கள். அந்தத் துடிப்பு இன்றைக்கு அங்குள்ள விவசாயிகளுக்கு இருக்கிறது. எங்களுக்கு இருக்கிறது. எங்களுடைய மாவட்டத்தில் கோயம்புத்தூர் மாவட்டத்தைப் போல மோட்டாரை வைத்து தண்ணீரை அடிக்கமாட்டார்கள். அப்படி அடித்தால், அடுத்த நிலத்திற்குத் தண்ணீர் போய்விடும். தஞ்சையைப் பொறுத்தவரையில், காவிரியில் தண்ணீர் வந்த பிறகு, தங்களுடைய நிலத்திற்கும் தண்ணீர் வந்த பிறகுதான் விவசாயத்தைப்பற்றி விவசாயிகள் சிந்திப்பார்கள். நீண்ட நெடுங்காலமாக அப்படிப்பட்ட ஒரு சிந்தனையில் இருந்து பழக்கப்பட்டவர்கள். அப்படிப் பட்ட காவிரி இனி கர்நாடகத்தை நம்பித்தான் இருக்கிறது. ஆகவே வருகிற கொஞ்சம் தண்ணீரையும் எப்படி எப்படியெல்லாம் மிச்சப்படுத்திப் பயன் படுத்த வேண்டுமென்பதற்காகக் கண்டுபிடிக்கப்பட்ட அருமையான திட்டம் தான் இது. ஆகையால் நான் இத்திட்டத்தை வரவேற்கிறேன்.

அடுத்து, பருவமழை பொய்த்து விட்டதால், வறட்சி வந்து விட்டது. எதிர்க் கட்சியிலே இருப்பவர்களுக்கு வறட்சி வந்துவிட்டது மாதிரி வாதம் செய்தார்கள். அறிக்கையை அனுப்புகிற தேதி சரியில்லையென்று வாதம் செய்தார்கள். எதிர்க் கட்சியில் இருக்கிறவர்களிடத்தில் உணர்வுகள் வரும் போது, ஆளும் கட்சி மீது குற்றச்சாட்டுகள் சொல்வது அவர்களுடைய கடமைதான். ஆனால் அப்படி குற்றச்சாட்டுகளைச் சொல்கிறபோது மத்திய அரசை வலியுறுத்தி மத்திய அரசிடமிருந்து மேலும் பெறுகிற வகையில், தமிழ் நாட்டின் நலனுக்கு உகந்த வகையில் அவை அமைய வேண்டும். ஆளும் கட்சி, எதிர்க் கட்சி என்கிற முறையில் குற்றச்சாட்டுகள் வரக்கூடாது. மத்திய அரசைப் பொறுத்தவரையில் வறட்சிக்கு என்ன நிவாரணம் செய்யப் போகிறார்கள் என்பது பின்னாலேதான் தெரியும். ஆனால் இன்றைக்கு தமிழ் நாட்டுக்கு மிகப் பெரிய ஏமாற்றங்கள் வந்துகொண்டிருக்கின்றன. இன்றைக்கு தமிழ் நாட்டிலிருந்து மத்தியில் அமைச்சராக இருந்த ஒருவர் வெளியேற்றப் பட்டிருக்கிறார். அவர்தான் தமிழ் நாட்டினுடைய விவசாயத்தைப்பற்றிப் பேசிக்கொண்டிருந்தார். இதை திரு. தாஸ், திரு. முனுசாமி போன்றவர்கள் கண்டித்திருந்தால், நன்றாக இருந்திருக்கும். தமிழ் நாட்டிலிருந்து போயிருந்த மந்திரியும் ஏன் போய்விட்டார் என்று சொல்லியிருந்தால்; மகிழ்ச்சியடைந்



திருப்போம். (சிரிப்பு) நான் மாற்றுக் கட்சியைச் சார்ந்தவன் என்றாலும் கூட தமிழ் நாட்டிலிருந்து போயிருந்த ஒரு மந்திரியினுடைய பதவி பறி போய் விட்டது என்பதை அறியும்போது வேதனைப்படுகிறேன்.

திரு. ஏ. ஜே. தாஸ்: உறுப்பினருக்கு எங்கள் மீது ஏன் அவ்வளவு அக்கறை? (சிரிப்பு)

திரு. எஸ். ஆர். இராதா: எங்களுக்கு ஏன் இவ்வளவு அக்கறை என்கிற சந்தேகம் மாண்புமிகு உறுப்பினர் திரு. தாஸ் அவர்களுக்கு வந்திருக்கிறது. தமிழ்நாட்டுக்காரர் ஒருவர் மத்தியில் அமைச்சராக இருக்கிறார் என்கிற அக்கறை இருந்தது. இப்போது அவர் எங்கே இருக்கிறார் என்கிற கவலை உங்களுக்குத்தான் இருக்கும். அவர் அமைச்சராக இருப்பதால், அதிலும் தமிழ் நாட்டுக்காரர் அமைச்சராக இருக்கிற காரணத்தால், தமிழ் நாட்டுக்காக வாதாடுபவராக இருப்பார் என்கிற நம்பிக்கையில் அப்படிச் சொல்கிறேன். அமைச்சர் பதவி போய்விடுகிறது என்று சொன்ன உடனேயே தமிழ் நாட்டுக் காங்கிரஸ்காரர்களுக்கு ஒரு துடிதுடிப்பு வந்திருக்க வேண்டாமா? கோபம் வந்திருக்க வேண்டாமா? மத்தியில் இருக்கிறவர்களுக்கு ஒரு பயம் ஏற்பட வேண்டாமா? இந்தமாதிரிச் செய்தால் தமிழ் நாட்டில் கிளர்ச்சி வரும், தமிழ் நாட்டிலே ஒரு எதிர்ப்புணர்ச்சி வரும் என்று மத்தியில் உள்ளவர்கள் உணர்கிற மாதிரி நடக்க வேண்டாமா? இதே அடிப்படையில்தான் எதிர்க் கட்சியைச் சார்ந்த உறுப்பினர்களுக்கு ஏன் அனல் மின் நிலையங்களுக்கு தேவையான நிலக்கரி வரவில்லை என்ற உணர்வு வந்திருக்க வேண்டும்; கோபம் வரக் கூடாது. அதுபோல் தூத்துக்குடி அனல் மின் நிலையத்திற்கு வருகிற நிலக்கரி சரியாக இல்லையென்று சொல்கிறபோதும், காங்கிரஸ் கட்சியினருக்கும் கோபம் வருகிறது. அங்கிருந்து அனுப்பப்படுகிற நிலக்கரி சரியில்லை என்று நாங்கள் சொல்கிறோம். ஏன் சரியாக வரவில்லை என்ற உணர்வு இவர்களுக்கு வர வேண்டாமா? அதுபோல் நிலக்கரி வரவில்லையென்று சொன்னாலும் ஏன் வரவில்லை என்று சொல்லி, எதிர்க்கின்ற நிலை வர வேண்டாமா? அப்படிப்பட்ட உணர்வு வரவில்லையென்று சொன்னால், நான் உள்ளபடியே சொல்கிறேன், தமிழ் நாட்டுக்கு நீங்கள் துரோகம் செய்கிறீர்கள் என்றுதான் பொருள்.

அடுத்து, அரிசிப் பற்றாக்குறை நிலவி வருகிறது என்று ஆளுநர் உரையில் சொல்லப்பட்டிருக்கிறது. மத்திய அரசை எதிர்பார்க்க வேண்டிய நிலை வந்து விட்டது. வறட்சி ஏற்பட்ட காரணத்தால், பருவமழை பொய்த்த காரணத்தால், உற்பத்தி பாதிக்கப்பட்ட காரணத்தால், அரிசி கிடைக்காமல் போய்விடுமோ என்கிற அச்சத்தைத் தெரிவிக்கிறோம். ஆனால் மத்திய அரசிலே இருப்பவர்கள் பல பேர் அலட்சியமாக இன்றையதினம் பேசிக்

கொண்டிருக்கிறார்கள். நாங்களா தருவோம் என்று கேள்வி கேட்கக் கூடிய நிலைமை கூட இருக்கிறது. அத்தகைய ஒரு உணர்வு இன்றையதினம் மத்தியில் இருக்கிறது. அதை மாற்றி நாம் அனைவரும் சேர்ந்து ஒட்டுமொத்தமான குரலை எழுப்ப வேண்டும். அப்போதுதான் மத்தியில் இருப்பவர்கள் செவி சாய்ப்பார்கள்.

அதேபோல இன்னொன்றையும் சொன்னார்கள். தமிழ் நாட்டைப் பொறுத்தவரையில், திட்டச் செலவுகள் சரியாக நடக்கவில்லை, காரியங்கள் நடக்கவில்லை, உணவுக்காக கோடிக்கணக்கான ரூபாய்களைக் கொடுத்து விட்டு நாம் வறட்சியாகப் போய்விடுகிறோம் என்றெல்லாம் சொன்னதற்காக ஒன்றை நான் சொல்கிறேன். இன்றைக்கு ஆளுநர் உரையில் பல கோடிக் கணக்கான ரூபாய் செலவில் பல புதிய புதிய திட்டங்களை அறிவித்திருக்கிறார்கள். தமிழ் நாட்டில் இன்றைக்கு வறட்சிக்குப் பிறகு 17 சதவிகித வேலைகள் அதிகமாக நடைபெற இந்த அரசு ஆணையிட்டிருக்கிறது. அதற்காக இந்த அரசை நிச்சயம் பாராட்ட வேண்டும். அதுபோல் சாலை வசதிக்காக 51 கோடி ரூபாயை இந்த அரசு ஒதுக்கியிருக்கிறது. தமிழ் நாட்டிலே இருக்கிற பல்வேறு சாலைகள் புதுப்பிக்கப்பட்டு, புதிய சாலைகள் உருவாக்கப்பட அரசு முனைப்பாக நடவடிக்கை எடுப்பதற்கு அடையாளமாகத்தான் இந்த உரை ஆற்றப்பட்டிருக்கிறது. இதிலே இன்றைக்கு ரூ. 300 லட்சம் செலவில் கிழைக் கடற்கரைச் சாலையை எடுத்திருக்கிறோம் என்று சொன்னால், கடற்கரையையொட்டியிருக்கிற மாவட்டங்களுக்கு உதவி செய்கிறோம் என்று அர்த்தம். இதற்காகவெல்லாம் எதிர்த்தரப்பிலே இருக்கிறவர்கள் இந்த சர்க்காரைப் பாராட்ட வேண்டுமென்று நான் சொல்லவில்லை. ஆனால் இவற்றையெல்லாம் பாராட்டுவதற்கு வழிவகை தெரியவில்லையென்றாலும் கூட, எதிர்க்கின்ற நோக்கிலேயாவது கொஞ்சம் நிதானமாக எதிர்க்க வேண்டுமென்று நான் சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

அடுத்து, ஊட்டி பிலிம் தொழிற்சாலைபற்றி எல்லோரும் பேசுகிறோம். அப்படி அது வேண்டுமென்று ஆசைப்படுகின்றவர்களுக்கு எதிர்க்கின்ற உணர்வு வருகின்றபோது, மத்திய அரசைத் தட்டிக் கேட்கின்ற உணர்வும் வர வேண்டும்.

கடைசியாக ஒன்றே ஒன்றைச் சொல்லி முடித்து விடுகிறேன். ஆளுநர் உரையிலே ஒரு புதிய அத்தியாயத்தை படைக்கின்ற வகையிலே ஒன்றைச் சொல்லியிருக்கிறார்கள். முஸ்லீம் சமுதாயத்திற்காக, முஸ்லிம் அறக் கட்டளைக்காக ஒரு கோடி ரூபாய் ஒதுக்கியிருக்கிறார்கள். இந்த அரசு அனைத்து மக்களுக்கும் பொதுவானது என்று சொன்னால், சில பேருக்குச்



சந்தேகம் வருகிறது. அந்தச் சந்தேகங்களையெல்லாம் நிவர்த்தி செய்வது என் வேலையல்ல. ஆனால் அனைவரையும் சமமாக பாவிப்பதிலே நாங்கள் மிகவும் தெளிவாக இருக்கிறோம். பல பேருக்கு திடீர் திடீர் என்று வருகின்ற போது சந்தேகம் வருகிறது. மதத்திற்குப் போய்விட்டார்களே என்று எங்கள் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களைப் பற்றிக் கூட இங்கே பேசினார்கள். நான் பகுத்தறிவுக் கொள்கையில் அசையாத நம்பிக்கை கொண்டிருக்கிறேன். அந்த நம்பிக்கையின் அடிப்படையில் சொல்கிறேன். பகுத்தறிவாளர்களாக இருப்பவர்கள் இன்னொரு பகுத்தறிவுவாதியைக் குறித்து தயவுசெய்து சந்தேகப்பட வேண்டாம். ஒரு ஆண்டவன் சரியில்லையென்றால் ஐயப்பனை தரிசிக்கப் போகிறான் பக்தன். பிறகு ஆதி பராசக்தியிடம் வருகிறான். அதன்பிறகு புது சாமியிடம் போய்க்கொண்டிருக்கிறான். அந்த நிலைமையிலே

(பிற்பகல் 1-00)

பகுத்தறிவுவாதிகளாக இருப்பவர்கள் மீது சந்தேகம் எழுப்பி குழப்பம் ஏற்படுத்த வேண்டாம். உங்களுக்கு இருக்கும் சந்தேகம் மற்றவர்களுக்கும் இருக்கும். ஆகவே, அந்த நிலைமை வேண்டாம் என்று சொல்லி, என்னுடைய பேச்சை முடித்துக்கொள்கிறேன்.

திரு. ஆற்காடு நா. வீராசாமி: மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் அவர்களே, மேதகு ஆளுநர் அவர்கள் ஆற்றிய உரைக்கு நன்றிதெரிவிக்கும் தீர்மானத்தின் மீது திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் என்னுடைய கருத்துக்களை எடுத்து வைக்க நான் கடமைப்பட்டிருக்கிறேன். ஆளுநர் அவர்களின் உரையிலே, எதிர்க் கட்சியிலே இருப்பவர்கள் இந்த ஆட்சியினுடைய எதிர்காலத் திட்டங்களை எதிர்பார்ப்பதும், அப்படி திட்டங்கள் எதிர்பார்த்த அளவுக்கு இல்லாது இருக்கும்போது ஏமாற்றத்தோடு அதை எடுத்துச்சொல்வதும் ஜனநாயகத்திலே இருக்கும் அடிப்படை உரிமை. ஆகவே, எதிர்க்கட்சிகள் இப்படித்தான் பேச வேண்டும் என்பதைக் கொஞ்சம் மறந்து, ஆக்கபூர்வமான கருத்துக்களை எடுத்துச்சொல்லும்போது, ஆளும் கட்சியைச் சேர்ந்தவர்கள் நிச்சயமாக அவைகளை வரவேற்பார்கள் என்று நான் நம்புகிறேன். இங்கே சத்துணவைப்பற்றிச் சொன்னார்கள். பல மாண்புமிகு உறுப்பினர்கள் அதைப்பற்றிக் கருத்துக்களைச் சொன்ன காரணத்தினால், நான் அதிலே திரும்பத் திரும்ப கருத்துக்களை எடுத்துச்சொல்ல விரும்பவில்லை. ஆனால் சத்துணவின் மூலம் இந்த மாணவர்களுக்கு எப்படிப்பட்ட பலன்கள் கிடைக்கின்றன என்பதை ஆளுநர் அவர்களின் உரையிலே குறிப்பிடும்போது, 'சிறந்த முறையிலே கல்வி கற்பிக்கத்தக்க வகையில், நல்ல கல்வியும், நல்ல உடல் நலமும் உள்ள குழந்தைகளைக் கொண்ட புதிய தலைமுறையை உருவாக்குவதால், இந்த மாநிலம் இத்திட்டத்தினால்

பலனடையும்' என்று சொல்லியிருக்கிறார்கள். அந்தச் சிறந்த கல்வி உண்மையிலே இந்த நாட்டு மக்களுக்கு, இந்த நாட்டு மாணவர்களுக்குக் கிடைக்கிறதா என்பதுதான் இங்கே பிரச்சினையாக இருக்கிறது. ஆளும் கட்சியைச் சேர்ந்த மாண்புமிகு உறுப்பினர் திரு. இராஜா அவர்கள் கூட பேசும்போது வேதனையோடு ஒரு கருத்தைச் சொன்னார்கள். மாணவர்களுக்கு நல்ல கல்வி கிடைக்கவில்லை என்று சொல்லி வருத்தப்பட்டார்கள். ஆகவே, ஆளுநர் அவர்கள் உரையிலே இந்த நன்மைகள் இருக்கின்றன என்று குறிப்பிடப்பட்டிருந்தாலும், ஆளும் கட்சிக்காரர்கள் கூட உணரக்கூடிய அளவுக்கு நல்ல கல்வி இன்றையதினம் மாணவர்களுக்குக் கிடைக்கவில்லை என்பதை நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். மாண்புமிகு உறுப்பினர் திரு. முத்துசாமி அவர்கள் சத்துணவு பற்றிச் சொல்லும்போது ஒன்றைச் சொன்னார்கள். பக்கத்து மாநிலத்திலே 15 நாட்களுக்கு முன்பு வந்திருக்கக் கூடிய அரசு அறிவித்திருக்கிறதே என்று சொன்னார்கள். அதை இந்து பத்திரிகையிலே விளம்பரமாகக் கூட கொடுத்திருப்பதை நான்கூட பார்த்தேன். "Midday Meals Scheme has been modified and a new arrangement evolved to supply free nutritious food to school children, consisting of bread and milk"

என்று சொல்லி அவர்கள் சத்துணவுக்கு பாலையும் ரொட்டியையும் கொடுக்க இருக்கிறார்கள் என்று சொல்லிவிட்டு ஒரு அருமையான கருத்தையும் சொல்லியிருக்கிறார்கள். This avoids schools being turned into kitchens. பள்ளிக்கூடங்கள் சமையற்கூடங்களாக இருப்பதை இதனால் தவிர்க்க முடியும் என்றும் சொல்லியிருக்கிறார்கள். ஆகவே, இன்றையதினம் புதிய அரசாக இருந்தாலும், தெளிவோடுதான் அவர்கள் இருக்கிறார்கள். ஒருவேளை நம்முடைய நாட்டிலே இருக்கும் நிலைமைகளை எண்ணிப்பார்த்து ஒரு புதிய அனுபவத்தை அவர்கள் பெற்றிருக்கிறார்களோ என்று கூட எண்ணும் அளவுக்கு நிலைமை இருக்கிறது பக்கத்து மாநிலத்திலே என்பதை நான் சொல்லிக்கொள்கிறேன். இதைச் சொல்லுகின்ற காரணத்தினாலே இதை எதிர்க்கின்றோம் என்று இந்த அரசு எடுத்துக்கொள்ளக்கூடாது. எது இந்த நாட்டுக்கு நல்லது, எதிலே சத்துணவு இருக்கிறது, எது எளிதான நடைமுறையாக இருக்கிறது என்று இந்த அரசு சிந்திக்க வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன். அதைப்போலவே, மாண்புமிகு உறுப்பினர் திரு. எ. ஆர். தாமோதரன் அவர்கள் பேசும்போது ஒன்றைச் சொன்னார்கள். 112 கோடி ரூபாய் இந்த ஆண்டு இதற்காகச் செலவிடுகிறோம், இன்னும் இரண்டு ஆண்டுகள் கழித்து இது 150 கோடி ரூபாயாகக் கூட மாறலாம். ஆனால் நம்முடைய எதிர்காலத் திட்டங்கள் இதனால் எவ்வளவு பாதிக்கப்படுகின்றன என்று சொன்னார்; அதிலே திராவிட முன்னேற்றக் கழகம் அவருடைய கருத்தைத்தான் கொண்டிருக்கிறது. சத்துணவு போடும் அதேநேரத்தில்



பொருளாதார அடிப்படையிலே எதிர்காலத் திட்டங்கள் [illegible] திட்டங்களை வரவேண்டும், ஆனால் அவையும் [illegible] தவறிவிடுகின்றன என்பதையும் இந்த நேரத்திலே சுட்டிக்காட்ட நான் கடமைப்பட்டிருக்கிறேன்.

குடும்பத்திலே ஒருவருக்கு வேலை, ஒருவருக்கு வேலை என்று சொல்லியிருக்கிறார்கள். ஆனால் அதேநேரத்தில் அந்தத் திட்டம் குறித்த அறிவிப்பைப் பாராட்டுகிறோம். அதேநேரத்தில் நடைமுறையிலே எத்தனை திட்டங்களை இந்த அரசு அறிவித்திருக்கிறது என்பதையும் பார்க்க வேண்டும். ஏழை வெளியவர்கள் அறிவிப்புக்களிலே மயங்கிவிடுகிறார்கள் என்பதற்காக இந்த அறிவிப்புக்களை இந்த அரசு கொடுப்பதிலே எங்களுக்கு ஆட்சேபனை இல்லை. தேர்தல் நேரத்திலே ஒரு திட்டம் சொல்லப்பட்டது. தமிழ் நாட்டிலே கர்ப்பிணிகளாக இருப்பவர்கள் சத்துணவு பெறுவதற்காக அவர்களுக்கு 7-வது மாதத்திலிருந்து 10-வது மாதம் வரை 150 ரூபாய் கொடுக்கப்படும் என்று சொல்லப்பட்டது. ஆனால் அந்தத் திட்டம் எங்கே இருக்கிறது? மதுரை மாவட்டத்திலே கொட்டாம்பட்டியிலே இந்தத் திட்டம் இருக்கிறதே தவிர, தமிழ் நாடு முழுவதும் இது வந்துவிட்டதா? வறுமைக் கோட்டுக்குக் கீழே இருக்கும் ஒவ்வொரு கர்ப்பிணிப் பெண்ணுக்கும் இந்த நாட்டிலே 150 ரூபாய் கொடுக்கப்படுகிறதா? இவைகளைத்தான் நாங்கள் சுட்டிக் காட்டுகிறோம். திட்டங்களை அறிவிக்கிறார்கள். அந்தத் திட்டங்கள் அறிவிப்போடு நின்றுவிடுகின்றனவே தவிர, நடைமுறையிலே அவைகள் அமுல்படுத்தப்படவில்லை என்பதை இந்த நேரத்திலே நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

சத்துணவுத் திட்டத்தைப்பற்றிச் சொன்னார்கள். சத்துணவுத் திட்டத்தினாலும் இந்த நாட்டிலே பசியே இல்லை என்று சொல்ல நாங்கள் தயாராக இல்லை. ஆனால் நாட்டு மக்களுக்கு எந்த அளவுக்கு இந்தப் பலன்கள் கிடைத்திருக்கிறதோ அதைவிட அதிகப்படியான பலன்கள் ஆளும் கட்சிக்காரர்களுக்கு கிடைத்திருக்கின்றன என்று சொல்லுவதேயே மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள் ஆதாரம் உண்டா என்று கேட்கப்பட்டது. பல ஆதாரங்கள் என்னிடத்திலே இருக்கின்றன. உதாரணத்திற்கு ஒன்றை நான் சொல்கிறேன். சத்துணவுத் திட்டத்திலே ஒரு குறிப்பிட்ட ஒன்றியத்திலே—அது எந்த ஒன்றியமாகக்கூட இருந்தாலும்—ஆளும் கட்சிக்காரர்கள் சொல்லுகின்றவர்களுக்குத்தான் வேலை கொடுக்கப்பட வேண்டும் என்று இருக்கிறது. [illegible] இந்த அளவுக்கு [illegible] என்று அவர்களுக்குக் கொடுக்க வேண்டும் என்று [illegible] குறிப்பாக [illegible] ஒன்றியத்திலே

எப்படி நடந்திருக்கிறது என்பதை இங்கே சொல்லுவது என்னுடைய கடமை. இதை நான் ஒரு எடுத்துக்காட்டாகச் சொல்லுகின்றேன். அது தன்னிறைவுத் திட்டம் மட்டுமல்ல . . .

(மாண்புமிகு மேலவைத் தலைவர் தலைமை)

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: தன்னிறைவுத் திட்டத்திலே ஏதோ தவறு நடந்திருப்பதாக மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சுட்டிக்காட்டிக் கொண்டிருக்கிறார்கள். மேலும் ஆளும் கட்சிக்காரர்களுக்குத்தான் வேலைகள் கொடுக்கப்பட வேண்டும் என்று கூறப்பட்டதாகவும் ஒரு குற்றச்சாட்டினை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தெரிவிக்கின்றார்கள். ஆகவே, தன்னிறைவுத் திட்டத்தைப் பொறுத்த அளவிலே, தவறு நடந்திருந்தால், எங்கே தவறு நடந்திருக்கிறது என்று ஆதாரத்துடன் நிரூபிக்க வேண்டும். அப்படி இல்லாமல், போகிறபோக்கிலே ஏதாவது சொல்லிவிட்டுப் போவது, அது ஏதாவது தினசரியிலே வரவேண்டும் என்று அரசியல் லாபம் கருதி சில செய்திகளை இந்த மன்றத்திலே சொல்ல வேண்டுமென்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் நினைக்கமாட்டார்கள் என்று நான் நினைக்கிறேன். எனவே, அதைப்பற்றி ஆதாரத்தோடு அவர்கள் எடுத்துச்சொன்னால் உரிய நடவடிக்கை எடுக்கத் தயாராக இருக்கிறோம்.

திரு. ஆற்காடு நா. வீராசாமி: நான் என்ன சொன்னேன் என்பதைக் கூட மாண்புமிகு அமைச்சர் அவர்கள் புரிந்துகொள்ளாமல்—இப்போதுதான் வந்து கொண்டே இருப்பதால்—அரைகுறையாகக் கேட்டுக்கொண்டிருக்கிறார்கள் என்று நான் நினைக்கிறேன். ஆளும் கட்சிக்காரர்கள் சொல்கின்றவர்களுக்குத் தான் அந்த வேலைகள் ஒப்படைக்கப்படுகின்றன. அதற்கு ஆதாரம் இல்லாமல் இல்லை. ஆதாரத்தோடு சொல்கிறேன். ஆற்காடு பஞ்சாயத்து யூனியன், தன்னிறைவுத் திட்டம் என்று மட்டுமல்ல. அந்தப் பஞ்சாயத்து யூனியனிலே வேறு எந்த வேலையானாலும், ஆளும் கட்சிக்காரர்கள் சொன்னால்தான், அங்கே அவர்களுக்கு வேலை கிடைக்கிறது.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: நான் அதை மறுக்கிறேன். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இதை ஒரு குற்றச்சாட்டாகக் கூறிக் கொண்டிருக்கிறார்கள். நான் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறியதைப் புரிந்துகொள்ளவில்லை என்றும் கூட சொன்னார்கள். எனக்கு அந்த அளவுக்குக் கூட அறிவு இல்லாமல் இருக்கலாம். நான் இல்லை என்று சொல்லவில்லை. ஏனென்றால் அவர்கள் சொல்லக்கூடிய அழகான கருத்துக்கள் என்னுடைய மூளைக்கு எட்டாமல் கூடப் போயிருக்கலாம். ஆனால் நான் அவர்களைக் கேட்டுக்கொள்வது ஆளும் கட்சிக்காரர்கள்தான் அல்லது ஆளும் கட்சிக்காரர்கள் சொல்லக்கூடியவர்களுக்குத்தான் இந்த வேலைகள் என்பதற்கு



என்ன ஆதாரம்? ஏனென்றால் அவைகள் நிரூபிக்கப்பட வேண்டும். இல்லாமல் இங்கே சட்டமன்றத்திலே கிடைக்கும் காலத்தை வீணாக்கிக்கொண்டிருப்பது என்பது வேண்டாத வேலை. தயவுசெய்து அப்படிப்பட்ட நிலைமைகளை உருவாக்க வேண்டாம் என்று மாண்புமிகு உறுப்பினர் அவர்களைக் கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. கா. இராசா முகமது: மாண்புமிகு உறுப்பினர் திரு. இராதா அவர்கள் இது தொடர்பாக ஒரு கருத்தைச் சொன்னார்கள். இப்போது கான்ட்ராக்டர்களாக இருப்பவர்களிலே பலர் காங்கிரஸ் கட்சியோடு தொடர்புடையவர்கள். அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தோடு தொடர்புகொண்டிருக்கலாம். அடிப்படையில் பார்த்தால், எந்த ஒரு கான்ட்ராக்டருக்கும் ஆட்சி மாறிவிட்டது என்பதற்காக அன்று எந்தக் கட்சியைச் சார்ந்திருந்தாரோ அந்தக் கட்சியைவிட்டுப் போனார் என்றோ, அவர் அந்தத் தொழிலை விட்டுவிட்டார் என்றோ இல்லை. அவர்கள்தான் தொடர்ந்து சட்டவிதிகளின்படி செய்து கொண்டிருக்கிறார்கள். ஆனால் மாண்புமிகு உறுப்பினர் குற்றம் சாட்டுகின்றபோது, இன்னார் சொல்லி இன்னாருக்குத் தகுதி இல்லாமலேயே அல்லது அரசியல் செல்வாக்கு பயன் படுத்தப்பட்டு இப்படிக் கொடுத்துவிட்டார்கள் என்று சொன்னால்தான், திருத்திக்கொள்வதற்குக்கூட நன்றாக இருக்கும் என்பதற்காகத்தான் அந்தக் கருத்தைச் சொன்னேன்.

திரு. ஆற்காடு நா. வீராசாமி: மாண்புமிகு தலைவர் அவர்களே, இந்த அவையினுடைய நேரத்தை நான் வீணாக்க விரும்புபவனும் அல்ல, ஆதாரம் இல்லாமல் சொல்லுபவனும் அல்ல. ஆற்காடு பஞ்சாயத்து யூனியன் டெண்டர் தேதி 18—1—1983. மாலை 3 மணிவரைதான் டெண்டர் கோரப்பட்டது. சின்னங்குட்டிச்சாலை பாலம் கட்டும் வேலை 69 ஆயிரம் ரூபாய். கத்தியாவாடி-திருப்பாலை வேலை 73,000 ஆயிரம் ரூபாய். இராமபுரம் சாலையில் பைப் கல்வெட் கட்டும் வேலை 45,000 ரூபாய். இராமபுரம் சாலையிலே பாலம் கட்டும் வேலை 73,000 ரூபாய். இராமபுரம் சாலையிலே இன்னொரு பாலம் கட்டுவதற்கு 82,000 ரூபாய். பாப்பேரி சாலை பாலம் கட்டும் வேலை 89,000 ரூபாய். தென் நந்தியாலம்-மாங்குப்பம் இந்த சாலையிலே பாலம் கட்ட 97,000 ரூபாய். டெண்டர் கோரப்பட்டது. ஆதாரம் என்னவென்று கேட்கிறார்கள். டெண்டர் சிங்கிள் டெண்டர் தான். நான் யாரைக் குறிப்பிட வேண்டாம் என்று இருந்தேனோ, அவர்கள் கேட்கின்ற காரணத்தினாலே, அதைக் குறிப்பிட வேண்டியிருக்கிறது. ஆளும் கட்சி சட்டமன்ற உறுப்பினர் அவர்கள் பி.டி.ஓ. அலுவலகத்திற்குச் சென்று, அத்தனை கான்ட்ராக்டர்கள் முன்னாலேயும், அந்த நடவடிக்கைகளைத் தடுத்து, இன்னாரைப் போடு

என்று சொல்லி, ஆளும் கட்சியைச் சேர்ந்த பழநி என்ற பிரமுகர் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களுக்கு அதுபற்றி தந்தி கொடுத்து எஞ்சினியர் களுக்கும் தந்தி கொடுத்து, இப்படி சிங்கிள் டெண்டர் கட்டாயப்படுத்தப்பட்டு போடப்பட்டிருக்கிறது; இந்த டெண்டரை ஏற்கக்கூடாது என்று அவர்கள் தந்தி கொடுத்ததற்குப் பிறகுதான் அனைத்துக் கட்சியைச் சார்ந்தவர்களும் முறையிட்டதற்குப் பிறகுதான் அந்த டெண்டர்கள் அத்தனையும் மறுபடியும் கேன்சல் செய்யப்பட்டிருக்கின்றன.

(பிற்பகல் 1-10)

இன்னும் ஒன்றைச் சொல்ல விரும்புகிறேன். இதில் ஒரு விசாரணை நடத்துவதாக இருந்தால், அந்த சிங்கிள் டெண்டர் யார் போட்டாரோ அவரிடமே 7% சதவீதம் கமிஷன் வாங்கிக் கொண்டுதான் அப்படிச் செய்யப் பட்டிருக்கிறது என்பதையும் நான் நிரூபிக்கத் தயாராக இருக்கிறேன் என்பதையும் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: தயவுசெய்து மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குற்றச்சாட்டுகளையும் குறைகளையும் எடுத்துச் சொல்வதை குறை கூறவில்லை. அந்தத் துறையில் தவறுகளே நடைபெறவில்லை என்று நான் வாதாடவும் தயாராக இல்லை. ஆனால் தவறுகள் நடந்திருந்தால், அவற்றைத் தகுந்த ஆதாரங்களோடு சுட்டிக்காட்ட வேண்டியது எதிர்க் கட்சியின் பொறுப்பு என்பதால், அதை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சரிவரச் செய்ய வேண்டும் என்றுதான் கேட்டுக் கொள்ள விரும்புகிறேன். சிங்கிள் டெண்டர் கோரக் கூடாது என்று எந்தக் காண்ட்ராக்ட் விதியுமில்லை. சிங்கிள் டெண்டர் கோரலாம். ஏனென்றால் வேறு ஒப்பந்தக்காரர்களே வரவில்லை என்றால், ஒருவர் மட்டும் ஒப்பந்தம் கொடுத்திருக்கிறார் என்றால், அது சிங்கிள் டெண்டர் என்றுதான் ஆகும். ஆனால் தயவுசெய்து குற்றச்சாட்டுகளைச் சொல்லுகிறபோது, ஆதாரங்களோடு பேச வேண்டும். தந்தி கொடுத்த பிறகு, இந்தத் தகவல்கள் மாவட்ட ஆட்சித் தலைவருக்குப் போன பிறகு, இந்த வேலைகள் எல்லாம் 'கேன்செல்' செய்யப்பட்டிருக்கின்றன என்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிடுகிறார். அதற்காவது அவரிடம் ஆதாரம் இருக்கிறதா என்றுதான் கேட்கிறேன். அப்படி ஆதாரம் இருந்தால், தயவு செய்து அவைகளை மாமன்றத்தில் ஒப்படைக்க வேண்டும். அப்படிப்பட்ட ஆதாரம் எதுமில்லாமல் பேசிக் கொண்டிருப்பது சரியாக இருக்க முடியாது என்பதைத்தான் மீண்டும் மீண்டும் தெரிவிக்க விரும்புகிறேன்.

திரு. ஆற்காடு நா. வீராசாமி: தலைவர் அவர்களே, ஏதோ அமைச்சர் அவர்கள்தான் எல்லாம் தெரிந்தவரைப் போலப் பேசுவது என்பது தன்மை [illegible]





மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: அதைத்தான் நான் முதலிலேயே சொன்னேன். நான் எல்லா விவரமும் தெரிந்து பேசவில்லை. மாண்புமிகு உறுப்பினர்தான் எல்லா விவரங்களும் தெரிந்து பேசுகிறார் . . .

மாண்புமிகு மேலவைத் தலைவர்: ஏது இது பெரிய போராட்டமாகப் போய்க் கொண்டிருக்கிறதே; இது விவாதமாக இருந்தால், அவையின் நேரமும் மிச்சப்படும். ஒரு முடிவுக்கும் வர முடியும். அது இல்லை என்றால் சரியாக இருக்காதே.

திரு. ஆற்காடு நா. வீராசாமி: ஆளும் கட்சியைச் சார்ந்தவர்களே தந்தி கொடுத்தார்கள். உடனே மாவட்ட ஆட்சித் தலைவர் அதனை 'கேன்செல்' செய்திருக்கிறார்கள். நேற்றையதினம் நான் என்னுடைய ஊருக்குச் சென்ற போது, அங்கே உள்ள அத்தனை பேரும் என்னிடம் வந்து . . .

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: மாண்புமிகு தலைவர் அவர்களே, இத்தகைய குற்றச்சாட்டுகளைத்தான் தாங்கள் அனுமதிக்கக் கூடாது என்று கேட்டுக்கொள்ள விரும்புகிறேன். காரணம் ஆளும் கட்சியைச் சார்ந்தவர்களே தந்தி கொடுத்திருக்கிறார்கள் என்று சொல்லுகிறார். பழனி என்பவர் தந்தி கொடுத்திருப்பதாகச் சொல்லுகிறார். அப்படிக் கொடுத்திருந்தால், அதை ஆதாரபூர்வமாக இங்கே காட்டலாம். அதை விட்டுவிட்டு ஆளும் கட்சிக் காரர்கள் என்று சொல்லிவிட்டால், நாம் உடனே அனுமதித்துவிடுவோம், இந்த மன்றம் அனுமதித்து விடும் என்ற எண்ணத்தின் அடிப்படையில் எந்தக் குற்றச்சாட்டையும் சொல்லுவது என்பது சரியாக இருக்க முடியாது என்பதைத்தான் குறிப்பிட விரும்புகிறேன்.

திரு. ஆற்காடு நா. வீராசாமி: நீங்கள்தான் அரசாங்கத்தை நடத்து கிறீர்கள். தந்தியை நான் போய் புதிதாக நாளைக்கு மாவட்ட ஆட்சித் தலைவருக்குக் கொடுக்க முடியாது. ஏற்கெனவே கொடுத்த தந்தி இருக்கிறது. நீங்கள் அதிகாரத்தில் இருப்பவர்கள் என்ன செய்யவேண்டும்? மாவட்ட ஆட்சித் தலைவரைக் கூப்பிட்டு எங்கே தந்தி என்று கேட்க வேண்டும். இல்லையென்று சொன்னால் . . .

மாண்புமிகு திரு. இராம. வீரப்பன்: மாண்புமிகு தலைவர் அவர்களே, ஒரு பெரிய குறை அல்லது குற்றம் நடந்துவிட்டதைச் சொல்வதற்காக மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் முயற்சி எடுத்துக்கொண்டு அவைக்குத் தகவலைச் சொல்லிக்கொண்டிருக்கிறார்கள். அதில் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் குறுக்கிட்டு ஒருவேளை எங்காவது தவறு நடந்திருந்தால்—தவறு நடக்கலாம், அதைச் சொன்னால், சுட்டிக்காட்டினால், ஆதாரத்தோடு சொன்னால்—தீர்த்துக்கொள்ள முடியும் என்று அமைச்சர் அவர்கள் சொல்லுகிறார். ஆனால் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள்—அப்படி ஒரு தவறு

நடக்க ஏற்பாடு நடந்தபோது, ஆளும் கட்சியைச் சார்ந்தவர்களே தலையிட்டு, அதைத் தடுத்து நிறுத்தியிருக்கிறார்கள் என்று சொன்னார்கள். இப்படி அது முடிவடைந்துவிட்ட பிறகு, ஆளும் கட்சித் தரப்பிலேயே தவறுகள் திருத்தப் பட்டுவிட்டன. தவறுகள் நடக்கவிடாமல் தடுத்து நிறுத்தப்பட்டுவிட்டன என்பதற்குப் பிறகும் எந்தக் குற்றச்சாட்டையோ யாரையோ மனதில் நினைத்துக்கொண்டு யார் மீதோ பழி சுமத்த வேண்டும் என்று நினைத்துக் கொண்டு அவையின் நேரத்தை வீணாக்குவது என்பது நல்லதல்ல என்பதை மட்டும் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

திரு. ஆற்காடு நா. வீராசாமி: மறைக்க வேண்டும் என்று நினைத் திருந்தால், நான் நிகழ்ச்சியின் ஒரு பகுதியை மட்டும் இங்கே எடுத்துச் சொல்லியிருக்க முடியும். ஆனால் இரண்டு பகுதிகளையும் இங்கே எடுத்துச் சொல்லுவதிலிருந்தே நாங்கள் எந்த எண்ணத்தோடு எடுத்துச் சொல்லு கிறோம் என்பதை மாண்புமிகு அமைச்சர்கள் உணர்ந்துகொள்ள வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, பருவ மழை பொய்த்துவிட்டது. குடிநீர் தட்டுப்பாடு ஏற்பட்டு விட்டது. குடிநீர் வடிகால் வாரியம், 1982 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதத்திலிருந்து 1983 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் வரை தமிழகத்தில் ரூ. 17.5 கோடி ரூபாய் செலவில் தமிழ் நாடு குடிநீர் வடிகால் வாரியத்தின் மூலம் சுமார் 75,000 துளைக் கிணறுகளையும் கைப் பம்புகளையும் போட்டிருக்கிறது என்ற விவரத்தை இங்கே ஆளுநர் உரையில் கொடுத்திருக்கிறார்கள். இதில் எனக்குக் கருத்து வேறுபாடில்லை. இப்படிப்பட்ட வறட்சியுள்ள நேரத்தில் தமிழ் நாட்டில் உள்ள எல்லா கிராமங்களுக்கும் குடி தண்ணீர் கொடுப்பதற்காக இத்தகைய முயற்சிகள் மேற்கொள்ளப்பட வேண்டும். ஆனால் உள்ளபடியே ரூ. 17.5 கோடி செலவில் 7,500 துளைக் கிணறுகளும் கைப் பம்புகளும் போட்டதால், எந்த எந்தப் பகுதிகள் பயன் பெற்றிருக்கின்றன என்ற விவரத்தைப் பார்க்க வேண்டும். எந்தெந்தப் பகுதிகளில் அவைகள் போடப் பட்டிருக்கின்றன என்று பார்க்க வேண்டும். நடந்து முடிந்த நாடாளுமன்ற இடைத் தேர்தலின்போது—பெரியகுளம் இடைத் தேர்தலின்போது— இந்தியன் எக்ஸ்பிரஸ் என்னும் ஆங்கில நாளேடு மிக அழகாக இதைச் சுட்டிக்காட்டியிருந்தது. பெரியகுளம் இடைத் தேர்தலில் 25 வேட்பாளர்கள் தான் போட்டியிட்டார்கள். ஆனாலும் 26-வது வேட்பாளராகக் குடிநீர் வடிகால் வாரியம் அங்கே இருந்தது என்று நாங்கள் நம்பும் வகையில் இருந்தது என்று செய்தி தந்திருந்தது. அந்த இடைத் தேர்தலின்போது தமிழ் நாடு குடிநீர் வடிகால் வாரியத்தின் மூலம் கிராமங்களிலெல்லாம் குடி தண்ணீருக்கு வகை செய்யப்பட்டது. எந்தெந்தக் கிராமத்தில் குடிநீர் இல்லையோ அங்கெல்லாம் தேர்தலின்போது மட்டும் போய் தண்ணீர்



கொடுப்பதற்கான நிலை வரக்கூடாது. எல்லோருக்கும் தண்ணீர் கிடைக்க வேண்டும் என்ற அடிப்படையில்தான் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும். அதைவிட்டு தேர்தல் வந்தால்தான் குடிநீர் கிடைக்கும் என்ற நிலை ஏற்படுவது என்பது ஒரு நாட்டுக்கு நல்லதல்ல என்பதைத் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: இந்தியன் எக்ஸ்பிரஸ் பத்திரிகையில் எல்லாம் எழுதுவதை எடுத்துக் கொண்டு மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பேசுவது நல்லதல்ல. அது அவர்களின் கருத்து. அவ்வளவுதான். 26-வது வேட்பாளராக குடிநீர் வடிகால் வாரியம் அங்கே போட்டியிட்டது என்று சொல்லுவதில் பொருள் இல்லை. "ஆன் கோயிங் ஸ்கீம்" என்று சில இருக்கின்றன. அதாவது தொடர்ந்து நடைபெற்றுக் கொண்டிருக்கும் ஸ்கீம்கள் இருக்கின்றன. அவைகளைத் தொடர்ந்து செய்து கொண்டே இருக்கிறோம். மாண்புமிகு உறுப்பினரைப் போன்றவர்கள் எங்கள் ஊருக்குக் குடிதண்ணீர் வேண்டும் என்று கேட்டால், அதையும் தருகிறோம். இவைகளையெல்லாம் ஏதோ தேர்தல் நடக்கிறது என்ற காரணத்திற்காகச் செய்வதில்லை. 'ஆன் கோயிங் ஸ்கீம்' என்ற அடிப்படையில் சிலவற்றைச் செய்து கொண்டே இருக்கிறோம். 1985 ஆம் ஆண்டுக்குள்—அதாவது 6-வது ஐந்தாண்டு திட்டத்திற்குள் எல்லாக் கிராமங்களுக்கும் தண்ணீர் கொடுக்க வேண்டும் என்பது மத்திய அரசின் விருப்பம். அதுதான் இந்த அரசின் கொள்கையுமாகும். எனவே எங்கே துளைக் கிணறுகள் போட்டாலும், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் வரவேற்க வேண்டுமே தவிர, தேர்தலுக்காகப் போடுகிறார்கள் என்று கருதக்கூடாது. எனவேதான் அதை நான் மீண்டும் சொல்லுகிறேன். அது ஒரு தொடர்ச்சியாக நடைபெற்றுக் கொண்டிருக்கிற திட்டம். தொடர்ச்சியாக நடைபெற்றுக் கொண்டிருக்கும் முயற்சி என்பதை மீண்டும் தெளிவுபடுத்த விரும்புகிறேன்.

(மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ். ஆர். இராதா ஏதோ சொல்ல எழுந்தார்.)

மாண்புமிகு மேலவைத் தலைவர்: மாண்புமிகு அமைச்சர்களே உறுப்பினர் திரு. ஆற்காடு வீராசாமி அவர்களுக்குப் பதில் சொல்லிக் கொண்டிருக் கிறார்கள். எனவே ஆளும் கட்சியில் இருப்பவர்கள் சும்மா இருந்தாலே போதும்.

திரு. ஆற்காடு நா. வீராசாமி: தேர்தல் நேரத்தில் குடிதண்ணீர் கொடுப்பதைக்கூட நான் வரவேற்கிறேன். ஆனால் அந்த இடத்தில் மட்டும் தான் போடுவது என்ற நிலை இருக்கக்கூடாது. எல்லா இடங்களிலும்

பெறுகிறோம் என்றால் சரி. வட ஆற்காடு மாவட்டத்தைப் பொறுத்த வரையில், எல்லாத் தாலுக்காக்களிலும் குடிதண்ணீர் கஷ்டம் இருக்கிறது என்பதை நேரில் போய்ப் பார்த்தேன். தமிழ் நாடு குடிநீர் வடிகால் வாரியத்தின் தலைவரே வட ஆற்காடு மாவட்டத்தில்தான் இருக்கிறார். அந்தத் தலைவரை அணுகிக் கேட்டால், பணம் இல்லை என்று சொல்லுகிற நிலைதான் இருக்கிறதே தவிர, குடிதண்ணீர் தருகிறேன் என்று சொல்லுகிற நிலை இல்லை என்பதை மட்டும் நான் நினைவுபடுத்த விரும்புகிறேன். ஆனால் திருச்செந்தூருக்குப் போனால், அங்கே எந்த அளவுக்குக் குடிதண்ணீர் வசதி செய்து தரப்படுகிறது என்பதை நான் நேரிலேயே போய்ப் பார்த்தேன். அப்படிப்பட்ட நிலைதான் இருக்கக்கூடாது. திருச்செந்தூரை நினைவில் வைத்துக்கொண்டு, காரியங்களைச் செய்யக்கூடாது என்பதைத் தான் சொல்ல விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்:** மாண்புமிகு மேலவைத் தலைவர் அவர்களே. திருச்செந்தூரிலே பார்த்தேன் குடிதண்ணீர் கொடுக்கிறார்கள் என்று சொன்னார். திருச்செந்தூரிலே ஏற்கெனவே திட்டம் போட்டிருக்கிறார்கள். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் நினைப்பது போல் இல்லை. That is on going scheme. ஏற்கெனவே எல்லா கிராமங்களுக்கும் குடிதண்ணீர் கொடுப்பதற்காக—அதுவும் ஐந்து ஆண்டுத் திட்ட காலத்திற்குள்ளாகக் கொடுப்பதற்கு என்று—ரூ. 25 கோடிதான் மத்திய அரசு கொடுத்திருக்கிறது. மேலும் 55 கோடி வேண்டும் என்று மத்திய அரசோடு நாம் வாதாடிக் கொண்டிருக்கிறோம். தற்போது எல்லா இடங்களுக்கும் குடிதண்ணீர் கொடுத்துக் கொண்டிருக்கிறோம். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிடுவதைப் போல், ஏதாவது கிராமத்திற்கு வரவில்லை என்றால், அதைப்பற்றி சம்பந்தப்பட்ட அமைச்சர் அவர்களிடம் சொல்லலாம். வட ஆற்காடு மாவட்டத்தைச் சேர்ந்தவர்தான் தமிழ் நாடு குடிநீர் வடிகால் வாரியத்தின் தலைவராகவே இருக்கிறார். அவரிடம்கூடச் சொல்லலாம். எங்களால் ஆனதைச் செய்து கொண்டிருக்கிறோம். இன்னும் சொல்லப்போனால், அண்மையில் நடைபெற்ற மாநாட்டில் கலந்து கொண்டு பேசிய மத்திய அமைச்சர் திரு. பீஷ்மன் நாராயண் சிங் அவர்கள் தமிழகத்தை இந்த வகையில் மிகவும் பாராட்டியிருக்கிறார் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**மாண்புமிகு மேலவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. வீராசாமியின் அதிருஷ்டம் அனைத்து அமைச்சர்களும் இங்கே உட்கார்ந்து கொண்டு பதிலளிக்கும் வாய்ப்பு இருக்கிறது.



**திரு. ஆற்காடு நா. வீராசாமி:** நான்கூட எல்லா கிராமங்களுக்கும் குடிநீர் வசதி செய்து தரப்பட வேண்டும் என்றுதான் சொல்லுகிறேன். ஆளுநர் அவர்களின் உரையில் மிக அழகாக ஒன்றைக் குறிப்பிட்டிருக்கிறார்கள். அதற்காக நான் இந்த அரசைப் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். அதாவது "இம் மாநிலத்தில் தற்போது நிலவுகின்ற வறட்சிநிலை நமக்கு நினைவு தெரிகிற வரை—அதாவது நம்முடைய முதலமைச்சர் அவர்களுக்கு நினைவு தெரிகிற வரை அதாவது ஏறத்தாழ 60 ஆண்டுக்காலமாக—இல்லாத அளவுக்கு மிக மோசமான நிலையில் இருக்கிறது" என்று சுட்டிக்காட்டப்பட்டிருக்கிறது. ஆனால் இப்படி மிக மோசமான நிலையில் நாம் இருக்கிற போது, இந்த அரசு செய்ய வேண்டிய பணிகளை ஒழுங்காகச் செய்திருக்கிறதா என்பதை எண்ணிப் பார்க்க வேண்டும். அவைகளுக்குத் தேவையான துரித நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கின்றனவா? போர்க்கால அடிப்படையில் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கின்றனவா என்றால், இல்லை. மத்திய அமைச்சர்கள் பலமுறை சொன்னார்கள். தமிழ் நாட்டிலிருந்து இன்னும் அறிக்கை வரவில்லை. வறட்சிபற்றி அறிக்கை வரவில்லை என்று சொன்ன பிறகு, ஜனவரித் திங்கள் 24 ஆம் தேதிதான் இந்த அரசாங்கம் மத்திய அரசுக்கு தன்னுடைய அறிக்கையை அனுப்பியிருக்கிறது என்று சொன்னால், அதிலிருந்தே இந்த வறட்சியை நாம் எந்த அளவுக்கு அணுகுகிறோம் என்பது புரிகிறது. அதுமட்டுமல்ல. வட ஆற்காடு மாவட்டத்தில் ஒரு மூன்று வட்டங்களைத் தவிர, மற்ற எல்லா வட்டங்களிலும் கடுமையான வறட்சி காரணமாக மக்கள் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். ஆனால் அங்கே உள்ள மாவட்ட ஆட்சித் தலைவர் அரசுக்கு என்ன அறிக்கை அனுப்புகிறார்? எனக்கிருக்கிற வருத்தமெல்லாம் ரூ. 195 கோடி வறட்சி நிதி தேவை என்று அறிக்கை அனுப்பியிருக்கிறோம். அது தவறு. தமிழ் நாட்டில் இருக்கிற உண்மையான வறட்சியைப் போக்க மத்திய அரசிடம் இந்த அரசு இன்னும் உண்மை நிலையை எடுத்துச் சொல்லவில்லை. இங்கே இருக்கிற அதிகாரிகள் இங்கே இருக்கிற அமைச்சர்களுக்கோ அல்லது வேறு யாருக்கோ பயந்து உண்மையைக்கூட சொல்லப் பயப்படுகிறார்கள். வட ஆற்காடு மாவட்டத்தில் அநேகமாக எல்லா இடங்களிலும் குடிப்பதற்குக்கூட தண்ணீர் இல்லை. நாள்தோறும் அங்கே இருக்கிற மக்கள் அந்த மாவட்டத்தை விட்டு அங்கேயிருக்கிற கிராமங்களை விட்டு வெளியேறிக் கொண்டிருக்கிறார்கள். தினந்தோறும் சென்னைக்கு 100, 200 என்கிற அளவில் மக்கள் அந்த மாவட்டத்தை விட்டு வெளியேறிக் கொண்டிருக்கிறார்கள். வட ஆற்காடு மாவட்டத்தில் குறிப்பாக அரக்கோணம், ஆற்காடு, வாலாஜா ஆகிய மூன்று வட்டங்களிலும் உள்ள பொதுமக்களுக்கு இன்றைக்குக் குடிப்பதற்குக்கூட தண்ணீர் இல்லை. இந்த நிலைமைகளையெல்லாம் நன்கு தெரிந்திருக்கும் மாவட்ட ஆட்சித்

தலைவர் மாவட்டத்தை வறட்சி மாவட்டமாக அறிவிக்க வேண்டுமென்று சொல்லுகிறாரா என்றால், இல்லை. கேட்டால் வறட்சி இருக்கிறது. ஆனால் மாவட்டம் முழுவதையும் வறட்சி மாவட்டம் என்று அறிவித்துவிட்டால், அதற்கான பணத்திற்கு எங்கே போவது என்று சமாதானம் சொல்லுகிறாரே தவிர, வறட்சி இருக்கிறதா இல்லையா என்றால் வறட்சி இருக்கிறது. இந்த உண்மை நிலைமை அமைச்சர்களுக்குத் தெரிந்திருக்க வாய்ப்பு இருக்கும். இருந்தாலும் அவர் அப்படி அறிக்கை அனுப்புகிறாரா என்றால் இல்லை.

(பிற்பகல் 1-20)

நிச்சயமாக அதிகாரிகள் அரசுக்குத் தெரிவிக்க வேண்டும். எனவே அரசாங்க அதிகாரிகள் கொடுத்த தவறான தகவலின்பேரில் 195 கோடி ரூபாய் கேட்டிருக்கிறார்களோ என்று சந்தேகப்படுகிறேன். தமிழ் நாட்டிலுள்ள வறட்சி நிலைமையைப் பார்க்கும்போது, 300 கோடி ரூபாய் மத்திய அரசிடம் கேட்டாலும், திராவிட முன்னேற்றக் கழகம் அதை வரவேற்கும். அதற்காக மத்திய அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று வலியுறுத்தினால், அதற்கு திராவிட முன்னேற்றக் கழகம் ஆதரவு தரும். ஏனென்றால் வட ஆற்காடு, செங்கல்பட்டு, தென்னாற்காடு, தர்மபுரி, கோயம்புத்தூர் போன்ற மாவட்டங்களில் சுற்றுப்பயணம் செய்கின்ற நேரத்தில் அங்குள்ளவர்கள் கொடுக்கின்ற புகார் மனுக்களில் எல்லாம் தண்ணீர், குடிதண்ணீர் இல்லை என்பதுதான் இருக்கிறது. எதிர்க் கட்சியில் இருப்பவர்களிடம் புகார் மனுக்களை அளிக்கிறார்களே என்று கருதிவிடக்கூடாது. இந்த நிலைமைகளையெல்லாம் எண்ணிப் பார்க்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். உடனடியாக வட ஆற்காடு மாவட்ட ஆட்சித் தலைவரை அழைத்துப் பேசி, வட ஆற்காடு மாவட்டத்திலுள்ள அரக்கோணம், ஆற்காடு, வாலாஜா போன்ற தாலுக்காக்களை வறட்சிப் பகுதியாக அறிவிக்க வேண்டும். அங்கே கடன் வசூல் செய்யக் கூடாது. அங்கே இருங்கூர், செய்யாத்துவண்ணம், வரதராஜபுரம், வளையாத்தூர், பல்லவராயன்குளம், தாமரைப்பாக்கம் போன்ற கிராமங்களில் இருந்து பிழைக்க வழியில்லாமல், வேலையில்லாமல் மக்கள் சென்னைக்குக் குடிவந்து கொண்டிருக்கிறார்கள். இதனால் சென்னைக்கே கூட ஆபத்து வரலாம். ஆகவே உடனடியாக வறட்சி நிவாரணப் பணிகளை அரசாங்கம் மேற்கொள்ள வேண்டும் என்று இந்த நேரத்தில் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

மின் உற்பத்தியைப்பற்றிக் குறிப்பிட்டிருக்கிறார்கள் உண்மையிலேயே மின் உற்பத்தி பாதிக்கப்பட்டதற்குக் காரணம் ஒரு பக்கத்திலே கப்பல் இல்லை என்று சொல்லுகிறார்கள், ஒரு பக்கத்திலே நிலக்கரி இல்லையென்று சொல்லுகிறார்கள். காரணங்களைத்தான் சொல்லிக் கொண்டிருக்கிறோம்.





ஆஸ்திரேலியா நாட்டிலே தேவையான அளவிற்கு நிலக்கரி இருக்கிறது, உலகம் முழுவதற்கும் சப்ளை செய்ய வேண்டிய அளவிற்கு இருக்கிறது என்று விளம்பரம் செய்து கொண்டிருக்கிறார்கள். நம்மிடம் கப்பல் இல்லையென்றால், வாடகைக்குக் கப்பல் எடுத்து அதன்மூலம் கொண்டுவர முடியாதா? அங்கிருந்து கொண்டு வரக்கூடிய நிலக்கரியைப் பயன்படுத்தி அனல் மின்சார நிலையங்களில் மின் உற்பத்தியைச் செய்ய முடியாதா? மின்சார வாரியத்தில் திரு. அப்பாதுரை அவர்கள் சீஃப் என்ஜினியராக இருந்தபோது, ஆறு மாதங்களுக்குத் தேவையான நிலக்கரி எவ்வளவு என்பதையும், எந்தெந்த நீர்த்தேக்கத்தில் எவ்வளவு தண்ணீர் இருக்கிறது என்பதையும் முன்னெச்சரிக்கையாக அறிந்து கண்ணும் கருத்துமாகக் கண்காணித்து வந்தார். மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள் மின்சார இலாக்காவிலே பணியாற்றியவர்தான். இப்போது சொல்லுவதைப் போல, நாளைக்கு நிலக்கரி இல்லை என்று சொல்லக்கூடிய நிலை அப்போது இல்லை. இப்போது அப்படிச் சொல்லுவது நியாயம்தானா என்பதை எண்ணிப் பார்க்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

காரணங்களைக் காட்டி இன்றையதினம் மின்சாரக் கட்டணத்தை உயர்த்தப் போகிறோம் என்று சொல்லுகிறார்கள். எவ்வளவு உயர்த்தப் போகிறார்கள் என்று சொல்லியிருக்க வேண்டாமா? மின் கட்டணத்தை உயர்த்தப் போகிறோம் என்று அறிவிப்புச் செய்திருக்கிறோம் என்றால், யூனிட்டுக்கு எவ்வளவு. ஒரு பைசாவா, இரண்டு பைசாவா என்று தெரிவித்திருக்க வேண்டாமா? திராவிட முன்னேற்றக் கழக ஆட்சிக் காலத்திலே ஒரு பைசா உயர்த்தினோம். அப்போது போராட்டம் நடத்தினார்கள். போராட்டம் நடத்தியவர்களுக்கு ஆதரவு கொடுத்தார்கள். கம்யூனிஸ்ட் உறுப்பினர் சொன்னதைப் போல, அவர்களுடைய போராட்டத்தை ஊக்குவிக்க பண உதவிகூட செய்தார்கள். இன்றைக்கு மின்சாரக் கட்டணத்தை உயர்த்த வேண்டுமென்று சொல்லுகிறார்கள். அதிலே இரண்டு கருத்து கிடையாது. ஆனால் எவ்வளவு உயர்த்தப் போகிறார்கள்? விவசாயத்திற்கு எவ்வளவு, தொழிற்சாலைகளுக்கு எவ்வளவு, டொமஸ்டிக் சப்ளைக்கு எவ்வளவு என்று தெளிவாகச் சொல்ல வேண்டும். ஆனால் சொல்லவில்லை. இதெல்லாம் முடிந்த பிறகு உத்தரவு போடுவார்கள். இப்படிப்பட்ட நிலைமை இருக்கக் கூடாது. மின்சாரக் கட்டணத்தை உயர்த்த வேண்டுமென்று சொல்லக்கூடிய நேரத்தில் பெரிய தொழிற்சாலைகளிலிருந்து எவ்வளவு பணம் மின்சார வாரியத்திற்கு வர வேண்டியிருக்கிறது? அதை முதலில் வசூல் செய்தார்களா? "மால்கோ" நிறுவனம் ஒன்பது கோடி ரூபாய்க்கு மேல் பாக்கி வைத்திருக்கிறது. அதை வசூலிக்க என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டது? ஸ்பிக் நிறுவனம் மின்சார வாரியத்திற்கு

[திரு. ஆற்காடு நா. வீராசாமி] [1983 ஜனவரி 31

எவ்வளவு பணம் கொடுக்க வேண்டும்? விவசாயி ஆயிரம் ரூபாய் கட்டாவிட்டால், மின் இணைப்பைத் துண்டிக்கிறோம் என்று சொல்லும்போது, பெரிய தொழிலதிபர்கள் கோடிக்கணக்கான ரூபாய் கட்டாமல் இருக்கும் போது, அவர்கள் மீது நடவடிக்கை எடுக்காமல், மின்சாரக் கட்டணத்தை உயர்த்தப் போகிறோம் என்று சொல்லுவது சரியான கொள்கையாக இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இதற்காக அரசாங்கத்திற்கு ஒரு யோசனையைச் சொல்லுகிறேன். எதிர்க் கட்சிகள் யோசனைகள் சொல்லுவதில்லை என்று வருத்தப்படுகிறார்கள். உண்மையிலேயே பணம் வேண்டுமென்றால், எனக்குத் தெரிந்த ஒன்றை அரசாங்கத்திற்குச் சொல்லுகிறேன். அரசாணை எம்.எஸ். எண் 31, நாள் 16—5—1981-ல் சாராயத் தொழிற்சாலைகள் நடத்துவது பற்றி, அதாவது பிளன்டிங் யூனிட் நடத்துவதுபற்றிச் சொல்லியிருக்கிறார்கள். பிளண்டிங் யூனிட்டில் ஒரு நாளைக்கு பத்து இலட்சம் பாட்டில்கள் தயாராகின்றன. ஒரு பாட்டிலுக்கு 29 பைசா இலாபம் வைத்துக்கொள்ளலாம் என்று உத்தரவிட்டிருக்கிறார்கள். மொத்தமாக விற்பனை செய்யும்போது, 51 பைசா இலாபம் வைத்துக்கொள்ளலாம் என்றும். சில்லறை செலவுகளுக்காக 20 பைசாவும் அனுமதித்திருக்கிறார்கள். ஒரு பாட்டிலுக்குக் கிட்டத்தட்ட மொத்தம் மூன்று ரூபாய் இலாபம் வருகிறது. ஒரு நாளைக்கு பத்து இலட்சம் பாட்டில்கள் விற்பனையாகின்றன என்றால், 30 இலட்சம் ரூபாய் இலாபம் வைத்துக்கொள்ளலாம் என்றும், சில்லறைச் செலவுகளுக்காக கொண்டிருக்கிறார்கள். தமிழகத்திலுள்ள ஒரு பத்துப் பேர் இந்தத் தொழிலில் கொள்ளையடித்துக் கொண்டிருக்கிறார்கள். இந்தத் தொழிலை அரசாங்கமே செய்யட்டும். அப்படிச் செய்தால், ஆண்டு ஒன்றுக்கு 108 கோடி ரூபாய் இலாபம் வரும். இதிலே எட்டு கோடி நிர்வாகச் செலவுகளுக்காகப் போனாலும் 100 கோடி ரூபாய் அரசாங்கத்திற்கு வருமானமாக வரும். இதனால் வரி போடாமல் வருமானத்தைப் பெருக்குவதற்கு வாய்ப்பு இருக்கிறது. இதை அரசு முயற்சி செய்து பார்க்க வேண்டும். யாரோ சிலருக்குப் போவதைவிட அந்தப் பணத்தை அரசாங்கத்திற்குக் கொண்டு சேர்ப்பதன் மூலமாக மக்களுக்குப் புதிதாக வரி போடுவதையும், மின்சாரக் கட்டணத்தை உயர்த்துவதையும் தவிர்க்க முடியும். அப்படித் தவிர்க்க வேண்டும் என்று கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இன்றைய தினம் அரிசி இல்லையென்று சொல்லியிருக்கிறார்கள். மாண்புமிகு சட்ட அமைச்சர் அவர்கள் சேலத்தில் பேசும்போது, ஆந்திராவிலிருந்து 40 ஆயிரம் டன் அரிசி வரும் என்று நம்பிக்கை தெரிவித்திருக்கிறார்கள். அப்படிச் சொல்லும்போது, ஆந்திராவிலிருந்து அரிசி வந்துவிடும் போலு இருக்கிறது என்று எண்ணி வியாபாரிகள் குறைந்த இலாபத்தில்



1983 ஜனவரி 31] [திரு. ஆற்காடு நா. வீராசாமி]

அரிசியை விற்பார்கள். அப்படி இல்லாமல் அரிசி கிடைக்காது என்றால் இருக்கின்ற அரிசியைப் பதுக்கி வைப்பார்கள். நிச்சயமாக மக்களுக்கு எடுத்துக் கொடுக்கக் கூடிய நிலையில் அவர்கள் இருக்கமாட்டார்கள். மக்களுக்கு அச்சமூட்டாமல் கொஞ்சம் ஆதரவு தருவது போல மாண்புமிகு சட்ட அமைச்சர் அவர்களுடைய பேச்சு அமைந்து விலைவாசியைக் கட்டுப் படுத்த உதவும் என்பதை இந்த நேரத்திலே தெரிவிக்கக் கடமைப் பட்டிருக்கிறேன். இந்த நிலைமையைப் பயன்படுத்தியே நாட்டிலே இருக்கக் கூடிய சில வியாபாரிகள் அரிசியைப் பதுக்கி வைத்துக்கொண்டு மூட்டைக்கு ஐம்பது ரூபாய், அறுபது ரூபாய் விலையேற்றி விற்கக்கூடிய நிலைமை இருக்கிறது. அதைத் தவிர்க்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

பருவ மழை பொய்த்துப் போனதால் நிலக்கரி, சிமெண்ட் போன்ற மூலப் பொருள்கள் கிடைக்காமலிருப்பது போன்ற இக்கட்டான நிலைமை அரசுக்கு ஏற்பட்டிருக்கிறது. அரசுக்கே இந்த நிலை என்று ஆளுநர் உரையிலே சொல்லியிருக்கிறார்கள். சிமெண்ட் கிடைக்கவில்லை, நிலக்கரி கிடைக்கவில்லை இந்த அரசாங்கத்திற்கு என்றால் வேடிக்கையாக இருக்கிறது. ஆனால் 82 ரூபாய் கொடுத்தால், வெளியே சிமெண்ட் கிடைக்கிறது. எப்படிக் கிடைக்கிறது? உற்பத்தியில்லை என்றால், ஆயிரம் ரூபாய் கொடுத்தாலும் சிமெண்ட் கிடைக்கவில்லை என்றால். அந்த நிலையை நாம் புரிந்து கொள்ள முடியும். ஆனால் 62 ரூபாய்க்கு சிமெண்ட் வாங்குங்கள், அதற்கு மேல் கொடுக்காதீர்கள் என்று பெரிய விளம்பரம் அரசாங்கத்தின் சார்பிலே கொடுக்கப்படுகிறது. 62 ரூபாயை எடுத்துக்கொண்டு போய் பொது விற்பனைக் கடையிலே சிமெண்ட் வாங்க முடியுமா என்றால், இல்லை. ஏன் இந்த நிலை? உற்பத்தி இல்லையென்றால், 82 ரூபாய் கொடுத்தால் மட்டும் கிடைக்கிறதே! இது அரசாங்கத்திற்குத் தெரியாதா? ஏன் அவர்கள் மீது நடவடிக்கை எடுக்கவில்லை? அவர்கள் எல்லாம் லைசென்ஸ் வாங்கிக் கொண்டுதானே சிமெண்ட் விற்பனை செய்கிறார்கள். அரசாங்கத்திற்கு நன்றாகத் தெரியும், 82 ரூபாய்க்கு விற்பதும், 90 ரூபாய்க்கு விற்பதும் நன்றாகத் தெரியும். எந்தக் காரணத்திற்காக அவர்கள் மீது நடவடிக்கை எடுக்காமல் இருக்கிறார்கள்? இது நல்லதல்ல. ஏற்கெனவே நடந்த சிமெண்ட் ஊழலைப்பற்றி கடந்த கூட்டத்தில் நான் எடுத்துச் சொன்னபோது, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுப்பேன் என்று சொன்னார்கள். என்ன நடவடிக்கை எடுத்தார் என்பது எனக்குத் தெரியாது. இப்போது 80 ரூபாய்க்கு விற்கிறார்கள்! எந்தக் கடை என்று குறிப்பிட்டுச் சொல்லவில்லை. எந்தெந்தக் கடைகளில் சிமெண்ட் விற்க வேண்டுமென்று சொல்லப்பட்டிருக்கிறதோ அந்தக் கடைகளில் எல்லாம் 80 ரூபாய்க்கு உள்நாட்டுச் சிமெண்டும் 90 ரூபாய்க்கு வெளிநாட்டுச் சிமெண்டும் விற்கக் கூடிய நிலை இருக்கிறது.

நடவடிக்கை எடுக்க வேண்டும், அல்லது சிமெண்ட் வியாபாரத்தையும்கூட அரசாங்கம் எடுத்து நடத்தலாம். அதிலே தவறு இல்லை. இதை தனியார் இடத்திலே கொடுத்து அவர்கள் கொள்ளை இலாபம் அடிக்க அரசாங்கம் துணையாக இருக்கக் கூடாது என்று எடுத்துக்காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

**மாண்புமிகு திரு. சு. திருநாவுக்கரசு :** தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினரின் கவனத்திற்கு ஒன்றைக் கொண்டுவர விரும்புகிறேன். மாண்புமிகு உறுப்பினர் முன்னர் பேசுகின்றபோது, லெவி மட்டும் அமுலில் இருந்தது. இப்போது மைய அரசு கொண்டு வந்த இரட்டை விலையின் காரணமாக. லெவி சிமெண்ட் ஒரு விலைக்கும், நான்-லெவி சிமெண்டை என்ன விலைக்கு வேண்டுமானாலும் வெளிச் சந்தையில் விற்கலாம் என்ற முறையில் அதற்கு ஒரு விலையும் இருக்கிறது. இரட்டை விலை காரணமாக லெவி சிமெண்ட் விலை குறைவாக இருக்கிறது. நான்-லெவி சிமெண்டின் விலை மார்க்கெட்டில் அதிகமாக இருக்கிறது. இந்த இரட்டை விலை தவிர்க்க முடியாததாக

(பிற்பகல் 1-30)

(மாண்புமிகு மேலவைத் தலைவர் தலைமை)

இருக்கிறது. ஆனால் ரூ. 62-க்கு மேலே வாங்காதீர்கள் என்று அரசாங்கம் விளம்பரம் செய்கிறது. அரசாங்கத்தினுடைய லெவி சிமெண்ட் விலை ரூபாய் 35. மற்ற பணிகளுக்கு வேண்டுமென்று சொன்னால், அதற்கு விலை ரூ. 62. ஆனால் அந்த ரூ. 62-க்கும் மேலே விற்கலாம் என்று யார் அதிகாரம் கொடுத்தார்கள் ? ரூ. 80-க்கு விற்கலாம் என்று இந்த அரசாங்கம் சொல்லியிருக்கிறதா ? இல்லையே. தமிழ் நாடு அரசாங்கம்கூட ரூ. 62-க்கு மேலே கொடுத்து வாங்காதீர்கள் என்று பொதுமக்களுக்கு அறிக்கை விட்டிருக்கிறது. அந்த ரூ. 62-க்கு மேலே யாராவது விற்றால், கடுமையான நடவடிக்கை எடுப்போம், அவர்களுக்கு தண்டனை என்று சொன்னால், யார் அந்த விலைக்கு விற்பார் ?

Thiru A. R. DAMODARAN : Sir, on a point of information. The Cement companies have sent a circular that non-levy cement can be sold at Rs. 74 a bag because of the use of generators for the production of cement. Therefore, there is no such rule that it should be sold only at Rs. 62. I wanted to clarify this.

**திரு. ஆற்காடு நா. வீராசாமி :** அது இந்த மின்சாரப் பற்றாக்குறை வந்ததற்கு முன்னாலே இருக்கலாம். இப்போதிருக்கின்ற நிலைமையைத்தான் நான் இப்போது சொல்கின்றேன். அரசாங்கம் விளம்பரம் செய்துள்ள அந்த



ரூ. 62-க்கு மேல் கொடுத்து வாங்காதீர்கள் என்பதை நிலைப்படுத்த வேண்டும். இல்லையென்றால் விலையையாவது குறையுங்கள். சட்டத்தில் என்ன விலை சொல்லப்பட்டிருக்கிறது. அதற்குட்பட்ட விலையில் விற்கச் செய்யுங்கள் என்றுதான் சொல்லிக்கொள்கிறேன்.

பின்தங்கிய பகுதிகளில் கடுமையான மின்சாரப் பற்றாக்குறை இருந்தாலும்கூட, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொல்லியிருப்பது, தொழில்கள் தொடக்கத்திலே இருந்தால், அந்தத் தொழில்களுக்கு முதல் ஐந்தாண்டுகளுக்கு மின் வெட்டு இராது என்று. நான் கேட்கிறேன். இங்கே அமைச்சர் அவர்களும் இருக்கிறார்கள். இந்த உரையை எழுதுவதற்கு முன்னாலே நாட்டினுடைய நிலைமை நமக்கு நன்றாகத் தெரியும். நான் கேட்கிறேன். தொழில்கள் வளரவேண்டுமென்ற ஆர்வத்திலே அரசு இப்படிச் சொல்வதை வரவேற்கிறேன். ஆனால் நாட்டிலே என்ன நிலைமை? இந்த அரசாங்கம் ஒரு திட்டத்தை அறிவித்து ஹோசூரிலே ஒரு தொழில் துறை அமைக்க மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அடிக்கல் நாட்டினார்கள். அங்கேயே சொன்னோம். நாம் ஐந்தாண்டு காலத்திற்கு மின்சாரத் தடை இருக்காது, மின்சார வெட்டு இந்தப் பகுதிக்கு வராது என்ற உத்தரவாதத்தை அளித்தோம்.

**மாண்புமிகு திரு. சு. திருநாவுக்கரசு :** மாண்புமிகு மேலவைத் தலைவர் அவர்களே, ஒரு தவறான தகவலைத் தருகின்றார்கள். அரசு அறிவித்தது உண்மைதான். ஐந்து தொழில்பேட்டைகளிலே வரும் தொழில்களுக்கு ஐந்து ஆண்டுகளுக்கு மின்வெட்டு இருக்காது என்று அறிவித்திருக்கிறோம். அது இப்போது உருவாக்கி இருக்கின்ற தொழிற்சாலைகளுக்குத் தானே தவிர, இதற்கு முன்னாலே வந்திருக்கின்ற தொழிற்பேட்டைகளுக்கு அல்ல. ஹோசூர், இராணிப்பேட்டை இந்த இரண்டு தொழில்பேட்டைகளும் ஏற்கெனவே வளர்ச்சியைப் பெற்றிருக்கின்றன. புதிய தொழில்கள் வந்திருக்கின்றன. ஆகவே இனி வர இருக்கின்ற தொழிற்சாலைகளிலே, அதிகமான தொழில்கள் வரவேண்டுமென்ற அடிப்படையிலே புதிய தொழில்களுக்கு இந்த உத்தரவாதத்தைக் கொடுத்திருக்கிறோம்.

**திரு. ஆற்காடு நா. வீராசாமி :** மாண்புமிகு மேலவைத் தலைவர் அவர்களே, பழைய தொழில்களுக்கு இல்லை என்று சொல்கின்றார்கள். இங்கே புதிய தொழில்கள் வரவேண்டுமென்பதற்காகத்தான் அந்த உத்தரவாதம் என்ற கருத்தைச் சொன்னார்கள். அதை நான் வரவேற்கிறேன். ஆனால் நடைமுறையிலே இருப்பதைச் சொல்லாமல் இருக்கிறார்கள். உதாரணத்திற்குச் சொல்கிறேன். நம்முடைய மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தொகுதியில், அந்த ஐந்து தொகுதிகளிலே புதுக்கோட்டையை

எடுத்துக்கொள்வோம். அங்கே மின்சார வெட்டு இருக்காது என்று உத்தரவாதத்தை அளிப்பதாக இருந்தால், அங்கே 24 மணி நேரம் மின்சாரம் இருக்க வேண்டும், கொடுக்க வேண்டும். இப்போது தமிழ் நாட்டிலே எந்தப் பகுதியிலே 24 மணி நேரம் அவர்களாலே மின்சாரம் கொடுக்க முடியும் என்ற உத்தரவாதத்தை அளிக்க முடியும்? நிலக்கரி இல்லை, நீர்த் தேக்கங்களிலே தண்ணீர் இல்லை, ஜெனரேட்டர் பவர் குறைந்திருக்கிறது. ஜெனரேஷன் இல்லை. ஆக அந்தச் சூழ்நிலையிலே மின்சாரம் கையிலே இல்லாமல் நாம் இந்தப் பகுதிகளுக்கெல்லாம் வாருங்கள், நாங்கள் மின்சாரம் தடை இல்லாமல் கொடுக்கிறோம் என்று சொன்னால், மக்கள் எப்படி நம்புவார்கள்? உண்மையைச் சொல்லுங்கள். இடைக்காலத்திலே கொஞ்சம் மின்சாரத் தடை உண்டு என்று சொல்லுங்கள். ஆனால் அதே நேரத்தில் உங்களுக்கு ஜெனரேட்டர் வேண்டுமா, நாங்கள் உதவி செய்கிறோம் என்று சொல்லுங்கள். அதை விட்டுவிட்டு ஒரு பகுதியிலே மின்சாரம் 35 சதவிகிதம் வெட்டு, சிறு தொழில்களுக்கு 60 சதவிகிதம் வெட்டு. ஆனால் புதிய தொழில்கள் ஆரம்பித்துத் தொடருங்கள், உங்களுக்கு மின்சார வெட்டு இல்லை என்று சொன்னால் இது ஏமாற்றுவது போல இருக்கிறது. அதை அரசாங்கம் தவிர்க்க வேண்டும்.

மாண்புமிகு மேலவைத் தலைவர்: தொடர்ந்து 35 நிமிடங்களாகப் பேசுகிறார்கள். முடிக்க வேண்டும்.

திரு. ஆற்காடு நா. வீராசாமி: இன்னும் ஒரு 15 நிமிடங்களில் முடித்து விடுகிறேன். தொழில் வளர்ச்சியைப்பற்றி இங்கே சொல்லியிருக்கிறார்கள். 60 ஆயிரம் டன் உற்பத்தித் திறன் உள்ள ஒரு வினர் ஆல்காலிக் பெனின் உற்பத்தி செய்யும் தொழிற்சாலைபற்றிச் சொல்லியிருக்கிறார்கள். 50 கோடி ரூபாய் செலவிலே சிட்கோ நிறுவனம் செய்ய மத்திய அரசு அனுமதி கொடுத்திருக்கிறது என்று சொல்லியிருக்கிறார்கள். மத்திய அரசு 50 கோடி ரூபாய் கொடுத்திருப்பதற்கு நன்றி. இந்த அரசும் அந்தத் திட்டத்தைக் கொண்டு வந்ததற்குப் பாராட்டுகிறேன். ஆனால் அந்தத் திட்டம் எப்போது நிறைவேற்றப்படும் என்பதைச் சொல்ல வேண்டும். இந்த அரசாங்கத்திலே சில தொழிற்சாலைகளை ஆரம்பிக்க வேண்டுமென்று நினைக்கிறார்கள். அதை நாங்கள் வரவேற்கிறோம். அந்தத் திட்டத்திற்கு அனுமதி கிடைக்கிறது. அதை நான் பாராட்டுகிறேன். அந்தத் திட்டம் எந்த அளவுக்கு இருக்கிறது? நடைமுறையிலே அது வேகமாகச் செயல்படுகிறதா? 1978ஆம் ஆண்டு ஆளுநர் அவர்கள் உரையிலே இதே அண்ணா திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில் மிக அழகாகச் சொன்னார்கள். காகிதம் செய்வோம், நல்ல காகிதம் செய்வோம்' என்று சொன்னார்கள்;



புரட்சித் தலைவர் ஆட்சியிலே ஒரு பெரிய திட்டம் வந்துவிட்டது. ரூ. 100 கோடியிலே காகித ஆலை என்று சொன்னார்கள். நான்கூட மகிழ்ச்சி அடைந்தேன். பரவாயில்லை. காகித ஆலை வந்தால், எங்களைப் போன்ற பத்திரிகைகளை நடத்துபவர்களுக்கு நல்லது என்று சந்தோஷப்பட்டேன். சட்டசபை உறுப்பினர்கள்கூட கனவு கண்டார்கள். அண்ணா அவர்கள் எங்களுடைய கனவிலே வந்தார்கள் 'அந்தத் தொழிலை எங்களுடைய தொகுதியிலேதான் ஆரம்பிக்க. வேண்டுமென்று சொன்னார் என்று சொன்னார்கள். பரவாயில்லை. எப்படியோ புகளூரில் அந்தத் திட்டம் உருவாக்கப்பட்டது. நான் கேட்கிறேன். 1978 ஆயிற்று, 1979 ஆயிற்று, 1980 ஆயிற்று, 1981 ஆயிற்று, 1982 ஆயிற்று இப்போது 1983லே நிற்கிறோம். அந்தத் திட்டம் என்னவாயிற்று? எப்போது அந்தக் காகிதம் உற்பத்தியாகப் போகிறது? பாரதியாருடைய கனவு அவரது நூற்றாண்டிலேயாவது வருமா? ஒரு ஐந்து ஆண்டுக் காலத்திலேயாவது அந்தத் தொழிற்சாலை வந்திருக்க வேண்டாமா? 100 கோடி ரூபாய் என்று இருந்தது, திடீரென்று 150 கோடி ரூபாய் என்று ஆயிற்று? இன்றையதினம் அதுவே 200 கோடி ரூபாய் திட்டமாக ஆகியிருக்கிறது. இன்னும் ஒன்று கேட்கிறேன். 200 கோடி ரூபாய்கூட செலவழிப்போம். ஆனால் அந்தத் திட்டம் என்றைக்கு வந்து காகிதம் கிடைக்கப் போகிறது? அதற்காக ஒரு கம்பெனியைத் தேர்ந்தெடுத்து, அந்தக் கம்பெனியிடத்தே இந்த வேலையை ஒப்படைத்தார்கள். அதற்கும் ஒரு கமிஷன் உண்டு. எந்தத் தொழிற்சாலையாக இருந்தாலும், தனியார் நிறுவனமாக இருந்தாலும், அல்லது கவர்ன்மெண்டாக இருந்தாலும்கூட டெக்னிகல் நோ-ஹௌ வாங்குவதற்கு, அப்படிப்பட்ட வேலைகளுக்குக் கமிஷன் கொடுப்பது உண்டு. ஆனால் இந்த அரசாங்கம் என்ன செய்திருக்கின்றது? அது வருந்தத்தக்க ஒன்று. யார் அந்த வேலையை எடுத்துக் கொள்கிறார்களோ அவர்களையே அந்த மில்லுக்கு, காகித ஆலைக்குத் தலைவராக ஆக்கியிருக்கிறார்கள்.

மாண்புமிகு திரு. சு. திருநாவுக்கரசு: மாண்புமிகு மேலவைத் தலைவர் அவர்களே, டெக்னாலஜி வாங்குவதற்குக் கொடுப்பது கமிஷன் அல்ல. டெக்னாலஜி விலை. காஸ்ட் என்று சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

திரு. ஆற்காடு நா. வீராசாமி: டெக்னாலஜி என்று வைத்துக் கொண்டாலும் பணம் கொடுக்காமல் யாரும் அதைக் கொடுப்பது இல்லை. ஆக எவ்வளவு கொடுக்கிறோம் என்று எனக்குக் கிடைத்த தகவல் இருக்கிறது. அந்தத் தகவலை நீங்கள் திருத்தினால் நான் திருத்திக் கொள்ளத் தயாராக இருக்கிறேன். அந்த 200 கோடி ரூபாய்க்கு, காகித ஆலைக்கு 10 கோடி ரூபாய் என்று நாம் அவர்களுக்குக் கொடுக்க இருக்கிறோம் என்றும், முப்பது

லட்சம் ரூபாய் இதுவரையிலே கொடுத்திருக்கிறோம் என்றும் நான் கேள்விப் படுகிறேன். நான் கேட்கிறேன். ஒரு அரசாங்கம் தொழில் துறையிலே பர்சென்ட்டேஜ் போட்டுக் கொடுப்பதிலே தவறு இல்லை. ஆனால் 200 கோடி ரூபாய்த் திட்டத்திலே 10 கோடி ரூபாய் மக்கள் வரிப்பணத்தை ஒரு தனியாருக்கு இந்தத் திட்டத்தை அமுல்படுத்தத் தருகிறேன் என்பதற்காகக் கொடுத்தது நியாயம்தானா? ஏதாவது பேச்சு வார்த்தையிலே இன்னும் குறைத்திருக்கக்கூடாதா? எந்த அடிப்படையிலே ரூபாய் முப்பது லட்சம் கொடுக்கப்பட்டிருக்கிறது என்ற விவரங்களை அரசாங்கத்திலே சொல்வார்களேயானால், அதை ஏற்றுக்கொள்ளத் தயாராக இருக்கிறேன்.

மாண்புமிகு திரு. சு. திருநாவுக்கரசு: மாண்புமிகு தலைவர் அவர்களே, நமது பொறியியல் நிபுணர்கள், அல்லது இன்ஜினியர்கள் தமிழ்நாடு அரசுப்பணியில் இருக்கின்ற இன்ஜினியர்கள் மட்டுமல்லாமல், இந்திய நாடு முழுவதும் ஏன் மத்திய அரசுக்குக் கீழேகூட இந்த டெக்னாலஜியிலே இது போன்று இங்கே தொழிற்சாலை இல்லை. எனவே வெளி நாட்டோடு தொடர்பு கொண்டு, இங்கே அந்தத் தொழில் வருவதற்கு முன்னால், இது போல பயோனீர் பிளாண்டை ஒரு மாடல் பிளாண்டைச் செய்து, இங்கேயிருந்து நம் நாட்டுடைய கச்சாப் பொருள்களை அனுப்பி அங்கே செய்து பார்த்து, பேப்பர் எல்லாம் மாதிரிக்கு எடுத்து, அதற்குப் பின்னாலே அது மாதிரி தொழிற்சாலை மாடலிலே இங்கே அமைக்க இருக்கிறோம். இப்படி பல்வேறு நிலைமைகளிலே நம்முடைய அதிகாரிகள், உயர்மட்ட அதிகாரிகள், உலக வங்கி அதிகாரிகள் உட்பட, ஐ.டி.பி.யினுடைய அதிகாரிகள் இவர்கள் எல்லாம் உட்கார்ந்து பேசி அதற்குப், பின்னாலேதான் முடிவு செய்யப் பட்டிருக்கிறது என்பதை மாண்புமிகு அங்கத்தினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இன்னொன்று அவர்கள் சொன்னார்கள். 'காகிதம் செய்வோம், நல்ல காகிதம் செய்வோம்' என்று பாரதியார் நூற்றாண்டுக்கு முன்னாலே செய்ய வேண்டும் என்று சொன்னார்கள். திட்டம் கொடுத்து தொடங்குவதாக அறிவிப்பு கொடுத்தது மூன்று ஆண்டுகளுக்கு முன்னாலே. முன்னால் அறிவிப்பு கொடுக்கும்போது, 1984-லேதான் தொடங்கப்படும், உற்பத்தியாகும் என்று சொல்லியிருக்கிறேன். இந்த இரண்டு, மூன்று மாதம் காலதாமதம் ஆனாலும் கூட 1985 தொடக்கத்திலே நிச்சயமாக உற்பத்தி தொடங்கும் என் பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. ஆற்காடு நா. வீராசாமி: மாண்புமிகு தலைவர் அவர்களே, 1984லே வந்தால்கூட நான் மகிழ்ச்சியடைவேன். ஆனால் எனக்குக் கிடைத்திருக் கின்ற தகவல் அந்தத் திட்டம் சில நாடுகளிலே வெற்றிகரமாக அமையவில்லை





என்பதுதான். இங்கே இருக்கக்கூடிய திரு. விசுவநாதன் என்பவர் அந்தத் தொழிலுக்குத் தலைவராக நியமிக்கப்பட்டிருக்கிறார். அந்தத் தலைவர் யாராக இருந்தாலும் சரி, அல்லது டெக்னாலஜிக்காகவென்று இருந்தாலும் 20 முறைகளுக்கு மேல் வெளிநாட்டிற்குப் போகிறார்கள், வருகிறார்கள். வந்து போய்க் கொண்டிருக்கிறார்களே தவிர, திட்டம் இன்னும் உருப்படியாக உரு வாக்கப்படவில்லை. 200 கோடி ரூபாய் முதலீடு போடுகின்ற இந்தத் திட்டம் இந்த ஆண்டுக்குள் வரும் என்றுகூட நம்மாலே முடிவுக்கு வரமுடியவில்லை என்று சொன்னால், நம்முடைய வரிப்பணம் வீணாகின்றதே என்ற கவலை இந்த அரசாங்கத்திற்கு இருக்க வேண்டும் என்பதற்காகத்தான் நான் இதைச் சுட்டிக்காட்டுகிறேன். எனக்கு யார யாருக்கு எவ்வளவு கொடுக்கிறோம் என் பதிலேகூட கவலையில்லை. எப்போது ஆலை வரப்போகிறது? எப்போது அந்த உற்பத்தி இங்கே தொடங்கப் போகிறது, அந்த உற்பத்தியை இந்த நாட்டுமக்கள் எப்போதுதான் துய்க்கப்போகிறார்கள் என்பதைத்தான் நான் இங்கே எதிர்பார்க்கிறேன். ஆகவே அதை விரைவுபடுத்த வேண்டும். நம் முடைய தொழில் அமைச்சர் அவர்கள் மிகவும் துடிதுடிப்பானவர்கள். அவர் நினைத்தால் முடியும். ஆனால் பல்வேறு வேலைகள் அவருக்கு. அவர்கள் இதிலே அக்கறை எடுத்துக்கொண்டு செய்ய வேண்டும். 200 கோடி ரூபாய் நம்முடைய பணமாக இருந்தால், எப்படி நாம் சுறுசுறுப்பாக செயல்படு வோமோ அதே போல அரசாங்கமும் அமைச்சர்களும் பாடுபடவேண்டுமென்று இந்த நேரத்திலே கேட்டுக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இங்கே ஐ.ஏ.எஸ். அதிகாரிகள் ராஜிநாமா செய்வது பற்றியெல்லாம் சொல்லியிருக்கிறார்கள். அந்த விவாதத்திற்குள்ளே நான் போக விரும்ப வில்லை. ஒரு அரசாங்கத்திற்கு அதிகாரியாக இருந்தாலும் யாராக இருந் தாலும் பிடிக்கவில்லை என்று சொன்னால், நடவடிக்கை எடுக்கக்கூடிய உரிமை யுண்டு. ஆனால் நாங்கள் சொல்கின்ற நேரத்திலே அரசு நடவடிக்கை எடுக்கவில்லை. அப்போது மறுத்தார்கள். "திரு. கங்கப்பா என்ற ஐ.ஏ.எஸ். அதிகாரி தஞ்சை மாவட்டத்திலே ஆட்சித் தலைவராக இருந்த போது இப்படிச் செய்தார்கள், அவர்மீது நடவடிக்கை எடுங்கள்" என்று சொன்னோம். "இல்லை, இல்லை, அவர் கும்பாபிஷேகம் செய்கின்றார். ஆகவே நாங்கள் குளிர் காய்கிறோம்" என்று சொன்னார்கள். நான்

(பிற்பகல் 1—40)

கேட்கிறேன். எப்படி அந்த அதிகாரிக்கு இந்தத் துணிச்சல் வந்தது? இதைத் தான் நாங்கள் சொல்கிறோம். நாங்கள் குற்றம் சொன்னதற்குப் பிறகுகூட நடவடிக்கை எடுப்பதற்கு பதிலாக வட ஆற்காடு மாவட்டத்திற்கு அனுப்பி னார்கள். அங்கே அவர் மாவட்ட ஆட்சித் தலைவர். அங்கே ஒரு கோவிலை

உற்பத்தி செய்தார். கோவிலை உற்பத்தி செய்தார் என்பதல்ல, அங்கே வசூல் செய்தார். அதுதான் என்னுடைய குற்றச்சாட்டு. நாங்கள் சொன்னபோது நடவடிக்கை எடுக்கவில்லை. 'அட்லீஸ்ட்' இப்போதாவது நம்முடைய முதலமைச்சரவர்கள், அவர் வசூல் செய்திருக்கிறார் என்று ஒத்துக்கொண்டிருக்கிறாரே, அதைப் பாராட்டுகிறேன். இப்படிப்பட்ட உண்மைகளைக் காலம் கடந்து சொல்வதற்கு பதிலாக உண்மைகளைச் சொல்ல வேண்டிய நேரத்திலேயே சொல்ல வேண்டும். எந்தெந்த அதிகாரி எந்தெந்த நேரத்திலே செய்தார்கள் என்பதைச் சொல்ல வேண்டும். ஏனென்றால் நான் அனுபவத்தில் சொல்கிறேன். இல்லாததையும் பொல்லாததையும் சொல்வது என்பது வேறு எச்சரிக்கையாக இருக்க வேண்டுமென்று சொல்லிக்கொள்கிறேன். இரண்டு அதிகாரிகள் மீது சி.பி.ஐ. நடவடிக்கை எடுத்தது. கைது செய்தார்கள். திரு. வைத்தியலிங்கம், திரு. வேதநாராயணன் இந்த மன்றத்திலே அவர்கள் இல்லாத காரணத்தாலே பேசக்கூடாது என்பதல்ல. ஐ.ஏ.எஸ். அதிகாரிகள் பற்றிப் பேசப்பட்டது. கைது செய்தார்கள். அவர்கள் மீது நடவடிக்கை உண்டா? அப்படிக் கைது செய்யப்பட்ட பிறகு, ஒரு ஐ.ஏ.எஸ். அதிகாரிக்கு இந்த அரசாங்கம் பதவி உயர்வு கொடுத்திருக்கிறது என்றால், நியாயம்தானா? எதற்காகப் பதவி உயர்வு கொடுத்தார்கள்? அவர்களுக்கே தெரியும். விவரங்களுக்குள் நான் போக விரும்பவில்லை. தி.மு.க.வை யாராவது காட்டிக் கொடுத்தால் அல்லது இந்த அரசு சொல்வதுபோல் நடந்து கொண்டால், அந்த இயக்கத்தை அழிக்க உறுதுணையாக இருந்தால், கைது செய்யப்பட்டவர்கள், சஸ்பெண்ட் செய்யப்பட்டவர்கள், வேலையை விட்டு நீக்கப்பட வேண்டியவர்கள் என்றாலும்கூட, இவர்கள் ஆதரவு கொடுப்பார்கள். அவர்கள் இலஞ்சம் வாங்கியவர்கள். சொத்து சேர்த்திருக்கிறார்கள். சம்பாதனத்தை விட அதிக சொத்து வாங்கியதாக சி.பி.ஐ.யாலே குற்றம் சாட்டப்பட்டாலும்கூட, அவர்கள் மீது நடவடிக்கை எடுத்து கைது செய்தாலும்கூட, அவர்கள் மீது அரசு நடவடிக்கை எடுக்காது என்ற நிலை இருந்தால், அதிகார வர்க்கத்தில் ஒரு கூட்டம் கொள்ளை அடிக்கப் புறப்பட்டுவிடும். அதை உற்சாகப்படுத்த வேண்டாம் என்று மட்டும் நான் இந்த நேரத்தில் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** மாண்புமிகு உறுப்பினரவர்கள் ரொம்ப குறிப்பு வைத்திருக்கிறார்போல் இருக்கிறது.

**திரு. ஆற்காடு நா. வீராசாமி :** தலைவரவர்களே, விரைவில் முடித்துக் கொள்கிறேன். வீண் செலவுகளை, ஆடம்பரங்களைக் குறைக்க வேண்டும். அமைச்சர்கள் செய்தால் சரியா, அதிகாரிகள் செய்தால் சரியா என்பதல்ல. பெரிய ஓட்டல்களில் விருந்து கொடுக்கிறார்கள். விருந்து கொடுக்கக்



கூடாது என்ற கருத்து உடையவனல்ல நான். வெளி நாடுகளிலிருந்து விருந்தினர்கள் வந்தால் விருந்து கொடுக்கலாம். மத்தியிலிருந்து வந்தால் விருந்து கொடுக்கலாம். உச்ச நீதிமன்றத்திலிருந்து நீதிபதிகள் வந்தால்கூட விருந்து கொடுக்கலாம். அது வேறு. அதில் ஒரு முறை இருக்க வேண்டும். கன்னிமாரா ஓட்டல் அல்லது தாஜ் கோரமண்டல் ஓட்டல்—எந்த ஓட்டலாக இருந்தாலும் ஒரு நீதிபதிக்கு விருந்து கொடுப்பதிலே 30,000 ரூபாய் இந்த அரசாங்கம் செலவு செய்ய முடியும் என்ற நிலை நாட்டு மக்களுக்குத் தெரிய ஆரம்பித்தால், நாம் எவ்வளவு ஆடம்பர வாழ்க்கை வாழ்ந்து கொண்டிருக்கிறோம், எப்படியெல்லாம் வீணாக விளம்பரம் செய்கிறோமென்று மக்கள் எண்ண ஆரம்பித்தால், அரசுக்கு அது நல்லதுதானா என்று கேட்க விரும்புகிறேன்.

இறுதியாக ஒன்றைச் சொல்கிறேன். நாங்கள் எல்லாம் சொன்னால் அரசியல் காரணங்களுக்காகச் சொல்கிறோமென்று நினைக்கக்கூடும். தொழிற்துறை வல்லுநர் ஒருவர் சொல்கிறார். இந்த மாநிலத்தைப் பொறுத்த வரையில், தொழில்கள் எப்படி இன்றையதினம் இருக்கின்றன என்பதற்கு ஒரேயொரு உதாரணம் சொல்ல விரும்புகிறேன். தமிழ்நாடு ரசாயனப் பொருள் தயாரிப்பாளர்கள் சங்கத் தலைவர் எஸ். கிருஷ்ணஸ்வாமி வியாழக்கிழமையன்று சொல்லியிருக்கிறார். "தமிழ் நாடு அரசு அதன் தொழில் கொள்கை அணுகு முறையையும், வரி விதிப்பையும் மாற்றி அமைக்காவிடில், இம்மாநிலத்திலுள்ள ரசாயனத் தொழில்கள் மேலும் சீர் குலையும், அவை வேறு மாநிலங்களுக்கு நகர்ந்தும் போய்விடும்" என்று அவர் கூறியிருக்கிறார். மேலும் மாநிலத்தில் தொழில்கள் வளராததற்கு மத்திய அரசின் கொள்கைதான் காரணம் என்கிற கருத்தை திரு. கிருஷ்ணஸ்வாமி ஒப்புக் கொள்ளவில்லை. தமிழ் நாடு அரசில் எல்லா அதிகார மட்டங்களிலும் துரிதமாக முடிவுகள் எடுக்கப்படுவதில்லை. மேலும், "தொழில் கச்சாப் பண்டங்கள் மிக உயர்ந்தபட்ச விற்பனை வரியை விதிப்பது தமிழ் நாடாகும்" என்றும் சொல்லியிருக்கிறார். இதுதான் முடிவு என்று சொல்லவில்லை. தொழில் துறையில் உள்ள தொழிற்சாலைகளின் சங்கத் தலைவர் சொல்கிறார். இதைப் பரிசீலனை செய்ய வேண்டும். ஏன் இப்படிச் சொல்கிறார்கள்? வேறு மாநிலங்களுக்குப் போய்விடும், பக்கத்து மாநிலங்களுக்குப் போய்விடும் என்று சொல்லக்கூடிய அளவுக்கு நாட்டிலே தொழில் அதிபர்கள் சொல்ல ஆரம்பித்தால், எதிர்காலத்தில் தொழில் வளர்ச்சி இராது.

**மாண்புமிகு திரு. சு. திருநாவுக்கரசு :** மாண்புமிகு தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினரவர்கள் தெரிந்து கொள்ள வேண்டுமென்பதற்காகச் சொல்கிறேன். அவர் சொல்லியிருப்பதிலே சில நியாயங்கள் இருக்கலாம். உண்மைகள் இருக்கலாம். நாம் போட்டிருக்கிற வரி விகிதங்கள் கூட இருக்கிறதென்பது உண்மைதான். அவர் ஒட்டு மொத்தமாக இந்த மாநிலத்தினுடைய தொழில் வளர்ச்சி குறைவதற்கு மத்திய அரசுதான் காரணம் என்று சொல்லுவது முழுவதும் தவறு, அதற்கு மாநில அரசுதான் முழுவதும் பொறுப்பு என்று அவர் முடிவாக பத்திரிக்கைகளிடத்தில் சொல்லியிருப்பது அவர் ஒரு அசோசியேஷன் தலைவராகப் பேசியதாக நினைவில்லை. ஏதோ ஒரு கட்சிக் கூட்டத்தில் பேசுகிற கட்சிப் பேச்சாளராக விமர்சனம் செய்திருக்கிறாரென்றும், நடுநிலையோடு தொழிற் பிரிவின் தலைவராக இருந்து, தொழிற் பிரிவைக் காப்பாற்ற வேண்டுமென்ற உணர்வோடு பேசியதாக நான் நினைக்கவில்லை.

**திரு. ஆற்காடு நா. வீராசாமி :** பரவாயில்லை அது அப்படி. இன்னொன்று ஓசூர் தொழிற் பேட்டையை முதலமைச்சரவர்கள் திறந்து வைத்தார்.

**திரு. ஏ. ஆர். தாமோதரன் :** தலைவரவர்களே, நியூஸ் பேப்பரை வைத்துக்கொண்டு சபையிலே இல்லாதவரைப்பற்றி இரண்டு பேரும் சொன்னால், எப்படி ?

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** உறுப்பினரவர்கள் என்னிடம் அனுமதி கேட்டபோது, அதைச் சுட்டிக்காட்டி சொல்லப் போகிறேன் என்று சொன்னார்கள். எனவே அதில் விரிவாகப் போக வேண்டாம். மேலும் பத்திரிக்கையில் வந்திருக்கிற ஒரு அதிகாரபூர்வமான அறிக்கையைச் சொல்லலாம். செய்தியாக வந்திருப்பதைச் சொல்கிறார்கள். அது அவை மரபல்ல என்பது மாண்புமிகு உறுப்பினரவர்களுக்கே தெரியும்.

**திரு. ஆற்காடு நா. வீராசாமி :** தலைவரவர்களே, 'தினமணி' பத்திரிக்கையில் வந்திருக்கிறது. அதை விட்டுவிடுகிறேன். அதற்குள் போகவில்லை. அதுமட்டுமல்ல. ஓசூர் தொழிற்பேட்டையை முதலமைச்சர் திறந்து வைத்தார். அதன் வளர்ச்சிபற்றி தமிழக அரசு கவனம் செலுத்தவில்லை. ஓசூர் தொழிற்பேட்டைத் துவங்கியதன் நோக்கமே, அதன்மூலம் சிறு தொழில்கள் துவங்கப்பட வேண்டும் என்பதுதான். ஆனால் இப்போது ஓசூரில் துவங்கப்பட வேண்டிய சிறு தொழில்கள் அனைத்தும் ஆந்திரா, கர்நாடகா மாநிலங்களுக்குச் சென்றுவிட்டன. கர்நாடக மாநில அரசு அதிகமாக 'இன்சென்டிவ்' தருவதால், சிறு தொழிலதிபர்கள் அங்கு தொழில்





துவங்கச் சென்று விட்டனர் என்று அசோக் லேலண்ட் நிறுவனத்தின் மேனேஜிங் டைரக்டர் சொல்லியிருக்கிறார். இதையெல்லாம் சொல்வதற்குக் காரணம், நாட்டிலே தொழில் முதலீடு செய்பவர்கள் இந்த நாட்டைவிட்டு வேறு மாநிலங்களுக்குப் போக வேண்டுமென்று நினைக்குமளவிற்கு வந்து விட்டால், இப்போதே வேலையில்லை. இன்னும் வேலையில்லாத் திண்டாட்டம் பெருகும். இந்த அடிப்படையிலே நாட்டிலே இந்த நிலைமைகளை வளர விடாதீர்கள் என்று சொல்லி, ஆளுநர் அவர்கள் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின்மீது பேசும்போது நன்றி தெரிவிக்க வேண்டுமென்பது கடமை என்றாலும்கூட, நன்றி தெரிவிக்கிற அளவுக்கு அதில் இல்லாததால் முழு அளவிற்கு நன்றி தெரிவிக்க முடியவில்லை என்பதைக்கூறி, அமைகிறேன்.

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** மேலவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்று, மீண்டும் 7—2—1983, திங்கட்கிழமை காலை 9—30 மணிக்குக் கூடும்.

பின்னர், அவை ஒத்தி வைக்கப்பட்டது.

(பிற்பகல் 1—47)

**4. அவைமுன் வைக்கப்பட்ட ஏடுகள்.**

### *A. Statutory Rules and Orders.*

126. Notifications issued with G.O. Ms. No. 216, Prohibition and Excise, dated the 29th March 1982 in regard to amendments to the Tamil Nadu Toddy Rules, 1981 and the Tamil Nadu Arrack (Retail Shops) Rules, 1981. [Laid on the table of the House under section 54(3) of the Tamil Nadu Prohibition Act, 1937 (Tamil Nadu Act X of 1937).]

127. Notification issued with G.O. Ms. No. 439, Forests and Fisheries, dated the 15th April 1981 in regard to the amendment to Rule 1 of the Seigniorage Rules. [Laid on the table of the House under section 64-A of the Tamil Nadu Forest Act, 1882 (Tamil Nadu Act V of 1882).]

### *B. Reports, Notifications and Other Papers.*

Nil.

D
V211, 32'N83 143130
N83·191·3-5